Koviloor Digital Library

வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு

2031

ம.பொ.சிவஞானம்

KOVILOOR ANDAVAN LIBRARY, KOVILOOR
A. No. 2031

இன்ப நிலையம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

1971 — 3/00

Koviloor Digital Library

முதற் பதிப்பு: நவம்பர் 10, 1963.
இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 2, 1964.
மூன்றும் பதிப்பு: ஏப்ரல், 1965.
நான்காம் பதிப்பு: மார்ச் 11, 1967-
- சாகித்ய அகாதமி பரிசளித்த நாள்.
ஐந்தாம் பதிப்பு: மார்ச் 11, 1971

உரிமை பதிவு செய்யப் பெற்றது.

மலிவுப் பதிப்பு
விலை ரூபாய் மூன்று

அச்சிட்டோர்: ஜீவன் அச்சகம், சென்னை-5.

Koviloor Digital Library

முன்னுரை

வள்ளலார், இறையருள் பெற்ற ஞானி மட்டுமல்லர்; மனித சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை விரும்பிய சீர்திருத்தவாதியுமாவார். இன்றைய உலகில் ஏற்பட்டுள்ள சமய—சமூக—பொருளாதார மாறுதல்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வள்ளலார் கண்ட கனவுகளாகும். ஆனால், இந்த உண்மையை உலகம் அறிந்திருக்கவில்லை. காரணம், வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு முழு அளவில் இதுவரை வெளி வராததுதான்.

வள்ளலார், தம் காலத்தவரான இராஜா ராம்மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆகியோரைவிடவும் தீவிரச் சீர்திருத்த வாதியாகத் திகழ்ந்தார். சாதி—சமய வேற்றுமைகளற்ற, ஏழை—பணக்காரர் என்னும் வர்க்கப் பாகுபாடற்ற, சகல ஆன்மாக்களிடமும் சம அளவில் அன்பு செலுத்துகின்ற ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை உலகம் காண வள்ளலார் உழைத்தார். இத்துறையில் அவருக்கு இணையானவர் அவர் காலத்திலோ, அவருக்குப் பிற்காலத்திலோ பாரதத்தில் பிறக்கவில்லை எனலாம்.

இவ்வளவு புரட்சிகரமான சீர்திருத்தவாதியின் புதுமை மிக்க வரலாறு, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாக மறைக்கப்பட்டுக் கிடந்தது. அவர் இயற்றிய பாடல்களில் பழமையிலிருந்து பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ள பக்திப் பாடல்கள் மட்டுமே மக்களிடையே பரவியுள்ளன. ஒரே உலகம் காணவேண்டுமென்ற ஆர்வத்தில், "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்னும் கொள்கையின் அடிப்படையில் அவர் பாடிய சீர்திருத்தப் பாடல்கள் மக்களிடையே பரப்பப் படவில்லை.

இந்த நிலை கண்டு என் உள்ளம் கடந்த பல ஆண்டுகளாகவே வருந்தி வந்தது. தெய்வப் பற்று—தேசப் பற்று

Koviloor Digital Library

களின் அடிப்படையில், வள்ளலாரின் சீர்திருத்தக் கருத்துக்களை நாட்டில் பரப்பவேண்டுமென்று என் உள்ளம் கருதியது. சாதி வெறி—மத வெறிகளிலிருந்து மனித சமுதாயத்தை விடுவிப்பதற்காக, சாதித்துவேஷம்—மதத்துவேஷம்—தெய்வத் துவேஷங்களுக்குப் புறம்பான ஒரு சீர்திருத்த இயக்கம் தோன்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றும் எண்ணினேன். அதற்கான துவக்கப் பணியாக வள்ளலாரின் பாடல்களிலுள்ள சீர்திருத்தக் கருத்துக்களை அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒப்பு நோக்கி ஆராய்ந்து, ஒரு நூல் எழுதவேண்டு மென்றும் முடிவு செய்தேன்.

இந்த முடிவு பத்து ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதென்றாலும், செயல்படுவதற்கான சூழ்நிலை இல்லாதவனாக இருந்தேன். ஆயினும், வாய்ப்பு நேரும்போதெல்லாம் வள்ளலாரின் பாடல்களை ஆழ்ந்து படித்து, ஆராய்ந்து, தெளிந்து குறிப்புகள் எடுத்துக் கொண்டு வந்தேன். அத்துடன், அவருடைய வாழ்க்கைக் குறிப்புகளையும் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள திருவருட்பாப் பெருநூலில், நம் அடிகளாரின் வாழ்க்கை பற்றிய குறிப்புகள் சில தரப்பட்டுள்ளன. அந்தக் குறிப்புகள் போதுமானவை அல்ல. எனினும், அவற்றையேனும் சேகரித்து மக்கள் மத்தியில் கொண்டு வந்ததற்காகச் சன்மார்க்க சங்கத்தாரை நான் பாராட்டுகிறேன்.

வள்ளலாரிடம் பக்தி கொண்ட அன்பர்கள் சிலரை நான் சந்திக்க வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் அவரைப் பற்றிய செய்திகளைப் பெற முயன்றேன். அவர்களிலே சிலர், தங்களிடம் வள்ளலார் பற்றிய ஏடுகள் ஏராளமாக இருக்கின்றன என்றும், அவற்றை எனக்கு வழங்குவதாகவும் கூறினர். அது கேட்டு எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. ஆயினும், அவர்கள் 'தருகிறேன்', 'தருகிறேன்' என்று கூறி நாளைக் கடத்தி வந்ததைத் தவிர, தந்தார்க ளில்லை. அவர்

Koviloor Digital Library

களிடம் அப்படி எதுவும் இல்லை என்பதை நானே உணர்ந்து கொள்ளும்படி செய்துவிட்டார்கள்.

வள்ளலாரின் வாழ்க்கையில் ஒரே ஒரு நிகழ்ச்சி பற்றிய விவரங்களையே நான் அதிகமாக விரும்பித் தேடினேன். அது அருட்பா—மருட்பாப் போராட்டமாகும்.

அருட்பா—மருட்பாப் போராட்டம் பற்றி ஒரு குறிப்புக் கூடச் சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள வள்ளலாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தில் காணப்படவில்லை. விரும்பத்தகாத, தமிழினத்துக்குப் பெருமை தராத அந்த நிகழ்ச்சியை வரலாற்றிலிருந்தே ஒதுக்கிவிடுவது நல்லதென்று சங்கத்தார் கருதினர் போலும், ஆனால், ஆராய்ச்சி ரீதியில் வள்ளலாரைப் பற்றி விமர்சிக்க விரும்பிய எனக்கு அது தேவைப் படுகின்றது.

அந்தப் போராட்டம் வள்ளலாருக்குப் பெருமை தரும் ஒரு நிகழ்ச்சியாகவே எனக்குப் படுகின்றது. இராமலிங்க ருடைய புரட்சிகரமான சீர்திருத்தக் கருத்துகளை அறவே மறைத்துவிட நான் விரும்பினாலொழிய, அருட்பா—மருட்பாப் போராட்ட நிகழ்ச்சியை மறைப்பது சாத்தியமில்லை. மற்று, மருட்பாக் கட்சி மறைந்தே போய்விட்டது. அந்தக் கட்சியை நடத்திய வட்டாரத்தின் வாரிசுகள் எல்லாரும் இன்று அருட்பாப் பக்தர்களாகி விட்டனர். எனவே, அந்தப் போராட்டம் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக மட்டுமே நமக்குப் பயன்படுகிறது. அப்படித்தான் நானும் பயன்படுத்தியிருக் கிறேன். இந்நூலில், தேவைக்கு அதிகமாக ஒருவரியைக்கூட அதற்கு நான் தந்துவிடவில்லை.

எனக்குக் கிடைத்துள்ள மருட்பாக் கட்சிப் பிரசுர மொன்றினால், அக்கட்சியின் சார்பில்மட்டும் பதினெட்டு நூற்கள் வெளியிடப்பட்டன வென்று அறிகிறேன். அவற் றில் நான்கு நூல்கள் மட்டுமே எனக்குக் கிடைத்தன. அவை, யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் வெளியிட்ட போலி அருட்பா மறுப்பு, பு. பாலசுந்தர நாயக்கர் என்பவர் பெய ரால் யாழ்ப்பாணம் ந. கதிரைவேற் பிள்ளை வெளியிட்ட இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா

Koviloor Digital Library

மறுப்பு, இராமலிங்க பிள்ளை அங்கதப் பாட்டு, இராமலிங்க பிள்ளை படிற்றொழுக்கம் என்பனவாம். இந்த நான்கு நூற்களை யும் சைவப் பெரியார் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர் களிடமிருந்து பெற்றேன் என்பதை இங்கு நன்றியுணர் வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அருட்பாத் தரப்பினர் சார்பில் வெளியான பிரசுரங் களில் 'நியாய வச்சிர குடாரம்' என்னும் பெயரில் ம. தி. பானு கவி என்பார் வெளியிட்ட நூலொன்று மட்டுமே எனக்குக் கிடைத்தது.

வள்ளலாரின் பாடல்களைத் திருந்திய முறையில் வெளி யிட்டுள்ளார் தமிழக அறநிலையத்துறை முன்னாள் ஆணையர் ஆ. பாலகிருஷ்ண பிள்ளை. அப்பாடல் தொகுதிகளுடன், வள்ளலார் சம்பந்தப்பட்ட கடிதங்கள், அவர் எழுதிய வியாக்கியானக் கட்டுரைகள், அவருடைய உபதேச மொழிகள் ஆகியவற்றையும் தொகுத்து மொத்தம் பன்னி ரண்டு நூற்களை அவர் வெளியிட்டுள்ளார்.

கிடைத்த இந்த நூற்களை வைத்துக் கொண்டு வள்ள லாரின் அருட்பாக்களை வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் ஆராய்ந்து, அவற்றில் கிடைத்த அரிய கருத்துக்களை அடிக ளாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு ஒப்பு நோக்கி இந்த நூலை உருவாக்கியுள்ளேன்.

எனினும் உரிமையும் திறமையுமுடையார் இந்தப் பணி யில் ஏற்கெனவே ஈடுபட்டிருப்பின், யான் பெரிதும் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அப்படி எதுவும் நிகழாமையால், எனக் குள்ள சொற்ப அறிவைக் கொண்டு, தொண்ணூறு ஆண்டு களாக யாரும் தொடாத ஒரு பணியை யான் துணிவுடன் மேற்கொண்டேன்.

எனது நூல் முழுமை உடையதென்று நானே நினைக்க வில்லை. ஆயினும், அப்படி ஒரு முழுமையான நூல் எதிர் காலத்திலேனும் வெளிவருவதற்கு இந்த நூல் அடிப்படை யாக அமையுமென்ற நம்பிக்கை எனக்குண்டு. ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்த நூலைத் தொடர்ந்து எழுதி முடிப்பதற்கான அவகாசமற்ற சூழ்நிலையில் எனது

Koviloor Digital Library

பொது வாழ்க்கை அமைந்திருக்கின்றது. அதனால், எனது பணியைச் சுலப சாத்தியமாக்குவதற்காக என்னை ஆசிரியனாகக் கொண்டு வாரந்தோறும் வெளிவரும் 'செங்கோல்' இதழில் தொடர் கட்டுரையாக எழுதிவரலானேன். 23-12-62ல் 'செங்கோலி'ல் யான் துவக்கிய தொடர் கட்டுரை, 1-9-63 இதழில் முடிவுற்றது.

இந்தத் தொடர் கட்டுரையை எழுதிவரும் காலத்தில் எனது மனம் எல்லையற்ற இன்பத்தில் ஆழ்ந்திருந்தது. என் வாழ்நாளில் புனிதமான எத்தனையோ பணிகளில் இறைவன் என்னை ஈடுபடுத்தியுள்ளான். ஆயினும், அப்போதெல்லாம் அடையாத ஓர் இன்பத்தை இந்தத் தொடர் கட்டுரையை எழுதுங்கால் நான் அனுபவித்து வந்தேன். மறைக்கப்பட்ட ஒரு புதையலைக் கண்டுபிடித்து, அதைத் தோண்டி எடுத்து, எடுத்த புதையலை மக்கள் எல்லோருக்கும் வழங்குங்கால் ஒருவன் எத்தகைய இன்பத்தை அடைவானோ, அத்தகைய இன்பத்தையே இந்த நூலை வழங்குவதில் நான் அடைகின்றேன்.

வள்ளலாரின் சீர்திருத்தக் கொள்கைகள் பற்றியும், அவரது மறைவு குறித்தும் அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை நிலவிவருகின்றது. அந்த வேற்றுமைகளில் நியாயமற்றவைகளை அகற்ற இந்நூலில் யான் முயன்றிருக்கிறேன். அத்துறையில் எனது முயற்சி வெற்றி பெறுகின்றதோ இல்லையோ, விருப்பு வெறுப்பற்ற முறையில் நடுவுநிலையில் நின்று அதனைச் செய்திருக்கிறேன் என்பது மட்டும் உண்மை.

வள்ளலார், பாரத தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாக வைத்து, அதன்மேல் மனித சமுதாய ஒருமைப்பாடு என்ற கட்டடத்தை எழுப்பி, அதன்மேல் உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்னும் சமரச சுத்த சன்மார்க்கக் கொடியைப் பறக்க விட்டுள்ளார்.

இப்படி, மூன்று வகையான ஒருமைப்பாட்டினை அடிகளார் வலியுறுத்தியமையால், இந்த நூலுக்கு ' வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு'' என்னும் பெயரைத் தந்துள்ளேன்.

Koviloor Digital Library

இந்த நூலைப் படிக்கும் அறிஞர் பெருமக்கள் தங்கள் பார்வையில் படும் குறைகளை எனக்கு எழுதுவார்களானால் நன்றியறிதலுடன் அடுத்த பதிப்பில் அவற்றைத் திருத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

முன்னர், கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டியக் கட்டபொம்மன் ஆகிய மாவீரர்களின் வரலாறுகளை நான் வழங்கியபிறகு, அவர்களுடைய புகழ் பாரெங்கும் பரவக் கண்டு மகிழ்ந்தேன். இந்த நூல் மக்கள் மத்தியிலே பரவுமானால், வள்ளலார் புகழுக்குப் போடப்பட்டுள்ள திரை விலகி, அவருடைய உருவமும் உள்ளமும் உலகோர் அனைவருக்கும் புலப்படுமென்று நான் உறுதியாக நம்புகின்றேன். அத்துடன், உண்மையான சமுதாய சீர்திருத்த உணர்ச்சியும் தமிழ் மக்களிடையே தோன்றுமானால், அதனை யான் பெற்ற புண்ணியப் பேறாகக் கருதுவேன்.

இந்நூல் அச்சாகுங்கால் பிழை திருத்தி உதவிய திரு. த. சே. உமாபதி எம். ஏ., எல். டி. அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

வழக்கமாக என் நூற்களை அன்போடும் ஆர்வத்தோடும் வெளியிட்டுவரும் இன்ப நிலைய உரிமையாளர் திரு. சோம. சுவாமிநாதன் அவர்கள் இந்த நூலையும் தனி ஆர்வத்துடனும் தொண்டுள்ளத்துடனும் வெளியிட முன் வந்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி.

சென்னை,
1—12—1968.

ம. பொ. சிவஞானம்.

Koviloor Digital Library

நான்காம் பதிப்பின் முன்னுரை

"வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" நூல் வெளியாகி மூன்றாண்டு முடியுந்தறுவாயில் நான்காவது பதிப்பு வெளி வர நேர்ந்திருப்பது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகின் றேன். தமிழ்மக்கள் காட்டிய பேராதரவே இதற்குக் காரணமாதலால் அவர்கள் எல்லோருக்கும் எனது வணக் கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நான்காவது பதிப்பு வெளிவருந் தருணத்தில் பாரத அரசினரின் நிறுவனமான சாகித்திய அகாதமியாரின் பெரு மைக்குரிய பரிசினையும் எனது நூல் பெறுவது குறித்து நான் மட்டுமேயன்றி, தமிழ் மக்கள் எல்லோருமே பூரிப்படைகின் றனர் என்பதனை நான் அறிவேன். இந்தப் பரிசின் விளை வாக, பாரத மொழிகள் அனைத்திலும் இந்நூல் மொழி பெயர்க்கப்படுவதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இது நிகழுமானால், அருட்பிரகாச இராமலிங்க வள்ளலாரின் பெருமையைப் பாரத மக்கள் எல்லோருமே அரிய வாய்ப்புக் கிடைக்கும். இறையருள் இந்த அற்புதத்தை நிகழ்த்து மென்றே நம்புகின்றேன். இரண்டாவது மூன்றாவது பதிப்பு களைப் போலவே இந்த நான்காவது பதிப்பும் மலிவுப் பதிப் பாக வெளி வருகின்றது.

ஏனைய பதிப்புகளைப் போல இந்த நான்காவது பதிப் பையும் இன்ப நிலையத்தாரே வெளியிடுவது எனக்கு மகிழ்ச் சியைத் தருகின்றது. இதற்காக இன்ப நிலைய அதிபர் திரு. சோம. சுவாமிநாதன் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை,
4—3—'67.

—ம. பொ. சிவஞானம்.

Koviloor Digital Library

பதிப்புரை

தொட்டது துலங்கும் தூய்மையும், எடுத்த காரியம் யாவினும் வெற்றியடையும் சிறப்பும் மிக்கவர் திரு. ம. பொ. சி. அவர்கள்.

தமிழகத்தின் மாவீரரான தேசபக்தர் வ. உ. சிதம்பரனாரின் வீர வரலாற்றையும், வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இந்தியாவிலேயே முதன் முதல் சுதந்தரப் போரைத் துவக்கிய வீரபாண்டிய கட்டபொம்மன் வரலாற்றையும் நூல் வடிவில் வழங்கினார் திரு. ம. பொ. சி. அதன் பிறகு, அம் மாவீரர்களின் புகழ் பட்டி தொட்டியுள்படப் பார் முழுவதும் பரவியது.

அதன் பிறகு அவ்விருவருக்கும் ஞாபகச் சின்னங்கள் ஏற்பட்டதுடன் அவர்கள் வரலாறுகள் திரைப்படங்களாகவும் வெளிவந்து அகில உலகப் புகழ்பெற்றன.

வள்ளலார் வாழ்க்கை வரலாறு தெள்ளிய முறையில் ஒழுங்காக இதுவரை யாராலும் எழுதப்படவில்லை. வெறும் வரலாறாக மட்டுமல்லாமல், வள்ளலாரின் அருட் பாடல்களை விமரிசனக் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து எழுதப்பட்ட முதல் நூல் இதுவேயாகும்.

இந்நூலைத் தமக்கே உரித்தான நேர்மை நிறைந்த நடுவு நிலை உள்ளத்துடன் ஆராய்ந்து, சிறந்த முறையில் திரு. ம. பொ. சி. அவர்கள் எழுதியுள்ளார்.

இனி. எதிர்காலத்தில் வள்ளலாரின் புகழ் இன்றிருப்பதைக் காட்டிலும் சீரும் சிறப்புமிக்கதாக ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் திரு. ம, பொ. சி. அவர்கள் எழுதியுள்ள இந் நூல் பெரிதும் பயன்படுமென்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

இன்ப நிலையத்தின் சார்பில் இதுவரை இருநூற்றுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்டிருப்பினும், இந்த "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் நூலை வெளியிடுவதைப் பெரும் பாக்கியமாகவும் பெருமையாகவும் எண்ணுகிறோம். இந்த நல்வாய்ப்பை அளித்த திரு. ம. பொ. சி. அவர்களுக்கு என் அன்பு நிறைந்த வணக்கமும் நன்றியும் உரியதாகும்.

சென்னை,
5—11—63.

சோம. சுவாமிநாதன்,
உரிமையாளர்: இன்ப நிலையம்.

Koviloor Digital Library

பொருளடக்கம்

முன்னுரை	...	5
நான்காம் பதிப்பின் முன்னுரை	...	11
பதிப்புரை	...	12
பொருளடக்கம்	...	13
காணிக்கை	...	14
வள்ளலார் யார் ?	...	15
கி. பி. 1757 முதல் 1857 வரை	...	17
இளமைப் பருவம்	...	42
கண்ணுடியில் கந்தப்பெருமான்	...	50
புராணப் பிரசங்கி	...	59
வடலூர் வாசம்	...	86
காட்சிக் கெளியர்	...	100
சத்திய தருமச்சாலை	...	110
சமரச சன்மார்க்க சங்கம்	...	123
உத்தர ஞான சிதம்பரம்	...	156
திருவருட்பா வெளியீடு	...	170
போர் துவங்கிவிட்டது !	...	180
சித்திவளாகப் போதனை	...	213
மரணமிலாப் பெருவாழ்வு	...	237
நாத்திகத்தின் எதிரி !	...	263
தமிழைத் துறக்காத துறவி	...	278
ஆன்மநேய ஒருமைப்பாடு	...	297
சன்மார்க்க அரசியல்	...	306
ஜீவகாருண்ய ஒழுக்கம்	...	323
'கடைவிரித்தேன், கொள்வாரில்லை!'	...	330
மறைவுக்குப் பிறகு	...	348
மீண்டும் அருட்பா—மருட்பாப் போர் !...	...	354
அருட்பாக் கட்சிக்கு வெற்றி	...	360
புகழ்மாலைகள்	...	368
மறைந்தது உண்மையா ?	...	374
வள்ளலார் வருவாரா ?	...	392
வள்ளலாரைப் பின்பற்றுவோம்	...	399
உதவிய நூல்கள்	...	407

Koviloor Digital Library

காணிக்கை

கடவுளுக்கு அடுத்தபடியாக, கருவிலே என்னைக் காத்து, பிறந்தபின் என்னை வளர்த்து, சிற்றுடை கட்டத் தெரியாத சின்னப் பருவத்திலேயே வள்ளலாரின் அருட்பாக்களை எனக்குப் பயிற்றுவித்த அன்னை சிவகாமியாருக்கு இந்நூலைக் காணிக்கை யாக்குகின்றேன்.

—ஞானம்

[என் அன்னையார் அழைத்த பெயர்]

Koviloor Digital Library

வள்ளலார் யார் ?

* ''இந்தியாவில் சகோதர அறம் நிலைநாட்டப் பெறல் வேண்டும்'' எனக் கூறி, முதன்முதலாகப் பாரத தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குரல் கொடுத்த இந்திய தேசியவாதி யார் ?

* பாரத ஒருமைப்பாட்டின் அடிப்படையில் மனித குலத்தாரின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்திச் சர்வதேச சகோதரத்துவத்தைத் தமிழருக்குப் போதித்த முதல் சர்வ தேசியவாதி யார் ?

* பாரத தேசிய, சர்வ தேசிய ஒருமைப்பாடுகளின் அடிப்படையில் உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் ''ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை'' என்னும் மந்திர மொழியைத் தந்த முதல்வர் யார் ?

* மனித குலத்தின் ஒருமைப்பாட்டிற்குத் தடைகளாகவுள்ள சாதி, குல, வருண பேதங்களை அழித்தொழிக்கப் பாடிய—பாடுபட்ட தமிழகத்தின் முதல் சமூகச் சீர்திருத்தவாதி யார் ?

* போலி மதப் புரட்டுகளை யெல்லாம் ஒழித்து, மத நெறிகளிடையே ஒருமைப்பாடு காணும் நன்னோக்குடன் ''எம்மதமும் சம்மதம்'' என்னும் மந்திர மொழியை முதன் முதலில் போதித்த மகான் யார் ?

* ஏழை—பணக்காரன் என்னும் வர்க்க வேற்றுமை அவரவர் பாவ—புண்ணியங்களின் விளைவு என்று போதித்த பொய்ச் சமயப் புரட்டர்களின் வாதத்தை மறுத்து, சமுதாயத்திலே பொருளாதாரச் சமத்துவத்தை வலியுறுத்திய சமதர்ம ஞானி யார் ?

* ''அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பெதற்கு ?'' என்று வினா எழுந்த காலத்தில், மொழியறிவுக் கல்விமட்டுமே யன்றி,

Koviloor Digital Library

மெய்ஞ்ஞானக் கல்வி பெறவும் பெண்களுக்கு உரிமை யுண்டு என்று பிரகடனம் செய்த பெரியார் யார் ?

* இந்துக்களிலேயே ஒரு சாரார் கோயில் பிரவேசம் செய்ய உரிமை பெருதிருந்த காலத்தில், சர்வ மதத்தாரும் கூடி வழி படக் கூடிய சன்மார்க்க சத்திய ஞான சபைக் கோயில் கண்ட சமரசவாதி யார் ?

* ஆங்கிலப் பேரரசு பாரதத்தை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில், "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக !" என்று கோஷித்த அரசியல் ஞானி யார் ?

* தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் கொடிய வழக்கத்தை முதன் முதலில் கண்டித்த கருணை வள்ளல் யார் ?

* மனிதன் சாவாமல் நித்திய தேகத்துடன் வாழமுடியும் என்பதனை, தக்க சான்றுகள் காட்டிப் போதித்து அதனைத் தம்மளவில் சாதித்தும் காட்டிய சரித்திர நாயகர் யார் ?

* "மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி வடமொழியே" என்று சங்கராசாரிய சுவாமிகள் சாதித்தபோது, "அங்ஙனமாயின், தமிழ் தந்தை மொழி" என்று வாதித்த தமிழ்க் காவலர் யார் ?

* கன்னித் தமிழிலே அரசியல், பொருளாதாரம், சமூகம், மொழி, சமயம், தேசியம், சர்வதேசியம், பக்தி, முத்தி ஆகிய அனைத்துத் துறைகளைப் பற்றியும், சித்தாந்தம்—வேதாந்தம் ஆகிய தத்துவங்கள் பற்றியுமாக ஆருயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளும் கீர்த்தனைகளும் பாடிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகாகவி யார் ?

∴ ருஷ்ய நாட்டு மாடம் பிளவட்ஸ்கியும், கேரளத்துச் சீர்திருத்தவாதி நாராயண குருவும், தண்டபாணி சுவாமிகளும், மகாகவி பாரதியும் துதி பாடித் தொழும் துறவோன் யார் ?

இராமலிங்கர், இராமலிங்கர், இராமலிங்கரே !

Koviloor Digital Library

கி. பி. 1757 முதல் 1857 வரை

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பாதித் தொடக்கத்திலிருந்து பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பாதி முடிவு வரையுள்ள ஒரு நூற்றுண்டுக் காலத்தில் பாரதம் அந்நியர்களின் வேட்டைக்காடாக விளங்கியது. பிரிட்டிஷ்—பிரெஞ்சு—டச்சு—போர்ச்சுகீசு நாடுகளின் நாடோடி வர்த்தகக் கூட்டங்கள், தங்கள் சரக்குகளை விற்கும் சந்தைக் கடையாகப் பாரத நாட்டைப் பயன்படுத்தின. வாணிகத்தில் ஏற்பட்ட போட்டி—பொருமை காரணமாக, அந்த நாடோடிகள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டதோடு, உள்நாட்டு மன்னர்களிடையேயும் சண்டை மூட்டிவிட்டுப் பாரதம் முழுவதையும் 'குருக்ஷேத்திரம்' ஆக்கினர்.

அரசுரிமை 'ஏலம்!'

1757 ல் வடக்கே வங்கத்தில் நடந்த 'பிளாசிப் போர்' தொடங்கி, 1857 ல் வடபாரதம் முழுவதிலும் நடைபெற்ற 'சிப்பாய்ப் புரட்சி' வரையுள்ள ஒரு நூற்றுண்டுக் காலத்தில் சிறியவையும் பெரியவையுமாக எத்தனை எத்தனையோ பயங்கரப் போர்கள் நடைபெற்றன. அந்தப் போர்களிலே பாரத மன்னர்களின் தலைகளைப் பந்தாடினுர்கள் ஆங்கிலேயர்கள்! அரியாசனத்தமர்ந்து அரசாளும் உரிமையையும் தங்கள் வர்த்தகச் சரக்காக்கி 'ஏலத்'தில் விட்டார்கள்! இங்குமங்குமாக ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்ட ஒரு சில சுதேச மன்னர்கள், தங்கள் சகோதர மன்னர்களாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டு அந்நியர்களால் மிகக் கொடுமையாகப் பழிவாங்கப்பட்டார்கள். இதற்கு பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மன், சகோதர மன்னர்களான புதுக்கோட்டை, எட்டயபுரம் அதிபதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டதை சான்ருகக் கொள்ளலாம்.

பாரதத்தில் புகுந்து, அதனை அடிமைப்படுத்த முயன்றவர்கள் பிரிட்டிஷ்—பிரெஞ்சு—டச்சு—போர்ச்சுகீசு எனப் பல நாட்டினராயினும், அவர்களிடையே நடைபெற்ற போட்டி—போராட்டங்களில் இறுதியாக வெற்றி பெற்றவர் பிரிட்டிஷாரே ஆவர். சில சின்னஞ் சிறு பகுதிகள் நீங்கலாக, பாரதம் முழுவதையுமே பிரிட்டிஷார் கைப்பற்றிக் கொண்டனர்.

1621—2

Koviloor Digital Library

பாம்பின் வாய்த் தேரை !

பாம்பின் வாய்ப்பட்ட தேரை கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கப்படுவதுபோல, 'ஆங்கிலேயர் ஆதிக்கம்' என்னும் மலைப் பாம்பின் வாய்ப்பட்ட பாரதம், கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கப்பட்டது. அதனை முற்றிலும் தன் வயிற்றுக்குள் கொண்டு செல்ல ஒரு நூற்றாண்டுக்காலம் பிடித்தது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு. ஆம்; ஒரு நூற்றாண்டுக் காலம் தன் சுதந்திரத்துக்காகப் போராடிய பிறகே பிரிட்டிஷ் பேரரசுக்குப் பாரதம் அடிமைப்பட்டது. இது, பாரத மக்கள் பெருமைப்படத் தக்க செய்தியாகும்.

1857ல் துவங்கிய 'சிப்பாய்ப் புரட்சி' தோல்வியுற்ற பின்னர், பாரதம் முழுவதிலும் 'சுடுகாட்டு அமைதி' நிலவியது. அந்த அமைதி கால் நூற்றாண்டுக் காலம் நீடித்தது. அதன் பின்னரே, சட்டரீதியான முறையில் காங்கிரஸ் மகாசபையின் மூலம் பாரதத்தில் தேசிய எழுச்சி தோன்றியது.

மத உணர்ச்சி

பாரதம் ஒரு நூற்றாண்டுக் காலம் போராடியதென்றால், அதற்கு முக்கியமான காரணம், பாரத மன்னர்களின் அரசியல் உணர்ச்சியைவிட, மக்களின் மத உணர்ச்சியே ஆகும். பிரிட்டிஷார் இந்தியாவுக்கு அந்நிய நாட்டினராக இருந்ததோடன்றி, இந்து—முஸ்லிம்—சீக்கியர்களுக்கு அந்நிய மதத்தினராகவுமிருந்தனர். அதனால், "அந்நிய நாட்டினருக்கு அடிமைப்படுகிறோம்," என்பதிலிருந்த வெட்கத்தைவிட, "அந்நிய மதத்தினருக்கு அடிமைப் படுகிறோம்," என்ற வேதனையே ஒரு நூற்றாண்டுக் காலம் போராடுவதற்கான ஆற்றலைப் பாரத மக்களுக்குத் தந்தது. ஆம், அன்றைய தேசியம் மதச் சார்புடையது. அதனால், பாரத மன்னர்களின் எதேச்சாதிகாரக் கொடுமைகளுக்கு உட்பட்டிருந்த மக்கள், அரசுரிமை பறிபோவதைவிட, அந்நிய மதத்தினருக்கு அடிமைப்படுவதையே பெருத்த அவமானமாக, அநீதியாக, அடிமைத்தனமாகக் கருதினர்.

இந்த உணர்வு காரணமாக, இந்து—முஸ்லிம்—சீக்கிய மதங்களைச் சார்ந்த மக்களுள் மிகப் பெரும்பாலோர் ஒரே அணியில் நின்று போராடினர். இதனை, 1857ல் நிகழ்ந்த 'சுதந்திரப் புரட்சி'யின் வரலாறு புலப்படுத்தும்.

1757-க்கும் 1857-க்குமிடையிலுள்ள ஒரு நூற்றாண்டில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாறுதல் மதத் துறையிலும்

Koviloor Digital Library

மகத்தானதொரு அதிர்ச்சியை ஏற்படுத்தி விட்டது. அந்நாளில், மதம் வேறு, அரசியல் வேறு என்ற உணர்வு இந்திய மன்னர்களிடமோ, மக்களிடமோ இருக்கவில்லை. அதாவது, 'சமயச் சார்பற்ற அரசு' என்ற சித்தாந்தம் நடைமுறையிலில்லை. அரசியலும் மதமும் பின்னிப் பிணைந்து கிடந்தன. கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அரசியலும் இதற்கு விலக்காக இல்லை.

மதமும் அரசியலும்

இந்தியாவில் அரசியல் ஆதிக்கம் பெற்ற ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் தங்கள் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் கிறித்துவ மதத்தைப் பரப்ப முயன்றனர். ஏன் ? இந்தியாவையே கிறித்துவ நாடாக மாற்றிவிடவும் திட்டமிட்டனர்.

பிரிட்டிஷார் பாரதத்தில் காலூன்றுவதற்கு முன்பு, உள்நாட்டு மன்னர்கள், தத்தம் மதங்களைப் போற்றி வளர்த்தனர்; பிற மதங்களையும் மதித்து நடந்தனர்; மதாசாரியர்களைக் கௌரவித்து, அவர்களுடைய அறிவுரைகளைக் கேட்டு, அதன்படி ஆட்சி நடத்தினர்; அரசவையிலே, சமயப் புலவர்கள் 'ஆஸ்தானப் புலவர்களா'க இருந்தனர். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் வருகையால் இந்த நிலைமை மாறியது.

புதிதாக உருவெடுத்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியாரின் அரசியல் ஆதிக்கம், கிறித்துவ மதத்தின் வளர்ச்சியைக் கருதியதால், உள்நாட்டு மதங்களை, மதாசாரியர்களைப் புறக்கணித்து, அவமதித்தது. இதனால், இந்து—முஸ்லிம்—சீக்கிய மதங்களைச் சார்ந்தவர்களிடையே வெறுப்பு வளர்ந்தது. அது, நாளடைவில் கிறித்துவ ஆட்சிக்கு எதிரான வீரப்போராகவும் மாறியது.

'கடவுள் சித்தம்'

கிழக்கிந்தியக் கம்பெனி நிர்வாகிகள் சிலரும், இந்தியப் பாதிரிமார்கள் சிலரும் வெளியிட்ட கருத்துக்கள், இந்தியர்களிடையே வளர்ந்திருந்த வெறுப்பை அதிகரிக்கச் செய்தன.

> "பரந்த இந்துஸ்தான சாம்ராஜ்யத்தைக் கடவுளே நம்மிடம் ஒப்புவித்துள்ளார். இந்தியாவின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரையில் கிறித்துவக் கொடி பறக்க வேண்டுமென்பதே அவரது கட்டளை. அந்தக் கட்டளை நிறைவேற ஒவ்வொரு ஆங்கிலேயனும் தன்

Koviloor Digital Library

முழுச் சக்தியையும் உபயோகிக்க வேண்டும். இந்தியாவை ஒரு கிறித்துவ நாடாகச் செய்யும் விஷயத்தில் அணு அளவும் தயக்கமோ, தாமதமோ கூடாது.''

[வீர சாவர்க்கரின் 'எரிமலே', பக். 44.]

இது, பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி டைரக்டர் போர்டின் தலைவர் மாங்கிள்ஸ் என்பார், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தாகும்.

கென்னடி என்ற ஓர் ஆங்கிலப் பாதிரியார் வெளியிட்ட கருத்து வருமாறு :

''நமக்கு எவ்விதக் கஷ்டம் நேர்ந்தாலும், எவ்விதத் துரதிருஷ்டம் நேர்ந்தாலும் இந்தியாவில் நமது சாம்ராஜ்யம் இருந்துவரும் வரையில், அங்கு நமது முக்கியமான கடமை கிறித்துவ மதத்தைப் பரப்புவதுதான என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கன்னியாகுமரியி லிருந்து இமாசலப் பிரதேசம் வரையில் இந்துஸ்தானம் முழுவதும் இந்து—இஸ்லாம் மதங்களைக் கண்டித்து, எல்லோரும் கிறித்துவ மதத்தைத தழுவச் செய்யவேண்டும். அது வரையில் நம் முயற்சிகளை நாம் இடைவிடாது செய்து வரவேண்டும். அதற்காக நாம் எல்லாவித முறைகளையும் கையாள வேண்டும். நமக்குள்ள சக்தி முழுவதையும் உபயோகிக்க வேண்டும். இந்தியா, கீழ்த்திசையிலேயே கிறித்துவ மதத்தின் ஒரு பிரம்மாண்டமான கோட்டையாகி விடவேண்டும். அதுவரையில் நமது முயற்சி சிறிதும் தளரக்கூடாது. நாம் விடாமுயற்சியுடன் இருந்து வருவோமானால், இறுதியில் கடவுள் நமக்கு வெற்றியைக் கொடுத்தே தீருவார்.''

['எரிமலே': பக். 45.]

ஆங்கிலமும் அதற்கே !

''ஆங்கிலக் கல்வியால் நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டன'' என்று ஓயாது இன்றும் கூறப்படுகிறது. அந்தக் கல்வி முறையின் கர்த்தா லார்டு மெக்காலே ஆவார். அவர்,

''நமது கல்வித் திட்டமானது, வழுவின்றிப் பின் பற்றப்படும் பட்சத்தில், இன்னும் முப்பதாண்டுக் காலத்துக்குள் வங்காளத்தில் ஓர் இந்துவோ அல்லது முஸ்லிமோ இருக்கமாட்டான் என்பது என் உறுதியான நம்பிக்கை.''

['எரிமலே', பக். 44.]

Koviloor Digital Library

என்று 1836-ஆம் ஆண்டில் வங்காளத்தில் முதன் முதலாக ஆங்கிலக் கல்விமுறை ஆரம்பமானபோது கூறினர்.

மெக்காலே மிகுந்த எச்சரிக்கையுடன், "இந்தியர்களெல்லாம் ஆங்கிலக் கல்வி முறையால் கிறித்தவர்களாக்கப்படுவார்கள்." என்று சொல்லாமல், 'இந்துவோ அல்லது முஸ்லிமோ இருக்க மாட்டான்' என்று கூறினர். ஆம்; ஆங்கிலக் கல்வி, மதத்துறையில் 'இரண்டுங் கெட்டான்'களைச் சிருஷ்டிக்கும் என்றார். இன்று நாம் காணும் காட்சி அதுதானே!

மதம், அரசியல் கருவி!

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்கும் ஒரு கருவியாய்க் கிறித்தவ மதத்தைப் பயன்படுத்தினர் ஆங்கிலேயர். இந்தத் திருப்பணியில் வர்த்தக நோக்குடைய பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள், கல்வித் துறையில் 'தொண்டு' புரிந்த லார்டு மெக்காலே போன்ற அறிஞர்கள், சமயத் தொண்டர்களான பாதிரிகள் ஆகிய ஆங்கிலேயர் எல்லோரும் ஒரு மனத்துடன்—முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தனர்.

கிறித்தவப் பாதிரிமார்கள் இஸ்லாம்—இந்து மதங்களுக்கு எதிராக நடத்தி வந்த பிரசாரப் போருக்குத் துணை புரியும் பொருட்டு, "இந்தியர் யாரும் சொந்தத்தில் அச்சகம் நடத்தக் கூடாது," என்று தடை விதித்தது பிரிட்டிஷ் கம்பெனி. இந்தத் தடை 1835-ஆம் ஆண்டு வரை அமுலில் இருந்தது. அச்சகத்தை நடத்தும் உரிமை ஆங்கிலேயருக்கு ஏகபோகமாக இருந்ததால், அச்சுப் பிரசுரங்களின் மூலம் தங்கள் சமய வளர்ச்சிக்குப் பாடுபடும் வாய்ப்பு இந்திய மக்களுக்கு இல்லாமலிருந்தது தாங்களே படைத்துக்கொண்ட இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இந்தியர்களைக் கிறித்துவர்களாக மாற்ற முயன்றனர் பாதிரிமார்கள்.

'கொழுப்போ, கொழுப்பு!'

இந்த நேரத்தில் இராணுவத்தினரிடையே, எரியும் தீயில் எண்ணெய் விட்டதுபோல ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதனை, வீர சாவர்க்கர், கீழ்வருமாறு வருணிக்கின்றார்:

> "கொழுப்புத் தடவப்பட்ட புதிய தோட்டாக்களை இந்திய சிப்பாய்கள் உபயோகித்துத் தீரவேண்டும் என்று கட்டளைகள் பிறந்தன. புதிய தோட்டாக்களை அபரிமிதமாக உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகளும் பல்

Kovilloor Digital Library

வேறு இடங்களில் திறக்கப்பட்டன. தோட்டாக்கள் மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் இருப்பதற்காக ஒரு விதக் கொழுப்பை உபயோகித்தனர். அக்கொழுப்பை ஏற்கனவே கையால் அகற்றியதுபோல் அகற்றக்கூடா தென்றும் அதைப் பல்லால் கடித்து அகற்ற வேண்டு மென்றும் உத்தரவிட்டனர். எவ்விதம் பல்லால் கடித்து அதைச் சுலபமாக அகற்றலா மென்பதும் சிப்பாய்களுக்குக் கற்பிக்கப்பட்டது.

"அதிகாரிகள் தோட்டாக்களுக்கு ஆட்சேபகரமான கொழுப்பைத் தடவியதுடன், 'மூடநம்பிக்கை காரணமாக அவைகளைக் கடிக்க மறுக்கும் சிப்பாய்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்' என்றும் பயமுறுத்தினர்."

['எரிமலை': பக். 49-50]

இந்த நிகழ்ச்சி கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தில் இருந்த இந்தியச் சிப்பாய்களிடையே மகத்தானதொரு ஆவேசத்தைக் கிளப்பி, மத உணர்ச்சி கலந்த அரசியல் புரட்சிக்கு அடிகோலிவிட்டது. அது காரணமாக வீறிட்டெழுந்த 'சிப்பாய்ப் புரட்சி' சுமார் ஓராண்டுக் காலம் பிஷாவர் முதல் கல்கத்தாவரை உள்ள வட பாரதத்தின் பெரும்பகுதியில் நடைபெற்றது. அதில், இந்து—முஸ்லிம் மன்னர்கள், இராணுவத் தளபதிகள், மௌல்விகள், புரோகிதர்கள், பொது மக்கள் ஆகிய அனைவருமே பங்கு கொண்டனர்.

அரசியார் பிரகடனம்

மக்களின் மத உணர்ச்சி புண்படுத்தப்பட்டதை உணர்ந்த பிரிட்டிஷ் சக்கரவர்த்தினியான விக்டோரியா ராணியார், புரட்சியை ஒடுக்கும் உள்நோக்குடன் ஒரு பிரகடனம் வெளியிட்டார். அதில், "கிழக்கிந்தியக் கம்பெனியால் கைப்பற்றப்பட்ட சமஸ்தானங்கள் போக, எஞ்சியுள்ள சமஸ்தானங்களின் 'சுதந்தர அஸ்தஸ்து' அங்கீகரிக்கப்படும். பிரிட்டிஷ் ஆட்சி இந்திய மக்களின் மத விஷயங்களில் தலையிடாது. கல்வி, திறமை, யோக்கியப் பொறுப்புள்ளவர்கள் யாராயினும், சாதி—மத வேற்றுமையின்றி அவர்களுக்கு உத்தியோகம் வழங்கப்படும்" என்று உத்திரவாதம் கொடுத்தார். இந்தப் பிரகடனத்துக்குப் பிறகு, மதமும் அரசியலும் கலந்து நிகழ்ந்த 'சுதந்திரப் புரட்சி' பிசுபிசுத்து விட்டது.

1757-ஆம் ஆண்டு முதல் 1857-ஆம் ஆண்டு வரையுள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் பாரத மக்கள் அரசுரிமையை

Koviloor Digital Library

இழந்ததோடு, மத உரிமைகளையும் இழக்க வேண்டிய நிர்ப்பந் தத்துக்கு இரையாயினர். பிரிட்டிஷ் அரசியாரின் பிரகடனத் தால் பாரதத்தின் நிர்வாகம் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் கைக்கு மாறியது. அதனால் மதத் துறையில் இந்திய மக்களின் நிலைமை மாறியதென்றாலும், அர சியல்—பொருளாதாரத் துறைகளில் அடிமைத்தனம் முன்னிலும் மோசமாக உறுதியடைந்தது.

மதத்தில் மறுமலர்ச்சி

'தீமையில் விளைந்த நன்மை' போல, பாரதம், அரசியல்— பொருளாதாரத் துறைகளிலே அடிமைப்பட்டதென்றாலும், அதன் விளைவாகவும் ஒரு நன்மை ஏற்படத்தான் செய்தது. ஆம்; மதத்துறையில் 'மறுமலர்ச்சி' தோன்ற வழி பிறந்தது. இந்து மதத்திலுள்ள பழைய நம்பிக்கைகளுக்கு, பழக்க வழக் கங்களுக்கு 'மூட நம்பிக்கைகள்' எனப் பெயர் வைத்து, அவற் றிற்கு எதிராகப் பிரசாரப் போர் நடத்தினர் கிறித்தவப் பாதிரி மார்கள். அதனால், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக எதிர்ப் பின்றி வளர்ந்த புரோகித மதம் எதிர்ப்பைக் கண்டுவிட்டது.

சாதியால்—மதத்தால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்க ளிடையே கிறித்தவப் பாதிரிகளின் பிரசாரம் உள்ளொளியை ஏற்படுத்தியது. பாதிரிமார்கள் வெறும் மதப் பிரசாரத்தோடு நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்டுக் கிடந்த இந்து மக்களை அணுகி, அவர்கள்பால் அன்பு காட்டி, ஆக்க வழியிலும் தொண்டுபுரிந்தனர். கல்வி, சுகாதாரம், குடியிருப்பு ஆகிய வற்றில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உதவி புரிந்தனர். இதனால், சேரிகளிலும் குடிசைப் பிரதேசங்களிலும் வாழ்வோரில் பலர் கிறித்தவ மதத்தில் சேரலாயினர். அவர்கள் எண்ணிக்கை கொஞ்சமன்று; கோடி, கோடியாகும்.

இந்தியாவில் ஏற்பட்ட இந்த மாறுதல், இந்து மதத்தி லுள்ள படித்தவர் சிலரிடையே அதிர்ச்சியை உண்டாக்கியது. இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியது. இந்துக்களிடையே உள்ள தத்துவ பேதங்கள், மத பேதங்கள், சாதி பேதங்கள் காரண மாக, இந்தியச் சமுதாயம் ஒற்றுமையின்றிச் சுக்கு நூறாக உடைபட்டுக் கிடப்பதை உணர்ந்தனர்.

Koviloor Digital Library

1757-முதல் 1857-வரையுள்ள ஒரு நூற்றுண்டுக் காலத்திலேயே, மதமாற்றம் அதிகரித்தது. அதன் விளைவாக, படித்த இந்துக்களிடையே மனமாற்றம் ஏற்படலானது. கிறித்துமதத்தின் வளர்ச்சியால் இந்து மதம் நலிவதுபற்றியோ, அந்த மதத்தின் துணைகொண்டுகாலூன்றிய பிரிட்டிஷ்ஆதிக்கம்இழைக்கும் இன்னல்கள் பற்றியோ, சமுதாயத்தின் அடித்தளத்திலிருந்த சாதாரண மக்கள் அதிகமாகக் கவலைப்படவில்லை. காரணம், அவர்களெல்லாம் ஏற்கனவே உள்நாட்டவராலேயே சுரண்டப்பட்டும், ஒடுக்கப்பட்டும் வந்ததுதான். இந்நிலை, சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த படித்த மக்களுள் சிலரையேனும் சிந்திக்க வைத்தது. உயர்தர—நடுத்தர மக்களுள் சிலரிடையே தோன்றிய இந்தப் புத்துணர்ச்சி, மகத்தானதொரு சமயப் புரட்சி நடத்தும் தலைவர்கள் தோன்றுவதற்கான சூழ்நிலையைத் தோற்றுவித்தது. பின்னே தோன்றவிருந்த அரசியல் புரட்சிக்கு முன்னேடியாக சமயப் புரட்சி ஏற்படவேண்டுமென்பது இறைவன் திருவுள்ளம் போலும்!

இந்தச் சூழ்நிலைக்கு மற்றெரு வரலாற்றுப் பின்னணியும் உண்டு. அதனை உருவாக்கிய பொறுப்பு, பாரதத்தின் மீது படையெடுத்த இஸ்லாமிய மன்னர்களுடையதும், இஸ்லாமிய மதத்தினுடையது மாகும். அந்த வரலாற்றுப் பின்னணியை இங்கு சுருக்கமாகவேனும் கூறுவது அவசியமாகும்.

கஜ்னி பாதை !

கி. பி. 11-ஆம் நூற்றுண்டில் ஆப்கானிஸ்தானத்திலிருந்து பாரதத்தின்மீது முதன் முதலாகப் படையெடுத்தான் கஜ்னி முகம்மது. அவன், தொடர்ந்து பதினேழுமுறை பாரதத்தைத் தாக்கினுன். அவற்றில், சோமநாதபுரப் படையெழுச்சி இந்தியக் கலாசாரத்தின்மீது விழுந்த பயங்கரத் தாக்குதலாகும். சோமநாதரின் விக்கிரகத்தை உடைத்துப் பெரும் பொருள் திரட்டிக் கொண்டு தனது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுன் கஜ்னி முகம்மது. இப்படிச் செய்வது எல்லா மதங்களையும் சார்ந்த மன்னர் பெருமக்களின் யுத்த '(அ)நாகரிக'மாகும். ஆயினும், இஸ்லாமியனுன கஜ்னி முகம்மதின் வெறிச்செயல் இந்துக்கள் நிறைந்த பாரதத்தில் மதரீதியான பெரும்போருக்கு வித்தாகிவிட்டது.

பாரதத்தின் தெய்விகக் கலாசாரத்திற்குக் கஜ்னி முகம்மது தந்த அடி, இந்து சமயவாதிகளை விழித்தெழச் செய்தது. கஜ்னி முகம்மது காலம் தொடங்கி அடிக்கடி பாரதத்தின்மீது

Kovilpur Digital Library

ஏற்பட்ட இஸ்லாமியரின் படையெடுப்புகள், பாரத மக்களின் அரசியல் உரிமைகளை மட்டுமல்லாமல், மத வழிப்பட்ட கலா சார உரிமைகளையும் தாக்குபவையாக இருந்தன.

போர் வாழ்க்கை

அதனால், கி. பி. பதினோராம் நூற்றாண்டு தொடங்கிப் பதி னெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலம்வரையுள்ள சுமார் 750 ஆண்டுகளில், வட பாரத மக்கள், தங்கள் அரசுரிமையையே யன்றி, கலாசார உரிமையையும் காத்துக் கொள்ளப் போராடி னார்கள். ஆம்; அந்தத் துரதிர்ஷ்டசாலிகளுக்குப் போர் புரி வதே 'வாழ்க்கை'யாக இருந்தது! அந்தப் போரில் இருதரப்பி லும் மக்கள் சிந்திய செந்நீரும் கண்ணீரும் கலந்து ஆறெனப் பெருகி ஒடியதெனலாம். நீண்டகாலம் உடலில் தொடர்ந்து விட்ட நோய், மருத்துவக் கலையையும் புறங்கண்டுவிடுவது போல, பாரதத்தில் இந்து—இஸ்லாமிய மக்களிடையே பல நூற்றாண்டுகளாக நடந்த போர், அவர்கள் பின்பற்றிய மதங் களின் அறநெறிகளையும் புறங்கண்டுவிட்டது.

அடிச்சுவடும் அழிந்தது

வந்தேறிய முஸ்லிம் சமுதாயத்தினர் அல்லது அவர்கள் வழியில் தோன்றிய மக்கள், தங்கள் பூர்வ தேசத்திற்குத் திரும் பிச் செல்லமுடியாதபடி அவர்களுடைய முன்னோர் வந்த அடிச் சுவடும் அழிந்து போய்விட்டது. ஆம்; ஆக்கிரமிப்பாளர்கள் துவக்கி வைத்த போரை, அவர்கள் மறைந்த பின்னரும் அவர் களுடைய வழிவழிச் சந்ததிகள் தொடர்ந்து நடத்தியதால், அதன்மீது படிந்திருந்த 'அந்நிய'த் தன்மை அழிந்து, 'உள்நாட் டுப் போர்' என்று சொல்லத்தக்க நிலைக்கு மாறுதல் அடைந்து விட்டது. இந்தப் பரிதாபநிலை, பாரத நாட்டிற்குச் சரித்திரம் கொடுத்துவிட்ட சாபம்! இந்தச் சாபம் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் வரும்வரை நீடித்திருந்தது. வந்தவர்கள் நிலை பெறுவதற்கும் உதவி புரிந்துவிட்டது.

இந்து—முஸ்லிம் மக்களிடையே நிலவிய விரும்பத் தகாத மதப்பகைமையைப் பயன்படுத்தி, தங்கள் கிறித்தவ மதத்தை யும் பிரிட்டிஷ் பேரரசையும் பாரதத்தில் நிலைநிறுத்த முயன்ற னர் கிறித்துவப் பிரசாரகர்களும் கிழக்கிந்தியக் கம்பெனியாரும். 1757-ல் தொடங்கிய கிழக்கிந்தியக் கம்பெனியாரின் ஆதிக்கம் படிப்படியாக வளர்ந்து—வலுப்பெற்று, 1857-ல் வெளியான விக்

2031
R65(வள)

Koviloor Digital Library

டோரியா மகர்ராணியார் பிரகடனத்தின் விளைவாகப் பூரணத்துவம் பெற்றது.

கவிஞரின் கண்ணீர் !

இப்படி, இஸ்லாமிய—கிறித்தவ சமுதாயங்கள் ஒன்றன்பின் ஒன்ருக இராணுவ ரீதியில் பாரதக் கலாசாரத்தின்மீது படையெடுத்துப் போரிட்ட காலத்தில், மக்கள் பட்ட அல்லல்களைக் கண்ணீரால் கவிதை தீட்டிக் காட்டுகின்ருர் பாரதியார்.

பிரிட்டிஷ் வேல்ஸ் இளவரசர் இந்தியா வந்த காலை, பாரதத் தாய் வேல்ஸ் இளவரசரை வரவேற்கும் பாவனையில் கவிதை எழுதியுள்ளார் பாரதியார். அந்தக் கவிதையிலே,

" செல்வகேள் ! என்னரும் சேய்களை நின்னுடை
முன்னேர் ஆட்சி தொடங்குறூஉம் முன்னர்
நெஞ்செலாம் புண்ணாய் நின்றனன் யாஅன்
ஆயிர வருடம் அன்பிலா அந்நியர்
ஆட்சியின் விளைந்த அல்லல்கள் எண்ணில,"

என்றுகூறி, மொகலாயர் படையெடுப்பாலும், அவர்தம் ஆட்சியாலும் பாரத மக்களுக்குற்ற அல்லல்களை உரைத்து, பிரிட்டிஷாரின் வருகையால் அந்தப் பழைய கொடுமைகள் அகன்றன என்பதனை,

" மற்றுன் நாட்டினேர் வந்ததன் பின்னர்,
அகத்தினில் சிலபுண் ஆறுதல் எய்தின.
போர்த்தொகை அடங்கிஎன் ஏழைப் புத்திரர்
அமைதிபெற்று உய்வ ராயினர். எனவே,
பாரத தேவி பழமைபோல் திருவருள்
பொழிதர லுற்றனள். பொருள் செயற்குரிய
தொழிற்கணம் பலப்பல தோன்றின; பின்னும்
கொடுமதப் பாவிகள் குறும்பெலாம் அகன்றன.
யாற்றினில் பெண்களை எறிவதூஉம் இரதத்து
உருளையில் பாலரை உயிருடன் மாய்த்தலும்
பெண்டிரைக் கணவர்தம் பிணத்துடன் எரித்தலும்,
எனப்பல தீமைகள் இறந்துபட் டனவால்.
ஆயினும் என்னை? ஆயிரம் கோடி
தொல்லைகள் இன்னும் தொலைந்தன வில்லை-"

Koviloor Digital Library

என்று பாடி, இஸ்லாமியர் படையெடுப்பால் விளைந்த கேடுக ளுள் சில பிரிட்டிஷாரால் நீக்கப்பட்டனவாயினும், பல கேடுகள் இன்னும் நிலைத்தே நிற்கின்றன என்கின்றார். பிரிட்டிஷாரின் வருகையால் விளைந்த நன்மைகளைக் கூறிய அவர், அவர் களுடைய ஆதிக்க வெறியால் இந்து—முஸ்லிம் மக்களுக்கு விளைந்த புதிய கேடுகளையும் கூறுவாராகி,

> "நல்குர வாதி நவமாம் தொல்லைகள்
> ஆயிரம் எனைவந் தடைந்துள நுமரால்."

என்று பாடுகின்றார்.

இந்தச் சூழ்நிலையில், மத வெறியை அழித்து, மதநெறியை வளர்க்கும் மகான்கள் தேவைப்பட்டனர். இந்து—முஸ்லிம்—கிறித்தவ மதங்கள் ஒன்றுக்கொன்று எதிரும் புதிருமான இராணுவ முகாம்களாக விளங்கிய அவல நிலையை மாற்றி, அவற்றிடையே சமரச மனோபாவத்தை வளர்க்கத்தக்க சன் மார்க்க ஞானியர் தேவைப்பட்டனர். சுருங்கச் சொன்னால்,

பிறசமயங்களின் படையெடுப்பால் அழிந்து கொண்டிருந்த பாரதக் கலாசாரத்தைக் காக்கவும்,

இந்து—முஸ்லிம்—கிறித்தவ—சீக்கிய சமயங்களிடையே ஒருமைப்பாடு காணவும்,

இந்துக்களிடையே நிலவிய மூடநம்பிக்கைகளை, சாதி வழிப் பட்ட உயர்வு—தாழ்வு மனப்பான்மைகளை, போலி வைதிகர் களின் புரட்டுச் சடங்குகளை அடியோடு அழிக்கவும் புரட்சிகர மான சீர்திருத்தவாதிகள் தேவைப்பட்டனர்.

இந்துக்களின் குருமார்களாகிய வைதிக அந்தணர்கள், புறச் சமயங்களுக்கு எதிராக இந்துக்களிடையே போர்வெறியை வளர்த்தனர். அதற்குமேல் இந்து மக்களிடையே சமத்து வத்தை ஏற்படுத்தவோ, சமரச மனோபாவத்தை வளர்க்கவோ, தத்துவச் சண்டைகளைத் தவிர்க்கவோ அவர்கள் துணிய வில்லை. சுருங்கச் சொன்னால், சமயங்களும் சமயாசாரியர்களும் கால மாறுதலை உணர்ந்து செயற்பட முன்வரவில்லை. இந்து மதத்தில் மறுமலர்ச்சி காணச் சந்தர்ப்பம் நிர்ப்பந்தப்படுத்தி யும், புரோகிதர்களும் குருமார்களும் மனமாற்றம் அடைய வில்லை. புறத்தேயிருந்து வந்த அந்நிய மத ஆதிக்கத்தை, அது விளைத்த அநீதிகளைக் கண்டு ஆத்திரங் கொண்டு அவற் றிற்கு எதிராகப் போர் புரிய மக்களைத் தூண்டிவிட்டனர்

Koviloor Digital Library

இந்து மன்னர்களும் மதவாதிகளும். ஆனால், தங்கள் மக்கள் மீதே தாங்கள் செலுத்திவரும் ஆதிக்கத்தை, ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அவர்களுக்கு இழைத்து வரும் அநீதங்களை விட்டுத் தொலைக்க அவர்கள் விரும்பினாரல்லர்.

தேவதூதர் நால்வர்!

இந்த நிலையில், தேவதூதரா லன்றிச் சாதாரண மக்களால் பரிகாரம் காண முடியாத ஒரு பெரும் கேட்டிற்குப் பாரதத்தின் பூர்வ மதம் இரையாகியிருந்தது. இந்தக் குழப்பத்திற்கு நடுவே, 1774-ஆம் ஆண்டு தொடங்கி, 1836-ஆம் ஆண்டு வரையுள்ள ஒரு காலகட்டத்தில் பாரத புண்ணிய பூமியில் தேவ தூதர் நால்வர் ஒருவர்பின் ஒருவராகத் தோன்றுகின்றனர். அவர்கள் முறையே, **இராசா ராம்மோகன் ராய், இராமலிங்கர், தயானந்த சரஸ்வதி, இராமகிருஷ்ணர்** ஆகியோராவர். அன்பு வடிவான அன்னையே யாயினும், அழுத பிள்ளைக்கே பால் கொடுப்பாள். ஆண்டவனும் அப்படித்தான். அதனாற்றான், "வினையேன், அழுதால் உனைப் பெறலாமே" என்றார் மாணிக்கவாசகர். இந்த உண்மை யையே, "தருமம் அழிந்து அதருமம் தலைதூக்கி மக்கள் அல்லலுற் றழும்போது நான் தோன்றுவேன்" என்று கண்ணன் கூறியதாக உள்ள கீதையின் வாசகமும் உணர்த்துகின்றது

ஜோதி பிறந்தது !

பிற்காலத்தில் **'அருட்பிரகாச வள்ளலார்'** என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப் பெற்ற **இராமலிங்கர்** கலி. 492௦ சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாளில் (5—10—1823) தோன்றினார். மத மாயை இருளகற்ற வந்த இளஞாயிறே போன்று ஞாயிற்றுக்கிழமை யன்று தோன்றினார் இராமலிங்கர்.

இராசா ராம்மோகன் ராய்

இராமலிங்கர் தோன்றுவதற்கு நாற்பத்தொன்பது ஆண்டு களுக்கு முன்பு—அதாவது, 1774-ஆம் ஆண்டு மே திங்கள் 22-ஆம் நாளில் மேற்கு வங்கத்திலுள்ள இராதாநகர் என்னும் ஊரில் **இராசா ராம்மோகன் ராய்** பிறந்தார். அவர், தம் தாய்மொழி யான வங்க மொழியில் புலமை பெற்றதோடு, கலாசார மொழி யான சமஸ்கிருதத்திலும் ஞானம் பெற்றார். மற்று, ஆங்கிலம், கிரேக்கம், ஹீப்ரு, பாரசீகம், அரபு ஆகிய பிற மொழிகளையும் பயின்றார்; இந்துமத வேதங்கள், உபநிடதங்கள், சாத்திரங்கள் ஆகியவற்றையும் பழுதறக் கற்றுப் பண்டிதரானார்.

Koviloor Digital Library

கிறித்தவ வேதத்தைக் கிரேக்க மொழியிலேயே பயின்றார். புத்த மத நூல்களைப் படிக்கும் பொருட்டு அவை எழுதப்பட்டுள்ள பாலி மொழியைப் பயிலத் திபெத்து நாட்டுக்குச் சென்று அந்த முயற்சியில் வெற்றி கண்டார். ஒரு சமய சீர்திருத்த வாதிக்குத் தேவைப்படும் சகிப்புணர்ச்சியைக் குறைவறப் பெற்றிருந்தாராதலால், சர்வ சமய நூல்களையும் படித்து அவற்றில் புதைந்து கிடக்கும் உண்மைகளை அறிய முயன்றார்.

தயானந்தர்

இராமலிங்கர் தோன்றிய அடுத்த ஆண்டிலேயே பாரதத்தின் வடமேற்கிலுள்ள குஜராத்து மாநிலத்தில் **டங்காரா** என்னும் ஊரில் 1824-ஆம் ஆண்டில் **தயானந்த சரஸ்வதி** தோன்றினார். இவரது இயற்பெயர் **மூலசங்கர்** என்பதாம். இவர், குஜராத்தி, இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றிருந்தார்.

இராமகிருஷ்ணர்

இராமலிங்கர் தோன்றிப் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் வங்க மாநிலத்தில் **கமார்புக்கூர்** என்னும் சிற்றூரில் 1836-ஆம் ஆண்டில் **இராமகிருஷ்ணர்** பிறந்தார். இவர் கல்கத்தா நகருக்கருகில் தட்சிணேசுவரத்தில் உள்ள காளி கோயில் பூசாரியாக இருந்து தெய்வத்தின் திருவருளைப் பெறும் வாய்ப்புப் பெற்றார்.

இந்தப் பெரியார் நால்வரும் சில பல கருத்துக்களில் தங்களிடையே வேறுபாடுடையவர்கள் என்றாலும், சமுதாய—சமயச் சீர்திருத்தத்தில் புரட்சிகரமான மனப்பான்மை யுடையவர்கள்.

சாதி வேறுபாடுகளை அறவே ஒழித்தல்,

'தெய்வம் ஒன்று' என்ற உண்மையை மக்கள் உணரும்படி செய்தல்,

இந்து சமயத்தினரிடையே காணப்படும் எல்லா விதமான வேற்றுமைகளையும் தொலைத்துச் சமத்துவம் நிலவும்படிச் செய்தல்,

இந்துமத வேத, ஆகம, சாத்திர நூற்களைத் தாம் தாமே படித்துப் புரிந்துகொள்ளாமல், அந்தணர் சொன்னதை யெல்லாம் மக்கள் அப்படியே நம்புவதை எதிர்த்தல்,

Koviloor Digital Library

பெண்ணடிமையை ஒழித்து ஆணுக்குப் பெண் சமம் என்ற நிலையைத் தோற்றுவித்தல்,

சர்வ சமயங்களிடையேயும் சமரசம் ஏற்படுத்தப் பாடுபடுதல் ஆகிய சீர்திருத்தக் கொள்கைகள் மேற்சொன்ன பெரியார் நால்வருக்கும் பொதுவானவையாகும்.

வேறுபாடு

இராசா ராம்மோகன்ராயும் தயானந்த சரஸ்வதியும் உருவ வழிபாட்டை முழுமூச்சுடன் எதிர்த்தனர். இராமலிங்கரும் இராமகிருஷ்ணரும், "ஏகன், அநேகன் இறைவன்" என்னும் கொள்கையை—"உருவாய், அருவாய், உளதாய், இலதாய்" என்னும் நெறியை—நம்பி, அதனைத் தங்கள் வாழ்க்கையிலும் கடைப்பிடித்தனர். ஒருவிஷயத்தில், இராமகிருஷ்ணர், இராம்மோகன் ராய், தயானந்தர் ஆகிய மூவரிடமிருந்தும் இராமலிங்க வள்ளலார் வேறுபடுகின்றார். அதாவது, இராமலிங்கர், சமயங்களே அற்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உடைய 'ஒரே உலகம்' காண்பதைத் தமது இறுதி இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

வேதாகம சாத்திரங்களுக்குக் கட்டுப்படாத ஒரு சமுதாயத்தை, தெய்வ நெறியை, அந்த நெறிவழிச் சென்று அடையக்கூடிய தெய்வ நிலையை உலக மக்கள் அனைவருக்குமாகப் போதித்தார். அந்த வகையில் மற்ற மூவரைவிட மிகத் தீவிரமான புரட்சிக்காரராய் விளங்கினார் இராமலிங்கர்.

இந்தப் பெரியார் நால்வருமே சாதி வேற்றுமைகளை வெறுத்தவர்கள். நமக்கும் அந்தக் கொள்கை உடன்பாடே. ஆயினும், இந்தப் பெரியோர்கள் தோன்றிய காலத்தின் சூழ்நிலையைச் சரியாகப் புரிந்துகொள்ள இவர்கள் தோன்றிய சாதிகளையும் சிறிதளவு நினைவுகொள்வது அவசியமாகும்.

தலைமை மாறுகிறது!

வடக்கே தோன்றிய இராம்மோகன் ராய், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகிய மூவரும் பிராமண சாதியில் பிறந்தனர். தெற்கே தமிழகத்தில் தோன்றிய இராமலிங்கர், கருணீகர் சாதியில் பிறந்தார்.

ஆதிசங்கரர், இராமாநுஜர் போன்ற புரட்சிகரமான சீர்திருத்தவாதிகளைத்தோற்றுவித்ததமிழ்ப்பிராமணசாதியானது, நாம் மேலே வருணித்த சூழ்நிலைக்குரிய கால கட்டத்தில் சமூகச்

Koviloor Digital Library

சீர்திருத்தப் புரட்சியாளர் ஒருவரைத் தோற்றுவிக்கத் தவறி விட்டது. அந்தண சாதியேயன்றி, சைவ சமயத்தைத் தன் செல்வாக்கிற்குள் வைத்திருந்த வேளாளர் சாதியும் தன்னி லிருந்து ஒரு சீர்திருத்தவாதியைத் தோற்றுவிக்கத் தவறி விட்டது.

இராமலிங்க வள்ளலார் தம்முடைய அருள் நெறியைப் பரப்புவதற்கெனச் **சமரச சுத்த சன்மார்க்க சங்கம்** என்ற ஓர் அமைப்பினை நிறுவினார். அதன் துணை கொண்டு, சாதி—சமய வேற்றுமைகளற்ற, பழைய மூடநம்பிக்கைகளிலிருந்து முற்றிலும் விடுதலைபெற்ற ஒரு புத்தம் புதிய மனித சமு தாயத்தை உருவாக்க முடியுமெனக் கனவு கண்டார்.

சீர்திருத்தப் புயல்!

அதே காலத்தில், வடக்கே இராம்மோகனர், தயானந்த சரஸ்வதி ஆகிய இரு பெரியார்களும், இந்து சமயத்தவரி டையே புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தத் தனித்தனி இயக்கங்களைக் கண்டனர். இராம்மோகனர், 'ஆன்மீக சபை' என்ற அமைப்பினை ஏற்படுத்தினார். பின்னர், **'பிரம்ம சமாஜம்'** என்று அதன் பெயரை மாற்றினார்.

தயானந்த சரஸ்வதி **'ஆரிய சமாஜம்'** என்ற அமைப்பினை நிறுவினார். இந்த மூன்று பெரியார்களின் காலத்திலேயே வாழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர், தம் கொள்கைகளைப் பரப்புவதற் கெனத் தனியாக இயக்கம் எதையும் துவக்க வில்லை. ஆயினும், அவரே ஒரு மாபெரும் இயக்கத்திற்குரிய பேராற்றலைப் பெற்றிருந்தார். தம்முடைய எண்ணங்களைப் பரப்ப எண்ணற்ற சீடர்களைத் தோற்றுவித்தார். அந்தப் பெரியாருடைய மறைவுக்குப் பிறகு அவருடைய சீடர்களுள் முதல்வரான **நரேந்திரர்** என்பார், "ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கம்" என்ற அமைப்பினை நிறுவினார். தம்முடைய பெயரை **விவேகானந்தர்** என மாற்றிக்கொண்டு, துவராடை அணிந்து துறவு பூண்டார். இராமகிருஷ்ணருடைய சீடர்கள் அத்தனை பேரும் புதுப் புதுப் பெயர்கள் பூண்டு துறவிகளாயினர். இந்தத் துறவிகளுக்கெனக் கல்கத்தா நகரை அடுத்துள்ள பேலூரில் 'ஸ்ரீ இராமகிருஷ்ணர் மடம்' என்ற ஒன்று அமைக்கப் பெற்றது.

பரங்கி மொழியும் பகுத்தறிவுச் சுடரும்!

பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், ஸ்ரீ இராமகிருஷ்ணர் சங்கம் ஆகிய அமைப்புகளின் பணிகளைக் கொஞ்சம் விரிவாகத்

Koviloor Digital Library

தெரிந்து கொள்வது அருட்ஜோதி வள்ளலாரை நன்கு புரிந்து கொள்வதற்குப் பயன்படுமென்று நம்புகின்றோம்.

இராம்மோகனர், தம்முடைய பிரம்ம சமாஜத்தின் துணை கொண்டு சமய—சமூகச் சீர்திருத்தப் பணிகளில் தீவிரமாகக் கவனம் செலுத்தினர்.

உருவ வழிபாட்டு முறையை எதிர்த்து, ஆண்டவனை அருபியாகக் கருதி வழிபடும் முறையை மக்களிடையே பரப்பினர்.

'ஆணுக்குப் பெண் அடிமை' என்னும் கொடுமையை அடியோடு எதிர்த்தார். 'ஆணுக்குப் பெண் சமம்' என்ற வேத காலத்து நீதியைத் திரும்பவும் நிலைநாட்ட முனைந்தார்.

வேத, ஆகம, சாத்திரங்களிலுள்ள முற்போக்கான— விஞ்ஞான சகாப்தத்துக்குப் பொருந்தத் தக்க கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, காலத்திற்கொவ்வாத மூட நம்பிக்கைகளை அழித்தொழிக்கப் புரோகித மதத்தின் மீது 'அறிவுப் போர்' தொடுத்தார்.

19-ஆம் நூற்றுண்டில் காட்டாற்று வெள்ளம்போல் ஆசியாவில் பெருக்கெடுத்தோடிய ஐரோப்பிய நாகரிகம் இந்தியாவையும் தாக்கியது. ஆங்கில மொழி பயின்று. அது காரணமாக ஐரோப்பிய நாகரிகத்திலும் பற்றுக் கொண்ட இராம்மோகனர், பின்விளைவறியாது, பாரத மக்கள்மீது ஒரு கலப்பு நாகரிகத்தைத் திணிப்பதைச் சீர்திருத்தத் தொண்டாகக் கருதினர். அந்தத் தொண்டுக்குத் துணையாகப் பாரத மக்கள் அனைவரும் ஆங்கில மொழியினைப் பயில வேண்டு மென்றும், கல்வி முழுவதையும் அம்மொழியிலேயே கற்கவேண்டு மென்றும் விரும்பினர். லார்டு மெக்காலேயின் தேசிய விரோதக் கல்வி முறைக்கு மன நிறைவோடு ஆதரவு தந்தார்.

இராம்மோகனர், சமஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமையுடையவராயினும், அந்த மொழி மூட நம்பிக்கைகளை வளர்ப்பதாகக் கருதி, அதன்மீது ஓரளவு வெறுப்புக்கொண்டார்.

வடமொழியின்பால் கொண்ட வெறுப்புக் காரணமாகவே ஆங்கில மொழியின்பால் பற்றுக் கொண்டு, அதையே பாரதத்தின் பொதுமொழியாகவும் செய்துவிடத் துணிந்தார், பிரம்ம சமாஜத் தலைவர்.

Koviloor Digital Library

புதிய மூடநம்பிக்கை!

ஆங்கில மொழியறிவு பரவினால் மட்டுமே மத வழிப்பட்ட மூடநம்பிக்கைகளி லிருந்து மக்களை விடுவிக்க முடியுமென்பது இராம்மோகனரின் உறுதியான நம்பிக்கை. இதனை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வதற்கில்லை.

இராசா ராம்மோகன ராய் காலத்தில்தான் இராமலிங்கர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகிய சீர்திருத்தவாதிகள் தோன்றினர் என்பதை மறத்தல் கூடாது. இந்த மூவரும் ஆங்கில மொழியில் சிறிதளவுகூட ஞானம் பெறாதவர்கள். அப்படி இருந்தும், வேத, ஆகம, சாத்திரங்களின் துணை கொண்டு வளர்ந்த மூட நம்பிக்கைகளை முழுமூச்சோடு எதிர்த்துப் போரிட்டிருக்கின்றனர். அந்த வகையிலே, மற்ற மூவரையும்விட இராமலிங்க வள்ளலார் மிக மிகத் தீவிரவாதியாவார். ஆகவே, 'மூட நம்பிக்கை' என்னும் இருளைப் போக்கும் 'பகுத்தறிவுக் கதிரவனாக ஆங்கில மொழியை ஏற்பது மற்றொரு புதிய மூடநம்பிக்கையாகும். இராம்மோகனருக்குப் பின்புள்ள ஒரு நூற்றாண்டுக் காலத்தில் நாம் பெற்றுள்ள அனுபவம்— ஆங்கில மொழி பயின்று பி.ஏ., எம். ஏ.ப்பட்டம் பெற்றவர்களும் டாக்டர்களாகவும் எஞ்சினியர்களாகவும் பதவி பெற்றவர்களுங் கூடப் பழைய மூடநம்பிக்கைகளுக்கு விலக்காக வாழவில்லை என்பதைக் காட்டுகின்றது. இதை மகாகவி பாரதியின் வாக்காலேயே காண்போம்.

பாரதி வாக்கு!

"சென்ற நூறு வருஷங்களாக இந்நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லக்ஷக்கணக்கான கோடிக் கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூட பக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை.

"இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய்த் தேறினவர்களிடம் மனச்சாக்ஷிப்படியும் தன் அறிவுப் பயிற்சியின் விசாலத்திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்கியதை மிக மிகக் குறைவாக இருக்கிறது.

"புஸ்தகத்துக்கும் வாய்ப்பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு

Koviloor Digital Library

த்ருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் இங்கிலிஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த த்ருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்றுகின்றது.

"பி. ஏ., எம். ஏ பரீக்ஷைகள் தேறி வக்கீல்களாகவும், உபாத்தியாயராகவும், என்ஜினீர்களாகவும், பிற உத்தியோகஸ்தராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர் அய்யங்கார், பிள்ளை, முதலியவர்களில் எவராவது ஒருவர் தம் வீட்டுக் கல்யாணத்துக்கு லக்னம் பார்க்கவேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா?"

[பாரதி நூல்கள்- கட்டுரைகள்]

இது, சமய சீர்திருத்தப் புரட்சியிலே இராமலிங்க வள்ளலாருக்கும், அவருக்கு இணையாக உள்ள பெரியார் மூவருக்கும் வாரிசாகத் தோன்றிய பாரதியின் கருத்தாகும்.

பரீட்சார்த்தம்

ஆங்கிலக் கல்வியின் மூலமே மூட நம்பிக்கைகளை அழிக்க முடியுமென்று இராம்மோகனர் கருதியதை ஒரு பரீட்சார்த்த முயற்சியாகவே நாம் கொள்ள வேண்டும். அவருடைய பரீட்சை அவர் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பது பாரதியாருடைய அனுபவ வாக்கால் அறியப்படுகிறது.

இராம்மோகனர், வடமொழிக்கிருந்த பொதுமொழி அந்தஸ்தை ஆங்கில மொழிக்குத் தர விரும்பினு ராயினும், தம் தாய் மொழியான வங்கமொழிக் கெதிராக அவர் ஆங்கில மொழியை ஆதரிக்கவில்லை. வங்க மொழியின் வளர்ச்சிக்கும் அம்மொழி இலக்கியங்களின் மறுமலர்ச்சிக்கும் 19-ஆம் நூற்றுண்டில் வித்திட்ட பெருமை இராம்மோகனருக்கே உரியது.

பள்ளிகளில் ஆங்கிலமே போதனுமொழி யாக்கப்படுவதை அந்நாளில் இராம்மோகனர் ஆதரித்தார். அதைவிட வேறுவிதமாக அவர் நடந்து கொண்டிருக்க முடியாது. 19-ஆம் நூற்றுண்டில் விஞ்ஞானக் கலைப் பாடங்களைப் பிரதேச மொழியில் போதிக்கும் திறமையுள்ள ஆசிரியர்களோ, பாட நூல்களைப் பிரதேச மொழிகளில் எழுதித் தரும் எழுத்தாளர்களோ தோன்றியிருக்க வில்லை. அதனுல், ஆங்கிலம் போதனு மொழியாக வருவதை தவிர்க்க முடியாத தீமையாகக் கருதி இராம்மோகனர் ஆதரித்திருக்கக்கூடும். மற்று, பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் இந்திய அரசின் தலை

Koviloor Digital Library

நகராக இருக்கும் பெருமை கல்கத்தாவுக்கே வாய்த்தது. அதனால், கல்கத்தாவில் வாழ்ந்த இராம்மோகனர், மத்திய ஆட்சியை மனத்தில் கொண்டு, 'பொது மொழியாக எந்த மொழியை ஏற்பது?' என்ற வினாவிற்கு விடை காண முற்பட்டார். அன்றிருந்த நிலையில், சமஸ்கிருதம், உருது, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளி லொன்றையே பொதுமொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்த மிருந்தது. சமஸ்கிருதம் பேச்சு மொழியாக இல்லாததால், அதனைத் தேர்ந்தெடுக்க இராம்மோகனருக்கு வாய்ப்பிருக்கவில்லை. இந்து மதத்தைப் புனருத்தாரணம் செய்யத் தோன்றிய அவர் உருது மொழியை ஏற்றிருக்கலா மென்று எண்ணுவதற்கில்லை. இந்த நிலையில் ஆங்கிலமே பொது மொழியாகவும், போதனு மொழியாகவும் வருவதை அவர் ஆதரித்த செயல் நம்மால் புரிந்து கொள்ளக் கூடியதே ஆனால், இன்றைய நிலைமை வேறு.

மதமாற்றப் போர் !

இராமலிங்க வள்ளலார் காலத்தில் தோன்றிய மற்றொரு பேரியக்கம் ஆரிய சமாஜமாகும். இந்த சமாஜம், பெரும்பாலும் இந்துமதச் சீர்திருத்தத்தையே குறிக்கோளாகக் கொண்டது. வறுமை, அறியாமை, வைதிகம் இழைத்த கொடுமை ஆகியவை காரணமாக, இஸ்லாம்—கிறித்துவம் ஆகிய புறச்சமயங்களைத் தழுவிவிட்ட இந்துக்களைத் திரும்பவும் பூர்வ மதத்துக்குக் கொண்டு வரவும், புறச் சமயங்களைத் தழுவும் போக்கை முற்றிலும் தவிர்க்கவும் ஆரிய சமாஜம் முழு முயற்சி செய்தது. இது, அன்றும் இன்றும் அதனிட முள்ள தனிப்போக்கு. பழைய வேதகால நெறிகளை ஏற்று பௌராணிக மதத்தை முற்றிலும் மறுக்கத் துணிந்ததுடன், பிரம்ம சமாஜத்தைப் போலவே உருவ வழிபாட்டைத் தயவு தாட்சணிய மின்றி எதிர்த்தது. வேதங்களுக்குப் பௌராணிக வாதிகள் செய்த வியாக்கியானங்களை மறுத்து, வேதத்தின் உண்மைக் கருத்துக்களை மக்களிடையே பரப்பவும் ஆரிய சமாஜம் பணி புரிந்தது. அந்த வகையில், "சத்தியார்த்த பிரகாஷ்" என்ற வேத விளக்க நூல் ஒன்றை இந்தியில் எழுதி வெளியிட்டார், தயானந்தர். அவரை, புரோகிதத்தின்—பௌராணிகத்தின் எதிரி என்று சொல்லலாம்.

தேசியமும் மதமும்

கொஞ்சம் பிற்காலத்தில் பிறந்த இராமகிருஷ்ணர் சங்கமும் அதனைச் சார்ந்த துறவிகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டில்

Koviloor Digital Library

புதிதாகத் தோன்றி வளர்ந்து வந்த தேசிய விடுதலை உணர்ச் சிக் கேற்ப, மதத்துறையிலே மறுமலர்ச்சி காண விழைந்தனர். தீண்டாமைக் கொடுமையை, சாதிவேற்றுமைகளை, சமய வழிப் பட்ட தத்துவப் போராட்டங்களை வேரொடு களைந்தெறியப் பாடுபட்டனர்.

இப்படியாக வடக்கே மூன்று பேரியக்கங்கள்—புறச்சமயங் களுக்கு எதிராக மட்டுமின்றி, அகச் சமயத்தில் ஆதிக்கம் பெற் றிருந்த வைதிகத்திற்கும் விரோதமாக — 'திரிசூலம்' போல் தோன்றின.

இராம்மோகனர், இராமலிங்கர், தயானந்தர், இராமகிருஷ் ணர் ஆகிய நால்வரும் சற்றேறக்குறைய ஒரே காலத்தில் வாழ்ந்தவர்களாயினும் இவர்களிடையே சந்திப்பு ஏற்பட்ட தாகவோ, தொடர்பு இருந்ததாகவோ செய்தி இல்லை.

அப்படியே, அவர்கள் காலத்திலோ, அவர்களுக்குப் பிற் காலத்திலோ, அந்நால்வரின் கொள்கைவழித் தோன்றிய நான்கு இயக்கங்களிடையேயும் நெருங்கிய தொடர்போ, பரஸ்பர ஒத்துழைப்போ ஏற்படவில்லை. ஆயினும், வரலாற்றுக் கண் கொண்டு பார்க்கும் நமக்கு, பிரம்ம சமாஜம், சமரச சுத்த சன் மார்க்க சங்கம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணர் சங்கம் ஆகிய நான்கு இயக்கங்களிடையேயும் காணப்படும் கொள்கை ஒரு மைப்பாடும், சமூகத் தீமைகளை எதிர்க்கும் போராட்ட உணர்ச் சியும் மிக நன்றாகப் புலப்படுகின்றன.

நால்வர் துவக்கிய நான்கு பேரியக்கங்களுடைய இன்றைய நிலையை ஆராய்வதும், ஒன்றோடு மற்றொன்றை ஒப்பிட்டுப் பார்த்து அவற்றின் வெற்றி தோல்விகளை அறிந்துகொள்வதும் அவசியமாகும்.

நால்வருள்ளே நம்மவர் !

இராமலிங்கரைத் தவிர, மற்றப் பெரியார் மூவரும் தாங் கள் வாழ்ந்த காலத்திலேயே வட இந்தியாவிலுள்ள பொதுமக் களால் நன்கு ஆதரிக்கப்பட்டனர். வைதிகர்கள் அவர்களைக் கடுமையாக எதிர்த்தனர் என்றாலும், அந்த எதிர்ப்புகளைச் சமாளித்து முன்னேறவும் அவர்களால் முடிந்தது.

இராம்மோகனரின் பிரம்ம சமாஜ இயக்கம், வங்காளத்தி லிருந்த படித்தவர்களிடையே—குறிப்பாக, ஆங்கிலம் கற்றவர்

Koviloor Digital Library

களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தது. தன்னைப் பிரம்ம சமாஜி என்று சொல்லிக்கொள்வதில் படித்தவர்களிலே ஒவ்வொருவரும் பெருமை கொண்டனர். பாரதத்தில் மட்டுமின்றி, அயல் நாடுகளிலும் பிரம்ம சமாஜத்தின் கொள்கைகள் பரவி இராம் மோகனரின் சீடர்களுடைய எண்ணிக்கை வளர்ந்தது. கல்வித் துறையிலும் சமய—சமூகத்துறைகளிலும் மகத்தான மாறுதல்களை ஏற்படுத்தப் பிரம்ம சமாஜத்தால் முடிந்தது. குறிப்பாக, கணவன் இறந்தவுடனே மனைவியை உடன்கட்டை ஏற்றிக் கொல்லும் கொடுமையை ஒழிக்கும் சட்டம் தோன்றியதற்கு இராஜா ராம்மோகன் ராய் அவர்களுடைய பெருமுயற்சியே முதற் காரணமாகும். இன்று பாரதத்திலோ, வங்க மாநிலத்திலோ, பிரம்ம சமாஜம் போதிய வலுவுடன் இயங்கவில்லை என்றாலும், பாரதத்தின் வரலாற்றில்—குறிப்பாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் வரலாற்றில் பிரம்ம சமாஜம் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற்று விட்டதை மறுப்பதற்கில்லை.

புதிய சாதி !

அப்படியே, தயானந்த சரஸ்வதி தோற்றுவித்த ஆரிய சமாஜமும் வைதிகர்களின் முரட்டுத்தனமான எதிர்ப்பை முறியடித்து, வட இந்தியாவில் வலுப்பெற்று வளர்ந்து வந்திருக்கிறது. இலட்சியப் பற்றுடைய உண்மை 'ஆரியர்களை' இலட்சக் கணக்கில் அந்த இயக்கம் தோற்றுவித்திருக்கிறது. ஆரிய சமாஜம் வடமொழியின்பால் வெறுப்புக் கொள்ளவில்லை. அந்த மொழியிலுள்ள இலக்கியங்கள் பயன்படுத்தப்படும் முறையிலேயே கருத்து வேறுபாடு காட்டுகிறது. அதனால், மகத்தான மறுமலர்ச்சியைச் சமஸ்கிருத இலக்கியக் களஞ்சியத்திலே ஏற்படுத்தி யிருக்கிறது.

ஆரிய சமாஜிகளிடையே சாதி வேறுபாடோ, ஏற்றத் தாழ்வு மனப்பான்மையோ அதிகமாகத் தலைகாட்டுவதில்லை. அந்த வகையில், முற்போக்கு மனமுடைய ஒரு புதிய சாதியை உற்பத்தி செய்திருக்கிறார், நாம் சுட்டிக்காட்டிய நான்கு பெரியார்களுள் ஒருவரான தயானந்தர்.

> " தற்காலத்தில் பிரம்ம சமாஜம்—ஆரிய சமாஜம் இரண்டும் தோன்றியிராவிடில், இந்நாளைக்குள் மகம்மதியரும் கிறித்தவரும்இந்தியாவிலுள்ள தற்கால இந்துக்களை எண்ணிக்கையில் வெகுதூரம் மிஞ்சியிருப்பார்க ளென்பது ஐயமற்ற உண்மையே."

Koviloor Digital Library

என்று 'தற்கால இந்தியா' என்ற தமது நூலில், இராம்மோகன ரும் தயானந்த சரஸ்வதியும் அடைந்த வெற்றிகளை வாய் மணக்க வருணிக்கின்றார் சுவாமி விவேகானந்தர்.

இராமகிருஷ்ணர் பாதையிலே நின்று சுவாமி விவேகானந் தர் தோற்றுவித்த பேரியக்கம் மகத்தான அளவில் மக்கள் மத்தியிலே செல்வாக்குடன் விளங்குகின்றது. பாரத நாட்டில் மட்டுமல்லாமல், பிற நாடுகளிலும் அந்தச் சங்கத்தின் கிளை களும் மடங்களும் நிலவுகின்றன. சர்வதேச ரீதியில் செல் வாக்குப் பெற்றுள்ள துறவிகளையும் காண்கின்றோம்.

வள்ளலார் பாதை

இராம்மோகனர், தயானந்தர், இராமகிருஷ்ணர் ஆகியோ ருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்களுக்கு எந்த வகை யிலும் குறைந்துவிடாத மாபெரும் ஞானியாக, மரணத்தையே வென்ற சித்தர் என்னும் புகழுக்குரியவராக விளங்குகின்றார் இராமலிங்கர். ஆனால், மற்ற பெரியோர்கள் மூவரும் தங்கள் வாழ்நாளிலே, தாங்கள் வாழ்ந்த மாநிலங்களிலே பெற்றிருந்த செல்வாக்கை நினைக்குமிடத்து, தாம் வாழ்ந்த காலத்திலே—தமிழகத்து மக்களிடையே இராமலிங்கர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார் எனச் சொல்வதற்கில்லை. மற்றப் பெரியார்கள் மூவரின் கொள்கைகள் வழித் தோன்றிய இயக்கங்கள், அவர் களுடைய காலத்திலேயே பாரதமெங்கும் பரவி, அவர்களுக்குப் பிறகும் நன்கு வளர்ச்சிபெற்று, பாரத மக்களின் வாழ்விலே கொள்கை ரீதியான மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. அதுபோல, இராமலிங்கர் தோற்றுவித்த சமரச சுத்த சன்மார்க்கப் பேரியக் கம்—அவர் காலத்திலோ, பிறகோ, அவர் எதிர்பார்த்த அளவில் சமய—சமூகச் சீர்திருத்தப் பாதையிலே வளர்ச்சி பெற்ற தாகவோ, தமிழருடைய வாழ்விலே மறுமலர்ச்சி ஏற்படுத்திய தாகவோ சொல்வதற்கில்லை. அவ்வரியற்றியுள்ள பாடல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த பாடல்கள், அவற்றிற்குரிய பொருளோடு மக்களால் இன்றளவும் போற்றப்படவில்லை. மற்றுள்ள பக்திப் பாடல்கள் மட்டுமே மக்களால் பாடப்பட்டு வருகின்றன. இது வள்ளலாரின் குறையன்று; தமிழகத்தில்—தமிழருடைய இரத்தத்தில் கலந்து விட்ட "சாதி வெறி" யின் விளைவு!

இதற்குக் காரணம், பத்தொன்பதாம் நூற்றுண்டின் சூழ்நிலையில், வடக்கிற்கும் தெற்கிற்கு மிடையே வேற்றுமை இருந்ததுதான்.

Koviloor Digital Library

ஆதிக்கம் அசைந்தது!

வடக்கில் அடிக்கடி ஏற்பட்ட இஸ்லாமியருடைய இராணுவ ரீதியான அரசியல்—மத படையெடுப்புகளும், அதனை அடுத்து வாணிக ரீதியில் தோன்றிய ஆங்கிலேயர்களின் மத—அரசியல் கலப்புடைய படையெடுப்பும் இந்து வைதிகர்களுடைய ஆதிக்கக் கோட்டையின் அஸ்திவாரத்தை அசைத்துவிட்டன. அந்த இரு வகையான படையெடுப்புகளை எதிர்த்து வடபுல மக்கள் நடத்திய போராட்டத்திலே, மக்களுக்குத் தலைமை தாங்கிய க்ஷத்திரிய மரபு அன்னியரால் அழிக்கப்பட்டு விட்டதால், அந்த இடத்தையும் பிராம்மணீயம் ஏற்றுக்கொண்டுவிட்டது. அதனால் மக்களிடமிருந்து பிரிந்து தனித்து வாழும் வைதிக உணர்ச்சி, உயர்வு மனப்பான்மை ஆகிய தீமைகளிலிருந்து பிராம்மண வருணத்தினரில் சிலரேனும் விடுதலை பெற்றவராயினர் ஏனைய மூன்று வருணத்தினரில் மிகப் பெரும்பாலோர் வைதிக எதிர்ப்பை வரவேற்பதற்கான மனப் பண்பை இயற்கையிலேயே பெற்றிருந்தனர்.

சூழ்நிலை துணைபுரிந்தது!

ஆம்; இந்து சமயக்கோட்டத்திற்கு உட்பட்டு, அந்தக் கோட்டத்தையே ஊடுருவி இருந்த சாதி வேறுபாடுகள், அந்த வேறுபாடுகளிடையே வளர்ந்த விரோத உணர்ச்சிகள், புறச் சமயங்களின் படையெடுப்புக் காரணமாகப் பெரும்பாலும் வலுவிழந்து விட்டன. இந்தப் பக்குவமான சூழ்நிலை—பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், இராமகிருஷ்ணர் சங்கம் ஆகிய அமைப்புகள் தோன்றத் துணைபுரிந்ததோடு, அவை வெற்றிப்பாதையில் முன்னேறவும் வாய்ப்பளித்தது.

தமிழகத்தின் மாறுபட்ட நிலை

தமிழகத்தின் நிலை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. இங்குச் சமுதாயம் முழுவதன் மீதும் ஆதிக்கம் பெற்றிருந்த வைதிக அந்தணர்கள் வடக்கில் வாழ்ந்த வைதிக அந்தணர்களின் மனமாறுதலைப் பிரதிபலிக்கவில்லை. இங்கு க்ஷத்திரியத் தன்மைக்கு எட்டாத் தொலைவிலிருந்தது பிராம்மணீயம்! மொகலாயராலும் ஆங்கிலேயராலும் அழிக்கப்பட்ட தமிழக க்ஷத்திரியத் தன்மைக்குத் தான் பொறுப்பேற்க அது தவறி விட்டது. மற்றவர்களைத் தன்னிடமிருந்து ஒதுக்கியதோடு, அவர்களுக்கும் தனக்கும் நடுவே மிகப் பெரிய இடைவெளியை ஏற்படுத்தி, அதனைக் காத்துவருவதிலும் கவனம்

Koviloor Digital Library

செலுத்தியது. முன் எப்போதோ தோன்றி, வளர்ந்து, வலுப் பெற்றிருந்த சாதி ஏற்றத் தாழ்வுகளைக் கண்காணித்துக் காத்து வருவதையும் தனது கடமையாகக் கொண்டிருந்தது.

அந்நாளில், தமிழ்ச் சமூகத்தின் அஸ்திவாரத்தை அசைக்கு மளவுக்குப் புறத்தாக்குதல் எதுவும் தமிழகத்தின்மீது ஏற்பட வில்லை. வடக்கே தோன்றி வெற்றிமுகத்தோடு தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்த இஸ்லாமிய மன்னர்களின் படையெடுப் பும் அதற்குப் போட்டியாகத் தோன்றிய கிறித்தவ வணிகர் களின் படையெடுப்பினுல், மேலும் முன்னேற முடியாமல் ஸ்தம் பித்து விட்டது.

வைதிக எதேச்சாதிகாரம்

கிழக்கிந்தியக் கம்பெனியின் துணைகொண்டு தெற்கில் நுழைந்த கிறித்துவ ஆதிக்கமும் உள்நாட்டு வைதிகத்துக்குப் பயங்கரமானதொரு அறைகூவலாக இருக்கவில்லை. ஆகவே, 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்ற ஆன்றோர் மொழிப் படி, பிறிதொரு சாதியிலிருந்து ஆசாரிய புருஷர் தோன்றுவதை வரவேற்கவும் மனமின்றி, தம்மிலிருந்து சீர்திருத்தக் குறிக் கோளுடைய ஆசாரிய புருஷரைத் தோற்றுவிக்கவும் திற னின்றி, தம் போக்கிலேயே எதேச்சாதிகாரம் செலுத்தி வந்தன இந்து—சைவ வைதிகங்கள்.

அணையா விளக்கு !

ஆம், இராமலிங்கர்: இராம்மோகனர்—தயானந்தர்—இராம கிருஷ்ணர் போன்று, சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்திய 'வைதிக மாளிகை'யில் பிறக்காமல், சமூகத்திலே தனிச் செல் வாக்கு எதுவும் இல்லாமல் பின் தங்கிக் கிடந்த கருணிகர் குலத் திலே தோன்றினுர். அதனுல், சீர்திருத்தப் புரட்சியை அவர் தோற்றுவித்திருந்தும், எதையும் சாதித்த சரித்திரம் அவரு டைய வரலாற்றுடன் பிணைந்திருக்கவில்லை. ஆயினும், அவர் துவக்கிவைத்த அருட்சோதிச் சுடர் முற்றிலும் அணைந்துவிட வில்லை. அது, அணையா விளக்கு! தூண்டுவாரின்றி ஒளி மங்கிக் கிடக்கின்றது. தூண்டுவார் தோன்றினுல், அருட் சோதி ஒளியிலே அகில உலகமும் காட்சியளிக்கும்.

தீண்டாமை !

இராம்மோகனர்—தயானந்தர்--இராமகிருஷ்ணர் ஆகியோர் சமயத் துறையில் தலைமை பெற்றிருந்த மேல் வருணத்தில்

Koyiloor Digital Library

பிறந்தவர்களாதலால், அந்த வருணத்தை ஊடுருவி வளர்வதற்கான வாய்ப்புப் பெற்றனர். வள்ளலார் தமது பிறப்புக் காரணமாக அத்தகைய உரிமையோ, வாய்ப்போ இல்லாதவரானார். அதனால், வைதிகர்களின் இதயக் கோயிலைத் திறப்பதற்கு மட்டுமல்லாமல், அதனைத் தீண்டுவதற்கும் அவரால் இயலவில்லை. அன்றிருந்த இந்தத் 'தீண்டாமை' இன்றளவும் நீடிக்கிறது.

இன உணர்வற்ற சூழ்நிலை

இராம்மோகனரோ, இராமகிருஷ்ணரோ மொழிவழி இன வேற்றுமைகளைக் கடந்த ஞானியராயினும், அவர்களுடைய வெற்றிகரமான முன்னேற்றத்திற்கு வங்காளியருடைய இனவுணர்ச்சியும் பெரிதும் பயன்பட்டிருக்கிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

தமிழர், இனவுணர்ச்சியற்ற 'பரந்த' நோக்குடையவராதலால், இராமலிங்கர் பிறந்த தமிழகத்தில்—தமிழரால், அவருடைய புரட்சிகரமான சீர்திருத்தக்கொள்கைக் கிணங்க அவர் போற்றப்படவில்லை. சுருங்கச்சொன்னால், இராம்மோகனர்—தயானந்தர்—இராமகிருஷ்ணர் ஆகிய மூவருக்கும் அவர்கள் விரும்பாத நிலையிலும் சுயசாதி—சுய இனச் சக்திகள் கை கொடுத்தன. இராமலிங்கருக்கோ, சுய சாதி, சக்தியற்றது; சுய இனமோ, உணர்ச்சியற்றது.

இதனை நினைவில் கொண்டு வள்ளலாரின் வரலாற்றைப் படித்து, அவரது தொண்டினை மதிப்பிட வேண்டும்.

இதுவரை இராமலிங்கர் தோன்றிய காலத்தின் சூழ்நிலையை ஆராய்ந்தறிந்தோம். இனி, இராமலிங்க வள்ளலாரை அணுகுவோம்.

Koviloor Digital Library

இளமைப் பருவம்

இராமலிங்கர், நம் எல்லோரையும்போலத் தாயின் வயிற்றில் கருவாகி, பின் உருவாகி, கலி 4925 சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21-ஆம் நாள் (5-10-1823) ஞாயிற்றுக் கிழமையன்று இம்மண்ணுலகில் தோன்றினர். அந்த நன்னாள், சமரச சுத்த சனமார்க்க இயக்கம் தோன்றிய புனித நாளாகும். அருட்சோதி பிறந்த புண்ணியத் திருநாளாகும். அந்த அருட்சோதியைத் தாங்கிய மணிவயிற்றைப் படைத்த பெருமாட்டியின் பெயர் **சின்னம்மாள்** என்பதாகும். "இவன் தந்தை என்னோற்றான் கொல்" என்று பாரெங்கும் தன்னைப் புகழும்படியான பெருமையைத் தேடித்தர விருக்கும் பிள்ளையைப் பெற்ற தந்தையாரின் பெயர் **இராமையா பிள்ளை** என்பதாகும். ஞானசபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளையான இராமலிங்கம் பிள்ளை பிறந்த பதி தில்லையம்பதிக்கு வடமேற்கிலுள்ள **மருவூர்ப் பதியாகும்.**

கடைக்குட்டி !

சின்னம்மாள், இராமைய பிள்ளைக்கு ஆறும் தாரம்! ஆம்; ஐந்து மனைவியரை ஒருவர்பின் ஒருவராக மணந்து மணந்து, அவர்கள் அடுத்தடுத்து மண்ணில் மறைந்த பின்னர், ஆறும் தாரமாகச் சின்னம்மாளை மணந்தார் இராமைய பிள்ளை. சின்னம்மாள், **சபாபதி - பரசுராமன் - சுந்தரம்மாள் - உண்ணுமுலை** என நான்கு சேய்களை ஈன்றெடுத்த பின்னர், ஐந்தாம் சேயாக **இராமலிங்கரை** ஈன்றார். இறைவன், "நீ எனது குலத்து முதன் மகனே" என்று தம்மைப்பற்றிக் கூறியதாகப் பாடவிருக்கின்ற பெருமான், தம் குடும்பத்தில் கடைசி மகனாகப் பிறந்தார்.

வருணனை !

இராமலிங்கர் பிறந்த நேரத்தில் 'நிகழ்ந்த' அதிசயங்கள் சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள திருவருட்பாப் பெருநூலுள்—இராமலிங்கரின் சரித்திரச் சுருக்கத்துள்—கீழ்வருமாறு வருணிக்கப்படுகின்றன:

> "அப்பொழுது உலகமெங்கும் என்றுமில்லாத ஓர் **பிரகாசம்** உண்டாயது; தேவர்கள் பூமாரி பொழிந்தனர்; அன்பர்கள் அனைவரும் ஆனந்தமடைந்தனர்; இத்தினம் சுபதினம் எனக்களித்தனர்; **ஓர் பெரியார்** அவதரித்தாரென ஆசி கூறினர்."

Koviloor Digital Library

வருணனை பௌராணிக வழிப்பட்ட கற்பனையாயினும், அருட்சோதி வள்ளலாரின் தோற்றத்தால் அத்தகைய அற்புதங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்று நினைத்திருக்கின்றது எழுதியவரின் உள்ளம். அவரது கற்பனை வள்ளலாரின் வரலாற்றை மறைக்கும் திரையாகிவிட வில்லை. பிற்காலத்தவரான பேராசிரியர்—மகாவித்வான்—புலவர் ஏறு அ. வரதநஞ்சைய பிள்ளை யென்பார், பிள்ளைப் பெருமானின் அவதாரத்தைப் பின்வருமாறு பாடுகின்றார்:

''வடபால் இராம கிருட்டினப்பேர்
வயங்கும் தவமெய்ஞ் ஞானியுடன்
அடிசேர் விவேகா நந்தரெனும்
அம்மா தவரும் அவ்வாறே
படிமேல் புகழ்சேர் தமிழ்நாடு
படைத்த பெரும்புண் ணியத்தாலே
வடலூர் இராம லிங்கரெனும்
வள்ளற் பெருமான் அவதரித்தார்''

இராமகிருஷ்ணரும் அவருடைய பிரதம சீடரான சுவாமி விவேகானந்தரும் மனித குலம் முழுவதுமே போற்றத்தக்க மகா ஞானியராவர். ஆயினும், அவ்விருவரினும் தீவிர சமய-சமுதாய சீர்திருத்தப் புரட்சியாளராகக் காட்சியளிக்கின்றார் இராமலிங்கர்.

சன்மார்க்கத் தூதர்

இராமலிங்கரின் வாழ்க்கை முடிவிலே அவர் ஒரு தெய்வத் தூதர் என அகிலம் அறிந்தது. இராமலிங்கரின் அவதாரச் சிறப்புப்பற்றி அவரே பாடிய பாடல் வருமாறு:

அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத்து அடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே.

Koviloor Digital Library

இந்தப் பாடல் இராமலிங்கர் தற்பெருமையாகப் பாடிய தன்று; "என்செய லாவது யாதொன்று மில்லை", என அடக்கம் காட்டி, "எல்லாம் அவன் செயலே," என்பதனை அறிவிக்கும் வாய்மை யுரையாகும். மணிவாசகப் பெருமானும், "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி," எனவும்.

'நானார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னையாரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்?'

எனவும் பாடியதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். முகம் மது நபி பெருமானை, தம்மை 'ஆண்டவன் தூதர்' என்றே கூறிக் கொண்டார். காந்தியடிகளும் கடவுளால் அனுப்பப் பட்ட தொண்டராகவே தம்மைக் கருதினார். இந்த உண்மை யையே இராமலிங்கரும் வலியுறுத்துகின்றார்.

சாதகம் 'பேசுகிறது!'

தெய்வத் தூதராம் இராமலிங்கரின் எதிர்காலத்தை அறிய விரும்பினர், பெற்றோர். ஆம்; பிள்ளைப் பெருமானார் பிறந்த நேரத்தை யொட்டி அவருக்குச் சாதகம் கணித்தனர். "கண் மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக," என்று பாடிய சீர்திருத் தப் புரட்சியாளருக்குச் சாதகம் பார்த்துச் சாதகங்கள் கூறினார் சாத்திரியார் ஒருவர். அது வருமாறு:

"இந்த சாதகமுடையோன் சிரஞ்சீவி; இவன் உயிர் போவதில்லை; உலகனைத்தும் வள்ளலாய் வாழ்வான்; தைரியவான்; கனதனம் கருதான்; சுழுத்தி நாட்டமுடை யான்; உலகுயிர்பால் பேரிரக்கம் கொண்டவன்; பத்தாவது ஆண்டில் ஒன்றில் காதலனுவான்; கற்பமும், உலகத்தைத் திருத்தும் குணமும் சக்தியால் உணர்வான். முப்பதாம் ஆண்டில் பிறப்பற்ற நிலையடைவான். நாற்பதாம் ஆண் டில் கைவல்ய ஞானம் பெறுவான்; ஞான சித்தியால் ஐம் பதில் பொன்னுடலாகிப் பொலிவான்; இவன் ஞான உட லெடுத்த பெரியோன்; மந்திரம், யோகம், வைத்தியம், வாதம், நூல் நுணுக்கம்—சிந்தையில் எண்ணியவுடனே எய்துவான்."

-திருவருட்பாப் பெருநூல்.

சாத்திரம் கூறுவது !

இந்தச் சோதிடம் இராமலிங்கர் பிறந்த காலத்திலேயே கணிக்கப்பட்ட தாகையால், சோதிடக் கலையைப் பெருமை

யுடையதாகவே கொள்ளவேண்டும். இதில்கூட அவருடைய வருங்காலம் சரியாய்க் கணிக்கப் பட்டதாகக் கொள்வதற் கில்லை.

> "சாதகன், சாதி - சமயங்களின் எதிரியாவான்; பொய்—புரட்டுக்களை எதிர்த்துப் போராடுவான்; நால் வருணப் பாகுபாட்டை நாசமுறச் செய்வான்; தெய்வம் பலபல பேசி, பகைத் தீயை வளர்க்கும் தீயரை வெறுப்பான்; சாதிக் கொரு நீதி கூறும் சாத்திரச் சழக்குகளைச் சாடுவான்,"

என்றெல்லாம் கூறத் தவறிவிட்டார் சோதிடர். ஒருகால், அதனைக் கூறும் திறன் சோதிடத்திற்கே இல்லை போலும். இதனை அறிந்தே,

> **"சாத்திரங் கள்பல தேடினேன்—அங்குச்**
> **சங்கையில் லாதன சங்கையாம்—பழங்**
> **கோத்திரங் கள்சொல்லு மூடர்தம்—பொய்ம்மைக்**
> **கூடையில் உண்மை கிடைக்குமோ ?"**

என்று பாடினார் பாரதியார்.

அம்பலக் காட்சி!

பிள்ளைப் பருவத்திலேயே தம் உள்ளொளியை வெளிப் படுத்திக் காட்டினார் இராமலிங்கர். இதுபற்றித் 'திருவருட்பாப் பெருநூலி'லுள்ள செய்தி வருமாறு:

> "இராமைய பிள்ளையானவர் ஒருநாள் தமதருமை மிக்க மனைவியாரோடும், மக்களோடும் எல்லாம் வல்ல இறைவராகிய திருச்சிற்றம்பலக் கடவுள் ஆனந்தத் தாண்டவம் பயிலும் அம்பலம் காணச் சிதம்பரம் சென்றார். தமதருமை இளங்குமரர் இராமலிங்கரைக் கரத்திலேந்திக் கொண்டே அம்பலத்தரசை வணங்கினார். அவ்வேளை அப்பைய தீக்ஷிதர் எனும் வேதியர் நடராசப் பெருமானுக் குக் கற்பூர ஆராதனை செய்தார். இராமைய பிள்ளையின் கரத்திலிருந்த இராமலிங்கராகிய குழந்தையோ, சிவகாம வல்லி மகிழ்ந்து ஒருகால் விளங்கக் கனக சபையின் கண்ணே ஆனந்த நடம் பயிலும் நடராசப் பெருமானுடைய அருளமுதம் ஒழுகும் திருமுகத்தையும் கற்பூர ஜோதியை யும் காந்த விழியால் கண்ணிமை கொட்டாது பார்த்துக் கொண்டே இருந்து, காண்போர் அதிசயிக்கக் கலகல வென்று நகை செய்தது. அதனைக் கண்ட அப்பைய தீக்ஷிதர் 'இக்குழந்தை அம்பலவாணரின் அருட்

Kovilpor Digital Library

குழந்தையே!' என்று வாழ்த்தி—இராமைய பிள்ளையையும் அவர் மனைவி மக்களையும் தம் இல்லத்தில் இருத்தி உபசரித்தனுப்பினர்.''

தாம் பெற்ற மைந்தன் அம்பலத்தரசைத் தன் தந்தையாகக் கொண்டு விட்டான் என்பதனை அறிந்தவர் போல, இராமலிங்கரின் பிள்ளைப் பருவத்திலேயே அவருடைய தந்தையார் மரணமெய்தினர்.

தலைவனை இழந்த குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு முழுவதும் மூத்தமகன் சபாபதியின்மீது சுமந்தது. வறுமை மிக்க குடும்பம். இராமைய பிள்ளை, ஊரிலுள்ள பிள்ளைகட்குக் கல்வி கற்பித்தும், வணிகர்களுக்குக் கணக்கெழுதிக் கொடுத்தும், அந்த வகையில் கிடைத்த வருவாயைக் கொண்டு மனைவி மக்களைக் காப்பாற்றி வந்தார். அவரது மறைவோடு அந்த அற்ப வருவாயும் தொலைந்தது. அண்ணன் சபாபதி, தம் தம்பி இராமலிங்கரையும், மற்றுள்ள தாய், தம்பி, தங்கையரையும் பொன்னேரியிலிருந்த பாட்டியார் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அன்னைக்கும் அன்னையாக வாய்த்த மூதாட்டியார், இராமலிங்கரின் முக விலாசத்திலே மயங்கி அவரைப் பேரன்புடன் வளர்த்தார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு, அண்ணன் சபாபதியார், தம்பியர்—தங்கையரோடு சென்னையில் குடியேறினர். அவர், மகாவித்துவான் காஞ்சிபுரம் சபாபதி முதலியாரிடம் அமிழ்தினுமினிய தமிழ் மொழியைப் பயின்று புலமை பெற்றிருந்தார். தந்தையாரைப் போலவே, தாம் வசித்த பகுதியில் வாழ்ந்த பிள்ளைகளுக்குக் கல்வி கற்பித்தும், ஓய்ந்த சமயங்களில் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தியும் பொருளீட்டிக் குடும்பத்தைக் காத்தார்.

'படியாத'வர்!

தம் அருமைத் தம்பிக்குக் கல்வியளிக்க எண்ணி, இராமலிங்கரின் ஐந்தாவது வயதிலே அவரைப் பள்ளிக்கு அனுப்பினர் சபாபதி. பிள்ளைப் பெருமான் பள்ளிக் கல்வியில் நாட்டங் கொள்ளவில்லை. அதனை உணர்ந்த அண்ணனர், தம்பிக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பை தாமே மேற்கொண்டார். ஓதாதுணரும் பேறுபெற்ற இராமலிங்கர், தமையனரிடமும் முறையாகக் கல்வி பயிலவில்லை. அது கண்டு வருந்திய சபாபதிப் பிள்ளை தம் ஆசிரியரான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி

முதலியாரிடமே தம்பியை அனுப்பி அங்குக் கல்வி பயிலத் தூண்டினர். அந்த முயற்சியும பயன் தரவில்லை.

அந்நாளில், ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் பள்ளிகள் சென்னை நகரில் இருந்தன. ஆயினும், பள்ளிப் படிப்புக்கே புள்ளிவைத்து விட்டாராதலால், ஆங்கிலம் பயில அவருக்கு வாய்ப்பேது? "கல்வியென்னும் பல்கடல்பிழைத்தும்" என்கிருர் மாணிக்கவாசகர். அவரும் கல்வியென்னும் பல்கடல் விழுந்து, பின் பிழைத்தார். இராமலிங்கர், விழாமலே இறைவனுல் தடுத்தாட்கொள்ளப்பட்டார்.

ஓதாதுணர்ந்தவர் !

இராமலிங்கர், எல்லோரையும் போல முறையாகக் கல்வி பயில்வதில்—குறிப்பாக, இலக்கண, இலக்கியம் பயில்வதில் கவனம் செலுத்தவில்லை யென்றுலும், தம் தாய்மொழியான தமிழில் எழுதவும் படிக்கவுமேனும் பயின்றிருக்க வேண்டும். அதற்குமேல் அக் காலத்தில் அறிவுக் கலைகளெனத் திகழ்ந்த வேத, ஆகமக் கலைகளை ஓதாமலே உணரும் ஞானம் பெற்றிருந்தார். தெய்வத் திருவருள் அந்தத் திறமையை அவருக்கு அளித்திருந்தது. சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர், ஆரம்பப் பள்ளியில் 2-ஆவது வகுப்பு வரைதான் படித்திருந்தார். அதற்கு மேல் அப் பள்ளியில் பயிலவில்லை. ஆயினும் ஆன்ம ஞானத்தில் அவர் மிகச் சிறந்து விளங்கினர். நம் இராமலிங்கப் பெருமானும் பிற்காலத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைத் தாமே ஓதவும், பிறருக்கு ஓதுவிக்கவும் ஞானம் பெற்றிருந்தார். வடமொழியிலும் நல்ல புலமை பெற்றிருந்தார். இவர், எங்கு—யாரிடம் தென்மொழியிலும் வடமொழியிலும் புலமை பெற்ருரென்பது தெரியவில்லை. "ஓதாதுணர்ந்தார்" என்றுமட்டுமே கூறப்படுகின்றது. "ஓதாதுணர்ந்தார்" என்பதற்கு, பிறர் தமக்கு ஓதுவிக்காமல், இறையருளால் தாமே ஓதியுணர்ந்தார் என்றே பொருள் கொள்ளவேண்டும்.

"இளமைப் பருவத்(து) ஓதாதே
எல்லாம் முன்பே கற்றதுபோல்
அளவற் றுயர்வே தாகமநூல்
ஆதிக் கலைநுண் பொருள் தெளிந்தே

Koviloor Digital Library

உளமுற் றினிய அமுதப்பேர்
ஊற்ருய்ப் பெருகிப் பொங்கிடல்போல்
எளிதே அரிய நுண்பொருள்கள்
இசைக்கும் தமிழ்ப்பா வகையினம்மா !"

எனப் புலவர் ஏறு அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், இராம லிங்கர் ஓதாதுணர்ந்த பெருமையை, பாவியற்றவும் திறமை பெற்றிருந்த அருமையைப் புகழ்ந்து பாடுகின்ருர்.

"ஓதா துணர்ந்திட ஒளியளித் தெனக்கே
ஆதார மாகிய அருட்பெருஞ் சோதி"

"ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வாம் உருவுறச்செய் உறவே"

என்ற வரிகளிலே, இறைவன் திருவருளால் பிறர் ஓதுவிக்காது, தாமே ஓதி உணர்ந்த திறத்தை வள்ளற் பெருமான் அடக்கத் தோடு அறிவிக்கின்ருர். பிறர் ஓதுவிக்காதுணரும் திறன் எல்லோருக்கும் வாய்ப்பதன்று. அதுபோலவே, அதனை நம்புவதும் எல்லோராலும் முடிவதன்று. ஆயினும், இராம கிருஷ்ணர்—இராமலிங்கர் போன்ற சான்ருேர்கள், ஓதுவிக்கா துணரும் திறமும் இருப்பதை நம்பாதவர்களும் நம்பும்படியாக நடைமுறையில் காட்டியுள்ளனர்.

லார்டு மெக்காலே பாதையில் சென்று, பாரதத்தின் பண் பாட்டுக்கு மாறுபட்ட ஆங்கிலமொழியில் கல்வி பயின்றவர்கள், பிறர் ஓதுவிக்காதுணரும் திறமொன்றிருப்பதை நம்பமாட்டார் கள். ஓதுவித்தும் உணராதவர்கள், உணர்ந்ததையும் உள் ளத்தில் வைக்க இயலாதவர்கள், உள்ளத்தில் வைத்ததையும் வாழ்க்கையில் கடைப்பிடிக்க முடியாதவர்கள், பிறர் ஓதுவிக் காது உணரும் திறமொன்றிருப்பதை நம்ப மறுப்பது இயற்கை. 'அறிவு' என்பது, ஏட்டில் பிறந்து, பின் மனிதர் மதியில் புகுவதன்று. மாருக, மனிதர் மதியில் பிறந்து, பின் ஏட்டில் ஏறுவதாகும். ஓதுவித்து உணர்ந்தவர்களைவிட, ஓது விக்கா துணர்ந்தவர்களே மெய்ப்பொருளை அணுகும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர். ஓதாது உணர்ந்த ஞானியர் திறம்பற்றி நக்கீரர் பெருமான் 'திருமுருகாற்றுப் படை'யில்,

—யாவதும்
கற்ருேர் அறியா அறிவினர்; கற்ருேர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்;

Koviloor Digital Library

என வருணிக்கின்றார். ஓதாதுணர்ந்த ஞானியர், "எல்லாம் கற்றுவிட்டோம்" என்று இறுமாந்திருக்கின்றார்களே, அந்த அறிஞர்களிலும் சிறந்த அறிஞர்களாம்! எல்லாம் கற்றவர் களும் தம்மை வரம்பாகக்கொண்டு பேசும் தலைமை பெற்றவர் களாம்! இந்த உண்மையைத்தான் "ஓதி உணர்ந்தவர் எல்லாம் எனைக் கேட்க, எனைத்தான் ஓதாமல் உணர்ந் துணர்வாம் உரு வுறச்செய் உறவே" என்று பாடினார் இராமலிங்கர்.

இராமலிங்கரின் உள்ளொளியை, அண்ணன் சபாபதியார் அறிந்துகொள்ளவில்லை. அவர், கல்வியில் நாட்டமில்லாத மூடப்பிள்ளை—முரட்டுப்பிள்ளை என்று கருதிவிட்டார். அதனால், அடக்கொணாச் சினங் கொண்டவராய், உணவும் உடையும் அளிக்க மறுத்து, தம் அருமைத் தம்பியை வீட்டைவிட்டே துரத்திவிட்டார். ஈன்ற தாயினும் தயையுடைய அண்ணி யார் பாப்பாத்தி அம்மாள், தம் கணவருக்குத் தெரியாமல் அன்பு காரணமாக மைத்துனன் இராமலிங்கனுக்கு வேளா வேளைக்கு மறைவிலே உணவு அளித்து வந்தார்.

ஒரு நாள் தந்தையாரின் திதி வந்தது. நண்பர், உறவினர் அனைவரும் இல்லம் நிறையக் குழுமி இருந்தனர். அந்த நல்ல நேரத்தில், அருமைத் தம்பியாரின் நினைவு வந்து சபாபதிப் பிள்ளை நெஞ்சம் வருந்தினார். வழக்கம்போல மறைவிலே இருந்து, உணவருந்த வந்த இராமலிங்கரைக் கண்டு, "இந்த நல்ல நாளிலும் உன் கதி இப்படி ஆகவேண்டுமா?" என்று எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறினார் அண்ணியார். அண்ணி யாரின் அன்பு வெள்ளம் கண்ணீராக வெளிப்பட்டது கண்ட இராமலிங்கர், மனம் திருந்தி, அண்ணன் சொற்படி கல்வி கற்பதாக உறுதி கூறினார். "பிள்ளைக்குப் புத்தி வந்தது" என்று நம்பி, தாம் வாழ்ந்த வீட்டின் மேல்மாடியில் ஒரு அறை யைக் காலி செய்து கொடுத்து, அதிலே தங்கிக் கல்வி பயிலு மாறு அண்ணனும் அண்ணியாரும் அறிவுரை கூறினர்.

இராமலிங்கர், தம் அண்ணன் சபாபதி கொடுத்த தனி அறையில் தங்கி, அண்ணியாரின் அறிவுரைப்படி 'கல்வி' கற்கத் தொடங்கினார். அந்த வீடு, சென்னை ஏழுகிணறு வட்டத்தில், வீராசாமிப் பிள்ளைத் தெருவில் 39-வது எண் கொண்டதாகும்.

Koviloor Digital Library

கண்ணுடியில் கந்தப் பெருமான்!

இராமலிங்கர் பயிலத்தொடங்கியது, சாகாக் கல்வி. அதனை அவருக்குப் பயிற்றுவித்த பேராசிரியர், தந்தைக்கு உபதேசித்த தணிகைப் பெருமான் ஆவார். இதைப் பற்றித் திருவருட்பாப் பெருநூலில் தரப்பட்டுள்ள குறிப்பு வருமாறு :

"அறையினை அடைந்த நம் பிள்ளைப் பெருமானுர் தெய்வ ஆராதனைக்கு வேண்டிய திருவிளக்கு, பழம், திரு மலர், சாம்பிராணி வத்தி, கற்பூரம், கற்கண்டு முதலிய வற்றைச் சேகரித்துக்கொண்டு அவ்வறையிலேயே திரு விளக்கை ஏற்றி, ஒரு கண்ணுடியைச் சுவரில் மாட்டி, அக் கண்ணுடிக்கு மாலை சூட்டி, பழம் படைத்து, கற்பூரம் காட்டி, கண் இமை கொட்டாது அதனையே உற்று நோக் கினுர். அக்கண்ணுடியில் சிறிது நேரத்திற்கெல்லாம் திருத் தணிகைக் கந்தப் பெருமானுர் திருவுருவம் தெரியலா யிற்று"

அகத்திலிருந்தது புறத்தில் !

ஆம்; எல்லோரையும்போலக் கந்தப் பெருமானின் உருவத் தைச் சிலையாகவோ, சித்திரமாகவோ கண்ணெதிரே வைத்து, அதனை நெஞ்சிலேயும் நினைத்து வழிபட்டா ரல்லர் இராம லிங்கர். கண்ணெதிரே வெறுங் கண்ணுடியை நிறுத்தி, தம் கருத்திலே கந்தப்பெருமானை உருவகப்படுத்தி, அவரது திருக்கோலத்தைக் கண்ணுடியிலே காண முயன்ருர்.

இது ஒரு புதுமுறை வழிபாடு. புறத்தே கந்தப் பெருமா னின் உருவத்தை வைத்து, அதையே அகத்திலேயும் நிறுத்த முயல்வர் பக்தர். இராமலிங்கரோ, முதலில் அகத்தே கந்தப் பெருமானை உருவகப்படுத்தி, அந்த வடிவத்தையே புறத்திலே யும் காணமுயன்ருர், அதில் வெற்றியும் பெற்ருர் என்கின்றது வரலாறு. கண்ணுடியை எதிரில் நிறுத்திப் பார்த்தால், பார்ப்ப வரின் வடிவமே அதில் தெரியும். இராமலிங்கர் தம்மை மறந்து பார்த்தாராதலால், அவர் அகத்தே உருவகப்படுத்தப்பட்ட கந்தப் பெருமான் புறத்தே கண்ணுடியில் காட்சியளித்தார்.

கண்ணுடியில் முருகப்பெருமான் காட்சியளித்தபோது பிள் ளைப் பெருமானின் உள்ளம் உருகியது; உணர்ச்சி பொங்கியது.

Koviloor Digital Library

அந்த நிலையில் தணிகைப் பெருமான் மீது வெள்ளமெனக் கவிதை மழை பொழிந்தார். ஒரு கவிதை வருமாறு:

சீர்கொண்ட தெய்வ வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத் தாள்களும்ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியும்அருள்
கார்கொண்ட வண்மைத் தணிகா சலமுமென் கண்ணுற்றதே

KOVILOOR MADALAYAM (NEAR) KARAIKUDI - 630 307 (PHONE

தணிகையின்பால் பக்தி!

அண்மையில் தமிழகத்தோடு இணைக்கப்பட்ட தணிகைப் பதியைப் புண்ணியப் பதியாகக் கருதினர் புனிதர் இராமலிங்கர். கண்ணுடியில் கந்தப்பெருமானேடு தணிகை மலையையும் கண்ணுரக் கண்டாராதலால், 'அருட் கார்கொண்ட வண்மைத் தணிகாசலமும் என் கண்ணுற்றதே' என்று பாடினர். இராமலிங்கரின் வாழ்நாளிலேயே, அவர் எழுதிக் குவித்த கவிதைகளையெலாம் தொகுத்து, நான்கு திருமுறைகளாகப் பகுத்து வெளியிட்டனர், பக்தர்கள். அதில், சில பாடல்கள் நீங்கலாக ஐந்தாந் திருமுறை முழுவதும் தணிகை மலைவாழ் கந்தப் பெருமானைப் பற்றியதாகும்.

நொந்த மனம்...

கல்வியில் நாட்டம் செலுத்தாத காரணத்தால், இராமலிங்கரை வெறுத்தொதுக்கினர், தந்தைக்குப் பிறகு காக்கக் கடமைப்பட்ட தமையனரான சபாபதிப் பிள்ளை. அதனுல் வள்ளலார் நெஞ்சு நொந்தன ராதலால், இறைவனையே தந்தையாகவும் தாயாகவும் கருதிப் பாடுகின்ருர்:

"கல்லா நாயேன் எனினுமெனைக் காக்கும் தாய நீ"

"என்னருமை அப்பா, என்ஐயா, என்றன்
இன்னுயிர்க்குத் தலைவா, இங்கு எவர்க்கும் தேவா"

"பாரும் விசும்பும் அறியவெனைப்
பயந்த தாயும் தந்தையும் நீ !"

"பாவியேன் படுந்துயருக்கு இரங்கிஅருள்
'தணிகையில் என்பால்வா' என்று
கூவிநீ ஆட்கொளவோர் கனவேனும் காணேனே"

என்றெல்லாம் புனைந்து புனைந்து பாடி,வனைந்து வனைந்து ஏத்தி, ஊற்றெழும் கண்ணீரதனுல் உடம்பெலாம் நனைந்து நனைந்து

Koviloor Digital Library

வாடி கண்ணுடியில் தோன்றிய கந்தப் பெருமானை வழிபட்டார் இராமலிங்கர். தணிகைப் பதியிடத்துத் தணியாத ஆர்வம் கொண்டிருந்தார் தமிழினத்தில் தோன்றிய தவ ஞானியாகிய இராமலிங்கர். அதனுல்,

"நண்ணேனே மகிழ்விஞெடும் திருத்தணிகை
மலையதனை நண்ணிஎன்றன்
கண்ணேறு அமர்ந்தஎழில் கண்குளிரக்
காணேனே !..."

"வாரேனே திருத்தணிகை வழிநோக்கி
வந்தென்கண் மணியே நின்று
பாரேனே நின்னழகை...!"

என்றெல்லாம், பிற்காலத்தில் மீட்கப்பட்ட தணிகைப் பதியைக் காண வேட்கைகொண்டு பாடினுர் இராமலிங்கர்.

வள்ளலார் வாக்கு

கண்ணுடியில் கந்தப் பெருமானைக் கண்டகாலை இராம லிங்கருக்கு வயது ஒன்பதுஎன்று கூறுகின்றது வரலாறு. ஆம்; சின்னஞ் சிறு வயதிலே, பள்ளியில் பயிலாத ஏழைப் பிள்ளை, கடவுளைக் கண்ணெதிரே காணும் பேறு பெற்றது. இது உண்மை என்பதை இராமலிங்கரின் வாக்கு அறிவிக்கும்.

"அறியாத பருவத்தே என்னைவலிந் தழைத்தே
ஆடல்செயும் திருவடிக்கே பாடல்செயப் பணித்தார்"

"வெம்மாலைச் சிறுவரொடும் விளையாடித் திரியும்
மிகச்சிறிய பருவத்தே வியந்துநினை நமது
பெம்மான்என் றடிகுறித்துப் பாடும்வகை புரிந்த
பெருமானே நான்செய்த பெருந்தவமெய்ப் பயனே"

"தெருவிடத்தே விளையாடித் திரிந்தஎனை வலிந்தே
சிவமாலை அணிந்தனை..."

"ஏதும்ஒன் றறியாப் பேதையாம் பருவத்து
என்னை ஆட் கொண்டெனை உவந்தே
ஓதும்இன் மொழியால் பாடவே பணித்த
ஒருவனே என்னுயிர்த் துணைவா"

என்றெல்லாம் பாடிப் பிள்ளைப் பருவத்திலேயே தம் உள்ளத்தில் கோயில் கொண்டு, வெள்ளமெனக் கவிதை மழை பொழிய

Koviloor Digital Library

வைத்த வள்ளி மணாளனின் அருளை வழிபடுகின்றார் இராம லிங்கர். தாம் எழுதிய சத்தியப் பெருவிண்ணப்பத்திலும்,

> "தனித் தலைமைக் கடவுளே! குமாரப் பருவத்தில் என்னைக் கல்வியிற் பயிற்றும் ஆசிரியரை இன்றியே என் தரத்தில் பயின்று அறிதற்கு அருமையாகிய கல்விப் பயிற்சியை எனது உள்ளகத்தே இருந்து பயிற்றுவித் தருளினீர்."

> "சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென்மொழிகளால் பல்வகைத் தோத்திரப் பாட்டுக்களைப் பாடுவித் தருளினீர்."

என்று கூறி, தம்முடைய ஒன்பதாம் வயதில் கந்தப்பெருமானின் அருளால் ஓதாதுணர்ந்த உண்மையை உலகறிய ஓதுகின்றார். எண்ணற்ற பாடல்களில், 'ஆடையிலே எனை மணந்த மணவாளா' என்ற வாசகத்தைச் சேர்த்து, பிள்ளைப் பருவத்திலேயே தாம் இறைவன் அருள் பெற்ற பெருமையை உணர்த்துகின்றார்.

தத்துவக் கடவுள்

இராமலிங்கர், தாம் கண்ணாடியில் கண்ட முருகப்பெருமானின் கோலத்தைப் பின்வருமாறு வருணிக்கின்றார்:

> "ஆறுமுகங்கள்; கடப்ப மாலை தாங்கிய பன்னிரு தோள்கள்; தாமரை மலர் போன்ற இரு தாள்கள்; கையில் கூர்கொண்ட ஓர் வேல்; தன்னைத் தாங்குகின்ற பெருமையைப் பெற்ற மயில்; கோழிக் கொடி."

இந்த அம்சங்களோடு கூடிய கந்தப் பெருமான் தணிகை மலை மீதமர்ந்து காட்சியளித்தார் எனக் கூறுகின்றார் இராமலிங்கர்.

இராமலிங்கர், சில தத்துவங்களையே சுப்பிரமணியக் கடவுளாக உருவகப்படுத்தி, அதனையே கண்ணாடியில் கண்டுகளித்திருக்கிறார், இதனை விளக்க, "கணபதி—சுப்பிரமணிய சுவாமிகள் தத்துவங்களைத் தவிர வேறல்ல" என்கிறார் இராமலிங்கர். அந்தத் தத்துவங்களைச் சுப்பிரமணியக் கடவுளாக உருவகப் படுத்தியும் காட்டுகின்றார்:

> "சுப்பிரமணியம் என்பது என்ன? நமது புருவ மத்தியில் ஆறு பட்டையாய் உருட்சியுள்ள ஒரு மணி பிரகாசம் பொருந்தியிருக்கின்றது. இந்த ஜோதி மணியை ஷண்

Koviloor Digital Library

முகம் என்று பெரியோர்கள் சொல்லுவார்கள். இதன்றி, நமது மூலாதாரத்திற்கு மேல், மூன்றிடந்தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடது புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடியிருக்கின்றது. இதைச் சுப்பிரமணியம் என்று சொல்லுவார்கள். இந்தத் தேகத்திலுள்ள ஆறறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் ஷண்முகம் என்பார்கள். ஆறு ஆதாரங்களில் உள்ள ஆறு பிரகாசத்தையும் ஷண்முகம் என்பார்கள். ஆயினும், சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உன்மனிக்கப்பால் சாந்த நிறைவாய் உள்ள ஆறுதலாகிய **சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்பிரமணியம்.**"

பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு—புத்தக எண் 4; பக்கம் 115.

உருவ வழிபாடு பற்றி....

பௌராணிகர்கள் ஒன்றுமறியாத பாமர மக்களுக்குக் காட்டும் 'சுப்பிரமணியரு'க்கும், தத்துவச் சித்தரான இராமலிங்க சுவாமிகள் கண்ட—நமக்கும் காட்டுகின்ற சுப்பிரமணியருக்கும் வேற்றுமை உண்டு. கல்லாலும் செம்பாலும் செய்யப்பட்ட உருவங்களை மக்கள் வழிபடுவதுபற்றி இராமலிங்கர் கருத்தென்ன ? இதோ, அவரே கூறுகின்றார் கேளுங்கள்:

"பிரம்மத்தை அறியத் தொடங்கினோர் அறிதல்வேண்டும்; விக்கிரக ஆராதனை செய்யத் தொடங்கினோர் செய்தல் வேண்டும்; இவ்விரு வகையும் அதற்குரிய பக்குவர்களுக்கு அடுத்த வகைகள் என்று அறிய வேண்டும். விக்கிரகம் என்பது விசேட இடமென்று பொருள்படும். ஆன்மா இருப்பதற்குக் கிரகம், மனிதர் முதலிய ஜீவதேகங்கள். பிரமப் பிரகாசம் இருந்து வெளிப்படுவதற்கு விக்கிரகம் தேவ தேகங்கள். அத்தேவ தேகங்களாகிய விக்கிரகங்களில் விதிப்படி பக்தியோடு உபாசிக்கில் பிரமப் பிரகாசம் எளிதில் வெளிப்பட்டு அனுக்கிரகிக்கும்."

"அநாதிதொட்டு இன்றுவரை சென்ற நாட்களிலுள்ள அருணகிரியார், குமரகுருபரர், நக்கீரர் போன்ற மகான்கள் தொண்டு செய்து உத்தம ஞானிகளாய், நித்திய முத்தர்களாய் விளங்குகிறார்கள். ஆதலால், நாம் யாவரும்

Koviloor Digital Library

அவ்வுண்மைக் கடவுளை வேதாகம விதிப்படி உண்மை யாய்ப் பக்திசெய்து, அவர் அருளைப் பெறவேண்டும்.''

-திருவருட்பாப் பெருநூல்.

இது, இராமலிங்கரின் வாக்கு. விக்கிரக வழிபாடு பற்றிய உண்மையைத் தெரிந்துகொண்டு உள்ளத் தூய்மையோடு வழிபடவேண்டுமென்பது இராமலிங்கர் கருத்து. எதனை எதற்காக வழிபடுகிறோம் என்பதில் தெளிவின்றியே பரம்பரை வழக்கம் என்பதற்காக விக்கிரகத்தை வழிபட்டால், அது கல் வழிபாடே யன்றி, கடவுள் வழிபாடன்று. இதனையே ''கண்மூடி வழக்கம்'' என்று கூறி, அது ''மண்மூடிப் போகவேண்டும்'' என்று பாடினுர் இராமலிங்கர். அவருடைய வாரிசாக வந்த பாரதியாரும்,

''கோவில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்கவேண்டுமானுல், ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றுமல் விஷயத்தைச் சொல்ல வேண்டும்.''

-பாரதி கட்டுரைகள்.

என்று கூறுகின்றுர்.

உள்ளமே கோயில்...

இராமலிங்கப் பெருமானுர், தமது உள்ளத்தையே கோயிலாக்கி, அதனுள்ளே சுப்பிரமணியக் கடவுள் எழுந்திருக்கும்படி செய்தார். உள்ளத்தின் உள்ளே யிருந்த அந்தப் பரம்பொருளின் வடிவத்தையே தம் தவ வலிமை காரணமாகக் கண்ணுடியில் காண முயன்று, வெற்றியும் கண்டு பேரானந்தம் அடைந்தார். 'சுத்த அறிவே தெய்வம்' என்கிறுர் இராமலிங்கர். தாயுமானவரும் 'சுத்த அறிவே சிவம்' என்று பாடினுர்.

''சுத்த அறிவே சிவமென்று கூறும்
சுருதிகள் கேளீரோ ?—பல
பித்த மதங்களி லேதடு மாறி
பெருமை யழிவீரோ ?
உள்ள தனைத்திலும் உள்ளொளி யாகி
ஒளிர்ந்திடும் ஆன்மாவே—இங்கு
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ ?''

என்று பாடுகிறுர் மகாகவி பாரதியார்.

Kavion Digital Library

"ஒவ்வொரு மனிதனுடைய அறிவிலும் பரமாத்மா மறைந்து நிற்கின்றது வெளி உலகத்தையும், உள்ளுலகத்தையும் வசப்படுத்தி உள்ளே மறைந்திருக்கும் தெய்வத்தை வெளிப்படுத்துவதே நாம் செய்ய வேண்டிய காரியம்."

என்கிறார், சுவாமி விவேகானந்தர். அதன்படி, தம் அறிவினில் மறைந்துகிடந்த பரமான்மாவையே கண்ணாடியில் கண்டார் பிள்ளைக்கவி இராமலிங்கம். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, இந்த உள்ளொளிபற்றிய உண்மையைப் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் பாடி வைத்திருக்கின்றார்.

"உள்ளத்தில் உள்ளானடி, அதுநீ
உணர வேண்டுமடி !
உள்ளத்தில் காண்பாயெனில்—கோயில்
உள்ளேயுங் காண்பாயடி !
கண்ணுக்கு இனிய கண்டு—மனத்தைக்
காட்டில் அலையவிட்டுப்
பண்ணிடும் பூசையாலே—தோழி
பயனென் றில்லையடி !

ஆந்திரதேசத்து மகா ஞானியான கவி வேமனர், "கல்லைக் குவித்துப் பெரிய கோவில்கள் ஏன் கட்டுகிறீர்கள்? தெய்வம் உள்ளுக்குள் இருப்பதை அறியாமல் வீணாக ஏன் தொல்லைப் படுகிறீர்கள்?" என்று அன்புள்ளத்தோடு அறிவுரை கூறுகின்றார்.

உள்ளத்தின் உள்ளே ஒளிந்திருக்கும் தெய்வத்தை பக்தியால் வெளிப்படுத்தும்போது பக்தர்கள் விரும்பும் வடிவத்திலே அந்தப் பரம்பொருள் காட்சியளிக்கின்றது சுப்பிரமணியம், தமிழ்த் தெய்வம்—தமிழர் தெய்வம். அதனால், தமிழரான இராமலிங்கர் தமிழ் இனத்தின் தெய்வத்தைக் கண்ணாடியில் காண விரும்பி, அப்படியே கண்டார்.

திரு. வி. க. திருவாக்கு

இராமலிங்கர் இயற்றியருளிய திருவருட்பா, ஆறு திருமுறைகளைக் கொண்டது. அதில் ஆறாந் திருமுறையிலுள்ள பாடல்களிலேயே அருளறிவுக் கோல்கொண்டு மூட நம்பிக்கைகளைச் சாடுகின்றார் இராமலிங்கர். அந்த ஆற்றலை அவருக்குத் தந்தது ஐந்தாந் திருமுறையிலுள்ள பாடல்களால் அவர் நிகழ்த்

Koviloor Digital Library

தும் தணிகைப் பெருமான் வழிபாடேயாகும். இதுபற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

"இராமலிங்க அடிகள் இளமையிலேயே முருகக் கடவுளை வழிபடலாயினர். முருகன் வழிபாட்டில் அடிகள் உறைத்து நின்றார். அவர் தணிகைமலை போந்து, ஆண்டவனை நோக்கிக் குறையிரந்து வேண்டி வேண்டி, அழுது அழுது உய்யுநெறி கண்டார். தணிகையை மனத்தில் நிறுத்தி அடிகள் அழுத அழுகை, அவரைத் தூய்மைப் படுத்தி, மேலாம் நிலையையும் வழங்கிற்று.

"இராமலிங்க சுவாமிகள் நெஞ்சைச் செம்மைப்படுத்தி நிலைபெறுத்தத் தணிகையமர் பெரு வாழ்வின் முன்னிலையில் தங் குறைபாடுகளை முறையிட்டு நெக்கு நெக்குருகிச் செய்த வேண்டுகோளை ஐந்தாந் திருமுறையில் காணலாம். அத்திருமுறையில் உயிர் பண்படும் முறைகள் சொல்லப் படுகின்றன. ஐந்தாந் திருமுறை மனிதரது குறைபாட்டை உணர்த்தி, அதை நீக்குதற்குரிய வழியையுங் காட்டுவது என்பதை உணர்தல் வேண்டும். ஆறும் திருமுறையிலுள்ள பேறுகட்கு வழிகாட்டியா யிருப்பது ஐந்தாம் திருமுறை என்பது எனது உள்ளக்கிடக்கை."

—இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்; பக். 130-31.

"வெறுமே பொருள் தெரியாமல், சிலைகளையும், கதைகளையும் கொண்டாடுவோருக்குத் தெய்வங்கள் வரங் கொடுப்பதில்லை" என்கிறார், சமய சீர்திருத்தப் புரட்சியிலே இராமலிங்கரின் பாதையிலே பீடு நடை போட்ட பாரதியார்.

மேன்மாடி 'விஷயம்!'

அண்ணன் சபாபதிப் பிள்ளைக்கு அஞ்சி, அவருடைய வீட்டின் மேல்மாடி அறையில் படிப்பதுபோல் பாசாங்கு செய்து கந்தப் பெருமானிடம் 'கள்ளக் காதல்' நடத்தி வந்தார், பாலயோகி இராமலிங்கர். அண்ணனும் அண்ணியும் "பிள்ளை படிக்கிறது மேல் மாடியிலே" என்று எண்ணினர். இராமலிங்கரோ, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, தணிகைப் பெருமான் அருளைப் பாடிப் பாடி, அகத் தூய்மை பெற்று வந்தார்.

நாளடைவில், மேல் மாடியில் நடக்கும் 'விஷயம்' அண்ணனுக்கும் அண்ணிக்கும் தெரிந்தது. அதனால், "மைத்துனப்

Koviloor Digital Library

பிள்ளை படிக்கவில்லையே'' என்ற கவலை குறைந்து, இராமலிங்கர் பக்தியுடன் பாடுவதைக் கேட்க விரும்பினார் அண்ணியார் பாப்பாத்தி அம்மாள். இராமலிங்கர், மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பாடல்களில் பித்துக்கொண்டார். ''அழுதால் உனைப் பெறலாமே'' என்ற மணிவாசகரின் வாக்கை மறைவாசகமாகக் கொண்டார். வாய்ப்பு நேர்ந்த போதெல்லாம் நாள்தோறும் தணிகைப் பெருமானுக்குப் பாமாலை சாற்றினார்.

> ''பண்ணேறு மொழியடியர் பரவி வாழ்த்தும்
> பாதமலர் அழகினை இப் பாவி பார்க்கில்
> கண்ணேறு படுமென்றோ கனவி லேனும்
> காட்டென்றால் காட்டுகிலாய் கருணை ஈதோ ?''

> ''வாவென்பார் இன்றிஉன தன்பர்என்னை
> வஞ்சகனென் றேமறுத்து வன்க ணாநீ
> போவென்பா ராகிலெங்குப் போவேன் அந்தோ !''

என்றெல்லாம் நெஞ்சு நெக்குருக, கண்கள் தாரைதாரையாக நீர் பொழியக் கனிந்து கனிந்து பாடுவார்.

> ''செய்கொள் தணிகை நாடேனோ
> செவ்வேள் புகழைப் பாடேனோ
> கைகள் கூப்பி ஆடேனோ
> கருணைக் கடலில் நீடேனோ
> மெய்கொள் புளகம் மூடேனோ
> மெய்அன் பர்கள்பால் கூடேனோ
> பொய்கொள் உலகோ டுடேனோ
> புவிமீ திருகால் மாடேனோ''

என்று ஆடிப்பாடி ஆனந்தப் பரவசமெய்துவார்.

Koviloor Digital Library

புராணப் பிரசங்கி

அண்ணன் சபாபதிப் பிள்ளை, சைவ சமயத்தில் அழுத்த மான பற்றுடையவர். திருக்கோயில் வழிபாட்டில் தினந் தோறும் ஈடுபடுபவர். திறமைமிக்க புராணப் பிரசங்கி. இந்தக் காரணங்களால் தம்பியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல் கண்டு அவர் ஔரவு ஆறுதலடைந்தார். அண்ணியாரோ, இராமலிங் ரின் "பக்தை"யாகவே மாறிவிட்டார்.

சோமு செட்டியார் வீடு!

சபாபதிப் பிள்ளை, சென்னை முத்தியாலுப்பேட்டையில் வாரந்தோறும் திரு. சோமு செட்டியார் என்பவர் வீட்டில் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தி வந்தார். ஒருநாள், நடராஜப் பெருமான் திருவுருவமொன்றைப் பொன்னால் புனைந்து, அதனைப் பிரதிஷ்டை செய்யும் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த விழாவிலே சீர்காழி வள்ளல் ஞானசம்பந்தப் பெருமான் சரித்திரம் சொல்ல இசைந்திருந்தார் சபாபதிப் பிள்ளை. ஆனால், திடீரென நோய்ப்பட்டு, கடமையைச் செய்ய இயலாதவரானார். புராணப் பிரசங்கத்தைச் சைவத் தொண்டாக மட்டுமல்லாமல், வருவாய்க்குரிய தொழிலாகவும் கொண்டிருந்தார் சபாபதிப் பிள்ளை. அதனால், சிறப்புக்குரிய விழா நிகழும் நாளில் கடமை தவறினால் தம் செல்வாக்குக் குறைந்துவிடுமே என்று அஞ்சினார்; திரு. சோமு செட்டியாரின் மனம் புண்படுமே என்றும் கவலை கொண்டார்.

தம்பி புறப்பட்டார்!

அந்த நேரத்தில், அமைச்சரைப்போல அருகிருந்து, "தங்கள் தம்பியை அனுப்பினால் இரண்டொரு பாடல்களைப் படித்து, விழாவில் குழுமுகின்ற மக்களைத் திருப்தி செய்து திரும்புவார்," என்று ஆலோசனை கூறினார் பாப்பாத்தியம்மாள். கணவரின் இசைவு பெற்று, இளையவரிடம் கூறி, அவரும் இசையும்படிச் செய்தார். சபாபதிப் பிள்ளை, அருமைத் தம்பியை அருகிலே அழைத்து,

> "தம்பி! நீ சென்று இரண்டொரு பாடல்களைப் பாடித் தீப ஆராதனை செய்துவிட்டு, என் உடல் நிலையைச் செட்டியாருக்குத் தெரிவித்து, மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டு வா."

Koviloor Digital Library

என்று கூறினர். வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்த இளவல் இராமலிங்கம், சோமு செட்டியாரின் இல்லம் சென்று தாம் வந்த காரணத்தைக் கூறினர். "பொன்னிருந்த இடத்தில் பூவா?" என்று நினைத்திருப்பார் செட்டியார். ஆயினும், அதுவுமில்லாமற் போய்விடக் கூடாதே என்று எண்ணியவராய், இராமலிங்கரை வரவேற்ருர். வாராது வந்த மாமணியாகிய நம் தமிழ்மணி, இரவு 9 மணிக்குத் தொடங்கிய சொற்பொழிவை நள்ளிரவு பன்னிரண்டு மணிவரை நீட்டினர். அப்போதும் ஞானசம்பந்தப் பெருமான் புராணத்தில் இரண்டு வரிகளே முடிவுற்றன. உள்ளொளி பெற்ற இராமலிங்கரின் வாக்கிலே வேறு எவரிடமும் காணுத தெளிவைக் கண்ட காரணத்தால், கேட்ட மக்கள் சொக்கிப் போயினர். புராணப் பிரசங்கம் என்ருல், 'எடுத்துக் காட்டு' என்ற சாக்கில், தரக்குறைவாக எது எதையோ சொல்லி, மக்களுடைய சிந்தனு சக்தியை அழித்து, அவர்களைச் சிரிக்க வைப்பது வழக்கம். இந்தப் போக்குப் புராணப் பிரசங்கிகளிடம் அன்றும் இருந்திருக்கலாம். அதற்கு விலக்காக இருந்தது இராமலிங்கரின் சொற்பொழிவு.

பாடும் முறை

பக்திப் பாடல்களை 'ஊன் கலந்து, உயிர் கலந்து பாட வேண்டும்' என்று பிற்காலத்தில் இலக்கணம் வகுத்தார் இராமலிங்கர்.

> **"வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை**
> **நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
> **தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்**
> **ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

என்று 'ஆளுடைய அடிகள் அருள் மாலை'யில் பாடியுள்ளார் இராமலிங்கர்.

ஆம்; எந்தப் பாடலைப் பாடுகின்ருேமோ, அதனுேடு இரண்டறக் கலந்து பாடினுல், பாடலின் பொருள் ஊனிலே கலக்கும்; உயிரிலேயும் கலக்கும் என்பது இராமலிங்கர் வாக்கு. அதனுற்ருன், "நான் கலந்து பாடுங்கால்" என்று கூறியிருக்கின்ருர். பாட்டு ஒருபுறம்; பாடுவோரின் மனம் ஒருபுறம் என்று பாடினுல் அதில் பயன் இல்லை.

பாடும் வகையறிந்து, பாட்டின் பொருளுணர்ந்து, அதனுேடு இரண்டறக் கலந்து பாடியதால், சோமு செட்டியார் வீட்டில், கேட்டவர்களெல்லாம் இராமலிங்கரிடம் இதயத்தைப் பறி

Koviloor Digital Library

கொடுத்தனர். "இனி, தாங்களே புராணம் முழுவதையும் நடத்தி முடிக்க வேண்டும்" என்று இராமலிங்கரை வேண்டினர். அவரும் இசைந்து, அண்ணனுக்குத் தொழிலாகவுமிருந்த புராணப் பிரசங்கத்தைத் தம்வரையில் தொண்டாக மட்டுமே கொண்டார்.

சபாபதியின் சந்தேகம்

தம்பிக்கு ஏற்பட்ட தனிப்புகழ் கண்டு அண்ணன் சபாபதி மகிழ்ந்தா ரெனினும், "தம்பிக்குப் புராணப் பிரசங்கம் நிகழ்த்தி மக்களை மயக்கும் திறன் உண்டா?" என்று ஐயம் கொண்டார். ஐயம் அகல அவர் கடைப்பிடித்த முறையும், அதனால் அவர் பெற்ற தெளிவும் 'திருவருட்பாப் பெருநூலி' லுள்ள சரித்திரச் சுருக்கத்தில் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன:

> "ஒருநாள் தம்பியார் பிரசங்கம் செய்யுமிடத்தில் ஒரு சார் மறைவாக வீற்றிருந்து பிரசங்கத்தைக் கேட்டார்; கேட்டு அவர்க்குப் பிரசங்கம் செய்பவர் தம் தம்பி தானு எனும் ஐயம் உண்டாயிற்று. உண்டான ஐயத்தால், மறுபடியும் உற்று நோக்கி, "தம்பியார்தான்" எனத் தீர்மானித்தார்.
>
> "ஓதாதுணரவல்ல உத்தமரை ஓதிவர விடுத்தேன்; ஓதாமையைக் கண்டு உள்ளம் கசந்தேன்; உணவளிக்கவும் மறுத்தேன்; உடையளிக்கவும் வெறுத்தேனே. ஐயோ! என்னுடைய செய்கைகளெல்லாம் அவரின் பெருமையை யறியாத உன்மத்தனின் செயலாயினவே!" என்று பற்பலவாக வியந்தும் வருந்தியும் கூறி, நம் பெருமானரிடத்து அன்று முதல் பெரும் பயபக்தியோடு நடந்து கொள்வாராயினர். ஆனல், அவர் செய்கை நம் பெருமானருக்கு அருவெறுப்பாகவே இருந்தது."

குரு—ஞானசம்பந்தர்

இராமலிங்கர், பிள்ளைப் பருவத்திலேயே தேவார-திருவாசகப்பாடல்களை மனத்தில் பதித்து, மனனம் செய்து வைத்திருந்தார். அது காரணமாக; ஞானசம்பந்தப் பெருமானிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டு, அவரையே தம் குருவாகவும் கருதி வந்தார். பிற்காலத்தில், ஞானசம்பந்தர் துதியாகப் பல பாடல்கள் இயற்றி 'ஆளுடைய பிள்ளையார் அருள் மாலை' என்ற தலைப்பின் கீழ் அவற்றை வெளியிட்டார்.

Koviloor Digital Library

சீரார் சண்பைக் கவுணியர்தம்
தெய்வ மரபில் திகழ்விளக்கே
தெவிட்டா துளத்தில் தித்திக்கும்
தேனே அழியாச் செல்வமே
காரார் மிடற்றுப் பவளமலைக்
கண்ணின் முளைத்த கற்பகமே
கரும்பே கனியே என்இரண்டு
கண்ணே கண்ணிற் கருமணியே
ஏரார் பருவம் மூன்றில்உமை
இனிய முலைப்பால் எடுத்தூட்டும்
இன்பக் குதலை மொழிக்குருந்தே
என்ஆ ருயிருக் கொருதுணையே
பேரார் ஞான சம்பந்தப்
பெருமானேநின் திருப்புகழைப்
பேசு கின்றோர் மென்மேலும்
பெருஞ்செல் வத்தில் பிறங்குவரே

என்ற பாடலிலே, ஞானசம்பந்தப் பெருமான்பால் தமக்குள்ள வித்தேறிய பக்தியைச் சித்திரம் தீட்டிக் காட்டுகின்றார்.

திலகநற் காழி ஞானசம் பந்தத்
தெள்ளமு தாஞ்சிவ குருவே
சித்தநற் காழி ஞானசம் பந்தச்
செல்வமே எனதுசற் குருவே

என்றெல்லாம் பாடி, ஞானசம்பந்தரே தம்மை ஞானியாக்கிய குருநாதர் என்பதனைப் பாரறியப் பறை சாற்றுகின்றார்.

வருபகற் கற்பம் பலமுயன் றாலும்
வரலருந் திறனெலாம் எனக்கே
ஒருபகற் பொழுதில் உறலளித் தனைநின்
உறுபெருங் கருணைஎன் னுரைப்பேன்

என்ற வரிகளிலே ஞானசம்பந்தரால் தாம் பெற்ற பலன் இன்னதென்பதையும் விளக்குகின்றார்.

முருகப் பெருமானே ஞானசம்பந்தராக அவதரித்தார் என்பது இராமலிங்கர் கொள்கை. இதனை, தாம் இயற்றிய "சண்முகர் கும்மி"ப் பாடலில்,

Koviloor Digital Library

சைவந் தழைக்கத் தழைத்தாண் டி—ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண் டி
பொய்வந்த வுள்ளத்திற் போகாண் டி—அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்க டி

என்ற வரிகளில் அறிவிக்கின்றார்.

பெரியபுராணம் கற்பனையா?

இவ்வாறு ஞான சம்பந்தர்பால் பேரன்பு கொண்டு, அவரைப் பெறற்கரும் குருவாக ஏற்றிருந்த இராமலிங்கர், முத்தியாலுப் பேட்டை சோமு செட்டியார் இல்லத்தில் ஞானசம்பந்தர் புராணப் பிரசங்கம் நிகழ்த்தினாரென்றால், அதன் சிறப்பை என்னென்றுரைப்பது! குருநாதரின் பெருமைபற்றிச் சீடப் பிள்ளை நிகழ்த்திய சிறப்புரையாதலால், கேட்டவர்களெல்லாம் கிறுகிறுத்துப் போயினர்.

திருஞானசம்பந்தர் 'வரலாறு' சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்துள் ஒரு பகுதியாகும். அதனால், அந்தப் புராணத்தைப் பற்றி இராமலிங்கர் கொண்டிருந்த கருத்தை இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

> "பெரிய புராணத்திற் குறித்த 63 நாயன்மார்களும் தத்துவங்களே ஒழிய வேறல்ல. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும்.
>
> 'புராணங்களின் இருதய மெல்லாம் தத்துவ சம்மாரமே. இதன் உண்மை சுத்த சன்மார்க்கத்தில் விபரமாய் வெளியாகும்."
>
> —பா. பி. பு. 4; பக். 63

என்பது, திருவருட்பா வசன பாகத்தில், 'சமரச சுத்த சன்மார்க்கத் திருநெறிக் குறிப்புகள்' என்னும் தலைப்பின்கீழ் இராமலிங்கர் தந்துள்ள குறிப்பாகும். பெரியபுராணம் வரலாற்று நூல் என்பதே சைவப் புலவர்களுள் மிகப் பெரும்பாலோரின் கருத்து. பெரிய புராண உரையாசிரியராகிய பெரும்புலவர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் கருத்து வருமாறு:

> "இது புராணம் என்று பெயர்பெற்றாலும், வரலாற்றாதரவாகிய அடிநிலையின்மேல் அமைக்கப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

"கல்வெட்டு முதலிய வரலாற்று ஆராய்ச்சித் துறையாளர்கள் கண்ட முடிவுகள் யாவும் சிறிதும் பிறழாது இப்புராணப் பகுதிகளுடன் பொருந்தக் கண்டு, சில ஆராய்ச்சியாளர்கள் சேக்கிழார் தாமும் கல்வெட்டு ஆராய்ச்சிகள் செய்த பின்பே அம் முடிவுகளின் வழியே புராணம் இயற்றினர் என்று கூறுகின்றனர்."

--'தமிழ்க் கலைக்களஞ்சியம்,' தொகுப்பு 7. பக், 596.

கீதைபற்றிக் காந்தி

புராணங்க ளாகட்டும்; இதிகாசங் களாகட்டும்—அப்படியே வரிக்கு வரி வரலாற்று நூல்க ளென்பதோ, வரிக்கு வரி கட்டுக் கதை என்பதோ முழு உண்மையாக இருப்பதற்கில்லை. அவை வரலாற்றைத் தழுவிய தத்துவக் கதைகளாகவே கொள்ளப்பட வேண்டும். பாரதத்தைப் பற்றியும், அதன் பகுதியாகக் கருதப் படும் பகவத்கீதை பற்றியும் காந்தியடிகள் வெளியிட்டுள்ள கருத்து வருமாறு:

"கீதையை முதன் முதலாக 1888—89ஆம் ஆண்டில் நான் படித்தபொழுதே அது ஒரு வரலாற்று நூல் அன்று என்றும், லௌகிகப் போரைத் துணையாகக் கொண்டு ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இடைவிடாது நடக்கும் அறப்போர் அதில் வருணிக்கப்பட்டிருக்கிறது என்றும் எனக்குப் புலப்பட்டது. இவ்வறப் போரை நன்கு மனத்தில் பதிக்கும் வண்ணம் போர் வீரரைக்கொண்ட யுத்தம் கற்பித்துக் கதை புனையப்பட்டிருக்கிறது. மேலாக எழுந்த இவ்வெண்ணம், தருமத்தைப் பற்றியும், கீதையைப் பற்றியும் ஆழ்ந்து ஆராய்ந்த போது வலுத்தது; மகாபாரதத்தைப் படித்த பிறகு அது நன்ருக உறுதிப்பட்டு விட்டது.

"இக்காலத்தைய தேச சரித்திரங்களைப் போல் மகாபாரதமும் ஒரு சரித்திரம் என்று ஒப்புக்கொள்ளவில்லை. இதற்குப் போதிய பிரமாணம் ஆதிபருவத்திலேயே காணலாம். மகாபாரதத்து நாயக நாயகிகளின் அமானுஷப் பிறப்பை வருணிப்பதிலிருந்தே வியாச பகவான் தமது மகாபாரதம் இவ்வுலகத்தைய அரசர்—குடிகளுடைய சரித்திரம் என்ற எண்ணம் வரக்கூடாதபடி செய்திருக்கிருர்."

--'அனுசக்தி யோகம்' முன்னுரையில்.

Koviloor Digital Library

இரண்டும் சரி !

பாரத இதிகாசம் பற்றிக் காந்தியடிகள் வெளியிட்டுள்ள இந்தக் கருத்துப் பெரிய புராணம் போன்ற புராண இலக்கியங் களுக்கும் பொருந்துவதாகும். இராமலிங்கர், பெரிய புராணம் முற்றிலும் வரலாற்றுத் தொடர்பற்ற கட்டுக்கதை என்று சொல்லவில்லை. அதுபோலவே, வரிக்கு வரி வரலாற்றுத் தொடர்புடைய புராணம் என்றும் கூறவில்லை. அறுபத்து மூன்று தத்துவங்களோடு அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பொருத்திக் கூறியிருக்கின்றார். அவர் எழுதி வெளியிட விருந்த 'சுத்த சன்மார்க்கம்' என்னும் நூலில் இது பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் கூறுவதாக இருந்தார். அந்நூல் நமக்குக் கிடைத்திருந்தால், பெரிய புராணம் பற்றி இராமலிங் கருக்கு இருந்த கண்ணோட்டத்தை நாம் புரிந்துகொண்டிருக்க முடியும். நம் துரதிருஷ்டவசமாக அந்நூலை வெளியிடுவதற்கு முன்பே இராமலிங்கர் மறைந்துவிட்டார். ஆகவே, பெரிய புராணம் பற்றிப் போதிய விளக்கமின்றி இராமலிங்கர் கூறியுள்ள கருத்தை முடிந்த முடிவாகக் கொள்வதற்கில்லை.

சேக்கிழார் பெரிய புராணம் எழுதத் தொடங்கிய போது, தில்லை நடராசப் பெருமான் 'உலகெலாம்' என்று முதல் அடி எடுத்துக் கொடுத்ததாகப் பெரிய புராண வரலாறு கூறும். அந்த முதலடியைக் கொண்ட காப்புச் செய்யுள் வருமாறு :

"உலகெ லாம்உணர்ந்(து) ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்"

'உலகெலாம்'

பெரிய புராணத்தின் காப்புச் செய்யுளில் உள்ள 'உலகெ லாம்' என்னும் முதற் சொல்லுக்கு மிகப் பெரியதொரு விளக்க வுரை தந்திருக்கிறார் இராமலிங்கர்.

முத்தியாலுப்பேட்டையில் நிகழ்த்திய முதல் நாள் சொற் பொழிவில், இந்தக் காப்புச் செய்யுளிலுள்ள 'உலகெலாம்' என் னும் சொல்லுக்கு விளக்கம் கூறுவதிலேயே பெரும் பகுதி நேரத்தைச் செலவழித்தார். அதனை, 'மெய்ம் மொழிப் பொருள் விளக்கம்' என்ற தலைப்பின் கீழ்த் திருவருட்பாப் பெருநூலின் வசனப் பகுதியில் காண்கின்றோம்.

Koviloor Digital Library

புராணம் செய்த புரட்சி!

இந்நாளில், 'புராணங்கள்' என்றாலே, 'அவ்வளவும் கட்டுக் கதைகள்' என்று கூறி, 'இன்றைய விஞ்ஞான யுகத்திற்குத் தேவையற்றவை' என்று புறக்கணிக்கின்றனர், தம் தாய்மொழி யில் கல்வி பயிலாத 'மா மேதைகள்.' தாய்மொழியில் பற்றுக் கொண்ட, தெய்வ நம்பிக்கை உடைய எவரும் அவ்வளவு எளிதில் புராணங்களைப் புறக்கணித்து விடுவதற்கில்லை. இன்றைய நிலை எதுவாயினும் பண்டைய நாளில்—பல நூற் றாண்டுக் காலம், புராண இலக்கியங்களைப் படித்தும், படிக்கக் கேட்டும் மக்கள் அறிவு வளர்ச்சி பெற்று வந்தனர் என்பதனை மறப்பதற்கில்லை. பத்திரிகைகளோ, அச்சிடப்பட்ட நூல்களோ இல்லாத அந்தக் காலத்தில், ஏட்டுக் கல்வி பெறுவது எல்லோ ருக்கும் இயலுவதாக இல்லை. கேள்வி ஞானத்தின் மூலம்தான் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. அந்த நிலையில் சுவைமிக்க கதைகளைப் புனைந்து, தமிழையும் தமிழர் அறிவையும் வளர்த்த பெருமை புராண இலக்கிய ஆசிரியர் களுக்கும், புராணப் பிரசங்கிகளுக்குமே உரியதாகும். ஏன்? இன்றும்கூட, பட்டிதொட்டிகளிலே புராணச் சொற்பொழிவு களைக் கேட்டு மக்கள் அறிவு வளர்ச்சி பெறுவதைப் பார்க் கிறோம்.

இன்றுள்ள புராணப் பிரசங்கிகளுள்ளே **திருமுருக கிருபானந்தவாரியா** ரவர்கள், இறையருளால் தாம் பெற்றுள்ள நாவன்மையையும். தாய்மொழிப் புலமையையும் மக்களுக்கு நலன் தரத்தக்க தொண்டிற்கே பயன் படுத்தி வருகின்றார். அவர் போன்றவர்கள் ஆற்றிவரும் தொண்டு காரணமாகவே, மக்களுள் ஒரு சாராரேனும் புராணங்களை மதிக்கும் நிலை நீடித்து வருகின்றது.

புராணக் கதைகளை முழுக்க முழுக்க வரலாற்று நிகழ்ச்சிக ளாகவே நம்புவோர் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அது, 'வரலாற்று ஆராய்ச்சி' என்பது, மதத் துறைக்கு ஒரு விதம், மற்றத் துறைகளுக்கு இன்னொருவிதம் என்று இருக்க முடியாது என்பதாகும். அத்துடன், எதையும் வரலாற்றுக் கண்கொண்டு ஆராயும் அறிவினை நாம் ஈன்ற மக்களுக்கும் தருவதில் அதிக ஆர்வம் கொண்டு, அதற்கான நவீன முறைக் கல்வியிலே அவர்களைக் கட்டாயமாக ஈடுபடுத்தி வருகிறோம். நம்முள் சிலர், அதனை ஒரு பெருமையாகவும் கருதுகின்றனர். இந்த நிலையில் நாம் பக்தி சிரத்தையோடு வழிபடுகின்ற புராணங்கள் மட்டும் வரலாற்று ஆராய்ச்சியிலிருந்து தப்புவது எங்ஙனம்?

Koviloor Digital Library

சீர்திருத்தப் புயல்!

நம்முடைய புராணங்கள் பக்திநூல்களாக மட்டுமல்லாமல் பாத்திரப் படைப்புகளுடன் கூடிய சுவை மிக்க இலக்கியங்களாகவும் இருக்கின்றன. அதனால், இலக்கியத் திறனாய்விலிருந்து அவை தப்புவதற்கில்லை. புதிதாகத் தோன்றியுள்ள இந்தச் சூழ் நிலைக்கேற்பப் புராணக் கதைகளை நாம் அணுக வேண்டும். 'புராணிகர்கள்' என்போர், வரலாற்று ஆராய்ச்சியாளர்களும், இலக்கியத் திறனாய்வாளர்களும் திருப்தி அடையும் வகையில் புராணக் கதைகளுக்குத் தத்துவார்த்த விளக்கம் தருவதற்குத் திறமைபெற வேண்டும். அந்தத் திறமையைத் தமிழுலகமே வியக்கத்தக்க வகையில் இராமலிங்கர் பெற்றிருந்தார்.

சீர்திருத்தப் புயல் வீசும் 'ஆறுந் திருமுறை'யில்—'திருக் கதவந் திறத்தல்' என்ற தலைப்பின் கீழ்,

"வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉணர்த் தினையே"

என்னும் வரிகளிலே பிறர்போல் புராணம் கூறும் கதைகளிலே மயக்குறாமல், ஓதுகின்ற சூதும்—உளவும் அறிந்து ஓதி உண்மைப் பொருளைத் தாம் உணர்ந்ததாகக் கூறுகின்றார். இதற்கு மாறாக, புராணம் கூறும் கற்பனைகளையே உண்மை என நம்புகின்ற மூட நம்பிக்கைகளை நினைந்து,

"கலையுரைத்த கற்பனையே நிலையெனக்கொண் டாடும்
கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக"

என்று சபிக்கின்றார். புராணங்களை மூடத்தனமாக நம்புவதாலேற்படும் கேடுகள் பற்றி இராமலிங்கர் தெரிவித்துள்ள கருத்துக்களைப் பிறிதோரிடத்தில் விரிவாகக் கூறுவோம்.

ஒற்றியூர் யாத்திரை

சபாபதிப் பிள்ளையின் மன மாற்றத்தால் மேன் மாடி அறையிலிருந்து இராமலிங்கருக்கு 'விடுதலை' கிடைத்தது. அதனால் திருவொற்றியூருக்கு யாத்திரை செய்யத் துவங்கினர்.

"வாவியெல்லாம் தீர்த்தம் மணலெல்லாம் வெண்ணீறு
காவணங்க ளெல்லாம் கணநாதர்—பூவுலகில்

Koviloor Digital Library

ஈதுசிவ லோகம் என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திருவொற்றி யூர்''

என்று பாடினார், பக்திக் கண்கொண்டு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒற்றியூரைப் பார்த்த பட்டினத்தார். அந்த ஒற்றியூரை அடைந்து நித்தநித்தம் தியாகேசப் பெருமானைக் கண்டு, அவனடி தொழுது, அருள்பெறவேண்டும் என்று ஆசை கொண்டார் இராமலிங்கர். மனம் ஒத்துழைக்க வேண்டுமே! இதோ, வஞ்சிப்பதையே தொழிலாகக் கொண்ட தம் நெஞ்சை வேண்டுகின்றார்:

''மன்னு ருத்திரர் வாழ்வைவேண் டினையோ?
மால வன்பெறும் வாழ்வுவேண் டினையோ?
அன்ன ஊர்திபோல் ஆகவேண் டினையோ?
அமையும் இந்திரன் ஆகவேண் டினையோ?
என்ன வேண்டினுந் தடையிலை நெஞ்சே!
இன்று வாங்கிநான் ஈகுவன் உனக்கே
வன்னி அஞ்சடை எம்பிரான் ஒற்றி
வளங்கொள் ஊரிடை வருதிஎன் னுடனே''

ஞான சபைத் தலைவனுக்கு நல்லபிள்ளையாதலால், இராமலிங்கரைக் கண்டு அஞ்சி நடுங்கிய நெஞ்சம் அவரைப் பின்பற்றித் திருவொற்றியூருக்குச் சென்றது. ஒருநாள் அன்று; பன்னெடு நாட்கள்! ஆம்; ஏழுகிணற்றி லிருந்து திருவொற்றியூருக்கு இடையறாது நடைபயின்றார் இராமலிங்கர். ஒற்றியூர்த் தியாகேசரை வணங்கி இராமலிங்கர் அழுதழுது பாடிய பாடல்கள் திருவருட்பாப் பெருநூலில் இரண்டாம் திருமுறையாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஒரு பாடல் வருமாறு:

''திரப்ப டும்திரு மால்அயன் வாழ்த்தத்
தியாகர் என்னும்ஓர் திருப்பெயர் அடைந்தீர்!
வரப்ப டுந்திறத் தீர்உமை அடைந்தால்
வாய்தி றந்தொரு வார்த்தையும் சொல்லீர்
இரப்ப வர்க்கொன்றும் ஈகிலீர் ஆனால்
யாதுக் கையநீர் இப்பெயர் எடுத்தீர்?''

என்னும் வரிகளிலே, தாம் விரும்பும் அருளைத் தாராத பெருமான் 'தியாகேசர்' எனப் பெயர் பெற்றிருப்பதை நிந்தாஸ்துதியாகப் பாடுகின்றார்.

Koviloor Digital Library

ஒற்றியூர்த் தியாகேசர் கோயிலின் உட்பிரகாரத்திலுள்ள முருகப்பெருமான் விக்கிரகத்தின்முன் நின்று, சில நேரம் பாடியும், சில நேரம் மௌனமாகக் கற்சிலைபோல் நின்றும் கண்ணீர் வடித்துக் கைதலை கூப்பியும் வழிபடுவார்.

இப்போது, நம் இராமலிங்கர், பிள்ளைப் பருவம் கடந்து காளைப் பருவத்தை அடைந்துவிட்டாராதலால், இனி அவரை 'இராமலிங்கம் பிள்ளை'யென்றே அழைப்போம். அவரே, இறைவனைப் பாடுங்கால், "எனையே பிள்ளை எனக்கொண்டு, பிள்ளைப் பெயரிட்ட பதியே" என்கின்றாராதலால், அவர் கொண்ட பொருளிலேயே அவரைப் 'பிள்ளை' யென்றழைப்பதிலே பிழையிருக்க முடியாதல்லவா!

நூலாசிரியர்

யாவதுங் கற்றோரறியா அறிவினரான இராமலிங்கம் பிள்ளை, புலவர் பெருமக்களெல்லாரும் வியக்கும் வண்ணம் தமிழ் இலக்கண—இலக்கியங்களிலே பெரும் புலமை பெற்றவரானார். புலவர்கள் பலர், சந்திரனைச் சுற்றியுள்ள விண்மீன்கள்போல, இராமலிங்கரை எப்பொழுதும் சூழ்ந்தவராகி, அதிலே பெருமை கொண்டனர்.

சிறுவர்கள் படிப்பதற்கு உரைநடை நூலொன்று இயற்றித் தருமாறு காஞ்சிபுரம் சபாபதி முதலியார் வேண்ட, அதற்கிணங்கி **மனுமுறை கண்ட வாசகம்** என்னும் நூலை இயற்றியருளினார் இராமலிங்கர்.

புலவர் நடுவே...

'தொண்ட மண்டல சதகம்' என்னும் நூல், படிக்காசுப் புலவர் இயற்றியதாகும். நூலின் பெயர் பற்றிப் புலவர்களிடையே 'தொண்டை மண்டலமா, தொண்ட மண்டலமா?' என்ற ஐயம் எழுந்தது. இரு சாராரும் நம் இராமலிங்கரை அணுகி வழக்குரைத்தனர். நடுவு நெஞ்சினரான பிள்ளையவர்கள், போதிய இலக்கணச் சான்றுகள் காட்டி, 'தொண்ட மண்டலம் என்பதே சரி' என்பதாகத் தீர்ப்பளித்தார்.

"புராண இலக்கியங்களில் போதிய புலமையிருப்பினும், சங்க இலக்கியங்களில் பிள்ளை புலமை பெற்றவரல்லர்" என்று புலவர்களுள் சிலர் புறங்கூறினர். அவர்களுள் ஒருவரான **தொழுவூர் வேலாயுத முதலியார்** என்ற பெரும் புலவர், கடின நடையில்

Koviloor Digital Library

நூறு பாடல்களைச் சிலேடையாகத் தாமே இயற்றி, அவற்றைப் பிள்ளைப்பெருமானிடம் கொண்டுவந்து காட்டி, "இப்பாடல்கள் பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து எனக்குக் கிடைத்தன. இவை சங்ககாலப் புலவர்கள் பாடியனவாதல் வேண்டும்" என்று கூறினர். அல்வழிச் செல்வாரையும் நல்வழிப்படுத்தும் பண்புடைய பிள்ளையார், "அப்பா! இப்பாடல்கள் பொருளிலக்கணந் தேருக் கற்றுக்குட்டி பாடியவை. சங்கப் பாட்டல்ல. சங்கப் பாட்டாயிருந்தால் இத்தனை குற்றமிராது" எனக் கூறினர்.

அது கேட்டுச் செருக்கொழிந்த தொழுவூர் முதலியார், அன்று முதல் மருதூர்ப் பிள்ளைக்குச் சீடப் பிள்ளையானர். பிற்காலத்தில் எண்ணற்ற சீடர்கள் தோன்றினராயினும், தொழுவூர் வேலாயுத முதலியாரே இராமலிங்கரின் பிரதம சீடராவார். அன்று தொட்டு அவருக்கு வடமொழி பயிற்றுவித்து, தமிழ் இலக்கண—இலக்கியங்களில் அவருக்கிருந்த அறிவை விரிவாக்கி, 'உபய கலாநிதிப் பெரும் புலவர்' என்ற பட்டத்தையும் வழங்கிப் பெருமைப்படுத்தினர் இராமலிங்கர்.

வெள்ளாடைத் துறவி

சென்னைக்கு வெளியிலிருந்தும் தமிழ்ப் பண்டிதர்களும், சைவ மடாலயங்களின் தம்பிரான்களும் பிள்ளைப் பெருமானை அடைந்து, கற்க வேண்டியவற்றை யெல்லாம் அவரிடம் கசடறக் கற்றனர். அவரது உறைவிடம் தமிழன்னையின் கோயிலாகவே மாறியது.

இதற்குள், திருவருட்பா நூலிலுள்ள முதல் இரண்டு திருமுறைகளைப் பாடி, ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாகி விட்டார் மருதூரார். அவரது மனம் இல்வாழ்க்கைக்கு எதிரான போக்கில் வளர்ச்சியடைந்து, வெள்ளாடைத் துறவியாகவே அவர் விளங்கினர். தாம் இயற்றிய 'விண்ணப்பக் கலி வெண்பா'வில்,

"அன்புடைய தாயர்களோர் ஆயிரம்பேர் ஆனாலும்
அன்புடையாய் நின்னைப் போல் ஆவாரோ !—இன்பமுடன்
ஈண்டவரும் தந்தையர்கள் எண்ணிலரே ஆயினும்என்
ஆண்டவனே நின்னைப்போல் ஆவாரோ !—பூண்டகைகொள்
ஏனுடைய நின்னையன்றி எந்தை பிரானேஉன்
ஆணை எனக்கு உற்றதுணை யாருமில்லை—நாணமுளன்
ஆனேன் பிழைகள் அனைத்தினையும் ஐயா ! நீ
தானே பொறுக்கத் தகுங்கண்டாய்—மேல்நோற்ற

Koviloor Digital Library

மாற்றனக்கும் எட்டா மலர்க்கழலோய் நீஎன்னைக்
கூற்றனுக்குக் காட்டிக் கொடுக்கற்க !—பாற்றவள
நந்தக் கடற்புவியில் நான்இன்னும் வன்பிறவிப்
பந்தக் கடல் அழுந்தப் பண்ணற்க !"

என்றெல்லாம் பாடிப் பாடி, இறைவன் அருளை வேண்டி வேண்டி, அழுவாராயினர். இல்வாழ்க்கையில் தமக்கிருந்த வெறுப்பை இறைவனிடம் விண்ணப்பித்துப் பாடுங்கால்,

"—எள்ளலுறு
மாலைபாய்ந் தின்னும்என்ன வந்திடுமோ என்றுநெஞ்சம்
ஆலைபாய்ந்து உள்ளம் அழிகின்றேன்—ஞாலமிசைக்
கோட்பார வாழ்க்கைக் கொடுஞ் சிறையி னின்றென்னை
மீட்பா ரிலாது விழிக்கின்றேன்—மீட்பாகும்
ஆற்றி லொருகாலும் அடங்காச் சமுசாரச்
சேற்றிலொரு காலும்வைத்துத் தேய்கின்றேன்—தோற்றுமயற்
பாகமுறு வாழ்க்கைஎனும் பாலைவனத்து உன்அருள்நீர்த்
தாகமது கொண்டே தவிக்கின்றேன்''

என்னும் வரிகளிலே, தம் நெஞ்சில் கடவுள் அருள் வேட்கை யன்றிக் காம வேட்கை சிறிதேனும் இல்லாத நிலையைச் சித்தி ரித்துள்ளார்.

நெஞ்சிடம் கெஞ்சல் !

திருமணப் பருவத்தை அடைந்துவிட்ட பிள்ளையார், திருமணத்தை வெறுத்துத் தெய்வமண வாழ்க்கையையே விரும்பினர். ஆனல், அதுபற்றி இறுதி முடிவினை எடுக்கவிடா மல் அவரது நெஞ்சம் ஒத்துழையாமை செய்தது. ஆம்; கடவுள் அருளினை நாடியது அறிவு; கன்னியின் காமத்தை நாடியது மனம். இந்த இரண்டுக்கு மிடையே கடும் போர் நிகழ்ந்தது! இராமலிங்கர்,

''வார்க்கொண் மங்கையர் முலைமலைக் கேற்று
மறித்தும் அங்குஅவர் மடுவினில் தள்ளப்
பார்க்கின் றுய்எனைக் கெடுப்பதில் உனக்குப்
பாவ மேஅலால் பலன்சிறிது உளதோ ?''

என்று தம் நெஞ்சினைக் கெஞ்சி நின்ருர். பிள்ளையின் உள்ள மறியாத அன்னையாரும் அண்ணனும் அவருக்குத் திருமணம் செய்து வைக்கத் துணிந்தனர்.

Koviloor Digital Library

'கள்வனி'ன் காதலி!

நாயகி பாவத்தை அடைந்து, தம் மனம் கவர்ந்த கள்வனை (கடவுளை) நாயகனைக் காதலித்து விட்டதால், பிறிதொன்றைக் காதலிக்க இராமலிங்கத்தால் இயலவில்லை. ஆம்; 'கள்வனின் காதலி' இராமலிங்கம்! இதனை, அன்னை அறியார்! தம் மகள் (இராமலிங்கரின் தமக்கை) உண்ணுமுலை யம்மாளின் மகள் தனக்கோட்டி என்னும் மங்கை நல்லாளை இராமலிங்கருக்கு மணமுடித்து வைக்கத் திட்டமிட்டார். இந்தச் செய்தியறிந்த பிள்ளையார்,

"எம்பெருமான் நின்விளையாட்டு என்சொல் கேன்நான்
ஏதும்அறி யாச்சிறியேன் எனைத்தான் இங்கே
செம்புனலால் குழைத்தபுலால் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டில் இருட்டறையில் சிறைசெய்து அந்தோ
கம்பமுறப் பசித்தழலுங் கொளுந்த அந்தக்
கரணமுதல் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி அரட்டர் எல்லாம்
மடிபிடித்து வருத்தவென்றே வளர்த்தாய் எந்தாய்!"

என்று பாடி, தம் தாய் விரும்பும் மணவினையைத் தவிர்க்கு மாறு, தமக்குத் தாயும் ஆனவனைக் கூவியழுதார்.

அன்னை அறியார்!

அன்னையார் விடவில்லை. 'இல்லறமல்லது நல்லறமன்று!' என்று உபதேசியாருக்கு உபதேசித்தார்! அது பலிக்காமற் போகவே, இராமலிங்கரின் பெருமதிப்புக்குரியவராயிருந்த சிவ யோகியொருவரைக் கொண்டு, மைந்தனின் மனத்தை மாற்ற முயன்றார். சிவயோகியாரும், 'அறனெனப்பட்டதே இல் வாழ்க்கை' என்ற வள்ளுவர் வாக்கை நினைப்பூட்டினார். 'பெண் ணின் நல்லாளொடும் பெருந்தகையிருந்த காட்சி'யையும் காட்டினார். இராமலிங்கர், வேதனையால்—வெட்கத்தால் மௌன மானார். அதையே சம்மதமாகக் கொண்டு திருமணத்தை முடித் தனர், அன்னையாரும் அண்ணனும். என்னே கொடுமை!

தாமரை பூத்த தடாகம்!

இராமலிங்கரின் குடும்பம், தாமரை பூத்த தடாகம். தாமரை யின் பெருமையைத் தடாகம் அறியுமோ? இல்லை. அது போலப் பிள்ளையின் மனத்தையும் மாண்பையும் அவருடைய

Koviloor Digital Library

குடும்பத்தார் அறிந்துகொள்ளாமல், அவருக்கு மணமுடித்தனர். பொதுவாகத் திருமணங்களில், மணமகள் கையை மணமகன் பிடிப்பதே வழக்கம். இந்தப் பொருந்தாத் திருமணத்தில், மணமகன் கையை மணமகள் பிடித்துத் தீ வலம் வந்தாள் என்றே சொல்ல வேண்டும்.

பள்ளியறையிலே...

திருமணம் முடிந்தபின் முதல் நாள் இரவு! பள்ளியறையிலே இராமலிங்கரும் தனக்கோட்டியும்! அங்கு நிகழ்ந்தது காதல் விளையாட்டா? இல்லை; கடவுள் வழிபாடு! மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் இராமலிங்கம் பிள்ளை எல்லையற்ற ஈடுபாடுடையவர் என்பதை முன்பே அறிந்தோம். ஆனால், அவருடைய திருவாசக பக்திக்குப் பள்ளியறையும் விலக்கன்று என்பதனை இங்கு அறிகின்றோம்.

"மாதர் மையல் துயிலும் பொழுதும் வேலுமயிலும் என்பேன்" என்றும், "கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை மொண்டுண் டயர்கினும் வேல்மறவேன்" என்றும் பாடினார் அருணகிரியார். இராமலிங்கப் பெருமானே, மாதர் போகத்தைத் துறந்து, மாதேவரின் துதி பாடினார். பாவம்! காதலொருவனைக் கைப் பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுக்க நினைத்த தனக்கோட்டி அம்மையாரின் நிலை பரிதாபம்! 'கலியாணம் பண்ணியும் பிரம்மசாரி' என்பது நகைச்சுவை தரும் பழமொழி. அதுபோலத் தனக்கோட்டியம்மாளை மணந்தும், அவருடன் கூடி வாழாமல், அவரைத் துறந்து பிரம்மசாரியாகவே நடமாடினார் இராமலிங்கர்.

பொருந்தா மணம்!

இந்தப் பொருந்தாத் திருமணம், மனித சமுதாயத்திற்கே ஒரு எச்சரிக்கை! தமக்கு நடந்த குழந்தைத் திருமணத்தைப் பிற்காலத்தில் வெறுத்துப் பாடிய பாரதியார்,

"சாத்தி ரங்கள் கிரியைகள் பூசைகள்
சகுன மந்திரத் தாலி மணியெலாம்
யாத்தெ னைக்கொலை செய்தன ரல்லது
யாது தர்ம முறையெனல் காட்டிலர்
தீத்தி றன்கொள் அறிவற்ற பொய்ச் செயல்
செய்து மற்றவை ஞான நெறியென்பர்
மூத்தவர் வெறும் வேடத்தின் நிற்குங்கால்
மூடப் பிள்ளை அறமெவண் ஓர்வதே?"

Koviloor Digital Library

என்று சமுதாயத்தையே சபிப்பார்போன்று கண்ணீரால் கவிதை தீட்டுகின்றார்.

தனக்கோட்டியாரும் தமக்கு நடத்தப்பெற்ற மனம் பொருந்தா மணத்தைப்பற்றி இப்படித்தான் நினைத்திருப்பார். நமது அனுதாபமெல்லாம் மணமகளிடந்தான். ஒரு பிழையும் செய்யாமலே, பெருந்தீமைக்கு இரையானவரல்லரோ!

பாரத சமுதாயத்தில் பெண்களுக்குள்ள தடைகளும், தளைகளும் கொஞ்சமல்ல; ஒரு கோடி என்றாலும் பொருந்தும். இத்தனைத் தடைகளையும் தளைகளையும் தாண்டி, மனைவி தழுவிக் கொள்ளும் கொம்பாக நிற்கின்றான் கணவன். அந்தக் கொம்பும், தழுவிய நாளிலேயே கொடியை நழுவிச் செல்லுமானால், அவளது பரிதாப நிலைமையை என்னென்று சொல்வது!

சீடர்களுக்கு...

இராமலிங்கர், குடும்பப் பெண்களைப் பழித்துப் பேசியவரல்லர். இல்வாழ்க்கையை வெறுத்துவிடுமாறு பிறருக்கு உபதேசித்தவருமல்லர். சிவபக்தி காரணமாகத் திருமணம் செய்து கொள்ள மறுத்த தம் சீடர் ஒருவருக்கு அவர் எழுதிய கடிதத்தில் கூறுவதாவது:

> "பரமசிவத்தினிடத்தே மாறாது மனத்தை வைத்துக் கொண்டு புறத்தே ஆயிரம் பெண்களை விவாகம் செய்து கொள்ளலாம். அன்றியும், விவாகஞ் செய்துகொண்டாலும், அதனால் வருத்தப்பட நம்மை சிவபெருமான் செய்விக்க மாட்டார். ஆதலால் சந்தோஷமாக விவாகத்துக்குச் சம்மதிக்கலாம். தாம் தடை செய்ய வேண்டாம். எந்தக் காலத்தில், எந்த இடத்தில், எந்த விதமாக, எந்த மட்டில், எதை அனுபவிக்க வேண்டுமோ, அதை, அந்தக் காலம், அந்த இடம், அந்த விதம், அந்த மட்டும் பொருந்தப் பொசுப்பிக்கின்றது திருவருட் சக்தியாக இருந்தால் நமக்கென்ன சுதந்திரமிருக்கிறது? எல்லாம் திருவருட் சக்தி காரியமென்று அதைத் தியானித்திருக்க வேண்டும்."

—பா. பி. ப. பு. 5; பக்கம் 32.

இது, திரு. இரத்தின முதலியார் என்பவருக்கு 27-5-1860ல் (தம் திருமணத்திற்குப் பிறகு) எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும்.

Koviloor Digital Library

தம் அனுமதியின் பேரில் நடைபெற்ற திரு. இரத்தின முதலியாரின் திருமணத்திற்குச் சென்று வாழ்த்து வழங்கத் தாம் தவறியபோதும், அதற்காக வருந்தி இராமலிங்கர் எழுதியதாவது:

"தங்கள் மணக்கோலத்தைக் காணக் கொடுத்து வையாத வனுக விருந்தாலும், கேட்டு மகிழ்ந்தேன். தங்கள் சுப சரித்திர விபவங்களை அடிக்கடி தெரிவிக்க வேண்டும். தாங்கள் சிவசிந்தனையை விடாமல் சர்வ சாக்கிரதையோடு லௌகீத்தை நடத்திவர வேண்டும்."

—பா. பி. ப. பு. 5; பக். 33.

இவ்வாறு தம் சீடர்களை இல்வாழ்க்கையில் ஈடுபடுத்திய பெருமான், தாம் தாலி கட்டி மணந்த மங்கையுடன் கூடி வாழத் தவறியது, இறைவன் திருவருள் போலும்!

துறவு பற்றி...

இராமலிங்கர், இல்வாழ்க்கையைத் துறந்த சந்நியாசத்தை ஆதரிக்காதவர் என்றே அறிகிறோம்.

"மூவாசைகளில் விசேஷப் பற்றுள்ளவர்களாகித் தயையில்லாத கடின சித்தர்கள், சந்நியாசம் பெற்றுக் கொள்ளவேண்டும். அக்குற்றத்தை நீக்கினவர்கள் சந்நியாசம் செய்து கொள்ளவேண்டியதில்லை."

—பா. பி. ப. பு. 4; பக். 22.

என்று இராமலிங்கர் தெரிவித்துள்ள கருத்து, திருவருட்பா நூலிலுள்ள உபதேசப் பகுதியில் காணப்படுகிறது. மேலே எடுத்துக் காட்டியுள்ள இராமலிங்கரின் கருத்துக்களுக்கு அவரைப் போன்ற பூரண சன்மார்க்கிகள் விலக்குப் போலும்!

மனப் பொருத்தமும் குணப் பொருத்தமும் நேரக்கூடுமாயின், மனைவியுடன் சேர்ந்தே இல்லற ஞானியாக இருத்தல் கூடும். அப்படி இருந்தவர்களுமுண்டு. இதனை,

"வசிட்ட ருக்கும் இராமருக்கும் பின்னொரு
வள்ளு வர்க்கும்முன் வாய்த்திட்ட மாதர்போல்
பசித்தொ ராயிரம் ஆண்டு தவஞ்செய்து
பார்க்கி னும்பெறல் சால வரிதுகாண்."

என்ற பாரதியாரின் 'சுயசரிதை'யிலுள்ள வரிகள் வலியுறுத்தும். இராமகிருஷ்ண பரமஹம்சரும், தமக்கு மனைவியாக வாய்த்த சாரதாமணி தேவியாரைப் பிரியாமல், அவருடன் இணைந்திருந்தே தவமியற்றி இறையருளில் கலந்தார்.

Koviloor Digital Library

தமிழர் மரபு

தமிழரின் மரபு, மனையைத் துறக்கும் துறவு நெறிக்கு மாறுபட்டது. அதுவும், திருமணத்திற்குப் பிறகு மணவினை ஒப்பந்தந்தை முறித்துப் பிரிய மனைவிக்கு உரிமையில்லாதது போலவே, கணவனுக்கும் உரிமையில்லையென்றே இலக்கியங்கள் காட்டும்.

இல்வாழ்க்கையைத் துறந்த மணிமேகலை, கன்னிப்பருவத்தில்தான் அந்த விரதத்தை மேற்கொண்டாள். பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்கொடியான ஆண்டாள், பிறிதொரு மானிடனுக்கு வாழ்க்கைப்பட மறுத்து, பின்னரே கண்ண பெருமானை மானசீகமாக மணம் புரிந்தார்.

விதி விலக்கு

காரைக்காலம்மையார் வரலாறு இந்த மரபுக்கு விலக்கானதாகும். ஓர் ஆடவனை மணந்து இல்லறத்தில் ஈடுபட்ட பின்னரே, அவனால் கைவிடப்பட்ட நிலையில், கடவுள் அருளை நாடி அடைக்கலம் புகுந்தார். இந்தக் குறையைத் தவிர்த்துத் தமிழர் மரபைக் காக்க நினைத்தவர்போல,

"......இனி, இவனுக்காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடிவு அடியே னுக்குப்
பாங்குற வேண்டும்......"

என்று இறையருளை வேண்டி, தம் கணவனுக்கே உரிய ஊனினைக் களைந்தெறிந்து, பால் வேற்றுமையற்ற என்பு வடிவங்கொண்டு, பின்னரே தெய்வத் திருவருளை நாடிச் சென்றதாகக் 'கதை' சொல்கிறார் சேக்கிழார். என்ன சமாதானம் கூறினும் காரைக்காலம்மையாருடைய வாழ்க்கையின் பிற்பகுதி தமிழருடைய மரபுக்கு மாறுபட்டதுதான்.

விலக்கன்று; விபத்து!

இராமலிங்கர் நிலையும் அதுதான் என்று சொல்லுவதற்கில்லை. ஏனெனில், திருமண வினையே அவருடைய மனப் போக்குக்கு மாறாக நிகழ்ந்துவிட்டதன்றோ? 'திருமண ஒப்பந்தம்' என்பது, ஒருவனும் ஒருத்தியும் உள்ளத்தால் ஒன்றுபட்டதுதானே!

Koviloor Digital Library

இராமலிங்கர், இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் பாவித்து,

"தன்னையறியாப் பருவத்(து) என்னை மணம் புரிந்தான்
தனையறிந்த பருவத்தே எனையறிய விரும்பான்
பின்னையன்றி முன்னுமொரு பிழைபுரிந்தே னில்லை
பெண்பரி தாபம்காணல் பெருந்தகைக்கும் அழகோ ?"

என்று பாடியுள்ளார். பாடுந் திறனிலிருந்தால், தனக்கோட்டியம் மாளும் இராமலிங்கரைப்பற்றி இப்படியே பாடியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

திருமணத் தளையிலிருந்து தம்மை விடுவித்துக்கொண்ட பின்னரும் சில ஆண்டுகள் சென்னை நகரிலேயே தங்கியிருந்தார் இராமலிங்கர். இப்போது இல்லற சுகங்களை வெறுத்த துறவியாகி விட்டாராதலால், இனி அவரை 'இராமலிங்கம் பிள்ளை' என்று அழைக்காமல், துறவியைக் குறிக்கும் 'இராமலிங்க அடிகள்' என்னும் பெயராலேயே அழைப்போம்.

ஒற்றியூர் வழிபாடு

அடிகளார் சென்னையி லிருந்தகாலை, அடிக்கடி திருவொற்றியூர் சென்று தியாகேசப் பெருமானைப் பாடிப் பரவி வழிபட்டு வந்தாரென்று முன்பே கூறினோம். அந்த வகையில் தியாகேசர் மீதும் வடிவுடையம்மை மீதும் செந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்ட எண்ணற்ற பாடல்களை இயற்றியுள்ளார்.

ஒற்றியூர்த் தியாகப் பெருமானுக்கு 'எழுத்தறியும் பெருமான்' என்றொரு பெயருமுண்டு. அந்தப் பெயர் கூறியும் சொந்தமாகப் பாடல்கள் புனைந்து, அவற்றை மாலையாக்கி அணிவித்தார் அடிகளார். அந்த 'எழுத்தறியும் பெருமான் மாலை'யில்,

"சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை
முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்காள் ஆக்காதே
நிந்தைஉறு நோயால் நிகழவைத்தல் நீதியதோ ?
எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே !"

"மைப்படியுங் கண்ணார் மயலுழக்கச் செய்வாயோ ?
கைப்படிய உன்தன் கழல்கருதச் செய்வாயோ ?
இப்படியென்(று) அப்படியென்(று) என்னறிவேன் உன்சித்தம்
எப்படியோ ஐயா எழுத்தறியும் பெருமானே."

Koviloor Digital Library

என்னும் பாடல்களிலே, பூர்வ தீவினைகளுடன் போராடும் தமது உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டி, அந்தப் போரில் தமக்கு வெற்றி கிடைக்க அருள் புரியுமாறு எழுத்தறியும் பெருமானை வேண்டுகின்றார்.

ஒற்றிப்பதி பெயர...

தாம் குழவியாக இருந்த காலையில், தில்லையம்பதியிலே கூத்தப் பெருமானைக் கண்டு, தலையசைத்து வாய் விட்டுச் சிரித்து வழிபட்டவர் இராமலிங்கர். இப்போது அவரது உள்ளம் அந்தத் தில்லையையே நாடி நின்றது, சுற்றுச் சார்போ, ஒற்றியூரிலேயே இருக்குமாறு வற்புறுத்தியது. இந்த மனக் குழப்பத்தை எழுத்தறியும் பெருமானிடம் இயம்புவாராய்,

> **"அல்லல் என்னை விட்டு அகன்றிட ஒற்றி**
> **அடுத்து நிற்கவோ? அன்றிநற் புலியூர்த்**
> **தில்லை மேவவோ? அறிந்திலேன் சிவனே !"**

எனப் பாடி, தமது மனத்துக்குத் தெளிவைத் தருமாறு ஒற்றிப் பெருமானிடம் முறையிடுகின்றார்.

அப்பர் - சுந்தரர் - ஞானசம்பந்தர் - மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர்கள், தல யாத்திரை செய்து, ஒவ்வொரு தலத்தையும் புகழ்ந்து புகழ்ந்து, அவற்றின் சிறப்புகளைப் புனைந்து புனைந்து பாக்க ளியற்றினர். அந்தத் தேவார, திருவாசகப் பாக்களால் தமிழகத்திலுள்ள எண்ணற்ற தலங்கள் அழியாப் புகழ் பெற்று விட்டன. அதனால், ஏதேனும் ஒரு தலத்தைக் குறிப்பிடுங்கால், 'பாடல் பெற்ற தலம்' என்று சொல்லும் மரபு தோன்றி நிலை பெற்றுவிட்டது. சைவ சமயாசாரியர்களின் திருப்பதிகங்களில் குறிக்கப்பட்ட சில பதிகளை 'வைப்புத் தலங்கள்' என்றும் சொல்வது வழக்கம். இந்த வழக்கத்தால், பட்டி தொட்டிகளெல்லாம் நாடு நகரங்களாக மாறி, தமிழினத்தார் பாரதத்திலுள்ள பிற இனங்களைக் காட்டிலும் நாகரிகத்தில் உயர்வு பெற்றனர்.

கந்த கோட்டம்

சமயாசாரியர்களால் பாடப் பெறாத ஒரு தலத்தைப் பாடி, அதற்குப் பெருமை தேடிய உரிமை நம் அடிகளாருக்கு உண்டு. அந்தத் தலம், சென்னை நகரத்தின் நடுவேயுள்ள 'கந்தர் கோட்டம்' ஆகும். அடிகளார் சென்னையிலிருந்த காலை, அடிக்கடி கந்தர் கோட்டம் சென்று, தாம் சொந்தமாகப்

Koviloor Digital Library

புனைந்த பாக்களால், கந்தப் பெருமானை வழிபட்டுவந்தார். அங்குச் சென்றக்கால், பல மணி நேரம் தங்கி, ஊனுடலை மறந்து தியானத்தில் ஒன்றிவிடுவாராம். கந்தப் பெருமானைப் பற்றி அடிகளார் பாடிய பாடல்களில் சிலவற்றை இங்கு பார்ப்போம் :

"திருஓங்கு புண்ணியச் செயல்ஓங்கி அன்பருள்
திறலோங்கு செல்வம்ஓங்கச்
செறிவோங்க அறிவோங்கி நிறைவான இன்பம்
திகழ்ந்தோங்க அருள்கொடுத்து
மருஓங்கு செங்கமல மலர்ஓங்கு வணம்ஓங்க
வளர்கருணை மயம்ஓங்கி ஓர்
வரம் ஓங்கு தெள்அமுத வயம்ஓங்கி ஆனந்த
வடிவாகி ஓங்கிஞான
உருஓங்கும் உணர்வின்நிறை ஒளிஓங்கி ஓங்கும்மயில்
ஊர்ந்தோங்கி எவ்வுயிர்க்கும்
உறவோங்கும் நின்பதம்என் உளம்ஓங்கி வளம்ஓங்க
உய்கின்ற நாள் எந்தநாள்
தருஓங்கு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே !
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !"

கந்தப் பெருமான் கோயிலிலே ஆராதனை நிகழுங்கால் மணி யொலிப்பது போல், இந்தப் பாடலின் முடிவிலே, மும் முறை மணி யொலிக்கக் கேட்டு நம்முடைய ஆன்மா ஆனந்த மெய்துகின்றது.

அடிகளார், 'திருவோங்க, புண்ணியச் செயலோங்க, செல்வமோங்க...' எனப் புகழ் பாடி வாழ்த்திய சிறப்பால், கந்தர் கோட்டம் இன்றும் செல்வச் செழிப்போங்கி, தெய்வ நெறி யோங்கி, அன்பர் திறலோங்கி நிற்கக் காண்கிறோம். இன்னும் இன்னும் ஓங்குக கந்தர் கோட்டம் !

பக்தர் பெருமை

இனி, கடவுள் பக்தர்களின் பெருமையைப் பேச நினைந்து, மேலும் பாடுகின்றார் அடிகளார்.

Kovilpor Digital Library

"ஐயநின் சீர்பேசு செல்வர்வாய் நல்லதெள்
அமுதுண்டு உவந்ததிருவாய் !
அப்பநின் திருவடி வணங்கினோர் தலைமுடி
அணிந்தோங்கி வாழும் தலை !
மெய்யநின் திருமேனி கண்டபுண் ணியர்கண்கள்
மிக்கவொளி மேவுகண்கள் !
வேலநின் புகழ்கேட்ட வித்தகர் திருச்செவி
விழாச்சுபம் கேட்கும்செவி !
துய்யநின் பதம்எண்ணும் மேலோர்கள் நெஞ்சம்மெய்ச்
சுகரூப மானநெஞ்சம் !
தோன்றலுன் திருமுன் குவித்தபெரி யோர்கைகள்
சுவர்ன்னமிடு கின்றகைகள் !
சையம்உயர் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே !
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !"

என்று தெய்வ பக்தர்களின் பெருமையைக் கூறி, அவர்களை வாயார வாழ்த்தி, நெஞ்சார நினைத்துத் துதிக்கின்றார் அடிகளார்.

புகழ்பெற்ற பாடல்

கந்தகோட்டப் பெருமானைப் புகழ்ந்து அடிகளார் பாடிய பாடல்களிலே, பக்தருலகில் அழியாப் பெரு வாழ்வு பெற்றுவிட்ட பாடலொன்று உண்டு. அதையும் பார்ப்போம் :

"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண் டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும்மத மானபேய்
பிடியா திருக்கவேண்டும்
மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்உனை
மறவா திருக்கவேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில்நான் வாழவேண்டும்

Koyiloor Digital Library

தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே !''

இப் பாடலை, ஒரு நூற்றுண்டுக் காலமாகத் தமிழுலகம் பாடிப்பாடி மகிழ்ந்து, கேட்டுக் கேட்டுக் களித்து, பக்தி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கக் காண்கின்ருேம். அடிகளார் மாணிக்க வாசகரைப் பாடுங்கால், 'வருமொழிசெய் மாணிக்க வாசக ! நின்வாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என் உடையனையும் ஒன்றுவித்துத் தருமொழியாம்' என்கின்ருர். அதுபோல, அடிகளாரின் திருவருட் பாடல்களுள் மேலே காட்டியுள்ள ஒரு பாடலே கந்தப் பெருமானேடு பக்தர்களை ஒன்றுவிக்கும் உயிர்ப்பாட்டு எனலாம். அதனாலன்ருே, தமிழருடைய இதயந்தோறும் இந்தப் பாட்டு நிலைபெற்றுவிட்டது.

பெண்ணாசை...

இந்தப் பாடலில் 'மருவுபெண் ஆசையை மறக்கவே வேண்டும்' என்று கூறி, 'மறக்கவே' என்னும் சொல்லில் தங்குள்ள தேற்ற ஏகாரத்தால் பெண்ணாசையின்பால் தமக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்துகின்ருர். ஆனால், இது, பூரண சன்மார்க்கி என்ற வகையில் தம் அளவில் அவர் கூறிக்கொண்டதே யாகும். இதனை, இல்லறத்தாருக்குச் சொன்ன உபதேசமாகக் கொள்ளக் கூடாது. அடிகளாரின் கொள்கையும் இதுவாகவே இருத்தல் வேண்டும். சான்ருகத் தம்முடைய நண்பர் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளும்படித் தூண்டி, அடிகளார் கடிதம் எழுதியதை முன்பே எடுத்துக் காட்டினேம். திருமணம் செய்துகொண்டு புதுமாப்பிள்ளை ஆன ஒருவருக்கு அடிகளார் அனுப்பிய ஆசிச் செய்தியையும் இங்கு எடுத்துக் காட்டுவோம் :

"சிரஞ்சீவி முருகப் பிள்ளை மாப்பிள்ளைக்கு சகல பாக்கியமும் புத்திர சம்பத்தும் தீர்க்காயுளும் மென் மேலுமுண்டாவதாக...உனக்கு முக்கியம் தெரிவிக்க வேண்டுவது ஒன்று என்னென்ருல், பழமை பாராட்டலும் கண்ணேட்டம் செய்தலும் சுற்றந் தழுவலும் அவசியம் வேண்டும். நீ இப்போது முன் மாப்பிள்ளை யல்ல, புதுமாப்பிள்ளை. என்போல்வார்மேல் ஞாபகமிராது. ஆதலால் ஞாபகப்படுத்தினேன்."

—பா. பி. ப., பு. 5, பக். 30.

Kovilor Digital Library

இந்தக் கடிதம் 31-5-1858ல் எழுதப்பட்டதாகும். இதனுல், காதலொருத்தியைக் கைப்பிடித்து, அவளுடன் மருவி இல் வாழ்க்கை நடத்துவதில் தம்மளவிலன்றி, பிறர் விஷயத்தில் அடிகளார் தடையாக இல்லையென்பதை அறிகிறோம். அவரைப் போன்று பூரணத் துறவும் தொண்டு வாழ்க்கையும் மேற் கொள்ளுவோர், மருவு பெண்ணாசையை மறக்கத்தானே வேண்டும்!

தம்மளவிலும், பெண்குலத்தையே வெறுக்காமல், பெண்கள் பாலான காமத்தையே வெறுத்துப் பேசுகின்ருர்.

தல யாத்திரை

அடிகளார் வடலூர் சென்று அங்கு நிலையாகத் தங்குவதற்கு முன்பு தமிழகத்திலுள்ள பல தலங்களுக்கு யாத்திரை செய்தார். தாம் யாத்திரை செய்த தலங்களைப்பற்றி அநேக பாடல்கள் இயற்றியிருக்கிருர். தாம் மட்டும் தனியாக அல்லாமல், தொண்டர் குழாம் சூழ, பாத யாத்திரை செய்திருக்கிருர் என்றும் அறிகிறோம். ஒருமுறை யாத்திரையி லிருந்தபோது, சென்னை நகரிலுள்ள தம் அன்பரொருவருக்கு அடிகளார் எழுதிய கடிதத்தில்,

> ''இந்தக் கடிதமும் கொள்ளடத்தின் வடகரையில் திருநாவலூரி லிருந்து எழுதினேன். என்னுடன் சுமார் 20 பெயர்கள் வந்திருக்கிருர்கள்''
>
> —பா. பி. ப. பு. 5; பக். 72.

எனக் குறிப்பிட்டிருப்பதால், பக்தர் குழாம் சூழத் தலயாத்திரை செய்தார் என்பது புலனுகும். அவர் தமிழகத்திற்கு வெளியே வடநாட்டுத் தலங்களுக்கு யாத்திரை சென்றதாகத் தெரியவில்லை. ஆனுல், அங்கெல்லாமும் போகவேண்டுமென்று ஆர்வம் கொண்டிருந்ததாக மட்டும் அறிகிறோம். தம் நண்பர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதங்களிலே இதற்கான குறிப்புக் காணப்படுகின்றது.

கந்தை சுற்றி...

அடிகளார், தம் ஆன்மா பரிபக்குவமெய்திய பிற்காலத்தில் தம் அளவில் விக்கிரக வழிபாட்டை அடியோடு கைவிட்டாராயினும், அவ்வகை வழிபாட்டில் தாம் ஈடுபட்டிருந்தகாலே, காளத்திப்பரை வழிபட்ட கண்ணப்பர் போன்றே இருந்தார். தல யாத்திரையின் போது 'பாடி' என வழங்கும் திருவலிதாயத்

Koviloor Digital Library

திற்குச் சென்றகாலை, அவ்வூர் திருக்கோயிலி லிருந்த சிவ லிங்கத்திற்கு அழுக்குத் துணி சுற்றியிருந்ததைக் கண்டு மனம் வருந்தி,

"சிந்தை நின்ற சிவாநந்தச் செல்வமே
எந்தை யேஎமை ஆட்கொண்ட தெய்வமே
தந்தை யேவலி தாயத் தலைவநீ
கந்தை சுற்றும் கணக்கது என்கொலோ!"

"தொடுத்த கந்தையை நீக்கித் துணிந்தொன்றை
உடுத்து வார்இலை யோஇவ் வுலகிலே!"
"தூசில் கந்தையைச் சுற்றிஜ யோபர
தேசி போல்இருந் தீர்என்கொல் செய்வனே!"
"புல்லி தாயஇக் கந்தையைப் போர்த்திஞல்
கல்லி தாயநெஞ் சம்கரை கின்றதே!"

என்றெல்லாம் பாடினர். இந்நிலையில், அடிகளாரின் அன்னை யாம் சின்னம்மையார் இயற்கை எய்திவிட்டார். நொந்து சுமந்து பெற்று, நோவாமல் ஏந்தி முலை தந்து வளர்த் தெடுத்த தாய் மாண்டாள். ஐயிரண்டு திங்களாய் அங்க மெலாம் நொந்து பெற்று, 'பையல்' எனக் கேட்டதும் பரிந் தெடுத்துத் தன் கைப்புறத்திலேந்திக் கனக முலை தந்தவள் மறைந்தாள்—என்ற செய்தி கேட்டுக் கலங்கினர். பாரனைத்தும் பொய்யெனவே துறந்த பட்டினத்தடிகளும் அன்னை பிரிந்த துயர் தாளாமல் தம் கண்ணீரால் தீட்டிய கவிதைகள் இறவா வரம் பெற்ற இலக்கியமல்லவா? அன்னையாரின் மறைவு அடிக ளாரை ஆருப் பெருந்துயரில் ஆழ்த்தியது.

தில்லைத் தரிசனம்!

பிறகு, அடிகளார், தம் தமையனர் பரசுராமப் பிள்ளை தேகம் மெலிவுற்றுப் பிணியால் வருந்துவதறிந்து, அவர் விருப் பப்படித் தில்லைத் தலத்திற்கு அவரைக் கொண்டு சென்று, நடராசப் பெருமானின் திருத்தாண்டவத்தைக் காட்டிப் பிணி தீர்க்கப் பொறுப்பேற்றுர். தில்லைக்குச் செல்லும் வழியில் அன் பர் சிலரின் விருப்பத்திற்கு இணங்கப் புதுவைமாநகரில் சின்னுட்கள் தங்குவாராயினர். அடிகளாரின் வருகை யறிந்த புதுவை நகர்வாழ் புலவர் பெருமக்களும், பிரமுகர்களும் அவரை யணுகி, அறவுரைகள் பெற்று மகிழ்ந்தனர். பின்னர், கூத்தப் பெருமான் நின்ருடும் மன்றத்தை அடைந்தார் அடிகளார்.

Koviloor Digital Library

அங்குப் பெருமானைத் தரிசித்து, அண்ணனுக்கும் தரிசனம் காட்டுவித்து, கவிதை மழை பொழிந்தார்.

அண்ணனை இழந்தார்!

சிலகாலம் தில்லையில் தங்கிய பிறகு, அங்கிருந்தும் புறப்பட்டுத் திரும்பவும் தல யாத்திரை செய்தார். யாத்திரை முடிந்ததும் தமது சிறிய தமையனார் பரசுராமப் பிள்ளை தங்கியிருந்த கருங்குழி என்னும் ஊர் வந்தடைந்தார். சில நாட்களில் தமையனார் இறைவனடி சேர, அந்த வருத்தத்தை மாற்றுவான் வேண்டிக் கருங்குழியை விட்டுப் பெயர விரும்பினார். அவ்வூர் வேங்கட ரெட்டியார் என்ற மெய்யன்பர், தம்முடைய இல்லத்தில் தங்கியிருக்குமாறு இதயங் கனிந்து வேண்டுகோள் விடுக்க, அப்படியே அவர் வீட்டில் தங்கியிருந்தார்.

இந்தக் காலத்தில், முன்னர்த் தாம் தந்தையை இழந்திருந்த பிள்ளைப் பருவத்தில், தந்தையினும் தயவுடையராய்த் தம்மை வளர்த்து, தாம் கல்வியறிவு பெறுவதிலே எல்லையற்ற ஆர்வம் காட்டிய அண்ணன் சபாபதி பிள்ளையும் சென்னை நகரில் காலமான செய்தி அடிகளார்க்குத் தெரிந்தது. முற்றுந் துறந்த முனிவராயினும், நன்றியுணர்வு காரணமாக, அண்ணன் பிரிவு குறித்து வருத்தத்தால் சில நாட்கள் வாய்மூடி மௌனியானார். 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்' என்னும் பழமொழி பொய்யாமோ!

கடலூர் வாசம்

கருங்குழியிலே அடிகளார் நெடுங்காலம் தங்கியிருந்தார். அங்கு வேங்கட ரெட்டியார் வீட்டில் அவர் தங்கியிருந்து எண்ணற்ற கவிதைகளை இயற்றிய சிறிய அறை இன்றளவும் புனிதமான இடமாகக் கருதப்பட்டு வருகிறது. கருங்குழியி லிருந்த போதும், தல யாத்திரையின் போதும் அடிகள் பலப்பல சித்து விளையாடல்கள் புரிந்ததாகப் பக்தர்கள் எழுதிய வரலாற்று நூல்களில் பார்க்கின்றோம். அதுபற்றிப் பிறிதோ ரிடத்தில் ஆராய்ச்சி நோக்குடன் நம் கருத்தை விரிவாக அறிவிப்போம்.

பின், கடலூர் அப்பாசாமிச் செட்டியாரின் அழைப்புக் கிணங்கி, அங்குச் சென்று சில நாட்கள் தங்கினார். கடலூரில் தங்கியிருந்த காலத்தில் நாள்தோறும் இரவில் சொற்பொழிவு நிகழ்த்தி, மக்களுடைய வாழ்க்கையைச் சீர்திருத்த முயன்றார். இங்கு, விக்கிரக ஆராதனையை வெறுப்பவர்களான பிரம்ம சமாஜிகளுடன் அடிகளார் வாதப்போர் நடத்தினார்.

Koviloor Digital Library

பிறகு, 'எல்லாம் முடிந்தது' என்ற உணர்ச்சி அடிகளாரின் உள்ளத்தில் ஏற்பட்டது. ஆம்; தந்தையார் போயினர்; தாயும் போனர்; தமையன்மாரும் மறைந்தனர். அவரோ, இல்லந் துறந்த வெள்ளாடைத் துறவி! இனி, அவருக்கு அடைக்கலம் தர இருந்த ஒரே இடம் அம்பலவாணர் திருவடிதான். அதனை, உயிர்களுக்குத் தொண்டு புரிவதன் வாயிலாகவே அடைய விரும்பினர். நகரத்தின் சூழ்நிலை தொண்டு புரிவதற்கு ஏற்ற தன்றென எண்ணி, ஏழ்மையின் சின்னமாய் விளங்கிய சிற்றூர் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அங்குத் தங்கி, தாம் காணவிரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாடுடைய புதிய சமுதாயத்திற்கான தொண்டைத் துவக்கத் துணிந்தார்.

Koviloor Digital Library

வடலூர் வாசம்

சன்மார்க்க ஞானியர் எவரும் ஆடம்பர வாழ்க்கையை வெறுப்பது இயற்கை. அது காரணமாகவே, நகர வாழ்க்கையை அன்னூர் விரும்புவ தில்லே. காந்தியடிகள் கிராமப்புரத்திலேயே ஆசிரமம் அமைத்துத் தங்கியதை அனைத்துலகும் அறியும். அவர் அரசியல் இயக்க அலுவல்களைக் கவனிக்க டில்லி மாநகரில் அடிக்கடி தங்க நேர்ந்தபோதும், கோடீசுவரரான பிர்லா மாளிகையைவிடத் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பங்கிக் காலனியில் தங்கியிருப்பதையே விரும்பினுர்.

ஆடம்பரத்தில் வெறுப்பு

சன்மார்க்க நெறியில் வார்தா முனிவருக்கு முன்னேடியான இராமலிங்க அடிகள், தம் பிள்ளைப் பருவத்திலேயே—சென்னை நகரில் தங்கி வாழ்ந்த காலத்திலேயே—நகர மக்களின் பொய்க் கோலம் கண்டு உள்ளம் பொருமினுர். இதனை,

"வையமேல் பிறர்தம் கோலமும் நடையும்
வண்ணமும் அண்ணலே சிறிதும்
பையநான் ஊன்றிப் பார்த்ததே இல்லை
பார்ப்பனேல் பயமிகப் படைப்பேன்"

என்று அவர் பாடியுள்ள வரிகளால் அறிகிறோம். ஆம்; எந்த நகரைத் 'தருமமிகு சென்னை' என்று அடிகள் வருணித்தாரோ, அந்த நகர வாழ்க்கையையே அவர் வெறுத்தார். சென்னையில் இருந்தகாலை, பெரும்பாலும் சுற்றுப்புறக் கிராமங்களில் தங்கிக் காலம் கழிப்பதையே விரும்பினுா.

"தேட்டிலே மிகுந்த சென்னையில் இருந்தால்
சிறுகுறும் என்றுளம் பயந்தே
நாட்டிலே சிறிய ஊர்ப்புறங் களிலே
நண்ணினேன் ஊர்ப்புறம் அடுத்த
காட்டிலே பருக்கைக் கல்லிலே புன்செய்க்
களத்திலே திரிந்துற்ற இளைப்பை
ஏட்டிலே எழுத முடியுமோ இவைகள்
எந்தைநீ அறிந்தது தானே."

என்னும் பாடலிலே, நகர வாழ்க்கையில் தமக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்துகின்றுர். நடராசப் பெருமான்

Koviloor Digital Library

கோயில்கொண்டுள்ள காரணத்தால் தில்லைப் பதியிடத்தே தம் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தார் அடிகளார். அவ்வகையில் நந்தனோடு அவரை ஒப்பிடலாம் ஆயினும், நந்தன் காலத்தில் இருந்த தெய்வ மணம் இராமலிங்கர் காலத்திலே இல்லை தில்லைப்பதியிலே. அதனால், சிதம்பர வாசத்தையும் அடிகள் வெறுத்தார்.

> ''சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணைவரா கிய நடராஜப் பெருமானைப்பற்றி நாம் போவதற்கும் இரண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதே யன்றி வேறொரு வகையாலுந் தக்கதாகத் தோன்றவில்லை. ஆயின் அது கலிகால வண்ணம்,''
>
> —பா. பி. ப., பு. 5;பக். 40.

என்று திரு. இரத்தின முதலியார் என்ற தம் அன்பருக்கு 20—3—1861-ல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். நகர வாசத்தில் வெறுப்பு மேலிட்டுவிட்டதால் தாம் தங்குவதற்கான ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுக்கும் வேலையில் சிந்தை செலுத்தினார். அடிகளார்பால் பக்தி செலுத்திவந்த அன்பர் பலர் தத்தம் கிராமத்திற்கு வந்து தங்குமாறு வேண்டினர். ஆழ்ந்த சிந்தனைக்குப்பிறகு அடிகளார் **வடலூர்** என்னும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். இதற்குப் **பார்வதிபுரம்** என்னும் மற்றொரு பெயரும் உண்டு. இன்றைக்குப் பார்த்தாலே வடலூர் என்னும் சிற்றூர் பொட்டல் காடாகக் காட்சியளிக்கின்றது. அடிகளார் காலத்தில் அது அசல் பாலைவனமாகவே தோற்றமளித்திருக்கும். ஆயினும், அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்த உலகர் அனைவரையும் திருத்துவதற்கென்றே இந்த யுகத்தே அவதரித்தவராதலால், பாலையையும் சோலையாக்க நினைத்தது அடிகளாரின் உள்ளம்.

வடலூர் தேர்வு

திருக்கூடலையாற்றூர், திருமுதுகுன்றம், திருவதிகை, திருவிரும்பைமாகாளம், திருப்பாதிரிப்புலியூர், தியாகவல்லி ஆகிய சிவ தலங்களுக்கு நடுவேயும், தென்பெண்ணை, திருக்கடிலம், வெள்ளாறு, மணிமுத்தாறு ஆகிய நதிகளால நாற்புறமும் சூழப் பெற்றதாகவும் உள்ள ஒரு பெருநிலப் பகுதியின் அங்கமாக விளங்குகின்றது வடலூர். அங்கிருந்து பார்த்தால்; தில்லை அம்பலவாணர் கோயிலின் நான்கு கோபுரங்களும் காட்சியளிக்கும். இந்தப் புனிதத் தன்மையை முன்னிட்டே, வாழ்க்கை வசதி ஏதுமற்ற வடலூரைத் தேர்ந்தெடுத்தார் அடிகளார்.

Koviloor Digital Library

இராமலிங்கர் வடலூரில் குடியேறிய ஆண்டு இதுவெனத் தெளிவாகத் தெரியவில்லை. ஆயினும், 1867-ஆம் ஆண்டில் வடலூரில் சத்திய தருமசாலை அமைத்தார் என்பது உறுதிப் படுவதால், அதற்கு ஓர் ஆண்டுக்கு முன்பு அவர் வடலூர் சென்றிருத்தல் வேண்டும் என்று ஊகிக்கலாம்.

புதிய நெறி

வடலூர் செல்வதற்கு முன்பு அடிகளாரின் உள்ளப் பாங்கும் உடல் தோற்றமும் தனித் தன்மை பெற்றுவிட்டன. ஆம்; அவர் அகத்தேயும் புறத்தேயும் மகத்தான மாறுதலைத் தோற்றுவித்து விட்டார். காந்தியடிகள் 'சத்தியாக்கிரகம்' என்ற ஒரு பெரு நெறியை உலகுக்கு அளித்ததுபோல, 'ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை' என்ற சித்தாந்தத்தைக் கண்டு விட்டார் அடிகளார்.

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் ஜோதி

என்ற புனிதமான கோஷம் அவருடைய திருவாயிலிருந்து வெளிப்பட்டு விட்டது.

பசித்திரு!
தனித்திரு!
விழித்திரு!

என்ற மூன்று மகா மந்திரங்களைத் தம்மைச் சூழ்ந்திருந்த அடியார்களுக்கு உபதேசிக்கத் தொடங்கிவிட்டார்.

அடிகளாரின் தெய்வ மணம் கமழும் திருவுள்ளத்திலிருந்து பிறந்த திருவருட்பாக்கள், ஆறு திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டு, அவர் வடலூரில் சத்திய தருமசாலை அமைத்த 1867-ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகள் வெளியாகிவிட்டன. இதனை முன்பே அறிந்தோம்.

புழுதிக் காற்றும் புயற் காற்றும்

துவராடை அணிந்தால்தான் துறவு என்று நம்பும் மக்கள் மத்தியிலே, வெறும் வெள்ளாடை அணிந்த துறவி தோன்றிவிட்டார். துவராடைத் துறவிகளிடமும் காணாத உள்ளத் தூய்மையும் ஒழுக்க நெறியும் உயர் குணமும் வெள் ளாடைத் துறவியிடம் வெளிப்படக் கண்டு மக்கள் வியப் புற்றனர். வடலூர் வாசம் அடிகளாரின் வாழ்க்கையிலே மகத்

Koviloor Digital Library

தானதொரு மாறுதலை ஏற்படுத்த விருக்கின்றது. சாதிவெறி என்னும் புழுதிக் காற்றுடன் அவர் போராடவேண்டி ஏற்படப் போகின்றது. அந்தப புழுதிக் காற்றைப் புறங்காண, அடிக ளாரின் உள்ளத்திலிருந்து சமுதாய—சமயச் சீர்திருத்தப் புயற்காற்றுப் புறப்படப் போகின்றது.

இந்த மகத்தான மாறுதல்களை நாம் சந்திப்பதற்கு முன்பு அடிகளாரின் குணநலன்களைப் பற்றிச் சிறிது விரிவாகத் தெரிந்து கொள்ள முயல்வோம். அப்போதுதான சாதிவெறிப் புழுதிக் காற்றின் நடுவே நிற்கும் புனிதர் இராமலிங்கத்தை நாம் நன்ருகப் புரிந்துகொள்ள முடியும்.

பணத்தில் வெறுப்பு

அடிகளார், பணத்திலே விருப்ப மில்லாதவர். பணக்காரரில் ஒருசிலர் அவர்பால் அன்புகொண்டு அடிக்கடி அவரை அணு கினர். ஆயினும், அவர்களிடமிருந்து அடிகளார் தமக்கென உதவி எதையும் பெற்ருரல்லர். அந்த வெள்ளாடைத் துறவி ‘உண்பது நாழி; உடுப்பவை இரண்டே’ என்ற புறநானூற்று நெறிப்படி வாழ்க்கை நடத்தினர். அவருக்குத் தேவைப் பட்டவை இரண்டு வெள்ளாடை, காலுக்கு இரண்டு பாதக் குறடு, வேளைக்கு ஒரு கவளம் உணவு. தாம் சமாதி கூடாத காலத்தில், பல வேளை கழித்து ஒருவேளை உண்ணுவார். அத ஞல், ‘நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்’ என்ற நெஞ்சுரம் பெற்றிருந்தார். ‘அஞ்சுவது யாதொன்றும் இல்லை; இனி அஞ்சவருவதும் இல்லை’ என்ற உறுதி கொண்டிருந்தார். துறவிக்கு வேந்தனை துரும்பென்ருல், பணக்காரன் எம்மாத் திரம்!

கேணியிலே எறிந்த பணம்

தம் அற்பத் தேவைகளுக்காக ஒன்றிரண்டு மெய்யன்பர் களைத் தேர்ந்தெடுத்து அவர்களிட மட்டுமே உதவி பெற்ருர் என்று அறிகிருேம். அவர்களும் தேவைக்கு அதிகமாக வற்புறுத்திப் பொருள் தந்தபோது மிகுதியான பொருளைக் கிணற்றிலேயும் குளத்திலேயும் எறிந்துவிடுவார். இதனை,

“பணத்திலே சிறிதும் ஆசைஒன் றிலை;நான்
படைத்தஅப் பணங்களைப் பலகால்
கிணற்றிலே எறிந்தேன் ; குளத்திலும் எறிந்தேன் ;
கேணியில் எறிந்தனன் எந்தாய் !

Koviloor Digital Library

குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் ; கொடுக்கின்றேன் பிறர்க்கே !
கணத்திலே எல்லாம் காட்டும்நின் அருளைக்
கண்டனன் இனிச்சொல்வ தென்னே''

''அருளினை அளிக்கும் அப்பனே உலகில்
அன்புளார் வலிந்தெனக் கீந்த
பொருளினை வாங்கிப் போனபோ·தெல்லாம்
புழுங்கிய புழுக்கம்நீ அறிவாய் !
மருளும்அப் பொருளைச் சாலகத் தெறிந்து
மனமிக இளைத்ததும் பொருளால்
இருளுறும் எனநான் உளம்நடுங் கியதும்
எந்தைநின் திருவுளம் அறியும் !''

என்னும் பாடல்களில் அவரே கூறுகின்றார். இறுக்கம் இரத்தின முதலியார் என்பவர் தம் இளமை தொட்டே அடிகளாரிடம் அன்பு பூண்டவர். அவர் செல்வர் அல்லர். சென்னை நகரில் ஏதோ ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து அதிலே கிடைத்த சொற்ப வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்தியவர். அடிகளார் தம் அற்பத் தேவைக்குச் சில சமயம் அவருடைய உதவியை நாடியதுண்டு. அவ்வகையில் அடிகளார் வடலூரில் முகாம் அமைத்த பிறகு இறுக்கம் இரத்தின முதலியாருக்கு எழுதிய கடிதங்களில் காணப்படும் சில பகுதிகளை இங்குப் பார்ப்போம்:

"அசலார் யாராவது இவ்விடம் வருகின்றவர்களிடத்தில் ஒன்று அல்லது இரண்டு லாங்கிளாத்து பீசு வாங்கி அனுப்பினுல் அதன் கிரயத்தைப் பின்பு செலுத்திவிடலாம். இதற்குப் பிரயாசம் வேண்டாம்."

—பா. பி. ப. பு. 5, பக். 34.

"வருத்தம் பாராது வரவிடுத்த ஒரு பீசும் ஒன்பது லக்ஷம் பீசுகளாகக் கொண்டேன். இதுவே அமையும். இனி வருத்தம் எடுத்துக் கொள்ளவேண்டாம். பின்பு பார்த்துக் கொள்ளலாம். இதுவன்றி என் பொருட்டு வேறு வகைகளாலும் பிரயாச மெடுத்துக் கொள்ள வேண்டாம்."

—பா. பி. ப. பு. 5, பக். 35.

"தாம் ரிஜிஸ்டர் செய்வித்து அனுப்பிய கடிதமும் அதற்குள் அடங்கிய இருபத்தைந்து ரூபாய் நோட்டும்

Koviloor Digital Library

தாமசப்படாமல் வந்து சேரப் பெற்றுக் கொண்டேன். இது விஷயத்தில் தமக்கு விசேஷம் பிரயாசம் நேரிடச் செய்கிறேன். ஆயினும் அந்தப் பிரயாசம் சிவ கடாக்ஷத்தால் நேரிட்ட தாகலின் பின்பு தமக்கும் எனக்கும் தடைபடாத நிம்மதியையும் சத்துவ சந்தோடத்தையும் உண்டு பண்ணு மென்கிற நிச்சயத்தினுல் நானுது தெரிவிக்க நேரிட்டது. ஆனுல், இது, குறித்து விசேஷ முயற்சியும் பிரயாசமும் தமக்கு நேரிடுமே எனன செய்வது என்கிற விசாரமும் ஒரு பக்கம் உடையவனுகவே இருக்கிறேன். இனி வேறு வகையாற் பலவாக விரிப்பதென்ன. நானே தாமாகவும் தாமே நானுகவும் பழமைதொட்டு வந்த அபேத நேயத்தை எண்ணி, மற்ற இடங்களில் கனவிலும் லக்ஷியஞ் செய்து குறிக்கப்படாத குறிப்பை தம்மிடத்தே குறித்தேன். இது எம்பெருமானுக்கும் சம்மதமாக விருக்கும். ஆகலில் தமக்கும் சம்மதமாக இருக்க வேண்டும் என்று பிரார்த்திருக்கிறேன். இவை தாம் வாங்குகிற இடமும் வாங்குகிற வகையும் அதற்கு எல்லையிட்டுக் கொண்ட வண்ணமும் மற்றவைகளையும் தெரிவிக்க வேண்டும்.''

—பா. பி. ப. பு. 5; பக். 36-7.

''சி. தருமலிங்கப் பிள்ளையின் வசத்திலனுப்புவித்த கழல்க ளீரிரண்டும் பூணப்பெற்றனம்.''

—பா. பி. ப. பு. 5; பக். 51.

[கழல்கள்-பாதக் குறடுகள்]

மன உறுதி

மேலே தந்துள்ள கடிதப் பகுதிகளால் அடிகளார் தம் தேவைக்காகப் பிறரிடம் கோரியவை ஆடையும் பாதக்குறடுகளுமே என்பதும், அவற்றையும் ஒன்றிரண்டு மெய்யன்பரிடம் தான் கோரினுர் என்பதும், அவரிடமும் கோரிய பண்டங்களுக்கான பணத்தைத் திருப்பித் தரும் முறையிலே கடனுகத்தான் பெற்ருர் என்பதும் புலப்படும்.

இராமலிங்கர்பால் அன்பு பூண்ட செல்வர்களிடம் பொருளுதவி பெற்றுத் தருமாறு வறுமையில் சிக்கி வாடிய ஏழைகள் பலர் அடிகளாரை வற்புறுத்துவதுண்டு. அடிகளின் மருகரும் மாணவருமாகிய புராணிகர் சுந்தரம் பிள்ளை, தம் வறுமையைத் தீர்த்தருளுமாறு அடிகளாரை வற்புறுத்தியபொழுது,

Koviloor Digital Library

"திருவோங்கு பொற்சபையும் சிற்சபையும்
நம்பெருமான் செய்யா நின்ற
உருவோங்கும் ஆனந்தத் தாண்டவமும்
கண்டினிதாங் குறைக யானும்
தருவோங்கு தில்லைநகர்க்கு ஓர்இருபா
ஞள்வரைக்குட் சார்கின் றேன்நம்
இருவோங்கள் குறையும்இறைக்கு உரைத்தகற்றிக்
கொளலாம்நீ இனையேல் ஐயா"

எனும் பாடலை எழுதி அனுப்பி, மருகரை மனந்தேற வைத்தார். தாங்கொணு வறுமைக்கு இரையாகிய கந்தசாமி முதலியார் என்பவர் அடிகளாரை அணுகி "எனக்குப் பொருளுதவி தருமாறு தங்களுக்கு அறிமுகமான பிரபுக்களுள் ஒருவருக்குச் சீட்டெழுதித் தரவேண்டும்" என்று கேட்டபோது,

"எட்டாலும் கேள்அயல் என்பாரை
நான்சிரித்து என்னைவெட்டிப்
போட்டாலும் வேறிடம் கேளேன்என்
ஆணைப் புறம்விடுத்துக்
கேட்டாலும் என்னை உடையா
னிடம்சென்று கேட்பன்என்றே
நீட்டாலும் வாயுரைப் பாட்டாலும்
சொல்லி நிறுத்துவனே"

என்று பாடித் தம் மனத் திண்மையை வெளிப்படுத்திக் காட்டினுர்.

அகதிகட்கு ஆதரவு

அடிகளார் கருணையே வடிவெடுத்தாற்போன்றவர். 'தனிப் பெருங் கருணை' என்ற வாசகம் அவர் இடைவிடாது ஓதிய மந்திரமன்ருே? அல்லல் உறுவார்க்கு உதவி புரியுமாறு செல்வரிடம் கையேந்த அவர் மனம் துணியவில்லை. என்ருலும், எதற்கும் ஒரு விலக்கு உண்டு என்பதுபோலத் தம்முடைய இரக்கத்திற்குரிய ஏழை மக்கள் சிலருக்காக இறுக்கம் இரத்தின முதலியாரிடம் உதவி நாடியிருக்கிருர். அந்த வகையில் அவர் எழுதிய கடிதங்களின் சில பகுதிகளைப் பார்ப்போம்:

"இந்தக் கடிதம் கொண்டு வருகிற அம்மாளுக்குத் தாங்கள் கடன் வாங்குகிற இடத்தில் இரண்டு வராகன்

Koviloor Digital Library

கடன் வாங்கிக் கொடுக்க வேண்டும். தங்களுக்கு இப்படிப் பட்டவிடயத்தில் நேரிடுகிற சல்லியங்களை கடவுள் விரைவில் நிவர்த்தி செய்விப்பார். இது நிச்சயம்.''

''இந்தக் கடிதம் கொண்டு வருகின்றவர்கள் இவ்விடத்தில் வந்து தேகமெலிவைக் காட்டியபடியால் இதே சமயத்தில் இவ்விடத்தில் எனக்கு வழக்கமாகக் கடன் கொடுக்கிறவர்கள் சமீபத்திலில்லை. இவர்கள் தேகபக்குவ நிமித்தம் அவ்விடம் போவதாகக் குறித்தபடி தங்களுக்கு இந்தப் பிரயாசம் வைத்தேன்.''

—பா. பி. ப. பு. 5; பக். 46-47

அடிகளார், நாட்டு மக்களுள் ஒவ்வொருவரும் ஏட்டுக் கல்வி பெறவேண்டு மென்பதில் எல்லையற்ற ஆர்வம் கொண்டிருந்தார். ஆண்களே யன்றி, அவர்களுக்குச் சமதையாகப் பெண்களும் கல்வி கற்க வேண்டுமென்பது அடிகளாரின் பெரு விருப்பம். அதனால், கல்விகற்க உதவி கோரித் தம்மை நாடி வரும் ஏழைப் பிள்ளைகளை இறுக்கம் இரத்தின முதலியாரிடம் கைகாட்டிவிடுவார். அவ்வகையில் திரு. முதலியாருக்கு அடிகளார் எழுதிய கடிதங்களின் பகுதிகள் வருமாறு :

''சிரஞ்சீவி நமசிவாயப் பிள்ளை அவ்விடம் படிக்க வேண்டு மென்று வருகின்றான். அவனை படிப்பின் விஷயத்தில் மாத்திரம் அடிக்கடி விசாரிக்க வேண்டும்''

—பா. பி. ப. பு. 5; பக். 28.

''இந்தக் கடிதம் கொண்டு வருகிற சி. குமாரசாமி பிள்ளை படிக்க வேண்டு மென்று விரும்பியிருக்கிறபடியால் அவனுக்கு எந்த விதத்தில் படிப்பித்தால் படிப்பு வருமோ அந்த விதத்தில் படிப்பிக்க வேண்டும்...''

—பா. பி. ப. பு, 5; பக். 29.

ஏழை மக்களின் கல்வி விஷயத்தில் முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டு மென்பது அடிகளாரின் கொள்கை. சாதி வேற்றுமைகளும் சமய வெறிகளும் மலிந்துவிட்ட இந்து சமுதாயத்தில் தனியார் பொறுப்பில் கல்வித் தொண்டு இருப்பதை அடிகள் வெறுத்தார் என்பதற்கு, அவர் தம் நண்பர் இரத்தின முதலியார்க்கு எழுதிய கீழ்வரும் கடிதம் சான்று :

''சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரமமல்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகிறது. அன்றியும்

Koviloor Digital Library

அவ்வலுவல் இராஜாங்க சம்பந்த அலுவலாகவிருந்தால் நன்றாக விருக்கும். அவ்வாறின்றி ஒருமையில்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக விருக்கின்றது.''

—பா. பி. ப. பு. 5: பக். 40.

இதனால், சமுதாயம் முழுவதற்குமான தேசிய நலன்கள் அரசினர் துறைகளாகவே முற்றிலும் இருக்க வேண்டுமென்கிற தற்போதைய மத்திய அரசினர் கொள்கையை அப்போதே அடிகள் கருதியிருந்தது புலனாகும்.

அடிகளார் செல்வச் செருக்குடையவர்களை வெறுத்தார். அவர்கள் வலிய வந்து உதவி புரிந்த போதும் அதனை ஏற்க மறுத்தார். திரு. சோமு செட்டியார் என்ற செல்வர் ஒருவர் தாம் வருந்தும் வகையில் நடந்து கொண்டபோது அவரைப் பற்றித் திரு. இரத்தின முதலியாருக்கு அடிகள் எழுதிய கடிதப் பகுதி வருமாறு:

''நான் ம.ா-ா சோமு செட்டியாருக்குக் கடிதம் எழுதவே மாட்டேன். அவர் கல்யாணத்துக்கு எனக்கொரு கடிதம் எழுதினார். அதற்குப் பதிலாகவும், அவர் அன்பைச் சோதிக்கும் பொருட்டாகவுமே எழுதி தம்மாற் கண்டுகொண்டது. இவரைப்போல் ஆயிரம் பணக்காரர்களை அரை நிமிடத்தில் அதிட்டிக்கலாம். நமக்கு இவர்களெல்லாம் ஒரு திரணமாகத் தோன்றுகிறார்கள். இவர்கள் லக்ஷியம் வேண்டுவதில்லை. நாம் சிவபெருமான திருவடிகளுக்கு அடிமையானோம். நமக்கு ஒரு விதத்தாலும் குறைவில்லை. இது உண்(மை)''.

—பா. பி. ப. பு. 5: பக். 35.

இராமலிங்கரின் நாவசைந்தால் அவருக்குச் சொர்ணாபிஷேகம் நடத்த அவர்பால் பேரன்பு கொண்ட செல்வர் சிலர் காத்துக் கிடந்தனர். தேவையின்மையாலும் தகுதியறிந்து உதவி கேட்கும் தன்மையாலும் அவர்கள் வலுவில் வழங்க வந்த உதவியையும் வாங்க மறுத்தார் அடிகளார். இதனை அறியச் சென்னை இராயல் ஓட்டல் அதிபர் புதுவை திரு. வேலு முதலியாருக்கு 15-2-1859-ல் அடிகளார் எழுதிய கடிதத்தைப் பார்ப்போம்:

''ஐயா! நானோ புத்தி தெரிந்த நாள் தொடங்கி இதுபரியந்தமும் இந்தப் பிணவுடம்பும் இதற்குக் கொடுக்கின்ற பிண்ட துண்டங்களும் பெருஞ் சுமையாக இருக்கிறதே! ஐயோ! இது என்றைக்குத் தொலையும் (என்று) எண்ணி

Koviloor Digital Library

எண்ணி இளைத்துத் துன்பப்படுகின்றவனாக இருக்கிறேன். இப்படிப்பட்ட இந்த நாய்க்குப் பணம் என்ன செய்ய!

"ஐயா! என்னைக் குறித்துத் தாங்கள் பண விஷயத்தில் பிரயாசமெடுத்துக்கொள்ள வேண்டாம். தாங்கள் வேறு விதத்திலும் செலவுக்கு இடம் பார்க்க வேண்டாம்.

"தாங்கள் மார்கழி மீ" ம-ா-ா ஸ்ரீ முதலியார் நற்குண மணியாகிய சீனுவாச முதலியார்க்கு எழுதிய கடிதத்தால் அவர்கள் என்னைக் கேட்க, நான் மறுக்க, மறித்தும் தங்கள் கடிதம் வர, இதனால் தங்கள் மனத்திற்கு வருத்த முண்டாமென்று மேற்படி முதலியார் அவர்களிடத்தில் பத்து ரூபாய் வாங்கிக் கொண்டேன். மற்றவை அவர் ளிடத்திற்றானே இருக்கிறது. இதனைத் தாங்கள் அறிய வேண்டும் ம-ா ா-ஸ்ரீ சினுவாச முதலியார் மிகவும் நல்லவர் கள், சிநேக பாத்திரர்கள், நல்ல புத்திமான்."

—பா. பி. ப. பு. 5: பக். 79.

இந்தக் கடிதத்தினால் ஒட்டல் முதலாளி வேலு முதலியார் தம் நண்பர் ஒருவர் மூலம் அடிகளாருக்குப் பணம் உதவ முன் வந்ததும், முதலில் அடிகளார் அதனை வாங்க மறுத்து, திரும்பவும் கடிதம் எழுதி வேலு முதலியார் வற்புறுத்திய பின்னர், தாட்சண்யத்திற்காகப் பத்து ரூபாய் அளவில் விருப்பமின்றிப் பெற்றுக்கொண்டதும் புலனாகும். இந்தப் பண்புக்கு மாறாக, அருட்பா நூலில்—'இராம நாமத் திருப்பதி'கத்தில்,

"பொன்னுடையார் வாயிலிற்போய் வீணே காலம்
போக்குகின்றேன் இவ்வுலகப் புணர்ப்பை வேண்டி
என்னுடையாய் நின்னடியை மறந்தேன் அந்தோ!
என்செய்கேன் என்செய்கேன் ஏழையேன் நான்!"

என்ற வரிகளில் அடிகள் தெரிவித்துள்ள கருத்து,உலகத்தார்க் குள்ள குறையை உபசாரமாகத் தம்மேல் ஏற்றிக் கூறியதாகும்.

துறவறத்தார்க்கே யன்றி, இல்லறத்தார்க்கும் பணத்தின் மேல் மோகம் கூடாது. தேவைக்கு அதிகமாகப் பணத்தை விரும்புவதோ, அதிகப்படியாகப் பணத்திற்கு மதிப்பளிப்பதோ, பல தீமைகளுக்குக் காரண மாகிவிடும். மனிதனிடமுள்ள புல குற்றங்களுள், அன்றாடத் தேவைக்கு அதிகமாகப் பணத்தை விரும்புவதும் ஒன்றாகும். பாரதியார், "மனித ஜாதிக்குத் தீராத

Koviloor Digital Library

நோய் ஒன்று பிடித்திருக்கிறது; மாருத சாபம்; இறங்காத விஷம்; இதன் பெயர் பணம்'' என்று 'ஞானரதம்' என்ற தமது நூலில் கூறுகின்றார். பொருளின்பால் ஆசை வைத்தவன் ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாக முடியாது. இதை, "ஒட்டகத்தை ஊசிக் காதில் நுழைத்தாலும் நுழைக்கலாம்; பணக்காரனைச் சொர்க்கத்திற்கு அனுப்புவது சாத்தியமில்லை'' என்ற ஏசு பெருமானின் வாக்காலும் அறியலாம்.

இராமலிங்கர் உலக இன்பங்களைத் துறந்து, இறைவன் திருவருள் ஒன்றையே நாடிய ஞானியாயினும், லௌகிக நெறிப்படி உலகினரோடு கலந்து பழகினர். சீர்திருத்தவாதி எவரும் மக்கள் தொடர்பற்று வாழ இயலாது. மக்கள் தொடர்பற்று வாழுவோர் நிறையப் போதிக்கலாம்; ஆனால், எதையும் சாதிக்க முடியாது. 'கண்மூடி மௌனியாகிச் சர்வசதா காலமும் தனியே இருக்க' விரும்பும் தவசிகள் நிலைவேறு. இராமலிங்கர், சில பல சீரிய முற்போக்குக் கொள்கைகளை மக்களுக்கு வழங்கக் கடை விரித்தவர். அதனால் மக்கள் தலைவராகவும் செயல்படக் கடமைப்பட்டவராகி, தம்பால் அன்புகொண்டு தம்மைப் பின்பற்றிய சீடர்களுடைய இன்ப துன்பங்களிலே பங்கு பெறுவாரானார்.

அன்பருக்கு அன்பர்

தம் அணுக்கத் தொண்டர் இரத்தின முதலியாருக்குத் தலைக் குழந்தை பிறந்தகாலை,

> "தங்களுக்குப் புத்திரப் பேறு உண்டாயிற்றென்று கேள்விப்பட்டு அளவு கடந்த சந்தோஷத்தையடைந்தேன். குழந்தையை நன்றாகப் பாராட்டி...சகல விஷயத்திலுஞ் சாக்கிரதையா இருக்கவேண்டும்.''
>
> —பா. பி. ப. பு. 5: பக். 52.

என்று கடிதம் எழுதினர். அதே அன்பர், பிணிவாய்ப்பட்ட செய்தி யறிந்த போது,

> "தங்களுக்கு இருமலால் தேகம் அபக்குவமாக விருக்கிறதாகத் தபாலில் எனக்குத் தெரிவித்தார். அவர் தெரிவித்தது தொடங்கி என் நினைப்பெல்லாம் தங்களிடமாகவே யிருக்கிறது. நித்திரை பிடிக்கிறதுமில்லை. நான் தொடங்கிய காரியங்கள் ஒன்றும் நடக்கிறதுமில்லை. மனம் அலை பாய்ந்து கொண்டே இருக்கிறது.

Koviloor Digital Library

"தாங்கள் நமது சாமி அவர்களைக் கொண்டு உபசாந்தி செய்துக் கொண்டு அதிக உழப்பெடுத்துக் கொள்ளாமல் சாக்கிரதையாக வரவேண்டும். கடினமான அவுஷதங்களைக் கொள்ளவேண்டாம்.

"உத்தியோகம் தடையாயிருந்தால் அதைவிடுத்து தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்ளுங்கள். தேகம் பக்குவமான பின்பு சிவானுக்கிரகத்தால் உத்தியோகம் சம்பாதித்துக் கொள்ளலாம். அதுபரியந்தம் கடன் பட்டாவது ஜீவனம் செய்யலாம்.

"தாங்கள் 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க் கபாயம் ஒருநாளுமில்லை' என்பதை சத்தியமாகக் கடைப்பிடிக்க வேண்டும்."

-பா. பி. ப. பு. 5; பக். 54-5.

வறுமையில் வாடிய புராணிகர் ஒருவர்க்குக் கடன் உதவி புரியுமாறு 11-6-1860-ல் இரத்தின முதலியாருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு :

> "இந்தக் கடித முன்னிலையால் தங்களைக் காணுகின்ற பெரிய புராணீகர்க்கு சுமார் நாலு மாத பரியந்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 4 தாங்கள் கடன் வாங்குகின்ற இடங்களில் வாங்கி மாதா மாதம் கொடு...வேண்டும்...அவர் கையில் பண மிருந்தால் விரைவில் செலவழிந்து போம். அது தங்களுக்குத் தெரியும்."

-பா. பி. ப. பு. 5. பக். 64.

அகதிகளின் துணைவர்

கடன்பட்ட நெஞ்சினராக வருந்தும் நண்பர் ஒருவருக்கு ஆறுதல் கூறி அடிகள் எழுதிய கடிதத்தில்,

> "தாங்கள் எனக்கு இருமையும் தொடர்ந்த துணைவராக நினைக்கின்றேன். அன்றி வேறென்னை நினைப்பேன். தங்களுக்கன்றியும் நமது செல்வராய முதலியாரவர்களுக்கும் கடனிருந்தால் திருவருளால் நீங்கிவிடும். அது குறித்துச் சலிக்க வேண்டாமென்று குறிக்க. அன்றி சிவசிந்தனையுஞ் ஜீவ கருணையுங் கைவிடாது ஓங்குக."

-பா. பி. ப. பு. 5: பக். 63

Koviloor Digital Library

இராமலிங்கர் முற்காலச் சித்தர்கள் போன்று மருத்துவக் கலை தெரிந்தவர். இதனால், பிணியுற்ற ஏழை மக்கள், பிறவிப் பிணி தீர்க்க அவதரித்த அந்த ஞானியிடம் அடைக்கலம் புகுந்து உடற் பிணி தீர்க்குமாறு வேண்டுவர். கருணை வள்ளலாகிய அவர், அவர்களைக் காக்கும் பொறுப்பை ஏற்று, உயிர் காக்க மருத்துவம் செய்ததோடு, உடல் வளர்க்க உணவும் தருவார். இப்படி, ஒரு நேரத்தில் தம் நிலை குறித்து நண்பர் ஒருவருக்கு அவர் எழுதிய கடிதத்தின் பகுதிகள் வருமாறு:

"இங்ஙனம் இருவர் பிணியாளர் வேறு கதியின்றி என்பாற் புகலடைந் திருக்கின்றனர். அப்பிணி சிறிது சாந்தப் பட்டவுடன் பிரயாணப்பட்டு அவ்விடம் வர நிச்சயித்திருக்கிறேன். சிவபெருமான் திருவுள்ளக் கருத்தறியேன்."

-பா. பி. ப. பு. 5; பக். 56.

"ஈராண்டு பலவகைக் கருவிகளால் பதப்படுத்தி யேழைகள் பலர்க்கும் உபயோகிக்கும் பொருட்டு நம்மாட் டிருந்த ஓர் பேரு(ழை)ழப்பு-ஓர் அசாக்கிரதையால் தன்மை கெடப்பெற்றது. இங்ஙனம் பெறினும் நம் பெருமான் றிருவுளக் குறிப்பு அங்ஙனமிருந்த தென்று கருதி அமைதி பெற்றுமாயினும் பிணிகளாற் பிணிப்புண்ட ஏழைகளைக் கருதும்போதெல்லாம் ஒரு சிறிது உளம் புடை பெயர்கின்றும்."

-பா. பி. ப. பு. 5; பக். 51.

கருணையாளர் !

ஏழை மக்கள் கருணையற்றவர்களால் துன்புறுத்தப்பட்ட போதெல்லாம், துன்புற்றோர், தம் துணை நாடிய போதெல்லாம் அவர்களுக்குத் தோன்றாத் துணையாயிருந்து தொண்டாற்றினர் அடிகளார். அதுபோன்ற ஒரு நேரத்தில் தம் நண்பர் ஒருவருக்கு அடிகள் எழுதிய கடிதங்களின் பகுதிகள் வருமாறு:

" தங்கள் கடிதம்...வரப்பெற்று அதிலுள்ள சங்கதிகளை அறிந்த நான் துன்பக் கடலில் விழுந்தேன். இன்னும் எழுந்ததில்லை. ஆனால் எழுந்திராம லிருக்க மாட்டேன். தங்களுடம்பிற்கு அபக்குவ மென்று அறிந்தபொழுதே என் மனம் தங்களைப் பார்க்க வேண்டு மென்றும் தங்களுக்கு சவுக்கியம் உண்டாக வேண்டு மென்றும் கடவுளைச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது. இது மாத்

Koviloor Digital Library

திரமோ. என் கண்கள் தங்களைக் காணவேண்டுமென்று துடிக்கின்றன. என் கால்கள் தாங்களிருக்கும் திசையை நோக்கி நடக்க வேண்டுமென்று ஊருகின்றன. இவைகளைத் தற்காலத்தில் ஒரு பெரிய நிர்ப்பந்தந் தடுக்கின்றது. அதை தெரிவிக்கிறேன்.

"நான் பொசிக்கின்ற ரெட்டியார் வீட்டில் தற்காலத்தில் எசமானராக விருக்கிற ராமகிருஷ்ண ரெட்டியார் என்பவர்க்கு 4 மாசந் தொடங்கி உஷ்ண பேதியாகிக் கொண்டிருந்தது... இப்படிப்பட்ட வேளையில் நான் புறப்பட்டு வந்தால் உலகம் நிந்திக்கும். கடவுளுக்குஞ் சம்மதமிராது. ஆனபடியால் அஞ்சுகிறேன். என்ன செய்வேன். அவர்க்கு உடம்பு சிறிது பக்குவமானால் புறப்பட்டு விடுவே னிற்கமாட்டேன். கடவுள் என்ன நினைத்திருக்கிறாரோ, அதுவுந் தெரிந்ததில்லை."

-பா. பி. ப. பு. 5; பக். 82.

"இந்தப் பார்வதிபுரத்தில் பிராமணர் இருவர்களுக்கு இராஜாங்க விவகார வழியில் ஒரு பெரிய ஆபத்து நேரிட்டு அவர்களைப் பிடித்துக்கொண்டு போயிருக்கின்றார்கள். அவர்கள் இத்தருணத்தில் சிறிது சகாயம் செய்தால் உயிர் வாழ்வோம். இல்லாவிடில் உயிரிழந்து விடுவோமென்று பரிதபித்து எழுதிய கடிதம் வந்து சேர்ந்தபின் நான் அவ்விடம் வரும் பிரயாணம் ஆலசியப்பட்டது. இங்கு கூடிய விரைவில் அவர்கள் விஷயத்தில் சகாயம் செய்ய வேண்டுவது கருணைக்கு இலக்ஷியமாகலில், என் மனது இவ்விடம் வருவதற்கும் அவ்விடம் போவதற்கும் துணிவு தோற்றாமல் ஊசலாடுகின்றது. இது சிறிது துணிவு பெற்றபின் நான் வருகின்றேன்."

-பா. பி. ப. பு. 5; பக். 88.

Koviloor Digital Library

காட்சிக் கெளியர்

இராமலிங்க அடிகளார், கடலூர் விட்டு வடலூர் செல்லுங் கால், அவரது தோற்றம் எப்படி யிருந்தது? இந்த வினவுக்கு அடிகளாரின் தலைமாணுக்கராகிய தொழுவூர் முதலியார் விடை யளிக்கிருர், கேட்போம்:

"உருவத்தில் சாதாரண உயரமுள்ளவர். மெலிந்த சரீரமுடையவர். எலும்புகள் தெரியும். ஆயினும் வீரிய பல முள்ளவர். நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற (சாதாரண சிவப்பு) மேனியர். நீண்ட மெல்லிய நாசியுடையவர். பரந்த பொறி பறக்குங் கண்களையுடையவர். இவருடைய முகத்தில் சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது.

"இவர், கடைசிக் காலத்தில் முடியை நீளமாய் வளர விட்டிருந்தார்.

"இவர், யோகிகளுக்கு அடுக்காத வழக்கமாகிய பாத ரட்சையைத் (ஆற்காட்டுச் சோடு) தரித்திருந்தார்.

"இவருடைய உடை, இரண்டு வெள்ளை யாடையை விட வேறு இல்லை, (ஒரே ஆடையை உடுத்தியிருந்த தாகவும் கேள்வி.)"

-திருவருட்பாப் பெருநூல்.

திரு. முதலியார் தீட்டிக் காட்டும் சித்திரப்படி, அடிகளார், முதலில் இரண்டு வெள்ளாடையை யணிந்தவராகி, பின்னர், மிகவும் நீளமான ஒரே வெள்ளாடையில் பாதியை இடுப்பில் சுற்றியும், மற்றப் பாதியை உடம்பின் மேல் போர்த்தும் தலைக்கு முக்காடிட்டும் இருந்தார் என அறிகிறோம். அந்த வெள்ளாடை, அவர் காலத்தில் பலரும் விரும்பிக் கட்டிய லாங் கிளாத் மல் என்பதை முன்னர்த் திரு. இரத்தின முதலியார் என்பவருக்கு எழுதின கடிதமொன்றிலே கண்டோம்.

சிற்சில சமயங்களில் அடிகளாரின் இளமைப் பருவத்தில் அவருடைய நண்பர்கள் அவருக்குப் பட்டாடை யுடுத்திப் பார்த்தனராம். அப்போதெல்லாம் அடிகளார் மனம் பட்ட பாட்டை அவரே பாடக் கேட்போம்.

Koviloor Digital Library

"நயந்தபொற் சரிகைத் துகில்எனக் கெனது
நண்பினர் உடுத்திய போது
பயந்தஅப் பயத்தை அறிந்தவர் எல்லாம்
பயந்தனர்..............."

துறவிகளானோர், துவராடை (காஷாயம்) அணிவதுதான் வழக்கம். இதற்கு மாறாக, வெள்ளாடைத் துறவியாக விளங்கினார் இராமலிங்கர்.

அடிகளார், சமயத் துறையில் சீர்திருத்தங் காண எண்ணியவராதலால், துவராடையை விரும்பவில்லை எனலாம். மற்று தயவில்லாத கடின சித்தர்களே தயவைப் பெறுவதற்கான அடையாளமாகக் காவி வேட்டி உடுத்தல் வேண்டுமென்றும், 'தயவு' என்ற ஒழுக்கம் கைவரப்பெற்றவர்களுக்கு வெள்ளாடையே போதுமென்றும் அடிகளார் கருதினார். இதனை அவரே கூறக் கேட்போம்:

"மூன்றுசைகளில் விசேஷம் பற்றுள்ளவர்களாகித் தயவில்லாத கடின சித்தர்கள் சந்நியாசம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேல்படி குற்ற மற்றவர்களுக்குச் (சந்நியாசம்) வேண்டுவதில்லை. சந்நியாசி காவி வேஷ்டி போடுவதற்கு ஞாயம்: தயவில்லாத கடின சித்தர்களாகையால் தத்துவா பாசமுள்ளது; தத்துவத்தைச் செயித்து தயவை நடத்துவதற்கு யுத்தக் குறி (அல்லது) அடையாளமாகத் தரிப்பது காவி. வெற்றியான பிறகு அடைவது தயவு. ஆதலால் வெற்றிக் கொடி வெள்ளை."

-பா. பி. ப. பு. 4; பக். 22.

அடிகளார், பிறவியிலேயே தயவு — கருணை — ஞானம் ஆகிய நற்பண்புகளைப் பெற்றிருந்தாராகையால், அவர் துறவியாவதற்கும் காஷாயம் தேவைப்படவில்லை. ஆனால் காஷாயமணிந்த உண்மைச் சந்நியாசிகளை அவர் மதித்தார். காஷாயத்தில் மறைந்த கபட சந்நியாசிகளை அடிகள் வெறுத்தார். அதோடன்றி, அவர்களை அணுகி ஏமாற வேண்டாமென்று தம் அன்பர்களை எச்சரித்தார். அவ்வகையில், இறுக்கம் இரத்தின முதலியாருக்கு 19-4-1866-ல் அடிகள் எழுதிய கடிதத்தில், போலிச் சந்நியாசி ஒருவரைப் பற்றிக் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

Koviloor Digital Library

"நாயக்கர் சாமி யென்பவர் தற்கால மிவ்வுலகிலிருக்கின்ற தான்தோன்றிச் சாமிகளிற் றலைநின்ற சாமி யென்க. என்னை? அறிய வேண்டுவனவற்றை அறிய முயலாமையோடு பித்த மயக்கான் மனஞ் சென்ற வழி சென்று பித்தச்சாமியென்னும் விசேடப் பேர் ஒன்று மிகையாகக் கொண்டிருக்கின்றனர். ஆகலிற் சூழும் வண்ணம் சூழ்க...மாருது விழித்திருக்க."

—பா. பி. ப. பு. 5; பக். 03.

பிறர்க்கேயன்றி, தம் நெஞ்சுக்கும் அறிவுரை கூறுவார் போல,

"மெய்யொழுக்கத் தார்போல் வெளிநின் றகத்தொழியாப்
பொய்யொழுக்கத் தார்பால் பொருந்தியுறேல்—"

என்று பாடுகின்ருர். வான்மறை தந்த வள்ளுவப் பெருந்தகையும்,

"நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்"

என்ற குறட்பாவில், பொய்த் துறவிகளின் இழிதகைமையை எடுத்தியம்பி மக்களை எச்சரிக்கின்ருர்.

ஞானமார்க்கத்தில் ஈடுபடுவோர் தக்க ஆசானை அணுகி, ஞான தீட்சை பெறுவது சமய மரபு. சமய பேதங்களெல்லாம் தொலைய வேண்டுமென்று விரும்பியதாலோ, வேறு எதனுலோ அடிகளார் எவரிடமும் தீட்சை பெற்ருரல்லர். பிள்ளைப் பருவத்தே, தாம் தில்லைப்பதி சென்று அங்கு நடராசப் பெருமான் கோயில் அம்பலத்தில் ஓர் மூலையில் நின்று அழுததைச் சொல்லுங்கால்,

"அந்நாளில் அடிச்சிறியேன் அம்பலவா யிலிலே
அருளைநினைந்து ஒருபுறத்தே அயர்ந்தழுது நின்றேன்
முன்னுளில் யான்புரிந்த பெருந்தவத்தால் எனக்கு
முகமலர்ந்து மொழிந்தஅருள் மொழியைநினைந்து..."

என்று பாடுகின்ருர். பின்னெரு நாள் தாம் தெருவில் விளையாடித் திரிந்த நாளில், இறைவன் வலிய வந்து ஞான தீட்சை தந்த செய்தியைத்,

"தெருவிற்கலந்து விளையாடுஞ் சிறியேன்தனக்கே மெய்ஞ்ஞான
சித்தியளித்த பெருங்கருணைத் தேவே......"

Koviloor Digital Library

என்னும் வரிகளிலே கூறுகின்ருர். ஆம்; சின்னஞ் சிறு வயதில், இறைவன் வலியவந்து அடிகளாரை ஆட்கொண்டதால், அவருக்கு தீட்சை தேவைப்படவில்லை. தீட்சை பெருதவர் பாடிய பாடல் என்பதாலும் அருட்பாவை 'மருட்பா' என்றனர், வைதிகச் சைவர்கள். தம் நெஞ்சுக்கு அறிவுரை கூறுகையில்,

"மண்பட்டு வெந்தீ மரம்பட் டிடக்கண்டும்
வெண்பட்(டு) உடுக்க விரைந்தனையே—பண்பட்ட
"ஐயா அரைநாண் அவிழும்"எனக் கேட்டுநின்றும்
மெய்யா பரணத்தின் மேவினையே—எய்யாமல்
"காதிற் கடுக்கன் கழட்டும்" எனக் கேட்டுநின்றும்
ஏதிற் பணியினிடத் தெய்தினையே......"

என்று பாடுகின்ருர் நெஞ்சைத் தம் வசப்படுத்தி, ஆடை—ஆபரண அலங்காரங்களை வெறுத்து, ஓராடையே இடுப்பில் உடுத்தியும் உடம்பில் போர்த்தும் நாட்டில் நடமாடினுர் இராமலிங்கர். சொல்வேறு செயல் வேறு என்ற இழிநிலை அடிகளாரிடம் இருக்கவில்லை.

இற்றை நாள் மடாதிபதிகளுள் சிலர், பட்டுடுத்தித் தங்கப் பணிபல பூண்டு, அழகிய பல்லக்கிலே பவனிவரக் காண்கின்ருேம். அந்தத் 'துறவி'களுக்கும் இராமலிங்க அடிகளாருக்கும் நெடுந்தூரம். அடிகளார் வெள்ளாடையால் தம் திருமேனி முழுவதையும் மறைத்து, கைகளைக் கட்டிய வண்ணம் காட்சியளிக்கிருரே, அதன் காரணமென்ன? இதோ, அவரே கூறுகின்ருர்:

"கையுற வீசி நடப்பதை நாணிக்
கைகளைக் கட்டியே நடந்தேன்
மெய்யுறக் காட்ட வெருவிவெண் துகிலால்
மெய்யெலாம் ஐயகோ மறைத்தேன் "

கைகளை வீசி நடப்பது காளைப் பருவத்தின் செருக்கு! அடக்கமே உருவான அடிகள் அதனை வெறுத்தார் மற்று, இளமைப் பருவத்தின் கட்டமைந்த அழகுத் திருமேனியை மறைத்து வைப்பதால், தம் கற்பைக் காத்துக்கொள்ள முடியுமென நம்பினுர் போலும்!

கற்புடைய பெண்ணைப் 'பதிவிரதை' என்கிருேம். அடிகளும் பதிவிரதர். அதாவது, நடராசரையே பதியாகக் கொண்

Koviloor Digital Library

டவர். அந்தக் கற்புக்கு இழுக்கு நேராமல் காக்கவே உடல் முழு வதையும் மூடி வாழ்ந்தார். பிறர் நெஞ்சுபுகாத பெருங்கற்பு, பெண்ணுக்கே யன்றி, ஆணுக்கும் தேவை. ஆணுக்குப் பெண் ணாசை உண்டென்றால், பெண்ணுக்கும் ஆணாசை உண்டென் கிறார் இராமலிங்கர்.

> "பெண்ணாசை பெரிதென்பார் விண்ணாளு மவர்க்கும்
> பெண்ணாசை பெரிதலகாண் ஆணாசை பெரிதே"

என்பது இராமலிங்கரின் பாடல். அந்த ஆணாசை பிடித்த பெண்களிடம் அகப்பட்டுத் தாம் பெற்ற அனுபவத்தால்தான் உடல் முழுவதையும் மூடி மறைத்தார் என்பதை,

> "வைகிய நகரில் எழிலுடை மடவார்
> வலிந்தெனைக் கைப்பிடித்து இழுத்தும்
> சைகைவே(று) உரைத்துஞ் சரசவார்த் தைகளால்
> தனித்தெனைப் பலவிசை அறிந்தும்
> பொய்கரைந்(து) ஆணை புகன்றுமேல் விழுந்தும்
> பொருள்முத லியகொடுத்து இசைத்தும்
> கைகலப்பு அறியேன் நடுங்கினேன் அவரைக்
> கடிந்ததும் இல்லைநீ அறிவாய்"

என்று அடிகளார் இறைவனிடம் முறையிட்டழுவதால் அறி கிறோம். காமவெறி பிடித்த அழகிய பெண்கள் சிலர், அடி களாருக்குச் சைகை காட்டி, அவரிடம் சரசவார்த்தைகள் பேசின ராம். அதற்கெல்லாம் இசையாத போது, கைப்பிடித்து இழுத் தும் மேல் விழுந்தும் ஆபாசமாக நடந்தனராம். அதனாலும் பயனில்லாதபோது, வலுவில் பொருள் கொடுத்தனராம். "என் இச்சைக்கு இசையாவிடில் உயிர் விடுவேன்' என்று ஆணையும் புகன்றனராம். அவ்வளவு செய்தும் 'கைகலப்பு அறி யேன்' என்கிறார். கருணை மனத்திராதலால், ஆணாசை பிடித்த பெண்களிடமிருந்து தாம் தப்பிச் சென்றதன்றி, அவர்களையும் கடிந்து பேசியதில்லை என்கிறார் அடிகளார். இந்த அனுபவத் தால் "மெய்யுறக் காட்ட வெருவி வெண் துகிலால், மெய்யெ லாம் ஐயகோ மறைத்தேன்" என்று அலறிக் கூறுகின்றார். துறவியர்க்கே யன்றி, இல்லறத்தார்க்கும் ஆண்கற்புத் தேவை. அதனாற்றான், "கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்" என்று பாடினார் பாரதியார். இராமலிங்கர், தமக்கு வாய்த்த பத்தினியையே வெறுத்த விரதர்.

Koviloon Digital Library

அடிகளார் ஆடையலங்காரத்தை வெறுத்தது, உலகியல் வாழ்விலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ளவேயென்பதற்கு மற்றொரு சான்றுமுண்டு. சபாபதி முதலியார் என்ற அன்பர், தம் வீட்டில் நடந்த திருமணம் ஒன்றிற்கு வருமாறு அடிகளாரை வற்புறுத்தியபோது, தம் நெஞ்சுக்குச் சொல்வார் போல,

"சோடில்லை மேல்வெள்ளைச் சொக்கா யிலைநல்ல சோமனில்லை
பாடில்லை கையிற் பணமில்லை தேகப் பருமனில்லை
வீடில்லை யாதொரு வீறுப்பு மில்லை விவாகமது
நாடில்லை நீநெஞ்ச மேயெந்த வாறினி நண்ணுவையே"

என்று பாடினார் இராமலிங்கர். 'போகாத இடந்தனிலே போக வேண்டாம்' என்னும் நீதி துறவிகளுக்கும் பொருந்துவது தானே!

சமய—சமுதாயத் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்களைக் காண இல்லறத்தாருடன் தொடர்பு கொண்டிருந்தாரெனினும், அவர்களுடன் இரண்டறக் கலந்துவிடவில்லை. அவர், "அகலாது அணுகாது தீக்காய்வார்" போன்று இருந்தார். அதுதானே துறவிக்கு அழகு! "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்முத்தர்மனமிருக்கும் மோனத்தே" என்ற சான்றோர் வாக்கை, வாழ்க்கை நெறியாய்க் கொண்டிருந்தார் இராமலிங்கர். இல்லறத்தாரோடு கலந்து பொதுவாழ்க்கையில் ஈடுபட்டுள்ள துறவிகள், வள்ளலாரைத் தங்கள் வழிகாட்டியாகக் கொள்வார்களாக!

இராமலிங்கர் தம் தவ வலிமையால் **'பிரணவதேகம்'** பெற்றிருந்தார். அதனை, **'ஒளி உடல்'** என்பர்.

தம் திருமேனியைப் படமாக்கவோ, சிலையாக்கவோ அடிகள் யாரையும் அனுமதிக்கவில்லை. அன்பர்கள் சிலர் கூடி, அடிகளாரைப் புகைப்படம் எடுக்க முயன்றனர். என்ன வியப்பு! எட்டுமுறை முயன்றும் அவரது திருமேனியைப் படமாக்க இயலவில்லையாம். இதனை அடிகளார் செய்த சித்தென்பதா? அவரது பொன் மேனியின் புதுமையென்பதா? பண்ணுருட்டியிலுள்ள மட்பதுமைத் தொழிலாளரொருவர், அடிகளார்பால் வைத்த பக்தியால், அவர் போன்று ஓர் உருவம் அமைத்து, அதற்குப் பல வகையான நிறங்கள் தந்து அழகுபடுத்தி, அவரிடமே காட்டினார் பாவம்! அடிகளாரின் பாராட்டுதலை எதிர்பார்த்தார் தொழிலாளி! அவரோ, அதனைத் தம் கையால் வாங்கி, "பொன்னனை மேனி மண்ணானதே" என்று கூறிக் கொண்டே கைநழுவ விட்டுவிட்டார். மண்மேனி உடைந்தது!

Koviloor Digital Library

வீண் ஆடம்பர வாழ்க்கை நடத்த வேண்டாமென்று இல்லறத்தார்க்குப் போதித்து வந்தார், அடிகளார். மக்களிடமுள்ள நகைப் பைத்தியத்தைக் கேலி செய்து அடிகளார் தெரிவித்த கருத்து வருமாறு:

> "காதில் இரண்டு பெரிய பொத்தல் செய்து வரவிடுத்தவர்—ஆணுக்குக் கடுக்கனிடுதலும் பெண்ணுக்கு மூக்குத்தி முதலியவை போடுதலும் தமக்குச் சம்மதமானால்—காதிலும் மூக்கிலும் அதற்கு வேண்டிய பொத்தல்களிட்டு வரவிட்டிருக்க மாட்டாரா" என்று விசாரித்துத் தெரிந்து கொள்ளுகிற பக்ஷத்தில், காதில் கடுக்கனிடவும் மூக்கு முதலியவற்றில் நகையிடவும் சம்மதம் வருமா?"
>
> -- பா. பி. ப. பு. 4: பக். 138-39.

தெய்வத்திடம் உண்மையாகவே பக்தி கொண்டோர், தம்மை அணிகலன்களால் அழகு செய்து கொள்வதை ஒரு குற்றமாகவே கருதுவர். எளிய வாழ்க்கையே இறை வழிபாடு.

'தெய்வம் தெளிமின்' என்றுரைத்த இளங்கோவடிகள், 'தெளிந்தோர்ப் பேணுமின்' என்றும் கூறினர். இராமலிங்கர், தெய்வம் தெளிந்த மெய்ஞ்ஞானியரைத் தேடியலைந்தார். அத்தகையோர்க்குத் தொண்டு செய்ய விழைந்தார். இதனை,

> **"எத்துணையும் பேதமுறா து எவ்வுயிரும்**
> **தம்முயிர்போல் எண்ணிஉள்ளே**
> **ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
> **யாவர்அவர் உளந்தான்சுத்த**
> **சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
> **இடம்எனநான் தெரிந்தேன்அந்த**
> **வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
> **சிந்தைமிக விழைந்ததாலோ"**

என்று அவர் பாடியதால் அறிகிறோம். இந்தப் பாடலிலே, சாதி—சமயம், இன்னபிற வேற்றுமைகள் பாராட்டாதவராய்த் தம்முயிர் போலப் பிற உயிர்களையும் கருதி அன்பு செலுத்துபவராய், உதட்டள வில்லாமல் உள்ளத்தால் ஒருமைப் பாட்டினை விரும்புகின்றவராய் உள்ள உத்தமர் எவரோ, அவருடைய திருவுள்ளமே இறைவன் நடம் புரியும் இடம் என்றும், அத்தகைய வித்தகச் சித்தர்களுக்குத் தொண்டு புரியத் தம் உள்ளம் விரும்புவதாகவும் கூறுகின்றார்.

Koviloor Digital Library

இராமலிங்கர் தேடிய அந்த வித்தகச் சித்தர், அவர் காலத்தி லேயே வடகிழக்கே கல்கத்தாவில் வாழ்ந்தார். அவர் பெயர் இராமகிருஷ்ணர். அடிகளார் காலத்திற்குப் பிறகு தோன்றிய காந்தி யண்ணல், உள்ளத்தால் பொய்யாதொழுகி, உலகத்தார் உள்ளத்துளெல்லாம் கோயில் கொண்ட உத்தம ஞானியாவார். அந்த ஞானியைப் பாடிய பாரதியார்,

"தன்னுயிர் போலே தனக்குஅழிவெண்ணும்
பிறனுயிர் தன்னையும் கணித்தல்
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்கள்என்று உணர்தல்
இன்னமெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்கு
இழிபடு போர், கொலை, தண்டம்
பின்னியே கிடக்கும் அரசியல் அதனில்
பிணைத்திடத் துணிந்தனை பெருமான்!"

என்று புகழ்ந்ததும் இதனாலன்றோ! இராமகிருஷ்ணரும் காந்தி யடிகளும் இராமலிங்கரைப் போன்றே இரண்டாடை—வெள் ளாடை யணிந்த துறவிகளாக வாழ்ந்து மறைந்தனர்.

இராமலிங்கர், ஆடையணிவதில் காட்டிய அடக்கத்தை, தம் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலுமே கடைப்பிடித்தார். பேசுதல், நடத்தல், நிற்றல், இருத்தல் ஆகிய ஒவ்வொன்றிலும் அடக்கத்தை வெளிப்படுத்தினார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்ற குறட்பாவின் விரிவுரை அடிகளாரின் வாழ்க்கை வரலாறு. உடம்பு தடிப்பதையும் வெறுத்தவராகி,

"தளைத்திடும் ஊன்உடம் பொருசிறிதுந்
தடித்திட நினைத்திலேன் இன்றும்
இளைத்திட விழைகின்றேன் இதுநான்றான்
இயம்பலன் நீஅறிந் ததுவே"

எனப் பாடுகின்றார் பெருமான். இளைத்த வுடம்பையும் வெள் ளாடையால் மறைத்து வாழ்ந்த பெருமான் உயர்ந்த ஆசனத் தில் அமரவும் விரும்பின ரல்லர். இதனை,

Koviloor Digital Library

"காட்டுயர் அணைமேல் இருக்கவும் பயந்தேன்
காலின்மேல் கால்வைக்கப் பயந்தேன்"

என்ற அருட்பாவால் அறிகிறோம். அவர் ஒவ்வொரு ஆன்மாவையும் பரம்பொருளின் அமிசமாகவே கருதினராதலால், உயர்ந்த ஆசனத்தில் தாம் அமர்ந்தால் அச்செயல் தாழ்ந்த இடத்திலுள்ள ஆன்மாக்களை அவமதித்ததாகி, தெய்வ நிந்தனை செய்த பாவம் நேருமோ என்று அஞ்சினர். இதே பொருளில் தான்—"பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி; அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்" என்றார் தாயுமானவர்.

அருட்பா தந்த அருளாளர், தம்மை ஓர் எளிய மனிதராகவே கருதினர். பிற மனிதரைவிட—ஏன், பிறிதொரு உயிரைவிடத் தாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் அவரிடத்தில் இருக்கவில்லை. பரம்பொருள் படைத்த உயிர்களனைத்தையும் சமமாகவே மதித்தார். அந்த உயர் குணத்திலிருந்து பிறந்ததே ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்ற அவரது புதிய கோஷம். ஆனால், சூழ்ந்திருந்த பக்தர் குழாத்தினர் அவரைத் தெய்வமாகவே கருதி வழிபட்டனர். அவரிடம் உபதேசம் பெற்ற சன்மார்க்கத் தொண்டர்களும் இதற்கு விலக்காக இல்லை. அது கண்டு உளம் நொந்தவராகி,

"சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்
என்மார்க்கத் தெனை நுமக்குள் ஒருவன்எனக் கொள்வீர்
எல்லாம்செய் வல்லநமது இறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போலே வேறுசில புகன்றே
புந்திமயக் கடையாதீர் பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்குஞ் சுத்தசிவ மொன்றே
தன்னாணை யென்னாணை சார்ந்தறிமின் ஈண்டே"

என்று பாடி, தம்மைத் தொழுவதைவிட்டு எல்லாம் வல்ல இறைவனைத் தொழுது சாகாவரம் பெறுமாறு அறிவுரை கூறினர். மனிதர்களைத் தெய்வமாகக் கருதி வழிபடும் மூடநம்பிக்கையை அவர் அடியோடு வெறுத்தார். அதுபற்றி அவர் 'மகோபதேசத்' தில் கூறுவதாவது:

"தெய்வத்தைத் தெரிந்துகொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம்

Koviloor Digital Library

சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினலே யல்லவா நம்மைச் சுற்றுகிருர்கள்'' !—என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன்.''

—பா. பி. ப. பு. 4; பக்கம் 138.

மனித உடல் பெற்றவரெல்லாம் மனிதப் பண்பு உடையவராகி விடுவதில்லை. மனிதப் பண்பு பெற்றவரே, மனிதர். அவரே தெய்வத்தின் திருவருளைப் பெறுவதற்குப் பாத்திரராவார். அடிகளாரைப் பார்த்த ஞானியொருவர், ''இதோ உத்தம மனிதன் போகிருன்'' என்றுராம். இந்த நிகழ்ச்சி பற்றிய கதை வருமாறு :

''நம் பெருமான் எப்பொழுதும் திருவொற்றியூருக்குக் கீழண்டை மாடவீதி வழியாகச் செல்லாது ஆங்குள்ள நெல்லிக்காய்ப் பண்டாரச் சந்து வழியாகச் செல்லுவது வழக்கம். ஒரு நாள் மட்டும் வழக்கத்திற்கு மாருகத் தேரடி வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார். அத்தெருவிலுள்ள திண்ணை யொன்றிலிருந்த நிர்வாண சந்நியாசி ஒருவர், அப் பக்கம் போகிறவர்களை யெல்லாம் ''கழுதை போகிறது,'' ''மாடு போகிறது'' என்றே சொல்லுவது வழக்கம். அச்சந்நியாசியும் அன்று தம் வழக்கத்திற்கு மாருக நம் பெருமான் போவதைக் கண்ட மாத்திரத்தில், ''இதோ உத்தம மனிதன் போகிருன்'' என்று உள்ளங் களி சிறக்க உரைத்தார். அத்துடன், தம் உடம்பினையும் கரங்கொண்டு மூடிக்கொண்டார். அதைக் கேட்ட நம் பெருமானுர் அவர் பக்கலில் சென்று ஏதோ சில உரைகளைக் கூற, அன்றிரவே அச்சந்நியாசி அவ்விடத்தை விட்டு அகன்றுர்.''

இது, சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கம் வெளியிட்டுள்ள அடிகளார் வரலாற்றில் காணப்படுவதாகும்.

இராமலிங்கர், அகமும் புறமும் மனிதப் பண்பு மணக்க வாழ்ந்தார். அதன் பின்னரே, அவர் எல்லாம் வல்ல சித்தராக முடிந்தது.

Koviloor Digital Library

சத்திய தருமச்சாலை

கருணையே மனித வடிவந்தாங்கி வந்தாற் போன்ற இராமலிங்க அடிகளார், தம் தொண்டர் குழாத்துடன், காலங்கொடுத்த அழைப்பை ஏற்றுக் கடலூரிலிருந்து வடலூரை அடைந்த பின், அங்கு நிரந்தரமாகத் தங்கி—சாதி—சமய பேதங்களற்ற சன்மார்க்க சமுதாயத்தைக் காணும் புதிய பணியைப்—புண்ணியத் தொண்டைத் துவக்கினார்.

அந்நாளில்—அதாவது, இற்றைக்குச் சுமார் 95 ஆண்டுகட்கு முன்பு—பாரதமெங்கும் ஆங்கிலேயர் ஆதிக்கம் செலுத்தினர். கருணையற்ற அவ்வன்னியர் ஆட்சி, நாட்டைச் சுரண்டி, மக்களைப் பட்டினிக் கொடுமையில் ஆழ்த்தியது. பாரதத்தில் எங்கு நோக்கினும் பஞ்சம்—பட்டினி—பிணி—சாவு! அல்லலுறும் மக்களுக்கு ஆறுதல் தரவும் மறுத்தது ஆட்சி!

அன்னிய ஆட்சியே யன்றி, நாட்டில் நல்வாழ்வு பெற்றிருந்த சாதி வெறி—மதவெறிக் கூட்டங்களும் அல்லலுற்ற மக்களுக்கு ஆதரவாக இல்லை. உயர்சாதிக் கொடுமையால், தாழ் சாதி மக்கள் தாங்குவாரற்றுத் தவித்தனர். சமூகத்தில் தலைமை பெற்றிருந்த புரோகிதவர்க்கம்—"மக்களுடைய பசிக்கு அவரவர் தலையெழுத்தே காரணம்" என்று "பஞ்சாங்கயிஸம்" பேசியது. நாட்டின் வறுமை நிலைகண்டு வருந்தினார் இராமலிங்கர். அடிகளின் தோற்றத்தை வருணித்த வேலாயுத முதலியார்—"முகத்தில், சதா சற்று விசனக்குறி காணப்பட்டிருந்தது" என்றாரே, விசனம் எதனால்? மக்கள் வறுமைகண்டு நெஞ்சம் வருந்தியதனால்தான். புதியதொரு சன்மார்க்க சமுதாயங் காண விரும்பிய அடிகளார், அதற்கான ஆரம்பப் பணி மக்களுடைய பட்டினியைப் போக்குவதேயென அறிந்தார். அதனால், வடலூர்ப் பகுதியில் நாள்தோறும் ஏழைகளுக்குச் சோறு போடும் "சத்திய தருமச்சாலை" யொன்றை நிறுவத் திட்டமிட்டார். அதற்காகத் தொண்ணூறு காணி நிலத்தை வடலூர் மக்கள் வழங்கினர். வேறு சிலர், கட்டிடம் கட்டச் சாமான்களும் பணமும் கொடுத்து உதவினர். ஆன்ம நேய ஒருமைப்பாடு காணும் துவக்கப் பணியாக 22-5-1867ல்

Koviloor Digital Library

சத்திய தருமச்சாலை கட்டிடத் திறப்பு விழாவும், அன்ன தானப் பணியின் துவக்க விழாவும் நடைபெற்றன.

அடிகளார், பத்தொன்பதாம் நூற்றுண்டில் ஏழைகளின்பசி தீர்க்கவந்த 'மணிமேகலை'யெனக் காட்சியளித்தார். சத்திய தரு மச்சாலை, அவர் கையிலிருந்த அட்சய பாத்திரமாக விளங்கியது. அத்துறையில் அவர் இந்நாளைய மதத் தலைவர்கள்—மடா திபதிகளுக்கேயன்றி, அரசியல் கட்சித் தலைவர்கள்—ஆட்சித் தலைவர்களுக்கும் ஒருண்மையை உணர்த்தியுள்ளார். அதாவது, மக்களிடையே ஒழுக்கம் வளர வேண்டுமானுல், தேசிய—சர்வ தேசிய ஒருமைப்பாடு ஓங்க வேண்டுமானுல் முதலில் பசிப்பிணி யிலிருந்து அவர்களை விடுவிக்க வேண்டும் என்பதாகும். உல கில் சமாதானம் நிலவவும் அது ஒன்றேமார்க்கம். அதனுற்றான், பிரபஞ்சம் முழுவதற்குமான ஆன்மநேய ஒருமைப்பாட்டினை வலியுறுத்திய அடிகளார், முதலில் பசி போக்கும் பணியில் ஈடு பட்டார் என அறிதல் வேண்டும்.

'பட்டினி' என்பது உடற் பிணியன்று; உயிர்ப் பிணி. அதனுற்றான், "உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே" என்று பாடினுர், புலவர் கூலவாணிகன் சாத்தனுர். ஆம் இராம லிங்கர், ஏழைமக்களுக்கு உணவு கொடுத்தாரென்பதினும் உயிர் கொடுத்தாரெனில் பொருந்தும். அதனுல், அவரை இனி வள்ள லார் என்றே அழைப்போம்.

வள்ளலார், துன்புறும் உயிர்களைக் கண்டபோதெல்லாம் தாமும் துன்புற்றுர். இதனை,

"மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்துஞ் செவியுறக் கேட்டும்
கணமுநான் சகித்திட மாட்டேன்"

என்று நம் வள்ளற் பெருமான் பாடிய வரிகளே வலியுறுத்தும்.

"பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்பது பழமொழி. அதுபோலப் பாரதத்தில் பட்டினிக் கொடுமை எவ்வளவுக் கெவ் வளவு அதிகரித்ததோ, அவ்வளவுக்கவ்வளவு பண்புகள் அழிந்தன. தேசபக்தி, தெய்வபக்தி, மதப்பற்று அனைத்தும் நாடோறும் நலிந்து வந்தன. அது காரணமாகத் தெய்வ நிந் தனை—புறமதத் தழுவல்—சுதேசப் பற்றற்றுப் பரதேச ஆட் சியை ஆதரித்தல் ஆகிய தீமைகள் மலிந்தன.

Koviloor Digital Library

அன்றிருந்த மடாதிபதிகள், மதாசாரியர்கள், சாதித்தலைவர்கள் ஆகியோர் இந்த உண்மையை உணராதவர்களாகவோ, உணர்ந்தும் மறந்தவர்களாகவோ இருந்தனர். இது இருபதாம் நூற்றுண்டில் தமிழகத்தின் விதி. இந்த விதிக்கும் விதி காண விழைந்தார் வள்ளலார்.

இராமலிங்க வள்ளலார், மனித சமுதாயத்திலே மகத்தானதொரு பொருளாதாரப் புரட்சி ஏற்பட வேண்டுமென விரும்பினுர். கம்பர், ஏழையும் பணக்காரருமில்லாத ஒரு சம தர்மச் சமுதாயத்தைக் கற்பனை செய்து, அதனைக் கோசல நாட்டில் கண்டவர்போல, "வண்மை இல்லையோர் வறுமை இன்மையால்" என்றும், "எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே இல்லாருமில்லை உடையார்களும் இல்லை" என்றும் பாடினுரே, அந்த அடிப்படையிலே புது உலகம் காண வள்ளலாரும் விரும்பினுர். அதற்கான முதற்பணியாக ஏழை மக்களுடைய பசி போக்கும் தொண்டில் ஈடுபட்டு, வடலூரில் சத்திய தருமச் சாலையைத் துவக்கினுர். "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை" என்று அடிகள் கொடுத்த கோஷத்திலே சாதி—சமய ஏற்றத் தாழ்வு ஒழிந்த தன்மையும் அடங்கி இருப்பதாகவே கொள்ள வேண்டும்.

"உள்ளலேன் உடையார் உண்ணவும் வறியார்
உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திடுந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ!
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்!'

என்னும் வரிகளிலே, மனித சமுதாயம் 'உடையார்—வறியார், பணக்காரர்—ஏழை' என்று பிளவுபட்டிருப்பதை நினைப்பூட்டி; அந்த வர்க்கப் பிரிவு காரணமாக வறுமையாளர் பசியால் வருந்துவதை எடுத்துக் காட்டி, இந்தக் கொடுமைகளகன்று,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்"

என்று பாடுகின்றுர்.

Koviloor Digital Library

இந்து மதமோ, வேறு எந்த மதமோ, வெள்ளப் பெருக்கென ஏழை மக்களின் எண்ணிக்கை பெருகி வருவதை ஏற்கவில்லை. பாவ—புண்ணியங்களில் நம்பிக்கை உடைய பண்டைச் சமயாசாரியர்கள்கூட ஏழை—பணக்காரர் வேற்றுமையைப் பாவ—புண்ணியங்களோடு பிணைத்துப் பேசவில்லை. பேசியிருப்பினும், அது தமிழர் வாழ்க்கை நெறிக்கு, வள்ளலாரின் சன்மார்க்க போதனைக்கு எதிரானதென்றே கொள்ள வேண்டும். ஏன் ? வறுமைக்கு வாழ்த்துக் கூறுவது ஆண்டவனையே அவமதிப்பதாகும்.

ஒருவர் இருந்துண்பதும் இன்னொருவர் வீடுதோறும் இரந்து திரிவதும் அவரவர் பாவ—புண்ணியங்களின் பலன்கள் என்ற பேச்சுப் புரோகித மதத்தின் மூச்சாகலாம். சைவ—வைணவ—சமண—பௌத்த நூல்களிலே இந்த அநீதி ஆதரிக்கப்படவில்லை.

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்; என் கடன் (உயிர்க்கெலாம்) பணி செய்து கிடப்பதே" என்று பாடிய அப்பர் பெருமான், "வறுமை, பாவத்தின் வடிவம்" என்ற கருத்தை ஏற்பாரா ?

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்று வள்ளுவர் பாடிய குறட்பா, வறுமையை வாழ்த்தவில்லை; அதற்குக்காரணமானவர் கடவுளாகவோ, மண்ணாளும் மன்னராகவோ இருந்தால், அவர்களைச் சபிக்கின்றது.

வள்ளுவருக்குப் பின் வந்த இளங்கோவடிகள்,

"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க........."

—சிலம்பு-5, 71–3.

என்ற வரிகளில், பசியற்ற—பிணியற்ற சோழ நாட்டையே வாழ்த்துவா ராயினர். இளங்கோ காலத்திலேயே வாழ்ந்த புலவர் கூலவாணிகன் சாத்தனர்,

"குடிப்பிறப்(பு) அழிக்கும், விழுப்பம் கொல்லும்,
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்,
நாண் அணி களையும், மாண்எழில் சிதைக்கும்,
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்—

Koviloor Digital Library

பசிப்பிணி என்னும் பாவி; அது தீர்த்தோர்
இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது''
—மணிமேகலை 11; 76-81.

என்றும்,

''ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்ரு மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை;
மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே''
—மணி. 11; 92-96.

என்றும் பாடியுள்ளார். இந்த வரிகளிலே பசியின் பயங்கரத் தன்மை வருணிக்கப்படுகின்றது; அதைத் தீர்க்க வேண்டிய தன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. பசி தீர்த்தோர் அடையும் புண்ணியப் பயன் விளக்கப் படுவதோடு, அவர்கள் புலவர் பெருமாஞல் வாழ்த்தவும் படுகின்றனர்.

இன்னும், ''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'' என்ற (மணி. 16 : 134) வாக்கால் உலகம் முழுவதிலுமிருந்து பசி ஒழிய வேண்டும் என்ற விருப்பம் வெளியிடப் படுகின்றது.

சங்க காலப் புலவர் பெருமாட்டியாகிய அறிவுக்கரசி ஔவையர்,

''......ஒருநாள் ஒருபொழுது ஒருவன்
ஊண்ஒழிதல் பார்க்கும் நேர்நிறை நில்லாது
என்னும் மன்னே''

என்றும்,

''ஐயம் இடுமின்! அறநெறியைக் கைப்பிடி மின்''

என்றும் பாடியுள்ள வரிகள், பசியை வெறுக்கும் தாய்க்குலத்தின் பண்பாட்டினைக் காட்டுகின்றன.

மாகாப்பியம் பாடிய கம்பர் பெருமான், ''யாதும் கொள்வாரிலாமையால், கொடுப்பார்களுமில்லை'' என்ற வரியிலே வறுமை யொழிந்த கோசல நாட்டைக் கற்பித்துக் காட்டுகின்ருர்.

அடிகளார் குறிக்கோள்

வள்ளலார் காலத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வறுமைக் கொடுமை வாழ்ந்து வந்தி

Koviloor Digital Library

ருக்கின்றது. ஆயினும், அதற்கு வாழ்த்துக் கூறும் மடமை வாழவில்லை. வள்ளலார் காலத்தில்—வறுமை, சமுதாயம் பெற்ற சாபமாகக் கருதப் பெற்றது. பட்டினி, பாவத்தின் பரிசாகவும்; பட்டினி கிடப்போன், பாவத்தின் சின்னமாகவும்—பாவியாகவும் கருதும் இழிநிலை இருந்தது. பட்டினி கிடக்கும் 'பாவி'க்கு உணவளிப்பவனும் பாவத்தில் பங்கு பெருகிறான் என்றுகூடப் பயமுறுத்தப்பட்டது. இந்தக் கொடுமை கண்டு உள்ளங் குமுறிய வள்ளலார், "இதனை நினைத்திடுந் தோறும் உள்ளம் எரிகின்றது; உடம்பும் எரிகின்றது!" என்று கூறினார்.

இத்தகைய ஒரு பயங்கரச் சூழ்நிலையில்தான் வள்ளலார் 'சத்திய தருமச் சாலை'யைத் துவக்கினார். வடலூரில் துவக்கிய அந்தப் பணி பாருலகெங்கணுமே பரவ வேண்டும் என்பது அடிகளாரின் விருப்பம். எந்த நேரத்திலும், எவர் வந்து கையேந்தினாலும், 'இல்லை' என்று சொல்லாது, வயிறாரப் புசிப்பதற்கு உணவு வழங்க வேண்டுமென்பது அடிகளாரின் குறிக்கோள்.

வள்ளலார் வரையும் சித்திரம்

அடிகளார் காலத்தில், பாரதம் ஆங்கிலேயருக்கு அடிமைப் பட்டுக் கிடந்தது. அடிமை கொண்ட சாதி, அடிமைப்பட்ட சாதியின் பசிகண்டு பதறவில்லை. பரங்கியர் வருமுன்பே, பசியோடு பாரதம் உறவு கொண்டிருந்த தென்றாலும், அவர்தம் திட்டமிட்ட சுரண்டலால், பசிக்கொடுமை அதிகரித்தது. அந்தக் கொடுமை மிக்க காலத்தை நமக்குக் காட்சிப்படுத்தும் கவிச் சித்திரம் இது :

"வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம்
வாடினேன்; பசியினால் இளைத்தே
வீடுதோ றிரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்;
நீடிய பிணியால் வருந்துகின் றோர்என்
நேர்உறக் கண்டுளம் துடித்தேன்
ஈடின்மா னிகளாய் ஏழைக ளாய்நெஞ்(சு)
இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்!"

இந்தப் பாடலிலே, வீடுதோறும் இரந்தும் பசியறாது அயர்ந்த வெற்றர்களைச் சித்திரம் தீட்டிக் காட்டுகின்றார். அவர் தம் உடம்பு மட்டுமா இளைத்தது? தொடர்ந்து பட்டினி கிடந்த காரணத்தால், நெஞ்சம் இளைத்து விட்டதாம். தொடர்ந்து

Koviloor Digital Library

வரும் பட்டினியாதலால், "நீடிய பிணி" என்கின்றூர் அடிகள். பிச்சை எடுப்போருள்ளேயும், பிறருழைப்பில் உண்ண விரும்பும் சோம்பேறிகளும் உண்டு. அடிகளார் நமக்குக் காட்டுவது அந்தச் சோம்பேறிகளை யன்று. ஈடிலாத் தன்மானம் படைத்தவர்களாக இருந்தும், ஏழைகளாகி விட்ட காரணத்தால் உழைக்கத் திறனிருந்தும் தொழிலற்றுப் பிழைப்புக்குப் பிச்சை எடுப்பவர்களையே காட்டுகின்ருர். இதனை, 'ஈடின் மானிகளாய்—ஏழைகளாய் நெஞ்சிளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்" என்னும் வரிகளிலே உணர்த்துகின்ருர். ஆம்; கருணை வள்ளலார் தம் கண்ணீரால் கவிதை தீட்டி இரக்கமுடையோரின் கண்ணீரை எல்லாம் சத்திய தருமச்சாலைக்குக் காணிக்கையாகப் பெறுகின்ருர்.

அணையாத அடுப்பு

இல்லந்தோறும் சென்று இருப்பதே இழிவு. அதைவிட இழிவு என்னவென்ருல், வீடுதோறும் பிச்சை கேட்டும், 'இல்லை' என்று சொல்வாரை யன்றி, இடுவாரைக் காணுத நிலையில் ஏழை மக்கள் ஆறுதலற்று அழுவதாகும். ஒரு நூற்ருண்டுக்கு முன்பு—அடிமைப்பட்ட பாரதத்தில்—அடிகளார் கண்ட வறுமைக் கொடுமை சுதந்தரம் பெற்ற பாரதத்திலும் ஒழிந்தபாடில்லையே!

அதனுற்ருன், தொண்ணூற்றைந்து ஆண்டுகட்கு முன்பு வள்ளலார் துவக்கிய அன்னதானப் பணி இன்றளவும் தொடர்ந்து நடைபெற்று வரவேண்டிய அவசியமிருக்கின்றது. 1867 ல் அன்னதானப் பணிக்கெனச் சமைக்கப்பட்ட அடுப்பில் வள்ளலார் மூட்டிய தீ, இன்றளவும் அணையாமல் எரிந்து வருவதாக—அணையவிடாமல் பாதுகாக்கப்பட்டு வருவதாகச்—சொல்லப்படுகின்றது. இந்த நிலை நமக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை. விரைவில் நாடெங்கும் வளங்கொழித்து, வீடுதோறும் வறுமை ஒழிந்து, சத்திய தருமச் சாலை அடுப்பில் வள்ளலார் மூட்டிய தீ அணைக்கப்படும் நாள் வரவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக!

வள்ளுவர், இளங்கோ, சாத்தனுர், ஔவையார், கம்பர் ஆகிய மகாகவிகளெல்லாரும் வறுமையைச் சாடிப் பாடினர். ஆனுல், வறுமை ஒழியத் திட்டமிட்டுப் பணிபுரிய அவர்கள் ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. சுதந்தர நாட்டில் சொந்த அரசில் வாழ்ந்தார்களாதலால், பசி போக்கப் பணியாற்றுவது பாராளும் மன்னனின் கடமை என்று கருதினுர்கள் போலும்.

Koviloor Digital Library

அடிமைக் குடிமகனுக வாழ்ந்த வள்ளலார், உண்டு களிப் போரின் உதவியைப் பெற்று உணவின்றித் தவிப்போரின் பசி தீர்க்க முன்வந்தார். ஆம்; தமக்கு ஒரு தலைமுறைக்குப் பிறகு, காந்தியடிகள் போதித்த தருமகர்த்தாப் பொதுவுடைமையைத் தம் காலத்தில் சாதித்துக் காட்ட முயன்றார் வள்ளலார். வட லூரில் அவர் துவக்கிய தருமச்சாலை, பட்டினி ஒழிப்புப்போரின் பாசறையாகும். வறுமைக்கு எதிராகப் போர் தொடுத்த முதல் துறவி வள்ளலாரே யாவார். மற்றத் துறவிகளெல்லாம், மடங்களிலே மறைந்து கிடந்தனர். மக்கள் மத்தியிலே நட மாடிய போதும், பட்டினி கிடப்போரைப் பார்த்து, "எல்லாம் அவன் செயல், அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று வாய் வேதாந்தம் பேசினர். அவர்கள் கருத்துப்படி பட்டினி யும் பரமனுடைய 'அருட் பிரசாத'மாகும்.

காந்தியடிகள் கருத்து

புரோகிதரை அணுகிப் பரிகாரம் கேட்டால், "நவக்கிரகங் களை ஒன்பது நாட்களுக்குச் சுற்றினுல், சனி தொலையும்; சந் தோஷம் பிறக்கும்" என்பார். தத்துவ வித்தகர்களை அணு கினுல், "பசியா? ஆன்மாவுக்கு ஏதப்பா பசி!" என்று ஞானுப தேசம் செய்வார்கள். இது, 19-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மதவாதிகள் நிலை. இத்தகைய மதவாதிகளைப் பார்த்துக் காந்தி யடிகள் கூறுகின்ருர்:

> "ஏழை மக்களின் கருத்தெல்லாம் தங்களுடைய கஷ் டத்தை எப்படி நிவாரணம் செய்வது என்பதிலேயே செல் லும். ஆத்ம உபதேசம் அவர்கள் உள்ளத்தைத் தொடாது. போதிய உணவின்றித் தவிக்கும் மக்களின் மனத்தை மற்ற விஷயங்களில் இழுக்கமுடியாது. என்ன சொன்னு லும் காதில் ஏருது. ஆனுல், தங்களுக்கு உணவு கொடுத் தவனைத் தெய்வம் என்று நினைப்பார்கள். வேறு கருத்துக் கள் பசியால் தவிப்பவர்களின் உள்ளத்தில் ஏருது."
>
> —'யங் இந்தியா'' 5-5-27.

> "ஏழைகளிடம் போய் வேதாந்தம் பேசுவது அவர்கள் மனத்தைப் புண்படுத்துவதாகும். பேசினுல், என்னையும் உங்களையும் கொடிய அரக்கர்களாகப் பாவிப்பார்கள். அவர்கள் அறிந்ததெல்லாம் கருணையற்ற கொடுங்கோல் தெய்வமே அல்லவா? கோபமும் பயங்கரமும் நிறைந்த தெய்வந்தான் அவர்கள் கண்டது. அவர்களிடம் நான் ஆண்டவனைப்பற்றி என்ன பேச முடியும்! பேச எனக்குத்

Koviloor Digital Library

துணிவு இல்லை. அந்த ஏழை மக்களின் உயிரற்ற கண்களைப் பார்க்கும்போது அவர்களிடம் ஆண்டவனைப் பற்றிப் பேச எனக்கு எப்படி மனம் வரும்? சோறுதானே அவர்களுக்குத் தெய்வம்?

"காலைப் பலகாரம் நன்றாக முடித்து, மத்தியானச் சாப்பாடு என்னவாக இருக்கலாம் என்று யோசனை செய்யும் நிலையில் இருக்கும் நாம், தெய்வத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம். ஒரு வேளைச் சோற்றுக்கே திண்டாடும் நிலையில் வாழும் மக்களிடம் நான் என்ன தெய்வ ஆராய்ச்சி செய்ய முடியும்? அவர்களுக்கு ஈசனுடைய அவதாரம் சோறும் சாறுமே."

-'யங் இந்தியா', 15-10-31.

வார்தா முனிவர் பிற்காலத்தில் தெரிவித்த இந்தக் கருத்தையே அவருக்கு வழிகாட்டியாக இருந்த வள்ளலாரும் கொண்டிருந்தார். "கடவுள் விளக்கமும் ஆன்ம விளக்கமும் பசிக் கொடுமையால் மறைபடுகின்றன" என்பது வள்ளலார் தெரிவித்த கருத்து.

ஜீவகாருண்யம்

ஜீவகாருண்யம் என்றால், ஊன் உணவை விலக்கிக் காய்கறி பதார்த்தங்களை உண்பது என்று மட்டுமே இன்று பொருள் கொள்ளப்படுகின்றது. வள்ளலார் கண்ட ஜீவகாருண்யம் இதை விடவும் விரிவானதாகும். அதனை 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்றே கூறுகின்றார் அடிகளார்.

1867 ல் வடலூரில் சத்திய தருமச்சாலை துவக்கிய நன்னாளில், தமது கருத்தில் உள்ள ஜீவகாருண்ய ஒழுக்கம் எதுவென்பதைத் தம் கரத்தாலே எழுதி மக்கள் அறியப் படித்துக் காட்டினார். அதிலே, தமது கருத்திலுள்ள ஜீவகாருண்யம் பற்றி அடிகள் தந்துள்ள விரிவான விளக்கத்தில் சில பகுதிகள் வருமாறு:

"பசியினால் வரும் துன்பத்தையும் கொலையினால் வரும் துன்பத்தையும் நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யத்திற்கு முக்கிய லட்சியம் என்று அறியவேண்டும். பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது, ஆகாரத்தால் அணைவிக்கிறதுதான் ஜீவகாருண்யம்."

"கடவுள் இயற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவதேகங்கள் என்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகும் தரு

Koviloor Digital Library

ணத்தில் ஆகாரம் கொடுத்து அவ்வாலயங்களை விளக்கம் செய்விப்பதே ஜீவகாருண்யம்.''

''தம் பசியினால் தூக்கம் பிடியாமல் துன்பப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம்பிடிக்க வைப்பதே ஜீவகாருண்யம் ''

''சீவகாருண்ய ஒழுக்கமில்லாமல், ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள், கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திர மாகார்கள். அவர்களை ஆன்ம விளக்க முள்ளவர்களாகவும் நினைக்கப்படாது. ஜீவகாருண்ய மில்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோசன மில்லாத மாயாஜாலச் செய்கைகளே யாகுமென்று அறியவேண்டும்.''

''சமுசாரிகள் விவாகம் முதலிய விசேஷ காரியங்களில், பந்தலை அலங்கரித்தும், அவ்விடத்தில் வேறு வேறு சடங்குகளைச் செய்வித்தும், ஆடல்—பாடல்—வரிசை—ஊர்வலம் முதலிய விநோதங்களையும் அப்பவர்க்கம், சித்திரான்னம் முதலிய பெருமைப்பாடுகளையும் நடத்தியும் எக்களிப்பில் அழுந்தியிருக்கும் தருணத்தில் பசித்த ஏழையர் முகத்தைப் பார்க்கவும் சம்மதிக்கவில்லை''

''தமது குடும்பச் செலவைக் கூடியமட்டும் சிக்கனம் செய்து, ஏழைகளின் பசியை நீக்குதல் வேண்டும்.''

-'ஜீவகாருண்ய ஒழுக்கம்'.

பொருளுதவி கோரல்

பிறரிடம் பொருள் கேட்க விரும்பாத வள்ளலார், ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை இயக்க வளர்ச்சி கருதி, அதன் சின்னமாகிய சத்திய தருமச் சாலைக்குப் பொருளுதவி கோரித் தமிழ் மக்களுக்குச் சமரச வேத சன்மார்க்க சங்கத்தின் பெயரால் வேண்டுகோள் விடுத்தார். அதன் ஒரு பகுதி வருமாறு :

''ஜீவகாருண்யத்தின் முக்கிய லக்ஷியமாவதெது வெனில்: எந்த வகையாலும் ஆதாரமில்லாத ஏழைகளுக்குண்டாகின்ற பசியென்கிற பெரிய ஆபத்தை நிவர்த்தி செய்கின்றதே முக்கிய லக்ஷியமென்றறிய வேண்டும்.''

''ஆகலில் அந்த ஜீவகாருண்ய வொழுக்கத்தை நடத்தும் பொருட்டு கூடலூர் ஜில்லா கூடலூர்த் தாலுகாவைச்

Koviloor Digital Library

சார்ந்த வடலூரென்கின்ற பார்வதிபுரத்தில் சமரச வேத தருமச்சாலை யென்றொரு தருமச்சாலை யேற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது பலர் சகாயத்தாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவ தயையுடைய புண்ணியர்கள் தங்கள் தங்களாற் கூடியவரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தைப் பாகஞ்செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை."

-பா. பி. ப. பு. 5. பக். 97.

சமரச வேத சன்மார்க்க சங்கம் 1865 லேயே—அடிகளார் வடலூர் வருவதற்கு முன்பே துவக்கப்பட்டு விட்டதென்பதும், அதன் சார்பில்தான் சத்திய தருமச்சாலை துவக்கப்பட்டதென்பதும் நினைவிற்கொள்ளத் தக்கனவாகும். சன்மார்க்கிகளாக விரும்புவோருக்குச் சாத்திரப் பயிற்சி தரும் பொருட்டு, சத்திய தருமச்சாலை துவங்கியதை யடுத்துச் **'சன்மார்க்க போதினி'** என்ற பெயரில் சாத்திரப் பாடசாலை யொன்றும் துவக்கப்பட்டது. தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் அதில் போதனை யளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. உபய கலாநிதிப் பெரும்புலவர் தொழுவூர் வேதாயுத முதலியார் முதலிய அறிஞர்களால் சாத்திரச்சாலை நடத்தப் பெற்றதாக அறிகிறோம்.

சன்மார்க்கப் பிரசாரத்தின் பொருட்டுச் **'சன்மார்க்க விவேக விருத்தி'** என்ற பெயரில் பத்திரிகை யொன்றும் நடத்த முடிவெடுத்து, அதற்காகும் செலவிற்கு மாதந்தோறும் பொருள் திரட்ட ஏற்பாடானது. அது மாதப் பத்திரிகையாக இருக்கலாமெனயூகிக்க வேண்டியிருக்கிறது.

பத்திரிகைக்குப் பொருளுதவி கோரி, முதன்முதலில் வெளியிடப்பட்ட பிரசுரம் வருமாறு :

சன்மார்க்க விவேக விருத்தி விளம்பரம்

உலகில் வழங்கும் பிறப்புகளுள் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பைப் பெற்றுக்கொண்ட நாமனைவரும் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பொருள்களின் அநுபவங்களைக் காலமுள்ள போதே அறிந்து அனுபவித்தல் வேண்டும். அங்ஙனமறிந்து அனுபவிப்பதற்குச் சன்மார்க்க விவேக விருத்தியே சாதனமாதலின், அதனை அடைதற்குத் தக்க நன்முயற்சிக்கோர்முன்னிலையாகச் சன்மார்க்க விவேக விருத்தி யென்னும் பத்திரிகை யொன்று

Koviloor Digital Library

வழங்குவிக்கு நிமித்தம், இதனடியில் தனித்தனி நம்மா லியன்ற வளவில் மாதந்தோறும் பொருளுதவி செய்வ தாகக் கையொப்பமிட்டு மேற்குறித்த வண்ணம் நமக்கும் பிறர்க்கும் பயன்படும்படி வழங்குவிப்போமாக.

இங்ஙனம்,

சன்மார்க்க சங்கத்தார்.

-பா. பி. ப. பு. 5: பக். 94.

இந்த விண்ணப்பத்தின்படி பொருளுதவக் கையொப்பமிட் டுள்ள பலருள், முதல் பெயராக அடிகளார் பெயர் காணப்படு கின்றது. அவர்தாம் 'பெருந் தொகை'க்குக் கையொப்பமிட் டுள்ளார். அதாவது, **ஒரு ரூபாய் !**

சத்திய தருமச்சாலை துவங்கிய நான்காண்டுகள் கழித்து, 11—1—1872ல் சமரச வேத பாடசாலை துவக்கப் பெற்றது. அதுபற்றி வெளியான அறிக்கை வருமாறு :

"இ:து சமரச வேத பாடசாலை.

"இதில் வாசிக்க விரும்புகிறவர்கள் பதினைந்து வய திற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொதுநோக்கம், திரிகரணவடக்கம் முதலிய நற்குண வொழுக்கங்களையும், உண்மையுரைத்தல், இன் சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரிய வர்களாகி யிருத்தல் வேண்டும்.

"இதில் வாசிக்கின்றவர்களுக்கு சிலகாலம் வாசித்து, ஒருவாறு வாசிப்பிற் பயிற்சி நேரிட்டால், அந்தப் பயிற் சிக்கும் அவரவர்கள் குடும்பத்திற்கும் தக்கபடி மாதந் தோறும் பொருளுதவி செய்யப்படும். காலை மாலை சுமார் ஐந்தைந்து நாழிகை வாசித்தல் வேண்டும். திருச்சிற்றம் பலம்."

-பா. பி. ப. பு. 5. பக். 99.

இப்பிரசுரத்தில் காணப்படும் விஷயங்களிலிருந்து இந்தச் சமரச வேத பாடசாலையில் பயிற்சி பெறுவோரையே முழுநேர ஊழியர்களாக்கி, நாடு முழுவதும் அவர்களைக்கொண்டு ஆன்ம நேய ஒருமைப் பாட்டுக் கொள்கையைப் பரப்ப அடிகள் கருதி யிருந்தாரென்று அறியக் கிடக்கின்றது.

வடலூர் சாத்திரப் பாடசாலையிலும் வேத பாடசாலையிலும் தரப்பட்ட ஆன்மிகக் கல்வியானது, பழைய வேத சாத்திரங்

Koviloor Digital Library

களிலுள்ள அடிப்படைத் தருமங்களைத் தழுவியும், பிற்காலத்தில் அவற்றிடையே கலந்த பொய்களைப் புறக்கணித்தும், புதியதொரு சன்மார்க்க சமுதாயத்திற்கான அறிவாகுமென்பதை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். அவ்வகையில், அடிகளார் ஒரே இரவில் எழுதிய 1596 வரிகளைக் கொண்ட **'அருட்பெருஞ்ஜோதி அகவல்'** என்னும் நூல் சன்மார்க்க சங்கத்தாரின் 'பொதுமறை'யெனக் கொள்ளப்பட்டது.

வடலூர் பெருவெளிக்கு இரண்டுமைல் தூரத்தில் உள்ளதும்—1870 முதற்கொண்டே தாம் வசித்து வந்ததுமான **மேட்டுக் குப்பம்** என்னும் குக்கிராமத்தில், **'சித்திவளாகம்'** என்ற பெயரில் ஓலைக்குடிசை இல்லமொன்றை 1873-ல் அமைத்து, அதையே தம்முடைய நிரந்தர இருப்பிடமாகக் கொண்டார் இராமலிங்கர். சமரச சன்மார்க்க சமுதாயம் காணும் பேரியக்கத்தின் பணிகளனைத்தையும் சித்திவளாகத்தி லிருந்தவண்ணமே கவனித்து வந்தார்.

அடிகளார் நிகழ்த்திய சமயப் புரட்சிக்குப் பிரதான கருவிகளாய் விளங்கிய நிறுவனங்கள் நான்கு. அவை, (1) சமரச சன்மார்க்க சங்கம், (2) சத்திய தருமச்சாலை, (3) சத்திய ஞான சபை, (4) சித்திவளாகம் ஆகியனவாம்.

அடிகளார் வலியுறுத்திய நெறிகள் நான்கு. அவை, (1) ஏமசித்தி, (2) சாகாக் கல்வி, (3) தத்துவ நிக்கிரகஞ் செய்தல், (4) கடவுள் நிலையறிந்து அம்மயமாதல்.

அடிகளார் வலியுறுத்திய ஒழுக்கங்களும் நான்காகும். அவை, (1) இந்திரிய ஒழுக்கம், (2) ஜீவ ஒழுக்கம், (3) கரண ஒழுக்கம், (4) ஆன்ம ஒழுக்கம்.

இந்த முந்நான்கு நிறுவனங்களும், நெறிகளும், ஒழுக்கங்களும் ஒன்றுபட்டதே "ஆன்மநேய ஒருமைப்பாடு" என்னும் பேரியக்கம்.

Koviloor Digital Library

சமரச சுத்த சன்மார்க்கம்

அருட் சோதி இராமலிங்க வள்ளலார், மனித சமுதாயத்தில் வாழையடி வாழையெனத் தோன்றி வந்த ஞானியர்களுள்ளே ஒருவர். இதனை, "வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினில் யானொருவ னன்றோ," என்று அவர் பாடியதால் அறியலாம். சைவ சமயாசாரியர்களுள் தலை சிறந்தவரான ஞானசம்பந்தரை மானசீகக் குருவாகக்கொண்டார். அடுத்த நிலையில் மாணிக்க வாசகரையும் கொண்டு அவர் இயற்றி யருளிய திருவாசக மென்னும் திருமறையைத் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டார். சைவ சமயத்தின் சாத்திர பொக்கிஷமாகக் கருதப்படும் திருமூலர் திருமந்திரம் என்னும் நூலிலே எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்தார். இதனை,

> "சாத்திரங்களிற் சிறந்தது திருமூலர் திருமந்திரம். மொத்தம் எண்ணாயிரம்."
>
> —பா. பி. ப. பு. 4: பக். 42.

> "இந்த மார்க்க உண்மை தெரிய வேண்டுமாகில் திருமந்திரத்தைக் கவனிக்கில் விளங்கும்."
>
> —பா. பி. ப. பு. 4: பக். 112.

என்னும் வள்ளலாரின் வாசகங்கள் அறிவுறுத்தும். "சமரச சுத்த சன்மார்க்கத்தின் உண்மைகளை விளக்கும் சாத்திரம் திருமூலர் திருமந்திரம்" என்கிறார் அடிகள். இது சைவப் பெருமக்கள் சிந்திக்கத் தக்கதாகும்.

வேத விரோதியா?

அடிகளார், அந்தணர்களால் போற்றப்படும் வேதத்தை வரம்பாக வைத்துக் கொள்ளவில்லை; ஆயினும், நஞ்சாகவும் நினைக்க வில்லை. சாகாக் கலையைத் தாம் வேதத்தின் மூலமே பயின்றதாக,

> "வேதங்கள் முக்கியம் சாகாத கல்வியைச் சொல்லியிருக்கின்றன. தேவர் குறளில் முதல் அதிகாரத்தில்

Koviloor Digital Library

சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலம் தெரிந்து கொள்ளலாம்."
-பா. பி. ப. பு. 4: பக். 64.

என்ற வரிகளில் சூசகமாகச் சொல்லுகின்றார். மாணிக்கவாசகர்,

"—வேதங்கள்
ஐயா எனஓங்கி
ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!"

என்று பாடினார். ஆம்; இறைவன், வேதங்களுக்குள்ளே அடைபட்டுக் கிடக்கவில்லை யாதலால், வேதங்களால் அறியப்படாதவன் என்பது ஆளுடைய அடிகளாரின் கொள்கை. இதையே,

"ஆகம முடிமேல் ஆரண முடிமேல்
ஆகநின் றோங்கிய அருட்பெருஞ் சோதி!"

என்னும் வரிகளில் தமது கொள்கையாகவும் ஏற்கின்றார் வள்ளற் பெருமான்.

வேதத்தின் பெருமை

இந்து மத வேதாகமங்களை வேதியர் கூறும் விளக்கத்துடனே, அல்லது நடைமுறையில் அவை பயன்படுத்தப்பட்டு வரும் நியதிப்படியோ அடிகளார் அங்கீகரிக்கவில்லை. ஆயினும் அவற்றிலுள்ள சிறந்த நெறிகளை அவர் புறக்கணித்தாரில்லை. இதனை,

"இந்து வேதாகமங்களில் மாத்திரந்தான் ஏமசித்தி, ஞான சித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கிறது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாவாக் கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படி இருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதன் ஏகதேசங்களென்பது உண்மை"
—பா. பி. ப. பு. 4: பக். 68.

சில பாடல்களிலே, வேத நூற்களை வெறுத்தவர் போலப் பாடியிருக்கின்றார். அதற்குக் காரணம் வேறு. அதனைப் பிறிதோரிடத்தில் ஆராய்வோம். பொதுவாக, இறையருள் ஒன்றையே தாங்கி நிற்கும் பூர்வ வேதக் கருத்துக்களை வள்ளலார் வெறுத்தவரல்லர் என்பதனை மட்டும் இங்கு நினைவில் வைப்போம்.

Koviloor Digital Library

ஒரே தெய்வம்

இந்தத் தெளிவோடு—பழைய சான்ருேர்கள்—சமயாசாரியார்கள் வலியுறுத்திய அறங்களைத் தழுவி, அறிவுரைகளை ஏற்றுத் தம் காலத்தின் சூழ்நிலைக் கேற்ப சில கொள்கைகளைச் சீர்திருத்த முறையில் வள்ளலார் வகுத்தார்; பழைய கொள்கைகளுக்குத் தெளிவுரைகள் தந்தார். அவற்றைச் சிறிது விளக்கமாகவே அறிவோம்.

''தெய்வம் பலபல சொல்லும்'' மூடத்தனத்தை அடிகளார் வெறுத்தார். சிவம் என்னும் ஒன்றையே தெய்வமெனக்கொண்டார். அவரது சிவம், நாம—ரூப பேதங்களால் சுட்டப்படும் ஆண் தெய்வமோ, பெண் தெய்வமோ அன்று. பின் என்ன? அதனை வள்ளலாரே கூறக் கேட்போம்!

> ''சிவம் என்பதற்குப் பொருள் ஸச்சிதானந்தம். ஸச்சிதானந்தம் என்பது ஸத்து-சித்து-ஆனந்தம். சி-சத்து, வ-சித்து, ம்-ஆனந்தம். சி-எல்லாம் உள்ளதாய் விளங்குவது. வ-எல்லாம் விளங்குவதாய் உள்ளது. ம்-இந்த இரண்டினுலும் நிரம்பிய இன்பம்.''

—பா. பி. ப. பு. 4: பக். 62.

> ''சிவ என்பதற்குப் பொருள், அனுதியாய் மலமில்லாத சர்வ வல்லமை யுடையது. 'சி' என்பதற்குப் பொருள் அனுதியாய் மலமில்லாதது. 'வ' என்பதற்குப் பொருள், சர்வ வல்லமையுடையது.''

—பா. பி. ப. பு. 4: பக். 19.

அடிகளாருடைய விளக்கம் எல்லா மதங்களுடைய அடிப்படை உண்மைகளுக்கும் மாறுபா டில்லாதது. அதோடன்றி, வேதங்களின் உட்கருத்தாயும் இருப்பது.

பெயர் பல!

வள்ளலார் எதைச் சிவம் என்கிருரோ, அது பிற மதத்தவரும் ஏற்கத்தக்கதே. அவரவர் விரும்பும் பெயரால் அதனை அழைக்கலாம். அவரே,

''அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன்என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன் பரப்பிரம்மம் என்பேன்

Koviloor Digital Library

துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை யாட்டே''
என்று 'அனுபவ மாலை'யில் பாடுகின்றார்.

''பல தேவராக வணங்காமல் ஒரே மூர்த்தியாகத் தெய்வத்தை உபாஸனை செய்வதற்கும் இந்து மதம் இடம் கொடுக்கிறது. இவ்வித உபாஸனை சித்தத்தை எளிதிலே ஒருமுகப்படுத்தும். பக்திக்கும் இதுவே சுலபமான வழி.''
என்கிறார், மகாகவி பாரதியார். மற்றும், சைவ சமயாசாரியார் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசர்,

''வாது செய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவர் எனப்படு வார்க்கெலாம்
மாதே வன்அலால் தேவர்மற் றில்லையே''

என்று பாடியுள்ளார்.

வள்ளலார் மாயையிலிருந்து விடுபடாத காலத்தில், கணபதி—முருகன்—கலைமகள்—திருமகள்—திருமால் எனப் பல தெய்வங்களைப் பாடி வழிபட்ட துண்டாயினும், அப்போதும் அவர் நெஞ்சிலிருந்தது 'சிவம்' ஒன்றேயாகும். இதனை,

''மாயையாற் கலங்கி வருந்திய போதும்
வள்ளல்உன் தன்னையே மதித்துன்
சாயையாப் பிறரைப் பார்த்ததே அல்லால்
தலைவவே றெண்ணிய துண்டோ !''

என்னும் வரிகளில் வெளிப்படுத்துகின்றார்.

புதிய சித்தாந்தம்

இந்த ஒரே தெய்வக் கோட்பாட்டில் அந்தத் தெய்வத்தின் அருளைப் பெறுவதற்கான வழி வகைகளையும் வள்ளலார் தொகுத்துத் தந்துள்ளார். அந்தத் தொகுப்புக்கு அவர் தந்த பெயர் 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்பதாகும். இதனை, ஏனைய மதங்களோடு இன்னொரு மதம் என்று எண்ணுவதற் கில்லை. மதங்களற்ற ஒரு மானிட சமுதாயத்தைப் படைப்பதற்கான இயக்கமென்றே கொள்ள வேண்டும். அதனாற்றான், 'சன் மார்க்கம்' என்னும் புனித வாசகமே போதுமானதாக விருக்க,

Koviloor Digital Library

'சமரச சுத்த' என்னும் அடைமொழியையும் சேர்த்தார் திருவருட் பிரகாச வள்ளலார்.

வள்ளலார் கண்ட சமரச சன்மார்க்கப் பாதையிலே செல்லுவோர் அடையும்—ஏற்கனவே சென்றோர் அடைந்த—நன்மைகள் பலப்பல. அவற்றுள் தலையாயது 'மரணமிலாப் பெருவாழ்வு'. இது, அடிகளாரின் அனுபவமென்கின்றது, அவருடைய வரலாறு. அவரேயும் கூறுகின்றார்,

> "சன்மார்க்கத்தின் முடிபு சாகாத கல்வியைத் தெரிவிப்பதே யன்றி வேறில்லை. சாகிறவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சன்மார்க்கி."

> "என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் தானே"
>
> - பா. பி. ப. பு. 4: பக்: 63.

என்றும் அவரே பாடியுள்ளார்.

வள்ளலார், மனிதன் சாவாமல் வாழமுடியும் என்பதிலே உறுதி கொண்டிருந்தார். வையத்தில் வாழும் மாந்தர்களைப் பார்த்து,

> "மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
> புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்"

என்று சத்தியம் செய்தும் கூறுகின்றார்.

> "தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை (ஒரு மணி நேரம்) தூங்கப் பழக்கம் செய்வானானால் அவன் ஆயிரம் வருடம் ஜீவித்திருப்பான். எப்போதும் மறப்பில்லாமல் ஆசானுடைய திருவடியை ஞாபகம் செய்து கொண்டிருப்பதே சாவாத கல்விக்கு ஏதுவாகும்."
>
> - பா. பி. ப. பு. 4: பக். 67.

புருஷார்த்தங்கள்

மனிதனுக்கு—அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு புருஷார்த்தங்களைக் கூறினர், பெரியோர். நான்காவதாக உள்ள வீடுபேற்றினைப் பெற விரும்பும் சன்மார்க்கிகளுக்குத் தனியாக நான்கு புருஷார்த்தங்களைத் தெளிவுபடுத்தினர் வள்ளலார்.

Koviloor Digital Library

"நாம் பெறும் புருஷார்த்தம் நான்கு. அவையாவன: ஏமசித்தி, சாகாக் கல்வி, கடவுள் நிலையறிந்து அம்மய மாதல், தத்துவ நிக்கிரகம்."

"இவை பெறுவதற்கு ஒழுக்கம் யாதெனில் (அது) நான்கு வகைப்படும்: 1. இந்திரிய வொழுக்கம், 2. கரண வொழுக்கம், 3. ஜீவவொழுக்கம், 4. ஆன்மவொழுக்கம்,"

—பா. பி. ப. பு. 4: பக். 49.

சாவாக் கலையைப் பயில விரும்பும் சன்மார்க்கப் பாதையில் யாத்திரை செய்யும் ஒவ்வொருவரும் சிந்திக்கத்தக்க சில செய்திகளையும் கூறியுள்ளார், வள்ளலார்.

"யாரிடத்தில் தயவு அதிகப்பட்டிருக்கின்றதோ, அவரிடத்தில் கடவுளிருக்கின்றார். அந்தத் தயையில்லாத வர்களிடத்துக் கடவுள் இருந்து மில்லாமையாய் இருக் கிறார். கடவுளிடத்தில் சதா அன்பும் பக்தியும் செலுத்த வேண்டும்."

- பா. பி. ப. பு. 4: பக். 65.

"பிரும்ம ஞானத்தால் என்று மழியாத ஸ்வர்ண தேகம் (பொன் மேனி) பெற்றவன் சாகமாட்டான் என்ப தோடு அவன் கடவுள் மயமாகிறான்."

- பா. பி. ப. பு. 4: பக். 64.

"எந்த ஜீவர்களிடத்தில் தயாவிருத்தியாகிய அருள் விசேஷம் விளங்குகின்றதோ, அந்த ஜீவர்களிடத்தில் கடவுள் விளக்கம் விசேஷமாயிருக்கும். மற்றவர்களிடத் தில் காரியப்படாது. ஆதலால், மல ஜல சங்கல்ப காலங் களில் தவிர மற்றக் காலங்களில்,கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்தவேண்டும். ஆதலால், பக்தியென்பது, மனநெகிழ்ச்சி; மனவுருக்கம். அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி; ஆன்மவுருக்கம்.

"எல்லாவுயிர்களிடத்தும் கடவுள்வியாபித்திருப்பதை அறிதலே ஈசுவர பக்தியாம்."

—பா. பி.ப. பு. 4: பக். 21.

இதே கருத்தைக் காந்தியடிகளும் வலியுறுத்துகின்றார்:

"ஈசன் மேலே எங்கேயோ வானுலகத்தில் இருக்கிறான் என்றாவது அல்லது கீழே எங்கேயோ பாதாளத்தில் இருக்

Koviloor Digital Library

கிருன் என்ருவது சொல்லுவது மடமை. நாம் அறியும் ஒவ்வொரு உயிரிலும் அவன் இருக்கிருன்."

- 'சத்திய சோதனை'யில்.

சாதி—சமயமில்லே!

வள்ளலார் கண்ட சமரச சுத்த சன்மார்க்கத்தில் சாதி—சமய பேதங்களுக்குச் சிறிதுகூட இடமில்லே. ஆனுல் ஆதியில் அவை தோன்றியதற்கான நியாயங்களே வள்ளலார் உணர்ந்திருக்கிருர். பிற்காலப் போக்கிலே உயிர்க ளனைத்தையும் ஒரு சமமாகக் கருதி அவற்றிடையே கருணை செலுத்தவொட்டாமல் சாதி—சமயப் பிரிவுகள் தடைகளாக இருந்து வருகின்றன. அதனுல், சன்மார்க்கிகள் சாதி—சமயப் பிரிவுகளுக்கு விலக்கானவர்களாக வாழ வேண்டுமென்று விதி வகுத்தார்.

"தத்துவ வொழுக்கம்பற்றிச் சமயங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தொழிலொழுக்கம் பற்றிச் சாதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையா யிருப்பன சமய ஏற்பாடு, சாதி ஏற்பாடு, முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள்.

"ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சிவ சன்மார்க்க சத்தியஞான ஆசாரத்தை வழங்கிப் பொது நோக்கம் வந்தால் மேல்படி காருண்யம் விருத்தியாகிக் கடவுளருளேப் பெற்று, அனந்த சித்தி முத்திகளேப் பெறக்கூடுமே யல்லாது, இல்லாவிடில் கூடாது."

—பா. பி. ப., பு. 4; பக். 29.

மோட்ச—நரகமெது?

சன்மார்க்கிக்கு மோட்ச—நரகங்களில் நம்பிக்கையுண்டு. ஆனுல், இறந்த பிறகு அடையக் கூடிய நிலேகள் அவை என்று எண்ணுவ தில்லே. இதோ அடிகள் விளக்கந் தருகிருர், கேட்போம்:

"மனித தேகமே சுவர்க்கம் நரகம் இருக்கிற இடம். பிரம பதம், விட்டுணு பதம், ருத்திர பதம், மயேசுவர பதம், சதாசிவ பதம் முதலிய பதங்களின் இடம் இந்த மனித தேகத்தில் கண்டம் முதல் உச்சி வரையில்.

"இந்தப் பதங்களுக்குச் சுவர்க்கமென்று பெயர்.

Koviloor Digital Library

"நரகம், நரகாதிகளுக்கு இடம் உந்தி முதல் குதபரியந்தம், இயம னிருக்குமிடம் குதத்திற்கு இடது பாகம்."

—பா. பி. ப. பு. 4: பக். 65.

மகாகவி பாரதியாரும் இந்தக் கருத்தையே வள்ளலாரின் வாரிசாக நின்று வலியுறுத்தினர்.

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலா மென்றே எண்ணி யிருப்பர்
பித்தமனிதர் அவர்சொலும் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்"

தேவர்கள் யார்?

சன்மார்க்கியின் பார்வையிலே மானிடரில் சிறந்த தேவர்கள் காட்சி யளிக்கின்றனர், ஆனால், அந்தத் தேவர்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக நமக்குச் சொல்லப்பட்ட புராணங்களில் வரும் தேவர்க ளல்லர். பின் யார்? இதோ, மானுடனாகப் பிறந்து, தேவனாக வாழ்ந்து, தெய்வமாகி மறையும் பேறு பெற்ற வள்ளலார் கூறுகின்றார்:

"அறிவினது உயர்ச்சியினாலும் தாழ்ச்சியினாலும் தேவரென்றும் மனிதரென்றும் சொல்லப்பட்டதே தவிர, வேறே எந்தக் காரணத்தினாலு மல்ல. ஆனால், தயை விசேஷமிருக்க வேண்டியதென்பது அறிவு உயர்ச்சியில் அடங்கி விட்டது. தேவர்களுக்கு 4 கை என்பது ஈகை பற்றிய தயை விசேஷத்தைக் குறித்துச் சொன்னதே தவிர, வேறல்ல. ஆகையால், தயவே வடிவமாக இருக்கிறவர்களே புண்ணிய தேகிகள். அவர்களே தேவர்களு மாவர்."

—பா. பி. ப. பு. 4, பக். 67.

வள்ளலார் தரும் இந்த விளக்கத்தால், 'தேவர்கள் என்போர் மனிதர்கள் செல்ல முடியாத வானுலகத்தில் வாழ்பவர்களல்லர் என்பதும், மனிதர்களும் இந்த மண்ணுலகிலேயே தேவர்களாக முடியுமென்பதும் பெற்றும். இதையே,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்னும் குறளிலே வள்ளலாருக்கு முன்பே வலியுறுத்திச் சென்றிருக்கிறார், வள்ளுவப் பெருந்தகையார். தெய்வம் என்னும் சொல் இங்குத் தேவர் எனப் பொருள் தருவதாகும்.

Koviloor Digital Library

ஏழேழு பிறவிகள்!

ஆன்மாவுக்கு ஏழுபிறவிகள் உண்டென்பர் மதவாதிகள். வள்ளுவரும்,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்னும் குறளிலே இதனை உறுதிப்படுத்துகிறார். ஏழு பிறவிகளுள் ஒவ்வொரு பிறவியிலும் ஏழேழு பிறப்புகள் உண்டென்பதை

"எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமம் துடைத்தவர் நட்பு"

என்னும் குறளிலே தெளிவாகக் கூறுகின்றார். ஆனால், அந்த ஏழு பிறவிகள்—ஏழேழு பிறவிகள் எப்போது, எப்படி, எந்த முறைப்படி ஏற்படுமென்பதை வள்ளுவர் விளக்கவில்லை; வள்ளலார் விளக்குகின்றார்.

"இந்தத் தேகத்திற்குப் பிறப்பு 7 உண்டு. அதுபோல் எழு வகைப் பிறப்பிலும் ஒவ்வொரு பிறப்பிற்கு எவ்வேழு பிறப்புண்டு. அந்த எவ்வேழு பிறப்பும் ஒவ்வொன்றில் அனந்தமாய் விரிந்த யோனி பேதங்களின் விரிவெல்லாம் தோன்றி மேலேறி மறுபிறவி உண்டாம். ஒவ்வொரு பிறவியும் எந்தக் கல்பத்தில் நஷ்டமடைகின்றதோ அந்தக் கல்பகாலம் வரையில் தோற்றமில்லாமல் மண்ணில் மறைந்திருந்து, மறு கல்பத்தில் தோன்றி, இவ்விதமாகவே மற்ற யோனிகளிடத்திலும் பிறந்து, முடிவில் இத்தேகங் கிடைத்தது. இத்தேகத்திற்கும் ஏழு பிறவியுண்டு. யாதெனில்:

"கர்ப்பத்தில் ஐந்து மாதம் வரையில் குழவியாயிருப்பது ஒன்று, அவயவாதி உற்பத்திக் காலம் ஒன்று, பிண்டம் வெளிப்பட்ட காலம் ஒன்று, குழந்தைப் பருவம் ஒன்று, பாலப் பருவம் ஒன்று, குமாரப் பருவம் ஒன்று, விருத்தப் பருவம் ஒன்று—ஆகப் பிறவி 7. இவ்வாறே தாவர முதலியவற்றிற்கும் உள. மேலும், ஸ்தூலப் பிறப்பு 7, சூட்சுமப் பிறப்பு 7, காரணப் பிறப்பு 7, ஆதலால், மேல் குறித்த ஸ்தூலப் பிறப்பு, சூட்சுமப் பிறப்பு யாதெனில்: ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி; ஜாக்கிரத்தில் சொப்பனம், ஜாக்கிரத்தில் சுழுத்தி; சொப்பனத்தில் சொப்பனம், சொப்பனத்தில் சுழுத்தி—ஆகப் பிறப்பு 7. காரணப் பிறப்பு—மனோ சங்கல்பங்களெல்லாம் பிறவி; ஆதலால்

Koviloor Digital Library

மேற்குறித்த பிறவிக்குக் காரணம் நினைப்பு—மறைப்பு. அது அற்ருல் பிறவியில்லை. எப்படியறுமெனில்; பரோபகாரம், சத்விசாரம்—இவ்விரண்டாலும் மேற்குறித்தது நீங்கிச் சிவானுபவம் பெறலாம்.''

—பா. பி. ப. பு. 4, பக். 33-34.

இதனுல், தத்துவார்த்த ரீதியில் ஆன்மாவுக்கு ஏழேழு வகைப் பிறவிகள் உண்டென்பதும், பரோபகாரம்—சத்விசாரம் வாயிலாக நினைப்பும், மறைப்பு மற்ற நிலையைப் பெற்ருல், பிறவிப் பிணியிலிருந்து ஆன்மா விடுபட முடியுமென்பதும் விளக்கமாகின்றன.

கற்றைச் சடையில்லை! காஷாயமுமில்லை!

சன்மார்க்கி, துவராடை யணிந்த சந்நியாசியாக மாட்டார். சன்மார்க்கிகளுக்குத் துவராடை தேவையில்லை என்பதே வள்ளலாரின் கொள்கை. அன்ஞர் ஒரு சன்மார்க்கிக்குத் தேவையான ஆரம்ப வொழுக்கங்களைப் பெற்ற பிறகே சமரச சுத்த சன்மார்க்கப் பாதையில் யாத்திரை தொடங்குகின்றன ராதலால், அவர்கள் சந்நியாசிக் குரிய ஒழுக்கத்தினராயினும், காஷாய மணிந்து சந்நியாசி யாகவேண்டிய அவசியமில்லை.

சமரசத்தின் சின்னமான—வெற்றிக்கு அடையாளமான—வெள்ளாடையே உடுப்ப ரென்பது வள்ளலார் வகுத்த விதி. மனப்பக்குவ மின்றித் துறவுக் கோலம் கொள்ளத் துணிந்தோர், புலன்களுடன் போரிட்டு அவற்றை வெல்லும் வரையிலேனும் துவராடை அணியக் காரணமிருக்கிறது.

புராண மறுப்பில்லை; பொருளில் வேறுபாடு!

சன்மார்க்கிக்ள் புராணங்களை நெருப்பிட்டுக் கொளுத்த நினைப்பதில்லை. அது தத்துவ ஞானமற்ற துன்மார்க்கிகளின் தொழில். மற்று, தத்துவ விளக்கமின்றிக் கற்பனைகளையே உண்மையென நம்பும் அறியாமை அல்லது மயக்கமும் சன்மார்க்கிக்கு உடன்பாடன்று. ஆம்; துன்மார்க்கிக்கும் மயக்கவாதிக்கும் நடுவே நிற்கின்றனர் சன்மார்க்கிகள். சன்மார்க்கியின் கருத்திலே புராணத்திற்குரிய தத்துவ விளக்கம் என்ன? இதோ, இராமலிங்கச் சித்தர் பேசுகின்ருர்:

''பெரிய புராணத்தில் குறித்த 63 நாயன்மார்களும் மற்ற நாயன்மார்களும் தத்துவங்களேயொழிய வேறில்லை.அதை

Koviloor Digital Library

அதை விசாரித்து அனுஷ்டித்தால், அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும்.

"இதுபோல சைவத்தில் சொல்லுகின்ற சௌராதி சண்டை பரியந்தமும் தத்துவமே யாம். சைவ புராணம், விஷ்ணு புராணம் முதலிய யாவற்றின் உண்மையும் தத்துவ சம்மாரங்களே. சூரபத்மன் (யுத்தம்) முதலிய யுத்தங்களும் தத்துவ சம்மாரங்களே.

"திருப்பாற் கடல் கடைந்து அமுதபானம் தேவர்கள் செய்யும்பொருட்டு விஷத்தை ருத்திரர் உட்கொண்டார் என்பதற்குப் பொருள்: திருப்பாற் கடலென்பது தேங்காய், அமுத மென்பது அதன் ஜலம். தேங்காயின் பாலில் உள்ள எண்ணெயே விஷம்; மேற்படி எண்ணெயாகிய விஷத்தைப் போக்குவது முப்பூவாகிய ருத்திரன் ஆதலால், தேங்காய்ப்பாலிலுள்ள விஷமாகிய எண்ணெயை முப்பூவால் போக்குவது ருத்திரன் விஷம் சாப்பிட்டது."

"குண்டோதரனுக்கு அன்னமிட்டார் என்பதற்குப் பொருள்: குண்டோதரம் (?) என்பது துத்தநாகக் குடாக்கு ஓதனம் என்பது அன்னம்; தரன் (?) என்பது பசியில்லாதவன். மேற்படி நாகத்தைச் சுண்ணஞ் செய்து பசியில்லாதவனுக்கு அளிக்க விசேஷப் பசியுண்டாகும்."

—பா. பி. ப. பு. 4; பக். 23-24.

இப்படியே, புராண—இதிகாசக் கதைகள் ஒவ்வொன்றுக்கும் தத்துவ விளக்கம் தந்திருக்கிறார் வள்ளலார்.

முத்திக்கு முதற்படி

சன்மார்க்கி பெறுகின்ற ஒரே இலாபம், மரணமிலாப் பெருவாழ்வு—அதாவது, செத்துப் பிறவாத பேரின்ப முத்தி நிலை. இதனை அடைவதற்கு யோகம், தவம் முதலிய கடினமான முயற்சிகள் தேவையில்லை என்கிறார்.

"சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக் கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாம். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும் ஆதலால் காலந் தாழ்த்தாது எல்லா வுயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளவேண்டும். இதுவே சாதனம்.

—பா. பி. ப. பு. 4; பக். 112.

Koviloor Digital Library

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினாலல்லது வேறு வகையால் அடைவது அரிது. அவ்வன்பு ஜீவ காருண்யத்தாலல்லது வேறு வகையால் வாராது. அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாமல் நடத்தலே ஜீவ காருண்ணியம். இதுதான் சித்திபெறுவதற்கு முதற்படியாக விருக்கின்றது."

—பா. பி. ப. பு. 4; பக். 62.

உலகெலாம் வாழ...

சமரச சுத்த சன்மார்க்கி யானவன், இறையருளை நாடி சர்வ சதாகாலமும் வழிபடுகின்றான். அவன் வழிபடுவது, மத வழிப்பட்ட பக்தர்களைப் போன்று, தன்னலங் கருதி அல்லது குடும்ப நலன் கருதியன்று. தான், குடும்பம், இனம், மதம், நாடு என்னும் யாவற்றையும் கடந்து உலகெலாம் நல்வாழ்வு வாழும் பொருட்டே இறைவனைப் பிரார்த்திக்கின்றான். இதனை விளக்கும் கருத்தையும், கவிதையையும் வள்ளலாரே கூறக் கேட்போம் :

"ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல. இந்த உலகமெலாம வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் அவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின்றன. பிரார்த்தனை செய்யவேண்டுமாகில் இப்படித்தான் செய்ய வேண்டும்.

"பாதி இரவில் எழுந்தருளிப்
பாவி யேனை எழுப்பிஅருட்
சோதி அளித்தென் உள்ளகத்தே
சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதிநடஞ்செய் பேரின்ப
நிதிநான்பெற்ற நெடும்பேற்றை
ஓதி முடியாது என்போல்இவ்
வுலகம் பெறுதல் வேண்டுவனே."

என்பதே என் பிரார்த்தனை யாகும்."

- பா. பி. ப. பு. 4; பக். 112.

பிரார்த்தித்தால், ஓதாதுணரலாம் !

ஒரு சன்மார்க்கி பெறவேண்டிய கலையறிவும் அருளறிவும் அளவிட்டுச் சொல்ல முடியாதவை. அவ்வளவையும் பெற்றால்

Koviloor Digital Library

மட்டுமே மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதும், எத்துணையும் பேதமுறாது எவ்வுயிர்க்கும் தொண்டு செய்வதும் சாத்திய மாகும். ஆனால், அந்தக் கலையறிவை—அருளறிவை எளிதிற் பெற இயலுமா? "இயலும்—இயலாது" என்று இரட்டுற மொழிகிறார் இராமலிங்கர்.

"பத்து ஆள்சுமை, ஒரு வண்டிப் பாரம். நானூறு வண்டிச்சுமை ஒரு நூல் வண்டிப் பாரம். நூல் வண்டி ஆயிரம் கொண்ட நூல்களை ஒரு ஜன்மத்தில் ஒருவன் அதி தீவிர ஜீவ முயற்சியால் படிக்கச் சிறிய உபாசனைச் சகாயத்தால் முடியும். அப்படிப்பட்டவன் ஆயிரம் ஜென்மம் எடுத்துப் படிக்கும் கலையறிவை ஒருவன் அருள் முன்னிடமாகச் சுத்த சிவநோக்கத்தால் அறியத் தொடங்கினால், ஒரு கணத்தில் படித்துக் கொள்ளலாம், இது சத்தியம்."

—பா. பி. ப. பு. 4: பக். 113.

இதன்படி, பிரார்த்தனையின் பலத்தால், கலையறிவையும்—அருளறிவையும் வெகு எளிதில் பெற இயலுமென்கிறார், ஓதாதுணர்ந்த ஞானியார்.

யோகம் வேண்டா

சுத்த சன்மார்க்கி யாவதற்கு முக்கிய சாதனம் பிரார்த்தனை—அதாவது, தியானம் ஆகும்.

பிரார்த்தனையில் வேண்டுவது எது, வேண்டாதது எது? வேண்டியதிலும் எச்சரிக்கையாக இருப்பது எப்படி?—என்பவற்றை யெல்லாம் சில வரிகளிலே விளக்குகின்றார் வள்ளலார்.

"ஓம் சிவாயநம என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட் சக்தி, பொருட்சக்தி, கிரியா சக்தி, யோக சக்தி, ஞான சக்தி மயமாக இருப்பதாகப் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும்.

"யோகம் செய்தல் வேண்டுவதில்லை; அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். சதா சிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை; மூடம் உண்டாகும். உண்மை."

—பா. பி. ப. பு. 4, பக். 114.

இறையை ஏதேனுமொரு உருவமாக மனத்தில் பாவித்துத் தியானிப்பது ஒருவகை வழிபாடு. இதனை, ஆரிய சமாஜிகள்—

Koviloor Digital Library

பிரம சமாஜிகள் போன்று சன்மார்க்கிகள் முழுமூச்சுடன் எதிர்க்கவில்லை என்பதனை வள்ளலார் வாக்கால் அறிவோம்:

> "கடவுள் ஆன்ம வியாபகமாகிய மனித தேகத்தில் காரியப்படுவது உத்தமமாக இருக்க, சிலாவிக்கிரக பூத தாரு முதலியவைகளில் (கடவுளை) வெளிப்படுத்திக்கொள்வது மந்த ஞாயம்."
>
> —பா. பி. ப. பு. 4; பக். 87.

ஆம்; விக்கிரக வழிபாட்டைச் சாதாரண மக்கள் விஷயத்தில் ஒரு "மந்த ஞாய"மாக மட்டுமே சன்மார்க்கம் அங்கீகரிக்கின்றது.

> "தியானஞ் செய்யவேண்டுமானால், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமா யிருக்கப் படாது. உருவமாக இருக்க வேண்டும், அருவமாகத் தியானிக்கப்படாது. பின், உருவங் கரைந்து அருவமாகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில், பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்."
>
> -பா. பி. ப. பு. 4: பக். 114.

முதலில், முடிவில்...

இதனால், பூரண சன்மார்க்கி யாவதற்கு முன்புள்ள நிலையில், துவைத நெறிப்படி ஒரு உருவத்தை மனத்தில் பாவித்து தியானிப்பதை ஏற்றுப் பின்னர், அத்துவைத நெறிப்படி உருவமற்ற ஒன்றைத் தியானிப்பதன் அவசியத்தை வற்புறுத்துகின்றது சன்மார்க்கம். இது வேத நெறிக்கு விரோதமானதன்று.

சன்மார்க்கம் என்பது சமய உலகில் வழக்கிலிருக்கும் சொல்லாயினும், வள்ளலார் தந்துள்ள "சமரச சுத்த" என்ற அடைமொழியோடும், அவர் தரும் விளக்கங்களோடும் அது முன் எப்போதும் வழங்கப்பட்டதில்லை. ஆம்; சன்மார்க்கம் என்பதனை, ஒரு மாபெரும் சீர்திருத்த இயக்கத்தின் மந்திர மொழியாகச் செய்தவர் நம் வள்ளலாரே யாவார். இதனை,

> "இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரியவொட்டாது, அசுத்த மாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்த மாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம்

Koviloor Digital Library

இருந்தால், அனுபவித்தறியாத அனுபவமும், கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம.

"கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத் தருணமே. ஆதலால், இத்தருணம் இக் காலமே சன்மார்க்கக் காலம்."

—பா. பி. ப. பு. 4; பக். 140-141.

தாயுமானவர் யார்?

வள்ளலார், சன்மார்க்கிகள் தொன்றுதொட்டே தோன்றி வந்துள்ளனர் என்பதனை ஏற்கிறார். ஏற்று, சன்மார்க்கிகளை—சமயமத சன்மார்க்கிகள் என்றும், சமயமத பேதங்களை வெறுக்கும் சுத்த சன்மார்க்கிகள் என்றும் இருவகையாகப் பிரிக்கின்றார். சமயமத சன்மார்க்கிகள் இறையருளில் இரண்டறக் கலத்தல் சாத்தியமில்லை யென்றும், சமயமத பேதங் கடந்த சன்மார்க்கிகட்கே அது சாத்திய மென்றும் கூறுகின்றார்.

"சமயமத சன்மார்க்கிகளில் தாயுமான சுவாமிகளும் இன்னும் அநேக பெரியார்களும் சுத்தப் பரப்பிரமத்தினிடத்தில் இரண்டறக் கலந்து விட்டதாக முறையிடுவது வாஸ்தவமா அவாஸ்தவமாவென்றால், அவாஸ்தவம். சுத்த சன்மார்க்கம் ஒன்றுக்கே சாத்தியம் கைகூடும்; என்றும் சாகாத நிலையைப் பெற்றுச் சர்வ சித்தி வல்லபமும் பெறக் கூடும். மற்றச் சமயமத மார்க்கங்களெல்லாம் சுத்த சன்மார்க்கத்துக்குச் செல்லக் கீழ்ப்படிக ளாதலால், அவற்றில் ஐக்கிய மென்பதேயில்லை.

"தாயுமானவர் முதலானவர்கள் சுத்த சன்மார்க்கிகள் அல்லர்; மத சன்மார்க்கிகள் என்று ஒருவாறு சொல்லலாம். இதில் நித்திய தேகம் கிடையாது. இது சாதக மார்க்கமே யன்றிச் சாத்தியமல்ல. நாளைச் சுத்த சன்மார்க்கம் வழங்கும் போது இவர்கள் யாவரும் உயிர்பெற்று மீள வருவார்கள். முன்னிருந்த அளவைக் காட்டிலும் விசேஷ ஞானத்தோடு சுத்த சன்மார்க்கத்துக் குரியவர்களாய் வருவார்கள்; சாத்தியர்களாய் இரண்டறக் கலப்பார்கள்."

—பா. பி. ப. பு. 4; பக். 91.

சமரச வாதி

தாயுமானவர், ஒரு மதம் இன்னொரு மதத்தைப் பகைப்பதை வெறுத்தார்; சித்தாந்த—வேதாந்த தத்துவங்களிடையே சமரசங்காண விழைந்தார். ஆனல் அவர் வடலூர் வள்ள

Koviloor Digital Library

லாரைப்போன்று சமயங்க ளற்ற ஒரு சன்மார்க்க சமுதாயத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்க வில்லை. சுருங்கச் சொன்னால், அகச் சமயங்களுக்கும் புறச் சமயங்களுக்கும் இடையே இருந்த வேற்றுமையை அகற்ற அவர் முன்வர வில்லை. குறிப்பாக, சைவ சமயத்தைத் தழுவியவராகவே இருந்து, சித்தாந்த—வேதாந்தத் தத்துவங்களிடையே சமரசங் காணப் பாடினார். அதனால், அவரைச் சமயமத சன்மார்க்கியாகவே கருதினார் இராமலிங்கர். இது, உள்ளதைச் சொன்னதாகும். ஆனால், மதவழிப்பட்ட சன்மார்க்கிகள் பிரம்மத்தினிடத்தில் இரண்டறக் கலக்க முடியாதென்று அடிகள் கூறியிருப்பது ஆழ்ந்த மதப்பற்றுடையவர்களின சிந்தனைக்குரியதாகும். சமயமத சன்மார்க்கிகளுள் த்வைதிகளானோர்க்கு "இரண்டறக் கலக்கும்" பிரச்சினை—அவர்கள் சிந்தாந்தப்படி—எழவில்லை. பொதுவாக, தாயுமானவரிடத்தில் அளவற்ற பற்றும் பக்தியும் உடையவர் அடிகளார். அவருடைய அறிவுரைகளைத் தம் பக்தர்களுக்கு எழுதிய கடிதங்களிலேயும், உபதேச மொழிகளிலேயும், அருட்பாக்களிலேயும் எடுத்தாண்டுள்ளார் வள்ளலார்.

மூன்று உடல்கள்

ஒருவன் சாதாரண மனிதனாயிருந்து பூரண சன்மார்க்கியாவதுவரை மூன்று உடல் பெறுகிறான் என்கிறார் இராமலிங்கர்.

ஒருவன், எல்லா உயிர்களையும் சமமாகக் கருதி, அவற்றிடையே மாறாத அன்பு செலுத்தி, ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தால், அவன் **அன்புடல்** பெறுகிறான்.

பின், பக்தியாலும் மாறாத தியானத்தாலும் அவர் உள்ளத்தில் இறைவன் தங்கும் நிலைபெற்ற போது, முன்பு பெற்ற அன்புடல் **அருளுடலாக** மாறுகின்றது.

அதற்குப்பின், மரணமிலாப் பெருவாழ்வைப் பெறுங்கால் அருளுடல் பேரின்ப முத்திபிற் கலந்த **இன்புடலாகின்றது**. இதனை, ஸ்வர்ணதேகம் (பொன்மேனி) என்றும் கூறுகிறார் வள்ளலார். இத்தகைய பூரண சன்மார்க்கியாக மாணிக்க வாசகரைக் கருதிபவர் போல,

"மன்புருவ நடுமுதலா மனம்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வார் எல்லாரும் ஏமாக்க

Koviloor Digital Library

அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில்வாத வூர்இறையே''

என்று வாதவூர் சன்மார்க்கியாரை வடலூர்ச் சன்மார்க்கியார் பாடுகின்றார். 'வாதவூர் இறையே' என்றதால் மணிவாசகர் பூரண சன்மார்க்கிக்குரிய தெய்வநிலை பெற்றார் என்பது புலனாகும். திருவருட்பாவில் 'பற்றறுத்தல்' என்ற பகுதியில்,

''மன்செய்து கொண்சன் மார்க்கத்தில் இங்கே
வான்செய்து கொண்டது நான்செய்து கொண்டேன்
முன்செய்து கொண்டதும் இங்ஙனங் கண்டீர்
மூவகை யாம்உடல் ஆதியை நுமது
பொன்செய்து கொண்ட பொதுவினில் ஆடும்
பொன்னடி காணப் பொருந்திக் கொடுத்தேன்
என்செய்து கொண்டாலுஞ் செய்துகொள் கிற்பீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந் தந்தீர்!''

என்னும் பாடலிலும் பூரண சன்மார்க்கிபெறும் மூவகையுடலையும், அவற்றுள், மூன்றாவதான பொன்னுடலையும்—அதாவது ஒளியுடலையும் குறிப்பிடுகின்றார்.

சான்றாக, 'மஹோபதேசம்' என்னும் பகுதியில் இறைவனது திருவருட் பெருமையைப் பேசுமிடத்து,

''...இவ்வண்ணம் சாதனம் முதிர்ந்தால், முடிவான இன்பானுவம் பெறுவதற்குத் தடையில்லை 'சந்ததமும் வேதமொழி யாதொன்றுபற்றின் அதுதான் வந்து முற்றும்' என்னும் பிரமாணத்தால் உணர்க.''

—பா. பி. ப. பு. 4: பக். 140.

என்கிறார். இதில் வரும் பிரமாணம், 'கருணாகரக் கடவுள்' என்ற தலைப்பில் தாயுமானவர் பாடியுள்ள ஒரு பாடலின் முதலிரண்டு வரிகளாகும்.

எனவே, தாம் கொண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கை காரணமாக, தாயுமானவரைப்பற்றி வள்ளலார் செய்துள்ள விமர்சனம், அந்த ஞானியை எவ்விதத்துவம் குறைத்து மதிப்பிட்டதாகாது. அவரை உவமை காட்டி, அவரது காலத்துச் சமய நிலையை விமர்சிப்பதாகவே கொள்ள வேண்டும். வள்ளலாருக்கு முன்பே, சமய சமரச உணர்வுக்கு வித்திட்ட பெருமை தாயுமானவரையே சாரும். வள்ளலாரின்

Koviloor Digital Library

வாரிசாக வாழ்ந்து மறைந்த மகாகவி பாரதியார் தாயுமான வரைப்பற்றிக் கூறுவதாவது:

"தாயுமானவரைப் போன்ற ஞானி ஒருவர் இங்கிலாந்திலே இருந்திருப்பாரானால், அவரைப்பற்றி அறியாத பாடசாலை மாணாக்கன் இருக்கமாட்டான். அவரது இனிய இசை நிரம்பிய அமிருத கவிதைகளைக் கற்றேனும், அவரது சரித்திரம் முதலியவற்றைக் கேட்டேனும் அறியாத ஆயிரக்கணக்கான மூடர்கள் தம்மைக் கல்விமான்களென்றும், பட்டதாரிகளென்றும் கூறிக்கொண்டு திரிகிறார்கள்."

- 'பாரதி புதையல்'ல்.

பாரதியாரின் இந்தக் கருத்து வள்ளலார் உள்ளத்திற்கும் பொருந்துவதே.

சமரச சுத்த சன்மார்க்கத்தில் ஆண்—பெண் என்ற பால் வேற்றுமைவழி ஏற்றத் தாழ்வோ, இழிவு—சிறப்போ கருதச் சிறிதும் இடமில்லை. ஆண்—பெண் சமத்துவமே சுத்த சன் மார்க்கத்தின் குறிக்கோள். ஆண்மையிலே பெண்மையும், பெண்மையிலே ஆண்மையும் கலந்திருப்பதாகக் கூறுகின்றார் அடிகள். மற்று, ஆண்—பெண் பால் வேற்றுமை உடலைப் பொறுத்ததேயன்றி, ஆன்மாவைப் பொறுத்ததன்று. இதனை இராமலிங்க அடிகளாரே கூறக் கேட்போம்:

"ஆணுக்குள் பெண்ணும் பெண்ணுக்குள் ஆணும் இருக்கும்விதம் எவ்வாறெனில்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரகிருதி, ஆன்மாவென்னும் 7-ம் கூடி, சுக்கில சுரோணித சம்பந்த சப்த தாதுவாய், சிருஷ்டிக்குக் காரணமாயின. ஆதலால் ஆண்பாகம் சேராது பெண்ணுருவப்படாது, பெண்பாகம் சேராது ஆணுருவப்படாது. மேலும் ரூப பேதத்தைப் பெண்ணாண் என்பது அறியாமை."

—பா. பி. ப. பு. 4; பக். 32.

"பெண்—ஆண் என்னும் நாமபேதம் வருவானேன்? அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் என்க. ஆன்ம அறிவு ஆண், ஜீவ அறிவு பெண். ஆன்ம அறிவு என்பதும் ஜீவ அறிவு என்பதும் புத்தி அறிவும் மன அறிவுமாம்."

—பா. பி. ப. பு. 4: பக். 80.

பெண்ணுரிமை

மற்று, ஆண் பெண் என்ற வேற்றுமையை யகற்றி, ஆண்களோடு பெண்களும் எல்லாத் துறைகளிலும் சமமாக முன்னேற வேண்டுமென்பதனைத் தன்னுள் கொண்டிருக்கின்றது சுத்த சன்மார்க்கம். உலகியல் வாழ்க்கையில் மட்டுமின்றி, ஞான மார்க்கத்தில் ஈடுபட்டு இறையருளில் கலக்கவும் ஆண்களைப் போலவே பெண்களுக்கும் உரிமை உண்டென்பதனைச் சமய சன்மார்க்கம் அவ்வளவு தெளிவாக வலியுறுத்தவில்லை. ஆனால், அதனை மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றது வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம். இதனை,

> "பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவையும் சொல்லிக் கொடுக்க வேண்டியது. தத்துவம் முதலியவற்றின் சொருப ரூபாதிகளைத் தெரிவித்துச் சரளமாக்கினால், பின் தடையின்றி நம்முடைய துரிய ஆசிரம காலத்தில் ஒத்திருப்பார்கள். 'தெய்வம் தொழாஅள்' என்னும் தேவர் குறளால் இதை அறிக."

என்னும் வள்ளலாரின் வாக்கே வலியுறுத்தும். ஆம்; ஆண்கள் ஞானமார்க்கத்தில் தடையின்றி முன்னேற வேண்டுமானால், பெண்களும் அத்துறையில் ஞானம் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகின்றது என்னும் உண்மையை அடிகள் புலப்படுத்துகின்றார்.

பொய்யா, மெய்யா?

உடலை வெறுத்துப் பேசுவதே ஞானியர் சிலரின் கொள்கையாக இருந்திருக்கிறது. "காயமே இது பொய்யடா; காற்றடைத்ததோர் பையடா! மாயனார் குயவன் செய்த மண்ணும் பாண்டம் ஓடடா!" என்ற பாடல், யாக்கையை இழிந்த பொருளாக வருணிக்கின்றது. இதே போக்கில் பாடப்பட்ட பாடல்கள் எத்தனை எத்தனையோ! பாடிய ஞானியரும் எண்ணிலடங்காதவர்.

> "நந்த வனத்திலோர் ஆண்டி—அவன்
> நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
> கொண்டுவந் தான்ஒரு தோண்டி—மெத்தக்
> கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

Kovilpor Digital Library

"நீர்மேற் குமிழிஇக் காயம்—இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம்."

என்று பாடி, யாக்கை நிலையாமையைக் கூறினர் கடுவெளிச் சித்தர்.

காயத்தின் பெருமை

இதற்கு மாருக, திருமூலர் ஒருவரே யாக்கையின் அருமை பெருமையை வலியுறுத்தி, அதனைக் காக்கவேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்தினர். அப்பெரியார்,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே."

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே."

"உடம்பா ரழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே."

என்று பாடி, யாக்கையின் பெருமையை உணர்த்தினர்.

மண்ணுப் பாண்டம் ஓடடா!

திருமூலர் வழிவந்த சித்தரான இராமலிங்கர், மேற் சொன்ன திருமந்திரப் பாடல்களின் கருத்தையே சுத்த சன் மார்க்கத்தின் கருப்பொரு ளாக்கினர். சுத்த சன்மார்க்கம் காயத்தை அழியாத பொருளாகச் செய்ய முடியும் என்கின்றது. பொதுவாக நோக்குமிடத்து ஜீவாத்மா மண் வீட்டில்தான் குடி யிருக்கின்றது. அந்த வகையில்,

"ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப் புனலிலே உண்டை சேர்த்தே

Koviloor Digital Library

வாய்த்த குயவனுர் பண்ணும் பாண்டம்
வரகோட்டுக்கும் ஆகாதென்று ஆடாய் பாம்பே !''

என்ற பாம்பாட்டிச் சித்தர் பாடல் பொருளுடையதே. ஆயினும், சமய சன்மார்க்கத்தைக் கடந்து, சமரச சுத்த சன்மார்க்கியாளுல், மண்ணைப் பொன்னுக்கும் சித்து கைவரப் பெறுவதுபோல மண்ணுடலையும் பொன்னுடலாக்கிடவிட முடியும் என்கிருர் இராமலிங்க அடிகளார். தம்முடைய அன்பர்களுக்குக் கடிதம் எழுதிய ஒவ்வொரு நேரத்திலும் உடலை ஓம்ப வேண்டியதன் அவசியத்தை உறுதியாக வற்புறுத்தி யிருக்கிருர்.

'உடம்பைக் காப்பாற்று'

இறுக்கம் இரத்தின முதலியார் என்பவருக்கு அவர் எழுதிய கடிதங்கள் திரு. பாலகிருஷ்ணப் பிள்ளை அவர்களின் திருவருட்பாப் பதிப்பு 5-ஆம் புத்தகத்தில் வெளியாகியுள்ளன. அந்தக் கடிதங்களில் உடலோம்பல்பற்றிக் கூறப்பட்டுள்ள வாசங்களைக் கீழே தொகுத்துத் தருகிறோம் :

''தேகமுதலான கருவிகளைப் பக்குவமாகப் பாராட்டிக் கொண்டு வரவேண்டும்.''

—பக்கம் 40

''தாம் தம்முடைய தேகத்தை சாக்கிரதையாக உபசரித்து வரவேண்டும்; சாக்கிரதை என்பது அருந்தல் பொருந்தல்களில் மித போசனம் மிதபோகம்.''

—பக்கம் 43.

''புண்ணியப் பயனுற் பெற்ற தேகத்தை கூடியவரையில் சாக்கிரதையோடு பக்குவ மார்க்கத்தில் நடத்த வேண்டும்.''

—பக்கம் 46.

''தாம் உலகியற்கண் ஒழுகுங்கால் கழிநடை ஒருவன் கட்பார்வை போன்றெழுகல் வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன். அன்றி உணவு உறக்கம் முதலியவற்றுல் உடம்பை மெல்லென நடத்தல் வேண்டும். இஃதென் வேண்டுகோள்.''

—பக்கம் 47.

''தாம் தேகம் முதலிய கருவிகளைச் செவ்வனிறுத்தி நடத்த வேண்டுமென்று எழுதுவது தவிர வேறென்றும்

Koviloor Digital Library

எழுதுவது அவசியமாகத் தோற்றவில்லை. சாக்கிரதை யோடு இருக்க வேண்டும்."

-பா. பி. ப. பு. 5; பக். 49.

மேற்குறித்த வாசகங்களில் 'தேகம்' என்று மட்டுமே சொல்லாமல் "தேகம் முதலிய கருவிகளை" என்று சொல்லி யிருப்பதால் உடல் உறுப்பு ஒவ்வொன்றையும் காத்தோம்ப வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவாராயினர்.

செல்வப் பிள்ளை !

'புதுச்சேரி சாமிகள்' என்று அழைக்கப்பட்ட பெரியார் ஒருவர், தாம் இறுதி எய்த வேண்டிய நிலை ஏற்பட்டபோது, அது குறித்து அடிகளாருக்குத் தகவல் தந்தார். அவருக்கு அடிகள் எழுதிய பதில் வருமாறு:

> "தங்களுக்குத் தற்காலம் நேரிட்டிருக்கிற ஆபத்தைக் குறித்து அஞ்ச வேண்டாம். இந்த ஆபத்தால் தேக ஆனி நேரிடாது. கால பேதத்தால் நேரிடினும் நான் தங்களை எவ்விதத்திலாயினும் திருவருள் வல்லபத்தைக்கொண்டு திரும்பவும் பார்ப்பேன். பேசிக் களிப்பேன். இது சத்தி யம். சத்தியம். இது என் வார்த்தையன்று. திருச்சிற் றம்பலமுடையாரின் செல்வப் பிள்ளை வார்த்தை. தேகத் திற்கு ஆனி வருவதாகக் கண்டாலும் அஞ்ச வேண்டாம். வந்தால் வரட்டும். திரும்பவும் உடனே மிகுந்த விரைவில் என்னைப் பார்த்துப் பேசிக் களிப்பீர்கள். திருவருளாணை யிது. சற்றும் கலங்க வேண்டாம். திருச்சிற்றம்பலம்."

-பா. பி. ப. பு. 5; பக். 91.

முத்திக்குச் சாதனம்

அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடக்கும் இல்லறத்தாரும் உட லைக் காத்து ஓம்பவே விரும்புகின்றனர். காரணம், புவி இன் பங்களைத் துய்க்க வேண்டுமென்ற ஆசையேயாகும். வள்ள லார் உடலோம்பலை வலியுறுத்துவது இறையருளில் இரண்ட றக் கலப்பதற்கு அது தேவையென அறிந்ததா லாகும்.

> "முக்தி அடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாக லின், வேறு தேகத்தால் அடைவது அரிதாகலின் எவ் விதத்திலாயினும் அதனைப் பாதுகாத்தல் வேண்டும்."

சுத்த சன்மார்க்கத்திற்குத் தகுதி உடையவர் யாவரென் பது பற்றி வள்ளலார் கருத்து வருமாறு :

Koviloor Digital Library

"சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடையாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக் குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்ப வரும், கொலை புலை தவிர்ந்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாவர்கள்."

—பா. பி. ப. பு. 4; பக். 96.

"சுத்த சன்மார்க்க இலட்சிய அனுபவ விருப்பமுடைய வர்களுக்கு நனவிலும் மண்ணாசை, கனவிலும் பெண் ணாசை, சுழுத்தியினும் பொன்னாசை முதலிய மூன்றும் கூடாவாம்!"

—பா. பி. ப. பு. 4: பக். 104.

இராமலிங்கருடைய கருத்துப்படி உள்ள சுத்த சன்மார்க்கி யாக மனிதன் வளர்ச்சி பெறுவது அவ்வளவு எளிதன்று. ஆயி னும், முயன்றால், அந்தப் பாதையிலே முடிந்த அளவில் முன் னேறுவது சாத்தியமே.

மொழிப் பற்று

சுத்த சன்மார்க்க நெறியானது நாடு, இன, சாதி, சமய, மத வேற்றுமைகளை யெல்லாம் கடந்து—ஏன்?, அவற்றை அறவே மறந்து, உயிர்க்குல மனைத்தையும் ஒன்றுபடுத்தும் ஒருமைப் பாட்டு நெறியாக விளங்குகின்றது. "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று திருமூலர் சொன்ன திருமந்திரமே வள்ளலார் போதித்த சமரச சுத்த சன்மார்க்க மகா மந்திரமாம். இதனை,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்ந்தாரும் எவரும்
ஒருமையுளர் ஆகிஉல கியல்நடத்தல் வேண்டும்,"

என்ற வள்ளலார் வாக்காலேயே அறியலாம்.

சமரச சுத்த சன்மார்க்க நெறி, பேதங்களற்ற அபேதவாத மெனினும், அழிக்க வேண்டாத—இயற்கை வழித்தோன்றிய மொழி பேதத்தைமட்டும் ஏற்கின்றது. மாபெரும் புரட்சி நடத்தி, சோஷலிசப் புதுவுலகப் பூங்காவாக விளங்கும் சோவி யத் ருஷ்யாவில்கூட, மொழி வேற்றுமை, அனைத்து மொழி களுக்கும் சம அந்தஸ்தும் உரிமையும் அளிக்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்டது. இது நிகழ்ந்தது 1918ல் ஆகும்.

இதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்பு வாழ்ந்த வள்ளலார், தாம் காண விரும்பிய சுத்த சன்மார்க்க சமுதாயத்தில் தாய்

Koviloor Digital Library

மொழிப் பற்றுக்கு இடமுண்டு என்பதைச் சொல்லாமல் சொல்லிப் போனார். தமிழின் சிறப்புரைக்கப் புகுந்த வள்ளலார்,

"கடவுள் அருளாணையால் கற்பிக்கப்பட்டதும்—எப் பாஷைகளுக்கும் பிதுர்பாஷை என்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை யென்று நிருத்தம் சித்திக்கப் பெற்றுள்ளதுமான தமிழ்..."

"தமிழ்ப் பாஷையே அதி சுலபமாகச் சிவாநுபூதியைக் கொடுக்கும்."
—பா. பி. ப. பு. 3: பக். 9,10.

என்று புகழ்ந்துரைக்கிறார்.

ஆம்; தாய்மொழிப் பற்றென்பது, கடந்த ஞானியாலும் துறக்க முடியாத—துறக்கவும் தேவையில்லாத ஒன்றாகும்.

தனி மனிதர் ஒருவர் எவ்வளவுதான் பெரியவராக இருப்பினும் அவரும் தம்முடைய கொள்கைகளுக்கு வெற்றி தேட ஏதேனும் ஒரு அமைப்பின் மூலமே பாடுபட்டாக வேண்டும். அதனாற்றான், ஆன்ம பலத்தில் இணையற்று விளங்கிய காந்தியடிகளும் தம் வாழ்நாள் முழுவதும் காங்கிரஸ் மகாசபையின் துணை கொண்டே பாரத நாட்டின் நலன் கருதிப் பாடுபட்டார். புத்த பெருமான், "சங்கம் சரணம் கச்சாமி" என்று முழங்கித் தம்முடைய புனிதமான வணக்கத்தைச் சங்கத்திற்குச் செலுத்தினார்.

தங்கமனைய சங்கம்

சன்மார்க்க சமுதாயம் காண விழைந்த வள்ளலாரும், தொண்டர் பல்லாயிரவர் கூடிய சங்கத்தின் மூலமே அதனைச் சாதிக்க முடியுமென்பதை உணர்ந்தார்.

"தங்கமே அனையார் கூடிய ஞான
சமரச சுத்தசன் மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும் சங்கம்
சார்திருக் கோயில்கண் டிடவும்
துங்கமே பெறுஞ்சற் சங்கம்நீ டூழி
துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர நின்றனைப் பாடி
ஆடவும் இச்சைகாண் எந்தாய் !"

என்னும் பாடலிலே, தனியாக ஒரு சங்கமே அன்றி சங்கத்தைச் சார்ந்த—சன்மார்க்கர்கள் மட்டுமே கூடி வழிபடத்தக்க—கோயில் ஒன்றையும் கண்டு, தாம் அந்தக் கோயிலிலேயே

Koviloor Digital Library

தங்கி, இறை வழிபாடு நடத்த வேண்டுமென்று தமக்கிருந்த விருப்பத்தை வெளியிடுகின்றார்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்."

என்றார் திருவள்ளுவர். இந்த மறைமொழிக் கிணங்கத் தெய்வத் திருவருளால் திண்ணிய நெஞ்சம் பெற்ற இராமலிங்கர், 1865-ஆம் ஆண்டில் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற அமைப்பினைத் தோற்றுவித்தார்.

சர்வதேச சங்கம்

அந்த அமைப்பு சாதி—சமயம்—மொழி—நாடு என்னும் வேற்றுமைகளையெல்லாம் கடந்து, பிரபஞ்சம் முழுவதிலும் இயங்கத்தக்கதாக—உயிர்க்குலம் அனைத்துக்குமே பிரதிநிதித்துவம் உடையதாக விரிவடைய வேண்டுமென்பது வள்ளலாரின் விருப்பம். அதனால், சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைமைப் பொறுப்பைத் தாம் ஏற்காமல், எல்லாம் வல்ல ஆண்டவனையே—சபாநாயகரையே சங்கத்தின் தலைவராக வைத்தார். இதனை,

"சமரச சன்மார்க்க சங்கத்தின் முதலே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே!"

"சன்மார்க்க சங்கத்தார் தழுவிய பதியே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே!"

"செத்தவர்கள் எல்லாம் திரும்ப எழுந்துவரச்
சித்தம்வைத்துச் செய்கின்ற சித்தியனே—சுத்தசிவ
சன்மார்க்க சங்கத் தலைவனே நிற்போற்றும்
என்மார்க்கம் நின்மார்க்க மே!"

என்னும் பாடல்களால் அறிந்து கொள்ளலாம். சங்கத்தின் அங்கத்தினர்களோ, படமாடும் பெருமானுக்குப் பதிலாக, கண்ணெதிரே நடமாடும் பெருமானாகிய இராமலிங்கரையே சங்கத் தலைவராகக் கொண்டு, அவரை வாழ்த்தியும் வணங்கியும் வழிபடலாயினர். அதுகண்டு வள்ளலாரின் மனம் வருந்தியது.

"சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினொடுங் கேட்பீர்

Koviloor Digital Library

என்மார்க்கத் தெனை நுமக்குள் ஒருவன்எனக் கொள்வீர்
எல்லாஞ்செய் வல்லநம திறைவனையே தொழுவீர் ''

என்று பாடி, அறிவுரை கூறினர்.

வள்ளலார் துவக்கிய சமரச சுத்த சன்மார்க்க சங்கம், ஆகமங்கள்—புராணங்கள்—சாத்திரங்கள் ஆகியவற்றிற்கு எதிராகப் போரிட முயலாமல் அவற்றிற்கு அப்பாற்பட்ட சமயங் கடந்த சமுதாய அமைப்பாக இயங்கியது.

முதல் சங்கம்

தமிழகத்தின் வரலாற்றிலே முதன் முதலில் தோன்றிய சமய—சமூக சீர்திருத்த அமைப்பு, வள்ளலார் துவக்கிய சமரச சன்மார்க்க சங்கமேயாகும். பிற மதங்களைப் போலத் தானும் ஒரு மதமாகச் சங்கம் தோன்றவில்லை. மதங்களற்ற ஒரு சன் மார்க்க சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கான சேவா சங்க மாகவே தோன்றியது. இறுதியில் மனித சமுதாயம் முழு வதுமே ஒரு சன்மார்க்க சங்கமாகி, அதிலே தம்மால் துவக்கப் பட்ட சங்கம் இரண்டறக் கலந்துவிட வேண்டும் என்பது வள்ளலாரின் விருப்பம்.

"ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப் பிடித்து, புலால் உணவை வெறுத்து, தயவுடைய மனத்தினர் எல்லோரும் சன் மார்க்க சங்கத்தில் சேரலாம்" என்றார் வள்ளலார்.

இன வேறுபாடு

சங்கத்தின் அங்கத்தினர் எல்லாம் "உறவினத்தார்" என் றும் ஏனையோரெல்லாம் "புறவினத்தார்" என்றும் பிரித்துக் கூறினர் வள்ளலார். இறுதியில் இந்த பேதமும் அழிந்து, மனிதர் எல்லோருமே ஒரே இனத்தவராக—அதாவது, சுத்த சன்மார்க்க இனத்தவராக மாறி விடுவர் என்பது இராமலிங்க ரின் நம்பிக்கை.

"எவ்வுலகும் அண்டங்கள் எத்தனையும் நான்காண
இவ்வுலகில் எந்தை எனக்களித்தான்—எவ்வுயிரும்
சன்மார்க்க சங்கம் தனை அடையச் செய்வித்தே
என்மார்க்கம் காண்பேன் இனி."

வள்ளலார் சன்மார்க்க சங்கம் கண்டது, இறைவன் அருள் கைவரப் பெற்ற காலத்திலாம்.

Koviloor Digital Library

கொள்கைப் பட்டியல்

சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகளை அடிகளார் பட்டியல் தொகுத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. ஆயினும், அவருடைய பாடல்களிலே, வசன உபதேசங்களிலே, அவர் தம்முடைய சீடர்களுக்கு எழுதிய கடிதங்களிலே, சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகள் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றைக் கீழ்வருமாறு தொகுத்துப் பார்க்கலாம்:

(1) உயிர்க்குலம் அனைத்துக்கும் தெய்வம் ஒன்றே என்று நம்புதல்.

(2) அந்தத் தெய்வத்தை விக்கிரக வடிவில் அல்லாமல் ஒளிவடிவில் வழிபடுவதே சிறந்ததென உணர்தல்.

(3) சாதி—சமய—வருண பேதங்களை அறவே விடுத்து, மொழி வழிப்பட்ட இனங்கள்—நாடுகளிடையே ஒற்றுமை கண்டு, ஆன்மநேய ஒருமைப்பாட்டினை உருவாக்கல்.

(4) உலகம் முழுவதையும் ஒன்றுபடுத்தும் ஆன்மநேய ஒருமைப்பாட்டினுக்கே யன்றி, இந்திய நாட்டில்—மொழிவழி இனங்களிடையே சகோதர உணர்வை வளர்த்து, அவற்றிடையே உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு காணல்.

(5) உடைமையாளர்—வறுமையாளர் (பணக்காரர்—ஏழை) என்ற பொருளாதார ஏற்றத்தாழ்வைத் தொலைத்து, எல்லோரும் வயிறார உண்டு, உடம்பார உடுத்து வாழும் சமதர்ம சமுதாயத்தைப் படைத்தல்.

(6) ஆண்—பெண் என்ற பால் வேற்றுமையின்றி, மக்கள் எல்லோருக்குமே கல்வி அளித்தல்—குறிப்பாக, ஞானமார்க்கக் கல்வியைப் பெண்களுக்கும் அளித்தல்.

(7) மரணமிலாப் பெருவாழ்வு வாழும் பேற்றினைப் பெறுவதற்கான வழிவகைகளை மக்களுக்கு அவரவர் தாய்மொழியின் வாயிலாகவே—குறிப்பாக, தமிழருக்குத் தமிழின் வாயிலாகவே பயிற்றுவித்தல்.

(8) புலால் உண்ணுதல், தெய்வத்திற்கு உயிர்ப் பலி தருதல் ஆகிய தீய பழக்க—வழக்கங்களையும், மற்ற மூட நம்பிக்கைகளையும் அடியோடு ஒழித்தல்.

Koyiloor Digital Library

(9) உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி, அவற்றிடையே இரக்க உணர்வும் தயையும் காட்டத்தக்க ஜீவ காருண்ய ஒழுக்கத்தை மக்களுக்குப் போதித்தல்.

(10) கருணையில்லாத் துன்மார்க்கர் அரசியல் நடத்துவதை உலகெங்கணுமிருந்து ஒழித்து, அருள்நெறி வழிப்பட்ட சுத்த சன்மார்க்கர் ஆட்சி தோன்றச் செய்தல்.

'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்ற பெயரில் இறுதியாக உள்ள 'சங்கம்' என்பதனை, 'கழகம்' என்ற பொருளிலேயே கொண்டார் வள்ளலார். இதனை, "சுத்த சன்மார்க்கக் கழக நேர்நின்ற கருணை மாநிதியே" என்ற அருட்பா வரியிலே காண்கிறோம்.

பன்முகச் சங்கம்

வள்ளலாரின் சன்மார்க்க சங்கம் பன்முகம் கொண்ட ஒரு பெரிய அமைப்பாகும். வள்ளலாரின் வாரிசாகத் தோன்றிய காந்தியடிகள், தாம் காங்கிரஸ் மகா சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர்,

ஆதாரக் கல்வி,
இந்தி மொழிக் கல்வி,
தீண்டாமை ஒழிப்பு,
குடிசைத் தொழில் வளர்ச்சி,

ஆகியவற்றிற்கெனத் தனித் தனியே கிளை அமைப்புகளைக் காங்கிரஸ் மகாசபைக்குள்ளேயே தோற்றுவித்தார். இதற்கு வழி காட்டுவார்போல், அருட்ஜோதி இராமலிங்க வள்ளலாரும்,

சத்திய ஞானசபை,
சத்திய தருமச்சாலை,
சித்தி வளாகம்,
சமரச வேத பாடசாலை,

ஆகிய கிளை அமைப்புகள் பலவற்றைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நிழலிலே நிறுவினர். ஆம்; வள்ளலாரும் காந்தியடிகளும் தருமம் மணக்கும் தெய்விகப் புதுவுலகைப படைக்க விரும்பியவர்களாதலால், அவர்களிடையே செயல் ஒற்றுமையிருக்கக் காண்கிறோம்.

Koviloor Digital Library

ஒழிப்பன்று; இணைப்பு!

வள்ளலார், சாதிகளையும் சமயங்களையும் மதங்களையும் அடியோடு வெறுத்தார். இதனை அவரே தம் பாடல்களிலே ஐயந் திரிபுக்கு இடமின்றி அறிவிக்கின்றார். ஆயினும், "தோற்பன தொடரேல்," என்னும் முதுமொழி அவருக்குத் தெரியும். அதனால், செயலாற்றப் புகுந்தபோது சமரச உணர்ச்சிக்கே முதலிடம் தர எண்ணியவர் போலத் தாம் துவக்கிய சங்கத்தின் பெயரிலே, "சமரசம்" என்பதனை முதற் சொல்லாக்கினார். ஆம்; சாதிகளை ஒழிக்க முன்பாக, சாதிகளிடையே நிலவி வரும் ஏற்றத் தாழ்வினை—இழிவு சிறப்பினை ஒழித்து அவற்றிடையே சமரசம் காண விரும்பினார்.

சமயங்களற்ற சமுதாயம் காண்பதற்கு முன்பாக, அச் சமயங்களிடையே நிலவிவரும் வேற்றுமைகளையும்—விரோதங்களையும் ஒழித்து, அவற்றிடையே சமரசம் காண்பதையே முதற் கடமையாகக் கொண்டார். இதனை,

"இச்சாதி சமயவிகற் பங்களெலாந் தவிர்ந்தே
எவ்வுலகுஞ் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்!"

என்னும் அருட்பா வரிகளிலே ஐயந்திரிபற அறிவிக்கின்றார்.

இந்தச் சமுதாயச் சீர்திருத்தத்தினை, துவேஷம்—வெறி—ஏச்சு—எதிர்ப்பு என்னும் துன்மார்க்க வழிகளிலல்லாமல், சுத்த சன்மார்க்க முறைகளாலேயே சாதிக்க விழைந்தார்.

மக்களுக்கு அழைப்பு

மனித குலத்திடையேமட்டு மன்றி, உயிர்க்குலம் அனைத்திடமும் சமரசம் காண விழைந்தார். 'புலியும் பசுவும் ஒரு துறையில் நீர் குடிக்கும்' என்று புராணங்களில் படிக்கிறோமே, அத்தகைய ஆன்மநேய ஒருமைப்பாடுடைய அருளுலகைக் காணத் துடித்தார் அருட்சோதிப் பெருமான். அதற்காகப் பாடுபடவே சன்மார்க்க சங்கத்தை அமைத்தார்.

சங்கம் அமைத்த பெருமான், அதனைச் சார்ந்தொழுகுமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

"மார்க்கம்எலாம் ஒன்றுகும் மாநிலத்து வாய்மைஇது
தூக்கம்எலாம் நீங்கித் துணிந்துளத்தே—ஏக்கம்விட்டுச்

Koviloor Digital Library

சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திடுமின் சத்தியம்நீர்
நன்மார்க்கம் சேர்வீர்இந் நாள். ''

''ஆடாதீர் சற்றும் அசையாதீர் வேறொன்றை
நாடாதீர் பொய்உலகை நம்பாதீர்—வாடாதீர்
சன்மார்க்க சங்கத்தைச் சார்வீர் விரைந்தினிஇங்
கென்மார்க்க மும்ஒன்று மே.''

என்று, தாம் துவக்கிய சங்கத்தில் வந்து சேருமாறு வையத்து மாந்தர்க்கெல்லாம் அழைப்பு விடுத்தார். வள்ளலார், சங்கத்தின் முதல் அங்கத்தினராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

வெள்ளையர் ஆதரவு?

இராமலிங்கர், தம் சன்மார்க்க சங்கத்திற்கு, அதன் வழி நிகழ்த்தவிருந்த சமுதாயச் சீர்திருத்தத்திற்குப் புறச் சமயத்தினரான ஐரோப்பியர் சிலரும் ஆதரவு தந்ததாகக் கூறுகின்றார். 'உலகெங்கும் எனது நெறி வரவேற்கப்படுகின்றது' என்பார்போல,

''துன்மார்க்கம் எல்லாம் தொலைந்து விட்டேன் சுத்தசிவ
சன்மார்க்க சங்கம் தலைப்பட்டேன்—என்மார்க்கம்
நன்மார்க்கம் என்றேவான் நாட்டார் புகழ்கின்றார்
மன்மார்க்கத் தாலே மகிழ்ந்து. ''

''பன்மார்க்கம் எல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றே தழைத்ததுவே—சொன்மார்க்கத்
தெல்லா உலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறிஅருளைக் கொண்டு ''

என்று பாடினார். இதிலே வரும் 'வான் நாட்டார்' என்னும் சொல், வள்ளலார் காலத்தில் பாரதத்தில் வாழ்ந்திருந்த மேல் நாட்டாரைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையை ஐரோப்பியருள் சிலரும் ஆதரித்தனர் போலும்! சர்வதேச அடிப்படையில் 'எவ்வுலகும் சன்மார்க்கப் பொதுவடைதல் வேண்டும்' என்பது தானே வள்ளலாரின் கொள்கை.

'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' என்பதனை, 'ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' எனவும், 'ஷடாந்த சமரச சுத்தசிவ சன்மார்க்க சங்கம்' எனவும், 'சமரச வேத சன்மார்க்க சங்கம்'

Koviloor Digital Library

எனவும் தம் எழுத்தோவியங்களில் சில இடங்களில் குறிப்பிட்டுள்ளார் வள்ளலார். புதிய சங்கத்தின் பெயருக்கு அடிகள் தந்த விளக்கமாவது:

"சமரச வேத சன்மார்க்க சங்கம் என்பதற்குப் பொருள்: எல்லாச் சமயங்களுக்கும் பொதுவாகிய அறிவு நூல் முடிபான நான்காவது மார்க்கத்தை அநுஷ்டிக்கின்ற கூட்டமென்று கொள்க. மேற்படி மார்க்கம் நான்காவன: தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன் மார்க்கம்:"

- பா. பி. ப. பு. 4: பக். 45.

"சுத்த சன்மார்க்கமாவது குண நிர்க்குண வாச்சிய லட்சியார்த்த மாகிய சமய மதங்களினது அனுபவமன்று. சுத்த சன்மார்க்க மென்பது சத சன்மார்க்கமேயாம். சுத்த மென்பது ஒன்றுமில்லாதது. ஆதலால், சுத்தமென்பது சன்மார்க்கம் என்னும் சொல்லுக்கு முன் வந்தமையால், முன் சொன்ன சமய மதங்களைத் தாண்டினது, அதன் அனுபவங்களையும் கடந்தது."

- பா. பி. ப. பு. 4: பக். 83.

வள்ளலார் அமைத்த சமரச சுத்த சன்மார்க்க சங்கம், புதியதொரு மதமோ, மடமோ, அல்ல; அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்த உலகர் அனைவரையும் திருத்தி, சமரச சுத்த சன்மார்க்க சமுதாயம் காணும் சன்மார்க்கிகள் திரண்ட கழகமேயாகும். ஆயினும், சங்கத்தவரை அவர்தம் தயையுள்ளம் காரணமாகச் 'சாதுக்கள்' என்றே அழைத்தார் அடிகளார்.

"புன்மார்க்கத் துள்ளும் புறத்தும்வே ருகிப்
புகன்றசொல் அன்றுநும் பொன்னடி கண்ட
சன்மார்க்க சங்கத்துச் சாதுக்கள் காணச்
சத்தியம் சத்தியம் சத்தியம் சொன்னேன்."

என்னும் பாடலில் 'சாதுக்கள்' என்னும் புனிதப் பெயரைக் காண்கிறோம்.

ஆண்டவன் ஆணை!

சுத்த சன்மார்க்க நெறி பரப்பும் தொண்டுக்கெனத் தனிச் சங்கம் கண்டது, அடிகளாரின் சொந்த விருப்பத்தாலன்று; இறைவனின் ஆணையாகும். இதனை,

Koviloor Digital Library

''பன்னெறி சமயங்கள் மதங்கள்என் றிடுமோர்
பவநெறி இதுவரை பரவியது இதனுல்
செந்நெறி அறிந்திலர் இறந்துஇறந்து உலகோர்
செறியிருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமுது அருள்கின்ற 'சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக' என்றஎன் அரசே !
தனிநட ராஜஎன் சற்குரு மணியே,''

என்னும் பாடலால் அறிகிருேம். முன்னர், 'உலகர் அனைவரை யுஞ் சகத்தே திருத்தி' என்றதனுல, தமிழகத்தில் தாம் துவக்கிய சுத்த சனமார்க்க சங்கம் உலகமெங்கும் கிளைகளைக் கொண்ட பேரியக்கமாகப் பரவ வேண்டுமென்று விரும்பினர், பரவுமென்றும் நம்பினர் என்று அறிகிருேம். மற்று,

''பித்தெலாம் உடைய உலகர்தங் கலகப்
பிதற்றெலாம் என்றொழிந் திடுமோ
சத்தெலாம் ஒன்றென்று உணர்ந்தசன் மார்க்க
சங்கம்என் ருேங்குமோ தலைமைச்
சித்தெலாம் வல்ல சித்தன்என் றுறுமோ
தெரிந்திலேன் எனத்துயர்ந் திருந்தேன்
ஒத்தெலாம் உனது திருவுளம் அறிந்தது
உரைப்பதென் அடிக்கடி உனக்கே ''

என்று இறைவனிடம் முறையிட்டு, சங்கம் வளர அருள் புரியுமாறு வேண்டினர்.

சங்கங் கண்ட ஒரு சில ஆண்டுகளுக்குள் அச்சங்கத்திற் கெனத் தனியாக ஒரு கொடியும் கண்டார் அடிகள். அக் கொடியை, ஸ்ரீமுக ஆண்டு ஐப்பசித் திங்கள் 7-ஆம் நாள் (23-10-1873) புதன் கிழமை யல றுு காலை 8-மணிக்கு மேட்டுக் குப்பத்திலுள்ள தமது சித்திவளாகத் திருமாளிகையில் முதன் முதலாகக் கட்டினர். அப்போது, அங்கு அடிளார் நிகழ்த்திய பேருரை ''மஹோபதேசம்'' என்னும் தலைப்பில் வெளியிடப்பட் டிருக்கிறது. அதில் சன்மார்க்க சங்கக் கொடிபற்றி வள்ளலார் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

Koviloor Digital Library

"கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே. ஆதலால், இத்தருணம், இக்காலமே சன்மார்க்கக் காலம்.

"இதற்குச் சாக்ஷியாக இப்போதுதான் சன்மார்க்கக் கொடி கட்டிக்கொண்டது. அக்கொடி உண்மையில் யாதெனில்: நமது நாபி முதல் புருவ மத்தி ஈருக ஒரு நாடியிருக்கின்றது. அந்த நாடி நுனியில் புருவ மத்தியின் உட்புறத்தில் ஓர் சவ்வு தொங்குகின்றது. அதன் அடிப்புறம் வெள்ளை வர்ணம்; மேற்புறம் மஞ்சள் வர்ணம்; அச்சவ்வின் கீழ் ஓர் நரம்பு ஏறவும் இறங்கவும் இருக்கின்றது; இக்கொடி நம் அனுபவத்தின்கண் விளங்கும். இவ் அடையாளக் குறிப்பாகவே இன்றைய தினம் வெளிமுகத்தில் அடையாள வர்ணமான கொடி கட்டியது. இனி எல்லவர்க்கும் நல்ல அநுபவம் அறிவின்கண் தோன்றும்.

"உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை. கொடி கட்டிக்கொண்டபடியால், இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள்."

- பா. பி. ப. பு. 4: பக். 141.

சன்மார்க்க சங்கக் கொடி, மேற்புறம் மஞ்சள் வண்ணமும் அடிப்புறம் வெள்ளை வண்ணமும் கொண்டதென்பது மேலே தந்துள்ள வள்ளலாரின் வாக்கால் விளங்கும்.

Koviloor Digital Library

உத்தர ஞான சிதம்பரம்

சிவபெருமானைப் பஞ்ச பூதங்களாகப் பாவித்து வழிபடுவது சைவ மரபு. அப் பஞ்ச பூதங்கள்—நிலம், நீர். தீ, காற்று, வான் என்பனவாம். இவற்றிற்கு முறையே—திருவொற்றியூர், திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய தலங்களைக் குறித்துள்ளன, சைவ நூல்கள். இந்தத் தலங்களிலேயும் சிதம்பரமே சிறப்புக்குரிய தாகும். சைவத்தில், 'கோயில்' என்றாலே, சிதம்பரத்தைத்தான் குறிக்கும். இறைவன் ஆடுங் கூத்தனைக் காட்சியளிப்பது அந்தத் தலத்தில்தான். மறைக்குலத்து ஞானசம்பந்தரேயன்றி, பறைக்குலத்து நந்தனாரும் போற்றியது அப்பதிதான்.

அம்பலக் காட்சி

அத்தகைய தெய்வப் புகழ் மணக்கும் தில்லைப்பதியிலே, தாம் பச்சிளங் குழவியாக இருந்தபோதே அம்பலக் காட்சி கண்டு தெய்வ உணர்வு பெற்றதனை,

"தாய்முதலோ ரொடுசிறிய பருவமதில் தில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்தபோது
வேய்வகைமேல் காட்டாதே என்றனக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்உறவாம் பொருளே."

என்று, 'அருள் விளக்க மாலை'யில் தெளிவுபடுத்துகின்றார் அடிகளார்.

தல மகிமை மறைந்தது!

இப்படி, பிள்ளைப் பருவத்திலேயே தம் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட தில்லைப்பெருமானையே தாம் வழிபடும் மூர்த்தியாகக் கொண்டிருந்தார் வள்ளலார். அது காரணமாகச் சிதம்பரம் என்னும் திருப்பதி யிடத்தும் பக்தி கொண்டிருந்தார். நாளடைவில் அந்தத் தல பக்தி குறைந்து, தலத்தில் கோயில் கொண்டிருக்கும் நடராசப் பெருமானிடம் மட்டுமே

Koviloor Digital Library

பக்தி கொண்டவரானார். இதனை, அன்பர் திரு. இரத்தின முதலியார் அவர்களுக்கு அடிகள் எழுதிய கடித மொன்றில்,

> "சிதம்பரம் தற்காலத்தில் நமது உயிர்த்துணைவராகிய நடராஜப் பெருமானைப்பற்றி நாம் போவதற்கும் இரண்டொரு தினம் இருப்பதற்கும் தக்கதேயன்றி, வேறொரு வகையாலும் தக்கதில்லை. ஆயின் அது கலிகால வண்ணம்."

என்று குறிப்பிட்டதனால் அறிகிறோம். இதனை அடிகள் கூறியது 20-3-1861-ல் எழுதிய கடிதத்தி லாகும். சிதம்பரத்தில் தாம் கண்ட குறைபாடு 'கலிகால வண்ணம்' என்று கருதியவராய்,' 1861-க்குப் பின்னும் நடராசப் பெருமான் கோயிலுக்குச் சென்று வந்து கொண்டிருந்தார், சிதம்பரம் இராமலிங்கம்.

சிதம்பரமா, வடலூரா?

சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலைப் புதுப்பிக்கும் பணியிலும் ஒரு சமயம் அவர் ஆர்வங் காட்டியதாக அறிகிறோம்.

> "திருவளர் திருச்சிற்றம்பலம் ஓங்கும்
> சிதம்பரம் எனும்பெருங் கோயில்
> உருவளர் மறையும் ஆகமக் கலையும்
> உரைத்தவா றியல்பெறப் புதுக்கி
> மருவளர் மலரின் விளக்கிநின் மேனி
> வண்ணங்கண் டுளங்களித் திடவும்
> கருவளர் உலகில் திருவிழாக் காட்சி
> காணவும் இச்சைகாண் எந்தாய்!"

என, 'பிள்ளைச் சிறு விண்ணப்பத்'துள் அடிகள் பாடி யிருப்பதைக் கொண்டு வேதாகம முறைப்படி நடராசப் பெருமான் கோயிலைப் புதுக்கிக் கும்பாபிஷேகம் நடத்திக் கண்டுகளிக்க அவர் கருதியிருந்தது புலனாகும்.

இந்தப் பாடலில் அடிகள் குறிப்பது சத்திய ஞான சபையாகிய உத்தர ஞான சிதம்பரமா யிருக்குமோ என்று மயங்கவும் இடமுண்டு. ஆனால், அது உண்மையன்று. 'சிதம்பரம் எனும் பெருங்கோயில்' என்பதனால், அடிகள் பூர்வஞான சிதம்பரத்தைக் குறித்ததாகவே கொள்ளவேண்டும்.

சத்திய ஞான சபை, எண்கோணத் தாமரை வடிவில்—வேதாகமங்களுக்கு அப்பாற்பட்ட சமரச சுத்த சன்மார்க்கப்

Koviloor Digital Library

பொது நெறிப்படி—அமைந்ததாகையால், "உருவளர் மறையும் ஆகமக் கலையும் உரைத்தவாறியல்பெறப் புதுக்கி" என்ற வாசகம் அதனைக் குறிப்பதாகாது. மற்று, சத்தியஞான சபை புதிதாக எழுப்பப்பட்டதோர் கோயிலாகும். மேற்படி பாடலில் 'இயல்பெறப் புதுக்கி' என்றதால் பழைய ஒன்றைப் புதுப்பிக்க விழைந்தார் என்பது புலனாகும். அது சிதம்பரம் சிற்சபையே யாகும்.

சிதம்பரமே!

ஆம்; வேதாகமங்களை வெறுத்த சமரச சுத்த சன்மார்க்கி யான வள்ளலார், நடராசப் பெருமான்பால் தமக்குள்ள பெரும் பக்தி காரணமாக, **"உருவளர் மறையும் ஆகமக் கலையும் உரைத்த வாறு"** சிதம்பரம் கோயிலைப் புதுப்பிக்க முன் வந்தார்.

இதுபற்றிச் சாலைச் சம்பந்திகளுக்கு அடிகள் இட்ட சமாதிக் கட்டளையில்,

> "சமரச வேத சன்மார்க்க சங்கமும் மேற்படி தருமச் சாலையும் நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் சிதம்பரம் கோயில் திருச்சபைகளைப் புதுக்கி நிலைபெற விளக்கஞ் செய்யும் பொருட்டாகவும் கருணை கூர்ந்து எனது தந்தையாராகிய எல்லாம் வல்ல திருச்சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்குந் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக விருக்கின்றது."
>
> - பா. பி. ப. பு. 5; பக். 105.

என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கட்டளை வெளியானது 30-3-1871-ல் ஆகும்.

தில்லைக் கோயிலில் அடிகள் புதுப்பிக்க முயன்றது "சிற் சபை" என்னும் பகுதி யென்பதும் இதற்கு அவர் முயன்ற காலம் 1866-ஆம் ஆண்டென்பதும் திருவருட்பாவுக்கு எதிராக வெளியிடப் பெற்ற "போலி அருட்பா மறுப்பு" என்ற பிரசுரத் தால் (பக்கம் 28) அறியக் கிடக்கின்றன.

பின் என்ன காரணத்தாலோ, சிதம்பரம் கோயிலைப் புதுப் பிக்கும் எண்ணத்தை விட்டவராகி, வடலூரிலே "சத்திய ஞான சபை" என்ற பெயரில் சன்மார்க்க சங்கத்தார் வழிபடத்தக்க புதிய கோயிலொன்றை மட்டுமே நிர்மாணிக்க முடிவு செய்தார்.

Koviloor Digital Library

'கதை' பிறந்தது !

அடிகளார் வடலூரில் 'சத்திய ஞான சபை' அமைக்கத் திட்டமிட்டதற்கு, மற்ெறாரு 'கதை'யும் கூறப்படுகின்றது

"தில்லைத் தலத்தினும் பார்க்க உயர்ந்த தலங்கள் வேறின்மையால் கோயில் என்ப. அங்கே பிள்ளை தரிசிக்கப் போயகாலை இரகசிய லிங்கத்தைக் காட்டுமாறு தீக்ஷிதர்களைக் கேட்க, அவர் 'உட்பிரவேசித்தல் கூடாது; இங்கு நின்று தரிசிக்குதிர்' என்றனர். பிள்ளை பெருஞ் சினங்கொண்டு இதற்கு எதிராக ஒரு சிதம்பரத் தலமுண்டாக்கி, நடராசரையும் அங்கே வரவழைத்து நடனஞ் செய்விக்கின்றேம். சிற்றம்பலமுஞ் செய்கின்ரு மென்று வடலூரில் உத்தரஞான சிதம்பரமென்று ஒரு கட்டிடங் கட்டினர்,"

என்று, அடிகளாரின் புரட்சிகரமான சமய சீர்திருத்தக் கொள்கைகளுக்கு எதிராக இருந்த வைதிகச் சைவர் ஒருவரால் 1904-ஆம் ஆண்டில் வெளிபிடப்பட்ட 'மருட்பா மறுப்பு' என்ற நூலில், 116-ஆம் பக்கத்தில் தகவல் தரப்பட்டுள்ளது.

சிலேடைக் கீர்த்தனை ?

இக் 'கதை'க்குச் சான்ருக, அடிகளார் பாடியுள்ள 'வருவா ரழைத்துவாடி' என்ற கீர்த்தனையின் கருத்துக்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அக்கீர்த்தனை வருமாறு :

பல்லவி

வருவா ரழைத்துவாடி வடலூர் வடதிசைக்கே
வந்தாற்பெ றலாம்நல்ல வரமே

அநுபல்லவி

திருவார்பொன் னம்பலத்தே செழிக்குங்குஞ் சிதபாதர்
சிவசிதம் பரபோதர் தெய்வச்ச பாநாதர் (வருவார்)

சரணங்கள்

சிந்தைக ளிக்கக்கண்டு சிவானந்த மதுவுண்டு
தெளிந்தோரெல் லாருந்தொண்டு செய்யப்ப வுரிகொண்டு
இந்த வெளியில்நட மிடத்துணிந் தீரேயங்கே
இதைவிடப் பெருவெளி யிருக்குதென்ரு லிங்கே (வருவார்)

Koviloor Digital Library

இடுக்கி லாமலிருக்க இடமுண்டு நடஞ்செய்ய
இங்கம் பலமொன்றங்கே யெட்டம் பலமுண்டைய
ஒடுக்கி லிருப்பதென்ன வுளவுகண்டு கொள்வீரென்ளுல்
உண்மையிது வஞ்சமல்ல வும்மேலாணை என்று சொன்ளுல்
(வருவார்)

இந்தக் கீர்த்தனை வரிகளுக்கு அடிகளாரின் அருட்பாவை வெறுத்த மருட்பாக் கூட்டத்தார் கொண்ட பொருள் வருமாறு:

"சிதம்பர வெளியைப் பார்க்கிலும் வடலூர் வெளி பெரிதென்றும், சிதம்பர சபை இடுக்கென்றும், நடஞ் செய்வதற்கு ஒடுக்கமான தென்றும், தில்லையில் ஒரு அம்பலம் இருக்கிற தென்றும், வடலூராகிய பார்வதிபுரத்திலே சிற்றம்பலம், பேரம்பலம், பொன்னம்பல முதலிய எட்டு அம்பலங்க ளிருக்கின்றன வென்றும் சொல்லி யழைத்து வாடியென்று அடதாளத்தில் பாடியுள்ளார்."

-மருட்பா மறுப்பு; பக். 116

உண்மையா யிருந்தால்...

இந்தக் கீர்த்தனையை விட்டுவிட்டால், மருட்பாக் கூட்டத்தார் தரும் தகவலை உறுதிப்படுத்தக்கூடிய நூற்சான்று எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

இராமலிங்கர், இறைவன்பால் பக்திகொண்டு, பித்தராகவே மாறிய பெருமான். அதனுல், இரகசிய லிங்கத்தைக் காட்டுமாறு தீட்சிதர்களைக் கேட்டிருப்பினும் அது குறித்து வியப்பதற்கில்லை. அவர் 'எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம் என்ன பொருத்தமோ' எனத் துவங்கும் பாடலில்,

"அரசே வுன்னை யணைக்க எனக்குள் ளாசை பொங்குதே
அணைப்போ மென்னு முண்மை யாலென் ஆவி தங்குதே
விரைசேர் பாதம் பிடிக்க வென்கை விரைந்து நீளுதே
மேவிப் பிடித்துக் கொள்ளுந் தோறும் உவகை யாளுதே"

என்று பாடி, தமது உள்ளத்தே கரைகடந்த வெள்ளமெனப் பெருக்கெடுத்தோடும் பக்திப் பிரவாகத்திலே தாம் மிதப்பதை எழுத்தோவியந் தீட்டிக் காட்டுகின்ளுர். ஆனுல், தில்லைக் கோயில் தீட்சிதர்களோ, ஆகம விதிகளின்படி பணிபுரிபவர்கள். அதனுல், இரகசிய லிங்கத்தை அவருக்குக் காட்ட மறுத்திருந்தாலும், அது நாம் புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

Koviloor Digital Library

சத்திய ஞான சபை, சிதம்பரம் நடராசப் பெருமான் கோயிலுக்குப் போட்டியாக அமைக்கப்பட்டதென்று நினைக்கத் தேவையில்லை. ஏனெனில், சிதம்பரம் கோயில் சைவ சமயத்தாருக்கு மட்டுமே உரியது. சத்திய ஞான சபையோ சமய மத பேதங் கடந்த சுத்த சன்மார்க்கர் ஆலயம். மற்று, முன்னது, சைவ ஆகமப்படி அமைந்ததாகும். பின்னது, ஆகமங் கடந்த புதுமுறையில் அமைந்ததாகும். ஆம்; இராமலிங்கர், தம் கருத்திலிருந்த பொது நெறிப்படி எல்லாச் சமயத்தவரும் கூடி வழிபடத்தக்க ஒரு பொதுக் கோயிலை அமைக்க விரும்பினரென்று கொள்வதே முறையாகும். சமரச சுத்த சன்மார்க்க சங்கம் அமைப்பதற்கு (1865 ஆம் ஆண்டிற்கு) முன்பே சங்கத்தைச் சார்ந்த தனிக்கோயில் ஒன்றையும் அமைக்கத் திருவுளங்கொண்டாரென்பதனை, "சமரச சுத்த சன்மார்க்கச் சங்கமே கண்டுகளிக்கவும்" என்று பாடி, "சங்கம்சார் திருக் கோயில் கண்டிடவும்...இச்சைகாண் எந்தாய்" என்றும் கூறியதால் அறிகின்றோம். அடிகளாரின் சமரச உணர்வு, போட்டி—போராட்டங்களுக்குப் புறம்பானதாகும்.

ஆம்; அடிகளார் சத்திய ஞான சபை அமைத்தது 1871ல். அதற்கு முன்பே, சிதம்பரம் கோயில் சிற்சபையைப் புதுப்பித்துத் தருவதாகத் தில்லைவாழ் தீட்சிதர்களுக்கு உறுதி கூறியது 1866ல். சுத்த சன்மார்க்க சங்கம் கண்டது அதற்கும் முன்னே, 1865ல். அதற்கு முன்னதாகவே, சங்கமும் சங்கம்சார் கோயிலும் காணத் தமக்கு விருப்பமிருப்பதாகப் பாடியுள்ளார் வள்ளலார். இதனால், சங்கம்சார் கோயில் காண்பதென்ற முடிவுடனிருந்த காலத்திலேயே, சிதம்பரம் சிற்சபையையும் புதுப்பிக்க எண்ணியிருந்தார் என்பது புலனாகும். ஆகவே, வடலூர் சிற்றம்பலத்திற்கும் தில்லைச் சிற்றம்பலத்திற்கும் போட்டி கற்பிக்கத் தேவையில்லை. வள்ளலாருடைய உரைநடை—கவிதை நடை எழுத்துக்களிலே அதற்குச் சான்றுமில்லை.

1871-ல் சத்திய ஞான சபை எழுந்தது. அந்தக் கோயிலை அமைத்த பிரதேசத்திற்கு 'உத்தர ஞான சிதம்பரம்' என்று பெயரிட்டு, பெயரில் குழப்பம் ஏற்படாமலிருக்க, சிதம்பரம் பெரிய கோயிலைப் 'பூர்வஞான சிதம்பரம்' என்று அழைக்கலானார்.

ஞானசபை, 'எட்டுக்கோணத் தாமரை' வடிவில் அமைக்கப் பெற்றது. அடிகள் வடலூரை யடுத்து மேட்டுக்குப்பம் கிராமத்திலிருந்தபடியே ஞானசபை கட்டும் பணியை மேற்பார்த்து

Koviloor Digital Library

வந்தார். அக்காலத்தில் அடிகளார் பல சித்துக்கள் செய்தார் என்று சொல்லப்படுகிறது. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள வரலாறு கூறும் ஒரு செய்தி வருமாறு :

"ஞான சபையின் கொடி மரத்திற்கு மரம் வாங்கி வரச் சென்னைக்குச் சென்ற கண்ட்ராக்டர் ஆறுமுக முதலியார், **'மரவாடி (மரத்தொட்டி)யில் தக்க மரம் கிடைக்கவில்லை'** என்று மீண்டுவந்து அடிகளிடத்துத் தெரிவிக்க, அடிகள் **'அப்படியானால் நீர் முதலில் போம்; நான் இதோ வருகிறேன்'** என்று கூறி அனுப்பினர். அவர் அவ்வாறே செல்ல, அடிகளார் அவருக்கு முன்னே சென்னையிலுள்ள மரவாடியில், எம்மரம் கொடி மரத்திற்குப் பொருந்துமோ அம்மரத்தின் மீது உலாவிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட முதலியார் பெரிதும் வியப்படைந்தார்.

"பின்னும் அடிகளார் அவ்வாறே அம்மரத்தை வாங்கி முதலியாரிடம் ஒப்புவித்து, 'கொண்டு போம்' என்று கூறினார்கள். கூறியபடியே முதலியார் புறப்பட்டு வடலூருக்குச் செல்வதற்கு முன்னேயே அடிகளார் வடலூரில் காணப் பட்டார்கள்.

"அம்மட்டோ! அவ்வடலூரில் இருந்த எல்லோரும் **'அடிகளார் இன்று முழுதும் இங்கேதான் இருந்தார். வழக்கப்படி பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்'** என்று சொல்லக் கேட்டு, ஆறுமுக முதலியார் பெரிதும் வியப்படைந்து அடிகளாரைத் தொழுது வணங்கினர். 'இது ஆண்டவன் செயல்; வெளிப்படுத்த வேண்டாம்' என்று அடிகள் அவரிடம் கூறினர்."

இடி விழுந்தது !

ஞான சபையின் மேல்விதானம் கட்டும்போது அதில் வேலை செய்துகொண்டிருந்த மூவரைத் தாங்கியிருந்த சாரம் முறிந்து, அவர்கள் கீழே விழுந்தனர். ஆயினும், அவர்களுக்கோ, கீழே வேலை செய்துகொண்டிருந்தவர்களுக்கோ எவ்விதக் கேடும் நேரவில்லை. இதுவும் அடிகளார் செய்த தன்னலமற்ற சித்துக்களுள் ஒன்றாகக் கூறப்படுகிறது.

ஞான சபையைக் கட்டி முடித்தவுடன், அன்பர்களுள் பலர் தஞ்சாவூர் மராட்டியரைக் கொண்டு அச்சபையின் எதிரே

Koviloor Digital Library

மிகுந்த பொருட்செலவில் அழகிய பந்தலொன்று அமைத்தனர். அதனையறிந்த அடிகளார், "இப்பந்தலை அமைத்தவர்கள் உறவினத்தாரல்லர்; புறவினத்தார்" எனக் கூறிச் சினந்தாராம். அத்தொழிலாளர் புலால் உண்ணும் பழக்கமுடையா ராதலால், அடிகளார் அவர்களைப் 'புறவினத்தார்' என்று குறிப்பிட்டார். அடிகள் சினந்ததுமே, திடீரெனப் பெரு மழை உண்டாகி, அம் மழை நடுவில் ஓர் இடி விழுந்து அப்பந்தல் தீப்பற்றிக் கொண்டதாகத் திருவருட்பாப் பெருநூலில் கூறப்பட்டுள்ளது.

அருட்பாவுக்கு எதிரான மருட்பாக் கூட்டத்தார், ஞான சபைக் கட்டிடத்தின்மீதே இடி விழுந்ததாக மிகுந்த களிப்போடு தங்கள் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர். என்னே அவர்தம் கெடுமதி!

வழிபாடு துவக்கம்

ஞான சபையில் வைப்பதற்கென ஐந்தடி உயரமுள்ள சீமைக் கண்ணாடி சென்னையிலிருந்து தருவிக்கப் பெற்றது. அந்தக் கண்ணாடியையும் ஒரு திருவிளக்கையும் மேட்டுக் குப்பத்திலுள்ள தமது சிறு குடிசையில் ஒரு மண்டலம் வைத்து முறைப்படி வழிபாடு செய்து, பின்னர் அவற்றை ஞான சபைக்குக் கொடுத்தருளினார், இராமலிங்கர்.

அக்கண்ணாடியும் திருவிளக்கும் சபாபதி சிவாசாரியார் (குருக்கள்) என்ற முதியவரைக் கொண்டு ஞானசபையில் வைக்கப்பெற்றன. அச்சிவாசாரியார் நெடுங்காலம் தாம் அணிந்திருந்த பூணூலைத் துறந்து, "கண்மூடி வழக்கங்களை" யெல்லாம் வெறுத்து, சமரச சுத்த சன்மார்க்க நெறியைக் கடைப்பிடித்தவராவார்.

அடிகள், இறைவழிபாட்டின் போது பிடில், மத்தளம், பிரம்மதாளம், நகார், கண்டாமணி, நாதசுரம் முதலிய கருவிகளைக் கொண்டு ஒலிகளை எழுப்பிப் பலவிதமாக உரத்த குரலில் கோஷங்களைச் செய்து பூஜைகள் செய்வதை அடியோடு வெறுத்தார். இந்த வழிபாட்டு முறை சன்மார்க்கத்திற்கு முற்றிலும் மாறானதென்றும் கூறினார்.

> "மனநெகிழ்ச்சியோடு ஆண்டவனுடைய தோத்திரங்களை அமைதியாக அன்போடு பாடுவதுதான் சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியத்திற்கு முற்றிலும் உடன்பாடானது."

Koviloor Digital Library

என்று தம்முடைய அடியார்களுக்குப் போதித்தார். அடிகள், இறைவழிபாட்டின்போது தேங்காய் உடைப்பதைக்கூட வெறுத்தார்.

> "தேங்காய் உடைக்க உங்களுக்கு விருப்பமிருந்தால், அதனை முன்னதாகவே உடைத்துத் திருகி, அத்துடன் சர்க்கரை, கற்கண்டு முதலியன கலந்து ஆண்டவருக்கு இனிப்பாக நைவேத்தியம் வைப்பது நலம். ஆண்டவரை வாயார வாழ்த்துவது தவிர அபிஷேகம்,புட்ப அலங்காரம், வாகனங்களில் ஏற்றி வீதி உலா வருதல் இன்னும் இது போன்ற. மற்ற ஆடம்பரங்கள் கூடாது. கடவுளுக்குச் செலவு செய்யவேண்டு மென்ற எண்ண மிருந்தால், அப் பணத்தை ஏழைகளின் "வயிற்றுப் பெட்டியில் நிரப்புங் கள்."

என்று அடிக்கடி அன்பர்களுக்கு உபதேசம் செய்து வந்தார்.

ஒருநாள் தம் சீடர்கள் திருவிளக்குகள் நிறைய ஏற்றி வைக்க, அதைக் கண்டு, "இவ்வளவு ஏன்? ஒன்றிரண்டை வைத்துக் கொண்டு, மீதியை ஏழை மக்களின் உபயோகத்திற் குக் கொடுத்தால் மிக நலமாய் இருக்காதா?" என்று கண்டித் தார் இராமலிங்கர்.

சத்திய ஞானசபை அமைந்து, அதிலே சன்மார்க்க முறைப் படி வழிபாடு தொடங்கிய பின்னரும் இராமலிங்கப் பெருமான் மேட்டுக்குப்பத்திலுள்ள தம்முடைய சித்திவளாகத்திலேயே தங்கியிருந்தார். ஆயினும் தைப்பூசத் தினத்தன்று சத்திய ஞான சபையில் நடைபெறும் பொதுவழிபாட்டில் கலந்து கொள்வதை மட்டும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சத்திய ஞானசபையில் அடிகளாரின் கருத்துப்படி நிகழ்ந்த வழிபாட்டு முறை, ஆகம நெறிப்படி அமைந்துள்ள வேறு கோயில் எதிலும் இல்லாததாகும். அடிகள் காண விரும்பிய சாதி, சமய, இன வேற்றுமையற்ற சன்மார்க்கப் புதுவுலகத் தின் முதற்கோயில் சத்திய ஞான சபை. அதனால் அங்கு நிகழும் வழிபாடும் ஒரு சமயச் சார்புடைய வேதாகம முறை களுக்கு வேறுபட்டதாகி விட்டது.

ஏழு திரைகள்

வடலூர்ச் சத்திய ஞான சபையில் அமைந்துள்ள பெரிய தோர் கண்ணாடியின் எதிரில் சோதியாகிய திருவிளக்கு உள் ளது. அந்தச் சோதியைத் தரிசிப்பதற்குத் தடையாக அமைந்

Koviloor Digital library

துள்ள திரைகள் ஏழு. வழிபாட்டின்போது அந்த ஏழு திரைகளும் ஒன்றன்பின் ஒன்ருக நீக்கப்பெறும். பின்னர்ச் சோதி தரிசனம் கிடைக்கும். இந்த ஏழு திரைகளுக்கு அடிகளார் தரும் விளக்கம் வறுமாறு :

"இந்தப் பவுதிக உடம்பி லிருக்கிற நீ யாரெனில்: நான் ஆன்மா, சிற்றணு வடிவன். ஷி அணு கோடி சூரியப் பிரகாசம் உடையது. லலாடஸ்தான மிருப்பிடம், கால் பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம். இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய 7 திரைகள் உண்டு. அவையாவன: கருப்புத்திரை—மாயாசத்தி, நீலத்திரை—கிரியா சத்தி, பச்சைத்திரை—பராசத்தி, சிவப்புத்திரை—இச்சா சத்தி, பொன்மைத் திரை—ஞான சத்தி, வெண்மைத் திரை—ஆதி சத்தி, கலப்புத் திரை—சிற்சத்தி."

- பா. பி. ப. பு. 4. பக். 92;

"ஞான சபை" யென்பதற்கு வள்ளலார் தரும் விளக்கம் வருமாறு:

"ஞான சபை யென்பது ஆன்மப் பிரகாசம். அந்தப் பிரகாசத்திற் குள்ளிருக்கும் பிரகாசம் கடவுள். அந்த உள்ளொளியின் அசைவே நடனம். இவற்றைத்தான் முறையே சித்சபை அல்லது ஞான சபை என்றும், நடராஜர் என்றும், நடனம் என்றும் சொல்லுகிறது."

- பா. பி. ப. பு. 4. பக்; 70.

தைப்பூசத்தில் மட்டுமின்றி, ஒவ்வொரு திங்கள் தோறும் பூசநட்சத்திரத்தில் ஞானசபைத் தரிசனம் நிகழ ஏற்பாடு செய்தார் அடிகள்.

அடிகளார் அதிருப்தி

ஞானசபை அமைக்கப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு அங்கு நடைபெறும் வழிபாட்டு முறையில் அதிருப்தி கொண்ட அடிகளார், கடுமையான நிபந்தனைகள் கொண்ட புதிய முறையை ஏற்படுத்தினர். அந்த முறைபற்றி அடிகள் விடுத்த விளம்பரப் பத்திரிகை வருமாறு :

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

ஞான சபை விளக்க விபவ பத்திரிகை

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்.

இன்று தொடங்கி சபைக்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபை என்றும், சாலைக்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை என்றும், சங்கத்திற்குச் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்றும் திருப்பெயர் வழங்குதல் வேண்டும்.

இன்று தொடங்கி அருட்பெருஞ் சோதி ஆண்டவரது அருட்பெருஞ் சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞான சபைக்குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றால் செய்த குத்துவிளக்கு வேண்டாம். மேலேற்றுகிற குளோப் முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடி விளக்கு வைக்குங் காலத்தில், தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி—கரண சுத்தி உடையவர்களாய்த் திருவாயிற்படிப் புறத்திலிருந்துகொண்டு விளக்கேற்றி, பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர் கையிற் கொடுத்தாவது, எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையில் கொடுத்தாவது உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைத்துவரச் செய்விக்க வேண்டும். நாலு நாளைக்கு ஒரு விசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும், பெரியரைக் கொண்டாயினும் உள்ளே தூசு துடைப்பிக்க வேண்டும்.

தூசு துடைக்கப் புகும்போது நீராடி சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுத்திக் கொண்டு புகுந்து முட்டிக்காலிட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும்.

விளக்கு வைக்கின்ற போதும் இங்ஙனமே செய்விக்க வேண்டும்.

விளக்கு வைத்தற்கும் தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற 12 வயதிற்குட்பட்ட சிறுவரும் 72 வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள், இடம், போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய்த் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

Koviloor Digital Library

விளக்கு வைக்கும்போதும் தூசு துடைக்கும் போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதி செய்தல் வேண்டும்.

யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே போதல் கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட விருக்கப்படாது. அத்திறவு கோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி அப்பெட்டியைப் பொற்சபைக்குள் வைத்து அப் பெட்டித் திறவுகோலை ஆஸ்தானக் காவல் உத்தரவாதி யாய் இருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி, காலம் நேர்ந்த தருணம் எழுது கிறேன்.

இங்ஙனம்
சிதம்பரம்
இராமலிங்கம்.

- பா. பி. ப. பு. 5: 108-109.

இந்த அறிக்கை வெளியான ஆங்கிலத் தேதி, 18-7-1872 ஆகும். இந்த அறிக்கையிலே 'நம்மவர்' என்று அடிகளார் குறிப்பிடுவது சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்களை யாகும். அறிக்கையின் துவக்கத்திலே, சங்கம்—சாலை—சபை ஆகிய மூன்று அமைப்புகளின் பெயரோடு 'சத்திய' என்ற புனிதச் சொல்லையும் சேர்த்துப் பழைய பெயர்களை அடிகள் விரிவு படுத்தியிருப்பது கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

முதற் கோயில்!

விக்கிரக வழிபாட்டை அடிகளார் மந்த நியாயமாக ஒப்புக் கொள்பவர் என்று முன்பே சொன்னோம். ஆயினும், தம்முடைய கற்பனையிலுள்ள இலட்சிய சமுதாயத்தின் குடிமக்களாகச் சன் மார்க்க சங்க அங்கத்தினர்களை அடிகள் கருதினராதலால் சமயங் கடந்த ஒரு சமுதாயத்தின் முதற்கோயிலாக ஞான சபையைப் படைத்து, அதிலே விக்கிரக வழிபாட்டிலிருந்து வேறுபட்ட ஒளி வழிபாட்டு முறையை ஏற்படுத்தினர்.

அந்த வழிபாட்டில் கலந்துகொள்வோர், இறைவனை, சமய சன்மார்க்கிகள் குறிப்பிடும் பெயர்களால் அல்லாமல், சர்வ சமயத்தாரும் ஏற்கத்தக்க பொதுப் பெயர்களால் குறிப்பிட்டு

Koviloor Digital Library

வழிபட வகை செய்தார். அவ்வகையில், 'சன்மார்க்க விண்ணப் பங்கள்' என்ற புதுப் பெயரில் நான்கு விண்ணப்பங்களை வெளியிட்டார்.

(1) சுத்த சன்மார்க்க சத்தியச் சிறு விண்ணப்பம்.

(2) சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெருவிண்ணப்பம்.

(3) சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான விண்ணப்பம்.

(4) சமரச சுத்த சன்மார்க்க சங்க சத்திய விண்ணப்பம்.

இந்த விண்ணப்பங்களிலே, சன்மார்க்க அடியவர்கள் இறைவனை நோக்கி விண்ணப்பித்துக் கொள்ளுங்கால்,

"தனித் தலைமைப் பெரும்பதியாகிய பெருங்கருணைக் கடவுளே !"

"கருணா நிதியாகிய கடவுளே!"

"களைப்பறிந்துதவும் கருணைக் கடலாகிய கடவுளே!"

"சர்வ வல்லபராகிய தனித் தலைமைக் கடவுளே!"

"எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட் பெருஞ் சோதி ஆண்டவரே!"

"இயற்கை யுண்மைக் கடவுளே!"

"இயற்கை இன்பக் கடவுளே!"

என்பன போன்ற சமரச உணர்வை வெளிப்படுத்தும் பொதுப் பெயர்களால் சுட்டி, நாம—ரூப பேதங்களை மறந்து கடவுளை வழிபடத் தூண்டினார்.

ஆண்டவன் ஆணை!

சத்திய ஞான சபையைத் தாம் அமைத்ததற்கு ஆண்டவன் தமக்கிட்ட ஆணையே காரணம் என்கிறார் அடிகளார்.

இதனைச் சன்மார்க்க விண்ணப்பங்களில் முதலில் உள்ள சத்தியச் சிறு விண்ணப்பத்தில் கூறுகின்றார் :

"களைப்பறிந்துதவும் கருணைக் கடலாகிய கடவுளே! தேவரீர்,

"நெடுங்கால மரண முதலாகிய அவத்தைகளால்துன்ப முற்றுக் களைப்படைந்த உங்களை அவ்வவத்தைகளினின்றும் நீக்கிக் களைப்புங் கலக்கமும் தவிர்த்து அழியாதபேரின்

Koviloor Digital Library

சித்தியை அடைவித்தற் பொருட்டாகவே பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் பார்வதிபுரம் என்று குறிக்கப்படுகின்ற உத்தர ஞான சித்திபுரத்தில் யாம் அளவு கடந்த நெடுங் காலம் சித்தியெல்லாம் விளங்கத் திருவருள் நடஞ் செய்வோம்' என்றும்; 'அது தருணம் மிகவும் அடுத்து சமீபித்த தருணம்' என்றும்; 'அப்பதியினிடத்தே யாம் அருள் நடம் புரிதற்கு அடையாளமாக ஓர் ஞான சபை காணுதல் வேண்டும்' என்றும் திருவருள் குறிப்பால் அறிவித்தது மன்றி, அருளுருவாகி யெங்களகத்தும் புறத்தும் அமர்ந்தருளி, யாதோர் தடைகளுமின்றி, அத்திருஞான சபையுந்தோன்றி விளங்கச் செய்வித்தருளிய தேவரீர் பெருங் கருணையைக் கருதுந்தோறும் பெருங் களிப்படைகின்றோம்.

"இனி அத்திருஞான சபையை அலங்கரித்தல் வேண்டுமெனக் குறிப்பித்த வண்ணம் அலங்கரிக்கத் தொடங்குகின்றோம். அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! தேவரீர் அருளுருவாகி யெங்கள் அகத்தும் புறத்தும் அமர்ந்தருளி யாங்கள் செய்யும் இவ்வலங்காரத் திருப்பணியில் எவ்விதத்தாலும் யாதொரு தடையும் வாராத வண்ணஞ் செய்வித்து அவ்வலங்காரத் திருப்பணியை முற்றுவித் தருளல் வேண்டும்"

"எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ் சோதி யாண்டவரே! தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம்! வந்தனம்!"

இதனால் ஆண்டவன் தம்முள்ளத்தி லிருந்து ஆணையிட்டபடியே அடிகளார் ஞான சபை அமைத்தாரென்பது புலனாகும்.

ஞான சபை கண்ட சன்மார்க்கப் பேரியக்கத்தின் தலைவர், அந்தச் சபைக்கு வந்து ஆண்டவனை வழிபடுமாறு அகில உலக மக்களையும் அன்புக் குரல் கொடுத்து அழைத்தார்.

" வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர் நுமது
வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்துமயங் காதீர்
மையகத்தே உறுமரண வாதனையைத் தவிர்த்த
வாழ்க்கையதே வாழ்க்கையென மதித்ததனைப் பெறவே
மெய்அகத்தே விரும்பிஇங்கே வந்திடுமின் எனது
மெய்ப்பொருளாந் தனித்தந்தை இத்தருணந் தனிலே
செய்அகத்தே வளர்ஞான சித்திபுரந் தனிலே
சித்தாடல் புரிகின்றார் திண்ணம்இது தானே!"

Koviloor Digital Library

திருவருட்பா வெளியீடு

இராமலிங்க வள்ளலார், ஓர் அருட்கவிக் குரிய தகுதிக ளனைத்தையும் குறைவறப் பெற்றிருந்தார். எவ்வளவுக் கெவ் வளவு அவர் இறையருளை அணுகிக் கொண்டிருந்தாரோ, அவ் வளவுக் கவ்வளவு பக்திப் பாடல்களை எழுதி எழுதிக் குவித்துக் கொண்டிருந்தார். அவர் எழுதிய பாடல்கள் பதினாயிரத்துக்கும் மேற்பட்டவையாக இருக்கலாம். மகாகவி கம்பர் பன்னீராயிரம் பாக்களால் இராம காதை இயற்றினார். அவருக்குப் பிறகு கவிதை மழை பொழிந்த பெருமை நமது இராமலிங்க அடிகளா ருக்கே உரியது.

மனிதரைப் பாடாத மாண்பு

அடிகளார் நர ஸ்துதியாக ஒரு பாடல்கூட எழுதவில்லை. அவருடைய உள்ளத் தூய்மைக்கும் தெய்வப் பற்றுக்கும் இது சிறந்த சான்று. மறந்தும் மனிதரைப் பாடாத மாண்பினை என்னென்று புகழ்வது! இறைவனை—"இமைப்பொழுதும் என் னெஞ்சில் நீங்காதான்" என்றார், மணிவாசகப் பெருமான். அது போல, இமைப்பொழுதும் இறைவனை மறவாமல்-மறக்கவும் விரும்பாமல் இருந்தவ ராதலால், மனிதரைப் புகழ்ந்து பாட வள்ளலாருக்கு வாய்ப்பில்லை போலும்! "வழுக்கி வீழினும் திருப் பெயரல்லால் மற்று நானறியேன் மறு மாற்றம்" என்றார் சுந்தரர். அவரது குறிக்கோளிலிருந்து வழுவாது வாழ்ந்த வழித்தோன்றலாக விளங்கினார் வள்ளலார்.

வள்ளலார் துவக்கிய சத்திய தருமச்சாலை, சத்திய ஞான சபை போன்ற அரிய அமைப்புகள் பலவற்றிற்கு அவர் கேட்ட போதெல்லாம் பொருள்களை வாரி வாரி வழங்கினர், பக்தர்கள் பலர். அவர்களைக்கூடக் கவியெழுதிப் புகழ்ந்தா ரில்லை.

இந்த ஒழுக்கம், பக்தி நெறியில் நிற்போர் அனைவரும் நினை வில் கொள்ளத்தக்க தாகும்.

ஒன்பது வயதிலே கவி பாடினார்

ஞான சம்பந்தர் மூன்று வயதில் உமையம்மை தந்த ஞானப்பாலுண்டு தேவாரம் புனையத் தொடங்கினாராம். இதனை,

Koviloor Digital Library

"உயிர்அநு பவம்உற் றிடில்அத னிடத்தே
ஓங்கருள் அநுபவம் உறும்அச்
செயிரில்நல் அநு பவத்திலே சுத்த
சிவஅநு பவம்உறும் என்ருய்
பயிலுமூ வாண்டில் சிவைதரு ஞானப்
பால்மகிழ்ந் துண்டுமெய்ந் நெறியாம்
பயிர்தழைந் துறவைத் தருளிய ஞான
பந்தன்என் ருேங்குசற் குருவே!"

என்னும் பாடலில் வள்ளலாரும் அறிவிக்கிருர்.

ஞானப்பால் உண்ணும் பேறு பெருத வள்ளற் பெருமான் தம்முடைய ஒன்பதாவது வயதில் பாடத் தொடங்கி, ஐம்பதாவது வயதுவரை பாடிக்கொண்டே யிருந்தார். 'பரமனையே பாடுவார்' என்ருல், பத்தொன்பதாம் நூற்ருண்டில் அப்பெயர் நம் அடிகளாருக்கே பொருந்துவதாகும். நாற்பதாண்டுக் காலம் பரமனைப் பாடுவதையே பணியாகக் கொண்டிருந்த பெருமான், எத்துணை ஆயிரம் பாடல்களைப் பாடினுரோ, யாரறிவார்! அவற்றுள் காற்ருேடு கலந்தவை போக, ஏட்டில் ஏறியவை எத்துணை ஆயிரமோ? அவற்றுள்ளும் இங்குமங்குமாகச் சிந்திச் சிதறி அழிந்தவை போக அச்சு வாகனமேறி நம் கைக்குக் கிடைத்துள்ள பாடல்கள் சுமார் ஆருயிரமாகும்.

அழுதழுது பாடினுர்!

அடிகளார் மனிதரைப் புகழ்ந்து பாடவில்லை யென்ருல், மக்களை அறவே மறந்து மகாதேவனிடம் சரண் புகுந்தாரென்று கொள்ளக்கூடாது. வறுமையாலும் பிணியாலும் அறியாமையாலும் அல்லலுற்ற மக்களை நினைந்து நினைந்து அவர்களின் அல்லல் தீர ஆண்டவனிடம் அழுதழுது முறையிட்டார் வள்ளலார். அவ்வகையில் அவர் பாடிய பாடல்கள் ஏராளமாகும்.

தாம் புனைந்த பாடல் ஒவ்வொன்றையும் காத்து, அச்சடித்து, அவற்றை அவனி முழுவதும் பவனிவர விட்டு, புவனமெங்கும் புகழ்பெற வேண்டும் என்ற ஆசை அடிகளாருக்கு இருக்கவில்லை. உண்மையில், மக்களுடைய துயர் கண்டு மனமுருகிய ஞானியர் பரம்பரையிலே முதல்வராக விளங்குகின்ருர் வள்ளலார். அடுத்து, அத்துறையில் அவரைப் பின்பற்றிய பெருமை மகாகவி பாரதியினுடையதாகும்.

Koviloor Digital Library

வள்ளலா ரியற்றிய பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட அன்பர்கள் விரும்பியபோதும் அதற்கு இணங்க மறுத்தார். இந்த அடக்க வுணர்ச்சி, தமிழினத்து அறிஞர்களின்—ஞானிகளின் தனிப் 'பண்பு' போலும்! இந்தப் பண்பால் அழிந்தொழிந்துபோன கவிதைகள் ஆயிரமாயிர மெனலாம்.

முதலில் வெளியான நூல்

அடிகளார் பிள்ளைப் பருவத்தில் சென்னை நகரில் 'ஏழு கிணறு' என்னும் பெயருள்ள பேட்டையில் வாழ்ந்த காலை, நாள்தோறும் கந்த கோட்டத்திற்கு யாத்திரை செய்து, சொந்தமாகக் கவிதை புனைந்து கந்தப் பெருமானை வழிப்பட்ட செய்தியை முன்பே கூறினேம். அப்படி அவர் புனைந்த கவிதைகளைக் கந்தப் பெருமான் கோயிலைச்சார்ந்த ஒருவர் குறித்து வைத்துக்கொண்டு, பின்னர் அதனை ஒரு நூலாக வெளியிட்டார். அதுவே அடிகளாரின் பாடல்களடங்கிய முதல் நூலாகும்.

"சென்னைக் கந்தர் தெய்வமணி மாலை—சரணப் பத்து" என்பது நூலின் பெயர். "பாளையம் முத்து செட்டியார் அவர்கள் கேட்டுக் கொண்டதற் கிணங்க கயத்தாறு ஞானசுந்தரம் ஐயர் அவர்களால் இந்நூல் வெளியிடப்பட்டது" என, அட்டைப் பக்கத்தில் பொறிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு 'அருட்பா' எனப் பெயர் தரப்படவில்லை என்பது கவனத்திற் குரியதாகும். இந்நூல் வெளியான காலம் 1851-ஆம் ஆண்டாக இருக்கக் கூடுமென்று அனுமானிக்கப் படுகின்றது.

முதல் நான்கு திருமுறை

இந்தச் சிறுநூல் வெளியான சில ஆண்டுகள் கழித்து வள்ளலார் பாடிய பாடல்களனைத்தையும் தொகுத்துப் பெருநூல் வெளியிடுகின்ற பொறுப்பை அன்பர் சிலர் மேற்கொண்டனர். அவர்களுள், தொழுவூர் வேலாயுத முதலியார், இறுக்கம் இரத்தின முதலியார் ஆகிய இருவரும் இங்குக் குறிப்பிடத் தக்கவராவர்.

புகழ் விரும்பிப் பாடாத புண்ணியராதலால், அன்பர்களின் முயற்சிக்கு ஆதரவளிக்க மறுத்தார் அடிகளார். அதனால் மனமொடிந்த இரத்தின முதலியார், நூல் வெளியிட அனுமதி கிடைக்கும்வரை ஒருவேளை மட்டுமே உண்பது என விரதம் பூண்டு, அதனை அடிகளார்க்கும் அறிவித்தார்.

Koviloor Digital Library

உண்ணுவிரதியின் வெற்றி !

கருணையே வடிவான இராமலிங்கர் தம் ஆருயிர்த் தோழர் அரைப்பட்டினி கிடப்பதறிந்து வருந்தி, அவருக்கு எழுதிய கடிதம் வருமாறு :

"நான் சென்னப்பட்டணம் விட்டு இவ்விடம் வந்த நாள் தொடங்கி நாளதுவரையில் பாடிய பாடல்கள் பல. அவைகளை முழுதும் எழுதிவைக்கவேண்டுமென்கிற லக்ஷியம் எனக்கு இல்லாமையால் அப்படி அப்படிச் சிதறிக் கிடக்கின்றன. ஆயினும் அவைகளை சேர்ப்பிக்கச் சுமார் இரண்டு மாதம் பிடிக்கும். ஆதலால் நான் பங்குனி மீ அவசியம் வருகிறேன். வரும்போது கொண்டுவருகிறேன். இது உண்மை. எவ்விதமாவது இரண்டு மாதத்திற்குள் தமது இடத்தில் இருக்கச் செய்கிறேன்.

"அன்புள்ள என் கண்மணிபோன்ற தாம் இதனடியில் எழுதுகின்ற வண்ணம் செய்யப் பிரார்த்திக்கிறேன். அதாவது இந்தப் பாடல்கள் பங்கியில் அனுப்பி என்னிடம் சேருகின்ற பரியந்தம் நான் ஒருவேளை போசனம் தான் செய்வேன்' என்று எழுதியதைப் பார்த்த பின்பு நான் சாப்பிடுகிற சாதம் உடம்பில் பொருத்தவில்லை. பட்டினி கிடந்தவனைப் போல இருக்கிறேன். ஆதலால் என்னை நிம்மதியுள்ளவனுக்க எண்ணங்கொண்டு ஒரு வேளை போசனங் கொள்ளுகிற நிபந்தனை நீக்கி உடனே தபாலில் எனக்குத் தெரிவித்தால் அல்லாது நான் சலிப்பைத் தவிரேன். ஒரு வேளைப் போசனம் உள்ளவனுகவே யிருப்பேன். இது சத்தியம். என்மேல் ஆணை. தாம் மேற்குறித்த நிர்பந்த ஏற்பாட்டைத் தவிர்த்து உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். 2 மாதத்திற்குப் பின்பு பாடல்கள் அவசியம் சேரும்."

—ப. பி. ப. பு. 5; பக். 29,30.

அன்பர் இரத்தின முதலியாரின் சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றது. இல்லையேல், அடிகளார் எழுதிய அருட்பாடல்களுள் எத்துணை ஆயிரம் பாடல்கள் அழிந்து போயிருக்குமோ— யாரறிவர்! முதலியாருக்குத் தமிழுலகம்—குறிப்பாக, பக்தியுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

வள்ளல் யார் ?

அடிகளாரின் பாடல்கள் அனைத்தையும் சேகரித்து அவற்றை ஆறு திருமுறைகளாக வகுத்தார், உபயகலாநிதி தொழுவூர் வேலாயுத முதலியார். அப்படி வகுத்தவற்றுள், கடைசியாகவுள்ள ஆறுவது திருமுறையை அச்சிடக்கூடாதென்று அடிகள் கண்டிப்பாக ஆணையிட்டு விட்டார். ஆறுந் திருமுறையில் தாம் தெரிவித்துள்ள கருத்துக்கள் சுத்த சன் மார்க்கிகள் மட்டுமே தெரிந்து பின்பற்ற வேண்டியவை யாகையால் பொதுமக்கள் மத்தியிலே அவற்றை நடமாடவிட வேண்டா என்று அடிகள் தெரிவித்ததாகச் சொல்லப்படுகின்றது. இஃது எப்படியாயினும், 1867-ஆம் ஆண்டில் முதல் நான்கு திருமுறைகள் மட்டுமே அச்சிடப்பட்டு வெளியாயின.

அப்புத்தகத்தில் அடிகளாரின் பெயருக்கு முன் **'திருவருட் பிரகாச வள்ளலார்'** என்ற வாசகம் பொறிக்கப் பெற்றிருந்தது. அதுகண்டு, பதிப்பாசிரியர் தொழுவூர் வேலாயுத முதலியார் மீது சினங்கொண்டு,

> "பிச் ஏங்காணும்! திருவருட்பிரகாச வள்ளலார் என்று உம்மை யார் போடச் சொன்னது ?"

என்று அதட்டிக் கேட்டார். குணமென்னும் குன்றேறி நின்ற பெருமான் என்றுமில்லாதவாறு சினங் கொண்டதைக் கண்ட முதலியார், கைகட்டி வாய் புதைத்து மன்னிப்பு வேண்டுவார் போல மௌனக் கோலம் பூண்டார். ஐந்து நிமிடங்கள் கழித்து,

> "திருவருட் பிரகாச வள்ளல் (பதி) ஆர் என்னும் சிதம் பரம் இராமலிங்க பிள்ளை"

என்று பொருளுரை கூறினார் அடிகளார். ஆம்; தமது சீடர் தமக்குச் சூட்டிய பட்டப் பெயரைத் தம் புலமைத் திறம் கொண்டு தெய்வத்துக்குச் சூட்டினார் பெருமான்.

அடிகள், தம்முடைய பாடல்களில் பல்வேறிடங்களில் இறைவனை 'வள்ளல்' என்று குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவிற் கொள்ளத்தக்க தாகும்.

அம்பலப் பாட்டே, அருட்பாட்டு !

இப்படியே, இறுக்கம் இரத்தின முதலியார் ஒருமுறை தமக்கெழுதிய கடிதத்தில் இராமலிங்க சுவாமிகள் என்று குறிப்பிட்டிருக்கக் கண்டு,

Koviloor Digital Library

"இராமலிங்க சாமி யென்று வழங்குவிப்பது என் சம்மதமன்று. என்னே? ஆரவாரத்திற்கு அடுத்த பெயராகத் தோன்றுதலில். இனி அங்ஙனம் வழங்காமை வேண்டும்."

— பா. பி. ப. பு. 5: பக் 02.

என 28-3-1866-ல் தாம் எழுதிய கடிதத்தில் முதலியாருக்கு அறிவுரை கூறினர்.

இறைவன் தம்முள்ளத்தில் குடிகொண்டு தம்மைப்பாட வைத்ததாக அடிகள் நம்பினர். அதனாலேயே, 'அருட்பா' எனத் தம் பாடற்றொகுதிக்குப் பெயரிடச் சம்மதித்தார். இதயத்தில் இறைவனிருந்து பாடவைத்தமையாலேயே நரஸ்துதியாக ஒரு பாட்டும் பாடவில்லை இதனை,

"நடராஜர் பாட்டே நறும் பாட்டு
ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும் பாட்டு
சிதம்பரப் பாட்டே திருப் பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாந் தெருப் பாட்டு
அம்பலப் பாட்டே அருட் பாட்டு
அல்லாத பாட்டெல்லா மருட் பாட்டு"

எனப் பாடி, தாம் மனிதரைப் பாடாததன் காரணத்தை மறைமுகமாக விளக்குகின்றார். 'அருட்பா'த் தொகுப்பு நூல் வெளியான பிறகு, பட்டி தொட்டிகளி லெல்லாம் வள்ளலாரின் பாடல்கள் முழங்கின.

'அவனு'ம் ஏற்றான்!

ஆம்; நாடு முழுவதுமே நல்ல வரவேற்பிருந்தது. நாடு மட்டுமா? நடராஜப் பெருமானும் தம் அருட்பாவை ஏற்றுக் கொண்டதாகப் பாடுகின்றார் இராமலிங்கர்.

"ஏதாகு மோஎனநான் எண்ணி இசைத்தவெலாம்
வேதா கமம்என்றே மேலணிந்தான்—பாதார
விந்தம் எனதுசிர மேலமர்த்தி மெய்யளித்த
எந்தை நடராசன் இசைந்து,"

"பழம்பிழி மதுரப் பாட்டல வெனினும்
பத்தரும் பித்தரும் பிதற்றும்

Koviloor Digital Library

கிழம்பெரும் பாட்டும் கேட்பதுன் னுள்ளக்
கிளர்ச்சியென் றறிந்தநாள் முதலாய்
வழங்குநின் புகழே பாடுறு கின்றேன்
மற்றொரு பற்றுமிங் கறியேன்
சழங்குடை யுலகில் தளருதல் அழகோ
தந்தையும் தாயும்நீ அலையோ !''

அடிகளார் இயற்றி, அவர் காலத்திலும், அவர் மறைந்த பிறகும் வெளியாகியுள்ள 'அருட்பா'த் தொகுப்பு ஆறு திரு முறைகளுள், முதல் நான்கு திருமுறைகள் 1867-ம் ஆண்டில் வெளியான பின்னர், அடுத்ததாகவுள்ள ஐந்தாம் திருமுறை 1880-ஆம் ஆண்டிலும், இறுதியாக உள்ள ஆறும் திருமுறை 1885-ஆம் ஆண்டிலும் வெளியிடப் பெற்றன.

ஆறும் திருமுறை பற்றி...

அடிகளார் தடைபோட்டதன் விளைவாக, அவர் காலத்தில் முதல் நான்கு திருமுறைகளை வெளியிட்டதோடு அருட்பா அச்சிடும் பணியை நிறுத்தி வைத்திருந்தார் தொழுவூர் வேலா யுத முதலியார். 1874-ல் அடிகளார் மறைந்த பின்னர் ஐந்தாம் திருமுறையை முதலியாரே 1880-ல் வெளியிட்டார். அதன் பின்னர், 1885-ஆம் ஆண்டில் சென்னைச் சமரச சுத்த சன் மார்க்க சங்க அன்பர்களால் திருவருட்பா ஆறும் திருமுறை வெளியானது. அதன் பதிப்புரையில்,

"திருவருட்பா என்னுமித் தெய்வ நூல் ஆறு திரு முறைகளாக வகுக்கப்பெற்றுள்ளது. அவ்வாறனுள் முதல் ஐந்தை ஒரு பிரிவாகவும் ஆறுவதை மற்றொரு பிரிவாகவும் கொள்ளலாம். ஏனெனில், இந்த ஆறுவது திருமுறை யானது ஐயா அவர்கள் திருவாக்கின்படி சமரச சுத்த சன்மார்க்கத்தைப் பெறவேண்டிய சாதகர்கட்கே உரித் தான தாகும். இந்த ஆறுவது திருமுறையைக் கையாளுப வர்கள் சுவாமிகள் காட்டியபடி புனிதமுறு சுத்தசன்மார்க் கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட் டுரிமையைப் பெற்று ஜீவகாருணியத்தையே தெய்வ வழி பாடாகக் கொண்ட சமரச நன்னிலை யெய்திய பக்குவ நிலை யுடையவர்களே ஆவார்கள் என்க. ஆதலாலேயே முதல் ஐந்து திருமுறைகளை ஒரு புத்தகமாகவும், இவ்வொரு திரு முறையை மட்டும் தனியே வேறொரு புத்தகமாகவும் ஆக்கி யுள்ளோம்.''

Koviloor Digital Library

இந்தப் பதிப்புரையினால், அடிகளாரின் ஆணைக்கஞ்சித் தம் வாழ்நாளில் ஆறாந் திருமுறையைத் தொழுவூர் வேலாயுத முதலியார் அச்சிடவில்லை என்பதும், அவரது மறைவுக்குப் பிறகே அச்சிடப்பட்ட தென்பதும் புலனாகும். அப்போதும், சமரச சன்மார்க்க சங்கத்தின் பெயராலல்லாமல், 'சங்கத்தின் அன்பர்கள்' என்னும் பெயரால் வெளியிட்டிருப்பது கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

புரட்சிப் பாடல்கள்

முதலைந்து திருமுறைகளில் பக்திப் பாடல்கள் மட்டுமே காணப்படுகின்றன. குறிப்பாக—திருவொற்றியூர், திருத்தணிகை, கந்தகோட்டம் ஆகிய தலங்களிலுள்ள தெய்வங்கள்மீது பாடியுள்ள பாடல்களையே முதலைந்து திருமுறைகளிலும் காண்கின்றோம். ஆறாவது திருமுறை பூர்வஞான சிதம்பரம், உத்தர ஞான சிதம்பரம், சித்திவளாகம் ஆகிய தலங்களில் அடிகள் தங்கியிருந்தபோது பாடியவையாகும். கருங்குழியிலிருந்த காலத்திலும் எழுதப்பட்டிருக்கலாம்.

முன் தோன்றிய ஞானியர் எவரிடமும் காணாத புரட்சிகரமான சமயச் சீர்திருத்தக் கருத்துக்களை ஆறாந் திருமுறையில் மட்டுமே காண முடிகின்றது. ஐந்து திருமுறைகளிலுள்ள பாடல்களைப் பாடி முடித்தபிறகே ஆறாந்திருமுறைப் பாடல்களைத் தனித் தனியாகப்பாடியிருப்பார் என்று எண்ணுவதற்கில்லை. அச்சிட்டமுறையில் ஆறாந்திருமுறை தனிப் புத்தகமாக விருப்பதால் அப்படி ஒரு மயக்கம் ஏற்பட இடமிருக்கின்றது. ஆனால் அது பிழையாகும்.

சுத்த சன்மார்க்க நெறிவழிச் செல்ல விரும்புவோரை, "சாதகர்"—"சாத்தியர்" என இரு வகையினராகப் பிரிக்கின்றார், அடிகளார். அவர்களில் ஆறாந் திருமுறையில் கூறியாங்குச் சாதி, சமய, மத பேதங்களை யெல்லாம் கடந்து வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயம் சாத்தியர்களுக்கே உண்டு. சாதகர்களும் அத்தகைய வாழ்க்கைக்குப் பயிற்சிபெற வேண்டும். மனித சமுதாயம் முழுவதுமே ஆறாந்திருமுறையில் காணப்படும் புதிய எண்ணங்களை ஏற்று, முதலில் சாதகர்களாகி, இறுதியில் சாத்தியர்களாக வாழவேண்டு மென்பது வள்ளலாரின் விருப்பம். அந்த விருப்பத்தை யொட்டியே அடிகளாரின் மறைவுக்குப் பிறகு ஆறாந் திருமுறை பொதுமக்கள் மத்தியில் வைக்கப்பட்டது போலும்!

Koviloor Digital Library

சாதகரும் சாத்தியரும்

திரு அருட்பாப் பதிப்பிக்கும் பணிக்கு அரைகுறையாக இசைவு தெரிவித்தபின்னரும், தாம் எழுதிய பாடல்களனைத்தையும் பரவவிடுவதில் அடிகள் ஆர்வங்காட்டவில்லை. இதனை,

"...அக்கடிதத்திற் குறித்த விஷயம் எனக்கத்துணை யவசிய மின்றாயினும் தங்கள் கருத்தின்படி இறைவனென்னுள்ளிருந்து பாடுவித்தவைகளை மாத்திரம் தாங்களாயினும் ம-ா-ா செல்வராய முதலியாரவர்க ளாயினும் தாங்கள் வரைந்தபடி செய்துகொள்ளலாம்,"

- பா. பி. ப. பு. 5; பக். 59.

என்று 18-11-1868-ல் தம் நண்ப ரொருவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதால் அறிகிறோம்.

ஒரு சமயத்தில் அடிகளார் சமய நூல்கள் படிப்பதையே வெறுத்தவராகி, தம் உள்ளத்தைத் தெய்வத்தின் திருவடியிலேயே பதியவைக்க விரும்பினர். அந்தச் சமயத்தில், அன்பரொருவர் தமக்கு அனுப்பிய பழைய ஓலைச்சுவடிபற்றி அந்த அன்பருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளதாவது:

"தாங்கள் வரவிட்ட பங்கித் தபாலில் அடங்கிய புத்தகமும் கடிதமும் முன்னும் பின்னுமாக வரப்பெற்றேன். இவற்றுள் பங்கித் தபாலில் அடங்கிய புத்தகத்தைக்கண்ட போது பசியில்லாதவன் பழஞ்சோறு கண்டாற் போலும் குறிப்பில்லாதவனாக விருந்தேன். ஏனெனில் திருவருள் சாட்சியாகத் திருவடிக் கண்ணன்றி வேறொன்றையும் என் மனம் விரும்புகின்றதாகத் தோற்றவில்லை என்றால், இந்தப் பனை ஏட்டையும் அதில் வரைந்த சிறு பிள்ளை விளையாட்டையும்தானே விரும்பும். விரும்பாது. யாரோ தங்களுக்கு வீணாக அலுப்புண்டு பண்ணினார்கள். அது குறித்து வியசனம் அடைந்தேன்."

—பா. பி. ப, பு. 5; பக். 58.

புதுயுகம் பிறந்துவிட்டது!

இப்போது அடிகளாருடைய சன்மார்க்கப் பேரியக்கம் கருவாகி, உருவாகி, மக்கள் நடுவே பீடுநடை போடுகின்றது. சத்திய தருமச்சாலையிலே தினமும் பல ஏழைகளுக்கு அன்னமிடப்படுகின்றது.

Koviloor Digital Library

உத்தரஞான சிதம்பரக் கோயில், சாதி—சமய பேதங்களை வெறுக்கும் சன்மார்க்க சாதகர்களின் 'பாசறை'யாகிவிட்டது.

மேட்டுக்குப்பத்தில் அமைக்கப்பட்ட சித்திவளாகம், மூட நம்பிக்கைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கும் பிரசார மேடையாகிவிட்டது. அங்கு, நாள்தோறும் பிரசார பேரிகை முழங்குகின்றார் வள்ளலார்.

சன்மார்க்க சங்கம் பல கிளைகளைக் கண்டு பல்கிப் பெருகி வருகின்றது.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் புலவர்களும் அறிஞர்களும் அரசாங்க அதிகாரிகளும் வடலூருக்கு "யாத்திரை" செய்தவண்ண மிருக்கின்றனர். அவர்களிலே சிலர், அடிகளாரின் அருகிலேயே இருக்க எண்ணி, வடலூரிலே நிலம் வாங்கி வீடமைத்துக் குடியேறிவிட்டனர்.

சமய—சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பும் ஆற்றல் பெற்ற பிரசாரகர் பலர், தமிழக மெங்கணும் பரவலாகத் தோன்றி, கருத்துப் போரில் ஈடுபடலாயினர்.

ஐந்தாவது, ஆறாவது திருமுறைகள் அச்சடிக்கப்படவில்லையென்றாலும், அவற்றிலுள்ள பாடல்கள் நாடெங்கும் பாடப்பட்டும் பயிலப்பட்டும் வரலாயின.

சுருங்கச் சொன்னால், தமிழகத்திலே புதுயுகம் பிறந்துவிட்டது. இது கண்டு அஞ்சிய வைதிகச் சைவர்கள், வள்ளலாருக்கு எதிராகப் போர்க்கோலங் கொண்டனர்.

Koviloor Digital Library

போர் துவங்கிவிட்டது !

சமரச சுத்த சன்மார்க்க சங்கம் தோன்றிய பின்னர், இராம லிங்க அடிகளாரின் சமய—சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகள் தமிழகமெங்கும் வேகமாகப் பரவின. பருவத்தே பொழிந்த மழைபோல வள்ளலார் கவிதை மழை பொழிந்தா ரென்றே சொல்லவேண்டும். கோயில்தோறும் வீதிதோறும் வீடுதோறும் வள்ளலார் அருட்பாக்கள் பாடப்பெற்றன.

கோயில், வீடு, பள்ளியிலே அருட்பா !

ஆலயம் சென்று, தெய்வச்சிலை முன்பு சிரந்தாழ்த்தி, கரங் கூப்பி, கண்மூடி நின்று வழிபடும் பக்தரெலாம், "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்" என்று துவங்கும் பாடலைப் பாடிப் பரமனைத் துதித்தனர். "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே" என்ற பாடலைப் பாடாத பக்தரில்லை எனலாம்.

ஆலயஞ் சென்று தொழும் பக்தர்களே யன்றி, "அன்னக் காவடி பிச்சை" என்று இல்லந்தோறும் சென்று குரல் கொடுக்கும் பண்டாரங்களும்,

> " அம்பலத் தரசே அருமருந் தே
> ஆனந்தத் தேனே அருள் விருந் தே "

எனத் தொடங்கும் இசையோ டமைந்த நாமாவளிகளைப் பாடி, இராமலிங்கரின் புரட்சிகரமான கருத்துக்களை இல்லந்தோறும் வழங்கி வந்தனர்.

வயது வந்தோரே யன்றி, பள்ளியில் படிக்கும் சிறுர்களும்,

> " கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
> காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே "

எனத் துவங்கும் பக்திப் பாடலைப் பாடி, பள்ளித் தலங்களை யெலாம் கோயில்களாக்கினர்.

Koviloor Digital Library

அவ்வை—ஆண்டாள்—புனிதவதி போன்ற அருளாளர் வழி வந்த தமிழ்ப் பெண்களெலாம்,

" கொம்மி யடிப்பெண்கள் கொம்மியடி—இரு
கொங்கைகு லுங்கவே கொம்மியடி "

எனத் துவங்கும் கும்மிப் பாடலையும், பிற இசைப் பாடல்களை யும் பாடிப்பாடி வீடுகளையெல்லாம் கோயில்களாக்கினர்.

திருமண இல்லங்களிலும் பிறவிடங்களிலும் அமையும் இசையரங்குகளி லெல்லாம்,

"தெண்டனிட்டே னென்று சொல்லடி—சுவாமிக்கு நான்
தெண்டனிட்டே னென்று சொல்லடி."

என்று துவங்கும் இசைப் பாடல்கள் பாடப்பட்டன.

பிணத்தின் முன்னேயும் அருட்பா !

பிண ஊர்வலத்தின் போது, சங்கு முழக்கி, சேமகலம் கொட்டிச் செல்லும் பணியாளரும்,

" அருட்சோதித் தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம் "

என்ற பாடலைப் பாடுவதைச் சமயச் சடங்காகக் கடைப்பிடித் தனர்.

ஒருவர்க்கு மேற்பட்ட சிவபக்தர்கள் கூடிவிட்டால், "அருட் பெருஞ்சோதி தனிப்பெருங் கருணை" என்ற சமரச சுத்த சன் மார்க்க மந்திரம் ஒலிக்கும்.

வைணவரும் பாடினர்

சைவர்களே யன்றி, வைணவ பக்தர்களும் வள்ளலாரின் அருட்பாவை வாய்மணக்கப் பாடலாயினர்.

" அறம்பழுக்குந் தருவேயென் குருவே யென்றன்
ஆருயிருக் கொருதுணையே அரசே பூவை
நிறம்பழுக்க அழகொழுகும் வடிவக் குன்றே
நெடுங்கடலுக் கணையளித்த நிலையே வெய்ய
மறம்பழுக்கும் இலங்கைஇரா வணனைப் பண்டோர்
வாளியினுற் பணிகொண்ட மணியே வாய்மைத்

Koviloor Digital Library

திறம்பழுக்கும் சீராம வள்ள லேநின்
திருவருளே யன்றிமற்றோர் செயலி லேனே!"

என்பது போன்ற "சீராம நாம திருப்பதிகங்களா"கிய வாடா மாலைகளை, தாம் வழிபடும் திருமாலுக்குச் சூடாத வைணவரே இல்லை எனலாம்.

மருட்பாக் கட்சி மருட்சி!

இவ்வாறு, வள்ளலார் பாடிய பக்திப் பாடல்களிலே மயங்கிய மக்கள், பழைய தேவார—திருவாசக—திருப்புகழ்ப் பாடல்களை மறந்தனர் என்று அருட்பாவை மறுக்கும் மருட்பாப் பிரசுரம் கூறுகின்றது.

> "......சிலர் அவ்விராமலிங்க பிள்ளையைச் சமயாசாரியர்களோடு சமத்துவமுடையவ ரென்றும், அவர் பாடலைத் தேவார திருவாசகங்களோடு சமத்துவமுடைய தென்றும், பாராட்டிக்கொண்டும், பூசித்துக் கொண்டும், அநுட்டானம் பூசை சிவதரிசன முதலியன செய்யுங் காலங்களில் ஓதிக் கொண்டும் வருகின்றார்கள். சில போது சென்னப் பட்டினத்துள்ள சிவாலயங்கள் சிலவற்றில் மாத்திரம் உற்சவத்திலே தேவார முதலிய அருட்பாக்களை நிறுத்தி விட்டு இராமலிங்க பிள்ளை பாடலையே ஓதுவிக்கின்றார்கள்."

-'போலியருட்பா மறுப்பு'; பக். 14, 15.

மாற்றார் தரும் இந்தச் செய்தி, வள்ளலார் பாடல்களுக்கு மக்கள் தந்த பெருமதிப்பை விளக்கிய சாட்சியமாகும்.

தேவார, திருவாசகப் பாடல்கள் அடியோடு புறக்கணிக்கப் பட்டன வென்று மருட்பாக் குழாத்தினர் கூறுவது, மிகைப் பட்ட கூற்றாக இருக்கலாம். நிலைமை அதுதானென்றாலும், வைதிகச் சைவர்கள் வருந்தக் காரணமில்லை. பாடல்கள் மாறினாலும், பக்தி நெறி மாறவில்லை யல்லவா! உண்மையில் பக்தி நெறியில் புதிய மறுமலர்ச்சி தோன்றியதற்காக அவர்கள் மகிழ்ந்திருக்க வேண்டும். ஆனால், அவர்கள் போக்கு வேறு விதமாக உருவாகியது

அருட்பாவுக்கு எதிர்ப்பு!

வைதிகச் சைவர்கள், இராமலிங்கரை வெறுக்கலாயினர். கொள்கைவழி உள்ள கருத்து வேறுபாடுகளை மறைத்துக் கொண்டு, தனிப்பட்ட முறையில் அடிகளாரைக் குறைத்தும்

பழித்தும் பேசினர். "திருவருட் பிரகாச வள்ளலார்" என்ற பட்டத்தை அடிகளார் வெறுத்திருந்தும், அதனை அவரே விரும்பிச் சூட்டிக் கொண்டாற்போலப் பிரசாரம் செய்தனர். அவருடைய பாடல்களுக்குச் சூட்டப்பட்ட "திருவருட்பா" என்ற பெயரையும் வெறுக்கலாயினர். இதனை, அருட்பா எதிர்ப்பாளர்கள வெளியிட்ட பிரசுரத்தைக் கொண்டே அறிவிப்போம் :

"இராமலிங்க பிள்ளையினின்றும் பலகோடி மடங்கு உயர்ந்த சிவஞானச் செல்வர்களும் கவி வல்லுநரும் ஆகிய ஆசிரியர்கள் தோன்றி அளவிறந்த நூல்கள் செய்திருந்தும் அவர்களாவது, அவர்களைச் சார்ந்தோராவது தங்களைத் திருவருட் பிரகாச வள்ளலார் என்றுவது, தங்கள் பாடல்களைத் திருவருட்பா என்றுவது கூற எழுந்தாரல்லர். அங்ஙனமாகவும் மருதூர்ப் பிறந்த இராமலிங்க பிள்ளை அவர்கள் தம்மைச் சிவபெருமானென நினைத்தோ; அவர்க்கே யுரிய திருநாமமாகிய திருவருட் பிரகாச வள்ளலார் என்பதனைத் தமக்கு வைத்ததும் பன்னிரு திருமுறைகளுக்கே யுரியதான அருட்பா என்னும் பெயரோடு 'திரு' என்னும் அடைமொழி புணர்த்தித் திருவருட்பா என்னும் பெயரை வைத்ததும் சிவநிந்தனையும், அருளடியார் நிந்தனையும், தமிழ்த் திருநெறி முறைத் தூடணமுமாம்."

-'போலியருட்பா மறுப்பு', பக். 3, 4.

வள்ளலார் காலத்திலும் அவருக்குப் பிற்காலத்திலும் எழுப்பப்பட்ட ஆட்சேபணை இது. இந்த ஆட்சேபணையைக் கிளப்பிய பெரு மக்களையும் 'போலி யருட்பா மறுப்பு'ப் பிரசுரம் அறிமுகப்படுத்துகின்றது:

"திருவாவடுதுறை யாதீன மகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் உணர்ந்து, 'சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறிக்கும், திருவருண் முறைக்கும் விரோதமாக, பசுக்களாகிய செத்துப் பிறக்குந் தெய்வங்கண் மீது பாட்டுக்கள் பாடிய இராமலிங்க பிள்ளை யோர்காலும் திருவருட் பிரகாச வள்ளலார் ஆகார். ஸ்ரீராமநாமத் திருப்பதிகம், திருஎவ்வுளூர் வீரராகவப் பெருமான் பதிகம், இலக்குமி தோத்திரம், சரசுவதி தோத்திரம் முதலியனவற்றைப் பாடிய அவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்பதும், அவர் பாட்டுக்கள் திருவருட்பா என்பதும் சிறிது மொவ்வாதெ'னக் கண்டித்து அனுதாபப்பட்டனர்.

Koviloor Digital Library

"இங்ஙனம் திருவாவடுதுறை ஆதீன மகா சந்நிதான மன்றி, தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் சண்முகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், திருவண்ணாமலை யாதீனம் ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் மறுத்துரைத்தனர்.

"மகா வித்வான் முத்திச் சிதம்பரம் பிள்ளை அவர்களும், கொட்டையூர் மகா வித்வான் சாமிநாத தேசிகர் அவர்களும் இதனை மறுக்கத் தொடங்கி, வைணவர்களாலே மானுடன் எனச் சொல்லப்படும் சீராமன் முதலாயினோர்க்குப் பரத்துவங் கூறியும்...பாடிய பாடல்கள் திருவருட்பா ஆகாவென்றும் உபந்நியாசித்துக் கண்டித்தார்கள்."

-பக்கம் 5, 6.

நாவலர்—அவர் யார்?

வள்ளலார்பால் மடாதிபதிகள் கண்ட குறைகளிலொன்று வைணவர் தெய்வத்தைப் புகழ்ந்து பாடியதாம்.

தமிழகத்திலுள்ள சைவ மடாதிபதிகளும், அவர்களைச் சார்ந்திருந்த மகா வித்வான்களும், சித்தாந்த சரபங்களும் வள்ளலாருக்கு எதிராகக் கிளம்பிய காலத்தில், இலங்கை யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் என்ற பெரியார் தமிழகத்துக்கு வந்தார். வந்தவர் திருவாவடுதுறை மடத்தில் தங்கிச் சைவ நெறி பரப்பும் தொண்டில் ஈடுபட்டார்.

இங்கு நல்லூர் ஆறுமுக நாவலரைப்பற்றி விரிவாகக் கூற வேண்டியது அவசியம். நாவலர் பெருமான், தமிழ் மொழியில் ஈடு இணை சொல்லமுடியாத வகையில் இலக்கண—இலக்கியப் புலமை பெற்றிருந்தார். சிவஞான போதம் முதலிய சித்தாந்த சாத்திரங்களைப் பழுதறப் பயின்றிருந்தார். ஆங்கிலம், சம்ஸ்கிருதம் ஆகிய பிற மொழிகளிலும் போதுமான அளவில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

நாவலர் காலத்தில், இலங்கையில்—யாழ்ப்பாணப் பகுதியில், கிறித்துவப் பாதிரிகளின் பிரசாரத்தால் மத மாற்றம் அன்றாட நிகழ்ச்சியாக இருந்து வந்தது. அந்த நிலையிலிருந்து யாழ்ப்பாணத் தமிழர்களைக் காத்து, அவர்களைச் சைவ சமயத்திலேயே நிறுத்தி வைத்ததோடு, சாத்திர, தோத்திர நூற்களிலே ஏராளமானவர்களுக்குப் பயிற்சியும் தந்தார் நாவலர்.

Koviloor Digital Library

பரசமயக் கோளரி!

யாழ்ப்பாணத்திலே வண்ணார் பண்ணையில் 'சைவப் பிரகாச வித்தியாசாலை' ஒன்றை அமைத்தார்; தாய்த் தமிழகத்திலுள்ள சிதம்பரத்திலேயும் ஒரு வித்யாசாலையைத் தோற்றுவித்தார். யாழ்ப்பாணத்து நல்லூர் த. கைலாசப் பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டுள்ள 'ஆறுமுக நாவலர் சரித்திரத்'தில்,

> "பரசமய கோளரியாகிய இவர் அவதாரம் செய்திலராயின், யாழ்ப்பாணம் முழுவதும் இப்போது கிறிஸ்தவ நாடா யிருக்கும். அக்காலத்தில் பெரிய உத்தியோகத்திலிருந்தவர்கள் எல்லாரும் அப் பாதிரிமாருக்குப் பலவகையாலும் அடிமைப் பட்டவர்களேயாம்; இவர்களுடைய அதிகாரத்தாற் சைவக் கோயில்கள் எல்லாம் கிறிஸ்தவ ஆலயங்களாகி யிருக்கும்."

என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இஃது ஒன்றே சைவ சமய வளர்ச்சியிலே நாவலருக்கிருந்த பற்றுதலை நன்கு விளக்கும். நாவலர், திருமணத்தை வெறுத்து, சிற்றின்பம் நாடாது, சிவதீட்சை பெற்று வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவே இருந்தார்.

நாவலர், பீற்றர் பார்சிவல் என்னும் பாதிரியாருடைய பள்ளியிலே ஆங்கிலம் பயின்றார். அது காரணமாகப் பார்சிவல் பாதிரியாரின் வற்புறுத்தலுக்கிணங்க 'பைபிள்' என்னும் கிறித்தவ வேத நூலைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்மொழியில் உரைநடையை வளப்படுத்திய பெருமையிலே இராமலிங்க வள்ளலாருக்கு அடுத்து நிற்பவர் நம் நாவலரே யாவார்.

அருட்பாமீது காழ்ப்பு

தமிழகத்திற்கு நாவலர் வருகை தந்தது அருட்பா எதிர்ப்பாளர்களுக்கு நல்ல வாய்ப்பாக முடிந்தது வைதிக மனமுடைய நாவலர், இயற்கையாகவே இராமலிங்கரின் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்கவில்லை. வள்ளலாரின் பிரசாரத்தால் சைவ சமயமே அழிந்துவிடக் கூடுமென்று ஆறுமுக நாவலர் அஞ்சினார். கால மாறுதலை அறியாததே அவருடைய அச்சத்திற்குக் காரணமாகும். தமிழகத்து மடாதிபதிகள் நாவலருடைய நெஞ்சை நஞ்சாக்கி வள்ளலாருக்கு எதிராக அவரைப் பயன்படுத்தினர். ஏற்கனவே மடாதிபதிகள் அருட்பாவுக்கு எதிராக எழுப்பியிருந்த வழக்குக்கு நாவலர் பெருமான் தலைசிறந்த வக்கீலாகி விட்டார்.

Koviloor Digital Library

அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகிய சமயா சாரியர்களுக்கு இணையாக மக்களால் இராமலிங்கர் மதிக்கப் படும் தன்மை நாவலருக்கு எல்லையற்ற எரிச்சலைத் தந்தது. வள்ளலாரின் அருட்பாடல்களில் மயங்கிய மக்கள் தேவார—திருவாசகப் பாடல்களை மறந்துவிடக் கூடுமென்று அவரும் கருதினார்.

இருவர் சந்திப்பு

இந்த நிலையில், ஒரே காலத்தில் இராமலிங்கரும் ஆறுமுக நாவலரும் சிதம்பரத்திற்கு வருகை தந்தார்கள். இந்த வாய்ப் பைப் பயன்படுத்தி, சிதம்பரம் நடராசப் பெருமான் கோயில் தீட்சிதர்களுள் சிலர், சுக்கில ஆண்டு ஆனித் திங்கள் (1869) உத்தர தரிசனத்தன்று சிதம்பராலயத்திலுள்ள பேரம்பலத் திலே ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதிலே, தம்முடைய சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகளை விளக்கிப் பேசினார் வள்ள லார். வள்ளலாரை வெறுக்கும் வைதிகர்கள் ஆறுமுக நாவல ரைக் கொண்டு போட்டிக் கூட்டம் நடத்திச் சன்மார்க்க இயக் கத்தை வெறுத்துப் பேசுமாறு செய்தனர்.

இதைத் தொடர்ந்து இரு தரப்பிலும் போட்டிக் கூட்டங் கள் பல நடைபெற்று, கருத்துப் போர் வலுத்தது.

இந்நிலையில், வள்ளலார் தம்மை அவமதித்து விட்டதாக ஆறுமுக நாவலர் கடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்தார்.

அருட்பா என்ற பெயரை ஆட்சேபித்து நாவலர் வழக்குத் தொடுத்ததாகக் கர்ணபரம்பரைச் செய்தி கூறுகின்றது. ஆனால், நீதிமன்ற தஸ்தாவேஜு அவதூறு வழக்குத் தொடுத்த தாகவே அறிவிக்கிறது.

நாவலர் குறிப்பிட்ட அவதூறு வார்த்தைகளைத் தாம் பயன்படுத்தவில்லை என்று வள்ளலார் நீதிமன்றிலே கூறினார். தமது குற்றச்சாட்டை நிரூபிக்கவில்லை நாவலர். அதனால், வள் ளலார் மீது தொடுத்த அவதூறு வழக்குத் தள்ளுபடி செய்யப் பட்டது. இந்த வழக்கின்போது நடந்த ஒரு நிகழ்ச்சி பற்றிய கர்ண பரம்பரைச் செய்தி கீழ்வருமாறு:

> “வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளன்று நீதிமன்றத்தில் இரண்டு கட்சிக்காரர்களும் திர ளாகக் கூடியிருந்தனர். சுவாமிகள் வரப் போவதை எல்

Koviloor Digital Library

லோரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். திடீரென்று ஜனங்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இடுப்பில் முழங்காலுக்கு மேலே வெள்ளாடை தரித்து, மேலேயும் அதே ஆடை போர்த்துக்கொண்டிருந்த உருவம் நீதிமன்றத்தை நோக்கி வந்தது. நடுத்தர உயரம், மெலிந்த சரீரம், நிமிர்ந்த தேகம், தெளிந்த மாநிற மேனி, நீண்ட மெல்லிய நாசி, பொறி பறக்கும் கண்கள், விசனக் குறிதோன்றிய முகம்—இத்தகைய தோற்றத்தோடு இராமலிங்க சுவாமிகள் நீதிமன்றத்திற்குள் பிரவேசித்தார். அவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்றார்கள். ஆறுமுக நாவலரும் எழுந்து நின்றார்!

இதைக் கவனித்த நீதிபதி ஆச்சரியமடைந்தார் 'வழக்குத் தொடுத்த நீங்களே எழுந்தீர்களே!' என்று கேட்டார்.

"அவர் ஒரு பெரியவர் என்ற முறையில் எழுந்து நின்றேன்" என்று நாவலர் அவர்கள் பதிலளித்தாராம்.

[24-8-01 'குமுதம்' வார இதழில் 'தமிலன்' அவர்கள் எழுதியுள்ளபடி மேலே தரப்பட்டுள்ளது.]

கொள்கை அளவில் வள்ளலாரை ஆறுமுக நாவலர் வெறுத்தார் எனினும், தனிப்பட்ட முறையில் வள்ளலாரின் பெருமையை உணர்ந்து அவரை மனமார நேசித்தார் என்பதை, நீதிமன்றத்தில் எழுந்து நின்று அவர் செலுத்திய மரியாதையால் அறிகிறோம். அத்தகைய கண்ணிய குணம் படைத்த பெரியார், வள்ளலாருக்கு எதிராக இருக்கநேர்ந்தது இறைவன் திருவிளையாடல் போலும்!

சிதம்பரம் நடராசப் பெருமான் கோயில் தீட்சிதர்களுள் எவரும் இராமலிங்க சுவாமிகளுக்கு எதிராக இருந்ததாகச் செய்தியில்லை. அவர்களுள் பலர் சுவாமிகளுக்கு ஆதரவாக இருந்தனர் என்றே தெரிகிறது. இந்த உண்மைக்கு மாறாகப் பிற்காலத்தில் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தினர், சிதம்பரம் தீட்சிதர்களெல்லாரும் இராமலிங்க சுவாமிகளுக்கு விரோதமாக இருந்தார்களென்று கதை கட்டிவிட்டனர். அதற்கு எத்தகைய ஆதாரமும் இல்லை.

இராமலிங்க வள்ளலாரைச் சார்ந்தவர்களான சிதம்பரம் தீட்சிதர்களிலே சிலர், ஆறுமுக நாவலர் மீது தனியாகக் கிரிமினல் வழக்கொன்று தொடுத்தனர். அந்த வழக்கின் முடிவு பற்றி 'ஆறுமுக நாவலர் சரித்திரத்'தில் காணப்படும் குறிப்பு வருமாறு:

Koviloor Digital Library

"தீட்சிதர்கள் சிலர் இவர்மேற் றொடுத்த வழக்கில் தாம் சிக்ஷிக்கப்படுவார் எனறே இவர் எண்ணியிருந்தார். விசாரணை நடக்கும் தினத்தில் காலையில் பூசை முடித்துக் கொண்டு உடையவரைத் தமது மாணக்கர் சதாசிவப் பிள்ளையிடம் கொடுத்து "நான் இன்று சிக்ஷிக்கப்படின் என்னுயிரை விட்டுவிடுவேன். நீ இவ்வுடையவரைக் கங்கையிலே விட்டுவிடு' என்று சொல்லிவிட்டுக் கோர்ட்டுக்குப் போயினர். விசாரணையில் மற்றக்கட்சியார் கேட்ட முட்டுப்பாடான ஒரு கேள்விக்கு மறுமொழியும் கண்ணீரும் இவருடைய நாவிலும் கண்களிலும் நின்று ஒருங்கே வந்தன. கோர்ட்டில் இவர் நின்ற நிலையும் பேசிய திறமையும் நீதிபதிக்குப் பேராச்சரியத்தை விளைத்தன. இவ்வழக்கில் வழக்காளிகளுக்கே அபராதம் விதிக்கப்பட்டது."

நாவலர் வழக்குத் தொடுத்தது, வள்ளலார், பொதுக் கூட்டத்தில் தம்மைத் தூஷித்ததாகவன்று. சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் அன்பர்கள் சிலருடன் வள்ளலார் தனித்திருந்து உரையாடியகாலை தம்மைத் தூற்றியதாகவே வழக்குத் தொடுத்தார். அந்தத் 'தூஷணை' பற்றி, "இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாச தர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு" என்ற நூலில் குறிப்பிட்டிருப்பதாவது:

"ஆறுமுக நாவலரவர்கள் தமது பாடல்களைக் கண்டித்த காலை அவர்மீது கோபமும் பொறாமையும் கொண்டு சிதம்பரத்தின் கண்ணுள்ள ஆயிரக் கால் மண்டபத்திலிருந்து தம்மை யடுத்த சிலரது தூண்டுதலால் 'நாவலர்' என்ற சொற்கு அர்த்தம் விளக்கத் தொடங்கி, 'நாவல்லாதவர், நாவினால் அலர் உண்டாக்குவோர், நாவினுல் துன்பப் படுபவர்' என்பன முதலாய கூறினுர்."

சென்னை முதல் சிதம்பரம்வரை

நாவலர் தரப்பினரும் வள்ளலார் தரப்பினரும் தொடர்ந்து இரண்டாண்டுகள் வாதப் போர் நடத்தினர். சிதம்பரமும் சென்னை நகருமே பிரதானப் போர்க்களங்களாக விளங்கின. நாவலர் தரப்பினர், "போலி அருட்பா மறுப்பு" என்ற பிரசுரத்தை வெளியிட்டனர். அந்தப் பிரசுரம், திரு. மாமண்டூர்த் தியாகேச மூதலியார் பெயரால் ஐம்பது பக்கங்களைக் கொண்டதாக வெளியாகி யிருக்கிறது. ஆனல் அதை நாவலரே இயற்றிய

Koviloor Digital Library

தாக, 'ஆறுமுக நாவலர் சரித்திர' நூலில், அதன் ஆசிரியர் திரு. கைலாசப் பிள்ளை கூறுகிறார்.

நாவலருடைய எழுத்தோவியங்களை யெல்லாம் தொகுத்து 'ஆறுமுக நாவலர் பிரபந்தம்' என்ற பெயரில் நூலாக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகுப்பில் 'போலியருட்பா மறுப்பு' என்ற பிரசுரமும் சேர்க்கப்பட்டுள்ளது. பெரும் புலமை பெற்ற நாவலர் பெருமான், இராமலிங்க சுவாமிகளை மிகவும் தரக்குறைவான முறையில்கண்டித் தெழுதி, அதனைப் பிறிதொருவர் பெயரால் வெளியிட்டார் என்பதனை நம்பவே முடியவில்லை. 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பார்களே, அதுபோன்ற நிகழ்ச்சி இது.

அருட்பாக் குழாத்தினரும் சும்மா இருக்க வில்லை. 'குதர்க்காரணியநாச மகாபரசு' என்னும் பிரசுரத்தை வெளியிட்டு, நாவலர் குழாத்தினருக்குப் பதிலளித்தனர்.

அதற்கு எதிராகக் 'குதர்க்காரணியநாச மகாபரசு கண்டனம்' என்னும் பிரசுரம் நாவலர் தரப்பிலிருந்து வெளியானது.

அருட்பாக் குழாத்தினர், "திருவருட்பா தூஷணப் பரிகாரம்" என்னும் நூலொன்றையும் வெளியிட்டனர். மருட்பாக் குழுவினரைக் கண்டிக்கும் வகையில் வள்ளலாரின் அன்பர்களுள் ஒருவராகிய திரு. வேலு முதலியார் எழுதிய கவிதை வருமாறு:

" தனித்துரைத்த விராமலிங்கத் தனிமறையா தரித்துய்ந்தார்
இனித்தவருட் பிரகாச வள்ளலென இனிதேத்தி
அனித்தமற்றார் சிலஅறவர் அந்தோவென்போன் மறந்து
மனித்தனெனக் கொண்டொழிந்தார் மலவாழ்வில் சிலமறவர்"

இதன் கருத்து, "அடிகளாரின் பாடல்களைப் பாராட்டுவோரெல்லாம் அறவர், பாராட்டாதவரெல்லாம் மறவர் (தீயோர்)" என்பதாகும்.

சன்மார்க்கர் கடிதம்

நாவலருடைய அருட்பா மறுப்புப் பிரச்சாரம் பற்றிச் சன்மார்க்க சங்கத்தாரில் ஒருவர் தரும் செய்தி வருமாறு:

"இவ்விடத்தில் ஆறுமுக நாவலர் பிரசங்கம் செய்தபோது திருவருட்பாவைத் தூஷணை செய்தார். அந்த சமயத்தில் அந்தப் பிரசங்கத்தைக் கேட்க...ஒருவர் இதைக் கேட்டுச் சகியாதவராய் சில நாள் பொறுத்துத்

Koviloor Digital Library

"திருவருட்பா தூஷணைப் பரிகாரம்" என்று ஒரு பத்திரிகையை யெழுதி வெளிப்படுத்தினர். அதை அவ்விடம் அனுப்பச் சம்மதமில்லாதவனுயிருந்தேன். ஏனென்னில் நாவலர் செய்த தூஷணையை அந்தப் பத்திரிகையில் அவர் எழுதியிருக்கிருர். அது பற்றித்தான் சம்மதியில்லை. ஆனுல், தாங்கள் நாவலர் கொடிய செய்கை யிப்படிப்பட்டதென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு பத்திரிகையையும் அனுப்புகிறேன்."

- பா. பி. ப. பு. 5: பக் 120.

இது, சென்னை நகரில் நாவலர் செய்த சொற்பொழிவு பற்றிச் சன்மார்க்க சங்க அங்கத்தினரான சென்னை இறுக்கம் இரத்தின முதலியார் அவர்கள், மற்ருெரு அங்கத்தினரான திரு. சண்முகம் பிள்ளை என்பவருக்கு எழுதிய கடிதமாகும்.

வருந்திஞர் வள்ளலார்!

இந்த விவாதப் போரில் வள்ளலாரும் ஈடுபடுத்தப்பட்டாரெனினும், அந்தக் கருணை வள்ளல் இப்படி ஒரு இழிநிலை தோன்றியதற்கு மனமார வருந்திஞர். உயிர்க் குலத்திற்குத் தொண்டு செய்யப் புகுந்த தமக்கு, "பழமை விரும்பிகள்" கொடுக்கும் தொல்லைகட்காகத் துயரப்பட்டார். ஒரு சில நேரங்களில் தாமும் பொறுமையிழந்து வாதப் போரில் பங்கு கொண்டதற்காகத் தம்மைத் தாமே கடிந்துகொண்டு அவர் பாடிய கவிதை வருமாறு:

"பதியனே பொதுவில் பரமநா டகஞ்செய்
பண்பனே நண்பனே உலகில்
ஓதியனேன் பிறர்பால் உரத்தவார்த் தைகளால்
ஒருசில வாதங்கள் புரிந்தே
மதியிலா மையினுல் அகங்கரித் ததன்பின்
வள்ளல்உன் அருளினுல் அறிந்தே
விதியைநான் நொந்து நடுங்கிய தெல்லாம்
மெய்யனே! நீஅறிந் ததுவே"

"பகைத்தபோ தயலார் பகைகளுக் கஞ்சிப்
பதுங்கினேன் ஒதுங்கினேன் எந்தாய்"

தாயுமானவர் போன்று வள்ளலாரும் தம் சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடியதோடு நின்றிருப்பாராஞல், அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டிருக்காது. மாருக, புதியதொரு ஆன்மநேய ஒருமைப்பாடுடைய சமுதாயம் படைக்க விரும்பி, பசித்தார்

Koviloor Digital Library

புசிக்க உணவுதர முனைந்து, மூடப்பழக்க வழக்கங்களால் மக்களுறும் இன்னல்களை அகற்ற எண்ணி, சமரச சன்மார்க்க இயக்கங் கண்டு உலகியலில் ஈடுபட்டதனுற்ருன் வம்புகளும் வழக்குகளும் தோன்றின. இதனை நினைந்து நொந்து வள்ளலார் பாடிய பாடல்கள் வருமாறு:

"குற்றமோ குணமோ நான்அறி யேன்என்
குறிப்பெலாந் திருச்சிற்றம் பலத்தே
உற்றதா தலினுல் உலகியல் வழக்கில்
உற்றன மற்றென தலவே
தெற்றென அருட்கே குற்றம்என் பதுநான்
செய்திடில் திருத்தலே அன்றி
மற்றய லார்போன் றிருப்பதோ தந்தை
மரபிது நீஅறி யாயோ!"

"வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்
உருவவென் உயிர்தான் உயிர்இரக் கந்தான்
ஒன்றதே இரண்டிலை இரக்கம்
ஒருவில்என் உயிரும் ஒருவும்என் உள்ளத்
தொருவனே நின்பதத் தாணை!"

"தலைவர்கள் எல்லாந் தனித்தனி வணங்கும்
தலைவனே இன்றும்என் உளமும்
மலைவில்என் அறிவும் நானும்இவ் வுலக
வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகுகின் றனநான் என்செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்னவே நிலையே
நிலைபெறும் இரக்கம் நீங்கில்என் உயிரும்
நீங்கும்நின் திருவுளம் அறியும்!"

இப் பாடல்களில், "உலகியலில் ஈடுபடக் காரணம், உயிர்கள்பால் எனக்குள்ள இரக்க உணர்ச்சிதான். இரக்கம் வேறு நான் வேறு அல்லவே. இரக்கம் என்னிடமிருந்து என்று நீங்குமோ அன்றே என்னுடலிலிருந்து உயிரும் நீங்கும்" என்று இறைவனிடம் முறையிடுகின்ருர் வள்ளலார். ஆம்; எதிர்ப்புகள்

Koviloor Digital Library

இமயம் போல வளர்ந்தபோதும் வள்ளலார் உயிர்க்குலத்திற்குத் தாம் செய்யும் தொண்டிலிருந்து பின்வாங்க விரும்பினாரில்லை.

'அருட்பா' என்று தம் நூலுக்குப் பெயரிடுவதை மட்டும் அருட் சோதி வள்ளலார் அங்கீகரித்தாரென்றே நம்பவேண்டியிருக்கிறது. அதற்குக் காரணம், தற்பெருமையன்று. நாமா வளியில், "அம்பலப் பாட்டே அருட்பாட்டு" என்றதால், 'அருட்பா' என்ற பெயரால் தம் பெருமை பேசாமல், அம்பலத்தரசர் பெருமையையே வெளிப்படுத்த விரும்பினாரென்று கொள்ளலாம்." எல்லாம் அவன் செயல்" என்ற நினைப்புடன்,

" படித்தேன்பொய் உலகியல்நூல் எந்தாய் நீயே
படிப்பித்தாய் அன்றியும்அப் படிப்பில் இச்சை
ஒடித்தேன்நான் ஒடித்தேனே ஒடிப்பித் தாய்பின்
உன்னடியே துணையெனநான் உறுதி யாகப்
பிடித்தேன்மற் றதுவும்நீ பிடிப்பித் தாய்இப்
பேதையேன் நின்னருளைப் பெற்றோர் போல
நடித்தேன்எம் பெருமான்ஈ தொன்றும் நானே
நடித்தேனோ அல்லதுநீ நடிப்பித் தாயோ!"

என்று பாடிய பெருமான், ஆணவ நினைப்புடன் தம் பாடலுக்கு அருட்பா எனப் பெயரிடுவாரா? இடுவதால் அவருக்கு ஆவதென்ன? உலக இன்பங்களை யெல்லாம் துறந்த பெருமான் புகழின்பத்தை மட்டும் விரும்புவரா?

சன்மார்க்க சங்கத்தவர்க்கெனத் தனிப் பண்புண்டு என்பதனை விளக்குங்கால்,

" சேய்போல் உலகத் துயிரையெல்லாம் எண்ணிச் சேர்ந்துபெற்ற
தாய்போல் உரைப்பர் சன்மார்க்க சங்கத்தவர்!"

என்று பாடிய அடிகள், சிவபக்தியிற் சிறந்து விளங்கிய ஆறுமுக நாவலரை மட்டும் அவதூறாகப் பேசுவாரா? விதி, அப்படியும் நமக்கு அவரை அறிமுகப்படுத்த விரும்பியது போலும்!

'மருட்பா'வினரும் உறவினரே!

பொதுவாக, சைவப் பெருமக்கள் தம்மை வெறுத்துக் கருத்துப் போர் நடத்தினும், அவர்களையும் தம் சுற்றத்தவராகவே அடிகள் கருதினார் என்பதனை,

Koviloor Digital Library

" வாதுபேசிய மனிதர் காள்ஒரு
வார்த்தை கேண்மின்கள் வந்துநும்
போது போவதன் முன்ன ரேஅருட்
பொதுவி லேநடம் போற்றுவீர்
தீது பேசிநீ ரென்றி டாதுமைத்
திருவு ளங்கொளுங் காண்மினோ
சூது பேசிலேன் நன்மை சொல்கின்றேன்
சுற்றம் என்பது பற்றியே!"

என்ற பாடல் விளக்கும். ஆம்; சமய மத மார்க்கங்களால் ஆண்டவனை அடையமுடியா தென்பதனை உணர்த்தி, "எம்மதமும் சம்மதமெனும் சமரச சன்மார்க்க நெறி நின்று இறைவன் அருள்பெற வாரீர்" என்று மருட்பாக் குழாத்தினரை அழைக்கின்றார் அடிகள். என்னே அவர்தம் கருணை!

அடிகளார், தமக்கு ஏற்பட்ட எதிர்ப்புக் கண்டு வருந்தினர். ஆம்; எதிர்ப்பாளர் இழிமுறைகளைக் கையாண்டதால், அடிகளாரின் மனம் நொந்தது. அவர், புரட்சியை விரும்பினர்; ஆனால், அதற்காகவும் போரை விரும்பவில்லை.

" நாடுகின்ற மறைகளெலாம் நாமறியோ மென்று
நாணியுரைத்து அலமரவே நல்லமணி மன்றில்
ஆடுகின்ற சேவடிகண்டு ஆனந்தக் கடலில்
ஆடும்அன்பர் போல்நமக்கும் அருள்கிடைத்த தெனினும்
வீடுகின்ற பிறர்சிறிதும் அறியாமல் இருக்க
வேண்டுமென இருந்தவென்னை வெளியில்இழுத் திட்டு
வாடுகின்ற வகைபுரிந்த விதியைநினைந்து ஐயோ
மனம்ஆலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே!"

என்ற பாடலில், இறைவனுக்கும் தமக்குமுள்ள அருட்டொடர்பைப் பிறரறியாமல் வைத்திருக்க வெண்ணியும், தம் விருப்பத்திற்கு மாருகத் தம்மை வழக்கிலும் வாதப் போரிலும் இழுத்து விட்ட விதியை நினைந்து, "ஐயோ! என் மனம் ஆலை பாய்கின்றதே" என்று பாடுகின்றார். அதனைப் படிக்கும்போது நாம் அழுகின்றோம். கண்ணீரைத் துடைத்து, மேலும் அடிகள் மனம் நொந்து பாடுவதைப் படிப்போம்.

" நதிகலந்த சடையசையத் திருமேனி விளங்க
நல்லதிருக் கூத்தாட வல்லதிரு வடிகள்

Koviloor Digital Library

கதிகலந்து கொளச்சிறியேன் கருத்திடையே கலந்து
 கள்ளம்அற உள்ளபடி காட்டிடக்கண் டின்னும்
பதிகலந்து கொளும்மட்டும் பிறர்அறியா திருக்கப்
 பரிந்துள்ளே யிருந்தஎன்னை வெளியில்இழுத் திட்டு
மதிகலந்து கலங்கவைத்த விதியைநினைந் தையோ
 மனமாலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே!''
'' மஞ்சனைய குழலம்மை எங்கள்சிவ காம
 வல்லிமகிழ் திருமேனி வண்ணமது சிறிதே
நஞ்சனைய கொடியேன்கண் டிடப்புரிந்த அருளை
 நாடறியா வகைஇன்னும் நீடநினைத் திருந்தேன்
அஞ்சனைய பிறர்எல்லாம் அறிந்துபல பேசி
 அலர்தூற்ற வலியஎனை வெளியில்இழுத் திட்டு
வஞ்சனைசெய் திடவந்த விதியைநினைந்து ஐயோ
 மனமாலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே!''

இப்படியே பத்துப்பாடல்கள் பாடியுள்ளார் அடிகள். மடாதிபதிகளும் பண்டிதர்களும் தம்மிடம் நடந்துகொண்ட முறை கண்டு வள்ளலார் வருந்தி வருந்திப் பாடிய பாடல்களைப் படிக்கப் படிக்க, நம் கண்ணில் நீரும், நெஞ்சில் ரத்தமும் கசிகின்றன.

தமிழகமே! உன்னை வாழ வைக்க வந்த வள்ளலாரை வருந்தியழச்செய்த பாவத்துக்கும் கழுவாயுண்டோ? பாடல்தோறும் 'ஐயோ'—'ஐயோ'—'ஐயோ'வென்று அலறச் செய்தாயே. உனக்கு மன்னிப்புத்தான் உண்டா?

பொய்வேடத் துறவிகளுக்குப் புகலிடந் தரும் தமிழகமே! நல்லோரை நடுங்கச் செய்யும் நீ என்றுதான் திருந்துவையோ? வந்தேறிய ஞானியர்க் கெல்லாம் வாழ்வளிக்கும் நீ, உன் சொந்த மகனை நொந்தழச் செய்தாயே! இந்தப் பாவந்தொலைய, இனியேனும் உன் ஆறுகோடி கண்களிலும் நீர் மல்க, மூன்று கோடி வாய்களாலும் வள்ளலாரை வாழ்த்துவாயா?—வாழ்த்து! வாழ்த்து!! வாழ்த்து!!! அது ஒன்றே நீ வாழ வழி!

இராமலிங்கர், இறைவனிடம் ஞானதீட்சை பெற்ற ஞானியாக விளங்கினர். தெய்வத்தின் தூதராய் நின்று அவர் மக்களுக்கு உபதேசம் செய்து வந்தார். இராமகிருஷ்ண பரமஹம்ஸர்,

"தெய்வீகம் வாய்ந்த மனிதர்கள் கூறும் உபதேச மொழிகள் பார்வைக்குக் கேவலம் மனிதர்களிடமிருந்து

Koviloor Digital Library

வருவனவாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் ஈசுவர சன்னிதியினின்றே வருகின்றன.''

—'உபதேச மொழிகள்'.

என்று கூறுகின்றார். அவர் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக வாழ்ந்தார் வள்ளலார். இந்த உண்மையை உணராத ஆகம பண்டிதர்களே அவரை வெறுத்தனர். வித்யா கர்வம் ஒன்றே அவர்களிடமிருந்தது. வேதாகம சாத்திரங்கற்ற மகா பண்டிதனாக இருப்பது வேறு; ஆண்டவனுடைய அருள்பெற்ற ஞானியாக இருப்பது வேறு. பரமஹம்சர்,

''கிரந்தங்களைப் படித்துவிட்டுமட்டும் ஈசுவரனை விவரிக்க முயல்வது தேசப் படத்தில் மட்டும் காசியைப் பார்த்துவிட்டு, அந்நகரைப்பற்றி இன்னொருவருக்கு விவரிக்க முயல்வதை ஒக்கும்.''

—'உபதேச மொழிகள்'.

என்கிறார். இத்தகையவர்களே, தாங்கள் கற்ற ஆகம நூலறிவைக் கொண்டு வள்ளலாரை ஆராய முயன்றனர்.

வள்ளலார் காலத்தில் அவரை எதிர்த்துப் போராடியவர்களில், நல்லூர் க. ஆறுமுக நாவலர் ஒருவர் பெயர்தான் இற்றைத் தலைமுறையினர் அறிந்து கொள்ளுமளவிற்கு வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. காரணம், வள்ளலாரை எதிர்த்ததன்று; தமிழ்மொழிக்கும் யாழ்ப்பாணத் தமிழர்களுக்கும் அன்னார் ஆற்றியுள்ள அருந்தொண்டுகளே யாகும்.

நாவலருக்கு மறுப்பு

திருவருட்பா எதிர்ப்பியக்கத்தில் திருவாவடுதுறைப் பண்டார சந்நிதி அவர்களும் கலந்திருந்ததாகப் 'போலி அருட்பா மறுப்பு' என்ற நூலிலிருந்து முன்னர்ச் சான்று காட்டினோம். வள்ளலார் சார்பினர் வெளியிட்ட 'இராமலிங்கப் பிள்ளை பாடல் ஆபாசதர்ப்பண கண்டன நியாயவச்சிர குடாரம்' என்ற நூல் அதனை மறுக்கின்றது :

''திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியான கனம் பொருந்திய சுப்பிரமணிய தேசிகர் இராமலிங்கம் பிள்ளையை நேரிற் கண்டு வார்த்தையாடியும், வாதிட்டும் நின்றவரென இவர் எழுதியதனால் திருவாவடுதுறை யாதீனத்தின் கௌரவம் இத்தகையதென இவர் அறியாதவரா

Koviloor Digital Library

கின்றுர். ஞான அரசு செலுத்தும் ஆதீனமெனவும், சம் பத்து முதலியவைகளால் அரச வைபவத்திலும் சிறந்த தெனவும் இட்டம்போல நினைத்த இடங்களுக்குத் திருவா வடுதுறைப் பண்டார சந்நிதிகள் யாத்திரை போவதில்லை யெனவும், தம்மை அடைந்தார்க்குத் தக்கவாறியு முதார குணமுடையரன்றித் தாமெவருடனும் வாதிடுதல் முதலிய செய்யாதவர்களெனவும் இவரறியா ராதலின் திருவாவடு துறை ஆதீனத்துப் பண்டார சந்நிதிகளை எழுதி வைத் தனர்."

"மெய்யாகவே சுப்பிரமணிய தேசிகர் இராமலிங்கம் பிள்ளை அவர்களுடன் வாதம் புரிந்தனரென்று இவர் கூறில் அது பண்டார சந்நிதிகளின் யாத்திரைக் கணக் கில் மடத்திலிருந்திராம லிராது."

—பக்கம் 13, 14.

[190 பக்கங்கள் கொண்ட இந்நூல் அடிகளார் மறைந்த பின், 1905-ஆம் ஆண்டில் முத்தமிழ் ரத்ஞகரம் ம. தி. பானுகவி அவர்களால் இயற்றப்பட்டதாகும்.]

சன்மார்க்க சார்பினர்

வள்ளலாரை எதிர்த்தவர் சிலரென்றுல், ஆதரித்து நின்ற வர் பலராவர். அவர்கள் பெயர்ப்பட்டியலை 'நியாயவச்சிர குடாரம்' என்ற நூலில் காண்கிறோம்:

"காஞ்சீபுரம் சபாபதி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், அஷ்டாவதானம் வீராசாமி செட்டி யார், சேமங்கலம் நாராயண முதலியார், திரிசிரபுரம் மகா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை, தீவுக்கோட்டை முத்து சாமிப் பிள்ளையவர்கள் உள்ளிட்ட பெரும் புலவர்களும் திருவாவடுதுறைத் தாண்டவராய சுவாமிகள். மதுரைத் திருச்சிற்றம்பல சுவாமிகள், சிதம்பர சுவாமிகள் முதலிய மகாவித்வ சிரோமணிகளுஞ் சாலப் புகழ்ந்தார்கள்—மதித் தார்கள்."

—பக்கம் 75.

"ம-ா-ா-ஸ்ரீ சோமு செட்டியார், ம-ா-ா-ஸ்ரீ உமாபதி முதலியார், அரசாங்கத்தாரின் கல்விச்சாலைத் தமிழ்ப்பேரா சிரியரான வேலாயுத முதலியார், சோடசாவதானம் சுப்ப ராய செட்டியார், சண்முகம் பிள்ளை, இலக்குமணப் பிள்ளை, கோடக நல்லூர்ச் சுந்தர சுவாமிகள், சிதம்பரம்

Koviloor Digital Library

தீக்ஷிதர்கள், அநேகம் சைவப் பண்டாரங்கள் முதலியவர்கள் பிள்ளையவர்களிடம் மதிப்புடையவர்களாக இருந்தார்கள்.''

-பக்கம் 124.

இவர்களேயன்றித் 'திருப்புகழ்' எனச் சிறப்புப் பெயர் பெற்றிருந்த வண்ணச் சரபம் **மகான் தண்டபாணி சுவாமிகளும்** அடிகளாரை ஆதரித்து நின்றார். இவர் தம் நூலொன்றுக்கு அடிகளாரிடம் 'பாயிரம்' பெற வேண்டி வடலூர்ச் சென்று வள்ளலாரை நேரிற்கண்டு பேசி, அளவளாவி மகிழ்ந்தார். இதனை, அவரே தாம் இயற்றிய புலவர் புராணத்துள் குறிப்பிட்டுள்ளார். **மாவட்ட நீதிபதி மாயூரம் வேதநாயகம் பிள்ளையவர்கள்** வள்ளலாரிடம் பெரு மதிப்பு வைத்திருந்தார். அவர் தாம் 1859ல் வெளியிட்ட 'நீதி நூலு'க்கு வள்ளலாரிடம் பாயிரம் பெற்றார்.

ஆண்டவன் அனுப்பினான்!

ஏசு, நபி, காந்தியடிகள் ஆகிய அனைவருமே தங்களை ஆண்டவனின் தூதர்களாக (தொண்டர்களாக)க் கருதி, மனித குலத்துக்குத் தொண்டாற்றினர். மக்களும் அவர்களை அவதார புருடர்களாகவும் தீர்க்கதரிசிகளாகவும் நம்பிப் பின்பற்றினர். வள்ளலாரும் ஆண்டவன் அனுப்பிய தூதராகத் தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''அகத்தே கறுத்துப் புறத்துவெளுத்
திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந்
திடுதற் கென்றே எனைஇந்த
உகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே!''

என்று பாடி, ''நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்தன் வார்த்தை, நம்புமினோ நமரங்காள்!'' என்று உறுதி கூறினார். இதனை 'ஆணவம்' என்றனர், வைதிகச் சைவர்கள். ''ஆணவமாகாது'' என்கின்றார் வள்ளலார் காலத்திலேயே வாழ்ந்த வங்கத்து ஞானியான இராமகிருஷ்ணர்.

Koviloor Digital Library

"மகான்களில் சிலர் மனிதர்களுடைய நன்மைக்காக ஆத்மீய உயரத்திலிருந்து கீழே இறங்கி வருகின்றனர். அப்போது அவர்கள் வித்தியா அகங்காரத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். என்றாலும் இவ்வகங்காரம் வெளித் தோற்றத்தில் மட்டுமே இருக்கும். அது தண்ணீரில் கிழிக்கப்பட்ட கோடு போலாகும்."

"சங்கராச்சாரியார் பிறருக்கு உபதேசிப்பதற்காக வித்தியாபிமானத்தை வைத்திருந்தார்."

"நாரதர் முதலியோர்...பிரம்ம ஞானத்தை அடைந்தவர்களென்றாலும் அவர்களிடத்தும் சிறிது அகங்காரம் இருந்ததென்று தெரிகிறது. உலகத்திற்குத் தருமப் பிரசாரம் செய்வதற்குத்தான் இந்த அகங்காரம்."

-'உபதேச மொழிகள்.'

பரமஹம்சரின் இந்தப் பொன்மொழிகள் இராமலிங்க வள்ளலாரை நாம் நன்கு புரிந்துகொள்ளப் பயன்படுகின்றன.

அருளாலெதையும் பார்!

அடிகளார், ஆண்டவன் அருளால் உள்ளொளிபெற்ற உண்மை ஞானி. அதனால், எதையும் வெறும் அறிவாலன்றி, அருளால் பார்க்கும் ஆற்றல் பெற்றிருந்தார். அதனைத் தமக்குத் தந்த ஞானாசிரியர் எல்லாம் வல்ல இறைவனே என்று அவர் பாடுகின்றார். அந்தப் பாடல் வருமாறு :

"செயல் அனைத்தும் அருளொளியாற் காண்கஎன எனக்கே
திருவுளம்பற் றியஞான தேசிகமா மணியே !"

இந்த வரிகளில் "அறிவாலே பார்க்காமல் எதையும் அருளாலே பார்," என்று கூறி, அப்படிப் பார்க்கும் ஞானப் பார்வையையும் தமக்குப் பரமன் தந்ததாக அறுதியிட்டு உறுதி கூறுகின்றார் அருட்பிரகாச வள்ளலார். இங்கு,

"அருளால் எவையும்பார் என்றான்—அத்தை
அறியாதே சுட்டியென் அறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட
என்னையும் கண்டிலன் என்னேடி தோழி !"

என்ற தாயுமானவர் பாடலின் கருத்தையே வலியுறுத்துகின்றார் வள்ளலார்.

Koviloor Digital Library

சாதிவழி மடங்கள்

வள்ளலார், நால்வருணப் பாகுபாட்டினை, சாதி வேற்றுமையினைக் கட்டோடு வெறுத்து, கண்டித்துப் பாடியும் பேசியும் பிரசாரம் செய்தார். இதுவும், சில சைவ மடாதிபதிகளுக்கும், அவர்களைச் சார்ந்து வாழ்ந்த சைவாகமப் பண்டிதர்களுக்கும் பிடிக்கவில்லை. ஏனெனில், அத்தனை சைவ மடங்களும் சாதி வழி அமைந்து, அவ்வழியிலேயே ஆதீனகர்த்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிர்வகிக்கப்படுகின்றன. வள்ளலார் காலத்தில் மட்டுமன்று; இன்றுங்கூடத்தான். ஏதேனுமொரு மடத்தின் ஆதீனகர்த்தர் தமது மனமாரச் சாதி வேறுபாட்டினை வெறுப்பவராக இருப்பினும், அந்த உணர்ச்சியைத் தாம் சம்பந்தப்பட்ட மடத்தின் நிர்வாகத்தில் செயல்படுத்த இயலாதபடி, சட்டமும் சாத்திரமும் சம்பிரதாயமும் அவருக்குத் தடைகளாக இருக்கின்றன.

இந்நிலையில், சைவ மரபிலே தோன்றி, சைவ சமயத்தைச் சார்ந்தொழுகும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றுவிட்ட இராமலிங்கர், சாதி வேற்றுமைகளை வெறுத்துப் பாடியதை மடாதிபதிகளோ, அவர்களைச் சார்ந்தொழுகிய சைவ வேளாளர்களான ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர் போன்ற ஆகமப் பண்டிதர்களோ பொறுத்துக்கொள்ள இயலாமற்போனது நம்மால் புரிந்துகொள்ளக் கூடியதே. இதில் வியப்பென்னவென்றால், நால்வருணப் பாகுபாட்டினை வள்ளலார் வெறுத்ததற்காக, வருணாசிரமிகள் யாரும் அவரை அவர் காலத்தில் வெளிப்படையாக எதிர்க்கவில்லை யென்பதுதான்.

இந்த நிலை சாதியாசாரப் பண்டிதர்களுக்கு வியப்பைத் தந்ததாற்றான்,

> "வருணத்தாலும் ஆசிரமத்தாலும் கல்வி முதலிய பிறவற்றாலும் சங்கராசாரிய சுவாமிகளைத் தானும் அஞ்சலி செய்யவேண்டிய தீக்ஷிதர் மரபிற் பிறந்தவர் இராமலிங்க பிள்ளை காலில் விழுந்து அவரை ஞானாசிரியராகக் கொண்டு வழிபட்டார்."

என்று 'போலியருட்பா மறுப்பு'ப் பிரசுரம் வேதனையோடு கூறுகின்றது. கொடுமையில் வருணாசிரமத்திற்குச் சாதியாசாரம் குறைந்ததல்ல வென்பதை, மறைமலையடிகளார் எழுதியுள்ள "சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்" என்ற நூலைப் படித்தறியலாம்.

Koviloor Digital Library

இருட்சாதிக் குப்பை

வள்ளலார், ஒளிவு மறைவின்றி, பாமரனும் புரிந்துகொள்ளக் கூடிய 'பாஷை'யிலே, பாணியிலே வருணம்—மதம்—சாதி—குலம் ஆகிய வேற்றுமைகளைச் சாடிப் பாடினர்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெலாம் பிள்ளைவிளை யாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ
விழித்திதுபார் என்றெனக்கு விளம்பிய சற்குருவே"

"இருட்சாதி தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களாச் சிரம
வழக்கெலாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் நீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே !"

இந்தப் பாடல்களிலே, வருணாசிரமம்—சாதியாசாரம் முதலியவற்றை எள்ளி நகையாடி, அவையனைத்தும் பிள்ளை விளையாட்டென விளக்கியருள்கிறார் வள்ளலார்.

இங்கு வருணாசிரமம்—சாதியாசாரம் பற்றிச் சிறிது தெளிவு படுத்துவது, வள்ளலாரின் திருவுள்ளத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளப் பயன்படுமென்று நம்புகின்றோம்.

வேதம் விதித்த வருணங்கள் நான்கு. அவை அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பனவாம். வடமொழியாளர் பிராம்மணர், க்ஷத்திரியர், வைசியர், ருத்திரர் என்பர். இந்த நான்கு வருணங்களின் உற்பத்திபற்றி வேதம் கூறுவதாவது:

"பிராமணர்கள் பிர்ம்மாவின் முகத்திலிருந்தும், க்ஷத்திரியர்கள் தோள்களிலிருந்தும், வைசியர்கள் வயிற்றிலிருந்தும், சூத்திரர்கள் பாதத்திலிருந்தும் பிறந்தார்கள்."

—யஜுர் 32–11.

இதே விஷயம் மனுதர்ம சாத்திரம் (அத்தியாயம் 8, சூத்திரம் 31), வால்மீகி ராமாயணம் (ஆரணிய காண்டம், சருக்கம் 14.) ஆகியவற்றிலும் மாறுபாடின்றி வலியுறுத்தப் பட்டுள்

Koviloor Digital Library

ளது. கடவுள் நம்மைப்போல் ஒரு மனிதரல்லவாதலால், நால் வருணப் பிறப்புப் பற்றிய மேற்படி செய்தி, கற்பனையாகச் சொல்லப்பட்ட தென்றே கொள்ளவேண்டும். சமுதாயத்தை ஒரு மனிதனுகக் கற்பித்து, அந்தந்த வருணத்திற்குச் சமுதா யத்திலுள்ள தொழில் முக்கியத்துவத்தை உணர்த்த வெவ் வேறு உறுப்புக்களோடு பொருத்திக் கூறப்பட்டுள்ளது.

வருணுசிரமம் தமிழருடையதே !

நால்வருணப் பாகுபாடு ஆதியில் மனித சமுதாயத்தின் நன்மைக்காகவே ஏற்பட்டதெனலாம். இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்ட சங்ககாலத் தமிழகத்தில் நால்வருண வேற் றுமை இருந்ததாக அறிகிறேம். இதனை,

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே"

என்னும் புறநானூற்றுப் பாடல் (103) வலியுறுத்தும். இதற் கும் முற்பட்டதான தொல்காப்பியத்துள்ளும் பொருளதிகாரம்— மரபியலில் நால்வருணப் பாகுபாடும் அவ்வருணங்களின் உரிமைகளும் பிறவும் கூறப்படுகின்றன. சங்க இலக்கியங் களை நன்கு ஆராய்ந்து பார்ப்பின், இந்த நால்வருணப் பாகு பாடு, இந்தியாவின் மூத்த குடியினரான—வடக்கே ஹரப்பா, மொகஞ்சதரோவில் வாழ்ந்த ஆதித் தமிழரிடமிருந்தே தோன்றியிருக்கக்கூடுமென்று கருதவேண்டியதாகிறது. ஆம்; தொழில் காரணமாகத் தோன்றிய நால்வருணப் பாகுபாடு, பழங்காலத் தமிழர்களின் நாகரிக வளர்ச்சியைக் குறிக்கும் சமு தாய அமைப்பாகும். ஆனுல், ஆதியில் வருணங்களிடையே ஏற்றத் தாழ்வோ, இழிவு—சிறப்போ இருந்திருக்க முடியாது. பிற்காலத்தில், அந்தத் தீமை புகுத்தப்பட்டு விட்டதால் வள்ள லார் வருணுசிரமத்தை வெறுத்துப் பாடினுர். அவருக்குப்பின் தோன்றிய பாரதியாரும்,

"நாலு குலங்கள் அமைத்தான்—அதை
நாசமுறப் புரிந்தனர் மூடமனிதர்
சீலம் அறிவு கருமம்—இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்;
மேலவர் கீழவர் என்றே—வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்

Koviloor Digital Library

போலிச் சுவடியை யெல்லாம்—இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்டென்பான்''

என்று 'கண்ணன் பாட்டில்' பாடுகின்றார்.

காந்தியடிகள் கருத்து

காந்தியடிகளும் நால்வருணப் பாகுபாடு தோன்றியதற்கான நியாயத்தை ஆதரிக்கிறார்; அதன் பலன்களைப் புகழ்கின்றார். ஆனால், பிற்காலத்தில் அதனோடு கலந்துவிட்ட உயர்வு—தாழ்வு என்ற அநீதியைப் போக்க முடியாத காரணத்தால், வருணப் பாகுபாடற்ற பாரத சமுதாயத்தையே அவர் விரும்பினார்.

''வருணாசிரமம் எத்தகைய குறுகிய நோக்கத்துடனும் உருவாக்கபபடவில்லை என்பதே என் கருத்தாகும். அதற்கு மாறாக, தொழிலாளியான சூத்திரருக்கும், சிந்தனையாளரான பிராமணருக்கும் சம அந்தஸ்து அளித்து, யோக்கியதை அதிகமாவதற்கும், குற்றங்குறைகள் ஒழிவதற்கும் அது இடம் அளித்தது. வருணாசிரமம் மனிதனின் பொதுவான ஆசாபாசங்களை லோகாயதமான கோளத்திலிருந்து ஆன்மிகமான சாசுவதமான மண்டலத்திற்கு மாற்றியது.

''பிற்காலத்தில் வருணாசிரமத்தின் இந்த உன்னதமான கொள்கை இழிவான நிலையை அடைந்துவிட்டது. அர்த்தமற்ற வீண் சடங்குகளும் சிலர் தங்களை உயர்வானவர்கள் என்று நினைத்துக் கொள்வதும், மற்றவர்கள் மீது இழிநிலை சுமத்தப்படுவதும் தான் வருணாசிரமம் என்று ஆகிவிட்டது.''

-காந்தி தொகுப்பு நூல் 7; பக். 73.

> ''இன்று வருணாசிரமம் என்ற பெயரில் உலவும் அரக்கனை எல்லா விதத்திலும் எதிர்த்துப் போராடுங்கள். அவ் விஷயத்தில் உங்களோடு நான் தோளோடு தோள் நின்று கொண்டு தொண்டு புரிவதைக் காண்பீர்கள்.''

-ஷை நூல், பக், 79.

அருட்ஜோதி வள்ளலாருக்குள்ள தனிச்சிறப்பு, வருணாசிரமக் கொடுமையை எதிர்ப்பதில் அவர் முன்னோடியாக—தீர்க்கதரிசியாக இருந்தார் என்பதாகும். ஆம்; அன்றே நால்வருணப் பாகுபாடு 'பிள்ளை விளையாட்டு' என்றார். 'வருணம்' என்பது, தோல் போர்த்த உடலைப் பற்றியதே யன்றி, ஆன்மாவைப் பற்றியதன்று என்றும் அறிவுரை கூறுகின்றார்.

Koviloor Digital Library

சாதி வெறி எரு!

நால்வருணப் பாகுபாடே யன்றி, நாலாயிரம் சாதிகளும் நிலவுகின்றன. சாதிக்குள் சாதி பேசும் சழக்கினை, சாதிக்குச் சாதி உயர்வு—தாழ்வு பாராட்டும் கொடுமையினை நினைக்க நினைக்க நம் நெஞ்சு கொதிப்பேறுகிறது.

> "ஹிந்துக்கள், உலகத்திலுள்ள மற்றெல்லா ஜனங்களைக் காட்டிலும், ஜாதி வேற்றுமை பாராட்டுவதில் அதிகக் கொடுமை செலுத்துகிறார்கள்."
>
> - பாரதி கட்டுரைகள் பக். 40.

என்கிறார் மகாகவி பாரதி. காந்தியடிகளோ "இந்துக்களிலேயும் தமிழர்களிடத்தில்தான் சாதிக் கொடுமை அதிகம்" என்கிறார்.

வள்ளலார், இன்ன மதம்—இன்ன இனம்—இன்ன சாதி என்று குறிப்பிடாமல், பொதுவாக, "இருட்சாதிக் குப்பை" எனக் கூறி, அக்குப்பையை எரித்துப் பாழாக்க விரும்பாமல், "புன்செய் நிலத்துக்கு எருவாக்கிப் போடவேண்டும்" என்று நகைச்சுவை ததும்பப் பாடுகின்றார்.

சங்க காலத்தில் சாதி

வள்ளலாரை எதிர்த்த வைதிகச் சைவர்கள், அவரது சாதியையும் விட்டார்க ளல்லர். அவர்கள், சமயாசாரியாராவதற்கு இரண்டொரு சாதிகளுக்குத்தான் உரிமையுண்டு என்று எண்ணியவர்கள் போல, சன்மார்க்க சங்கத் தலைவரின் சாதியையும் சாடியுள்ளனர். "கணக்கு இராமலிங்க பிள்ளையை வள்ளலார் என்றும், அவர் பாடல்களைத் திருவருட்பா என்று மொப்புவதா? (இராமலிங்க பிள்ளை பாடல் ஆபாசதர்ப்பணம் அல்லது மருட்பா மறுப்பு, பக்கம் 11)" என்று வினவெழுப்பினர். அந்தப் பிரசுரத்தில் பலவிடங்களிலே சாதி வெறி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவற்றை இங்கு எடுத்துக் காட்டவும் நாணி விடுக்கின்றோம்.

தமிழினம், சாதி வேற்றுமை யறியாதது. சங்க காலத் தமிழகத்தில் தொழில்வழிச் சாதிகள் இருந்தன.

ஆனால், அவற்றிடையே உயர்வு—தாழ்வு கற்பிக்கப்பட வில்லை. அந்தணக் கபிலரும் அல்லாத பரணரும் இரட்டையராக வாழ்ந்தனர். வணிக வருணத்தில் பிறந்த கண்ணகிக்கு, அந்தண வருணத்தவளான தேவந்தி ஆருயிர்த் தோழியானாள். அம்மட்டோ! வஞ்சியிலே கண்ணகி சிலையை நித்தமும் புனலாட்டி, அதற்குப் பூச்சொரிந்து, வழிபாடு செய்யும் பூசாரியு

Koviloor Digital Library

மானுள். அரசரெல்லாம் வஞ்சியில் குழுமி, கற்புத் தெய்வமாம் கண்ணகியை வணங்கி, வழிபட்டு, வரம் கேட்டனர்.

சகலகலா வல்லவரான வள்ளலார் வருணுசிரம—சாதி யாசாரங்களை வெறுத்தா ரென்ருல், அச்செயல் தமிழர் மரபுக்கு ஏற்றதாவ தன்றி, எதிரான தாகாது.

அப்பரும் சாடினுர்

வள்ளலார், வருண—சாதி வழிப்பட்ட ஏற்றத்தாழ்வினை எதிர்த்துப் பாடிய செயல், சைவத்துக்கும் எதிரானதன்று. சைவ சமயாசாரியர்களுள் ஒருவரான அப்பர் சுவாமிகள்,

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள் !
கோத்திரமுங் குலமுங்கொண் டென்செய்வீர் ?"

என்று கேட்கின்ருர். இந்த வினுவையே வேறு வடிவில் அமைத்து "தாழ்ந்த குலத்தார் சாவது, உயர்ந்த குலத்தார் சாகாமல் வாழ்வது என்ற நியதியுண்டோ?" எனக் கேட்டு, "இல்லையே!" என்று தாமே விடையளிப்பார் போல,

"வரையில்உயர் குலமென்றும் தாழ்ந்தகுலம் என்றும்
வகுக்கின்றீர், இருகுலமும் மாண்டிடக்காண் கின்றீர் !'

என்று பாடுகின்ருர் வடலூரார். வள்ளலார், இன வெறியையும் ஏற்கவில்லை. திருநாவுக்கரசுப் பெருமான், "ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்," எனப்பாடி, ஆண்டவன் ஆரியனுகவும் தமிழனுகவும் இருப்பதாக அறிவித்தார். அக்காலத்தில் அவர றிந்த இனத்தார் ஆரியரும் தமிழருமே! அவரே இன்றிருந்தால், "ஆண்டவன், ஆரியன்—தமிழனுகமட்டுமின்றி, அராபியனு கவும், ஆப்பிரிக்கனுகவும், ஐரோப்பியனுகவும் இருக்கின்ருன்," என்று பாடியிருப்பார். அப்படியாளுல், அந்த இனங்களிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பது, ஆண்டவனையே அவமதிப்பதா காதா? இதையே நினைவில் கொண்டு,

"எங்குலம் எம்மினம் என்பதொண் ணூற்ருறு
அங்குலம் என்றருள் அருட்பெருஞ் சோதி !"

என்று நகைச் சுவை ததும்பப் பாடுகின்ருர், நடராசப் பதிக்கு நல்ல பிள்ளையான இராமலிங்கம் பிள்ளை.

Koviloor Digital Library

சுய சாதிப் பற்றற்றவர்

சாதியொழிப்புப் பேசுவோர், தம்மளவில் சுய சாதிப் பற்றுளர்களாகச் செயல்படுவதைப் பார்க்கிறோம். வள்ளலார், தம்மளவில் சுயசாதிப் பற்றினை யொழித்தவராய், உலகினருக்குச் சாதியொழிப்பினை உபதேசித்தார். இதனை,

"சாதியும் மதமுஞ் சமயமுந் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையுந் தவிர்த்தேன்,"

என்ற பாடல் உணர்த்தும்.

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி"
"இந்தச் சாதி இந்த மதம் எனும்
சழக்கை யெலாம் தவிர்த்த சத்தியனே"
"சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனை மேலேற்றித்
தனித்ததிரு வமுதளித்த தனித்தலைமைப் பொருளே"

என்னும் வரிகளில், தெய்வத்தின் அருளால் தம் நெஞ்சில் சுய சாதிப் பற்று அழிந்த தென்பார். தெய்வப் பற்றில்லாதவர்கள், அப்படி ஒன்று இருப்பதை நம்பாதவர்கள், சுயசாதிப் பற்றை யொழித்தல் சாத்தியமில்லை போலும்!

கூவி அழைக்கின்றார்

சுயசாதிப் பற்றினை யொழித்தவராக மக்களைப் பார்த்துச் சாதி யொழிப்புப் போதிக்கின்றார்.

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடுந் தனித்தலைவர் ஒருத்தர்அவர் தாமே
வீதியிலே அருட்ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே."

வள்ளலார், மதங்களிடையே ஒருமைப்பாடு காண விழைந்தார்; மத பேதங்களைக் கட்டோடு வெறுத்தார். மதங்களெல்லாம் ஆதியில் மக்களை ஒன்றுபடுத்தவே தோன்றின வென்று துணிந்து கூறலாம். மக்கள் சமுதாயம், மொழிவாரித்

Koviloor Digital Library

தீவுகளாகப் பிரிந்து கிடந்த காலை, அவைகளை ஒன்றுபடுத்தும் சாதனமாக இருந்தது மதம் ஒன்றேயாம். இன்றுகூட, ஒரு தமிழர், இனத்தால் மூன்று கோடித் தமிழரைமட்டுமே உறவினராகக் கொண்டிருக்கிறார். மற்றுமுள்ள உலகோரனைவரும் அவருக்கு அன்னியராகின்றனர். ஆனால், அவரே இந்துவாக விருப்பின், தமது மதம் காரணமாக வேங்கடத்துக்கு வெளியேயுள்ள 35 கோடிக்கு மேற்பட்ட மக்களோடு ஆத்மார்த்தமாக உறவு கொள்கின்றார். அப்படியே இஸ்லாமிய—கிறித்துவத் தமிழர்கள், தத்தம் மதம் காரணமாக ஆப்பிரிக்க—அராபிய—ஐரோப்பியக் கண்டங்களில் வாழ்வோருடனெல்லாம் உணர்ச்சி பூர்வமாக ஒன்றுபடுகின்றனர்.

நடுநிலை விரும்பினார்

இனத்தோடு இனம் உறவுகொள்ள மதவழி மொழிகளும் இலக்கியங்களும்கூடத் தோற்றுவிக்கப்பட்டன. ஆம்; மதமானது மக்கள் சமுதாயத்தைப் பிளக்கும் கோடரியன்று. மிகப் பிற்காலத்தில், இதிலும் பிளவுச் சக்தி புகுந்தது. இது காரணமாக எழுந்த மதப்போர்கள் எண்ணில. மதச் சண்டை, ஒரு முனையில் தத்துவம் காரணமாக நிகழும் அறிவுப் போராகக் காணப்படுகின்றது. மற்றொரு முனையில், அதிகார வெறி காரணமாக நிகழும் ஆயுதச் சண்டையாகவும் காணப்படுகின்றது. இந்த இருவிதச் சண்டைகளையும் வெறுத்தார் வள்ளலார். மதவாதிகளிடம் நடுவுநிலைமை உள்ளமில்லாதது கண்டு மனம் வெதும்பினார்; வேதனைப் பட்டார். இதோ அந்த வேதனைச் சித்திரம்:

"நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா அரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம்
பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலை உலக நடைஎலாங் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய் !"

வேதனையால் வெறுத்தார் !

மதப் பூசல்கள் உலகில் மலிந்துபோனதால் மதங்கள் அனைத்துமே தொலையவேண்டுமென்று நினைப்பார் போலப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம்உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரும் கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டெனநன் 'கறிவித்திங் கெனையே
பிள்ளைஎனக் கொண்டுபிள்ளைப் பெயரிட்ட பதியே!"
"மருளான பற்பல மார்க்கங்க ளெல்லாம்
வழிதுறை தெரியாமல் மண்மூடிப் போக."

மதங்கள் ஒன்றோடொன்று சண்டையிட்டாலும், அவற்றிடையே பொதுவான குறிக்கோள் ஒன்று உண்டாம். அது மக்களிடமிருந்து கொள்ளையடிப்பது. இதனை உணர்த்தவே, 'கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டிய பல்சமயக் கூட்டம்," என்று சாடுகின்றார். வள்ளலார் சாடுவது, மதத்தையன்று; மதத்தின் பெயரால் மக்கள் சுரண்டப்படும் கொடுமையையே.

பெரியரினும் பெரியீர்!

சமய மத வேறுபாடுகளையே யன்றிச் சாத்திர—கோத்திர வேறுபாடுகளைகயும் வெறுத்தார் வள்ளலார். அது காரணமாகத் தம்மை வெறுத்தும் எதிர்த்தும் போராடிய 'பெரியார்களை'ப் பார்த்துப் பேசுகின்றார் :

"எவ்வகைசார் மதங்களிலே பொய்வகைச்சாத் திரங்கள்
எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று
கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்று அறியீர்
கரிபிடித்துக் கலகமிட்ட பெரியரினும் பெரியீர் !"

என்று பாடியவர், தம்மை வெறுத்த அவர்களையும் தாம் வெறுக்காதவராய்,

"ஐவகைய பூதவுடம்பு அழிந்திடில்என் புரிவீர்
அழியுடம்பை அழியாமை யாக்கும்வகை அறியீர்
உய்வகைஎன் தனித்தந்தை வருகின்ற தருணம்
உற்றதிவண் உற்றிடுவீர் பெற்றிடுவீர் உவப்பே,"

என்று பாடி, அழைப்பு விடுக்கின்றார்.

அடிகளார் சாதி-மத-வருண பேதங்களை வெறுத்தாரென்றால், எதற்காக? அவற்றிடையே ஒருமைப்பாடு காண்பதே அடிகளாரின் உள்ளக்கிடக்கையென்று கொள்ளல் வேண்டும்.

Koviloor Digital Library

வள்ளலார், தம் காலத்திலேயே மதங்களிடையே ஒருமைப்பாடு காண விரும்பினார். அதற்கெனவே தனி இயக்கங் கண்டு, அதற்குச் "சமரச சன்மார்க்கம்" எனப் பெயர் கொடுத்தார். அதன் கோஷம், 'எம்மதமும் சம்மதம்' என்பதாகும். மதங்களை வெறுத்து வள்ளலார் பாடிய பாடல்களில் சொல்லுக்குச் சொல் பொருள் காணாமல், அவற்றின் பொதுப்பொருள் 'எம்மதமும் சம்மதம்' என்பதனை வாசகர்கள் உணரவேண்டும்.

வேத விருப்பும் வெறுப்பும்

வடலூர் முனிவர், வடமொழியில் தேர்ந்த புலமை பெற்றவராதலால், வேதாகமங்களை நன்கு பயின்றிருந்தார். இறைவனையே ஞானாசிரியனாகக் கொண்டு வேதாகமங்களைப் பயின்றதாகவும், வேதாகமங்களின் அந்தரங்கங்களையெல்லாம் இறைவன் தமக்கு அறிவித்ததாகவும் கூறுகின்றார்.

"வேதநெறி ஆகமத்தின் நெறிபவுரா ணங்கள்
விளம்புநெறி இதிகாசம் விதித்தநெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி
உள்ளதனை உள்ளபடி உணரஉரைத் தனையே!"

என்று அவரே பாடியுள்ளார்.

அடிகளார் அருளுணர்வு பெற்ற ஞானியென்று நம்புவோரெல்லாரும், அவரது இந்தக் கூற்றையும் நம்பித்தானாக வேண்டும்.

அடிகள் கூறிய 'சன்மார்க்க சங்கம்' என்ற பெயரின் பொருள்—"அகிலமாம் சகோதரத்துவ மூலக்கருத்தை உலகில் நிலைநாட்டி, **வேதத்தின் சத்திய போதனைகளைப்** பரப்பச் செய்யும் சங்கம்" என்று அடிகளாரின் தலை மாணாக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் உரைக்கின்றார். (சென்னைச் சமரச சுத்த சன்மார்க்க சங்க வெளியீடு—திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகள்—பக்கம் 4.)

'அருட்பெருஞ்சோதி அகவலி'ல் "ஆகம முடிமேல் ஆரண முடிமேல் ஆகநின் றோங்கிய அருட்பெருஞ்சோதி," என்றும், "வேதாகமங்களின் விளைவுகட் கெல்லாம் ஆதார மாஞ்சபை அருட்பெருஞ் சோதி" என்றும் பாடி, வேத தருமங்கள்பால் தமக்குள்ள பற்றுதலை வெளிப்படுத்தியுள்ளார் அடிகளார்.

ஆம்; அடிகளார், வைதிகர் வட்டாரத்திலே சிறைப்பட்டிருக்கின்ற வேத நூல்களை வெறுத்தார்; ஞானியர்களால் போற்றப்பட்டு வந்துள்ள வேத தருமங்களை விரும்பினார்.

Koviloor Digital Library

''இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பார்
மயல்ஒருநூல் மாத்திரந்தான் சாலம்என அறிந்தார்
மகனேநீ நூல்அனைத்தும் சாலம்என அறிக''

என்று தமக்கு இறையருள் உணர்த்தியதாகக் கூறும் அடிகள், இதற்கு விளக்கம் தருவார்போல, அடுத்த பாடலிலேயே,

''தோன்றியவே தாகமத்தைச் சாலம்என உரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்எனக்கண் டறியேல்
ஊன்றியவே தாகமத்தின் உண்மைநினக் காகும்
உலகறிவே தாகமத்தைப் பொய்யெனக்கண் டுணர்வாய்''

என்று தம்மை ஆட்கொண்ட அருட்சக்தி அறிவித்ததாகக் கூறுகின்றார்.

வேதங்களில் வேறுபாடு

வேதாகமங்கள்பற்றி வள்ளலார் தெரிவித்த வேறுபாடு, வேறுபல ஞானியராலும் சொல்லப்பட்டதுண்டு. வள்ளலார் காலத்தவராகிய தயானந்த சரஸ்வதி, வேதங்களுக்கு ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட வியாக்கியானங்களை மறுத்து, 'சத்யார்த்த பிரகாஷ்' என்ற தனி நூலொன்றைச் செய்தார். அவரும், அவர் அமைத்த ஆரிய சமாஜத்தினரும் ஸ்மிருதிகளையும் புராணங்களையும் அடியோடு மறுத்தனர்.

அப்படியே, ராஜா ராம் மோகன ராய், பழைய நால்வேதங்களும் அவற்றிற்கு அடுத்தபடியிலுள்ள ஸ்மிருதிகளும், நால் வருணங்களுக்கும் சம நீதி வழங்கும் முறையில் பயன்படுத்தப் படவில்லை யென்பதற்காகவே, 'பிரம்ம சமாஜம்' என்ற புதிய அமைப்பினைத் தோற்றுவித்து, வேதங்களின் மூல சூத்திரங்களுக்குப் பொருந்தா வகையில் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட கருத்துக்களைக் கண்டித்துப் பிரசாரம் செய்தார்.

இன்னும், இறைவனால் படைக்கப்பட்டன வென்று நம்பப் படும் வேதங்களுக்கும் இன்று பயன்படுத்தப்படும் வேதங்களுக்கும் அடிப்படையில் வேற்றுமையுண்டு என்ற கருத்தும் நிலவி வருகின்றது.

''வேதங்கள் உண்மையையே காட்டுகின்றன. அவற்றிற்கு எல்லையே இல்லை. வேதங்களை முற்றிலும் உணர்ந்தவர் யார்? இன்று வேதங்கள் என்ற பெயருடன் இருப்

Koviloor Digital Library

பவை உண்மையான வேதத்தின்—அதாவது, அறிவு நூலின் கோடியில் ஒன்றுகூட இல்லை.''

—காந்தி நூல் தொகுப்பு 7 : பக். 57.

இது, காந்தியடிகள் தெரிவித்த கருத்தாகும். மகாகவி பாரதியார் வேதங்கள்பற்றிப் பாடியுள்ள வரிகள் வருமாறு :

''வேதங்கள் கோத்து வைத்தான்—அந்த
வேதங்கள் மனிதர்தம் மொழியி லில்லை
வேதங்க ளென்றுபுவியோர்—சொல்லும்
வெறுங்கதைத் திரளிலவ் வேதமில்லை
வேதங்க ளென்ற வற்றுள்ளே—அவன்
வேதத்திற் சிற்சில கலந்த துண்டு
வேதங்க ளன்றி யொன்றில்லை—இந்த
மேதினிமாந்தர் சொலும் வார்த்தைக ளெல்லாம்''

இதைத்தான், ''ஊன்றிய வேதாகமத்தின் உண்மை நினக்காகும், உலகறி வேதாகமத்தைப் பொய்யெனக் கண்டுணர்வாய்'' என்று கடவுள் தமக்குணர்த்தியதாகக் கூறுகின்றார் வள்ளலார்.

ஞானிகள் எங்கு—எந்தக் காலத்தில் பிறந்தாலும், அவர்கள் ஒரே 'பாஷை'யில்தான் பேசுகின்றனர். அது நமக்குப் புரிவதில்லை. அதோடு, 'என்ன சொல்லுகிறார்' என்பதைவிட்டு, சொல்லுபவர் சாதியை முதலில் கவனிப்பதால், அவர்கள் சொல்வது நம் காதுகளில் விழுவதுமில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடங்கிச் சமயத்துறையிலே அறிவொளி வீசலானது. பழைய வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் ஆகியவற்றின் மீதும் அந்த அறிவொளியைப் பரப்பினான் காலத்தேவன். அந்தத் தொண்டு, தமிழகத்திலே வள்ளலாரிடமிருந்தே தொடங்குகின்றது.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாத காரணத்தாலேயே வைதிகச் சைவர்கள் வள்ளலார்மீது போர் தொடுத்தனர். அவர்களைப் பார்த்து வள்ளலார் பாடுகின்றார் :

''வேதா கமங்கள் என்று வீண்வாதம் ஆடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர்—சூதாகச்
சொன்னஅலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை.''

Koviloor Digital Library

"சாத்திரங்கள் எல்லாம் தடுமாற்றம் சொல்வதன்றி
நேத்திரங்கள் போற்காட்ட நேராவே—நேத்திரங்கள்
சிற்றம்பலவன் திருவருள்சீர் வண்ணம் என்றே
உற்றிங் கறிந்தேன் உவந்து."

வள்ளலார், வேதாகம தருமங்களைக் கொள்கையளவில் வெறுத்தாரல்லர். ஆயினும், அவை பயன்படுத்தப்படும் முறையிலே அவர் வெறுப்புக்கொண்டிருந்தார். அங்ஙனமிருந்தும், வேதாகம சாத்திரங்கள்பால் கொண்ட வெறுப்புக் காரணமாக வேதியர் குலத்தையோ, தில்லைவாழ் தீட்சிதர்களையோ அடிகள் விரோதிக்கவில்லை. ஆன்மநேய ஒருமைப்பாட்டினை விரும்பியவராதலால், அவர்கள்பாலும் அன்பு பூண்டு ஒழுகினுர். பிற்காலத்தில் காந்தியடிகள் கூறினுற்போன்று, தனி நபர்களை வெறுக்கவில்லை; அவர்களிழைக்கும் தவறுகளையே வெறுத்தார் வள்ளலார்.

வள்ளலார் சம்ஸ்கிருத மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றவராகையால், கடலூரிலும் சிதம்பரத்திலும் அவர் வாழ்ந்த காலை வைதிகக் குடியிற் பிறந்த அந்தணர் பலர், சம்ஸ்கிருத நூல்கள் பலவற்றை அவரிடம் பாடம் கேட்டனர்.

திருவருட்பா எதிர்ப்பில் ஆறுமுக நாவலர் போன்ற வேளாளர் சிலர் முன்னணியிலிருந்தனர் என்பதற்காக வேளாளர் குலத்தின்பால் அடிகள் வெறுப்புக் காட்டவில்லை. ஏன்? வேளாளர்—வேதியர் குலங்களைக் சார்ந்தவர்களுள் பலர், கடுமையான எதிர்ப்பு வளர்ந்திருந்த காலத்தும் வள்ளலாரை மனமார நேசித்து, வாயார வாழ்த்தி, தலையார வணங்கினர்.

"மஞ்சக்குப்பம் முதலிய இடங்களிலுள்ள சைவ வேளாளரிஞ்ஞான்றும் பிள்ளையவர்களிடம் அன்புடையவராக இருக்கின்றனர்" என 'நியாயவச்சிர குடாரம்' என்னும் நூல் (பக். 175) கூறுகின்றது.

நாவலருக்கு எதிராக வள்ளலாரை ஆதரித்துக் குரல் கொடுத்தோர் அவர் காலத்திலேயே யாழ்ப்பாணத்திலும் இருந்தனர். இதனை, நாவலர் அவர்களின் நெருங்கிய உறவினரான திரு. த. கைலாசப் பிள்ளையால் தொகுத்து வெளியிடப்பட்டுள்ள 'ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு' நூல் இரண்டாம் பாகம் 109, 110, 129 பக்கங்களில் காணலாம்.

ஆகவே, இராமலிங்க வள்ளலாருக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கு, குறிப்பிட்ட எந்த ஒரு சாதியையும் பொறுப்பாக்கிப் பழிப்பதற்

Koviloor Digital Library

கில்லை. வள்ளலாரும் தம்முடைய பாடல்களிலோ, உரைநடையிலோ, நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலோ சாதி ரீதியில் யாரையும் குறை கூறவில்லை. வள்ளலாரை ஆதரித்தவர்களுள்ளும் எதிர்த்தவர்களுள்ளும் எல்லாச் சாதியினரும் கலந்திருந்தனர்.

வள்ளலாரை ஆதரித்து நின்ற சைவப் பெருமக்களோ—தில்லைவாழ் தீட்சிதர்களோ, அத்தனை பேரும் அவருடைய சமய—சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொண்டனர் என்று சொல்ல முடியாது. வள்ளலாருடைய ஒழுக்கம், உயர்குணங்கள், தூய தெய்வபக்தி, ஆழ்ந்த நூற்புலமை ஆகியவற்றில் ஈடுபாடுடையவர்களாய் அவரை ஆதரித்த வைதிகச் சைவர்கள்—தீட்சிதர்களுமுண்டு.

வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்கப் பேரியக்கத்திற்கு எதிராகத் துவங்கிய கிளர்ச்சி, சென்னையிலிருந்து சிதம்பரம் வரையுள்ள நிலப்பரப்பைத் தனது களமாகக் கொண்டிருந்ததென முன்பே கூறினோம். களத்தில் இன்னமும் அமைதி ஏற்படவில்லை. ஏன்? மக்களுடைய பார்வையிலிருந்து வள்ளலார் மறைந்த பின்னரும் போர் தொடரவும், களம் விரிவடையவும் போகின்றது. ஆகவே, நாம் மீண்டும் வருவதென்ற முடிவுடன் இப்போதைக்குக் களத்திலிருந்து வெளியேறுவோம்.

அருட்பாச் சார்பினரும் அதனை எதிர்க்கும் மருட்பாக் குழுவினரும் கருத்துப் போர் நடத்திவரும் தருணத்தில், நமது அருட்பிரகாச வள்ளலார், மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் மிக்க அமைதியோடு இறைவன்பால் பக்தி செலுத்தி, பிறருக்கும் பக்தி நெறியைப் போதித்துக் கொண்டிருக்கிறார்.

நாமும் சித்திவளாகம் சென்று அடிகளாரின் பக்திநெறிப் போதனைக்குச் செவி கொடுப்போம்.

Koviloor Digital Library

சித்திவளாகப் போதனை

வள்ளலார் வடலூர் பெருவெளிக்கு இரண்டு கல் தொலைவிலுள்ள மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் 'சித்திவளாகம்' என்ற பெயரில் ஒரு குடிசை அமைத்து, அதையே தம் இருப்பிடமாகவும், அருட்பெருஞ்சோதித் தனிப்பெருங் கருணை ஆண்டவனை ஒளி வடிவில் வழிபடும் கோயிலாகவும், அடியார்களுக்கு உபதேசிக்கும் பள்ளியாகவும், தம்முடன் கருத்து மாறுபாடு கொண்டு உரையாடவரும் அறிஞர்களுடன் விவாதிக்கும் அரங்காகவும் கொண்டிருந்தார்.

வார்தாவும் வடலூரும்

'வார்தா' என்னும் குக்கிராமத்தில் காந்தியடிகள் ஆசிரமம் அமைத்தபின், அந்தச் சிற்றூர், அறிஞர்கள்—அரசியல் தலைவர்கள்—அறத்துறை ஞானியர்கள் ஆகியோர் யாத்திரை செய்யும் புனிதத் தலமாக மாறியதை அண்மைக் காலத்தில் கண்டோம். ஒரு நூற்றுண்டுக்கு முன் மேட்டுக்குப்பம் சித்திவளாகமும் அதே பெருமையைப் பெற்றிருந்தது. வள்ளலார் அங்குக் குடியேறியபின், மகா வித்வான்கள்—மடாதிபதிகள்—சைவாகம பண்டிதர்கள்—அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஆகியோரெல்லாம் அடிகளாரைத் தரிசிக்க, சித்திவளாகத்தை முற்றுகையிட லாயினர். அவர்களுள் பலர், அடிகளாரை அடிக்கடி தரிசிக்கவும், அவருடன் இருந்து அன்ருடம் ஆண்டவனை வழிபடவும், அவருடைய உபதேச மொழிகளை நாள்தோறும் கேட்கவும் விரும்பியவர்களாய், வடலூர்—மேட்டுக் குப்பம் கிராமங்களில் நிலம் வாங்கி வீடுகட்டித் தத்தம் குடும்பங்களோடு அங்கே குடியேறலாயினர்.

சித்திவளாகத்தில், புனிதத் தன்மை பொருந்திய ஒரு விளக்கைத் தமது கரத்தால் ஏற்றி வைத்தார் வள்ளலார். அந்த விளக்கொளியை அருளொளியாகப் பாவித்து, தாம் தனித்திருந்தும், சில நேரங்களில் அடியார்களோடு சேர்ந்தும் வழிபட்டு வந்தார்.

"பல சாதியினரும் அடிகளாரைச் சுற்றிப் பெருங்கூட்டமாகக் கூடினர்." என்கிருர், அந்தக் காட்சியைக் காணும் பேற்றினைப் பெற்ற தொழுவூர் வேலாயுத முதலியார்.

Koviloor Digital Library

மக்கள் பித்துப் பிடித்தவர்களாகித் தம்மை முற்றுகையிடுவதை அடிகளார் விரும்பவில்லை. வடலூரில் குடியேறத் தம்முடைய அனுமதியைக் கேட்ட அன்பர்களுக்கு ஏதேதோ சாக்குப் போக்குகள் கூறித் தடை விதித்து வந்தார். அடிகளார் விதித்த தடையையும் மீறி அன்பர் பலர் வடலூரில் குடும்பம் குடும்பமாகக் குடியேறலாயினர்.

குடிசையின் பெருமை !

வள்ளலார் அமைத்த 'சித்திவளாகம்' அருளொளி பெற்றுத் திகழ்ந்தது. வள்ளலாரின் அடியார்களேயன்றி, அவரை அடிமை கொண்ட ஆண்டவனும், அந்தக் குடிசைக்கு வருகை தந்தான் என்றால், அதன் பெருமையை என்னென் றுரைப்பது!

"வானிருக்கும் பிரமர்களும் நாரணரும் பிறரும்
மாதவம்பன் னுட்புரிந்து மணிமாட நடுவே
தேனிருக்கும் மலரணைமேல் பளிக்கறையி னூடே
திருவடிசேர்த் தருள்கவெனச் செப்பிவருந் திடவும்
நானிருக்கும் குடிசையிலே வலிந்துநுழைந் தெனக்கே
நல்லதிரு அருளமுதம் நல்கியதன் றியும்என்
ஊனிருக்கும் குடிசையிலும் உவந்துநுழைந்து அடியேன்
உள்ளமெனும் சிறுகுடிசை உள்ளும்நுழைந் தனையே!

"உள்ளபடி உள்ளதுவாய் உலகமெலாம் புகினும்
ஒருசிறிதும் தடையிலதாய் ஒளியதுவே மயமாய்
வெள்ளவெளி நடுவுளதாய் இயற்கையிலே விளங்கும்
வேதமுடி இலக்கியமா மேடையிலே அமர்ந்த
வள்ளமலர் அடிசிவப்ப வந்ததெனது கருத்தின்
வண்ணம்எலாம் உவந்தளித்து வயங்கியபேர் இன்பம்
கொள்ளைகொளக் கொடுத்ததுதான் போதாதோ அரசே
கொடும்புலையேன் குடிசையிலும் குலவிநுழைந் தனையே!"

என்ற பாடல்களில், ஒளி மயமான இறைவன் தம் உள்ளத்தில் புகுந்ததோடு, தம்முடைய ஊனிருந்த சித்திவளாகக் குடிசையிலும் புகுந்ததாகக் கூறுகின்றார், பொய்யடிமை யில்லாத புலவர் பெருமானாகிய வள்ளலார்.

உலகியலும் அருளியலும்

அடிகளார் சித்திகளாகத் தமர்ந்து அடியார்களுக்கு வழங்கிய போதனைகள், புத்தபகவான் போதி மரத்தினடியிலமர்ந்து,

தம் சீடர்களுக்கு வழங்கிய உபதேசங்களையே நினைவூட்டுகின்றன. அடிகளாரின் அமுத உரையைப் பருகுங்கால், நம் அகக் கண்களுக்கு அகத்தியர்-வான்மீகி போன்ற முனிவர்களெல்லாம் காட்சியளிக்கின்றனர். நம் போன்ற அனுபவம் பெற்ற ஒரு கவிஞர்,

"அகத்தியனோ வான்மிகியோ ஆதிசேடன் தானோ
மகத்துவமாம் சம்பந்த வள்ளலோ—இகத்தில்
சச்சிதா னந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன்
மெச்சுமதி இராமலிங்க வேள்."

என்று பாடுகின்றார்.

தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரியார் போன்று அருளியலைப் போதிப்பதோடு நின்றாரல்லர் வள்ளலார். அவர் உலகியல் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும் தம்மை நாடி வந்த அன்பர்களுக்கு உபதேசித்தார். அந்த இருவகைப் பணிகளிலும் ஈடுபடுமாறு தமக்கு ஆண்டவன் அருளியதாக,

"உலகியலோடு அருளியலும் ஒருங்குஅறியச் சிறியேன்
உணர்விலிருந்து உணர்த்திஎனது உயிர்க்குயிராய் விளங்கி..."

என்ற வரிகளில் அறிவிக்கின்றார்.

அடியார்களுக்கு உபதேசம்

அருளியலைப் போதிக்கப் புகுந்த பெருமான், முத்திக்கு முதற்படி இன்னதெனக் கூறுங்கால்,

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளி இருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினா லல்லது வேறு வகையால் அடைவது அரிது.

"இவ்வன்பு ஜீவகாருண்யத்தா லல்லது வேறு வகையால் வாராது.

"ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு.

"அன்னிய உயிர்களுக்கு இம்சை உண்டாகாது நடத்தலே ஜீவகாருண்யம். இதுதான் முத்தியடைவதற்கு முதற்படியா யிருக்கிறது."

—பா. பி. ப. பு. 4; பக். 16.

Koviloor Digital Library

எனக் குறிப்பிட்டுள்ளார். முத்திக்கு முதற்படியை அறிவித்த நமது குருதேவர், அதனை அடைவதற்கான சாதனம் பற்றியும் கூறுகின்றார்:

"முத்தியடைவதற்கு இம்மானிட தேகமே தக்கதாயும் வேறு தேகத்தால் அதை அடைவது அரிதாயும் இருப்பது ஆதலால் எவ்விதத்தா லாயினும் தேகம் நீடித்திருக்கும்படி பாதுகாத்தல் வேண்டும்."

—பா. பி. ப. பு. 4; பக். 12.

அருட்சோதி இராமலிங்க வள்ளலார் வழங்கிய இந்தப் பொன்மொழி,

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே"

என்ற திருமூலர் திருமந்திரப் பாடலையே நினைவூட்டுகின்றது. மற்றும்,

"கடவுள் சர்வஜீவ தயாபரர், ஆகையால் சர்வ வல்லப முடையவர். அதுபோல் நம்மையும் சர்வஜீவ தயை யுடையவர்களாய்ச் சர்வ வல்லபத்தையும் பெற்றுக்கொள்ளும்படி செய்வார்.

"யாரிடத்தில் தயவு அதிகப்பட்டிருக்கிறதோ, அவரிடத்தில் கடவுள் இருக்கின்றார். அந்தத் தயையில்லாதவர்களிடத்துக் கடவுள் இருந்தும் இல்லாமையா யிருக்கிறார். கடவுளிடத்தில் சதா அன்பும் பக்தியும் செலுத்த வேண்டும்."

—பா. பி. ப. பு. 4; பக். 65.

"ஈசுவர பக்தி என்பது, எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதல்."

—பா. பி. ப. பு. 4; பக். 61.

என்று பக்தி மார்க்கத்தின் பெருமையைப் போதிக்கின்றார் அருட் பிரகாசர்.

நான்கு கேடுகள்

எல்லா வுயிர்களிடத்தும் ஈசன் இருக்கின்றான் என்றுரைத்து அந்த ஈசனை அவரவர் உள்ளத்துள்ளே காணுமாறு

Koviloor Digital Library

போதித்து, அதற்கு முதற்படி உடலை ஓம்புவதே என்று அறிவுரை புகன்ற வள்ளலார், உடல் நலத்தினை அழிக்கும் நான்கு தீச்செயல்களை நமக்கு எடுத்துக் காட்டி, எச்சரிக்கின்றார். அவை வருமாறு:

"நம்மை நஷ்டஞ் செய்வன நான்கு. அவை யாவன: ஆகாரம், மைதுனம், நித்திரை, பயன்—ஆகிய இந்நான்கிலும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

"இந்த நான்கினும் முக்கியவானவை ஆகாரம், மைதுனம். ஆதலால், இவ்விரண்டிலும் அதனிலும் அதிக ஜாக்கிரதையோடு இருக்க வேண்டும். இந்த இரண்டிலும் முக்கியமானது மைதுனம். ஆதலால், இந்த விஷயத்தில் எல்லாவற்றைப் பார்க்கிலுமதிக ஜாக்கிரதையாக யிருக்க வேண்டும். அவ்வாறு இராவிடில் தேகம் அதி சீக்கிரத்தில் போய்விடும்; பின் முத்தியடைவது முடியாது."

—பா. பி. ப. பு. 4, பக். 16-17.

தேகம் நீடித்திருக்க ஆகார நியதிகளையும் மருத்துவ முறைகளையும் அடிகளார் கூறுகின்றார். மனிதன் சாகாமலிருக்கவும் முடியுமென்பது அடிகளாரின் உறுதியான கொள்கை.

'மதம்' வேண்டா!

இறைவனை அடைய நம் முன்னோர்கள் சமயங்களைச் சாதனங்களாக்கினர். அவை, இறையருளைப் பெற முடியாதபடி தடைகளாகிவிட்டன என்று கூறுகின்றார் வள்ளலார்.

"தத்துவ நியாயத்தை அனுசரித்துச் சமயங்களேற்படுத்தப்பட்டிருக்கின்றன. தயவை விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பன சமய ஏற்பாடு, ஜாதி ஏற்பாடு முதலியவைகள். ஆதலால், இவைகளை விட்டொழித்துப் பொது நோக்கம் வந்தாலொழிய, காருண்ணியம் விருத்தி ஆகிக் கடவுள் அருளைப் பெற்று அனந்த சித்தி வல்லபங்களைப் பெற முடியாது."

"எல்லா வுயிர்களிலும் ஈசன் இருக்கின்றான்" என்பது உண்மையானால், சாதி—சமயங் காரணமாக உயிர்களிடையே வேறுபாடுகளையும் விரோத வுணர்ச்சிகளையும் வளர்ப்போர், ஆண்டவனது அருளுக்குப் பாத்திரராகார் என்பதும் உண்மையாகத்தானே இருக்க வேண்டும்.

Koviloor Digital Library

சித்திவளாகப் போதனைகளில் சமய—சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களும் கலந்திருக்கின்றன. அடிகளார், சன்மார்க்கிகளுடன் நேருக்கு நேர் பேசினராகையால், ஞானிகள் மட்டுமே பொருள் அறிந்து வைத்துள்ள—மக்களறியாதபடி மறைக்கப்பட்டுள்ள புராணக் கற்பனைகள் பற்றிய உண்மைகளையும் விளக்கியுள்ளார்.

"சூரபத்மனுடைய யுத்தம் முழுமையும் தத்துவ சம்மாரமே. சுப்பிரமணியர், விநாயகர் மயிலின் மேலும் பெருச்சாளியின் மேலும் ஏறினர்களென்கிற தாத்பர்யம் வேறு. அது தெரியாமலந்தச் சுவாமிகளைத் திருவிழாக் காலத்தில் வாகனங்களின் மேல் ஏற்றுதல் தெரியாமை."

-பா. பி. ப. பு. 4; பக். 63.

"பெரிய புராணத்தில் குறித்த 63 நாயன்மார்களும் தத்துவங்களே யொழிய வேறில்லை. அதை அதை விசாரித்து அனுஷ்டித்தால் அது அது ஒவ்வொரு சித்தியைக் கொடுக்கும்.

"இதுபோல, சைவ புராணம் விஷ்ணு புராணம் முதலிய யாவற்றின் உண்மையும் தத்துவ சம்மாரங்களே.

"மாணிக்கவாசக சுவாமிகள் முதலிய மகான்களின் சரித்திரமும் தத்துவ சித்தியே. மேல் குறித்தவர்கள் பேரால் ஒவ்வொரு மகான்கள் சாஸ்திரங்களையும் தேவாரம் திருவாசகங்கள் முதலியவைகளையும் அமைத்து, இவற்றிற்கு இடமாக ஆலயங்கள் அமைத்து, மேற்படி சித்திக்கு உரிய தத்துவ தத்துவிகளின் பெயரைக் கர்த்தாவாக்கி, அந்தச் சித்தி முடிக்கும் காலம் தினம் கருவி முதலியவைகளை மேற்படி ஆலயங்களுக்கு விசேஷ காலமாக்கி, வழக்கத்தில் வருவித்தார்கள்.

"இதுபோலவே திருவிளையாடல் பாரத பாகவதங்களும் அமைத்துக் கொள்க.

"கணபதி சுப்பிரமணிய சுவாமிகளும் தத்துவங்களே தவிர வேறல்ல, புராணங்களின் இருதயமெல்லாம் தத்துவ சம்மாரமே."

—பா. பி. ப. பு. 4; பக். 23.

புராணங்கள் தத்துவக் கற்பனைகளே!

புராணங்களைப் பற்றி அடிகளார் அரைகுறையாகத் தெரிவித்துள்ள மேற்கண்டகருத்துக்கள் அவற்றில் ஆழ்ந்த பற்றுக் கொண்டு, பயன் துய்த்துவரும் மக்களுக்கு மனக் குழப்பத்தை

Koviloor Digital Library

ஏற்படுத்தக்கூடும். புராணக் கற்பனைகளைப் பற்றிய தம் கருத்துக்கள், "சுத்த சன்மார்க்கத்தில் விவரமாய் வெளிவரும்," என்று கூறியுள்ளார். ஆனால், அந்த நூலை அவர் வெளியிட்டதாகத் தெரியவில்லை. அந்த நூல் வெளியாகி யிருந்தால், புராண வாதிகளும் ஒப்புக்கொள்ளத் தக்க உண்மைகளை அடிகளாரிடமிருந்து நாம் பெற்றிருக்கக் கூடும். அந்த வாய்ப்பை இழந்து விட்டோமாதலால், புராணங்கள்பற்றி அடிகளார் தெரிவித்துள்ள கருத்துக்கள், பூரண வடிவம் பெறாதவை யென்றே கருத வேண்டும்.

புராணக் கதைகள் அனைத்தும் முழுக்க முழுக்க வரலாறு என்றோ, முழுக்க முழுக்கக் கற்பனை என்றோ, கூற இயலாது. சில கதைகள் வரலாறு தழுவிய கற்பனைகளாகவும், சில கதைகள் கற்பனை தழுவிய வரலாறுகளாகவும் இருத்தல் கூடும். வரலாற்றுச் செய்திகளையும் கற்பனைகளையும் தனித் தனியே பிரித்துக் காட்ட இயலுமாயினும் வைதிகர்கள் அதனை அனுமதிப்பதில்லை. ஆகவே, கற்பனைகளையும் வரலாற்றுச் செய்திகளாக நம்பும் மூடத்தனம் மக்களிடையே நிலைத்துவிட்டது. சாதாரண மக்கள், புராணக் கற்பனைகளை வரலாற்று நிகழ்ச்சிகளாக நம்புவது இயற்கை. ஆனால் தத்துவங்களைப் படித்தவர்களேனும் அதற்கு விலக்காக இருக்கலாமன்றோ! மாறாக, அவர்களுள் மிகப் பெரும்பாலோர் புராணக் கதைகளை வரலாற்று நிகழ்ச்சிகளாகவே நம்புகின்றனர்.

> "கைலாசபதி என்றும் வைகுண்டபதி என்றும் சத்திய லோகாதிபதி என்றும் பெயரிட்டு, இடம் வாகனம் ஆயுதம் வடிவம் ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து, உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.
>
> "தெய்வத்துக்குக் கைகால் முதலியன இருக்குமா?" என்று கேட்பவர்க்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கின்றார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்களென்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையை அறியாது, அப்படியே கண்ணை மூடிக் கொண்டு உளறி யிருக்கிறார்கள். ஆனால், ஆதியிலே இதை மறைத்தவன் ஓர் வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. இதுவரைக்கும் அப்படிப்பட்டவன் பூட்டிய பூட்டை உடைக்க ஒருவரும் வரவில்லை."
>
> —பா. பி. ப. பு. 4; பக். 133.

Koviloor Digital Library

என்று கூறுகின்றார் வள்ளலார். புராணங்களை, தத்துவ உண்மைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ள பொக்கிஷ அறைகளாகவே அடிகள் கருதியிருக்கிறார். இந்நாளைய சீர்திருத்த வாதிகள் போல, "புராணங்களனைத்தையும் தீயில் போட்டுப் பொசுக்க வேண்டும்," என்று அடிகள் கூறவில்லை. அவர் கருத்துப்படி, அத்தனை புராணங்களும் தத்துவச் செல்வங்களாகும். அடிகள் வெறுப்பது புராணங்களை யன்று; அவற்றில் சொல்லப் பட்ட கற்பனைகளை நம்பி, தத்துவ உண்மைகளை யறியா மூடத் தனத்தையே யாகும்.

அடிகளார், இறைவழிபாட்டிற்கான வழி முறைகளை உப தேசித்தகாலை, கூறியதாவது:

"ஆன்மாவுக்குச் சகல விளக்கமாகிய சாக்கிர ஸ்தானம் லலாடம். ஆதலால், விசேடம் சிறந்தது லலாடத்தில் மூக்கு நுனி யாகிய புருவ மத்தி.

"நாம் நெற்றியிலிருக்கும் நடுக்கண்ணை ஆசாரியர் அனுக்கிரகத்தால் திறக்கப் பெற்றுக் கொள்வது நலம். ஏனெனில், மேற்படி நெற்றிக் கண்ணைத் திறக்கப் பெற்றுக் கொண்டவனுக்கு எல்லா அனுபவங்களும் பட்டப்பகல் போலத் தெரியும். அவன் தான் சுத்த ஞானி.

"மேற்படி கண்ணைத் திறப்பதற்கு ஒரு கதவும் பூட்டு முளது. மேல்படி பூட்டை அருளென்ற திறவுகோலைக் கொண்டு திறக்க வேண்டும். ஆதலால் மேல்படி அரு ளென்பது ஆன்ம இயற்கையாகிய பெருந்தயவு. நாம் தயா வடிவமானுல் மேல்படி அனுபவம் நேரும்."

-பா. பி. ப. பு. 4; பக். 38.

கண் புருவப் பூட்டு!

மனிதருடைய முகத்தில் புருவ நடுவே நெற்றிக் கண் ஒன்று உண்டென்றும், ஆசாரியன் துணையால் அதனைத் திறந்து கொண்டவரே ஞானி என்றும் சித்திவளாகத்தில் அடி களார் செய்த உபதேசம் அவருடைய பாடல்கள் சிலவற்றுலும் உறுதிப்படுகின்றது.

"கையறவி லாதுநடுக் கண்புருவப் பூட்டு
கண்டுகளி கொண்டுதிறந் துண்டுநடு நாட்டு"

"தனித்தபர நாதமுடித் தலத்தின்மிசைத் தலத்தே
தலைவரெலாம் வணங்கநின்ற தலைவன்நட ராசன்

Koviloor Digital Library

இனித்தசுகம் அறிந்துகொளா இளம்பருவந் தனிலே
என்புருவ நடுஇருந்தான் பின்புகண்டேன் இல்லை"

"கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே!"

சிவபிரான் நெற்றிக்கண் படைத்தவன் என்ற புராணக் கற்பனையும், அடிகளாரின் இந்த உபதேசத்தை உறுதிப் படுத்துவதாகும். இறைவன் ஒளி அல்லது அறிவுமயமா யிருக்குமிடம் இதுவென்பதைக் காட்டவே நம் நாட்டாரில் ஆண்கள் சந்தனமும், பெண்கள் குங்குமமும் நெற்றியிலிடும் வழக்கம் தொன்றுதொட்டே இருந்து வருகின்றது போலும்! அடிகளார்,

"நெற்றியில் தோன்றுதிருப்பது மேல்படி இடத்தில் ஆன்ம விளக்கம் விசேஷமுள்ளது. அதைப்பற்றி மேல்படி இடத்துக்கு விந்து ஸ்தானமென்றும், அறிவிட மென்றும், லலாடமென்றும், முச்சுடர் இடமென்றும், முச்சந்தி மூல மென்றும், மகாமேரு வென்றும், புருவமத்தி என்றும், சிற்சபா அங்கமென்றும் பெயர்."

-பா. பி. ப. பு. 4; பக். 85.

என்கின்றார். இந்த ஞானக் கண்ணைத் திறந்து கொள்வதற்குத் தியானம் மிகமிக இன்றியமையாத தாகும். அதனால்,

"தியானஞ் செய்யவேண்டுமானால், ஏதாவது ஒரு உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமா யிருக்கப் படாது. பின், உருவம் கரைந்து அருவமாகும். துவைத மாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும். எப்படி எனில், பார்க்கும் தான் கெடுவது அத்வைதம். பார்க்கப் படும் பொருளும் கெடுவது அதீதம்.

"தங்களைப் பார்க்கவேண்டுமானால் என்னைப் பாருங் கள்; என்னைப் பார்க்க வேண்டுமானால் தங்களைப் பாருங் கள். தங்களைப் பார்த்தால் என்னைப் பார்ப்பீர்கள். என்னைப் பார்த்தால் தங்களைப் பார்ப்பீர்கள்."

-பா. பி. ப. பு. 4; பக். 114.

என்கிறார். இந்த உபதேசத்தின் பொருளைத் தம்முடைய பிள் ளைப் பருவத்திலேயே நிலைக் கண்ணாடியை எதிரே வைத்து, அதிலே தணிகை வேலனை அவர் கண்டதனா லறியலாம். "கடவுளைக் காண உண்மையாய் விரும்பினால், அழுத கண்ணீர்

Koviloor Digital Library

மாறுமா? ஆகாரத்தில் இச்சை செல்லுமா?'' என்பதும் அடிகள் உபதேசம்.

யோகம் வேண்டா

தியானத்தில் ஒருவகை, தெய்வ நினைப்போடு தன்னை மறந்து சமாதி கூடுவதாகும். அதனை யோக மென்றும் சொல்வது உண்டு. அடிகளார் சாதாரண மக்கள் அத்தகைய யோகத்தை விரும்ப வேண்டா மென்கின்றார்.

> ''இந்தக் கடையுக மாகிய கலியுகத்தில் உங்களால் யோகம் முதலிய சாதனங்களை இயற்ற முடியாது. ஆதலால், நீங்கள் தோத்திரத்தையே ஈடேறும் மார்க்க மெனக் கொள்ளுங்கள்.''

> ''ஓம் சிவாயநம வென்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வுலகம் அருட்சத்தி, பொருட்சத்தி, கிரியா சத்தி, யோகசத்தி, ஞானசத்தி மயமாய் இருப்பதாகப் பார்த்துக்கொண்டிருத்தல் வேண்டும். யோகம் செய்ய வேண்டியதில்லை. அதில் அழுந்திவிட்டால் மீளுவது கஷ்டம். சதாசிவ கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல் அருமை. மூடம் உண்டாகும். உண்மை.''

-பா. பி. ப. பு. 4; பக். 114.

என்று சித்திவளாகத்தில் தம் எதிரே குழுமிய பக்தர்களுக்கு உபதேசித்தார். மற்றும், ''சமாதிப் பழக்கம் பழக்கமல்ல; சகசப் பழக்கமே பழக்கம்,'' என்கிறார்.

நெற்றிக்கண் திறந்து ஞானியாக விரும்பாதவரும் அன்றாட வாழ்க்கையில் சிவபக்தியோடு இருப்பது அவசியமென்பது அடிகளாரின் உபதேசம்.

> ''மலஜல சங்கல்ப காலத்தில் தவிர, மற்றக் காலங்களில் கடவுளிடத்தில் அன்பும், ஜீவர்களிடத்தில் பக்தியும் செலுத்தவேண்டும். பக்தி என்பது மன நெகிழ்ச்சி; மனவுருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருத்தலை அறிதலே ஈசுவர பத்தியாகும்.''

உலகெலாம் வாழட்டும்!

இந்த இருபதாம் நூற்றாண்டில் பிரார்த்தனையின் பெருமையை மக்களுக்கு எடுத்தோதியவர்களுள் காந்தியடிகளே முதல்வராவார். தத்தம் நன்மைக்காக மனிதர் ஒவ்வொருவரும்

Koviloor Digital Library

பிரார்த்தனை செய்யும் வழக்கம் இன்றும் இருக்கின்றது. ஆனால், தன்னலம் விடுத்து, உலகெலாம் வாழ அருளுமாறு இறைவனைப் பிரார்த்திக்க மக்களுக்குப் போதித்தார் மகாத்மா. வள்ளலார் செய்த உபதேசம் வருமாறு:

> "ஒருவன் பிரார்த்தனை செய்வதில் அவனுக்காக மட்டும் செய்வது சரியல்ல; இந்த உலகமெலாம் வாழும்படி பிரார்த்தனை செய்தல் வேண்டும். அப்படிச் செய்வதால், அதில் ஒருவனுக்கு வேண்டியவை எல்லாம் அடங்கி விடுகின்றன."

—பா. பி. ப. பு. 4; பக். 112.

தம்முடன் கூடி இறைவனைப் பிரார்த்திக்குமாறு சித்தி வளாகத்தில் குழுமிய அன்பர்களை அடிகள் அழைக்கும் பாடல் வருமாறு:

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண் ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம் வம்மின்உல கியலீர்!
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்!
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே."

அடிகள் இறை வழிபாட்டில் மனிதர் ஒவ்வொருவரும் தனித்தனியே—தன்னலம் கருதியே வழிபடும் முறையை வெறுத்ததோடு, தத்தம் குடும்பத்துடன் கூடியோ, ஊராருடன் சேர்ந்தோ உலக நலங்கருதி வழிபடும் முறையை உபதேசித்தார். வடலூரில் சத்திய ஞானசபை என்னும் புதியதொரு வழிபாட்டுத் தலத்தை நிர்மாணித்ததும் கூட்டு வழிபாட்டு முறையைப் பயிற்றுவிக்கவே யாகும்.

சங்க காலத் தமிழர்

சங்க காலத் தமிழர், பலராகக் கூடி இறைவனை வழிபடும் கூட்டு வழிபாட்டையே கடைப்பிடித்தனர். சிலப்பதிகாரத்தில் வரும் ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவ வரி, இந்திர விழா ஆகியவற்றால் இந்த உண்மையை அறியலாம்.

தாம் இயற்றிய இராமாயண காப்பியத்திற்குக் காப்புச் செய்யுள் இயற்றிய கம்பரும் அந்தச் செய்யுளின் இறுதி வரியில், "அலகிலா விளையாட்டுடையாரவர்—தலைவர், அன்ன

Koviloor Digital Library

வர்க்கே சரண் யாங்களே.'' என்று பன்மையால் பாடியிருப்பதும் கவனிக்கத் தக்கதாகும்.

''ஒக்கத் தொழுகிற்றிராயின் கலியுகம் ஒன்று மில்லை.'' என்கின்ருர், வைணவப் பெரியாராகிய நம்மாழ்வார். ஆம், கூட்டு வழிபாட்டு முறையால் மனித சமுதாயத்திலுள்ள கலி யுகக் கொடுமைகளை அழித்து, கிருதயுக நன்மைகளைக் கொண்டுவர முடியுமென்பது நம்மாழ்வாரின் நம்பிக்கை. வள்ள லாரும்,

> ''தற்போது உலகில் மேலிட்டிருக்கும் கலிபுருடனின் விபத்துக் கேதுவான செல்வாக்கு, இனி பத்து வருடத் திற்குள் அடங்கிப் போகும்.''

என்று தமது உபதேசத்தில் குறிப்பிட்டிருக்கிருர். அடிகள், தாம் துவக்கி வைக்கும் கூட்டு வழிபாட்டு முறை பாரெங்கும் பரவி, அதன்வழி கலி அழியுமென்று நம்பினுர்.

வாரிசின் வாக்கு

இஸ்லாம், கிறித்துவ மதத்தவரிடையே நிகழும் கூட்டு வழிபாட்டு முறையும் அடிகளாரின் உள்ளத்தைக் கவர்ந்திருக்க வேண்டும். அது காரணமாகவும் கூடித் தொழும் முறையை வலியுறுத்தி, அதற்கென, சமரச சுத்த சன்மார்க்க நெறிப்படி,

சத்திய விண்ணப்பம்,
சத்தியப் பெருவிண்ணப்பம்,
சத்திய ஞான விண்ணப்பம்,
சத்தியச் சிறு விண்ணம்,

என, நான்கு வகையான விண்ணப்பங்களை உரைநடையில் இயற்றித் தந்தார். வள்ளலாரின் வாரிசாகத் தோன்றிய பாரதி யாரும்,

> ''இந்துக்கள், தங்கள் வேதப்பொருளை நன்ருகத் தெரிந்துகொண்டு கூடித் தொழுவார்களானுல் கலியுகம் நீங்கிப் போய்விடும்.
>
> ''ஒன்றுகூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடமுண் டாகுமென்று கருதி முன்னேர்கள் கோயில் வகுத்தார்கள்.''

Koviloor Digital Library

என்று கூறுகின்றார். தேசிய ஒருமைப்பாடு காணவும் கூட்டு வழிபாடு மிகச் சிறந்த சாதனமாகும். சித்திவளாகத்தில் அடிகள் செய்த உபதேசம் ஆன்மநேய ஒருமைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டதெனலாம்.

மனிதர் குறிக்கோள் !

ஆண்டவன் அருளை அடைவதொன்றே மனிதர் குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று அடிகள் தம்மை அணுகிய ஒவ்வொருவரிடத்தும் கூறிவந்தார். கடித மூலமும் இதனை உபதேசித்தார்.

"நாம் பல சனனங்களையுந் தப்பி, மேலான இந்த மனிதப் பிறவி யெடுத்தது சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசத்தினாலாவது அந்த அருளை அடையவேண்டும். அந்த அருள் எவ்வகையால் வருமென்றால்—எல்லா வுயிர்களிடத்திலும் தயவும் பிரபஞ்சத்தில் வெறுப்பும் சிவத்தினிடத்தில் அன்பும் மாறாது நம்மிடத்திருந்தால், அவ்வருள் நம்மை யடையும். நாமும் அதனையடைந்து எதிரற்ற சுகத்திலிருப்போம். இது சத்தியம். இனி...தியானமே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆகலில், இடைவிடாது நல்ல மனத்தோடு தியானிக்க வேண்டும். அதனை யிதனடியில் குறிக்கின்றேன்.

ஓம் சிவாய நம :

"நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம வெனப்பெற்றேன்"

"சிவாய நமவென்று சிந்தித்திருப் பார்க்கு
அபாய மொருநாளு மில்லை"

"நான்செய்த புண்ணியம் யாதோ சிவாய நமவெனவே
ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற்றேன்..."

"இதனைக் கண்டு தியானித்து வந்தால் பின்பு எல்லாம் விளங்கும்."

—பா. பி. ப. பு. 5; பக். 31-32.

இது, சென்னை இறுக்கம் இரத்தின முதலியார் என்பவருக்கு அடிகள் கடித வாயிலாகச் செய்த உபதேசமாகும். இதில், அடிகள் எடுத்துக் காட்டியுள்ள "நானேயோ தவஞ் செய்தேன்," எனத் துவங்கும் பாடல், திருவாசகத்திலுள்ளது. "சிவாய நமமென்று" எனத் துவங்கும் பாடல், ஔவையார் 'நல்வழி'யிலுள்ளது. "நான் செய்த புண்ணியம்" எனத் துவங்குவது, அடிகளாரின் அருட்பா. 'திருவருண்முறையீடு' என்ற

Koviloor Digital Library

பகுதியிலுள்ளது. அடிகளார் தாமே ஆயிரமாயிரம் அருட்பாக்களைப் பாடியிருந்தும், ஔவையார்—மாணிக்கவாசகர் ஆகிய முன்னோரின் பாடல்களையும், எடுத்துக் காட்டி, அவற்றைப் பாடி இறைவனைத் தியானிக்கவேண்டுமென உபதேசித்திருப்பது அவர்களிடம் அவருக்கிருந்த பக்தியைக் காட்டுவதாகும்.

மனமடங்கித் தியானத்தில் மூழ்கியிருக்கும் திறனைப்பெறுவது எளிதன்றாகையால், அதற்கான பயிற்சியைத் தக்க சாதுக்கள் வாயிலாகப் பெறவேண்டும். இயலாவிடத்து 'நமசிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினாற்போதும் என்கின்றார் வள்ளலார்.

> ''சிவ பரம்பொருளை அநுபவித்தற்கு முக்கியம் ஜீவ காருண்யம் பாச வைராக்கியம் சிவபக்தி. இவை கிடைத்தற்கு முதற் கருவி சாதுக்கள் சார்பு. ஆகலின் அவசியம் சாதுக்கள் சார்பு வேண்டும் நல்லது......சாதுக்கள் சார்பு தற்காலத்திற் கிடைப்பினும் கிடையாவிடினும், நம்மை யெழுபிறப் பென்னும் பெருங்கடலைக் கடப்பித்துப் பேரின்பமென்னும் கரையிலேற்றும் சைவப்பதியாய், தெய்வப் புணையாக வாய்த்த திருமந்திரமாகிய பஞ்சாக்கரத்தை இடைவிடாது சிந்தித்துக் கொண்டும் சிவபிரான் திருவடிகளைப் பாவித்துக் கொண்டும் வருவது முக்கியத்தினு முக்கியம்.''

—பா. பி. ப. பு. 5; பக். 74.

நால்வகை ஒழுக்கம்

அடிகளார் அன்றாட வாழ்க்கையில் மனிதர் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகளையும் போதித்தார். அவை, (1) இந்திரிய ஒழுக்கம், (2) கரண ஒழுக்கம், (3) ஜீவ ஒழுக்கம், (4) ஆன்ம ஒழுக்கம் என்பனவாம்.

(1) இந்திரிய ஒழுக்கம்

> ''நாத முதலிய தோத்திரங்களை உற்றுக் கேட்டல், மற்றவை கேளாதிருத்தல், கொடுஞ்சொல் முதலியவை செவிபுகாமல் நிற்றல், அசுத்தங்களைத் தீண்டாதிருத்தல், கொடூரமாகப் பாராதிருத்தல், ருசியின் மீது விருப்பமின்றி இருத்தல், சுகந்தம் விரும்பாதிருத்தல் என்னும் ஞானேந்திரிய ஒழுக்கமும்;

Koviloor Digital Library

"இனிய வார்த்தையாடுதல், பொய் சொல்லாதிருத்தல், ஜீவஹிம்சை நேரிடுங்கால் எவ்விதத் தந்திரத்திலாவது தடை செய்தல், பெரியோரிடத்தில் செல்லுதல் என்றல், சாதுக்களிடம் பரிச்சயம் பண்ணுதல், உயிர்க்கு உபகரிக்கு நிமித்தஞ் சஞ்சரித்தல், உயிர்க்கு உபகார நிமித் தம் கையால் உபகரித்தல், மலஜல உபாதைகள் அளவு மீறுமலும் சிரமங் குறையாமலும் அளவை போல் தந்திர ஓஷதிகளாலும், ஆகாரப் பக்குவத்தாலும், பவுதிகப் பக்கு வத்தாலும் செய்வித்தல் என்னும் கருமேந்திரிய ஒழுக்க மும் ஆகும்.

(2) கரண ஒழுக்கம்

"சிற்சபையின்கண் மனத்தைச் செலுத்துவது தவிர மற்றெந்த வகை ஆபாசத்திலும் செலுத்தாமல் இழுத்து மேற் குறித்த இடத்தில் நிறுத்துதல், பிறர் குற்றம் விசாரியாதிருத்தல், தன்னை மதியாதிருத்தல், செயற்கைக் குணங்களால் உண்டாகிய கெடுதிகளை நீக்கி இயற்கை யாகிய சத்துவமயமா யிருத்தல், பிறர்மேற் கோபியா திருத்தல், தனது சத்துருக்களாகிய தத்துவங்களைக் கோபித்தல்; அக்கிரம அதிக்கிரம புணர்ச்சி செய்யாதிருத் தல் முதலியனவாம்.

(3) ஜீவ ஒழுக்கம்

எல்லா மனிதரிடத்தும் ஜாதி, சமயம், குலம், கோத் திரம், சூத்திரம், சாத்திரம், தேசம், மார்க்கம், உயர்வு, தாழ்வு முதலிய பேதமற்றுத் தானுக நிற்றல் முதலியன வாம்.

(4) ஆன்ம ஒழுக்கம்

எண்பத்து நான்கு நூறுயிரம் யோனி பேதங்களிடத் தும் உள்ள ஆன்மாக்களிடத்தும் இரங்கி, ஆன்மாவே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் கண்டு கலந்து பூரணமாக நிற்றல் முதலியனவாம்.

நால்வகை நெறிகளைக் கூறிய அடிகளார், அவற்றேடு இன்னும் சில நியதிகளையும் வற்புறுத்துகின்றுர் :

"இவ்வண்ணமான ஒழுக்கங்களில் இயன்ற மட்டில் ஒழுகப் பெற்று, இடந்தனித்திருத்தல், இச்சையின்றி நுகர்தல், தெய்வம் பராவல், பிறவுயிர்க்கிரங்கல், பெருங் குணம் பற்றல், பாடிப் பணிதல், பக்தி செய்திருத்தல்

Koviloor Digital Library

முதலிய நற்செய்கைகளில் பலகால் முயன்று முயன்று பழகிப் பழகி இருத்தல் வேண்டும்."

அதிர்ச்சி தரும் புரட்சி

அடிகளாரின் சித்திவளாக உபதேச மொழிகளில், சைவ—வைணவர்களுக்கு அதிர்ச்சி தரும் புரட்சி மொழிகள் வருமாறு :

"சைவம்—வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லக்ஷியம் வைக்க வேண்டாம். (அவற்றில் தெய்வத்தைப் பற்றி) குழூஉக் குறியாகக் குறித்திருக்கிறதே யன்றிப் புறங்கவியச் சொல்லவில்லை.

"நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவென்று அளவு சொல்ல முடியாது...அந்த லட்சியம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற—திருவருட்பாவில் அடங்கி யிருக்கிற—ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களுடைய ஸ்தோத்திரங்களையும் சபைக்குக் கொண்டு வந்தால், அவைகளே சாக்ஷி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்ததென்றால் அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது."

—பா. பி. ப. பு. 4; பக். 135.

அடிகள் "திருவருட்பா" என்று குறிப்பிடுவது முதல் நான்கு திருமுறைகளை மட்டுமே. ஏனெனில், அவர் காலத்தில் மற்றிரு திருமுறைகள் அச்சிடப் பெறவில்லை.

அடிகள் கூறியிருப்பாரா ?

"இந்த உபதேச வாசகம் அடிகளாருடையதாக இருக்குமா ?"—என்று ஐயுறுகின்றார், திருவருட்பாப் பதிப்பாசிரியரான திரு. ஆ. பாலகிருஷ்ண பிள்ளை. அதற்கு அவர் "திருவருட்பா—உபதேசப் பகுதி" முன்னுரையில் கூறும் காரணம் வருமாறு :

"உபதேசப் பகுதியில் அடங்கியுள்ளவற்றில் பெரும்பாலன, சுவாமிகள் தம்மை அடுத்த அன்பர்களுக்கு வாய்மொழியாக வடலூர் தருமச்சாலையிலும் மேட்டுக்குப்பம்

Koviloor Digital Library

சித்திவளாகத்திலும் உபதேசம் செய்தவற்றை, அவ்வன் பர்களில் ஒரு சிலர் எழுதிவைத்த குறிப்புகளாகும்.

"அங்ஙனம் எழுதி வைத்திருப்பதில் கேட்டவர்களின் அல்லது ஞாபகங்கொண்டு சொன்னவர்களின் அல்லது இவற்றைக் கேட்டு எழுதியவர்களின் கேள்விக் குறை யாலோ, திரி புணர்ச்சியாலோ, அல்லது எழுத்துப் பிழைக ளாலோ, எங்கெங்கு சுவாமிகளின் உபதேசங்களில் சொரு பம் மாறுபட்டிருக்கிறதோ, அதையும் தெரிந்து கொள் வது எளிதன்று."

"எனினும், சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய தெய் வத் திருஏடுகளிலிருந்து பதிப்பித்த அவர்கள் ஸ்தோத் திரங்களையும் வாசகங்களையும் கொண்டே, இக்குறிப்புக் களில் ஒவ்வொன்றிலும் உள்ள உபதேசத்தின் சொருபத் தைச் சன்மார்க்க சாதகர்கள் யாவரும் எல்லைப்படுத்தி உணர்தல் வேண்டும்."

அடிகள் கூறியதே!

திரு. பிள்ளையவர்களின் எச்சரிக்கை கவனத்திற் கொள்ளத் தக்க தாகும். ஆயினும், அவர் அடிகளாரின் கருத்தாக ஏற்கத் தயங்கும் மேற்கண்ட பகுதி உண்மையில் அடிகளார் உப தேசித்த தென்றே நம்புகின்றோம். சித்திவளாகத்திலமர்ந்து அடிகள் வழங்கிய "சைவ—வைணவம் முதலிய சமயங்களிலும் வேதாந்தம்—சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்கவேண்டாம்" என்ற உபதேசக் கருத்து, தம் திருக்கரத் தால் எழுதி அடிகளார் வெளியிட்ட "சமரச சுத்த சன்மார்க்க சத்தியப் பெரு விண்ணப்ப"த்தினுள்ளும் காணப்படுகின்றது.

"சைவம் வைணவம் சமணம் பவுத்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த அளவிறந்த சமயங்களும் அச்சமயங்களில் குறித்த சாதனங்களும் தெய்வங்களும் கதிகளும் தத்துவ சித்தி விகற்பங்க ளென்றும், அவ்வச் சமயங்களில் பலபட விரிந்த வேதங்கள் ஆகமங்கள் புரா ணங்கள் சாத்திரங்கள் முதலிய கலைகளெல்லாம் தத்துவ சித்திக் கற்பனைக் கலைக ளென்றும், உள்ளபடியே எனக் கறிவித்து அச்சமயாச்சாரங்களைச் சிறிதும் அனுட்டியா மற் றடைசெய்வித் தருளினீர்."

"அன்றியும் வேதாந்தம் சித்தாந்தம் போதாந்தம் நாதாந்தம் யோகாந்தம் கலாந்தம் முதலாகப் பல பெயர் கொண்டு பலபட விரிந்த மதங்களும் மார்க்கங்களும் சுத்த

Koviloor Digital Library

சன்மார்க்கானுபவ லேசசித்தி பேதங்களென் றறிவித்து, அவைகளையும் அனுட்டியாதபடி தடை செய்வித் தருளினீர்.''

பா. பி. ப. பு. 2; பக். 127.

(அடிகளாரின் கரத்தால் எழுதப்பட்ட இதன் பிரதி இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.)

மேலே எடுத்துக்காட்டி யுள்ள சத்தியப் பெரு விண்ணப் பப்பகுதி, சித்திவளாகத்தில் அடிகளார் உபதேசித்த கருத்துக் களுடன் ஒத்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். ''சைவ சமயத் தில், ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போதிருந்த தென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது,'' என்று, சித்திவளாக உபதேசத்தில் அடிகள் கூறியதனை உறுதிப்படுத்தும் திருவருட்பாப் பாடல் வருமாறு:

''மதம்என்றும் சமயம்என்றும் சாத்திரங்கள் என்றும்
மன்னுகின்ற தேவர்என்றும் மற்றவர்கள் வாழும்
பதம்என்றும் பதம்அடைந்த பத்தர்அனு பவிக்கப்
பட்டஅனு பவங்கள்என்றும் பற்பலவா விரிந்த
விதம்ஒன்றும் தெரியாதே மயங்கியஎன் தனக்கே
வெட்டவெளி யாஅறிவித் திட்டஅருள் இறையே
சதம்ஒன்றும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்
தனிநடஞ்செய் அரசேஎன் சாற்றும்அணிந் தருளே''

இந்த வரிகளில், சைவ முதலாய மதங்க ளெல்லாம் உண்மை யென்று நம்பித் தாம் மயங்கியிருந்தகாலை, இறைவன் அந்த மயக்கத்தைத் தீர்த்து, சர்வமத சமரச சுத்த சன்மார்க்க நெறி யில் தம்மை ஈடுபடுத்தியதாக அடிகள் கூறுகின்றார்.

சைவம், மதமன்று!

அடிகள், 'சைவம்' வேறு; 'சைவ மதம்' என்னும் ஸ்தா பனம் வேறு என்று எண்ணியதாகத் தெரிகின்றது. ''சிவம்'' என்னும் பரமான்மாவின் அருளுக்கு ஜீவான்மாவைப் பாத்திர மாக்கும் 'சைவம்' அடிகளுக்கு உடன்பாடாக இருந்திருக்க வேண்டும். ஆம்; மதம் வேறு, மத தருமம் வேறு. அடிகள், சைவ தருமத்தைத் தம் பிள்ளைப் பருவத்திலேயே விரும்பி, மறையும் காலம்வரை அதனை மதித்துவந்தார், அதனுற்றான், கூத்தாடும் பெருமான் மீது பாடிய 'திருவடிக் கண்ணி'யில்,

Koviloor Digital Library

"சைவ நிலைத்துத் தழைத்தோங்க ஆடுகின்றாய்
தெய்வ மணியே திருவடிதான் நோவாதா !"

என்று, உண்மைச் சைவர்களின் நெஞ்சினிக்கப் பாடுகின்றார். 'சண்முகனார் கும்மி'யிலும்,

"சைவந் தழைக்கத் தழைத்தாண் டி—ஞான
சம்பந்தப் பேர்கொண் டழைத்தாண் டி
பொய்வந்த வுள்ளத்திற் போகாண் டி—அந்தப்
புண்ணியன் பொன்னடி போற்றுங்க டி."

என்று, சைவத்தைக் காப்பதற்கென்றே முருகன் ஞானசம்பந்தப் பெருமானாக அவதரித்த செய்தியைக் கூறிப் பெருமிதமடைகின்றார். மேலே எடுத்துக்காட்டிய பாடல்கள் ஆறாந் திருமுறையிலுள்ளவை என்பது இங்கு நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

சமரசத்தில் விருப்பம்

வேதாந்த...சித்தாந்தங்களையும் அடிகள் வெறுக்கவில்லை. ஆறாந் திருமுறையிலுள்ள அவருடைய பாடல்களே இதற்குச் சான்று.

"தத்துவத் துள்ளே அடங்காண் டி—பர
தத்துவ மன்றித் துடங்காண் டி."

என்று, இறைவனைத் தததுவச் சிமிழுக்குள்ளே அடைத்து வைக்க முயலும் சித்தாந்த—வேதாந்தப் 'புலி'களுக்கும், தத்துவ ஞானத்தையே வெறுக்கும் 'சூன்யங்க'ளுக்கும் அறிவுரை கூறுகின்றார். மதச்சார்பற்ற சுத்த சித்தாந்த—சுத்த வேதாந்தத் தத்துவங்களில் அடிகள் பற்றுடையவர். இதனை,

"வேதாந்த நிலையொடு சித்தாந்த நிலையும்
மேவும் பொதுநடம் நான்காணல் வேண்டும்
நாதாந்தத் திருவீதி நடப்பாயோ தோழி
நடவாமல் என்மொழி கடப்பாயோ தோழி"

"வேதாந்த சித்தாந்த சமரசமும் வருமோ
வெறுவெளியிற் சுத்தசிவ வொளிமயந்தா னுறுமோ
பாதாந்த வரைநீறு மணக்கமன்றில் ஆடும்
பரமர்திரு வுளமெதுவோ பரமமறிந் திலனே."

என்னும் திருவருட்பா வரிகளில் காண்கின்றோம். இன்னும் தெளிவாகச் "சித்தாந்த—வேதாந்தப் பொது சிறத்தல்

Koviloor Digital Library

வேண்டும்" என்று உடன்பாட்டு முறையில் அந்த இரு தத்துவங்களிடையே ஒருமைப்பாட்டினை வலியுறுத்துகின்ருர்.

தாயுமானவர் வழியில்

வேதாந்த கேசரியான சுவாமி விவேகானந்தர், 'வேதாந்தம் தனியொரு மதமன்று' என்று கூறுகின்ருர். சித்தாந்தத்தையும் அப்படியே கருதுகின்ருர் வள்ளலார். அதனால்,

"சுத்தவே தாந்தந் துரியமேல் வெளிஎனும்
அத்தகு சிற்சபை அருட்பெருஞ் ஜோதி
சுத்தசித் தாந்தச் சுகப்பெரு வெளிஎனும்
அத்தனிச் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி,"

என்று பாடுகின்ருர். தாயுமானவரும் வேதாந்த—சித்தாந்தத் தத்துவங்களிடையே சமரசத்தை விரும்பினர் என்பதை, 'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணமே' என்னும் வாசகத்தால் அறிகின்ருேம். சமயங்களில் அழுத்தமான பற்று அல்லது காழ்ப்புக் கொண்டவர்கள் அடிகளாரின் உள்ளத்தைப் புரிந்து கொள்வது கடினம். தெய்வப் பற்று ஒன்றை மட்டும் கொண்டு மற்றப் பற்றுகளை விலக்கி, அடிகளாரின் உபதேசங்களைப் படித்தால், சைவ நெறிக்கு எதிராக அவர் எதுவும் சொல்லவில்லை என்பது விளங்கும்.

இராமலிங்கர் வலியுறுத்திய சமரச சுத்த சன்மார்க்கம், பிற சமயங்கள் அனைத்திலுமுள்ள தருமங்களை யெல்லாம் தன்னுள் கொண்டதாகும். இதனை,

"குண நிர்க்குண' வாச்சிய லட்சியார்த்தமாகிய சமய மதத்தின் அனுபவமல்லாதது சுத்த சன்மார்க்கம். இம் மார்க்கத்திற்கு மேற்குறித்த மார்க்கங்கள் அல்லாதனவே யன்றி இல்லாதனவல்ல."

- பா. பி. ப. பு. 4; பக். 47.

என்ற வள்ளலார் வாக்காலேயே அறியலாம்.

தூக்கம்

அடிகளார், சமரச சுத்த சன்மார்க்க அங்கத்தினர்களுக்கெனவே சித்திவளாகத்தில் உபதேசம் செய்து வந்தார். சன்மார்க்கர்களைச் சாத்தியர்-சாதகர் என இரு வகையாகப் பிரித்தார் என்பதை முன்பே அறிந்தோம். அடிகளார் வழங்கிய உப

Koviloor Digital Library

தேசங்களுள், இரு சாராருக்கும் பொதுவானவை பல. தனித் தனிச் சாராருக்கு மட்டுமே-அவரவர் பக்குவத்திற் கேற்ப—உரியவை பல. பொதுவாக, மக்கள் எல்லோருக்கும் பயன்படக் கூடிய உபதேசங்களு முண்டு. இதனை நினைவிற் கொண்டு, அடிகள் வழங்கிய உபதேசங்களை மேலும் கவனிப்போம்:

சாத்தியர்—சாதகர்களின் உணவு, உறக்கம், சிற்றின்ப நுகர்ச்சி, மகப்பேறு ஆகியவைபற்றியும் உபதேசித்தார்.

"ஒரு மனிதன் தன்னை ஸர்வ ஜாக்கிரதையுடன் காக்க வேண்டும். இல்லையாயின் அதி சீக்கிரத்தில் மரணமடைவான்; சந்தேகமில்லை.

"தூக்கத்தை ஒழித்தால் ஆயுசு விருத்தியாகும். ஒருவன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகை தூங்கப் பழக்கஞ் செய்வானுனல், அவன் ஆயிரம் வருடஞ் சீவித்திருப்பான்."

- பா. பி. ப. பு. 4; பக். 67.

"பகலில் போஜனஞ் செய்தவுடன் சற்றே படுத்தெழுந்தல்லது வேறு காரியங்களிற் பிரவேசிக்கப்படாது. ஆயினும் நித்திரை வரும்படி படுக்கப்படாது. பகலில் எந்த வகையிலும் நித்திரையாகாது."

—பா. பி. ப. பு. 4: பக். 8, 9.

"இரவில் தீபமில்லாத இடத்தில் இருக்கக்கூடாது. ஏனெனில், அஃது பிராண நஷ்டம் பண்ணும். ஆதலால், நமது கிருகத்தில் தீபம் வைத்து இருளைப்போக்கி ஆனந்தமயமாய் நித்திரையில்லா திருந்தால், ஆயுள் விருத்தியாம். இஃது சாத்தியனுக்கு.

"சாதகன் ஒருவாறு நித்திரை செய்தல் வேண்டும். கிருகத்தில் இருளில்லாது எங்கும் பிரகாசமாய் தீபம் வைத்தால், மேல்படி இருள் அந்தத் தீபத்தில் அடங்கும். அதுபோல் ஜீவதீபமாகிய நாம் வசிக்கிற கிருகத்தில் பிரகாசமில்லாவிட்டால், மேற்படி இருள் ஜீவப்பிரகாசமாகிய நம்மிடத்தில் சேர்ந்து நஷ்டத்தைப் பண்ணும். அதுபோல, ஆன்ம வாசமாகிய இந்தத் தேகமாகிய கிருகத்தில் அருட்பிரகாசமில்லாது மருளாகிய அஞ்ஞான சம்பந்தமுடைய இருள் சேர்ந்தால், பிராண நஷ்டம் சீக்கிரமாம்."

—பா. பி. ப. பு. 4; பக். 88.

Koviloor Digital Library

பிள்ளைப்பேறு

இல்வாழ்க்கையி லிடுபட்டு மனைவியுடன் கூடி வாழச் சாதகர்களை அடிகள் அனுமதித்தார். பக்குவர்க ளாகிய சாத்தியர்கள் சதா சிவ சிந்தனையாக இருப்பார்க ளாதலால், அவர்கள் இல்வாழ்க்கையில் இருப்பினும் சிற்றின்பத்தில் நாட்ட மற்றவர்களாக இருப்பார்கள். சாதகர்கள, எப்போதேனும் ஏகதேசமாக சிற்றின்பத்தை விரும்பக்கூடும். ஆதலால், அவர்களுக்காக அடிகள் செய்த உபதேசம் வருமாறு:

"சுரோணிதப் பையிடத்தில் மூன்று மணி சேர்ந்த கொத்து ஒன்று வலது புறத்திலும், நான்கு மணி சேர்ந்த கொத்து ஒன்று இடது புறத்திலும் இருக்கின்றன. சுரோணித சுக்கிலம் கலந்து கர்ப்பந் தரிக்கிற காலத்தில், மூன்று சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் ஆண் குழந்தையும், நான்கு சேர்ந்த கொத்தில் சம்பந்தப்பட்டால் பெண் குழந்தையும் பிறக்கும். புணர்ச்சிக் காலத்தில் வலது புறம் சாய்வாகப் புணர்ந்தால் ஆண் குழந்தையும் இடது புறம் சாய்வாகப் புணர்ந்தால் பெண் குழந்தையும் பிறக்கும்.

- பா. பி. ப. பு. 4; பக். 96.

"இடைவிடாது மைதுனம் செய்தால் இந்திரியத்தின் வருவாய் குறைந்து, அருமையாகக் கிடைக்கின்ற தேகம் அதிசீக்கிரத்தில் போய்விடும். மைதுனம் எந்தக் காலத்தும் இல்லாதிருத்தலினாலும் கேடுண்டு. அதாவது, மைதுனம் எந்தக் காலத்திலும் இல்லாதிருத்தலினால் இந்திரியத்தின் தன்மை கெட்டு இதனால் அவ்விந்திரியத்தின் வருவாயடைபட்டு, மிகுந்திருந்த அவ்விந்திரியமும் உஷ்ணத்தினால் வற்றிவிடும். பின்பு தேகம் உடனே போய்விடும்.

[மைதுனம்-புணர்ச்சி] - பா. பி. ப. பு. 4: பக். 18.

"சீவன் என்கிற தீபத்துக்குச் சுக்கிலம் திரி, இரத்தம் எண்ணெய். ஆகையால் சுக்கில மாகிய திரியை விசேஷம் தூண்டிச் செலவு செய்துவிட்டால் ஆயுசு நஷ்டமாய் விடும். ஆனால், சிட்டத்தை மாத்திரம் எடுத்துவிட வேண்டியது. அதாவது 16 தினத்திற்கு ஒருதரம் தேக சம்பந்தஞ் செய்து ஆபாசப்பட்ட சுக்கிலத்தை வெளிப்படுத்திவிட வேண்டும். ஆசானுடைய அல்லது ஆண்டவருடைய திருவடியில் சதா ஞாபக முடையவனுக்குக் கோசத் தடிப்புண்

Koviloor Digital Library

டாகாது. ஆகையால், தேக சம்பந்தம் ஏகதேசத்தில் செய்யலா மென்றது மந்த தரத்தையுடையவனுக்கே யன்றி, அதி தீவிர பக்குவிக்கல்ல.''

[கோசம்-ஆண்குறி]

''காலங்கடந்து குளிர்ந்த ஜலத்தில் குளித்து ஈரஉடையுடன் இருப்பது தேகக் கெடுதி. குளிக்க வேண்டுமாகில் வெந்நீரில் குளிக்க வேண்டும்.

–பா. பி. ப. பு. 4; பக். 112.

உணவு வகைபற்றி அடிகளார் கூறும் அறிவுரை வருமாறு:

''சாதம் வடித்துச் சாப்பிடுதல் நலமா, பொங்கிச் சாப்பிடுதல் நலமா எனில்: வடித்துச் சாப்பிடுவது—அதிலுள்ள எண்ணெய் போய் விடுவதால்—நலம். பொங்குவதில் எண்ணெய் போகாது; தாமச குணம் உண்டாகும்.

''இது போலவே உப்பு, புளி, மிளகாய் முதலிய வஸ்துக்களின் எண்ணெய் போகச் சுடவைத்துச் சாப்பிடுதல் வேண்டும்.

''பச்சரிசி என்பது இப்போது கொண்டு வருவது அல்ல......''*

-பா. பி. ப. பு. 4: பக். 109.

''ஒருமுறை உணவு கொண்டால், ஏழரை நாழிகைக்குப் பிறகுதான் அடுத்த உணவுகொள்ள வேண்டும்.

''சுத்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து ஆயுள் விருத்தி செய்துகொள்வது சுத்த சன்மார்க்க ஏற்பாடு.

- பா. பி. ப. பு. 4; பக். 101.

''தேக நஷ்டஞ் செய்வது உப்பு. உப்பைக் கட்டியாகாரத்திற் சேர்ப்பது சித்த மார்க்கம்.''

-பா. பி. ப. பு. 4; பக். 73.

அடிகளார், சிறந்த மருத்துவராகவும் விளங்கினார். நோய் வாராமற் காக்கவும், வந்த நோயைத் தீர்க்கவும் அவர் சில மூலிகைகளைக் கூறி, அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் உபதேசித்துள்ளார். பழங்காலச் சித்தர்கள், சிறந்த மருத்து

---

*பச்சரிசிச் சோறு பற்றியுள்ள உபதேச மொழி பூர்த்தியாகாமல், அரை குறையாக விடப்பட்டிருக்கிறது.

Koviloor Digital Library

வர்களாகவும் விளங்கினர். அதனுற்ருன், தமிழர் கண்ட மருத்துவமுறை 'சித்த மருத்துவம்' எனப் பெயர் பெற்றது. அடிகளார், சித்த மருத்துவத்திற்குப் புத்துயிர் கொடுக்கவும் பாடுபட்டார். சாகாம லிருக்கச் சிவபக்தியோடு சித்த மருத்துவத்தையும் பயன்படுத்துமாறு சீடர்களுக்கு உபதேசித்தார். இன்றைய சித்த மருத்துவர்கள், பிணியாளர்களுக்கு என்னென்னவோ பத்தியங்கள் சொல்லுகின்றனர். அவற்றுடன், பக்தியையும் ஒழுக்கத்தையும் பத்தியங்களாகச் சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

மரணமிலாப் பெருவாழ்வு

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி. இது நாம் அனுபவத்தில் கண்டுவரும் உண்மை. விஞ்ஞானமும் இதனை அங்கீகரிக்கின்றது. ஆனால், மனிதன் இறவாமல் என்றென்றும் வாழ்ந்திருத்தல் சாத்திய மென்கிறார், மெஞ்ஞானியாகிய வள்ளலார். "மரணம் நமது எச்சரிக்கையின்மையால் விளைவதாகும்" என்று அவர் கூறுகின்றார்.

"சாகாத வித்தைக்கு இலக்கண இலக்கியம் தானாய் இருந்த பரமே," என்று இறைவனைப் பாடுகின்றார். ஆம்; சிவன் விடமுண்டும் சாகாதவனாதலால், அவனருளிலே இரண்டறக் கலந்தவர்களுக்கும் மரணமிலாப் பெருவாழ்வு சித்திக்கும் என்று நம்புகின்றார் வள்ளலார். மணிவாசகர், "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்"–"மாயப் பிறப்பறுக்கும் மன்னன்"—"பிறந்த பிறப்பறுக்கும் பெருமான்"—"அல்லற் பிறவி அறுப்பவன்" என்றெல்லாம் இறைவனைப் பாடினார். வள்ளலாரோ, இறப்பறுக்கும் பெருமானாகவும் இறைவனை வருணிக்கின்றார்.

பாரதிச் சித்தர்

பழங்காலச் சித்தர்கள் இறப்பை யொழித்து எங்கோ மலைகளிலும் வனங்களிலும் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சமயவாதிகள் நம்புகின்றனர். இதனை மறுப்பவர்போல,

"முன்னோர்கள் உரைத்தபல சித்த ரெல்லாம்
முடிந்திட்டார், மடிந்திட்டார், மண்ணாய் விட்டார்."

என்று பாடுகின்றார் பாரதியார். அத்துடன் அமையாமல்,

"பொந்திலே யுள்ளாராம், வனத்தில் எங்கோ
புதர்களிலே யிருப்பாராம், பொதியை மீதே
சந்திியிலே சவுத்தியிலே நிழலைப் போலே
சற்றேயங் கங்கே தென் படுகின் றாராம்."

என்று கேலி பேசி, பின் தம் கருத்துக்குச் சான்று காட்டுவாராகி,

"நொந்தபுண்ணைக் குத்துவதில் பயனென் ல்றிலை
நோவாலே மடிந்திட்டான் புத்தன் கண்டீர்!

Koviloor Digital Library

அந்தணனும் சங்கரா சார்யன் மாண்டான்!
அதற்கடுத்த இராமா நுஜனும் போனான்!
சிலுவையிலே அடியுண்டு யேசு செத்தான்!
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்!

என்று பாடுகின்றார் பாரதியார். ஆனால், மனிதன் சாவாமல் இருக்க முடியுமென்று வள்ளலார் கூறுவதனைத் தத்துவ ரீதியில் பாரதியாரும் ஏற்றுக் கொள்கின்றார். ஏற்பவர், முயன்றால், சாவாமலிருக்கத் தம்மாலும் முடியுமென்று சத்தியம் செய்து கூறுகின்றார்.

"பலர்புகழும் இராமனுமே யாற்றில் வீழ்ந்தான்..."
பார்மீது நான்சாகா திருப்பேன், காண்பீர்!"
"மலிவுகண்டீர் இவ்வுண்மை பொய்கூ றேன்யான்
மடிந்தாலும் பொய்கூறேன் மானு டர்க்கே
நலிவுமில்லை, சாவுமில்லை! கேளீர், கேளீர்!
நாணத்தைக் கவலையினைச் சினத்தைப் பொய்யை,
அச்சத்தை வேட்கைதனை அழித்துவிட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின்சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை"

என்று பாடியவர், ஓர் உண்மையை மறந்து பின்னர் நினைத்தவர் போல,

"சாகாம லிருப்பதுநம் சதுரா லன்று;
சத்தியரு ளாலன்றோ பிறந்தோம் பார்மேல்
பாகான தமிழினிலே பொருளைச் சொல்வேன்,
பாரீர்நீர் கேளீரோ, படைத்தோன் காப்பான்"

என்று பாடி, "இறையருள் பெற்றால்தான் மரணத்தை வெல்ல முடியும்" என்கிறார்.

வேதங்களின் வித்து

இந்த உண்மையையே "சாகாத வித்தைக்கு இலக்கண இலக்கியம் தானாய் இருந்த பரமே," என்னும் வரியில் நமக்கு உணர்த்துகின்றார் வள்ளலார். இன்னும் "சாகாத கல்வியே கல்வி" என்றும், "சாவாத வித்தையில் விளைந்த சுகமே இறையின்பம்" என்றும் கூறுகின்றார். ஆம்; மனிதன் சாவாமல் வாழ்ந்திருக்க முடியமென்பதிலே அடிகளுக்கு அழுத்தமான நம்பிக்கை யிருந்தது.

Koviloor Digital Library

மரணமிலாப் பெருவாழ்வினைத் தரும் திறன், இந்து மதத்திற்கு மட்டுமே உரியதென்கிறார். இதனை,

"வேதங்கள் முக்கியம் சாவாத கல்வியைச் சொல்லியிருக்கின்றன."

-பா. பி. ப. பு. 4. பக். 61.

"இந்து வேதாகமங்களில் மாந்திரந்தான் ஏமசித்தி ஞானசித்தி முதலிய சித்திகளைச் சொல்லியிருக்கிறது. மற்ற எந்தச் சமயங்களிலும் மேற்படி சித்திகளையும் சாவாத கல்வியையும் சொல்லவில்லை. ஒருவேளை அப்படியிருக்கிறதாகக் காணப்படுமாகில், அது இந்து வேதாகமங்களில் சொல்லியிருப்பதன் ஏகதேசங்களென்பது உண்மை."

— பா. பி. ப. பு. 4; பக். 68.

என்னும் உபதேச மொழி உறுதிப்படுத்துகின்றது. அடிகள், சமய—மதங்களைக் கடந்த சன்மார்க்கி யாயினும், இந்து மதத்திலுள்ள சிறப்புக்களை நடுவுநிலையில் நின்று எடுத்துரைக்கத் தயங்கவில்லை,

தமிழ் வேதம் பாரீர் !

தமிழ் வேதமாகிய திருக்குறளிலும் சாவாத கல்வியைப் பற்றிச் சொல்லியிருப்பதாகக் கூறுகின்றார்.

"தேவர் குறளில் முதல் அதிகாரத்தில் சாகாத கல்வியைக் குறித்துச் சொல்லியிருக்கிறது. அதைத் தக்க ஆசிரியர் மூலமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும்"

-பா. பி. ப. பு. 4, பக். 64

இது வள்ளலார் உபதேச மொழி.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்"
"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்"

என்ற குறட்பாக்களில், ஒவ்வொரு குறளிலும் இறுதியில் வந்துள்ள "நீடு வாழ்வார்" என்பதற்கு "இறவாமல் நித்திய தேகத்துடன் என்றென்றும் வாழ்வார்" என்று வள்ளலார் பொருள் கொள்கின்றார். இது வேறெந்த உரையாசிரியரும் கூறாதது ஆகும்.

Koviloor Digital Library

மனிதன் சாவாதிருக்க முடியும் என்று கூறும் அடிகளார், அதனை அடைவதற்கான ஒரே சாதனம் சுத்த சன்மார்க்கந் தான் என்பதனையும் வலியுறுத்த,

"சிறந்திடுசன் மார்க்கம் ஒன்றே பிணிமூப்பு மரணம்
சேராமல் தவிர்ந்திடுங்காண் தெரிந்து வம்மின் இங்கே"

என்று பாடி, சமரச சுத்த சன்மார்க்க சங்கத்திற்கு எல்லோரையும் அழைக்கின்றார்.

அடிகளார் கருத்துப்படி, மனிதன் சாவாமலிருக்க அவன் முதலில் செய்யவேண்டியது, சமய—மதங்களிலிருந்து விடுபட்டு, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வைப் பெறுவதாகும். மனித குலத்தை மரணத்திலிருந்து மீட்கவே இறைவன் தன்னை அனுப்பினான் என்கிறார் வள்ளலார்.

"பன்னெறிச் சமயங்கள் மதங்கள்என் றிடும்ஓர்
பவநெறி இதுவரை பரவிய திதனால்
செந்நெறி அறிந்திலர் இறந்திறந் துலகோர்
செறிஇருள் அடைந்தனர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி எனும்வான்
புத்தமு தருள்கின்ற சுத்தசன் மார்க்கத்
தன்னெறி செலுத்துக வென்றஎன் அரசே!
தனிநட ராஜன்என் சற்குரு மணியே!"

சாவாமலிருக்க வழி

சமயம் மதம் ஆகிய தளைகளிலிருந்து விடுபட்ட பின்னரே மனிதன் மரணத்தை வெல்லமுடியும் என்பதனை,

"சுத்த சன்மார்க்கத்திற்கு முக்கியத் தடைகளாகிய சமயம் மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமக்குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை, புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாவர். மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம்—இவை முதலியவைகளைத் தவிர்த்துக் கொள்வார்கள்!"

"அப்படி இல்லாது இவ்விடம் காத்திருப்பவர்கள் மரணத்தைத் தவிர்த்துக்கொள்ள மாட்டார்கள்."

—பா. பி. ப. பு. 4: பக். 96.

Koviloor Digital Library

மனிதன் சாவாமல் வாழ முடியும் என்று தாம் நம்பிய தோடு, மக்களேயும் நம்பவைக்க முயன்ருர் அடிகள். இறந் தார்க்கு ஏங்கியழும் மக்களேப் பார்த்து,

" இறந்தவரை எடுத்திடும்போது அரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெரும்வரநீர் ஏன்அடைய மாட்டீர் !"

என்று அன்புக் குரலில் அறிவுரை கூறுகின்ருர்.

" உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினுல் உமக்கே
உறவன்அன்றிப் பகைவன்என உன்னுதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக்காண் கின்றீர்
கரணம்எலாம் கலங்கவரும் மரணமுஞ்சம் மதமோ?
சற்றும்இதைச் சம்மதியா தென்மனந்தான் உமது
தன்மனந்தான் கன்மனமோ வன்மனமோ அறியேன்
இற்றிதனேத் தடுத்திடலாம் என்னெடும்சேர்ந் திடுமின்
என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கந் தானே!"

" மற்றறிவோம் எனச்சிறிது தாழ்ந்திருப்பீர் ஆனல்
மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும்அதை நும்மாலே தடுக்கமுடி யாதே
சமரசசன் மார்க்கசங்கத் தவர்கள்அல்லால் அதனே
எற்றிநின்று தடுக்கவல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லேகண்டீர் சத்தியமீ தென்மொழிகொண் டுலகீர்
பற்றியபற் றனேத்தினேயும் பற்றறவிட் டருளம்
பலப்பற்றே பற்றுமினே என்றும்இற வீரே!"

என்னும் பாடல்களில், தம்முடன் சேர்ந்தால் மரணத்தை யொழித்து வாழ முடியுமென்று உறுதி கூறி, அகிலத்தாரனே வரையும் அழைக்கின்ருர். சாவாமல் வாழும் வகையறியாது மக்கள் நித்த நித்தம் செத்து வருகின்றனரே யென்று வருந் தியவராய் இறைவனிடம் முறையிடுகின்ருர்.

" ஓர்ந்தஉள் அகத்தே நிறைந்தொளிர் கின்ற
ஒருவனே உலகியல் அதிலே
மாந்தர்கள் இறப்பைக் குறித்திடும் பறையின்
வல்லொலி கேட்டபோ தெல்லாம்
காந்தியென் உள்ளங் கலங்கிய கலக்கம்
கடவுள்நீ யேஅறிந் திடுவாய்

Koviloor Digital Library

ஏந்தும்இவ் வுலகில் இறப்பெனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவது இயல்பே !''

மனிதன் சாவாமல் வாழவேண்டுமாயின் அத்தகைய வரத்தினைக் கோரி இறைபருளைப் பிரார்த்திக்க வேண்டும். இறைவனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து தொழுதால் மட்டுமே இறவா வரம பெறலாம். அதனல், தமக்காகவும் மனிதர் அனைவருக்குமாகவும் ஆண்டவனைத் தொழுதார் வள்ளலார்.

"இத்தேகத்தையே நித்திய தேகமாக்கி எக்காலத்தும் அழியாத பேரின்ப சித்திப் பெருவாழ்வில் என்னை வாழ்வித்தல் வேண்டும்.

"இத்தேகத்தைப் பெற்ற எல்லாச் சீவர்களுக்கும் எனக்கு அறிவித்த வண்ணமே அறிவித்து அவரவர்களையும் உரிமையுடையவர்க ளாக்கிவிட வேண்டும்.''

—பா. பி. ப. பு. 2; பக். 136-37.

சாவாத வாழ்வைப் பெற மூன்று மகா மந்திரங்களைப் போதித்தார் வள்ளலார். அவை—பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பனவாம்.

இந்த மூன்று மகா மந்திரங்களுக்கான விளக்கங்களை அடிகளாரின் பாடல்களிலும் உபதேசங்களிலும் கண்டுகொள்ளலாம்.

பசித்திரு!

அடிகள் 'பசித்திரு' என்றதன் பொருள், உண்ணுவிரதமன்று; "சுகித்திருக்க உண்ணுமல், உயிர்தரிக்கப் பாதி வயிறு உண்'' என்பதாம். காந்தியடிகள், சதா பசித்திருக்குமளவில் சிறிதளவே உணவுகொண்டார் என்பதனை இங்த நினைவில் கொள்ளவேண்டும். வள்ளலார் பிள்ளைப்பருவ முதற்கொண்டே தாம் பசித்திருக்கும் விரதத்தைக் கடைப்பிடித்ததாகவும், சில சமயங்களில் பிறருடைய வற்புறுத்தலால் முழு உணவு கொண்டதாகவும் கூறுகின்ருர். இதனை,

"உற்றதா ரணியில் எனக்குல குணர்ச்சி
உற்றநாள் முதல்ஒரு சிலநாள்
பெற்றதாய் வாட்டம் பார்ப்பதற் கஞ்சிப்
பேருண வுண்டனன் சிலநாள்
உற்றவர் நேயர் அன்புளார் வாட்டம்
உறுவதற் கஞ்சினேன் உண்டேன்

Koviloor Digital Library

மற்றிவை அல்லால் சுகஉணுக் கொள்ள
மனநடுங் கியதுநீ அறிவாய்."

என்ற பாடலால் அறிகிரும். திருமுருகாற்றுப் படையில் முனிவர்களைப்பற்றிக் கூறுமிடத்து, "நன்பகற் பலவுடன் கழிந்த உண்டியர்" என்கின்ருர் நக்கீரனர். அஃதாவது, அவர் கள் பல பொழுது பசித்திருந்து ஒருபொழுதே உண்கிருர் களாம். வேளைக்கு வேளை உணவு கொள்வது இல்லறத்தாருக் குப் பொருந்தலாம். ஆனல், மரணமில்லாப் பெருவாழ்வை விரும்பும் சன்மார்க்கிகளுக்குப் பொருந்தாது.

தாயாகி உணவளிப்பான்

சதா சிவ நினைப்புடன் இருந்து எங்கும் எதிலும் கடவுளைக் காணும் திறனுடையார் பசித்திருத்தல் சாத்தியமே. இத் துறையில் தம் அனுபவத்தையும் வள்ளலார் கூறுகின்ருர்.

"உலகுபுகழ் திருஅமுதம் திருச்சிற்றம் பலத்தே
உடையவர்இன் றுதவினர்நான் உண்டுகுறை தீர்ந்தேன்
இலகுசிவ போகவடி வாகிமகிழ் கின்றேன்
இளைப்பறியேன் தவிப்பறியேன் இடர்சிசய்பசி யறியேன்."

"இருள்இரவில் ஒருமூலைத் திண்ணையில்நான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே
பொருள்உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்
போக்கிஅருள் புரிந்தஎன்றன் புண்ணியநற் றுணையே,"

"நான்பசித்த போதெல்லாம் தான்பசித்த தாகி
நல்லுணவு கொடுத்தென்னைச் செல்வம்உற வளர்த்தே
ஊன்பசித்த இளைப்பொன்றும் தோற்ருத வகையே
ஒள்ளியதெள் அமுதெனக்கிங் குவந்தளித்த ஒளியே"

என்று பாடுகின்ருர். பக்தர்கள் பசித்திருந்தால் உணவளிக் கும் தாயாக ஆண்டவனே வருவான் என்பது வள்ளலார் பெற்ற அனுபவம். அடிகளார் பசித்திருந்தது சோறு கிடைக் காம லன்று; சோறு விரும்பாமல். இது, சன்மார்க்கிகளுள்ளே சாத்தியர் நிலை. மனப்பக்குவம் பெருத சாதகர்கள், "பசி கண்ட வுடன் தடை செய்யாமல் ஆகாரம் கொடுத்தல் வேண்டும்" என்று கூறு கின்ருர். பக்தி நெறி பயிலாதவர்களும் முக்கால் வயிறளவே உண்டு, கால் வயிறு பசித்திருப்பது ஆரோக்கியத்திற்கு அவசியமாகும்.

Koviloor Digital Library

தனித்திரு !

'தனித்திரு' என்பது, அடிகள் உபதேசித்த இரண்டாவது மகா மந்திரமாகும். தனிமை, மனத்துக்கு இன்பந் தருவதாகும். "சிவ சிந்தனையுடன் தனித்திருந்தால், பேரின்பந் துய்க்கலாம்" என்கிறார் வள்ளற் பெருமான். ஆரவாரச் சூழ் நிலையில் மனத்தில் இறையுணர்வு பிறக்காது; பிறந்தாலும் நிலைக்காது. அதுபற்றியே சாவாத கல்வி பயிலத் "தனித் திருத்"தல் அவசியமென்றார் அடிகளார். ஆனால், மலைக்கோ, வனத்திற்கோ ஓடித் தனித்திருத்தலை அடிகள் ஆதரிக்கவில்லை. மக்கள் மத்தியிலே வாழ்ந்து அவர்களுக்குத் தொண்டாற்றி, அடிக்கடி உள்ளொளி பெருக்குவான் வேண்டித் தனித்திருத் தலையே அவர் போதித்தார்.

அரசியற் பெரும் புரட்சிக்குத் தளபதியாக இருந்த காலத் தும் ஆரவாரமற்ற குக்கிராமத்தில் ஆசிரமம் அமைத்து, அதையே தம் இருப்பிடமாகக் கொண்டார் காந்தியடிகள்.

விழித்திரு !

'விழித்திரு' என்பது வள்ளலார் உபதேசித்த மூன்றாவது மந்திரம். சாவாநிலை பெற்ற சித்தர்கள், தூக்க மொழித்தவர் களாய்ச் சதா பேரின்பத்தில் ஆழ்ந்திருப்பார்கள் என்பர் பெரி யோர். அவர்களும் அறிதுயில் கொள்வதுண்டு. அதனாற்றான், "தூங்காமல் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்" என்றார் தாயு மானவர். இராமலிங்கர்,

> "தூக்கத்தை ஒழித்தால ஆயுசு விர்த்தியாகும். ஒரு வன் ஒரு நாளைக்கு இரண்டரை நாழிகைக்குத் தூங்கப் பழகினால் அவன் ஆயிரமாண்டுகள் ஜீவித்திருப்பான். எப் போதும் ஆசானுடைய திருவடியை ஞாபகஞ் செய்து கொண்டிருப்பதே சாகாத கல்விக்கு ஏதுவாகும்."
>
> - பா. பி. ப. பு. 4; பக். 67.

என்கிறார். காந்தியடிகள் தினந்தோறும் மூன்று மணி நேரத் திற்கு அதிகமாகத் தூங்கியதில்லை என்பர் உடனிருந்து பழ கிய பெரியோர். கணவனையே தெய்வமாக நினைந்து அவன் திருவடியைச் சதா சிந்தை செய்யும் பத்தினிப் பெண்டிர் நிலை யும் இதுவே என்பதைப் "பின் தூங்கி முன் எழூஉம் பேதையே போதியோ?" என்று வாசுகியின் கற்புக்கு வள்ளுவர் புகழுரை தந்ததால் அறிகின்றோம்.

Koviloor Digital Library

இறைவன் அருள் பெற்றுச் சுத்த சன்மார்க்கியாவதற்கு முன்பு தாம் இருந்த நிலையைக் கூறுமிடத்து, "தூங்குகின்றதே சுகமென அறிந்தேன்" என்கின்றார் வள்ளலார். பின், தெய்வ அருளிற் கலக்கும் பேராசை பிறந்த பிறகு, தோழிக்குத் தலைவி கூறும் பாவனையில்,

"தூங்குகநீ என்கின்றாய் தூங்குவனோ எனது
துரைவரும்ஓர் தருணம்இதில் தூக்கமுந்தான் வருமோ
ஈங்கினிநான் தனித்திருக்க வேண்டுவதா தலினால்
என்னுடைய தூக்கம்எலாம் நின்னுடைய தாக்கி
ஏங்கலறப் புறத்தேபோய்த் தூங்குகநீ தோழி
என்னிருகண் மணிஅனையார் எனைஅணைந்த உடனே
ஓங்குறவே நான்அவரைக் கலந்தவரும் நானும்
ஒன்றான பின்னர்உனை எழுப்புகின்றேன் உவந்தே"

என்று பாடுகின்றார். சதா விழித்திருக்கும் திறன் ஆண்டவன் அருளால்தான் சித்திக்கும் என்பதைத் "தூங்காதே விழித்திருக்கும் சூதறிவித் தெனையாண்ட துரையே" என்ற வரியில் உணர்த்துகின்றார். இறையருளால் பசித்திருந்தும் விழித்திருந்தும்பொன்னுடல் பெற்றகாலை, "தூக்கம் தொலைந்ததென் றுந்தீ பற" என்று பாடுகின்றார்.

இராமலிங்கர் உபதேசித்த பசித்திரு—தனித்திரு—விழித்திரு என்ற மூன்று மகா மந்திரங்களைத் தாயுமானவரும் கடைப்பிடித்தார். இதனை அவரே பாடியுள்ள,

" கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற்கு எண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாததோ?..."

என்ற அடிகளால் அறிகின்றோம். ஆம்; வேளை வந்தபோது "கனல் வாதை வந்தெய்தின் புசிக்க வேண்டும்," என்கிறார். அப்போதும் சுவையுள்ள பண்டங்களாக அல்லாமல் கனி—காய் என்ற பேதமின்றி, இரண்டில் எது கிடைப்பினும் உண்ண வேண்டும். இரண்டுங் கிடைக்காதபோது, உதிர் சருகுஞ் சாப்பிடலாம் என்கிறார்.

Koviloor Digital Library

அடிகளார் உயிரெலாஞ் சாவாதிருக்க இறைவனை வேண்டினாற் போல, தமக்காகவும் சாவாத பெருவாழ்வினை வேண்டுவாராகி,

"கற்றதென் றுஞ் சாகாத கல்வியென்று கண்டுகொண்டுன்
அற்புதச்சிற் றம்பலத்தில் அன்புவைத்தேன் ஐயாவே!"

"வாடலறச் சாகா வரங்கொடுக்கு மென்றுமன்றில்
ஆடலடிப் பொன்மலர்க்கே அன்புவைத்தேன் ஐயாவே!"

என்றெல்லாம் பல்லாண்டு காலம் அழுதழுது, பலப்பல பாக்களைப் பாடிப் பரமனை வேண்டினார். இறுதியில் தாம் இறவா வரம் பெற்றதாக அவரே பாடுகின்றார்.

"...கற்பகோ டியினும்
வயத்தொடு சாகா வரமும்என் தனக்கே
வழங்கிடப் பெற்றனன் மரண
பயத்தைவிட் டொழித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே"

"கட்டமும் கழன்றேன் கவலைவிட் டொழிந்தேன்
கலக்கமும் தீர்ந்தனன் பிறவிச்
சட்டமும் கிழித்தேன் தூக்கமும் துறந்தேன்
சாவையும் நோவையும் தவிர்ந்தேன்
சிட்டமும் அடைந்தேன் சிற்சபை உடையான்
செல்வமெய்ப் பிள்ளைஎன் றொருபேர்ப்
பட்டமும் தரித்தேன் எனக்கிது போதும்
பண்ணிய தவம்பலித் ததுவே!"

"கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக் கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன் உலகில் பிறநிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றேஎன் பற்றெனப் பற்றினனே."

உந்தீ பற !

இறைவனருளைப் பெற்றுத் தாம் அவனாக மாறிய பின்னர் வள்ளலாருடைய கவிதைகளிலே, அருள் ஒளிவீசக் காண்கின்றோம். அவனைத் தான் பாடிய பாடல்களுக்கும் தானே அவனாகிப் பாடிய பாடல்களுக்கும் வேற்றுமை யுண்டென்பதைச் சொல்லாமல் சொல்லுவார் போலக் கீழ்வரும் பாடல்களைப் பாடியுள்ளார்.

Koviloor Digital Library

" திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று
பரையொளி யோங்கிற்றென் றுந்தீ பற!
பலித்தது பூசையென் றுந்தீ பற!

" தந்தையைக் கண்டேனான் சாகாவரம் பெற்றேன்
சிந்தை களித்தேனென் றுந்தீ பற!
சித்தெலாம் வல்லேனென் றுந்தீ பற!"

அடக்கமே உருவான அடிகளார், தாம் சாவாவரம் பெற்ற பின்னர், முன்பு தம் சொற் கேளாதவர்களாய்த் தம்மை இழித்தும் பழித்தும் பேசியவர்க ளெல்லாம் தம்மை வாழ்த்தியதாகப் பாடுகின்றார்.

" வஞ்சகர் அஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
'தஞ்சம் எமக்கருள் சாமிநீ' என்றனர்
சன்மார்க்க சங்கத் தவர்களே வென்றனர்,"

" புறங்கூறி னாரெலாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
'மறங்கூறி னோம்என்செய் வோமெ'ன்று கூயினர்
வாழிய வென்றுசொல் வாயின ராயினர்"

வடலூர் முனிவர், அறிவால் கடவுளை அறிந்து கடவுள் மயம் ஆனவர்—ஜீவன் முக்தர். முதலில், தாம் வேறு அதுவேறு என்று துவைத நிலையிலிருந்தவர். பின் அறிவால் கடவுளை அறிந்து ஜீவகாருண்ய ஒழுக்கத்தால் அத்வைதமாகிக் கடவுள் மயமானார். இது அருட்பா தரும் செய்தி. தாம் வேறு அது வேறாக இருந்த துவைத நிலையில்,

" தருவகைஇத் தருணம்நல்ல தருணம்இதில் எனக்கே
தனித்தஅருட் பெருஞ்சோதி தந்தருள்க இதுதான்
ஒருவகைஈ(து) இலையெனில்வே றொருவகைஎன் னுடைய
உடல்உயிரை ஒழித்திடுக உவப்பினொடே இந்த
இருவகையும் சம்மதமே திருவடிசாட் சியதாய்
இயம்பினன்என் இதயம்உன்றன் இதயம்அறிந் ததுவே
அருவகையோ உருவகையும் ஆகிஎன்னுள் அமர்ந்தாய்
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே!"

Koviloor Digital Library

"திருக்கதவம் திறவாயோ திரைகளெலாம் தவிர்த்தே
திருஅருளாம் பெருஞ்சோதித் திருவுருக்காட் டாயோ
உருக்கிஅமு தூற்றெடுத்தென் உடம்புயிரோ டுளமும்
ஒளிமயமே ஆக்குறமெய் உணர்ச்சிஅரு ளாயோ
கருக்கருதாத் தனிவடிவோய் நின்னைஎன்னுட் கலந்தே
கங்குல்பகல் இன்றிஎன்றுங் களித்திடச்செய் யாயோ
செருக்கருதா தவர்க்கருளுஞ் சித்திபுரத் தரசே
சித்தசிகா மணியேஎன் திருநடநா யகனே,"

என்று இறைவனிடம் முறையிட்டார்.

துவைத மழிந்து அத்வைதம்

இப்படியெல்லாம் பாடிப் பாவி, தம் தவப் பயனால் உள்ளொளி பெற்றார், வள்ளற்பெருமான். தாம் அதுவான அத்வைத நிலையை, ஆண்டவன் வந்து தமக்கு அருள் புரிந்த தருணமாக, அவனருளால் தாம் மரணமிலாப் பெருவாழ்வுபெற்ற நேரமாக வருணிக்கின்றார்.

தாம் சாவா வரம் பெற்றதைப் பலப்பல பாடல்களால் அறிவிக்கின்றார் அடிகளார். இகத்தே பரத்தைப் பெற்று வாழும் பேற்றினைத் தமக்களித்த அருட்பெருஞ்ஜோதித் தெய்வத்தை மனங்கனிந்து, நன்றியுணர்வு தோன்ற, தம்மை மறந்து போற்றித் துதிக்கின்றார்.

" என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனார்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றார்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேர்உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெரும் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்ததிது சத்தியம்சத் தியமே
மின்சாரும் இடைமடவாய் என்மொழிநின் தனக்கே
வெளியாகும் இரண்டரைநா ழிகைகடந்த போதே"

அடிகள் தமது திருக் கரத்தால் எழுதிய இப்பாடலின் இறுதியில், "இங்ஙனம் எல்லாம் வல்லவர் ஒருக என்றபடி உரைத்துளேன்" என்று குறித்துள்ளார்.

இறவா வரமளித் தென்னைமேல் ஏற்றிய
அறவாழி ஆம்தனி அருட்பெருஞ் ஜோதி !

Koviloor Digital Library

ஏறு நிலைமிசை ஏற்றியென் றனக்கே
ஆறு காட்டிய அருட்பெருஞ் ஜோதி !

சாவா நிலைஇது தந்தனம் உனக்கே
ஆவா எனஅருள் அருட்பெருஞ் ஜோதி !
எவ்வழி மெய்வழி என்பவே தாகமம்
அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி!

இறவாமை யீந்தானென் றூதூது சங்கே
எண்ணம் பலித்ததென் றூதூது சங்கே
சிவமாக்கிக் கொண்டானென் றூதூது சங்கே
சிற்றம் பலத்தானென் றூதூது சங்கே !

அருட்ஜோதி யானேனென் றறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென் றறையப்பா முரசு
மருட்சார்பு தீர்ந்தேனென் றறையப்பா முரசு
மரணந் தவிர்ந்தேனென் றறையப்பா முரசு !

இராமலிங்கப் பெருமானார், இறைவன் தம் உள்ளத்திற் புகுந்து, தமக்கு மரணமிலாப் பெருவாழ்வு தந்ததைச் சின்னம் பிடித்தும், சங்கூதியும், முரசறைந்தும் உலகுக்கு அறிவிக்கின்றார்.

கடவுளைக் காண முயல்பவர்கள், பக்தர்கள்; கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் அல்லது கடவுள் மயமானவர்கள் சித்தர்கள். பின்னவர், அட்டமா சித்திகள் புரியும் ஆற்றல் பெற்றவர்கள் என்பது சமயவாதிகளின் நம்பிக்கை. அகத்தியர், திருமூலர், தாயுமானவர் ஆகியவர்கள் சித்தர்களுள் மிகச் சிறந்தவர்களாவார்கள். அவர்களுடைய வழித் தோன்றலாக விளங்கினார் இராமலிங்கர். ஆம்; 'வாழையடி வாழையென வந்த சித்தர் மரபிலே வள்ளலாரும் ஒருவர்' என்கிறார், அவருடைய தலைமாணுக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார். வள்ளலாரும்,

" சித்தர்எனும் நின்அடியார் திருச்சபையில் நடுஇருத்திச்
சித்துருவின் வளர்க்கின்றாய் சிற்சபையில் நடிக்கின்றாய்,"

என்ற வரிகளில், நித்திய தேகம் பெற்று இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்கள் மத்தியிலே தாம் இருப்பதாகக் கூறுகின்றார்.

சித்தரானார்

வடலூர் இராமலிங்கம், பிள்ளைப் பருவத்திலேயே சித்தர்கள் பாடல்களில் சிந்தையைப் பறிகொடுத்தார். நூற்றுக்

Koviloor Digital Library

கணக்கான பாடல்களைத் தம்மை மறந்து பாடும் வகையில் மனனம் செய்து வைத்திருந்தார். சித்த மார்க்கமே சிறந்த தென்பது அவருடைய நம்பிக்கை.

இறைவனருளால் இறவா வரம் பெற்ற பின்னர், அட்டமா சித்திகள் புரியும ஆற்றல் பெற்றிருந்தார் இராமலிங்கர். அந்த ஆற்றலையும் இறைவனே தமக்கு அளித்ததாக அவர் கூறுகின்றார் :

" அருட்பெருஞ் சோதியைக் கண்டேனே
ஆனந்தத் தெள்ளமு துண்டேனே
இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாம்செய் சித்தியைக் கொண்டேனே !"

" சுத்தசன் மார்க்க மருந்து—அருட்
சோதி மலையில் துலங்கு மருந்து
சித்துரு வான மருந்து—என்னைச்
சித்தெலாஞ் செய்யச்செய் வித்த மருந்து."

" சித்தெலாம் வல்ல திறல்அளித் தெனக்கே
அத்தன்என் றோங்கும் அருட்பெருஞ் ஜோதி !"

" சித்திகள் அனைத்தையும் தெரிவித் தெனக்கே
சத்திய நிலைதனைத் தயவினில் தந்தனை."

" சித்தாடுகின்றனன் சாகா வரமுஞ் சிறக்கப்பெற்றேன்
இத்தாரணியில் எனக்கிணை யாரென்று இயம்புவனே"

" மானினைத்த அளவெல்லாங் கடந்தப்பால் வயங்கும்
மலரடிகள் வருந்தியிட மகிழ்ந்துநடந் தருளிப்
பானினைத்த சிறியேன்நான் இருக்குமிடத் தடைந்து
பணைக்கதவந் திறப்பித்துப் பரிந்தழைத்து மகனே !
நீநினைத்த வண்ணமெலாம் கைகூடும் இதுஓர்
நின்மலம்என் றென்கைதனில் நேர்ந்தளித்தாய் நினக்கு
நான்நினைத்த நன்றிஒன்றும் இலையேநின் அருளை
நாயடியேன் என்புகல்வேன் நடராஜ மணியே !"

மூவகைச் சித்து

அடிகள், "ஆடுறு சித்திகள் அறுபத்து நான்கெழு கோடியும் விளக்கும் அருட்பெரும் பொருளே" என்ற அருட்பா வரிகளில், "சித்துக்கள் அறுபத்து நான்கெழு கோடி" என்கின்றார்.

Koviloor Digital Library

பொதுவாகச் சித்திகளை, (1) கருமசித்தி, (2) யோக சித்தி, (3) ஞான சித்தி என மூன்று வகையாகத் தொகுக்கின்றார் அடிகளார். இதனை,

"மூவகைச் சித்தியின் முடிபுகள் முழுவதும்
ஆவகை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி !
கருமசித் திகளின் கலைபல கோடியும்
அரசுற எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி !
யோகசித் திகள்வகை உறுபல கோடியும்
ஆகஎன் றெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி !
ஞானசித் தியின்வகை நல்விரி வனைத்தும்
ஆனியின் றெனக்கருள் அருட்பெருஞ் ஜோதி !"

என்ற 'அருட்பெருஞ் ஜோதி அகவல்' வரிகளால் அறிகிறோம்.

பொதுவாக, "அட்டமா சித்தி" என்பதே வழக்கு. இதனை, "அட்ட சித்திகளும் நினது ஏவல் செய்யும்" என்ற அருட்பா வரியில் அடிகளும் ஒப்புக்கொள்கிறார்.

அட்டமா சித்திகள்

'அட்டமா சித்திகள்' என்பவை, எட்டு வகையான பெருஞ் சித்திகளைக் குறிக்கும். அவை வருமாறு :

(1) அணிமா : பூதவுடலை அணுப்போன்று சிறியதாக்குதல்.
(2) மகிமா : மேரு போன்று பெரியதாக்குதல்.
(3) இலகிமா : காற்றுப்போல இலேசாக்குதல்.
(4) கரிமா : பளுவாக்குதல்.
(5) பிராப்தி : அனைத்தையும் ஆளுதல்.
(6) வசித்துவம் : எல்லோரையும் தன் வயப்படுத்தல்.
(7) பிராகாமியம் : கூடுவிட்டுக் கூடு பாய்தல்.
(8) ஈசத்துவம் : விரும்பியதனையெல்லாம் செய்து முடித்து அனுபவித்தல்.

திருவிளையாடற் புராணத்தில்—"அட்டமா சித்தி அருளிய படலத்தி"ல் உள்ள கீழ்வரும் பாடல் இதற்குச் சான்றாகும் :

" அணிமா மகிமா இலகிமா
அரிய கரிமா பிராத்திமலப்

Koviloor Digital Library

பிணிமா கடையோர்க் கடைவரிய
பிராகா மியமீ சுத்துவமெய்
துணிமா யோகர்க் கெளியவசித்
துவமென் றெட்டா மிவையுளக்கண்
மணிமா சறுத்தோர் விளையாட்டின்
வகையா மவற்றின் மரபுரைப்போம்"

இந்தப் பாடல் தொடங்கி எட்டுப் பாடல்களில் "அட்டமா சித்திகள்"பற்றி விளக்கந் தருகின்றார், திருவிளையாடற் புராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவர். தாயுமானவரும்,

" கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத்து ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி லும்புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறன்அரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே."

என்ற பாடலில், சித்து விளையாடுதல் எளிதென்றும், அதனினும் சிந்தையை அடக்கிச் சும்மா இருப்பது அரிதென்றும் கூறுகின்றார். இதனால், சித்துகள் புரிவதினும் சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கும் திறனே சிறந்த தென்பதையும் புலப் படுத்துகின்றார் தாயுமானவர்.

இன்னும், 'சித்தர் கணம்' என்ற தலைப்பின் கீழ் வரும் பாடல்களில், சித்தர்களின் ஆற்றல்களை யெலாம் விளக்குகின் றார் தாயுமானவர்.

Koviloor Digital Library

பிள்ளை விளையாட்டே!

திருவிளையாடற் புராணத்துள், கார்த்திகைப் பெண்கள் அறுவருக்கும் அட்டமா சித்திகளைப் போதித்தருளிய சிவபெருமான்,

" எம்மை உணர்ந்த யோகியர்கள்
இவற்றை விரும்பார் எனினும்அவர்
தம்மை நிழல்போல் அடைந்து உலகர்க்கு
அனையார் பெருமை தனைஉணர்த்துஞ்
செம்மை யுடைய இவையென்னச்
சித்தி யெட்டும் தெளிவெய்தக்
கொம்மை முலையார் அறுவருக்குங்
கொளுத்தி ஞன்எண் குணச்செல்வன்."

என்கின்ருர் பரஞ்சோதி முனிவர்.

யோகியர், இறைவனை நினைந்து தவம் புரிவது, சித்தும் புரியுஞ் சக்தி பெறுவதற் கன்று; முத்தி பெறுவதற்கேயாம். உண்மையில், சித்து விளையாடல்களைப் பிள்ளை விளையாட்டெனவே கருதுவர், அனுபூதிமான்கள். வள்ளலாரும்,

" நான்முகர்நல் உருத்திரர்கள் நாரணர்இந் திரர்கள்
நவில்அருகர் புத்தர்முதல் மதத்தலைவர் எல்லாம்
வான்முகத்தில் தோன்றிஅருள் ஒளிசிறிதே அடைந்து
வானகத்தும் வையகத்தும் மனம்போன படியே
தேன்முகந்துண் டவர்எனவே விளையாடா நின்ற
சிறுபிள்ளைக் கூட்டம்என அருட்பெருஞ்ஜோ தியினல்
தான்மிகக்கண் டறிகஎனச் சாற்றியசற் குருவே
சபையினடத் தரசேஎன் சாற்றும்அணிந் தருளே,"

என்ற பாடலில், சித்தாடுந் திறனுடையார் அதனை வெளிப் படையாகக் காட்டித் திரிதல் சிறுபிள்ளைத்தனம் என்கிருர்.

இராமலிங்க அடிகளாரின் காலத்தவராகிய இராமகிருஷ்ண பரமஹம்ஸர்,

"ஆச்சரிய சித்துக்கள் காட்டுவதாகச் சொல்லும் மனிதர் இருக்கும் இடத்துக்குப் போக வேண்டா. அவர்கள் உண்மை நெறியினின்றும் தவறி விட்டவர்கள்."

Koviloor Digital Library

என்று கூறி, மக்களை எச்சரிக்கின்ருர். அடிகளாருடைய கொள்கையும் இதுவே. அவர், சித்துக்கள் புரியும் ஆற்றல் பெற்றிருந்தாரெனினும், அவற்றைச் செய்து காட்டி, மக்களுடைய பாராட்டைப் பெற முயலவில்லை. தமக்குச் சித்துக்கள் புரியும் ஆற்றலைத் தந்த சிவபெருமான் அவற்றைச் செய்ய வேண்டாவென்றும் ஆணையிட்டதாக,

" அட்டசித்தி களும்நினது ஏவல்செய்யும்
நீயவை அவாவியிடல் என்றஒளியே "

என்ற வரிகளில் கூறுகின்ருர்.

நம்ப முடியவில்லை

சென்னைச் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள திருவருட்பா (முதல் ஐந்து திருமுறைகள்) நூலில், இராமலிங்க அடிகளாரின் வரலாற்றுச் சுருக்கம் தரப்பட்டுள்ளது. அதில், அடிகளார் என்னென்னவோ சித்துக்களெல்லாம் புரிந்ததாகப் பட்டியல் தரப்பட் டுள்ளது. அந்தச் சாதனைகளைப் புரியும் ஆற்றல் அடிகளாருக்கிருந்திருக்கலா மென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், இறவா வரம் பெற்று, அத்துவித நிலையை அடைந்த பெருமான், சித்துக்கள் புரிவதிலா சிந்தை செலுத்தி யிருப்பார் ? நம்மால் நம்ப முடியவில்லை. மற்று, அவ்வரலாறு கூறும் சித்துக்கள் பற்றிய செய்தியை உறுதிப்படுத்தும் பாடல் ஒன்றுகூட அருட்பாவில் இல்லை யென்பதும் கவனிக்கத் தக்கதாகும். ஒருகால், தம்மைச் சூழ்ந்திருந்த சாத்தியர்களான சன்மார்க்கர்களுக்கு, சிலபோது தமக்கிருந்த சித்தாற்றலை வெளிப்படுத்தி யிருக்கலாம். ஆனால், பாமர மக்கள் மத்தியிலே கேவலம் பொருளையோ, புகழையோ கருதி அடிகள் சித்தாடி யிருப்பாரென்று சொல்வதற்கில்லை.

அடிகளார், தம் அன்பர்கள் பலருக்கு எழுதிய கடிதங்களில், தம்மிடம் அடைக்கலம் புகுந்த பிணியாளர்களுக்கு மருந்து கொடுத்துப் பிணி தீர்த்ததாகத் தகவல் தந்திருக்கின்ருர். பணமின்றி வருந்திய தமிழ்ப் புலவர் ஒருவருக்குப் பொருளுதவி புரியுமாறு திரு. இறுக்கம் இரத்தின முதலியாரைக் கேட்டுக்கொண்டிருக்கிருர். ஏன் ? தமக்கே தேவைப்பட்ட வெள்ளாடைகளைக் கடன் வாங்கி அனுப்புமாறும், பிறகு, அதற்குரிய பணத்தைத் தாம் கொடுத்து விடுவதாகவும் அடிகள் இரத்தின முதலியாருக்கு எழுதியுள்ளார். இவற்றை

Koviloor Digital Library

முன்பே விரிவாக எடுத்துக் காட்டியுள்ளோம். இப்படி, அடிகளாரின் கடிதங்களிலோ, கவிதைகளிலோ, அவர் பொருள் விரும்பி அல்லது புகழ் விரும்பிச் சித்து விளையாடியதாகச் செய்தியே யில்லை.

"—உலகெலாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசைஇலை விசித்திரங்கள்
செய்யவும் ஆசைஒன் றில்லை,"

என்று பாடிய பெருமான், சிவ பதத்தினை மறந்து மக்கள் மத்தியிலே சித்தாடல் புரிந்திருப்பாரா ?

எல்லாம் வல்ல சித்தர் !

சித்தாடும் உரிமை இறைவர் ஒருவருக்கே உண்டு; அவரும் பக்தர்களுக்கு அருளும் பொருட்டாகவே சித்தாடுகின்றார். வள்ளலாருக்கு அருளும் பொருட்டாக எம்பெருமான் புரிந்த சித்துக்கள் பல.

ஒரு நாள், தியாகேசப் பெருமானை வழிபடத் திருவொற்றியூர் சென்ற வள்ளலார், இரவு நெடுநேரங்கழித்து இல்லந் திரும்பினார். வீட்டின் தெருக்கதவு அடைக்கப்பட்டிருந்ததால், தாங்கொணாப் பசியுடன் திண்ணையிலேயே படுத்து உறங்கி விட்டார். அப்போது இறைவன், தாயாக வந்து, "மகனே ! ஒற்றியூர் சென்றதால் உணவின்றிப் பசித்தனையோ ?" என்று அன்பு ததும்பும் குரலில் கேட்டு, தமக்கு உணவு தந்து உயிர் காத்ததாகக் கூறுகின்றார்.

"தெற்றியிலே நான்பசித்துப் படுத்திளைத்த தருணந்
திருஅமுதோர் திருக்கரத்தே திகழ்வள்ளத் தெடுத்தே
ஒற்றியிற்போய்ப் பசித்தனையோ என்றெனையங் கெழுப்பி
உவந்துகொடுத் தருளியஎன் உயிர்க்கினிதாந் தாயே !"

"இருள்இரவில் ஒருமூலைத் திண்ணையில்நான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத்தேடி வந்தே
பொருள்உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியைப்
போக்கியருள் புரிந்தஎன்றன் புண்ணியநற் றுணையே!"

தண்ணீரா லெரிந்த விளக்கு

மற்றொரு சமயம், கருங்குழியில் வேங்கட ரெட்டியார் என்ற சன்மார்க்க அன்பரது இல்லத்தில் அடிகளார் இருந்த

Koviloor Digital Library

காலே, ஆண்டவன் நிகழ்த்திய சித்துப்பற்றி 'திருவருட்பா'ப் பெருநூல் தரும் செய்தி வருமாறு :

"ஒரு நாள் ரெட்டியார் வீட்டினர் அனைவரும் வெளியூருக்குப் போகவேண்டிய நிமித்தமாக ஒரு விளக்கினை எண்ணெய்விட்டு ஏற்றி, அருகில் ஒரு புதிய மண்பாத்திரத்தைப் பழகுவதற்காக அதனுள்விட்டு வைத்துச் சென்றனர். பெருமான் வழக்கம்போல் அவ்விளக்கருகே அமர்ந்து கொண்டு பாக்களை எழுதிக்கொண்டிருந்தவர், விளக்கில் எண்ணெய் தீர்ந்துபோனதறிந்து, புதிய மண்பாத்திரத்தில் எண்ணெயிருப்பதாக எண்ணி, அதிலிருந்த தண்ணீரை அடிக்கடி விட்டுக்கொண்டே இருந்தார். விளக்கும் எரிந்து கொண்டே இருந்தது.

"விடியற்காலையில் வீடு வந்து சேர்ந்த ரெட்டியாரின் மனைவி முன் இரவில் தண்ணீர் விட்டு அடிகள் விளக்கெரித்த அதிசயத்தை அறிந்து வியந்தார். அவ்வம்மையார் இதனை அடிகளாரிடம் கூற, அவரும் வியப்புற்றவராய் இறைவன் திருவருளைத் துதித்தார்."

இந்த நிகழ்ச்சியைச் சென்னையி லிருந்த தம் நண்பர்களுக்கு அடிகள் அறிவித்த கவிதை வருமாறு :

" மெய்விளக்கே விளக்கல்லால் வேறுவிளக்
கில்லையென்றார் மேலோர் நானும்
பொய்விளக்கே விளக்கெனஉட் பொங்கிவழி
கின்றேன்ஓர் புதுமையன்றே
செய்விளக்கும் புகழுடைய சென்னைநகர்
நண்பர்களே செப்பக்கேளீர்
நெய்விளக்கே போன்றொருதண் ணீர்விளக்கும்
எரிந்ததுசந் நிதியின் முன்னே."

இது, அடிகளாரும் வியக்கும் வண்ணம் அவரறியாமல் ஆண்டவன் நிகழ்த்திய சித்தாட லாகும்.

அடிகளார், இரும்பைப் பொன்னுக்கும் இரசவாதத் திறம் பெற்றிருந்தும் அதனைப் பயன்படுத்தினாரில்லை. தம் மாணவரொருவர் இரசவாதத்தில் மயக்கங்கொண்டிருந்தபோது, அவரைத் திருத்துவான் வேண்டி, இரும்பினைப் பதினாறு மாற்றுப் பொன்னாக்கிக்காட்டி,'இது, இச்சையற்றவர்களுக்கே சித்திக்கும்

Koviloor Digital Library

ஆதலால், இனி நீ இதில் மயங்காதே,'' என்று கூறி, மாற்றிய பொன்னையும் மறைத்து விட்டார்.

தொழுவூரார் சாட்சியம்!

இராமலிங்கர், "அட்டசித்திகளு நினது ஏவல்செய்யும்" என்று ஆண்டவன் தமக்கு அருளியதாகக் கூறுவதுபோல, அடிகளார் விரும்பாமலே அவரிடம் சித்துக்கள் வெளிப்பட்டன என்கின்றார், அவருடைய மாணுக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார்.

"இவருக்கு மாமிசம் உண்பவர்களை மாற்றும் அற்புதச் சித்து இருந்ததென்பது அநேகருக்குக் கண்கூடு.

"இவர், பிறருடைய மனத்தில் நிகழுபவைகளைப் பார்க்க வல்லவர்.

"இவர், அடிக்கடி தம் சீடர்கள் அறியாவண்ணம் மறைந்திருப்பதுண்டு. இவர் எங்குச் சென்றாரென்பதை அறிவோர் எவருமிலர். இப்படி வெகுநாள் மறைந்திருப்பார்."

அடிகள், மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் குடியேறிய பின்னர், அவர் வெளியூர்களுக்குச் சென்றதாகத் தெரியவில்லை. அதனால், அடிகள் சித்து விளையாடியிருந்தால், அது மேட்டுக் குப்பத்திலோ, வடலூரிலோதான் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால், அப்படி யெதையும் அடிகள் செய்யவில்லை. இதுபற்றித் தொழுவூர் வேலாயுத முதலியார் தரும் செய்தி வருமாறு:

"பல சாதியாரும் இவரைச் சுற்றிப் பெருங்கூட்டமாய்க் கூடினர். அவர்கள் இவருடைய போதனைக்காக வந்திலர். ஆயினும், இவர் அற்புதச் சித்திகளைப் பெற்றவர் என்று கேள்வியுற்று, அவ்வற்புதச் சித்திகளைப் பார்க்க வந்தவர்களாவர். இவர், அவர்களுக்கும் அவ்விதமானது ஒன்றுமில்லை யென்றும், (எமது கொள்கை) சுத்தமான தத்துவ சாத்திர யுக்தமான சமயம்—'சமரச சுத்த சன்மார்க்கம்—என்றும் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்.''

இதுவரை நாம் எடுத்துக்காட்டிய சான்றுகளால், இராமலிங்க அடிகளார், அற்புதங்கள் புரியும் சித்தராயிருந்தும், அவற்றைச் செய்துகாட்டி, மக்களை மயக்கிப் புகழ் பெருக்கும் பிள்ளை விளையாட்டில் அவர் ஈடுபடவில்லை என்பதோடு, அதனை வெறுத்தார் என்றும் அறிகின்றோம்.

Koviloor Digital Library

இராமலிங்கரைச் செத்தாரை எழுப்பும் சக்தி பெற்றவராகக் கருதினர், மக்களுள் சிலர். இது அவருக்குப் பெருந் தொல்லையாக முடிந்தது. அடிகளார்,

"அத்தாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்சோ தியைப்பெற்றே அகங்களித்தல் வேண்டும்
செத்தாரை மீட்டும்இங்கே எழுப்பியிடல் வேண்டும்
திருச்சபைக்கே அடிமைகளாச் செய்வித்தல் வேண்டும்."

"அரைசேநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
அருட்பெருஞ்சோ தியைப்பெற்றே அகமகிழ்தல் வேண்டும்
வரைசேர்எவ் வுலகமும்ஓர் ஒழுக்கமுறல் வேண்டும்
மடிந்தாரை மீளவும்நான் வருவித்தல் வேண்டும்!"

என்னும் பாடல்களில், செத்தாரை யெழுப்பும் சக்தி தருமாறு ஆண்டவனை வேண்டியுள்ளார்.

செத்தா ரெழுவர்!

பின்னர், செத்தாரை யெழுப்புந் திறனைத் தாம் பெற்றுவிட்டதாகவும் அடிகள் பாடியுள்ளார். அந்தப் பாடல்களின் சில அடிகள் வருமாறு:

"இறந்தவர் எல்லாம் எழுந்திட உலகில்
அறந்தலை அளித்த அருட்பெருஞ் ஜோதி!
செத்தவர் எல்லாம் சிரித்தாங் கெழுதிறல்
அத்தகை காட்டிய அருட்பெருஞ் ஜோதி!
இறந்தவர் எழுகஎன் றெண்ணியாங் கெழுப்பிட
அறந்துணை எனக்கருள் அருட்பெருஞ் ஜோதி!"

"அஞ்சலை நீஒரு சிறிதும்என் மகனே
அருட்பெருஞ்ஜோதியை அளித்தனம் உனக்கே
துஞ்சிய மாந்தரை எழுப்புக நலமே
சூழ்ந்தசன் மார்க்கத்தில் செலுத்துக சுகமே."

அடிகள், இறந்தாரை எழுப்பும் வரத்தை இறைவனிடம் தாம் பெற்று விட்டதாகக் கூறுவதோடு, அது அதிசயிக்கத் தக்கதல்ல வென்றும் பாடுகின்றார்.

"யான்புரிதல் வேண்டுங்கொல் இவ்வுலகில் செத்தாரை
ஊன்பிரிந்து மீள உயிர்ப்பித்தல்—வான்புகுந்த

Koviloor Digital Library

அம்பலத்தான் நல்அருளால் அந்தோநாள் மேற்போர்த்த
கம்பலத்தால் ஆகும் களித்து.''

''என்னே உலகில் இறந்தார் எழுதல்மிக
அன்னே அதிசயம்என் றுடுகின்றார்—இன்னே
திருவம் பலத்தான் திருநோக்கம் பெற்றார்க்
குருவம் பலத்தேஎன் றுன்.''

அடிகளார் மறுப்பு

அடிகள், இறந்தாரை யெழுப்புந் திறனைத் தாம் பெற்று விட்டதாகப் பலப்பல பாடல்களில் பாடியுள்ளா ராயினும், இறந்தவரைத் தாமே எழுப்பித் தருவதாக ஒரு பாடலிலும் கூறினாரில்லை. அந்தச் சித்தாடல் புரியும் உரிமை, எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் உண்டென்றும் கூறியுள்ளார். திறமை பெறுவது வேறு; உரிமை பெறுவது வேறு அன்றோ!

''செத்தாரை எல்லாந் திரும்ப எழுப்புதல்இங்கு
எத்தால் முடியும்எனில் எம்மவரே—சித்தாம்
அருட்பெருஞ் ஜோதி அதனால் முடியும்
தெருட்பெருஞ் சத்தியம் ஈதே!''

என்னும் பாடலில், செத்தாரை யெழுப்புஞ் சித்தாடல் புரியும் விருப்பம் தமக்கில்லை யென்பதைத் தெளிவாகக் கூறி, மக்கள் தம்பால் கொண்டிருந்த தவறான மயக்கத்தைப் போக்க முயன்றார்.

அடிகள் எவ்வளவுக் கெவ்வளவு உள்ளொளி பெற்றாரோ, அவ்வளவுக் கவ்வளவு அவர் உலகத்தாரால் புரிந்துகொள்ள முடியாதவரானார். தவஞ் செய்து இறைவனிடம் தாம் பெற்ற அருளை, மக்களிலே ஒவ்வொருவரும் பெற முடியுமென்று அவர் நம்பினார். அதன் விளைவாகத் தமக்கருளிய தெய்வம் எல்லா ருக்கும் அருள் புரிய எழுந்தருளப் போவதாகவும் கூறினார்.

அப்பன் வருவான் !

மணிவாசகப் பெருமான், மக்களைப் பார்த்து ''இறைவன், மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' என்று பாடினார். தாயுமானவர்,

''காகம்உறவு கலந்துண்ணக் கண்டீர்! அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகஉருவாய்க் கிடைக்கு தையோ இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேர வாரும் செகத்தீரே!''

Koviloor Digital Library

என்று பாடினார். அவர்களைப் போல, வள்ளற் பெருமானும், இறையருள் பொங்கித் ததும்பிப் பூரணமாகி, ஏக உருவாய் வந்து காட்சி தரப்போவதாகக் கூறி, அதைக் காண வருமாறு எல்லோரையும் கூவி அழைத்தார்.

"ஆளுடையான் நம்முடைய அப்பன் வருகின்ற
நாள்எதுவோ என்று நலியாதீர்—நீள
நினையாதீர் சத்தியம்நான் தேர்ந்துரைத்தேன் இந்நாள்
அனையான் வருகின்றான் ஆய்ந்து."

"இந்நாளே கண்டீர் இறந்தார் எழுகின்ற
நன்னாள்என் வார்த்தைதனை நம்புமினோ—இந்நாள்
அருட்பெருஞ் சோதி அடைகின்ற நாள்மெய்
அருட்பெருஞ் சத்தியம்ஈ தாம்.

"போற்றி உரைக்கின்றேன் பொய்என் றிகழாதீர்
நாற்றிசைக்கண் வாழும் நமரங்காள்—ஆற்றலருள்
அப்பன் வருகின்றான் அருள்விளையாட் டாடுதற்கென்(று)
இப்புவியில் இத்தருணம் இங்கு."

என்று பாடினார். "இறைவர் வருவார், இறந்தாரை யெல்லாம் எழுப்புவார், வாழ்வாருக்கெல்லாம் இறவாத வரந்தருவார்," என்று அடிகள் கூறியது, அவருடைய உள்ளத்தில் எழுந்த விருப்பத்தின் விளைவாகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்" என்றார் தாயுமானவர். அடிகளாரின் உள்ளமும் அதையே கருதியது.

அப்பாவி மக்கள்!

அவரைப் போன்ற அனுபூதிமான்களின் உள்ளத்தைச் சாதாரண மக்கள் எளிதில் உணர்ந்து கொள்வதோ, அவர்களுடைய வாக்கைப் புரிந்து கொள்வதோ, சாத்தியமன்று. வேதாகமங்கள் கற்ற பண்டிதர்களே இராமலிங்க அடிகளாரைப் புரிந்து கொள்ளத் தவறினரென்றால், சாதாரண மக்கள் புரிந்து கொள்ளாததில் வியப்பில்லை. அவர்களெல்லாம், அடிகளார் தாமே செத்தாரை எல்லாம் எழுப்பப் போகிறார் என்று தவறாக எண்ணினார்கள். அடிகளார்பால் காழ்ப்புக் கொண்ட சமய—மத வெறிபிடித்த குறும்பர் சிலரும், அந்த எண்ணத்தை, அடிகளாருக்குத் தொல்லை தரும் உள் நோக்குடன் வளர்த்திருக்க வேண்டும். அடிகளார்பால் பக்தி கொண்டோருள்ளும் சிலர்

Koviloor Digital Library

அவருடைய உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமையால், அடிகளார் செத்தாரை எழுப்பும் சித்தாடல் புரியப்போகிறார் என்று அப்பாவித்தனமாகத் தாங்கள் நம்பியும், மக்களுள் சிலரையோ பலரையோ நம்பவைத்து மிருக்கலாம். இராமலிங்க வள்ளலார்,

மக்களெல்லாம் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் அங்கத்தினர்க ளாகவேண்டும்;

சாதி சமய பேதங்களை யெல்லாம் விடுத்து, வடலூர்ச் சத்திய ஞான சபையில் நித்தமும் கூட்டு வழிபாடு நிகழ்த்த வேண்டும்;

ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து ஏழை மக்களின் பசி போக்கவேண்டும்;

தெய்வம் உண்டென்று நம்பி, அதுவும் ஒன்றென்று தெளிந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்வுடன் உலகிலுள்ளோர் அனைவரும் ஒன்றுபடவேண்டும்;

என்று விரும்பினார். இந்தக் கொள்கைகளுக்காகவே தோன்றி, இவற்றிற்கு வெற்றி தேடவே பாடுபட்டு வந்தார்.

இந்தக் கொள்கைகளெல்லாம் நிறைவேறி, சுத்த சன்மார்க்க சமுதாயம் உருவாகுமானால், அந்தச் சமுதாயத்திலே அருட்பெருஞ்சோதி ஆண்டவன் வருவான், செத்தாரையெல்லாம் எழுப்புவான், வாழ்வாருக்கும் சாவா வரம் தருவான் என்று கூறினார்.

பிணக் குவியல் (?)

இந்த விளக்கங்களை அறியாத மக்கள், அடிகளார் செத்தாரை யெல்லாம் உடனடியாக எழுப்பித்தருவார் என்றெண்ணி இடர்ப்பாடுற்றார்கள்.

சிலர், இறந்த உறவினர்களின் பிரேதங்களை வடலூர்ப் பெரு வெளிக்குக் கொண்டு வந்தன ரென்றும், ஒரு சில நாட்களுக்குப் பிறகு அங்கேயே புதைத்தனரென்றும் கூடக் கர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது. இப்படியும் நிகழ்ந்திருக்கக் கூடுமென்று நம்பலாம். ஆனால், இராமலிங்க அடிகள் இதற்கு எவ்வகையிலும் பொறுப்பாகமாட்டார்.

இதுபற்றிச் ''சித்திவளாக விளம்பரம்'' எனத் தலைப்பிட்டு, 8-9-1873ல் அடிகளார் வெளியிட்ட பிரசுரம் வருமாறு :

Koviloor Digital Library

"ஞானசித்தி புரமென்றும் உத்தர ஞான சிதம்பர மென்றும் பிரமாணிக்கப்படுகின்ற வடலூர் சத்திய ஞான சபைக்கு முக்கிய சம்பந்தமுடையதாகி, அடுத்த கருங்குழி யெல்லை மேட்டுக் குப்பத்தில் வழிபடப்படுகின்ற சித்தி வளாகத்தில் வந்திருக்கின்றவர்களும் வருகின்றவர்களும் வருபவர்களுமாகிய ஜனங்களுக்கு அறிவிப்பது :

"மேல்குறித்த விடத்தில் இந்த மாதத்திற்கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாந் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாக ஓர் வதந்தி வழங்கப்படுகின்றது. அது கேள்விப் பட்டு நம்புதலோடு நீர்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேக வகையாலும் உழைப்பெடுத்துக் கொண்டு பின்பு நிட்டூரப் பட்டுக்கொள்ளுதல் வேண்டாம். அந்தக் கேள்வி யுண்மையல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ, இந்தக் காலமோ எந்தக் காலமோ. ஆகலில், இந்த அறிவிப்பினுல் ஜாக்கிரதையோடு உங்களுக்கு அடுத்த காரியங்களெவையோ அவைகளைச் செய்வீர்களாக."

இப்பிரசுரம் வெளியான பின்பு, மக்கள் உண்மை நிலையை உணர்ந்து தெளிந்திருக்க வேண்டும்.

Koviloor Digital Library

நாத்திகத்தின் எதிரி !

'கடவுள் இல்லை' என்போர், நாத்திகர். அன்னார், வேத காலத்திலேயே இருந்தனர் என்று அறிகிறோம். ஆம்; வேத நிந்தனையாளர்பற்றி வேதங்களிலேயே குறிப்புகள் காணப்படுகின்றன. "என்று நீ அன்று நான் உனனடிமை" என்பது ஆத்திகர் கொள்கை. "என்று நீ அன்று நான் உன் எதிரி," என்பது நாத்திகர் வாதம். அதாவது, "கடவுள் உண்டு" என்ற நம்பிக்கை பிறந்தபோதே, அதன் எதிரொலியாக "இல்லை" என்ற வாதமும் பிறந்திருக்க வேண்டும்.

தமிழகத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க காலத்திலேயே நாத்திக வாதம் இருந்திருக்கிறது. சோழன் நலங்கிள்ளிக்கு அறமுரைத்த உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற சங்கப் புலவர்,

"நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க்கு இனனா கிலியர்" புறம்-29.

என்று கூறியதால் இதனை அறிகிறோம். இந்த வரிகளுக்கு "நல்வினையினது நன்மையும், தீவினையினது தீமையும் இல்லையென்று சொல்லுவோர்க்கு இனமாகா தொழிவாயாக" என்று பொருள் கூறியுள்ளார் உரையாசிரியர். இதில் வரும் 'இல்லையென்போர்' என்ற தொடருக்கு 'நாத்திகர்' என விளக்கந் தருகிறார் டாக்டர்உ. வே. சாமிநாத ஐயர். தமிழ்மறை தந்த வள்ளுவப் பெருந்தகை,

"உலகத்தார் உண்டென்ப இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்"

என்னும் குறளில், நாத்திகரையே குறிப்பிடுகின்றார். இந்தக் குறளுக்கு'

"கடவுளும் மறுபிறப்பும் இருவினைப் பயனும் முதலாக அவர் உள என்பன பலவேனும் சாதிபற்றி உண்டு என்பது என்றும், தானே வேண்டிய கூறலால் ஒப்பும் வடிவால் ஒவ்வாமையும் உடைமையின் தன் யாக்கை கரந்து மக்கள் யாக்கையுள் தோன்றுதல் வல்ல அலகை என்றும் கூறினர்."

Koviloor Digital Library

எனத் தெளிவுரை பகர்கின்றார், பரிமேலழகர். இதனால், கடவுளும் மறுபிறப்பும் இருவினைப்பயனும் இல்லையென்னும் நாத்திகர் வள்ளுவர் காலத்திலும் வாழ்ந்தனர் என்பது புலனாகும்.

உலோகாயதன் !

திருவாசகம் இயற்றியருளிய மணிவாசகப்பெருமான்,

"ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்,"

என்றும் பாடுவதால், அவர் காலத்திலும் நாத்திகர் இருந்தனர் என்று அறிகிறோம். "நாத்தழும் பேறினர்" என அவர் கடிந்துரைப்பதால், தெய்வம் இல்லை யென்பாரிடம் அவருக்கிருந்த வெறுப்பு வெளிப்படுகின்றது. இன்னும்,

"உலோகா யதம்எனும் ஒண்திறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி"

என்றும் மணிவாசகர் பாடுகின்றார். நாத்திகத்திற்கும் உலோகாயதத்திற்கும் நுட்பமான வேற்றுமை உண்டு. அதனாற்றான், இரண்டையும் பிரித்துத் தனித்தனியே சாடினார் மணிவாசகர். ஆனால், பிற்காலத்தில் உலோகாயதத்தையும் நாத்திகமாகவே கருதினர் ஆத்திக அறிஞர்கள்.

திருவாசகம்—திருவெம்பாவையில், மார்கழி நீராடி, திருவண்ணாமலைப் பெருமானை வழிபடும் கன்னிப் பெண்கள்,

"எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க"

என்று முறையிடுவதால், கலியாணமாகாத கன்னியரும் தெய்வ நம்பிக்கையற்ற நாத்திகர்களை வெறுத்தனர் என்பது புலனாகின்றது. மற்றோரிடத்திலும்,

"உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்,"

என்று பாடுவதாலும், நாத்திகரை வெறுத்து ஆத்திகருக்கே வாழ்க்கைப்பட விரும்பினர் அந்நாளைய கன்னிப் பெண்கள் என்பதை அறிகிறோம். திருநாவுக்கரசர்,

Koviloor Digital Library

"நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல்வரும் பஞ்சமா பூதங்கள்
தடையொன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே,"

என்று திருஆனைக்கா பதிகத்துள் பாடி, நாத்திக வாதம் தம் காலத்திலும் இருந்ததை மெய்ப்பிக்கின்றார்.

இப்படி, வழிவழி நாத்திகத்தை வெறுத்து வந்த ஆத்திகர் மரபில் தோன்றிய வள்ளலாரும் நாத்திகத்தை வேம்பெனக் கருதினார்.

இங்கர்சால் !

வள்ளலார் காலத்தில், உலகமெங்கும் அறிமுகமான நாத்திகர் ஒருவர் அமெரிக்காவில் வாழ்ந்திருந்தார். அவர் பெயர், இங்கர்சால். அவர், இராமலிங்கர் தோன்றிய பத்தாண்டுகளுக்குப் பின் பிறந்தவர். அவருடைய நாத்திகக் குரல் அந்நாளைய பாரதத்திலும் எதிரொலித்திருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் பாரதமெங்கும் பரவிக்கொண்டிருந்த ஐரோப்பிய நாகரிகமும், ஆங்கிலக் கல்வி முறையும் இந்து சனாதனத்திற்கு அறைகூவல் விடுத்தன. பழமையை வெறுக்கும் மனப்பான்மை, ஆங்கிலமொழி படித்தவர்களிடையே தோன்றி, வலுத்து வந்தது.

ஆங்கிலம் பயின்று, அம்மொழியே பாரதத்தின் பொது மொழியாக என்றென்றும் இருக்க வேண்டுமென்று வழக்காடினார், ராஜா ராம்மோகன ராய். அந்தப் பெரியார், ஐரோப்பிய நாகரிகத்தில் மூழ்கி, இந்து மதத்தின் பழைய பழக்க வழக்கங்களை வெறுக்கலானார். அந்த வெறுப்பின் விளைவாக, அவர் தோற்றுவித்த பிரம்ம சமாஜத்தின் கிளைகள் பாரதத்தின் தென்கோடியிலுள்ள தமிழகத்திலும் பரவின. இங்கும் ஆங்கிலம் பயின்றவர்களிடையேதான் அந்த இயக்கம் வேர்விடலானது.

கருத்துப் போர் !

இராமலிங்க வள்ளலார் உருவ வழிபாட்டை மந்த நியாயமாகக் கருதினார் என்பதனை முன்பே கூறியுள்ளோம். இறையருளைப் பெறுவதற்கான முதல் முயற்சியாகவே அடிகளார் உருவ வழிபாட்டினை ஆதரித்தார். அது காரணமாக, உருவ வழிபாட்டினை வெறுக்கும் பிரம்ம சமாஜிகளுக்கும் இராமலிங்க

Koviloor Digital Library

அடிகளாருக்குமிடையே கருத்துப் போர் நிகழ்ந்தது. தமிழகத்திலுள்ள பிரம்ம சமாஜிகளுள் **சம்பேடு ஸ்ரீதர சுவாமி நாயக்கர்** என்பவர் அந்நாளில் சிறப்புற்று விளங்கினார். அவருக்கும் நம் அடிகளாருக்கு மிடையே திருப்பாதிரிப்புலியூருக் கடுத்த தென் பெண்ணை நதியின் தென்கரையிலுள்ள சத்திரமொன்றில் வாதப் போர் நிகழ்ந்தது. ஆம், அடிகளார், வடலூரில் முகாமிடுவதற்கு முன்பு. இருதரப்பையும் சேர்ந்த பெருங் கூட்டத்தினர் கூடி, வாதப் போரைச் செவியுற்றனர். முடிவில் விக்கிரக ஆராதனையின்றிப் பிரம்மானுபவம் சித்திக்காதென்ற தம் கருத்தை வெற்றிகரமாக நிலைநாட்டினார் அடிகளார்.

அடிகளார் காலத்திலும் ஆண்டவனை நம்ப மறுக்கும் உலோகாயத வாதிகள் தமிழகத்தில் வாழ்ந்தார்கள். பிரத்தியட்ச மொன்றே பிரமாணம்; அனுமானம் பிரமாணமாகா தென்பது அவர்தம் கொள்கை. அவர்கள் சார்பில் **'தத்துவ விசாரிணி'** என்ற பெயரில் ஒரு பத்திரிகையும் வெளி வந்துகொண்டிருந்தது. அதன் ஆசிரியர் கடவுளைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் அடிகளாரோடு வாதம் நடத்தினார்.

முடை நாக்கு !

நாத்திகர்களின் அல்லது உலோகாயத வாதிகளின் சூன்ய வாதத்தை அடிகள் வெறுத்தார். அதே நேரத்தில் ஆண்டவனை நம்பும் ஆத்திகர்களிடையே நிலவிய மூட நம்பிக்கைகளையும் முழு மூச்சுடன் எதிர்த்தார். ஆம்; அகச் சமயத்தாரிடமும் புறச்சமயத்தாரிடமும் ஏக காலத்தில் போராடினார். அவருடைய உள்ளம் நடுவு நிலையில் நின்று எதையும் ஆராய்ந்தது. பிறர் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பும் சிற்றதிகாரக் கூட்டத்தார் நடுவு நிலைமையின்றி மதப்போர் புரிவது கண்டு மனம் வருந்தினார் வள்ளலார். இதனை,

"நடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
  நண்ணிடார் வரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக்
  கேடரைப் பொய்யலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம்
  பயந்தனன்..."

என்னும் பாடலால் அறிகின்றோம். அடிகளார் நாத்திகத்தை நஞ்செனக் கருதி வெறுத்தார். இயற்கையாகவே தயையும்

Koviloor Digital Library

கருணையும் மிகுந்த வள்ளலார், வழக்கத்திற்கு மாருக வன் சொல் கொண்டும் நாத்திகரைச் சாடினுர்.

"நாத்திகம்சொல் கின்றவர்தம் நாக்குமுடை நாக்கு
நாக்குருசி கொள்ளுவதும் நாறியபிண் ணுக்கு"
[நாறிய பிண்ணுக்கு-மலம்]

என்று பாடி, நாத்திகர்பால் தமக்கிருந்த எல்லையற்ற வெறுப்பை வெளிப்படுத்தினுர். அவர்களைக் கண்டாலே தம் உள்ளம் நடுங்குவதை,

"ஆத்த ரெனுமுன்றன் அடியார் தமைக்கண்டு
நாத்திகஞ் சொல்வார்க்கு நடுங்கு கின்றேன்"

என்னும் வரிகளிலே வெளிப்படுத்தி யுள்ளார். கருத்து வேறுபாடுடைய ஆத்திகரிடையே வாதப்போர் நடத்துங்கால், "உறவனன்றிப் பகைவனென உன்ஞதீர் உலகீர்!" என்று பாடுகின்ற அடிகள், நாத்திகரை மட்டும் அன்னியராகவே கருதிச் சாடுகின்ருர். தம்முடைய நெஞ்சுக்கு அறிவுரை கூறுங்கால்,

"எள்ளென்றுந் தெய்வமென்ப தில்லைஇது தெளிந்துக்
கொள்ளென்றுந் துள்ளுகின்ருேர் கூட்டமுறேல்—"

எனப் பாடுகின்ருர். இற்றைத் தமிழகத்தில் வாழ்வோருள் சிலர், நாத்தழும்பேற நாத்திகம் பேசித் திரிகின்றனர். அன்னுர், இராமலிங்க அடிகளாரின் வாரிசுகளாகவும் தங்களை வருணித்துக் கொள்கின்றனர். இது, சாத்தான் வேதத்தைச் சான்று காட்டினுற் போன்றதுதான்.

பகுத்தறிவாளர்!

தங்கள் அறிவைத் தாங்களே மெச்சிக் கொள்கின்ற இந்தப் 'பகுத்தறிவாளர்' பற்றியும் வள்ளலார் விமரிசனம் செய்கிருர். அவர்களுடைய பொய் வாதத்தை நம்பவேண்டாமென்று தம் நெஞ்சினைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிருர்.

"எல்லா அறிவும் எமதறிவே என்றுரைக்கும்
பொல்லா வலக்காரர் பொய்உகவேல்—"

என்னும் பாடலே அதற்குச் சான்று.

'பகுத்தறிவாளர்'கள் என்று சொல்லிக்கொள்வோர், 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்பதே தங்கள் தெய்வக் கொள்கை என்கின்றனர். இது, திருமூலரிடம் இரவல் பெற்ற கருத்தாகும். வள்ளலார், திருமூலரின் உண்மைச் சீடர். ஏன்?

Koviloor Digital Library

திருமூலர் இயற்றிய திருமந்திரமே அவர் ஓதி வந்த வேதம். அதனால், 'ஒருவனே தேவன்' என்னும் கொள்கை அடிகளாருக்கும் உடன்பாடே. பல தெய்வ நம்பிக்கையை மறுக்குமிடத்தில், "மறந்தும் என்றன் நாவால் உரைக்கமாட்டேன் சிறு தெய்வ நாமங்களை" எனக் கூறுகின்றார். தெய்வம் பலப்பல சொல்லும் பொய் வாதத்தை,

"பூவைவிட்டுப் புல்லெடுப்பார் போலுன் திருப்பாதத்
தேவைவிட்டு வெம்பிறவித் தேவர்களைக்—கோவைவிட்டுக்
கூவுவார் மற்றவரைக் கூடியிடேன் கூடுவனேல்
ஓவுவா ராவ லுனை"

என்னும் பாடலில் மறுத்துரைக்கின்றார். இன்னும்,

"வள்ளல்உனை உள்ளபடி வாழ்த்துகின் றோர்தமை
மதித்திடுவ தன்றி மற்றை
வானவரை மதிஎன்னில் நான் அவரை ஒருகனவின்
மாட்டினும் மறந்து மதியேன்
கள்ளம்அறும் உள்ளம்உறும் நின்பதம்அ லால்வேறு
கடவுளர் பதத்தை அவர்என்
கண்எதிர் அடுத்து'ஐய! நண்' என அளிப்பினும்
கடுவென வெறுத்து நிற்பேன்"

என்னும் பாடலில்,எல்லாம் வல்ல பரம்பொருள் ஒன்றையன்றிப் பிறிதொரு தெய்வம் பேணாத நெறியைப் பேசுகின்றார்.

'ஒருவனே தேவன் !'

"ஒருவனே தேவன்" என்றதுபோல, "ஒன்றே குலம்" என்பதனையும் வலியுறுத்துவா ராகி, "நல்ல குலம் என்றும் தீய குலம் என்றும் சொல்லளவல்லால் பொருளில்லை" யென்றும், "இருகுலமும் மாண்டிடக் காண்கின்றீர்" என்றும் பாடினார். "மனிதர் எல்லோரும் ஓர் குலம்—ஓர் இனம்" என்னும் உண்மையை வலியுறுத்தினார். நம்மிடையே வாழும் 'பகுத்தறிவாளர்' என்போர் 'ஆரியர்' எனவும், 'திராவிடர்' எனவும் இனம் பிரித்துப்பேசி, அதையும் பண்பு வழியல்லாமல் பகைவழி நிலை நிறுத்த முயன்று, பாரத சமுதாயத்தையே பிளவுபடுத்தி விட்டனர். அடிகளார், இந்த அறிவின்மைக்கு எதிரியாக இருந்தார். வேத ஆகமங்களை—அவற்றிற்கு மதவாதிகள் சொல்லும் வியாக்யானப்படி ஏற்க மறுத்தாராயினும், வேதியர் குலத்தையே அவர் வெறுத்தாரல்லர்; மாறாக வேதியர்பாலும் அன்பு செலுத்தி அவர் காணவிருந்த ஆன்மநேய ஒருமைப்

Koviloor Digital Library

பாட்டுரிமைச் சமுதாயத்தில் அவர்களையும் அங்கமாகக் கண்டார்.

சீர்திருத்தப் புரட்சி!

இராமலிங்கர், புரட்சிகரமான சீர்திருத்தவாதி. ஆனால், எதனிடத்தும்—எவரிடத்தும் அவர் துவேஷம் காட்டவில்லை. மாறாக, எதையும்—எவரையும் அன்பு வழியிலேயே சீர்திருத்த முயன்றார். "துவேஷத்தால் சமய—சமுதாய சீர்திருத்த இயக்கம் வெற்றி பெறாது" என்கிறார் அவர். வள்ளலார் காலத்தில் தோன்றி அவருக்குப் பிற்காலத்திலும் வாழ்ந்த சுவாமி விவேகானந்தர் தம் காலத்தில் வாழ்ந்த சீர்திருத்தவாதிகள் பற்றிக் கூறியதாவது:

> "சென்ற நூறு ஆண்டுகளாகச் சீர்திருத்தக்காரர்களாலும், பலதிறப்பட்ட சீர்திருத்தத் திட்டங்களாலும் நம் நாடு நிறைக்கப்பட்டிருக்கிறது. இந்த நூறு ஆண்டுகளாகச் செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தங்கள் தேசத்திற்கு யாதொரு நிரந்தரமான நன்மையும் செய்யவில்லையென்பது வெளிப்படை.
>
> "ஆயிரக்கணக்கான மேடைப் பிரசங்கங்கள் நடந்திருந்திருக்கின்றன. பல புத்தகங்கள் இந்து மக்களையும் நாகரிகத்தையும் தூஷித்து எழுதப்பட்டிருக்கின்றன. எனினும், அனுபவத்தில் பயனொன்றும் காணோம். இதற்குக் காரணம் என்ன? இதற்குக் காரணம் கண்டுபிடிப்பது கஷ்டமன்று; அவர்கள் செய்த தூஷணையே இதற்குக் காரணம்.
>
> "தற்காலச் சீர்திருத்தங்கள் பலவும் மேல் நாட்டுப் பழக்கங்களின் வெறும் பிரதிபிம்பங்களாக இருக்கின்றன. இவை இந்தியாவிற்கு ஏற்கா. அதனாற்றான், இந்தச் சீர்திருத்த இயக்கங்கள் யாதொரு பயனையும் உண்டாக்கவில்லை. நிந்தனை மூலம் யாதொரு நன்மையும் செய்ய முடியாது."
>
> —இந்தியப் பிரசங்கங்கள்; பக். 64-5.

இதனால் விவேகானந்தர் குறிப்பிடுவது, மேலை நாட்டு நாகரிகத்தின் பிரதிபிம்பமாக விளங்கிய பிரம்ம சமாஜத்தினரை என்று கொள்ளலாம். வள்ளலார் காண விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை யுலகம் முற்றிலும் பாரதப் பண்பாட்டையே அடிப்படையாகக் கொண்டதாகும்.

அடிகளார் பாதை!

இராமலிங்க அடிகளார், தாம் நடத்திய சிர்திருத்த இயக்கத்தினை, 'தெய்வம் உண்டு' என்ற அடிப்படையில் எழுப்பினார்.

Koviloor Digital Library

அந்தத் தெய்வத்தை வழிபட்டு உய்யவேண்டும் என்பதனையும் நடைமுறைத் திட்டமாக வைத்தார். இராமலிங்கரிடம் பக்தி அல்லது அன்பு செலுத்தும் 'பகுத்தறிவாளர்கள்,' "ஒருவனே தேவன்" என்பதனை ஒப்புக்கொண்டால் மட்டும் போதாது; அந்தத் தேவனை ஒழுக்க நெறியில் நின்று வழிபடவும் வேண்டும். வாய்மையைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டு அதற்கு மாருகப் பொய்யே பேசி வாழ்வோரு முண்டு. அது போலத்தான், தெய்வம் ஒன்று உண்டென்பதை ஒப்புக் கொள்வதாகக் கூறிவிட்டு, அதனை வழிபடாது வாழும் தன்மையும்.

வள்ளலார், தாம் வணங்கும் தலைவனுக்கு வணங்காத "பகுத்தறிவாளர்' தலைபற்றிப் பாடுகின்ருர் :

"வீட்டுத் தலைவ!நின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை! பாம்பின் அடுந்தலைகற்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை! நாற்றப் புழுத்தலையே!"

இறைவனை நம்புவதாகச் சொல்லிவிட்டு அவனை நாள் தோறும் வழிபட மறுப்பாரின் தலையை,

சும்மாட்டுத் தலை,
பட்டிமாட்டுத் தலை,
கொடிய பன்றித் தலை,
ஆட்டுத் தலை,
வெறி நாய்த் தலை,
நஞ்சுடைய பாம்புத் தலை,
கற் பூட்டுத் தலை,
புலைத் தலை,
புழுக்கள் நெளியுந் தலை,

என்றெல்லாம் பாடுகின்ருர். இப்படிப் பாடும் வள்ளலாருக்கும் அன்ருட வாழ்வில் இறைவனை வழிபட மறுப்போருக்கும் என்ன உறவோ ?

தெய்வத்தை நினைக்க மறுக்கும் நெஞ்சுடைய மக்களைப் பற்றி மேலும் பாடுமிடத்து,

"ஓங்கிய திருச்சிற் றம்பலமுடைய
ஒருதனித் தலைவனே என்னைத்

தாங்கிய தாயே தந்தையே குருவே
தயாநிதிக் கடவுளே நின்பால்
நீங்கிய மனத்தார் யாவரே எனினும்
அவர்தமை நினைத்தபோ தெல்லாம்
தேங்கிய உள்ளம் பயந்தனன் அதுநின்
திருவுளம் அறியுமே எந்தாய்''

என்றுபாடி, இறைவனிடம் முறையிடுகின்றார். தெய்வம் ஒன்று உண்டு என்பதை நம்ப மறுப்பதோ, நம்பிய பின்னும் வழிபடத் தவறுவதோ, மனிதத் தன்மைக்கு மாறுபட்ட செயல்களே. அவற்றைவிடக் கொடுஞ்செயல் தெய்வத்தை நிந்திப்பதாகும். இந்தப் ''புண்ணியர்''களைப் பற்றி வள்ளலார் பாடுகின்றார் :

'' பரம்ஏது வினைசெயும் பயன்ஏது
பசுஏது பாசம்ஏது
பக்திஏது அடைகின்ற முத்திஏது அருள்ஏது
பாவபுண் ணி யங்கள்ஏது
வரம்ஏது தவம்ஏது விரதம்ஏ தொன்றும்இலை
மனம்விரும் புணவுண்டுநல்
வத்திரம் அணிந்துமட மாதர்தமை நாடிநறு
மலர்சூடி விளையாடிமேல்
கரமேவ விட்டுமுலை தொட்டுவாழ்ந் தவரோடு
கலந்துமகிழ் கின்றசுகமே
கண்கண்ட சுகம்இதே கைகண்ட பலன்எனும்
கயவரைக் கூடாதருள்
தரமேவு சென்னையில் கந்தகோட்டத் துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே !''

இப்பாடலின் பொருள் கொஞ்சம் கடுமையானதுதான். ''இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று''—என்று பாடிய வள்ளுவரே, நாத்திகர்களைப் பேயுடன் ஒப்பிட்டுக் கூறினாரென்றால், வள்ளலாரும் அவரைப் பின்பற்றியதில் வியப்பில்லையன்றோ! பயிரில் புகுந்த களைபோல, மக்கள். மத்தியிலே நடமாடுகின்றது 'நாத்திக'க் கூட்டம். பயிரிடம் காட்டும் கருணை காரணமாகவே களையைப் பறிப்

Koviloor Digital Library

பதில் கருணையின்றி நடக்கிறோம். அதுபோல, உயிர்க் குலத்தின்பால் கொண்ட கருணை காரணமாகவே தெய்வ நிந்தனையாளரைக் கருணையின்றிக் கடிந்துரைத்தார் வள்ளலார்.

சமரசம்

வடலூர் முனிவரின் வாரிசாகத் தோன்றிய வார்தா முனிவர், நாத்திகரிடமும் கருணைகாட்டி ஆத்திகத்திற்கும் நாத்திகத்திற்கும் சமரசம் காண முயல்கின்றார்.

> "நாத்திகனுடைய நாத்திகமும் அவனே. அவனுடைய எல்லையற்ற கருணையே நாத்திகனை 'இரு' என்று அனுமதி தருகிறது."
>
> "நாத்திகர்கள்கூடச் சத்தியத்தை வழிபடுகிறார்கள். ஏன்? சத்தியத்தில் அவர்களுக்குள்ள தீவிரப்பற்றினால். அவர்கள் உள்ளத்தில் எழும் சந்தேகத்தை வைத்துக் கடவுளே இல்லை யென்ற அளவிற்குச் செல்கிறார்கள்."
>
> -'ரகுபதி ராகவ' என்னும் நூலில்.

இது, காந்தியடிகள் வெளியிட்ட கருத்தாகும். காந்தியடிகள் சமரசம் காண முயல்வது தெய்வ நிந்தனையாளர்களிடமன்று. "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று வாழும் தன்னல வெறியருடனுமன்று. காரண—காரிய ரீதியில், ஒழுக்க நியதிகளை ஒப்புக்கொள்ளும் முறையில், அறிவுக்கு முதன்மை தரும் பான்மையில் நாத்திகம் பேசுகின்றார்களே, அவர்களுக்கு மதிப்பளித்துப் பேசுகிறார் காந்தியடிகள். அவர்களுடைய மனத்தூய்மையிலே, தன்னலமற்ற வாழ்க்கையிலே காந்தியடிகளுக்கு மதிப்புண்டு. ஏன்? வள்ளலாருடைய நிலையும் அதுதான் என்று கூறலாம்.

அடிகள் கண்ட நாத்திகர்!

வள்ளலாருடன் வாதிட்ட நாத்திகரான 'தத்துவ விசாரிணி' ஆசிரியர், வள்ளலார் கடவுளைக் கண்டதாக—அவரோடு தாமும் தம்மோடு அவரும் பேசுவதாகப் பாடிய பாடல்களைத் தம்முடைய பத்திரிகையிலே மிகக் கடுமையாகத் தாக்கி அறிவுவாதம் புரிந்தார். இதனை வள்ளலாருக்கு எதிராக வைதிக வட்டாரத்தார் வெளியிட்டுள்ள பிரசுரங்களில் காண முடிகிறது. பிற்காலத்தில், அந்த நாத்திகர் மனம் மாறி, தெய்வ நம்பிக்கை பெற்று வள்ளலாரைப் பின்பற்றியதாகச் சொல்லப்படுகிறது.

Koviloor Digital Library

'கடவுளைக் காணமுடியும், அவர் பேசுவதையும் கேட்க முடியும்'—என்கிறார் காந்தியடிகள். கடவுளைக் கண்டவர்கள் இல்லையென்பதாலேயே காணவும் முடியாது என்று வாதிப்பதை வார்தா முனிவர் எதிர்த்தார்.

> "எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் காணவேண்டுமானால், சிருஷ்டியில் அடங்கிய ஈனப் பிராணிகளையும் தன்னுடையதைப் போலப் பேணும் அன்பைப் பெறவேண்டும். இந்த அன்பைத் தன் உள்ளத்தில் காணும் ஒருவன் தெய்வத்தை நேருக்கு நேர் கண்டவன்."

எனத் தம்முடைய 'சுயசரிதை'யில் கூறுகின்றார். கடவுளைக் காண்பதற்கு இதையே இலக்கணமாக்கினார் வள்ளலாரும். வார்தா முனிவர் தம் சுய சரிதையில் மேலும் கூறுகின்றார்:

> "மனிதன் ஒருவனுடன் ஆண்டவன் பேசுவதாவது! அது ஒருநாளும் இல்லை." என்று யாரும் சொல்லமுடியாது. அப்படிச் சொன்னதாக நான் இதுவரையில் அறியவில்லை. இந்த உலகத்தில் யாரேனும் ஒருவராவது ஈசன் எனக்கு நேரில் ஆணையிட்டான் என்று சொல்லி அதை மெய்ப்பித்து விட்டால், அது மக்களுக்குப் பெரும் நன்மையாகும். இப்படிச் சொல்லிக் கொள்பவர்கள் அநேகர்; ஆனால், நிரூபிக்க முடியாது. பலர் பொய்யைச் சொல்லி மோசம் செய்கிறார்களே என்பதற்காக, உண்மையில் ஒருவன்—ஆண்டவன் குரலைக் கேட்டவன்—தன் அனுபவத்தை மறைக்கவேண்டிய அவசியமில்லை; மறைக்கவும் கூடாது. வேஷதாரிகள் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களை நாம் என்ன செய்ய முடியும்? போலிகள் பலர் இருக்கிறார்களே யென்று உண்மைச் சீலத்தை நாம் விட்டுவிட முடியுமா?"

காந்தியடிகள் விரும்பும் வண்ணம் கடவுளைக் கண்ட சிலராக விளங்கினார் வள்ளலார். இந்த உண்மையைக் காந்தியடிகளுக்கு அறிவிப்பாரில்லாததால் அவர் அறிந்திருக்கவில்லை.

அன்னியரே!

நாத்திக வாதம் வேறு; சமய—சமுதாய சீர்திருத்தக் கிளர்ச்சி வேறு. நாத்திகரானோர், கடவுள் இல்லையென்று பேசித் திரிவதிலேயே காலம் கழிப்பவர். அன்னாருடைய அறிவு வாதத்திலே, கேட்பவர்கள் மயங்கலாம். ஆத்திகனுடைய கற்பனைக் கருத்துக்கள், அவற்றை யொட்டிய பய

Koviloor Digital Library

னற்ற பழக்க வழக்கங்கள், நாத்திகத்தை வளர்க்கும் எருவாக லாம். ஆனால், நாத்திகனுடைய வாத வன்மையைக் கொண்டே, அவனுடைய சூன்ய வாதத்தை மெய்யென்று நம்பி மயங்கு வது மதியீனம் !

நாத்திகனுடன் வாதிட்டு வெற்றி காண முயலக்கூடாது. வள்ளலார் நாத்திகத்தின்பால் தமக்குள்ள வெறுப்பை அவர் களுக்கு அறிவுரை கூறும் வகையில் வெளிப்படுத்தவில்லை. கருத்து வேறுபாடுடைய ஆத்திகர்களைக் குறிப்பிடுங்கால், 'உலகீர் !'—'வையத்தீர்' என்றெல்லாம் அன்புக்குரல் கொடுத்து அழைத்து, அவர்களுடைய மூடநம்பிக்கைகளைத் திருத்த முயல்கின்றார். சான்றாக, "நானுரைக்கும் வார்த்தை யெலாம் நாயகன் தன் வார்த்தை, நம்புமினோ நமரங்காள்" என்ற வாச கத்தைக் கூறலாம். இப்படி, எத்தனை யெத்தனையோ இடங் களில் மக்களை வருந்தி வருந்தி அழைத்து, அவர்களுடைய உள்ளம் திருந்துமாறு உபதேசம் புரிகின்றார். ஆனால் நாத்தி கர்களை—தெய்வ நிந்தனையாளர்களை நினைக்கும்போதெல்லாம், அவர்களை அணுகாமல், தம் அருகே அவர்களை அழைக்காமல் அவர்களுடன் கூடாதவாறு தமக்கு அருள்புரியுமாறு ஆண்ட வனை வேண்டுகின்றார்.

சமய—சமுதாயச் சீர்திருத்த வாதிகள், முதலில்—தெய்வத் திடம் அழுத்தமான பற்றும், தங்கள் அன்றாட வாழ்க்கையில் பக்திநெறியைக் கடைப்பிடித்து வாழும் பண்பும் கொண்டவர் களாக இருக்கவேண்டும். இது, சீர்திருத்தவாதியாகிய வள்ள லார் கற்பிக்கும் பாடம்.

பரமஹம்சரின் எச்சரிக்கை !

தெய்வபக்தர்களாக உள்ள சீர்திருத்தவாதிகளுக்கு இராம கிருஷ்ண பரமஹம்சர் ஓர் எச்சரிக்கை விடுக்கின்றார் :

> "சமூக சீர்திருத்தத்தைப் பற்றிப் பேசுகிறீரா? கட வுளைக் கண்ட பிறகு நீர் அதனைச் செய்யலாம். பழைய காலத்து ரிஷிகள் கடவுளைக் காண உலகத்தைத் துறந் தன ரென்பதை மறக்கவேண்டா. அதுதான் அவசியம் வேண்டப்படுவது. நீர் விரும்பினால் அவைகளெல்லாம் உம்மை வந்தடையும். ஆகவே, முதலில் கடவுளைக் காண் பீர். பிறகு சமூக சீர்திருத்தப் பிரசங்கங்கள் நிகழ்த்த லாம்."

—உபதேச மொழிகள் 7.

Koviloor Digital Library

வள்ளலார், முதலில் கடவுளைக் காணவும், அவரது அருளைப் பெறவுமே அழுதழுது பாடினார்; தல யாத்திரை செய்தார்; அடிக்கடி தியானத்தில் ஆழ்ந்தார். அந்தக் காலங்களில் அவர் சீர்திருத்தம் பற்றிப் பாடவோ, பேசவோ இல்லை. இதற்குத் திருவருட்பா முதல் ஐந்து திருமுறைகளே சான்றாகும். கடவுள் அருளைப் பெற்ற பிறகே, அவரிட்ட ஆணையின் பேரில் சமய—சமுதாய சீர்திருத்தங்களைப் பற்றிப் பாடினார். அதனாற்றான், "நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்தன் வார்த்தை," என்று சொல்லும் துணிவு அவருக்கிருந்தது. நவீன நாத்திகர்களான பகுத்தறிவாளர் நிலை வேறு.

கலையும் கதையும்

இராமலிங்கர், "கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெலாம் மண்மூடிப் போக" என்று பாடினார். இது, 'பகுத்தறிவாளர்'களுக்கு உடன்பாடு போலத் தோன்றலாம். ஆனால், அது வெறும் மயக்கமே. அடிகள் "கலைகளெலாம் மண்மூடிப் போக" என்று கூறவில்லை. கலை வேறு, அதனை அழகுபடுத்தும் கற்பனைவேறு—என்பது அடிகளின் கருத்து. 'தத்துவம்' என்பது கலை. அதை விளக்க எழுந்த கதை கற்பனை. கலைக்காகவே கதை. கதைக்காகக் கலையன்று. கலை, நிலையான பொருள். கற்பனை நிலையான தன்று. அது கால மாறுதலால் பொய்யாகிவிடும். அதனால், நிலையான கலையை ஏற்று, நிலையற்ற கற்பனைகளை நிலையெனக் கொண்டாடும் கண்மூடித் தனத்தை வெறுத்தார்.

கற்பனை வேறு; பொய் வேறு. கற்பனை, நிகழாத ஒன்றாக இருக்கலாம். அதனாலேயே, அது பொய்யாகி விடாது. தீமையற்ற நன்மை பயப்பது கற்பனை. அதைப் பொய்யென்று சொன்னாலும், நன்மை தீமையாகி விடாது. வள்ளுவா, "பொய்ம்மையும் வாய்மையிடத்த, புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்றதும் இதனை உணர்த்தவேயாம்.

அடிகளார், சித்தாந்த—வேதாந்தத் தத்துவங்களையொட்டிக் கற்பிக்கப்பட்ட புராணக் கதைகளையெல்லாம் பயன கருதி ஆதரித்தார். ஆனால், அவற்றை வரலாற்றுச் செய்திகளாக நம்பும் மூடத்தனத்தை வெறுத்தார். 'பகுத்தறிவாளர்' களோ, புராண—இதிகாசங்களைக் கொளுத்த விரும்புகின்றனர்

Koviloor Digital Library

வள்ளலார், "உலகறிவேதாகமங்க ளெலாம் பொய் பொய்யே" என்றார். இது, 'பகுத்தறிவு'க் கூட்டத்தாருக்கு உடன்பாடு போன்று தோன்றலாம். இதுவும் அறியாமையே. அடிகளார் "ஊனறிய வேதாகமங்கள் உண்மை; உலகறி வேதாகமங்கள் பொய்" என்று விளக்கந் தருமிடத்தில், அவருக்கும் பகுத்தறிவாளர்களுக்கு முள்ள வேற்றுமை நன்கு வெளிப்படுகின்றது. அது, வெண்ணெய்க்கும் சுண்ணும்புக்கு முள்ள வேற்றுமை போன்றதாகும்.

தத்துவார்த்தக் கதைகளை—காட்சிகளை யெல்லாம் வரலாற்று நிகழ்ச்சிகளாக மக்களை நம்பவைக்கும் வழக்கமும் மக்கள் நன்மைக்கெனவே தோன்றியது. பிற்காலத்தில், அந்த நம்பிக்கை மக்களை ஏய்த்துப் பொருள் பறிக்கப் பயன்படுத்தப் பட்ட போது, அதனை எதிர்த்தனர் சான்றோர். "கல்லிலும் செம்பிலுமோ உள்ளான் என் கண்ணுதலே!" என்னும் பட்டினத்தார் வாக்கு, மூட நம்பிக்கையின்பால் விழுந்த தாக்குதலே யாகும். வள்ளலாரும்,

"கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமும்அக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளம்உறும் அக்கலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரும் எல்லாம்
பிள்ளைவிளை யாட்டு........"

என்று பாடினார். இங்கும் சமய உண்மைகளை யல்லாமல், அவற்றுடன் கலந்த பொய்களையே சாடுகின்றார். இதையும் வேதனை யோடுதான் பாடுகின்றார். காந்தியடிகள் "கோயில்களெல்லாம் வேசி வீடுகள்போ லாகிவிட்டான," என்று ஒருமுறை கூறினார். அது, கோயில்களை வெறுத்ததாகாது. அவை பயன்படுத்தப் படும் முறையையே வெறுத்த தாகும்.

அடிகளார் நிலை

இராமலிங்க அடிகளார், உருவ வழிபாட்டை ஆதரித்தார். ஆனால், அதையே முடிவானதாக ஏற்க மறுத்தார். வேதாகமங்களை ஏற்றார். ஆனால், அவற்றிற்குச் சிலர் சொன்ன தவறான வியாக்கியானங்களை வெறுத்தார். புராண—இதிகாசக் கதைகளைப் பாமர மக்களின் நன்மை கருதி ஏற்றார். ஆனால், அவற்றை வரலாறாகக் கொள்ள மறுத்தார்.

Koviloor Digital Library

இப்படி, நடுநிலையில் நின்று அடிகளார் சமய—சமுதாயத் துறைகளில் சீர்திருத்தங் காணப் பாடுபட்டதால், அவரைச் சூன்யர்களான உலோகாயத வாதிகள் வெறுத்தனர். இதற்குத் 'தத்துவ விசாரிணி' ஆசிரியர் நடத்திய கருத்துப்போர் எடுத்துக்காட்டு. அப்படியே வேதாகம பண்டிதர்களும் எதிர்த்தனர். இதற்கு ஆறுமுக நாவலர் காட்டிய எதிர்ப்பும், தொடுத்த வழக்கும் சான்றுகளாம். இந்துமதத்தின் உள்ளேயும் வெளியேயுமிருந்து தமக்கு ஏற்பட்ட இந்த எதிர்ப்புகளைக் கண்டு அடிகளார் அஞ்சி விடவில்லை. தெய்வத்தின் திருவருள் ஒன்றை மட்டுமே நம்பி, போலி ஆத்திகத்திட மிருந்தும் புரட்டு நாத்திகத்திட மிருந்தும் மனித சமுதாயததை விடுவித்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை யுடைய சமரச சன்மார்க்க சமுதாயம் காணப் பாடுபட்டார்.

Koviloor Digital Library

தமிழைத் துறக்காத துறவி

இராமலிங்க அடிகளார், பற்றுக்கள் அனைத்தையும் துறந்த பரம ஞானி. ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்குத் தடையாக உள்ள எதனிடத்தும், எந்தக் காலத்தும் பற்றுக் கொள்ளாதவர். அத்தகைய பற்றுக்கள் தம்மைப் பற்ருத வண்ணம் அருள்புரியுமாறும் இறைவனை இடையருது பிரார்த்தித்தவர்.

> "எல்லாம் உடைய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி, எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனத்திற் பற்ருத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்."

என்பதுவே ஒவ்வொருவருக்கும் உரிய பிரார்த்தனையாக இருக்க வேண்டுமென்று அடிகள் போதித்தார். அந்த மகா ஞானியும் தெய்வத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் மொழியிடத்து அழுத்தமான பற்று வைத்திருந்தார். தமிழ், அடிகளாரின் தாய்மொழி. ஆனுல், அதற்காக மட்டுமே அவர் தமிழின்பால் பற்றுக்கொண்டிருந்தார் என்று சொல்வதற் கில்லை. தமிழின் அருமை பெருமைகளை அறிந்தே அதனைக் காதலித்தார். அடிகளாரின் குறிக்கோள் சாவாக் கல்வியைப் பெறுவதாகலின், அத்தகைய கல்வியைத் தரும் ஆற்றல் தமிழ் மொழிக்கு உண்டென்பது அடிகளாரின் நம்பிக்கை. அது காரணமாகவும் தமிழின்பால் ஆழ்ந்த பற்றுக் கொண்டார். தமிழைத் தமக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துபவர் போல,

> "இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெரு மறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலிய பாஷைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது பயிலுதற்கு மறிதற்கும் மிகவு மிலேசுடையதாய் சாகாக் கல்வியை இலேசிலறிவிப்பதாய்த் திருவருள் வலத்

Koviloor Digital Library

தாற் கிடைத்த தென்மொழி யொன்றனிடத்தே மனம் பற்றச் செய்து அத் தென் மொழிகளாற் பல்வகைத் தோத் திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்!"

என்று விண்ணப்பம் செய்கின்றார்.

அடிகளார், சம்ஸ்கிருத மொழியில் திறமான புலமை பெற் றிருந்தார். அம்மொழியிலுள்ள வேதங்களையும் சாத்திரங்களை யும் பொருள் மயக்கம் தோன்ற வண்ணம் பழுதறப் பயின் றிருந்தார். இதனை, "ஓதுமறைமுதற் கலைகள் ஓதாமல் உணர உணர்விலிருந் துணர்த்தி அருள் உண்மைநிலை காட்டி" என அவர் பாடியுள்ளதால் அறிகிறோம். அவர் காலத்தில் வாழ்ந் திருந்த சங்கராசாரிய சுவாமிகளுக்கு வடமொழி நூலொன்றில் ஐயம் தோன்ற, அதனை விளக்குமாறு அவர் நம் இராமலிங்க அடிகளாரிடம் கேட்க, அடிகள் உண்மைப் பொருளை விளக் கினார் என்று வரலாறு கூறுகின்றது.

இராமலிங்கர் சென்னையி லிருந்தபோது தவத்திரு சங்கரா சாரிய சுவாமிகளைச் சந்தித்து அளவளாவினார். அதுகாலை, "சம்ஸ்கிருதமே மாத்ரு பாஷை (இந்திய மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி)," என்று சுவாமிகள் கூற, அதனைத் தழுவி, "ஆயின், தமிழ் பித்ரு பாஷை (இந்திய மொழிகளுக் கெல்லாம் தந்தை மொழி)" என்று அடிகள் வலியுறுத்தினார். அந்த உரை யாடலின்போது நம் அடிகள், 'தமிழ்' என்னும் பெயருக்குச் சுத்த சித்தாந்த ரீதியில் தந்த பதவுரை, தனிக் கட்டுரையாகத் திருவருட்பாவில் (பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு 3ஆவது புத்த கத்தில்) வெளியாகி யிருக்கிறது. அதில் சில பகுதிகள் வரு மாறு :

"தமிழ் என்பது த்-அ-ம்-இ-ழ் என்னும் ஐந்து அலகு நிலையுடைத்து.

"ஐந்தலகு நிலையும் உபய கலை நிலையும் மூன்று மெய் நிலையும் அமைந்துள்ளதும், சம்பு பக்ஷத்தாரால் அனாதி யாய்—சுத்த சித்தாந்த ஆரிஷ ரீதிப்படி கடவுள் அருளாணை யால் கற்பிக்கப்பட்டதும், எப்பாஷைகளுக்கும் பிதுர் பாஷை யென்று ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டதும், இனிமை யென்று நிறுத்தம் சித்திக்கப் பெற்றுள்ளது மான தமிழ் என்னும் இயற்கை உண்மைச் சிறப்பியல் மொழி..."

"ஸ்ரீமாணிக்கவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர், திருமூலர் முதலிய மகா புருஷர்களால் சாத்திர தோத்திரங்

Koviloor Digital Library

களாக அருளிச் செய்யப்பட்டிருக்கும் திருவாசகம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்த ரகசியங்களை யுடையது தமிழ்''

என்று தம் தாய்மொழியின் சிறப்புக்களைக் கூறியவர், வடமொழியுடன் ஒப்பிட்டும் தமிழின் உயர்வினைப் பேசுவார்.

''ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல்—பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும் ஒலி யிலேசாயும் கூட்டென்னும் சக்தி அதிசுலபமாயும் எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், அக்ஷர ஆரவாரம் சொல்லாடம்பரம் முதலிய பெண்மை அலங்காரமின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண் தன்மையைப் பொருந்தியதுமான தற்பாஷைக்கே அமைவுற்ற ழ் ற் ன் என்னும் முடி நடு அடி சிறப்பிய லக்கரங்களில் முடிநிலை இனபாநுபவ சுத்த மோனாதீதத்தைச் சுட்டறச் சுட்டும் இயற்கை யுண்மைத் தனித் தலைமைப் பெருமைச் சிறப்பிய யொலியாம்.''

கடினமான இந்த உரையின் சாரத்தைப் பிழிந்து **''தமிழ்ப் பாஷையே அதிக சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கு மென்பதாம்''** என்னும் வாசகமாக வடித்துத் தருகிறார் வள்ளலார்.

ஆசாரிய சுவாமிகள், ''மொழிகளுக் கெல்லாம் சம்ஸ்கிருதமே தாய்மொழி'' என்று கூறியதை அடிகள் மறுக்காததொன்றே, அவருக்கு அம்மொழியின்பால் காழ்ப்பில்லை யென்பதை உணர்த்தும். ஆயினும், ''வடமொழி தாய்மொழியானால், தமிழ் தந்தை மொழி'' எனக் கூறி, உயர் ஆரியத்திற்கு நிகரான மொழியாகத் தமிழை நிலைநிறுத்தி யுள்ளது போற்றத் தக்கதாகும்.

அடிகளார் காலத்தில் கால்டுவெல் அவர்களின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல்' வெளிவரவில்லை என்பதனை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். இருந்தும், ''தமிழ் தனித்தியங்கும் மொழி; மொழிகளுக்கெல்லாம் தந்தை மொழி''—என்பதனை அடிகள் ஆராய்ச்சிச் சான்றுகளுடன் வலியுறுத்தி யுள்ளார்.

சங்கராசாரிய சுவாமிகளிடம் நம் அடிகளார் தமிழ் மொழியின் சிறப்பை எடுத்தோதிய நிகழ்ச்சி ஒன்றே, அவர் தம் தாய்மொழியிடம் வைத்திருந்த ஆழ்ந்த பற்றுதலை அறிவிக்கும். 'தேசியம்'-'சர்வ தேசியம்' என்று சொல்லிக்கொண்டு, தாய்மொழிப்பற்றினை வெறுத்துப் பேசுவாரும் இன்று நம்மிடையே

Koviloor Digital Library

நடமாடுகின்றனர். அந்த 'ஈயங்களை'யும் கடந்து ஆன்மநேய ஒருமைப்பாடு காண விழைந்த 'பிரபஞ்சீய' வாதியாவார் வள்ளலார். அதற்கென்றே பாடுபடச் சமரச சுத்த சன்மார்க்க இயக்கத்தையுங் கண்டார். அவரே, "தாய்மொழிப் பற்றுத் துறக்க முடியாதது—துறக்கவும் கூடாதது" என்பதனை உலகினருக்கு உணர்த்தி வைத்திருக்கின்றார். அடிகளார் வடமொழியைப் பயின்றிருந்தார் என்றாலும், அவருடைய இதயக் கோயிலில் இடம் பெற்றிருந்தது தமிழ்மொழி ஒன்றுதான்.

வடமொழி ஒன்றே 'தேவ மொழி' என்பது சமயவாதிகளிலே ஒரு சாரார் கருத்து. இந்தக் கருத்தை ஒட்டியே கோயில்களில் அருச்சனை மொழியாக சம்ஸ்கிருதம் ஒன்றுமட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அருச்சனை தமிழில் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கையும் பிடிவாதமாக மறுக்கப்பட்டு வருகிறது.

சைவ சமயாசாரியர்கள், சம்ஸ்கிருதம்—தமிழ் ஆகிய இரண்டுமே 'தேவ மொழிகள்' என்றனர். அப்பர் சுவாமிகள், "ஆரியந் தமிழோ டிசையானவன்" என்று இறைவனைக் குறிப்பிடுகின்றார். இன்னும்,

"வானவன்காண் வானவர்க்கு
மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும்
மறைகள் நான்கும்
ஆனவன்காண்........."

என்னும் வரிகளிலும், ஆண்டவனை வடமொழியும் தென்மொழியும் கலந்தவனாகக் காண்கின்றார்; நமக்கும் காட்டுகின்றார். பின்னும், "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" என்று பாடி, "முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்," என்றும் பறைசாற்றுகின்றார்.

நான்மறையாளர் குலத்தில் பிறந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தப் பெருமான்,

"தென்சொல் விஞ்சமர் வடசொல்
திசைமொழி எழில்நரம் பெடுத்துத்
துஞ்சு நெஞ்சிருள் நீங்கத்
தொழுதெழு தொல்புக லூரில்,"

என்னும் பாடலில், வடமொழி போலவே தமிழ்மொழியும் தெய்வமொழி என்பதனை உணர்த்துகின்றார். அவரே,

Koviloor Digital Library

"தம்மலர் அடியொன்றில் அடியவர் பரவத்
தமிழ்சொலும் வடசொலும் தாள்நிழற் சேர."

என்று பாடி, இறைவன் திருவடியில் இரு மொழிகளும் சம நிலை பெறுவதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

சைவ சமயாசாரியர்கள், வடமொழிக்கும் தென்மொழிக்கு மிடையே தோன்றிய பிணக்கைத் தீர்க்க நினைத்தவர்கள்போல, இரு மொழியையும் சமநிலையில் வைத்துப் பாடினர்; இரண்டையுமே தெய்வ மொழிகளாகக் கூறினர். ஆயினும், அவர்களுடைய சமரச முயற்சி பயன்தரவில்லை. பிற்காலத்தில் பிணக்கு வளர்ந்தது. வடமொழி யொன்றே தெய்வமொழி என்ற வாதம் வலுத்தது. வடமொழியிலும் தென் மொழியே சிறந்ததென்ற எதிர்வாதமும் பிறந்தது. ஆயினும், பக்தி நெறியில் சிறந்து நின்ற சைவ ஞானியர், மொழித்துறையில் பகையை வளர்க்க விரும்பினரல்லர்; அதனை அழிக்கவே முனைந்தனர். "வட மொழி. அறமுறைக்கும் திறமுடையது; தென்மொழி, பக்தி நெறி வளர்க்கும் பண்புடையது" எனப் புகன்று மொழிப் பூசலில் சமரசம் காண முனைந்தார் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். அவர், தாம் இயற்றிய 'நால்வர் நான்மணி மாலை'யுள், வடமொழிக்கும் தென் மொழிக்கும் உள்ள பயன் வேறுபாட்டினைப் பாகுபடுத்திக் காட்டுகின்றார்.

"வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரும் ஓதும் இயற்கைத்து ஆதலின்,
பொற்கல நிகர்க்கும்; பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கும்; மதுர வாசகம்
ஓதின் முத்தி உறுபயன்;
வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே."

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ,
யாதோ சிறந்தது என்குவி ராயின்,
வேதம் ஓதின், விழிநீர் பெருக்கி
நெஞ்சம்நெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்!
திருவா சகம்இங்கு ஒருகால் ஓதில்

Koviloor Digital Library

கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே.''

இராமலிங்க அடிகளாரும், "தமிழ் மொழியே அதி சுலபமாகச் சுத்த சிவானுபூதியைக் கொடுக்கும்," என்று கூறி, பக்தி நெறிக்கு வடமொழியினும் தமிழ் மொழியே அதிகப் பயன்தர வல்லது என்பதனை வலியுறுத்துகின்றார்.

சமயத் துறையில் சீர்திருத்தங் காண விழைந்த பெரியார்களுள் பலர், வடமொழியை நன்கு பயின்றிருந்தும், அம்மொழியின்பால் ஒரு வகையில் வெறுப்புடையவர்களாகவே காணப்படுகின்றனர். பிரம்ம சமாஜ ஸ்தாபகரும் அந்தணர்குலத் தோன்றலுமான இராஜா ராம்மோகன் ராய், சம்ஸ்கிருதத்தில் ஆழமான புலமையுடையவர். இருந்தும், அம்மொழியின்பால் அவர் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தவில்லை. இதனால், வடமொழியின் பெருமையை அந்தப் பெரியார் குறைத்து மதிப்பிட்டதாகச் சொல்வதற்கில்லை; அந்த மொழியைச் சிலர் பயன்படுத்திய முறை காரணமாகவே அவர் அதன்பால் நல்லெண்ணமற்றவரானார். தத்துவக் கலைகள் அனைத்தையும் வடமொழிலேயே புதைத்து வைத்து, மக்கள் பேசும் மொழிக்கு அவை மாற முடியாமல் தடை எழுப்பப்பட்டிருந்தது அந்நாளில். இதனை, வடமொழியில் பெரும் புலமை பெற்றிருந்த சுவாமி விவேகானந்தர் தெளிவுபடுத்துகின்றார்.

"ஆத்மீக வாழ்க்கைக்கு அவசியமான ஞானத்தைப் புகட்டும் மணிமொழிகள் பல நமது சமய நூல்களில் நிறைந்திருக்கின்றன. இப்பொழுது அவை சாதாரண மக்களுக்கு எட்டாத இடங்களிலே—மடாலயங்களிலும் காடுகளிலும்—சிலர் கைவசப் பட்டிருக்கின்றன. சாதாரண மக்கள் அறிய வொண்ணாத, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட சம்ஸ்கிருத மொழியில் அவை புதைந்து கிடக்கின்றன. அவ்வரிய கருத்துக்கள் எல்லோருக்கும் கிட்டும்படி செய்யவேண்டும். சம்ஸ்கிருதம் தெரியினும் தெரியாதிருப்பினும், அவை இந்தியாவில் பிறந்த ஒவ்வொரு இந்திய மகனுக்கும், மகளுக்கும் சொந்த உடைமையாக வேண்டும்.

Koviloor Digital Library

"அவை சம்ஸ்கிருதத்திலிருப்பது, அவற்றைப் பரப்புவதற்குப் பெருங் கஷ்டமாக இருக்கிறது. எல்லோரும் சம்ஸ்கிருதத்தில வல்லுநராகும்வரை இக் கஷ்டத்தை நீக்க முடியாது.

"நான் என் ஆயுள் முழுதும் சம்ஸ்கிருத மொழியைப் பயின்றுகொண் டிருக்கிறேன். எனினும் எனக்கே ஒவ்வொரு புத்தகமும் புதிதாகத் தோன்றுகிறதெனில், சாதாரண மக்களுக்கு அவற்றைப் பயில்வது எவ்வளவு சிரமமாக இருக்கும்! எனவே, இவ்வெண்ணங்கள் பொதுமக்களுடைய சொந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்."

—இந்தியப் பிரசங்கங்கள் ; பக்கம். 183-4.

இராமலிங்கர், 'ஆரிய மொழி' எனப்படும் சம்ஸ்கிருதத்தை, "(இ)டம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் பொழுது போக்கையும் உண்டுபண்ணுகின்ற மொழி," என்று வருணித்ததை அவருக்குப்பின் வந்த விவேகானந்தரும் அங்கீகரிக்கின்றார்.

சம்ஸ்கிருத மொழியை—அதிலுள்ள வேத ஆகம சாத்திரங்களை, இன்ன வகுப்பினர்தாம் பயிலவேண்டும், அவர்கள் சொல்லித்தான் பிறர் கேட்கவேண்டும் என்ற நியதி இடைக்காலத்தில் 'நீதி'யாக இருந்தது. 'தேவமொழி'யில் உள்ள நூல்கள் என்ற காரணத்திற்காக, மக்களுடைய (மாநில) மொழிகளிலே அவற்றை மொழிபெயர்க்கக் கூடாதென்றனர் வடமொழியாளருள் வைதிகர் சிலர். அதனால், இந்து மதத்துக்குரிய வேதங்களும் சாத்திரங்களும் இந்துக்கள் எல்லோருக்கும் பொது உடைமை யாகாமலிருந்தன. சம்ஸ்கிருத மொழியின் மூலம் அவற்றைப் பயிலுவதிலுள்ள கஷ்டம் ஒருபுறமிருக்க, மதப்பற்றுக் காரணமாகப் பயில முன்வந்தாலும், சாதி வெறி பயமுறுத்தியது. அதனால் சமய நூலறிவு ஒரு சாராரின் தனி உடைமையாக இருந்தது. இந்த நிலையானது, வடமொழியின்பால் வெறுப்பை வளர்த்தது. இதற்கு விவேகானந்தரும் விலக்காக இல்லை. இதோ சான்று :

"ஒரு சூத்திரன் வேதத்தைக்கேட்டால் அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று; அவனுக்கு ஒரு வரியாவது ஞாபகமிருந்தால், அவன் நாக்கை வெட்டி விடு; இம்மாதிரி கோரமான மிருகத்தனமான வாசகங்கள் சில புத்தகங்களில் இருக்கின்றன. இவை பிசாசுத்தனமானவை. மிருகத்தனமானவை யென்று சொல்லவேண்டிய அவசிய

Koviloor Digital Library

மில்லை. இம்மாதிரிப் பிசாசுகள் முற்காலத்திலும் தோன்றி யிருக்கிறார்கள். எல்லாக் காலங்களிலும் இத்தகைய பிசாசு கள் இருந்திருக்கிறார்கள்."

—இந்தியப் பிரசங்கங்கள் ; பக். 192.

வடமொழி நூல்கள் சிலவற்றில் காணப்படுகின்ற இத் தகைய சாதி வெறிக் கருத்துக்கள், சீர்திருத்தவாதிகளான பெரியோர்கள் அம்மொழியில் வெறுப்புக் கொள்ளக் காரண மாயின. மாபெரும் சீர்திருத்தவாதியாகிய புத்தபெருமான், சம்ஸ்கிருதத்தை வெறுத்து, அம்மொழியிலுள்ள உயர்ந்த கருத்துக்களை மக்கள் மொழியான பாலிமொழியில் பரப்பினார்.

சமய—சமூக சீர்திருத்தப் புரட்சியாளரான நம் அடிகளார் காலத்தில், இஸ்லாமிய—கிறித்துவ மதங்கள் தமிழகத்தில் நாள்தோறும் பரவி வந்தன. அம் மதங்களினுடைய வேதங் களான குர்-ஆனும், பைபிளும் அவ்விரு மதங்களைச் சார்ந்த மக்கள் அனைவருமே அவரவர் சொந்த மொழியில் பயிலவும், பிறருக்குப் பயிற்றுவிக்கவும் உரிமையாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையோடு, இந்து மத வேத சாத்திரங்கள் இந்துக்கள் எல்லோருக்கும் பயிலவும் ஓதவும் உரிமையாக இல்லாதிருந்த நிலையை ஒப்பிட்டுப் பார்த்து, மனம் வருந்தியிருப்பார் வள்ள லார். அதனாற்றான்,

"பலநாள் நைஷ்டிக அதிகரணம் பூண்டுபோதகாசியர் சந்நிதியில் தாழ்ந்து, சகபாடிகளோடு சூழ்ந்து, சுர—ஒலி பேதங்களைத் தேர்ந்து, உழைப்பெடுத்து ஓதினாலும், பாடமாவதற்கு அருமையாயும், பாடமானாலும் பாஷியம், டீக்கா, டுக்கா, டிப்பணி முதலிய உரைகோள் கருவிகளைப் பொருள் கொள்ளத் தேட வேண்டியதாயும், அவ்வவை களைத் தேடி கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப் பாஷியக்காரர்கள் வியாக்யான கர்த்தாக்கள், டீக்கா வல்லபர்கள், டூக்கா சூசகர்கள் முதலிய போதக, உப போதகாசாரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும் இருக்கிற ஆரிய பாஷை..."

-பா. பி. ப. பு. 3; பக். 9.

என்று சலிப்புடன் கூறினார், சன்மார்க்க சங்க ஸ்தாபகரான வள்ளலார்.

நான்மறையாளரான பாரதியாரும் இந்தக் குறையை உணர்ந்து, இதனை அகற்ற வழிகாட்டினார்:

Koviloor Digital Library

"பிராமண வருணத்தார் ஒரு ஜன சமூகத்தின் அறிவுச் செல்வத்திற்குக் காவலர்கள்; அறிவுப் பயிருக்கு உழவர்கள். அவரவர் தத்தம்மால் இயன்ற சாஸ்திரங்களைப் படித்துக் கொண்டு, அவற்றை வெவ்வேறு வருணத்தாருக்கு உரிமை நோக்கிக் கற்பிக்க வேண்டும். அவ்வாறு கற்பிப்பதற்குத் தமது உணவு மட்டிற்கு மேம்பட்ட எவ்விதக் கிரயமும் வாங்கலாகாது."

—'ஞான ரதம்'.

சம்ஸ்கிருத நூல்களிலுள்ள சிலபல பிற்போக்கான கருத்துக்கள் பற்றிக் காந்தியடிகள் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றைத்தாம் இயற்றிய 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலில் தந்துள்ளார் திரு. வி. க. அவை வருமாறு:

"புரோகிதர்கள் வேதத்தின் எழுத்தைப் பொருளாகக் கொண்டு கருத்தை மறந்து விட்டார்கள்."

"சம்ஸ்கிருதத்திலுள்ளன வெல்லாம் வேதமொழிகள் என்னும் மூட நம்பிக்கையில் மயங்கியிருக்கிறோம். அம் மூட நம்பிக்கையை ஒழித்துப் பெண் மக்கள் தாழ்ந்தவர்கள் என்னுஞ் சிறுமை எண்ணத்தைக் களைவோமாக."

"மனு ஸ்மிருதியின்கண் உலகத் தோற்றத்தைப் பற்றியும் அதையொட்டிய பிறவற்றைப் பற்றியும் கூறியுள்ள பகுதிகளில் எனக்கு நம்பிக்கை விழவில்லை. அந் நூலைப் படித்ததன் பயனாகச் சிறிது நாத்திக உணர்வு கூட அரும்பிற்று."

அடிகளார் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சமுதாயத்தில், சாதி—சமய—மத—வருண—குல வேறுபாடுகள் அங்கீகரிக்கப்படவில்லை. ஆயினும், மொழி வேறுபாடு ஒன்றுமட்டும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மொழி வேறுபாடு, இயற்கையின் நியதி—இறைவனுடைய படைப்பு. ஆகவே, அந்த வேறுபாட்டினை அடிகள் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆயினும், மொழிவழிப்பட்ட பூசலையோ, போராட்டத்தையோ அவர் அங்கீகரிக்கவில்லை. அவ்வகையில் சம்ஸ்கிருத மொழித் துவேஷம் அடிகளுக்கு உடன்பாடன்று. அஃது ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்குத் தடையென்றே கருதினர்.

மொழிவழிப் பிரிவினை

சம்ஸ்கிருத மொழியிடத்துள்ள குறைபாடுகளை அடிகள் எடுத்துக் காட்டியது, சமத்துவத்திலும், சமய—சமுதாயச்

Koviloor Digital Library

சீர்திருத்தங்களிலும் அவருக்கிருந்த ஆர்வத்தினாலாகும். அவ்வகையில், புத்தர்—இராஜா ராம்மோகனர் போன்ற சீர்திருத்த வாதிகளைப் பின்பற்றினாரென்றே சொல்லலாம்.

பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டுரிமை உலகத்தின் முன்னோடியாக விளங்கும் சோவியத் ருஷ்யாவில்கூட, முதலாளித்துவச் சமுதாயத்தில் நிலவிய மதம் வர்க்கம் முதலிய வேறுபாடுகளை அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்க மறுத்திருந்தும், மொழி வேறுபாட்டினை மட்டும் அங்கீகரித்து, அந்த அடிப்படையிலேயே சோவியத் குடியரசுகளின் கூட்டரசை அமைத்திருப்பது இங்குக் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

தடைகள் தகர்ந்தன

சம்ஸ்கிருத மொழியின் பெயரால் இடைக்காலத்தில் என்ன நடந்திருந்தாலும் சரி; அவையெல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாய்ப் போய்விட்டன. இன்று சம்ஸ்கிருத மொழி, இந்துக்களுக்கேயன்றி, மனித குலம் முழுவதற்குமே பொதுச் சொத்தாகிவிட்டது. வேதம் பயின்ற வைதிகர்களால் 'நீசர்கள்' என்று கருதப்பட்ட பரங்கி(வெள்ளை)யரும் வடமொழி பயின்று, அம்மொழியிலுள்ள வேதாகம சாத்திரங்களில் ஆழ்ந்த ஞானம் பெற்று, ஆராய்ச்சியும் நடத்துகின்றனர். இதற்கு **மாக்ஸ்முல்லர், கால்டுவெல்** போன்றவர்கள் சான்றாவர். நால்வருணத்தவருள், வடமொழி நூல்களை ஓதவும் ஓதுவிக்கவும் இயற்கையாகவே உரிமை பெற்றுள்ள அந்தண வருணத்தவரேயன்றி, மற்றுமுள்ள மூன்று வருணத்தாரும் அந்த உரிமையை அடைவதை, அனுபவிப்பதை இன்று ஆட்சேபிப்பார் எவருமிலர். மனுநீதி சாத்திரம் விதித்த தடையைத் தகர்த்தெறிந்து, பெண்களும் வடமொழி பயின்று வருகின்றனர்.

நந்தன் குலத்தவரான டாக்டர் அம்பேத்கர் அவர்கள் வடமொழி கற்று, அதன் வாயிலாக வேதாகமக்கலைகளைப் பயின்றாரென அறிகிறோம்.

நால்வேதச் சுருதிகள், ஸ்மிருதிகள் ஆகியவை யெல்லாம் மக்களுடைய சொந்த மொழிகளில்—குறிப்பாக, தமிழ் மொழியில் எதிர்ப்பின்றி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இத்துறையில் ஆரிய சமாஜிகள் செய்துள்ள பணி பாராட்டத் தக்கதாகும்.

Kovilur Digital Library

தேவ மொழி எது, ஏது?

சம்ஸ்கிருதத்திலுள்ள மூல நூல்களேயன்றி, அவற்றிற்கு முற்போக்கு மணமூட்டும் வியாக்கியான—விமர்சன நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இன்னுஞ் சொன்னால், வேதியர்களுள் மிகப் பெரும்பாலோர் வேதத்தை மறந்து, சம்ஸ்கிருத மொழியிடமிருந்த பக்தியை ஆங்கில மொழிக்கு மாற்றிக் கொண்டுவிட்டனர். இதனை 'மறவன் பாட்'டில்,

" முன்னாளில் ஐயரெலாம் வேதம்—ஓதுவார்,
மூன்றுமழை பெய்யுமடா மாதம்;
இந்நாளி லேபொய்ம்மைப் பார்ப்பார்—இவர்
ஏதுசெய்தும் காசுபெறப் பார்ப்பார்"

என்று பாரதியார் கூறியிருப்பதாலும் அறியலாம்.

வடமொழிபற்றிப் புத்தர், இராஜா ராம்மோகனர், இராமலிங்கர் ஆகிய சீர்திருத்தப் புரட்சியாளர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் அல்லது கண்டனங்கள் கடந்துபோன காலத்தின் வரலாற்றுச் செய்திகளே யொழிய, இன்று வாழும் நமக்கு வழி காட்டுவனவல்ல. மொழித் துறையில் வளர்ந்துள்ள நவீன ஆராய்ச்சியறிவு, எந்த ஒரு மொழியையும் தேவமொழியாக ஏற்கவில்லை. எல்லா மொழிகளும் மக்களிடமே பிறந்து, மக்களாலேயே வளர்க்கப்பட்டுள்ளன என்று மொழியாராய்ச்சி வல்லுநர்கள் வெளியிட்டுள்ள உண்மையை மறுக்க அறிவு துணைபுரியவில்லை.

வள்ளலார், வடமொழி பயில்வதிலுள்ள இன்னல்களை வெறுப்புக்கலந்த உணர்ச்சியுடன் விமரிசித்தது, அம்மொழியிலுள்ள தத்துவக் கலைகளை—தருமநீதிக் கருத்துக்களை முற்றிலும் புறக்கணிக்குமாறு தூண்டியதாகாது. அவற்றையெல்லாம் தமிழின் வாயிலாகப் பயிலவேண்டும் என்று கூறியதாகவே கொள்ள வேண்டும். உண்மையும் அதுதான். அடிகளாரின் 'அருட்பெருஞ் சோதி அகவல்'—'மகாதேவ மாலை'—'ஜீவகாருண்ய ஒழுக்கம்' ஆகியவை வடமொழி நூல்களிலுள்ள தத்துவங்கள்—நீதிகள் முதலியவற்றைப் பிழிந்தெடுத்த சாறு என்றே சொல்லலாம்.

எல்லாந் தமிழில்...

அடிகளார், எதிலுமே சமரச மனோபாவத்தை வெளிப்படுத்தியவர். சமயங்கள் — மதங்கள்—தத்துவங்களிடையே மட்டுமன்றி, பரஸ்பரம் முரண்பட்டுச் சண்டையிடும் சகல சக்திகளையும் சமரசப்படுத்தவே அடிகள் விரும்பினர். அவ்

Koviloor Digital Library

வகையில் அவர், வடமொழிக்கும் தென்மொழிக்கு மிடையேயும் சம நிலையில் சமரசத்தை விரும்பினார் என்று துணிந்து சொல்லலாம்.

ஆன்ம ஞானக் கல்வி முழுவதையும் தமிழின் வாயிலாகவே பயில முடியுமென அடிகள் நம்பினாலும், தத்துவ உலகில் பல் வேறு மொழியினரையும் பிணைக்கும் கலாசாரப் பொது மொழி யாகச் சம்ஸ்கிருத மொழியை அவர் ஏற்றுக்கொண்டார். அவர் காலத்தில் தமிழ்நாட்டில் ஆங்கிலம் ஓரளவு பரவியிருந்த தென் ருலும், தத்துவ ரீதியான ஒருமைப்பாட்டிற்கு ஆங்கில மொழி தகுதியற்றதென அவர் எண்ணியிருக்க வேண்டும். அதனால், வடலூரில் தாம் நடத்தி வந்த சாஸ்திர பாடசாலையில், தமிழ்—ஆங்கிலம் ஆகிய மொழிகளோடு, சம்ஸ்கிருத மொழியையும் சன்மார்க்க சங்கத்தாருக்குக் கற்பிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

வடமொழிச் சொற்கள் கலவாத தனித் தமிழ்ப்பற்று, சமயத் துறையில் சாத்தியமன்று என்பதை அடிகள் உணர்ந்திருந் தார். நவீன விஞ்ஞானக் கலையறிவைத் தமிழில் போதிக்க வேண்டுமானால், கலைச்சொற்களை ஆங்கிலத்திட மிருந்து கடன் வாங்கத்தான் வேண்டும். அதுபோலச் சித்தாந்த—வேதாந்தத் தத்துவங்களைத் தமிழில் போதிக்க வேண்டுமானால், சம்ஸ்கிரு தத்திடமிருந்து கலைச் சொற்களை இரவல் பெறத்தான் வேண்டும். இந்த உண்மையை உணர்ந்த காரணத்தால், தேவைப்படும் வடமொழிக் கலைச் சொற்களைத் தமிழில் கலந்து அருட்பாடல்கள் இயற்றினார். சான்றாக, 'மகாதேவ மாலை'யில் இரண்டு பாடல்களைப் பார்ப்போம்:

"வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனாதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந் தேவே."

"தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த

Koviloor Digital Library

சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறென்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளுந் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய்த் தெய்வதமாய் இலங்குந் தேவே.''

மற்றும் 128 வரிகளைக் கொண்ட 'திருவடிப் புகழ்ச்சி' முழுவதும் தமிழ் எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்ட வடமொழிப் பாடல்கள் போன்று அமைந்துள்ளன. சான்றாகச் சில வரிகளைப் பார்ப்போம்:

'' பரசிவஞ் சின்மயம் பூரணஞ்
சிவபோக பாக்கியம் பரமநிதியம்
பரசுகந் தன்மயஞ் சச்சிதா
னந்தமெய்ப் பரம ஏகாந்தநிலயம்
பரமஞா னம்பரம சத்துவம
கத்துவம் பரமகை வல்யநிமலம்
பரமதத் துவநிரதி சயநிட்க
ளம்பூத பௌதிகா தாரநிபுணம்.''

இன்னும், தமிழும் சம்ஸ்கிருதமும் சம அளவில் கலந்த மணிப்ரவாளத்தில் அடிகள் எழுதிய தனிப் பாடல் வருமாறு:

'' காராய வண்ண மணிவண்ண கண்ண கனசங்கு சக்ர தரநீள்
சீராய தூய மலர்வாய நேய ஸ்ரீராம ராம வெனவே
தாராய வாழ்வு தருநெஞ்சு சூழ்க தாமோத ராய நமவோம்
நாராய ணாய நமவாம ணாய நமகேச வாய நமவே.''

தனித் தமிழில்...

சில நூறு தத்துவப் பாடல்களைத் தவிர, மற்றுள்ள ஆயிரமாயிரம் பக்திப் பாடல்களை வடமொழிச் சொற்கள் அதிகம் கலவாத தூய தமிழிலேயே இயற்றியுள்ளார் வள்ளலார். அதற்குக் கீழ்வரும் பாடல் சான்று:

'' கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே

Koviloor Digital Library

ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே."

இராமலிங்க வள்ளலார், தமிழ் மொழியின்பால் தமக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலால்,

" பற்றுஞ் செழுந்தமிழால் பாடுகின்றோர் செய்தபெரும்
குற்றங் குணமாகக் கொள்ளுங் குணக்கடலே!"

என்றும்,

" மெய்யடியார் சபைநடுவே
எந்தையுனைப் பாடிமகிழ்ந்து இன்புறவே வைத்தருளிச்
செந்தமிழில் வளர்க்கின்றாய்,"

என்றும் பாடினார். வள்ளலார் வெளியிடும் இந்தக் கருத்தினையே, "முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான்" என்று முருகனைச் சிறப்பித்துப் பாடி வலியுறுத்துகின்றார் அருணகிரி நாதர்.

இசைப் பாடல்கள்

பத்தொன்பதாம் நூற்றாண்டிலே இசைத் தமிழ் வளர்த்த பெரியார்களுள் தலைசிறந்து விளங்குகின்றார் இராமலிங்கர்.

"தமிழில் இசைப் பாடல்கள் இல்லை" என்று சொல்வோர் இன்றுமிருக்கின்றனர். இந்த நிலையில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே இசைப் பாடல்கள் பலவற்றை அடிகள் தமிழில் இயற்றினாரென்றால், அதனைத் தமிழ் வளர்ச்சிக்குரிய தொண்டு என்றுதானே கூறவேண்டும்.

இராமலிங்கர், இறைவழிபாட்டின்போது இசைக் கருவி கொண்டு ஒலியெழுப்பி ஆரவாரம் செய்வதை அடியோடு வெறுத்தார். அதனாலேயே, அடிகள் இசைத் தமிழின் எதிரியாக இருந்தாரெனக் கருதிவிடக் கூடாது.

" நவின்றசங் கீதமும் நடமும்
கண்ணுறக் கண்டு கேட்டஅப் போதும்
கலங்கிய கலக்கம்நீ அறிவாய்,"

என இறைவனை நோக்கிப் பாடிய அவரே,

"ஆண்டவரை நமது வாயினால் வாயார வாழ்த்துவது தவிர, பிறரைக் கொண்டு வேறு பாஷைகளில் அர்த்தம் விளங்காமல், அர்ச்சனை முதலியன செய்தல் அவ்வளவு முறையானதல்ல,"

Koviloor Digital Library

என்றும் கூறினர். ஆம்; ஒவ்வொருவரும் தாமே பாடியும் விண்ணப்பித்தும் இறைவனை வழிபடுவதற்கு இசைக் கருவிகள் தடையாக இருக்கின்றன என்பதனாலேயே அவற்றை வெறுத்தார் இராமலிங்கர். கீர்த்தனைகள் பாடிய பெருமான் இசைக் கருவிகளின் எதிரியாவாரா? பண்ணோடு கலந்து பாடுகின்ற இசை ஞானமும் அடிகளாருக்கு இருந்ததென்று சொல்லப்படுகின்றது. அவர் இயற்றியுள்ள இசைப் பாடல்களே இதற்குச் சான்றாக இருக்கின்றன.

வள்ளலார் காலத்தில் தமிழ் உரைநடை போதிய அளவு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அந்தக் குறையை அகற்றி, அதிலும் தமிழுக்குப் புது வாழ்வு தரப் பணி புரிந்தார், ஓதாது உணர்ந்த வள்ளற் பெருமான்.

மனுநீதி வாசகம்!

உரைநடையில் அடிகள் இயற்றிய முதல் நூல் 'மனு முறை கண்ட வாசகம்' ஆகும். அடிகளாருடைய உரைநடை, பண்டிதரே யன்றிப் பாமர மக்களும் படித்துச் சுவைக்கத் தக்க வகையில் எளிமையும் இனிமையு முடையதாகும். சான்றாக, 'மனுமுறை கண்ட வாசகத்தி'ல் தன் மகன் வீதிவிடங்கன் பசுக்கன்றின்மீது தேர் செலுத்தி அதனைக் கொன்றான் என்ற செய்தி கேட்டு, மனுநீதிச் சோழன் வேதனையால் கூறும் வாசகத்தைப் பார்ப்போம்:

"நாம் அரசாட்சி செய்ய ஏற்பட்ட நாள் தொட்டு இந்நாள் வரையிலும் எவ்வுயிரும் எவ்விதத்திலும் யாதொரு குறையுமில்லாமல் வாழ்ந்து மகிழ்ந்திருக்க, நீதியுடன் முறை தவறாது செங்கோல் செலுத்தி வரும்படி சிவாநுக்கிரகம் பெற்றோமே என்பதுபற்றி ஒரு நாழிகைக்கு முன் வரையிலும் உண்டாயிருந்த மனக்களிப்பை யெல்லாம் மண்ணிற் கவிழ்த்தேனே!

"நாமும் பழி பாவங்களுக்குப் பயந்தே அறநெறி தவறா அரசு செலுத்தி வருகிறோம். பழைய தரித்திரனுக்குப் பணம் கிடைத்ததுபோல் நமக்கும் சிவாநுக்கிரகத்தால் ஒரு சிறுவன் பிறந்தான். அவனும் கற்றவர் மகிழக் கல்வி கேள்விகளில் நிறைந்து பண்பும் பருவமும் உடையவனானன். 'இனி நமக்கென்ன குறை' என்று எண்ணி எண்ணி இறுமாப்படைந்தேனே! 'புத்திரப் பேறு பெற்றுப் புனிதனானோம்' என்று பூரித்திருந்தேனே! 'நமது புத்திரன் இளவரசுப் பட்டத்திற்கேற்றவனானன்' இனிக் கல்யாணஞ்

Koviloor Digital Library

செய்விப்போம்' என்று கனவு கண்டிருந்தேனே! 'நமது புத்திரன் நற்குணங்களை யுடையவனாக விருக்கின்றான். பெற்றெடுத்த நமது பேர் கொண்டு வருவான்' என்று மனோராச்சியம் பண்ணி மகிழ்ந்திருந்தேனே! இளங்கன்று எதிர்வரவுங் கண்கெட்டுக் கருத்தழிந்தவன் போல் தேரை நடத்தித் தீராப்பழி பூண்டான்.

"ஐயோ! இவன் என் செங்கோலைப் பிடிக்கத் தக்க செல்லப்பிள்ளை யாகாமல் தென்னம்பிள்ளை யானானே!

"ஆ! நான் நீதி தவறாது அரசு செய்கிறேன் என்பதை நினைத்தால் எனக்கே ஏளனமாக இருக்கின்றதே! சேங் கன்றைத் தெருவிற் சிதைக்கவும் ஒருமித்திருந்த என் செங் கோலை அளவுகோ லென்பேனோ! எழுதுகோ லென்பேனோ! ஏற்றக்கோ லென்பேனோ! கத்திரிக்கோ லென்பேனோ! கன் னக்கோ லென்பேனோ! குருடன்கோ லென்பேனோ! கொடுங்கோ லென்பேனோ! துடைப்பக்கோ லென்பேனோ! துலாக்கோ லென்பேனோ! மரக்கோ லென்பேனோ! வைக்கோ லென்பேனோ! அல்லது இன்று இறந்த பசுங் கன்றாகிய பிரேதத்தைப் புரட்டிச் சுடுகின்ற பிணக்கோ லென்பேனோ! என்ன கோலென்று எண்ணுவேன்!"

வள்ளலார், வேறு நூல்களையும் உரை நடையில் இயற்றி யுள்ளார். அவையனைத்தும் வியாக்கியானங்களும், விண் ணப்பங்களுமாகும். "தொண்ட மண்டலமா, தொண்டை மண் டலமா?" என்று புலவர்களிடையே எழுந்த வாதப் போரில், அடிகளார் 'தொண்ட மண்டலம்' என்றே தீர்ப்பளித்தார். அந்த வகையில் 1855ல், 'தொண்ட மண்டல சதகம்' என்ற பெயரில் படிக்காசுப் புலவர் இயற்றிய நூலைப் 'பழைய நூற்பெயரிலக் கணம்'—'வழிபடு கடவுள் வணக்கப் பாட்டுரை' என்ற தம் உரைப்பகுதிகளுடன் வெளியிட்டார்.

அடிகளார் இயற்றிய 'ஜீவகாருண்ய ஒழுக்கம்'-'சன்மார்க்க விண்ணப்பங்கள்' என்ற உரைநடைக் கருத்தோவியங்கள் அவரது தமிழ் உரைநடையின் பெருமையை விளக்கும்.

மூவரில் முதல்வர்

19ஆம் நூற்றாண்டில் உரைநடைத் தமிழுக்குப் புதுவாழ்வு தந்த பெரியார் மூவராவர். அவர்கள்—இராமலிங்கர், யாழ்ப் பாண நல்லூர் ஆறுமுக நாவலர், மாயூரம் முனிசீப் வேதநாய கம் பிள்ளை ஆகியோராவர். இந்த மூவரும் சம காலத்தவர் என்

Koviloor Digital Library

பதோடு, சற்றேறக் குறையச் சமவயதினராகவும் இருந்தனர். நாவலரைவிட வயதில் பத்து மாதங்கள் இளையவர் வள்ளலார். வள்ளலாருக்கு மூன்று ஆண்டுகள் இளையவர் வேதநாயகம் பிள்ளை.

வள்ளலார், தாம் உரைநடைத் தமிழில் இயற்றிய 'மனு முறை கண்ட வாசகம்' என்ற நூலை வெளியிட்டது, 1854ஆம் ஆண்டிலாகும். அதற்கும் முன்னதாக, 'ஒழிவிலொடுக்கம்' என்ற நூலை—அதன் பாடலுக்குத் தாம் இயற்றிய உரை யோடு—1851ஆம் ஆண்டில் வெளியிட்டார் வள்ளலார்.

ஆறுமுக நாவலர், உரைநடை நூல் வெளியிடத் தொடங் கியது 1856ஆம் ஆண்டுக்குப் பிறகாகும்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை, தமது மொழி பெயர்ப்பான உரைநடைத் தமிழ்நூலை 1862ல்தான் வெளியிட்டார். அவரு டைய 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற உரைநடை நாவல் 1876ல் வெளியானது. ஆகவே, உரைநடைத் தமிழை வளர்த்த பெருமைக்குரிய மூவருள் நம் இராமலிங்கப் பெருமானே முதல் வராக, மற்ற இருவருக்கும் வழிகாட்டியாக நிற்கின்றார். இதனை, அரசினர் ஆதரவோடு வெளிவந்துள்ள 'தமிழ்க் கலைக் களஞ் சியமு'ம் அதிகார பூர்வமாக அங்கீகரித்திருக்கிறது. அந்தப் பகுதி வருமாறு :

> "பத்தொன்பதாம் நூற்றாண்டில் சமயத் துறையில் பெருஞ்சுடராய்த் திகழ்ந்தவர் இராமலிங்க சுவாமிகள். அவர் பாடியவை பக்திப் பாடல்களே எனினும், அவற்றுள் பல, இலக்கிய நயம் மிக்கவை. அப்பாடல்களின் தொகுப்பே அருட்பா எனப்படுவது. எளிய இனிய நடையில் உருக்க மான உணர்ச்சியுடன் பாடப்பட்டவை அவை.
>
> "ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் ஒன்று அவருடைய உரைநடையின் வளத்தைக் காட்டுகிறது.
>
> "உலகத்துச் சான்றோர்களில் ஒருவராகிய அவர் பாடிய பாட்டுக்கள் எளிய நடையில் இயன்று விழுமிய கருத்துக்களை விளக்குகின்றன ! அறிவும் உருக்கமுமே அவருடைய பாட்டுக்களின் சிறப்பாகும்."

—தொகுதி 5; பக்கம். 448.

சங்க கால, புராண காலத் தமிழ் இலக்கியங்களில் மட்டு மின்றி, மூவாயிர மாண்டுக்கு முற்பட்டதென்று கருதப்படும் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் இன்னொரு

Kovilloor Digital Library

வரை இணை சொல்ல முடியாத அளவில் இராமலிங்கர் பெரும் புலமை பெற்றிருந்தார். இதனை, அவர் எழுதியுள்ள வியாக்கியானங்களில் காணலாம். 'இருபதாம் நூற்றாண்டுக் கம்பர்' எனப் புகழ்பெற்ற மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு சமயம் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது,

"இராமலிங்க சுவாமிகள் துறவடையாமல் நாவலர், வித்வான் முதலிய பெயர்களை ஏற்றிருந்தால், தங்களுக்கு இலக்கண வித்வான் என்னும் பெயர் கிடைத்திராது,"

என்று கூறியதாக அறிகிறோம். அடிகளார், அவர் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்களால் 'முத்தமிழ் வல்ல ஞானாசிரியர்' என்று அழைக்கப்பட்டார்.

கால்டுவெல் அதிர்ஷ்டம் !

உரைநடையில் தத்துவ நூல்கள் பலவற்றை எழுதி வெளியிடுவதற்குத் திட்டமிட்டிருந்தார் அடிகளார். அந்த நூல்கள் இன்னின்னவை என்றும் பட்டியல் தொகுத்துத் திருவருட்பா—முதல் ஐந்து திருமுறை வெளியீட்டிலேயே விளம்பரப்படுத்தியிருந்தார். அந்தப் பட்டியல் வருமாறு :

(1) கலாந்த விளக்கம், (2) யோகாந்த விளக்கம், (3) நாதாந்த விளக்கம், (4) போதாந்த விளக்கம், (5) வேதாந்த விளக்கம், (6) சித்தாந்த விளக்கம், (7) அண்ட விளக்கம், (8) பிண்ட விளக்கம், (9) சுத்தசிவ ராஜ்யம், (10) பரமசிவ ராஜ்யம், (11) மந்திரக் கொத்து, (12) மகாவாக்கிய வகை, (13) பொது வேதம், (14) தத்துவ விருத்தி, (15) பிரகிருதி விருத்தி, (16) இயல் வகை, (17) அளவை வகை, (18) ஞான வகை, (19) இலக்கண விருத்தி, (20) தருக்க விருத்தி, (21) தென்மொழி விளக்கம், (22) வடமொழி விளக்கம், (23) கலை மரபு.

இந்த நூல்களையெல்லாம் அடிகளார் வெளியிட்டு முடித்திருந்தால், சமயத்துறையில்—குறிப்பாக, தத்துவக் கலைகளில் தமிழ்மொழி பல படிகள் முன்னேறியிருக்க முடியும். குறிப்பாக, வடமொழி விளக்கம்—தென்மொழி விளக்கம் என்ற இரண்டு நூல்களேனும் வெளிவந்திருந்தால் அந்த இரு மொழிகள் பற்றிய ஆராய்ச்சி அறிவு வளர்ச்சி பெற வாய்ப்புக் கிடைத்திருக்கும். தமிழின் துரதிருஷ்டம் அவை வெளிவருவதற்கு முன்பே வடலூர் முனிவருக்கு விடைகொடுத்து விட்

Kovilor Digital Library

டோம். அதனால், வடமொழிக்கும் தென்மொழிக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந் தறிவித்துப் புகழ்பெறும் பேறு கால்டுவெல் துரைமகனாருக்குக் கிடைத்து விட்டது.

மகாவித்துவானும் மயங்கினார் !

அடிகளார் வடமொழியில் பெற்றிருந்த புலமை அவர் காலத்தில் வாழ்ந்திருந்த சங்கராசாரியரும் வியக்கத்தக்கதாயிருந்தது. அதுபோல, அவர் தமிழ் மொழியில் பெற்றிருந்த புலமை கண்டு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களும் வியந்தார். ஒரு சமயம் பிள்ளையவர்கள் நம் அடிகளாரை அணுகி, மாணிக்கவாசகர் இயற்றியருளிய திருவாசகத்தின் முதல் அகவலுக்குப் பொருள் கூறுமாறு வேண்டினார். அதற்கிணங்கச் சுவாமிகளும் அம் முதல் அகவலில் முதல் சொல்லாகிய 'நமச்சிவாய' என்பதன் முதலிலுள்ள 'ந' என்னும் ஓர் எழுத்திற்குமட்டும் இரண்டு மணிநேரம் 64 லட்சணங்கள்வரை எடுத்தோதினார். அவற்றை மனத்தில் கொள்ள முடியாது திகைத்த மகாவித்துவான் நம் அடிகளாரை வணங்கி, "இனிக் கேட்பதற்கு எமக்கு ஆற்றலில்லை" என்று கூறிச் சென்றாராம்.

சுருங்கச் சொன்னால், இராமலிங்க வள்ளலார், தென்மொழி—வடமொழி ஆகிய இரு மொழிப் புலவர்; கவியரசர்; தமிழ் நூல் பதிப்பாசிரியர்; உரையாசிரியர்; வசனகர்த்தா; போதகாசிரியர்—ஆகிய இத்தனை தகுதிகளையும் ஒருங்கே பெற்றிருந்தார்.

Koviloor Digital Library

ஆன்மநேய ஒருமைப்பாடு

அருட்பிரகாச வள்ளலார் 'ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை' என்ற புதிய கோஷத்தை எழுப்பினர். அந்தக் கோஷத்தின் அடிப்படையில் உயிர்களிடையே சகோதர உணர்வை வளர்க்க முயன்றார். அடிகளாரின் குறிக்கோள் பலவாயினும், அவற்றுள் தலையாயது—மற்ற எல்லாக் குறிக்கோள்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவது ஆன்மநேய ஒருமைப்பாடு என்பதாகும். "சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை" என்று அடிகளாரே கூறுகின்றார்.

சன்மார்க்க நெறியிற் சாராதாரைத் 'துன்மார்க்கர்' என்றே கூறுவார் தாயுமானவர். இதனைச் "சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்கனேனையும் தண்ணருள் கொடுத்தாள்வையோ!" என்ற அவரது வாக்காலேயே அறியலாம். இங்குத் தாயுமானவர் வலியுறுத்துவது சித்தாந்த—வேதாந்தங்கள் கலந்த சமய சன்மார்க்கமேயாம். வள்ளலார், சமயங்கடந்த 'சமரச சுத்த சன்மார்க்கம்' என்ற புதுநெறியையே போதித்தார்.

ஆன்மநேய ஒருமை

உயிர்கள் பலவகையான தேகங்களைப் பெற்று வாழ்கின்றன. அவற்றை, மனிதர்—மிருகம்பறவை—நீர் வாழ்வன—தாவரம் எனப் பாகுபடுத்தி யுள்ளனர். அறிஞர் பெருமக்கள். அவை அனைத்தும் பரமான்மாவால் படைக்கப்பட்ட ஜீவான்மாக்கள் என்பது சமயக்கொள்கை. அதனால், அந்த உயிர்களிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு காண்பதனைத் தம் கடமையாகக் கொண்டார் வள்ளலார். "உலகம், ஆதி பகவனுகிய இறைவனை முதலாக உடைத்து" என்றார் திருவள்ளுவர். அந்த முதற் பொருளைத் தலைமையாகக்கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சமுதாயத்தைக் காண விரும்பினர் வள்ளலார். இதுபற்றித் தாம் இயற்றிய 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்ற நூலில் அடிகளார் தரும் விளக்கம் வருமாறு :

"சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய கடவுள் இயற்கை உண்மை ஏகதேசங்களாகிக் கடவுள் அருட்

Koviloor Digital Library

சக்தியால் பூத காரிய தேகங்களில் வருவிக்கப்பட்டபடி யால் இச் சீவர்களெல்லாம் ஒருரிமை இனத்தவர்களே யாகும்.''

''சீவர்கள் எல்லாம் ஒரு தன்மையாகிய இயற்கை உண்மை ஏக தேசங்களாய்ச் சர்வ சக்தியுடைய கடவு ளால் சிருஷ்டிக்கப்பட்டபடியால், ஒருரிமை உள்ள சகோ தரர்களே யாவர்.''

மேலே எடுத்துக் காட்டிய இரண்டு பகுதிகளும் ஒரே கருத்தை வலியுறுத்துவனவாக இருப்பினும், முன்னதில் உயிர் கள் அனைத்தையும் ஒரே இனமாகக் குறிப்பிடுகின்ருர். பின்ன தில், அந்த இன உரிமை பற்றிச் சகோதர ஒருமைப்பாடு இயற் கையாக இருப்பதை எடுத்துக் காட்டுகின்ருர்.

வாயே பறையானது!

''உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்த வேண்டும்' என்பது ஜிவகாருண்யம். அடிகளார் அதனினும் ஒருபடி மேலே சென்று தேக பேதங்களை மறந்தவராகி, உயிர்களை யெல்லாம் ஒரே இனத்தைச் சார்ந்தவையாகக் கூறுகின்ருர். அது, ஆன்மநேய இனமாகும். அந்த அடிப்படையில் கருணை யையே மதமாகக் கொண்ட ஒரு புத்தம் புதிய உலகை அமைக்க முயன்ருர் வள்ளலார். அதனைத் தம கண்ணுரக் கண்டு மகிழும் பேற்றினைத் தருமாறும் கடவுளைப் பிரார்த் தித்தார்.

'' கள்ளவா தனையைக் களைந்தருள் நெறியைக்
காதலித்து ஒருமையில் கலந்தே
உள்ளவாறு இந்த உலகெலாம் களிப்புற்று
ஓங்குதல் என்றுவந்து உறுமோ
வள்ளலே அதுகண்டு அடியனேன் உள்ளம்
மகிழ்தல்என் ருேஎனத் துயர்ந்தேன்
ஒள்ளியோய் நினது திருவுளம் அறிந்தது
உரைப்பதுஎன் அடிக்கடி உனக்கே.''

'' உலகத்திரளெலாம் மருவறக் கலந்து
வாழ்வதற்கு வாய்த்த தருணம் இதுஎன்றே
வாயே பறையாய் அறைகின்றேன்.''

என்னும் வரிகளில், தமது லட்சியச் சித்திரத்தைக் காட்சிப் படுத்துகின்ருர் வள்ளற் பெருமான்.

Koviloor Digital Library

அடிகளாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை, பேதங் கடந்த அல்லது பேதங்கள் அற்ற அபேத சித்தாந்தமாகும். ஆம், கடவுள் வேற்றுமை, வருண வேற்றுமை, சமய மத வேற்றுமை, சாதி வேற்றுமை ஆகியவற்றை யெல்லாம் அழித்தும்; மொழி, நாடு, நிற வேற்றுமைகளை யெல்லாம் கடந்தும் வளர்வது ஆன்மநேய ஒருமைப்பாடு.

தெய்வம் பலப்பல சொல்லும் மூட நம்பிக்கைக்கு எதிரான சித்தாந்தம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை. ஆனால்,

"ஆறு கோடியாம் சமயங்கள்
அகத்தினும் அவைமேல்
வீறு சேர்ந்தசித் தாந்தவே
தாந்தநா தாந்தம்
தேறும் மற்றைய அந்தத்தும்
சிவம்ஒன்றே அன்றி
வேறு கண்டிலேன் கண்டிரேல்
பெரியர்காள் விளம்பீர்!"

எனப் பாருலகனைத்துக்கும் பறையறைந்து பாடுகின்றார் வள்ளலார். தெய்வம் ஒன்றுதான் உண்டு என்னும் உண்மையை உணராத மாந்தர்களைப் பார்த்து, "ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ?" என்றும், "ஒன்றே சிவம் என்று உணர்ந்து இவ்வுலகெலாம், நன்றே ஒருமையுற்று வாழி!" என்றும் பாடினார். இங்கு அடிகள் 'சிவம்' என்பது உயிர்க் குலம் அனைத்துக்கும் பதியான பரம்பொருளை யாகும்.

அன்பே—அகிலமே கடவுள் !

வள்ளலார் சொல்லுங் கடவுள், நாம ரூப பேதங்களுக்கு அப்பாற்பட்டது. இதனை அடிகளாரே கூறக் கேட்போம்:

"உண்மையில் 'கடவுள்' எனப்படுவது அகிலமாம்—அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது."

முற்காலச் சான்றோர், 'அன்பே கடவுள்' என்றனர். அத்துடன் அகிலத்தையும் சேர்த்து, 'அன்பாம் அகிலமாம் கடவுள்' என்றார், உலக ஒருமைப்பாட்டினைக் காண விழைந்த நம் வள்ளலார்.

Koviloor Digital Library

உயிரினத்திடையே—குறிப்பாக, மனிதர்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்கத் தடையாக இருக்கும் எதனையும் தெய்வ சக்தியாகவோ, தெய்வ சம்மதமாகவோ ஏற்க மறுக்கிறார் வள்ளலார்.

இராமலிங்கர், உலகிலுள்ள எல்லா மதங்களையுமே வெறுத்தார். அம்மதங்களைச் சார்ந்த மக்கள் அனைவரிடமும் ஒருமைப்பாடு காணவிழைந்தார். இஃது அவருடைய பொதுக்கொள்கை. ஆயினும் தமது கொள்கைக்கு ஆதரவு தேடும் முயற்சியை முதலில் இந்தியாவில் தோன்றி வளர்ந்த இந்து, சமண, பௌத்த சமயங்களிடையே மட்டும் மேற்கொண்டார். இஸ்லாம்—கிறித்துவ சமயங்களைப் பற்றி அவர் வெளிப்படையாக எதுவும் சொல்லவில்லை. அதனால் இஸ்லாம், கிறித்துவ மதங்கள் அல்லாத இந்திய மதங்களை மட்டும் ஒன்றுபடுத்த விரும்பினார் என்று கருதுவதற்கில்லை. தமது கொள்கைக்கு இஸ்லாம்—கிறித்துவ மதத்தினரை ஈர்க்க விருப்பமிருப்பினும், அதனைக் காலத்தின் கையில்—கடவுள் கையில் விட்டுவிட்டார் என்றே சொல்லவேண்டும். ஆம்; கருத்துப் போர்க்கான களத்தைப் பெரிதாக்கிக் கொள்ள விரும்பாத ராஜதந்திரி வள்ளலார்.

ஆதிசங்கரர் கண்ட ஒருமை

ஒரு குழுவினருக்கு எதிராக இன்னொரு குழுவினர் ஒன்றுபடுவது ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையாகாது. அதனைத் தற்காப்புணர்ச்சி என்றே சொல்லவேண்டும். அடிகளார் ஒருமைப்பாட்டினை வற்புறுத்தியது, குறிப்பிட்ட ஒரு குழுவினருக்கு மட்டும் தற்காப்புத் தேடவன்று. **ஒரே உலகம் காண்பதற்கேயாம்.**

ஆதி சங்கரர், இந்து சமயத்தின் உட்பிரிவுகளாக இருந்த அறுவகைச் சமயங்களிடையே ஒருமைப்பாடு காண முயன்றார்.

ஆதி சங்கரரின் சமய ஒருமைப்பாட்டு முயற்சி அவருடைய வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் இரையான சமண, பௌத்த மதங்களுக்கு எதிராக—அந்த மதங்களின் தாக்குதலிலிருந்து வேத மதத்திற்குத் தற்காப்புத் தேட—இந்துக்களை எல்லாம் ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சியேயாகும். வள்ளலாரின் குறிக்கோள் அதுவன்று. அவர், மதங்களே இல்லாத மனித சமுதாய ஒருமைப்பாட்டைக் காணவே பாடுபட்டார். ஒன்றுபட்ட அந்த மனித சமுதாயமும், ஒரே தெய்வ நம்பிக்கை கொண்டு, பிளவு—பிரிவினை ஆகிய தீயசக்திகளிடமிருந்து விடு

Koviloor Digital Library

பட்டு, உயிர்கள் அனைத்திடமும் அன்பு செலுத்துவதாக இருக்கவேண்டு மென்றும் கனவு கண்டார். அதனாற்றான், இந்துநேய ஒருமைப்பாட்டுரிமை' என்றோ, 'மனித நேய ஒருமைப்பாட்டுரிமை' என்றோ சொல்லாமல் 'ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமை' என்று கோஷித்தார். கோஷம் புதிதாயினும், அந்தக் கோஷத்தினுள்ளே அடங்கியிருக்கும் குறிக்கோள் உலகத்திற்குப் புதிதன்று.

முன்னோர் கண்ட தோல்வி

உலகில், மதாசாரியர்களாக—தீர்க்கதரிசிகளாகக் கருதப் படுவோர் அனைவருமே உலகம் முழுவதையும் ஒரே நெறியின் கீழ்க் கொண்டுவர முயன்றவரே யாவர். ஆனால், காலம் அவர் களுள் ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்திப் பல மதங்களை ஏற்படுத்திவிட்டது. அதனால், ஒவ்வொரு நெறியும் அல்லது ஒவ்வொரு இயக்கமும், காலகதியில் தனித்தனி மதங்களாகி, அவற்றைத் தோற்றுவித்தவர்களின் ஒரே உலகக் கனவு பலிக் காமல் செய்துவிட்டது.

மதவாதிகளும் ஞானிகளுமேயன்றி, சக்கரவர்த்திகளும் உலகனைத்தையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர முயன்று, அதிலே அவர்கள் தோல்வியடைந்தனர். அதன் விளைவாக, சாம்ராஜ்யங்கள் பலவாயின. உலக சாம்ராஜ்யம் காணச் சக்கர வர்த்திகளுள் சிலர் முயன்றதற்குத் தலைமைப் பதவியில் அவர் கள் கொண்டிருந்த ஆசையும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆயினும், ஒரே உலகப் பொதுமை உணர்வும் அவர்களுக்கு இருந்த தென்பதை நாம் மறப்பதற் கில்லை.

ஞானியர்களும் அரசர்களும் அடைந்த தோல்விகளுக்குக் காரணம், அவர்களது 'ஒரே உலக' முயற்சியானது, ஆன்ம நேய ஒருமைப்பாட்டுணர்வை அடிப்படையாகக் கொள்ளாதது தான்.

ஒரே உலக உணர்வுடன் தோன்றிய மதங்கள் தங்களுக் குள்ளே போட்டியிட்டு, போராடத் தொடங்கி, தத்தம் உயிர்க் கொள்கையான உலக ஒருமைப்பாட்டிற்கே கேடிழைத்து விட்டன. அந்தப் புனிதமான குறிக்கோள் என்றென்றுமே நிறைவேறாதபடி மதங்கள் தடைகளாகிவிட்டன. அதனாற்றான், மதங்களை அழித்தாலன்றி, ஆன்மநேய ஒருமைப்பாடு தோன்று வதோ, உலகிலுள்ள மனிதர் அனைவரும் ஒரு குலமாய் ஒன்று படுவதோ சாத்தியமில்லை என்றார் சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தலைவரான வள்ளலார்.

Koviloor Digital Library

மதங்கள் பலவாயிருப்பினும், குறிக்கோளில் ஒருமைப்பாடு இருப்பின், வள்ளலார் மதங்களை வெறுத்திருக்க மாட்டார். ஆனால், அவர் வாழ்ந்த காலத்தில், "போதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று பேசாது," என்று தாயுமானவர் எடுத்துக் காட்டிய இழி தன்மையே நிலைத்திருந்தது. அதனால், மதங்களை யொழித்து, மனித குலத்திடையே ஒற்றுமை காண விழைந் தார்.

எம்மதமும் சம்மதம்!

'எம்மதமும் சம்மதம்' என்பது அடிகளாரின் கொள்கை. இதனை,

"எம்மத நிலையு நின்னருள் நிலையில் இலங்குதல் அறிந்தனன்
எல்லாஞ் சம்மத மாக்கிக் கொள்கின்றேன்,"

என்ற அருட்பா வரிகளில் வெளிப்படுத்துகின்றார். இங்கு 'மதம்' என்று அடிகளார் குறிப்பது மத ஸ்தாபனங்களையன்று; மத தத்துவங்களையே. இந்தக் குறிக்கோளுக் கிணங்க—சித் தாந்தம், வேதாந்தம், நாதாந்தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம் ஆகிய ஆறு அந்தங்களையும் ஒன்றுபடுத்தி, "ஷடாந்தம்" என்றொரு சமரச சமஷ்டித் தத்துவத்தை உருவாக்கினார்.

ஆதிசங்கரர், இந்து மதத்தின் உட்பிரிவுகளான ஆக்னே யம், ஐந்திரம், கணுதிபத்தியம், சைவம், வைணவம், சாக்தம் ஆகிய ஆறு சமயங்களையும் ஒன்றுபடுத்தினார். அது காரண மாக, 'ஷட்மத ஸ்தாபகர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். அவர் காலத்தில் இந்து மதமொன்றே இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்ததால், அதன் உட்பிரிவுகளை ஒன்று படுத்துவதையே தேசிய ஒருமைப்பாட்டுப் பணியாக அவர் கருதியிருக்கக் கூடும்.

அவருக்குப் பல நூற்றாண்டுக்குப் பின் வாழ்ந்த வள்ளலார் காலத்தில், இஸ்லாம்—கிறித்துவ மதங்கள் இந்து மதத்தின் செல்வாக்கை ஊடுருவி, அந்த மதங்களைச் சார்ந்தவர்களால் நடத்தப்பட்ட அரசாங்கங்களின் துணையால், இந்தியாவில் நிலைத்துவிட்டன. ஆகவே, இந்து மதத்திற்குப் புறச் சமயங் களான சமண—பௌத்த மதங்களையே யன்றி, இந்தியாவிற்கே புறச் சமயங்களான இஸ்லாம்—கிறித்தவ மதங்களையும் ஒன்று படுத்தி, உலக ஒருமைப்பாடு காண விழைந்தார் வள்ளலார்.

Koviloor Digital Library

இஸ்லாம்—கிறித்தவம்

அடிகள், தமது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையை முதலில் இந்திய மதங்களிடையே மட்டும் பரப்ப முயன்றதற்கு முக்கிய காரணம், அந்தக் கொள்கைக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் நாடு இந்தியாதான் என்று அவர் நம்பியதே யாகும். இதனைச் சுவாமி விவேகானந்தரும் உறுதிப் படுத்துகின்றார்.

"எல்லாத் தேசங்களிலும் 'எல்லா மனிதர்களையும் தன்னுயிர்போல் நினை' என்ற உண்மை சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மனித உயிர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் காட்டுவதில்லை."

"ஏன் மற்ற உயிர்களைத் தம் உயிர்போல் நினைத்து அன்பு செய்ய வேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்படவில்லை. அதற்குக் காரணம் இங்குத்தான் இருக்கிறது. கடவுள் அரூபமாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். அதனால், எல்லா உயிர்களும் சமம்."

—இந்தியப் பிரசங்கங்கள் ; பக். 32.

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சித்தாந்தம், 'தெய்வம் ஒன்று' என வற்புறுத்துவதோடு, 'அத்தெய்வம் எல்லா உயிர்களிலும் இருக்கிறது' என்றும் சொல்கின்றது.

மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன வெல்லாம் உடலைக் காரணமாகக் கொண்ட வேற்றுமைகளே. அந்த வேற்றுமைகளுக்கும் ஆன்மாவுக்கும் சம்பந்தமில்லை என்பது அடிகளின் கொள்கை.

புல்லாகி...

உயிர்கள் அனைத்திலும் கடவுள் வியாபித்திருக்கிறார் என்ற உண்மையை உணராதவர், தம்மிடத்திலுள்ள கடவுள் தன்மையையும் உணரத் திறனற்றவராவர். இதனை,

"ஜீவகாருண்யம் ஆன்மாக்களின் இயற்கை விளக்கம் ஆதலால், அந்த இயற்கை விளக்கமில்லாத ஜீவர்களுக்குக் கடவுள் விளக்கம் அகத்திலும் புறத்திலும் வெளிப்படவே மாட்டாது."

—ஜீவகாருண்ய ஒழுக்கம்-3.

என்ற அடிகளார் வாக்காலும் அறிகிறோம்.

Koviloor Digital Library

பானுகவியின் தவறு

வள்ளலாரை வெறுத்த மருட்பாக் கட்சியினருக்கு எதிராக அருட்பாக் கட்சியினர் சார்பில் தாம் வெளியிட்ட "நியாய வச்சிர குடாரம்" என்ற நூலில்,

"எம்மதமும் சம்மதம் என்று பிள்ளையவர்களும் பிறரும் உரைப்ப தெல்லாம் வேதாகம பிரதிபாத்திய மதங்களையே யாம்,"

என்கிறார், அதன் ஆசிரியரான முத்தமிழ் ரத்நாகரம் ப.தி. பானு கவியார். அதாவது, வேதங்களையும் ஆகமங்களையும் ஏற்றுக் கொண்ட மதங்களையே அடிகள் சம்மதமாகக் கொண்டார் என் கிறார். இஃது உண்மையானால், சமணம்—பௌத்தம்—கிறித் தவம் ஆகிய புறச் சமயங்கள், அடிகளார் காண விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுச் சமுதாயத்திற்குப் புறம்பானவை யாகிவிடும். பானுகவியாரின் விளக்கம் அடிகளாரின் கருத்துக் குப் பொருந்துவதாக இல்லை. அருட்பாவுக்கு எதிராகப் போர்க் கோலங்கொண்ட சைவர்களைச் சமாதானப்படுத்தவே பானு கவியார் தவறான விளக்கம் தந்தார் போலும். அவருடைய கருத்து அடிகளாரின் கொள்கைக்கு மாறான தென்பதைக் கீழ் வரும் பாடல்களால் அறியலாம்.

"பெருகியபேர் அருளுடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகைஎன் கணவர்திருப் பேர்புகல்என் கின்றாய்
அருகர்புத்தர் ஆதிஎன்பேன் அயன்என்பேன் நாரா
யணன்என்பேன் அரன்என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகுசதா சிவம்என்பேன் சத்திசிவம் என்பேன்
பரமம்என்பேன் பிரமம்என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவுசுத்தப் பிரமம்என்பேன் துரியநிறை வென்பேன்
சுத்தசிவம் என்பன்இவை சித்துவிளை யாட்டே"

"சிற்சபையில் நடிக்கின்ற நாயகனார் தமக்குச்
சேர்ந்தபுறச் சமயப்பேர் பொருந்துவதோ என்றாய்
பிற்சமயத் தார்பெயரும் அவர்பெயரே கண்டாய்
பித்தர்என்றே பெயர்படைத்தார்க்கு எப்பெயர்ஒவ் வாதோ
அச்சமயத் தேவர்மட்டோ நின்பெயர்என் பெயரும்
அவர்பெயரே எவ்வுயிரின் பெயரும்அவர் பெயரே
சிற்சபையில் என்கணவர் செய்யும்ஒரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெரியும்இது தோழி."

Koviloor Digital Library

இப் பாடல்க ளிரண்டும் தலைவி தோழிக்கு உரைக்கும் பாவனையில் அடிகளார் பாடியவை யாகும். முதல் பாடலில், அருகர்—புத்தர் என்னும் பெயர்களும் தாம் வணங்கும் ஆண்டவனுடைய பெயர்களே என்கிறார். "அருகர்—புத்தர் என்பன புறச் சமயங்களின் தலைவர்கள் பெயராயிற்றே, அவை, இந்து ஆகம முறைப்படி வழிபடும் அம்பலத்தரசருக்குப் பொருந்துமா?" என்று தோழி கேட்டதாகப் பாவித்து, இந்தியாவின் புராதன சமயங்களின் தலைவர்களாகிய அருகர்—புத்தர் ஆகியவர்களின் பெயர்களே யன்றி, "பிற்சமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்" என்கிறார். அடிகள், 'பிற்சமயத்தார்' எனக் குறிப்பிடுவது, பிற்காலத்தில் இந்தியாவில் புகுந்து வளர்ந்து நிலைத்துவிட்ட இஸ்லாம்—கிறித்துவ சமயங்களை யாகும். இதில் சிறிதும் ஐயமில்லை. ஆகவே, அடிகளார் 'எம்மதமும் சம்மதம்' என்றது, இஸ்லாம்—கிறித்துவ மதங்களுக்கும் பொருந்துவ தாகும். "ஒருமையின் உலகெலாம் ஓங்குக" என்று உரைத்த அடிகளார், இஸ்லாம்—கிறித்துவ மதங்களை விலக்கி உலக ஒருமைப்பாடு காண விரும்புவாரா?

Koviloor Digital Library

சன்மார்க்க அரசியல்

ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உலகில் நாட்டுப் பாற்றுக்கு இடமுண்டா? இந்த வினுவுக்கு 'உண்டு' என்றே விடை தருகின்ருர் வள்ளலார். ஆனுல், அதற்கொரு நிபந்தனை விதிக்கின்ருர். உலக ஒருமைப்பாட்டிற்குத் தடையாக நாட்டுப்பற்று அமையக்கூடா தென்பதே அந்த நிபந்தனை. அடிகளார்,

> "அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக்கொண்டு இந்தியாவில் 'சகோதர அறம்' நிலைநாட்டப் பெறல் வேண்டும்"

என்று சித்திவளாகத்தில் உபதேசித்ததாகத் தொழுவூர் வேலாயுத முதலியார் கூறுகின்ருர். இந்த வாசகத்தால் இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை அடிகள் ஏற்றுக்கொண்டது தெளிவாகும். 'சகோதர அறம்' என்று வடலூர் முனிவர் கூறியதையே, 'தேசிய ஒருமைப்பாடு' என்ற வாசகத்தில் வார்தா முனிவரும் வலியுறுத்தினுர். இந்தியர் ஒன்றுபடும் நிகழ்ச்சியை 'அறம்' என்றதால், அந்த ஒற்றுமைக்கு எதிரான பிரிவினை 'பாவம்' என்பது புலனுகும்.

சகோதர அறம்

உலக ஒருமைப்பாடு எப்படி, எப்போது, எந்தவகையில் அமைய வேண்டும் என்ற விவரங்களை அடிகளார் கூறவில்லை. அந்தப் பொறுப்பைத் தமக்குப் பின்வரும் உலகத் தலைவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நம்பினுர் போலும்! அதனுற்ருன், "அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக்கருத்தின் சாரத்தை ஒத்துக்கொள்ள வேண்டும்" என்று இந்திய தேசியவாதிகளுக்கு அடிகள் அறிவுரை கூறினுர்.

இந்தியா பல்வேறு இனங்களை அல்லது இனவழி நாடுகளைக் கொண்ட ஓர் உபகண்டம் என்ற உண்மையை அடிகளாரும் உணர்ந்திருக்க வேண்டும். அதனுற்ருன், "இந்தியாவில் சகேரதர அறம் நிலைநாட்டப் பெறல் வேண்டும்" என்று கூறினுர். அஃதாவது, பன்மையிலே ஒருமை காண்பதே சகோதர அறமாகும்.

Koviloor Digital Library

அடிகளார் இந்தியாவை ஒரே நாடாகக் கருதி இருப்பது இன்றைய தலைமுறையினரின் கவனத்திற்குரியதாகும். ஆம்; ஆன்மநேய ஒருமைப்பாட்டுலகில் எந்த ஒரு நாடும், எந்த ஒரு இனமும் தனித்து வாழ்வது சாத்தியமில்லை. இதுவே, சுத்த சன்மார்க்கத்தின் அரசியல் சித்தாந்தம். இதனை மறுப்போர், வெறுப்போர், வேங்கடத்திற்கோ அல்லது விந்தியத்திற்கோ வேலி போட விரும்புவோர், இராமலிங்கரைப் பின்பற்றுவோ ராகமாட்டார். உரிமையும் ஒருமையும் பிணைந்த ஒன்றே அடிகளார் விரும்பிய உலக அரசியல்.

கருணையிலா ஆட்சி

வள்ளலார், தம்மளவில் அருளாளராகமட்டுமே வாழவிரும் பினார். அதற்கப்பால், உலகியலிலோ, உலக அரசியலிலோ ஈடு பட்டுப் புகழ்தேட அவர் விரும்பினாரல்லர். இதனை, "உல கெலாம் பெரியவர் பெரியவர் எனவே சிறக்கவும் ஆசை இல்லை" என்ற வரிகளில்—'பிள்ளைச் சிறு விண்ணப்பத்தி'ல்—அடிக ளாரே கூறுகின்றார்.

" இவ்வுல கதிலே இறைஅர சாட்சி
இன்பத்தும் மற்றைஇன் பத்தும்
எவ்வள வெனினும் இச்சைஒன் றறியேன்
எண்ணுதோ றருவருக் கின்றேன்."

என்ற வரிகளில், அரசியலில் ஈடுபடுவதால் வரும் புகழின் பத்தைத் தாம் விரும்பவில்லை என்பதோடு, அதனை எண்ணும் போது தமக்கு வெறுப்பு ஏற்படுவதாகவும் புகலுகின்றார். ஆயினும், உலக மக்கள்பால் கொண்ட அன்புள்ளம் காரண மாக, அரசியலிலிருந்து துன்மார்க்கர்களை வெளியேற்றி, சன் மார்க்கர் அரசினை அமைக்க அடிகள் ஆவல் கொண்டார்.

" கருணைஇலா ஆட்சி கடுகி ஒழிக
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக நன்றுநினைத்து
எல்லோரும் வாழ்க இசைந்து"

என்ற பாடலில் தாம் கொண்டுள்ள அரசியல் குறிக்கோளை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். கருணையின்றி, போர் வெறி கொண்டு, மக்களைக் கொலை புரியும் அரக்கர் ஆட்சி ஒழிய வேண்டுமென்பது அடிகளின் கொள்கை.

Koviloor Digital Library

நடுநிலை அரசியல்

எதிலும் நடுவுநிலைமை வேண்டும். அரசியலுக்கோ அது மிக மிகத் தேவை. அடிகளார் வாழ்ந்த காலத்திலே, அரசாள்வோர், நடுவு நிலைமையின்றி, தந்நலத்தால் உலகெங்கும் கெடுநிலையைத் தோற்றுவித்தனர். அத்தகைய கொடுங்கோலரைக் கண்டபோதெல்லாம் நெஞ்சங் குமுறினர், அன்புருவான நம் வள்ளலார்:

"நெடுநிலை இல்லாக் கூட்டத்தைக் கருணை
நண்ணிடா வரையரை நாளும்
கெடுநிலை நினைக்கும் சிற்றதி காரக்
கேடரைப் பொய்யலால் கிளத்தாப்
படுநிலை யவரைப் பார்த்தபோ தெல்லாம்
பயந்தனன் சுத்தசன் மார்க்கம்
விடுநிலை உலக நடைஎலாங் கண்டே
வெருவினேன் வெருவினேன் எந்தாய்"

இன்றைய உலகில், நடுவுநிலைமை அரசியல் நல்லறிவாளர்களால் போற்றப்படுகின்றது. நன்னெறியில் செல்லும் நாடுகளால்—அரசுகளால் பலவிதமான சோதனைகளுக் கிடையேயும் கடைப் பிடிக்கப்படுகின்றது. இந்த ஒழுக்க நெறியை அரசியலார் கடைப்பிடிக்க வேண்டுமென ஒரு நூற்றுண்டுக்கு முன்பே அடிகளார் கூறினர். இந்த உணர்வு அடிகள் கொண்டிருந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையின் விளைவாகும். குறுகிய மதப்பற்றை அவர் வெறுத்ததுபோல, குறுகிய நாட்டுப் பற்றையும் வெறுத் தொதுக்கினர். ஆம்; அரசியலில் அவர் சர்வ தேசியவாதி!

ஒன்றை ஒழிக்க முயலுங்கால், அதன் இடத்தில் அதைவிட நல்லதான இன்னொன்றை அமர்த்தவும் முயல வேண்டும், அரசியலில் இந்த ஆக்க உணர்வு மிகமிக அவசியமாகும். ஆக்கத் திறனின்றி, அழிப்பதற்குமட்டும் முயல்வோர் சன்மார்க்கர் ஆகார்.

சன்மார்க்கராகிய அடிகள், "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக!" என்று கோஷித்தார். அடுத்த மூச்சிலேயே, "அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க!" என்றும் கூறினர். அடிகளின் இந்தப் பொன்மொழி அரசியல் வாதிகளுக்கு அவர் தந்த புனித மொழியாகும்.

குடிமக்கள் கோருவதெல்லாம் நல்லவை யாகவே இருக்குமென்று சொல்லுவதற்கில்லை. அதனுற்றான், "நல்லோர் நினைத்த

Koviloor Digital Library

நலம் பெறுக!'' என்றார் அடிகள். ஓர் ஆட்சியிலே, சிலர் இன்புறவும் பலர் ஏழ்மையால் துன்புறவும் நேருமாயின், அது நல்லாட்சி யாகாது. அதனால், தாம் காண விரும்பிய நல்லாட்சியில் "எல்லோரும் வாழ்க இசைந்து!" என்று வாழ்த்தினார். தீமை நினைப்பதை ஒழித்து, "நன்று நினைத்து வாழ்க!" என்றும் வாழ்த்தினார். இன்னும்,

"அச்சந் தவிர்த்தே அருளிற் செலுத்துகின்ற
விச்சை அரசே விளங்கிடுக—நச்சரவம்
ஆதிக் கொடியஉயிர் அத்தனையும் போய்ஒழிக!
நீதிக் கொடிவிளங்க நீண்டு"

என்ற பாடலிலும், பசியாலும் பிணியாலும் பகையாலும் குடி மக்களுக்குத் தோன்றும் அச்சம் தொலைத்து, அவர்களை அருள் நெறியிற் செலுத்துகின்ற நல்லரசு தோன்றுக என்று கூறுகின்றார். "எங்கும் எதிலும் என்றென்றும் நீதிக் கொடி வானளாவப் பறப்பதாக" என்றும் பாடுகின்றார்.

மூன்று மகாமந்திரம்

'சமத்துவம்'—'சுதந்திரம்' — 'சகோதரத்துவம்' என்னும் மூன்று மகாமந்திரங்கள் அடிகளார் காலத்தில் ஐரோப்பாவில் ஒலித்தன. அந்த இலட்சியங்களுக்கு வெற்றிதேட மக்கள் அங்கே புரட்சி செய்து கொண்டிருந்தனர். அந்தச் சூழ்நிலையில் தாம் காண விரும்பும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உலகில்,

"ஒத்தாரும் உயர்ந்தாரும் தாழ்த்தாரும் எவரும்
ஒருமையுள ராகிஉல கியல்நடத்தல் வேண்டும்"

என்பதே தம் சமுதாயக் கொள்கை என்று பறை சாற்றுகின்றார். மக்களிடையே நிலவி வரும் நீதியற்ற உயர்வு—தாழ்வு நியதிகளை யொழித்து, எல்லோரும் சுதந்திர—சமத்துவ அடிப்படையில், உள்ளத்தால் ஒத்து வாழும் சகோதரர்களாய் ஒருமையுளராகி உலகியல் நடத்த வேண்டும் என்கிறார்.

அடிகளார் காலத்தில், தமிழகம் உள்ளிட்ட பாரத நாடு முழுவதிலும் ஆங்கிலப் பேரரசே ஆதிக்கம் செலுத்தியது. அதனால் "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" என்று அடிகளார் கூறியதை ஆங்கிலப் பேரரசுக்கே பொருத்திப் பேசுவர் அரசியல் வாதிகள். அஃது ஓரளவுதான் உண்மை. அடிகளார் உலகம் முழுவதையுமே தம் தாயகமாகக் கருதினார். அதனால் நிற பேதம், நில பேதம் அவர் நெஞ்சில் நிலைத்திருக்க வில்லை.

Koviloor Digital Library

"ஊலரையாளும் முறைமை உலகில் ஓர் புறத்துமில்லை" என்பதே அடிகளாரின் கொள்கையாக இருந்திருக்க வேண்டும். அதனால், "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" என்று அடிகள் எழுப்பிய கோஷம் உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவானதெனக் கொள்ளல் வேண்டும். அந்த வகையில் அடிகளாரின் கோஷத்திற்கு அவர் காலத்தில் இந்தியாவை ஆண்ட அன்னிய அரசும் விலக்கன்று.

புரட்சியின் மத்தியிலே...

இராமலிங்கர் காலத்தில், வட பாரதத்தில் ஆங்கிலப் பேரரசுக்கு எதிராகப் புரட்சி நடந்தது. அதனைச் 'சிப்பாய்ப் புரட்சி' என்பர் வரலாற்று ஆசிரியர்கள். 'சுதந்திரப் புரட்சி' என்பர் உரிமை உணர்வுடையோர். அந்தப் புரட்சி நிகழுங்கால் நம் அடிகளாருக்கு வயது முப்பத்து நான்கு ஆகும். அடிகளார் பிறப்பதற்குக் கால் நூற்றாண்டுக்கு முன்பே தென்பாண்டிப் பகுதியிலுள்ள திருநெல்வேலிச் சீமையிலே வெள்ளைப் பேரரசுக்கு எதிராகப் புரட்சி செய்தான் **வீரபாண்டியக் கட்டபொம்மன்.** அந்நாளில் மக்கள் போக்குவரத்துக்கான வாகனாதிகளோ, செய்திப் போக்குவரத்துக்கான கருவிகளோ மலிந்திருக்கவில்லை. அதனால் வடக்கில் நிகழ்ந்த பெரும் புரட்சியை வள்ளலார் அறியாமலுமிருக்கலாம். தெற்கில் பாஞ்சாலங்குறிச்சியில் நிகழ்ந்த புரட்சியைக்கூட அவர் அறிந்திருக்க முடியாது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு கூடப் பாஞ்சைப் புரட்சியைத் தமிழகத்தின் தலைநகரில் வாழும் மக்கள் அறிந்திருக்கவில்லை. இன்றைய நிலையே இதுவானால், ஒரு நூற்றாண்டுக்கு முன் வள்ளலார் அறிந்திருக்க வாய்ப்பேது?

வடக்கே சிப்பாய்ப் புரட்சி நிகழ்ந்த காலத்தில் மாபெருஞ் சமயச் சீர்திருத்தவாதி யாகிய தயானந்த சரஸ்வதி வாழ்ந்திருந்தார். அவரும் அந்தப் புரட்சிபற்றி எதுவும் சொன்னதாகச் செய்தி இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதிக் காலம் வரை வடக்கில் மதமும் அரசியலும் பிரிந்திருக்கவில்லை; ஒன்றோடொன்று பிணைந்தே கிடந்தன. மொகலாயப் பேரரசை முடித்துக்கட்ட முயன்ற இந்து மன்னர்களுக்கு மதவாதிகளும் துணை புரிந்ததுண்டு. சிப்பாய்ப் புரட்சியில் இந்துப் புரோகிதர்களும் இஸ்லாமிய மௌல்விகளும் வெளிப்படையாவே புரட்சிக்காரர்களோடு கலந்துநின்றனர். அந்த நிலை பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இல்லை. அதற்குக் காரணம், 'மதத்தில் தலையிடுவதில்லை' என்று பிரிட்டிஷ் பேரரசின்

Koviloor Digital Library

சார்பில் விக்டோரியா மகாராணியார் விடுத்த பிரகடன மாகலாம்.

சீர்திருத்தத்தில் கண்

வள்ளலார், பிரிட்டிஷ் பேரரசால் மக்களுக்குற்ற அல்லல் களை அறிந்திருப்பினும், அதுபற்றி அவர் ஆத்திரங் காட்ட வில்லை. காரணம், அதைவிடப் பெருங் கொடுமைகளைச் சாதி, மத, வருணங்களின் பெயர்களால் மக்கள் அனுபவித்ததைப் பார்த்து வருந்தியதுதான். பத்தொன்பதாம் நூற்றுண்டில் வாழ்ந்த மற்ளெரு சீர்திருத்தவாதியாகிய இராஜா ராம்மோகன் ராயும் பிரிட்டிஷ் பேரரசுக்கு எதிராகச் செயல்படவில்லை. அவ் வன்னிய ஆட்சியின் துணைகொண்டு ஆயிரமாயிரம் ஆண்டு களாக இந்துக்களிடையே நிலவி வந்த மூடப்பழக்க வழக்கங் களை ஒழிக்க முனைந்தார். கணவன் இறந்தால் மனைவி உடன் கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்கும் சட்டத்தைத் தோற்று வித்தார்.

இராமலிங்கரும் அன்னிய ஆட்சியைவிட உள்நாட்டில் நிலவிய சாதிமதக் கொடுமைகளையே அதிகமாக வெறுத்தார். அதனுல், நாட்டிலுள்ள பள்ளிகள் அனைத்தையும் ஆங்கிலப் பேரரசு நேரடியாகவே நிர்வகிக்க வேண்டுமென்றும் கூறினுர். தம் சீடரொருவருக்கு எழுதிய கடிதமொன்றில், கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

> "சிதம்பரத்தில் பச்சையப்ப முதலியார் இஸ்கூல் கிரம மில்லாததாகத் தற்காலத்தில் காணப்படுகின்றது. அன்றி யும், அவ்வலுவல் ராஜாங்க சம்பந்த அலுவலாக இருந்தால் நன்ருக இருக்கும். அவ்வாறின்றி ஒருமை இல்லாத சில இந்துக்கள் சம்பந்தமானதாக இருக்கின்றது."

ஆம்; உயர் சாதியினரின் நிர்வாகத்திலுள்ள பள்ளிகளில் தாழ்சாதிப் பிள்ளைகள் சேர்க்கப்படுவதில்லை. அதனுல், அறிவு விளக்கந்தரும் கல்வி, முன்னேறிவிட்ட சாதியார்களுக்கே உரிமையாக இருந்தது. அந்தக் கொடுமையை ஒழிப்பதற்கே பள்ளிகளின் நிர்வாகத்தை ஆங்கில அரசினரே மேற்கொள்வது நலம் என்ருர் வள்ளலார். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் தோன்றி வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதி ஒவ்வொருவருடைய கருத்தும் இதுவாகவே இருந்திருக்கின்றது.

"ஒருமை யில்லாத சில இந்துக்கள்" என்று அடிகள் கூறு வதால், பச்சையப்ப முதலியார் பள்ளி இந்துக்களுக்கு மட்டுமே

Koviloor Digital Library

பயன்படுவதை வெறுத்து, இந்துக்க ளல்லாதாரான கிறித்த வர்—இஸ்லாமியர் ஆகிய புறச் சமயத்தாருக்கும் பயன்பட வேண்டுமென அவர் கருதியது புலனுகும். அதனுற்றுன், மக்க ளுக்குக் கல்வி தரும்பொறுப்பினை அரசாங்கம் மேற்கொள்வதே நலம் என்ருர்.

உலகியல் தொடர்பு

இராமலிங்கர், உலக இன்பங்கள் அனைத்தையும் துறந்து, வெள்ளை வேட்டித் துறவியாக வாழ்ந்தாராயினும், உயிர் களுக்குத் தொண்டு செய்யும் நோக்குடன் உலகியலிலும் தொடர்பு கொண்டிருந்தார். அத்தகைய உலகியலுணர்வை ஆண்டவனே தமக்கு அளித்தான் என்கிருர். இதனை, "உலகிய லோடு அருளியலும் ஒருங்கறியச் சிறியேன் உணர்விலிருந்து உணர்த்தினன்," என்ற வரிகள் உணர்த்தும்.

"குற்றமோ குணமோ நான்அறி யேன்என்
குறிப்பெலாம் திருச்சிற் றம்பலத்தே
உற்றதா தலினுல் உலகியல் வழக்கில்
உற்றன மற்றென தலவே."

"வருமுயிர் இரக்கம் பற்றியே உலக
வழக்கில்என் மனஞ்சென்ற தோறும்
வெருவிநின் அடிக்கே விண்ணப்பித் திருந்தேன்
விண்ணப்பஞ் செய்கின்றேன் இன்றும்."

"தலைவர்கள் எல்லாம் தனித்தனி வணங்கும்
தலைவனே! இன்றும்என் உளமும்
மலைவில்என் அறிவும் நானும்இவ் வுலக
வழக்கிலே உயிர்இரக் கத்தால்
இலகுகின் றனநான் என்செய்வேன் இரக்கம்
என்னுயிர் என்னவே றிலையே."

"ஆதலால் இரக்கம் பற்றிநான் உலகில்
ஆடலே அன்றிஓர் விடயக்
காதலால் ஆடல் கருதிலேன் விடயக்
கருத்தெனக் கில்லைஎன் றிடல்இப்
போதலால் சிறிய போதும்உண் டதுநின்
புந்தியில் அறிந்தது தானே
ஈதலால் வேறோர் தீதுஎன திடத்தே
இல்லைநான் இசைப்பதென் எந்தாய்!"

Koviloor Digital Library

என்றும் அடிகள் பாடியதால் அறிகின்றோம். "ஈதலால் வேறோர் தீது எனதிடத்தே இல்லை" என்று பெருமான் கூறுவதால், உலகியலில் ஈடுபட நேர்ந்ததனைத் தவிர்க்க முடியாத ஒரு தீமையாகவே அவர் கருதியது புலனாகும்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அருளுணர்வு பெற்ற சான்றோர், உலகியலி லிருந்து—குறிப்பாக, அரசியலி லிருந்து முற்றிலும் ஒதுங்கி யிருக்கவே விரும்புகின்றனர். இந்தக் கொள்கை அடிகளாருக்கு உடன்பாடன்று. உயிர்களுக்குத் தொண்டு செய்யாமல், தன்னுடைய பிறவிப்பிணி தீர்ப்ப தொன்றையே குறிக்கோளாகக் கொண்டு உலகியலி லிருந்து ஒதுங்கி நிற்பதும் சுயநலமே யாகும். அந்தத் தனிமை தெய்வ சம்மதமாகாது. 'தனித்திரு' என்பது அடிகளாரின் உபதேசம். அதன் பொருள், சோம்பி யிருப்ப தன்று; தன்னலங் கருதித் தனித்திருப்பதுமன்று; உலகியலில் தொடர்பு கொண்டு, உயிர் களுக்குத் தொண்டு புரிந்து, அதே நேரத்தில் உள்ளத்தால் தனித்திருப்ப தென்றே பொருள். அடிகளாரின் வாழ்க்கை அப் படித்தான் அமைந்திருந்தது.

"கருணையே வடிவாய்ப் பிறர்களுக் கடுத்த
கடுந்துயர் அச்சமா திகளைத்
தருணநின் அருளால் தவிர்ந்தவர்க் கின்பம்
தரவும்வன் புலைகொலை இரண்டும்
ஒருவிய நெறியில் உலகெலாம் நடக்க
உஞற்றவும் அம்பலந் தனிலே
மருவிய புகழை வழுத்தவும் நின்னை
வாழ்த்தவும் இச்சைகாண் எந்தாய்."

"இவையலால் பிறிதோர் விடயத்தில் இச்சை
எனக்கிலை இவைஎலாம் என்னுள்
சிவையொடும் அமர்ந்த பெருந்தயா நிதிநின்
திருவுளத் தறிந்தது தானே."

இந்தப் பாடல்களால், பிறர் நலம்—உயிர்க் குலத்தின் பொது நலம் கருதியே அடிகள் உலகியலோடும் உறவுகொண் டாரென்பது புலனாகும்.

அருளாட்சி

சுத்த சன்மார்க்கப் பேரியக்கங் கண்ட பெருமான், அரு ளாட்சி செலுத்தும் திறனைப் பெற்றிருந்தார். ஆம்; அவர் அர

Koviloor Digital Library

சாட்சியை வெறுத்தொதுக்கினார்; அருளாட்சியை விரும்பிப் பெற்றார். ஆண்டவன் அவரை அருட்சோதிப் பேரரசின் தலைவ ராக்கினார்.

"மாட்சி அளிக்கும் சன்மார்க்க
மரபில் மனத்தைச் செலுத்துதற்கோர்
சூழ்ச்சி அறியாது உழன்றேனைச்
சூழ்ச்சி அறிவித்து அருள்அரசின்
ஆட்சி அடைவித்து அருட்ஜோதி
அமுதம் அளித்தே ஆனந்தக்
காட்சி கொடுத்தாய் நின்தனக்குக்
கைம்மாறு ஏது கொடுப்பேனே."

"தன்அரசே செலுத்திநின்ற தத்துவங்கள் அனைத்தும்
தனித்தனிஎன் வசமாகித் தாழ்ந்தேவல் இயற்ற
முன்அரசும் பின்அரசும் நடுஅரசும் போற்ற
முன்னும்அண்ட பிண்டங்கள் எவற்றிலும்எப் பாலும்
என்அரசே என்றுரைக்க எனக்குமுடி சூட்டி
இன்பவடி வாக்கிஎன்றும் இலங்கவைத்த சிவமே
என்அரசே என்உயிரே என்இருகண் மணியே
இணைஅடிப்பொன் மலர்களுக்கென் இசையும்
அணிந்தருளே"

என்னும் பாடல்களில், பல்வேறு கண்டங்களைக் கொண்ட உலக முழுவதிலுமே யன்றி, அண்டங்களையும் பிண்டங்களை யும் தன்னுள் அடக்கிய பிரபஞ்சம் முழுவதிலும் தாம் அரு ளாட்சி செலுத்துவதாகக் கூறுகின்றார்! ஆம்; உயிர்களை யெல்லாம் குடிகளாகக் கொண்டு, அன்பென்னும் அரியாசனத் தமர்ந்து, அறத்தை முடியாகப் புனைந்து, 'சமரசம்' என்னும் செங்கோல் பிடித்து தெய்வத்தின் பிரதிநிதியாக சன்மார்க்கப் பேரரசு செலுத்துகின்றார் அடிகளார்.

அண்ணனுக்காக அரசு துறந்து குணவாயிற் கோட்டத் திருந்த முனிவராம் இளங்கோவடிகளுக்குக் காட்சியளித்த கண்ணகித் தெய்வம்,

"சிந்தை செல்லா சேண்நெடுந் தூரத்து
அந்தமில் இன்பத் தரசாள் வேந்து......,"

என்று கூறினாள். வள்ளலாரும் இளங்கோவடிகள் போன்று 'அந்தமில் இன்பத்தரசாள்' வேந்த ராவார்.

Koviloor Digital Library

போருக்கு எதிர்ப்பு

மனிதர்கள் நடத்தும் அரசாட்சி சன்மார்க்க நெறிவழி இயங்காவிடில், ஞானியர் நடத்தும் அருளாட்சி சிறக்காது. அதனுல், உலக அரசியலில் துன்மார்க்கந் தொலைந்து சன்மார்க்கந் தழைக்க வேண்டு மென்று விரும்பினுர் இராமலிங்கர்.

"மறைமுடி வயங்கும் ஒருதனித் தலைமை
வள்ளலே உலகர சாள்வோர்
உறைமுடி வாள்கொண்டு ஒருவரை ஒருவர்
உயிரறச் செய்தனர் எனவே
தறையுறச் சிறியேன் கேட்டபோ தெல்லாம்
தளர்ந்துஉள நடுங்கிநின்று அயர்ந்தேன்
இறையும்இவ் வுலகில் கொலைஎனில் எந்தாய்
என்னுளம் நடுங்குவது இயல்பே."

எனப் பாடுகின்ருர். உலக சமாதானமே அடிகளாரின் குறிக்கோள். நாட்டுப் பாதுகாப்புக் குறித்து நிகழும் போரில் விளையும் உயிர்ச்சேதத்தையும் அடிகள் 'கொலை' என்றே குறிக்கின்ருர். இது புதிய பார்வை.

பாதகத்திற்குப் பல்லாண்டு பாடுவதா ?

ஒரு மனிதன், இன்னெருரு மனிதனின் உயிரைப் போக்கினுல், அதன் பெயர் கொலை! அந்தக் கொலைஞனை நீதிமன்றம் தண்டிக்கும். ஆனுல், ஒரு நாட்டினர் இன்னெருரு நாட்டின் பேரில் படைபெடுத்து, அந்த நாட்டவரைக் கொன்று குவித்தால், அதன் பெயர் போர்! அந்தப் போரில் வென்றவனைப் புகழ்ந்தும் வீழ்ந்தவனை இகழ்ந்தும் 'பரணி' பாடுவர் கவிஞர்கள். இது உலகாள்வோர் கண்ட 'நியதி—நீதி!'

போர் வெறியை அறவே ஒழித்த புதுவுலகமே நம் அடிகளார் விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை யுலகம். இதனை மறத்தல் கூடாது.

இருபதாம் நூற்ருண்டில் மாபெரும் விடுதலைப் புரட்சிக்குத் தலைமை தாங்கிய காந்தியடிகள், வள்ளலாரின் அரசியல் நெறிக்கு வாரிசாக விளங்கினுர். ஆண்டவன் ஒருவனே அரசன்; அவனுடைய அருளாட்சியே உலகம் முழுவதும் நடைபெற வேண்டும் என்பது காந்தியடிகளின் விருப்பம். "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக," என்ற அடிகளாரின் கோஷத்தையே,

Koviloor Digital Library

"வெள்ளையனே வெளியேறு" என்று 1942ல் காந்தியடிகளும் கோஷித்தார். உலகம் முழுவதும் நல்லாட்சி அமைய வேண்டும்; சகலருக்கும் நல்வாழ்வு தரும் சமதரும ஆட்சி தோன்ற வேண்டும் என்ற பரந்த நோக்கங் கொண்டு, அதற்கு ஒத்திகையாகப் பாரத நாட்டின் விடுதலைக் கிளர்ச்சியை நடத்தினார் காந்தியடிகள்.

"அருள் நயந்த சன்மார்க்கர் நாடாள வேண்டும்" என்று வள்ளலார் கூறியதையே, 'இராம ராஜ்யம்' என்றார் காந்தியடிகள்.

விவேகானந்தரின் நாட்டுப்பற்று

வெள்ளாடைத் துறவியாக விளங்கிய இராமலிங்கரைப் போலவே, அவர் காலத்திலேயே தோன்றி—அவருக்குப் பிறகும் உலகப் புகழுடன் விளங்கிய சுவாமி விவேகானந்தரும் நானிலமெங்கும் நல்லாட்சி காண விழைந்தார். வள்ளலார், "இந்தியாவில் சகோதர அறம் நிலைநாட்டப் பெறல் வேண்டும்," என்றாரே, அதனை நிறைவேற்ற அரும்பாடு பட்டார் விவேகானந்தர்.

> "தீரா ! நீ இந்தியனாகப் பிறந்ததை அதிக கௌரவமாக நினை.
>
> "நான் இந்தியன்; இந்தியன் ஒவ்வொருவனும் என் சகோதரன்; மூதறிவுடைய இந்தியனும் என் சகோதரன்; லட்சாதிபதியான இந்தியனும் என் சகோதரன்; பிட்சாதிபதியான இந்தியனும் என் சகோதரன்; முதற்சாதியான பிராமணனும் என் சகோதரன்; கீழ்ச் சாதியான பறையனும் இந்தியனானால் என் சகோதரன்,' என்று பெருமையுடன் சொல்லிக்கொள்."

இது, சுவாமி விவேகானந்தர் ஒவ்வொரு இந்தியனுக்கும் போதித்த 'சகோதர அறம்'.

நம் அடிகளார், தாம் உலகியலில் ஈடுபட்டதைத் தவிர்க்க முடியாத ஒரு குறையாகவே கருதினார் என்பதை அவருடைய வாக்காலேயே கண்டோம். தேசபக்தி காரணமாக விவேகானந்தர் உலகியலில் ஈடுபட்டபோது, இராமகிருஷ்ண பரமஹம்ஸரும் வள்ளலார் கொண்ட கருத்தையே வெளியிட்டார்.

> "விவேகானந்தருடைய மனத்தை இலேசான மாயைப் படலம் சூழ்ந்திருக்கிறது. அதை ஈசன் அவருடைய மனத்

Koviloor Digital Library

தில் ஒரு நன்மையைக் கருதி வைத்திருக்கிறார். ஆனால், அது மிகவும் இலேசான படலம். அதை எந்த நிமிஷத்தி லும் விவேகானந்தர் கிழித்தெறிந்து விடுவார்.''

என்றார் பரமஹம்ஸர். ''பரம ஸந்நியாசியைத் தவிர மற்றவர் கள் அனைவரும் நாட்டுப் பற்றில்லாதவர்களாயின் பிணங் களுக்குச் சமமானவர்கள்'' என்பது விவேகானந்தரின் பொன் மொழி. பரமஹம்சர் பரம ஸந்நியாசியாகி இருந்தா ராதலால், அவர் நாட்டுப் பற்றைச் சுட்டெரித்தார். இராமலிங்கர் நாட்டுப் பற்றைத் தொட்டும் தொடாமலும் உயிர்களுக்குத் தொண்டு புரிந்தார். விவேகானந்தர் நிலையும் அதுவே. ஆனால், சமயம் வாய்த்தபோது, அந்தப் பற்றைக் களைந்தெறிந்து, பரம சந்நி யாசிகளாகக் காட்சியளித்தனர் இராமலிங்கரும் விவேகானந் தரும். இஃது உலகறிந்த உண்மை.

வார்தா முனிவர் வாக்கு

இந்த இரு பெரியார்களுக்குப் பின் பொதுவாழ்வில் புகுந்த அருளாளரும் அரசியல் தலைவருமாகிய காந்தியடிகள், தாம் அரசியலில் தொடர்பு கொண்டிருந்தது பற்றிக் கூறியதாவது:

> ''என்னைப் பொறுத்தமட்டில் முக்திக்கு நான் கண்ட வழி நாட்டுக்கு உழைத்து வருவதேயாகும். இடையறாத உழைப்பை நாட்டுக்குச் செலுத்தி அதன் வாயிலாக உல கத்துக்குப் பணியாற்றுவதே நான் கண்ட முக்தி மார்க் கம். உலகத்திலுள்ள உயிர்களோடு ஒன்றுபட்டுப் போவதே என் ஆசை.''
>
> —'ரகுபதிராகவ,' பக் 8

இந்த வாசகத்தில், ''ஞானியர்களுடைய அரசியல், உலகி லுள்ள உயிர்களோடு ஒன்றுபட்டு அவற்றின் நலன் கருதித் தொண்டாற்றுவதே,'' என்கிறார் காந்தியடிகள்.

''நீங்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கின்றீர்களே, அதை விட்டு விடும் காலம் வருமல்லவா ?'' என்று அமெரிக்க நிருப ரொருவர் கேட்டதற்கு, காந்தியடிகள் அளித்த பதில் வருமாறு :

> ''அரசியலில் ஈடுபடாமல் அதிக ஊழியம் எதுவும் செய்ய முடியாதென்று கண்டதனாலேயே நான் அரசியலில் ஈடுபட வேண்டிய அவசியமேற்பட்டது என்பது தங்களுக் குத் தெரியாதுபோ லிருக்கிறது. அரசியல் வேலைகளைச் சமூக முன்னேற்றத்துடனும் சன்மார்க்க முன்னேற்றத்

Koviloor Digital Library

துடனும் சேர்த்தே நாம் கவனிக்க வேண்டும். ஜனநாயக ஆட்சி நடக்குமிடத்தில் அரசியல் சம்பந்தமில்லாத எந்த விஷயமும் கிடையாது.''

—'அரிஜன்', 13-10-46.

வள்ளலார், ''அருள் நிறைந்த சன்மார்க்கர் அரசியல் நடத்த வேண்டும்,'' என்றார். வார்தா முனிவரும், ''அரசியல் வேலைகள் சன்மார்க்க நெறியைத் தழுவியவையாகவே இருக்க வேண்டும்'' என்கிறார். தம்முடைய 'சுயசரிதை'யில்,

''கடவுள் வழிபாட்டுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை. அது வேறு; இது வேறு—என்று சிலர் சொல்வார்களே, அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இதை நான் மிக அடக்கத்துடன் சொல்லுகிறேன். ஆனால், ஐயமறச் சொல்வேன். சமய விசாரத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லையென்று சொல்லுவது முற்றிலும் தவறு. கடவுள் விஷயம் சரியாக அறியாதவர்கள்தாம் அப்படி வேறு படுத்துவார்கள்.''

என்று கூறுகின்றார் காந்தியடிகள். பரம ஞானியும் பாரத விடுதலைப் புரட்சியில் பங்கு கொண்ட மாவீரருமான பாரதியார் கூறுகின்றார் :—

''ஞானி தனது சொந்த நலத்தைக் கருதி உழைக்கக் கூடாதே யொழிய, உலக தர்மங்களை முற்றிலும் விட்டு விட வேண்டு மென்பது சாஸ்திரக் கருத்தன்று. தன் மட்டில் யாதொரு பலனையும் கருதாமலும், ஈசனுக்கும் ஈஸ்வர வடிவமாகிய மனித சமூகத்துக்கும் தனது செய்கைகளின் பலன்களைச் சமர்ப்பித்துவிட்டுத் தாம் எப்பொழுதும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது பெரியோர்களின் சித்தாந்தம். அப்படியில்லாவிட்டால், பரம ஞானிகளாகிய முனிவர்கள் ஏன் சாஸ்திரங்கள் எழுதி வைக்கவேண்டும்? மூச்சைப் பிடித்துக் கொண்டு சும்மா இராமல், உலக நன்மையின் பொருட்டு ஞானவழிகள் கற்பித்த ரிஷிகளை நாம் லௌகீகர்கள் என்று கூறத் தகுமா?''

—''பாரதி புதையல்.''

ஞானியர்களின் சமூகத்தொண்டு அல்லது அரசியல் பணி, ''பாடுபடு; பலனைத் துறந்துவிடு'' என்ற தருமத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். நம் வள்ளலாரும் அதையே வலியுறுத்தினார்; அதன்படி வாழ்ந்தும் காட்டினார்.

Koviloor Digital Library

சன்மார்க்கர்களெல்லாம் அரசியலுக்குப் புறம்பாக இருக்கும்வரை அத் துறையில் துன்மார்க்கர்களே ஆதிக்கம் செலுத்துவர். உலகில் அமைதியும் ஏற்படாது. அரசியலில் ஈடுபட்டுள்ள இல்லறத்தார், அத்துறையில் அதிகார வெறிபிடித்தலைவது இயற்கை. அதாவது, தேசமக்கள் நலன் கருதிப் பாடுபட்டு, அதன் பலனைத் தாங்களும் துய்க்கவே விரும்புவர். அத்தகையோர், மக்கள் நலன் விரும்பும் தொண்டர்களாக இருக்கலாம். ஆனால், தன்னலம் விடுத்த சன்மார்க்கர்களாக மாட்டார்கள். அரசியல் துறையில் பலன் கருதாது பாடுபடும் சன்மார்க்கர்களின் எண்ணிக்கை அதிகப்பட வேண்டும்.

இளங்கோவடிகள் வலியவந்த அரியாசனத்தைத் துறந்தார். ஆனால், அரசியல் பணியைத் துறந்தாரல்லர். அவர் இயற்றிய காப்பியம் கொடுங்கோலை அழித்துச் செங்கோலை நிலைநிறுத்திய அரசியல் புரட்சி வரலாறாகும். ஆம்; உலக இன்பங்களைத் துறந்த ஞானியொருவர், பெண்ணொருத்தி விளைவித்த பெரும் புரட்சியைச் சிலப்பதிகாரக் காப்பியமாகச் சித்தரித்துத் தந்துள்ளார்.

வள்ளுவப் பெருந்தகை, உள்ளத்தால் துறவுடைய உத்தமப் பெரியாராவர். அப்படிப்பட்டவரும் திருக்குறள் பொருளதிகாரத்தில் அரசியல் நெறியை விரித்துக் கூறி, நெறி பிறழ்ந்த அரசு அழியவேண்டுமென்றும் சபித்துப் பாடுகின்றார்.

வள்ளலாரை மறந்தனரே !

வள்ளுவர்—இளங்கோ வழியில் தோன்றிய இராமலிங்கப் பெருமானார், "சன்மார்க்க அரசியலே உலகெங்கும் தழைக்க வேண்டும்" என்று கூறினாரென்றால், அவரை அரசியல் நெறிக்குப் புறம்பானவரென்று நினைக்க முடியுமா ?

நம் காலத்தில் வாழ்ந்த காந்தியடிகள், மாபெரும் பாரத தேசம் விடுதலை பெறப் போராடி, வெற்றியும் பெற்றார். ஆனால், விடுதலை பெற்ற பாரதத்தின் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து அதிகாரம் செலுத்த அவர் விரும்பினாரல்லர். சுதந்திர இந்தியாவிலும் அதிகார அரசியலுக்குப் புறம்பாக இருந்தே மக்களுக்குத் தொண்டாற்றினார்.

ஆம்; ஆத்ம ஞானிகள் அரசியலில் எந்த அளவுக்குத் தொடர்பு கொள்ளவேண்டுமென்பதற்கு வள்ளுவர், இளங்கோ, வள்ளலார், காந்தியடிகள் ஆகியோர் சான்றாக விளங்குகின்றனர்.

Koviloor Digital Library

வள்ளலார் காலத்தில் வாழ்ந்த பரம ஞானியாகிய இராம கிருஷ்ண பரமஹம்சர், இந்து சமுதாயத்தில் சீர்திருத்தம் காணப் பாடுபட்ட இராஜா ராம்மோகனர், வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தர் ஆகியோரெல்லாம் பாரத நாட்டின் விடுதலைப் போருக்கு வித்திட்டவர்களாகவே வருணிக்கப்படு கின்றனர். பாரத விடுதலைப் போரின் நூற்றாண்டு விழாவில், அரசியல் தலைவர்களே யன்றி, மேலே சொன்ன ஞானியர்களும் மத்திய அரசினரால் கௌரவிக்கப்பட்டனர். ஆனால், அந்த வரிசையிலே நம் வள்ளலாரைச் சேர்த்துப் பெருமைப்படுத்த வரலாற்று ஆசிரியர்கள் மறந்து விட்டனர். மத்திய அரசே யன்றித் தமிழக அரசும் தன் கடமையைச் செய்யவில்லை.

வள்ளலார் கண்ட அரசியல் நெறி, உலகமனைத்துக்கும்— உயிர்க்குலமனைத்துக்கும் பொதுவானதாதலால், குறுகிய தேச பக்தி கொண்டவர்களின் பார்வையில் அது படவில்லை போலும்.

பாரதியார், "விவேகானந்த பரமஹம்ஸ மூர்த்தியே சுய ராஜ்யக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரமிட்டவர் என்பது உலகமறி யும்" என்று கூறுகின்றார். அந்த மகாகவியும் அரசியல் விடு தலைப் புரட்சிக்கு அஸ்திவாரமாக அமையக்கூடிய சமுதாயப் புரட்சி காணவிழைந்த வள்ளலாரை அரசியல் ஞானியாக நமக்கு அறிமுகப்படுத்த வில்லை.

சன்மார்க்க அரசர்கள்

தாம் கண்ட ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை உலகின் ஆட்சி எத்தகைய தென்பதை விளக்க மனுநீதிச் சோழனைச் சான்று காட்டினார் வள்ளலார். அம் மாமன்னன், வாய்பேசாச் சீவனாகிய பசுவுக்கும் நீதி வழங்கியதை நினைப்பூட்டினார். ஆம்; கன்றையிழந்த பசுவின் துயர் துடைக்கத் தன் மைந்தனைத் தேர்க்காலில் இட்ட மனுநீதிச் சோழன், தழுவக் கொம்பில்லாது தவித்த முல்லைக் கொடிக்குத் தேரீந்த வள்ளல் பாரி, குளிரால நடுங்குவதாக நினைத்துத் தன் போர்வையை மயிலுக்குத் தந்த பேகன் ஆகிய மன்னர் பெருமக்கள் ஆன்மநேய ஒருமைப் பாட்டு வழி நின்று அரசாண்டோராவர். அவர்களெல்லாம் வாரிசுகளற்றுப் போனதை நினைந்து நினைந்து வருந்தினார் வள்ளலார்.

அவர்களுக்கு வாரிசுகளைத் தோற்றுவிக்க, அவர்களிலே மிகச் சிறந்தவனாக மனுநீதிச் சோழன் கதையை ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறி மணக்க எழுதி வழங்கினார்.

Koviloor Digital Library

வள்ளலார் கனவு கண்ட சமரச சுத்த சன்மார்க்கப் பேரரசு ஈ எறும்பு புழு ஆகிய இழிந்த உயிர்களுக்கும் நீதி வழங்கும் நெறி யுடையதாகும். அதனாற்றான், கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன் கதையைச் சன்மார்க்க அரசியலுக்குச் சான்ருகக் கொண்டார் வள்ளலார். ஆம்; வள்ளலாருடைய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை அரசியலுக்கு முழு அளவில் பொருந்தக் கூடிய ஒரே மன்னன் மனுநீதிச் சோழன் தான்.

சிபி—பேகன்—பாரி

ஒரு புருவின் உயிரைக் காக்கத் தன் உடலை அறுத்துத் தசை கொடுத்தானே, அந்தச் சிபி அரசன் சன்மார்க்கிதான். ஆனுல், அதற்காக அவன் செய்த தியாகம் தன் உடலிலிருந்து சிறிதளவு தசை. அதற்குமேல் ஒன்றுமில்லை.

குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை தந்தானே பேகன், அவனும் சன்மார்க்க வழிப்பட்ட மன்னன்தான். ஆனுல், அந்தச செயலால் அவன் இழந்தது ஒரு போர்வை, அதற்குமேல் ஒன்றுமில்லை.

தழுவக் கொம்பின்றி அலேந்த கொடிக்குத் தேர் ஈந்தான் வள்ளல் பாரி. அவனும், ஆன்மநேய ஒருமைப்பாட்டைக் கடைப் பிடித்தவனே. ஆயினும் அதனுல் அவன் இழந்த தென்ன ? ஒரு தேர், அதற்குமேல் ஒன்றுமில்லை.

பரிபூரண சன்மார்க்கி !

இவர்களுக்கெல்லாம் மேம்பட்ட சன்மார்க்கியாகி, கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்க மனுநீதிச் சோழன் இழந்த தென்ன ? தன் ஒரே மகனை அன்ருே! பாராளப் பிறந்த பார்த்திபனை அன்ருே பலி கொடுத்தான் ! தன் குலத்துக்கும் குடிக்கும் ஒரே மகனுக, தனக்குப்பின் அரியணை எறும் அரசுரிமை பெற்றவனுக இருந்த வீதிவிடங்கனையன்ருே பலி கொடுத்தான் ? அவனைக் கொல்லத் தன் அரசியல் சுற்றத்தார் அனைவரும் மறுத்தபோதும் தானே தன் மகப் பாசத்தையும் மறந்து, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு—தன் தேரைச் செலுத்தி, கன்றையிழந்த பசுவுக்கு நீதி வழங்கினுனென்ருல். அவனல்லனே பரிபூரண சன்மார்க்கி !

'மைந்தனைக் கொன்ருன்' என்ற செய்தி, கருணையுடையார் நெஞ்சைக் கலக்குவதாக இருந்தும், கருணை வள்ளலான இராமலிங்கர் அம் மாமன்னனைப் புகழ்ந்தெழுதியதேன் ? ஆம்; மனுநீதிச் சோழன் என்ன செய்தான் என்பதோடு, எதற்காகச் செய்

Koviloor Digital Library

தான் என்பதனையும் பொருத்திப் பார்த்தார் வள்ளலார். அதனால், செயலிலுள்ள 'கொடுமை'யை மறந்து, சிந்தையிலுள்ள கொள்கையைப் போற்றினார்.

நாம் அணுக்குண்டு யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; உலக சமாதானத்தைப் பற்றி அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறோம். அணுக்குண்டுப் பயம் தொலைந்து, உலக சமாதானம் நிலைபெற வேண்டுமானால், அதற்கான ஒரே வழி, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை நெறிதான. இந்திய தேசிய ஒருமைப்பாடு பேசுவோர் உலக ஒருமைப்பாட்டின் ஓர் அங்கமாகவே அதனைக் கருதவேண்டும். இன்று சொல்லப்படும் சர்வ தேசியம் (இன்ட்டர் நேஷனலிஸம்) வள்ளலார் காண விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாடுதான். பிரிவினை—பிளவுச் சக்திகளை ஒழித்து, இந்திய தேசிய ஒருமைப்பாடு காணத் துடிப்போர், 'வள்ளலார் வழி'யில் நின்று பணி புரிவார்களாக!

வள்ளலாரைப் பின்பற்றுக !

இந்திய தேசிய ஒருமைப்பாட்டினை விரும்புவோருக்கும், உலகப் பாட்டாளி வர்க்கத்தின் ஒற்றுமையை நாடுவோருக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்குகின்றார் வடலூர் இராமலிங்கர். அவர் கூறிய உலக ஒருமைப்பாட்டை இன்றைய தேசிய—சர்வ தேசிய வாதிகள் காணவேண்டுமானால், சாதி வேற்றுமைகளை வேரும் வேரடி மண்ணுமில்லாமல் ஒழித்தாக வேண்டும். மத பேதங்களை மறைத்தாகவேண்டும். தெய்வம் உண்டு என்று நம்பி, அதுவும் ஒன்றே என்பதை உள்ளத்தில் பதியவைத்து, உயிர்கள் தோறும் அத்தெய்வம் காட்சியளிப்பதைக் கண்டு, உயிர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் அந்த ஒரே தெய்வத்தை வழிபட்டு, அதன் மூலம் தேசிய—சர்வ தேசிய ஒருமைப்பாடு காண முயலவேண்டும்.

Koviloor Digital Library

ஜீவகாருண்ய ஒழுக்கம்

பண்டைக்காலத் தமிழர்கள் புலால் உண்பதை வழக்க மாகக் கொண்டிருந்தனர். உயிர்களிடத்துக் கருணைகாட்டும் ஆன்மநேய உணர்வு பண்டைத் தமிழருள் சிலரிடம் இருந்த தென்றாலும், புலாலுண்ணும் வழக்கத்தை வெறுத்துப் பழங் காலப் புலவர்களுள் வள்ளுவர் தவிர, வேறெவரும் பாடவில்லை. மாருக, ஆட்டிறைச்சி, மீன் முதலியன உண்ணும் வழக்கம் சங்கப் பாடல்களிலே குறிக்கப்படுகின்றது.

சமணர் காட்டிய வழி !

சமண—பௌத்த சமயங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற பின்னர்தான், புலாலுண்ணும் வழக்கத்திற்குக் கடுமை யான எதிர்ப்பு ஏற்பட்டது. அதற்கு முன்பு யாகத்தில் ஆடு களைப் பலியிட்டு அந்தணர்களும் புலாலுண்டனர் என அறி கிறோம். திருக்குறளில் 'புலால் மறுத்தல்' என்னும் அதிகாரத் துள் புலாலுணவை மறுத்தும் வெறுத்தும் பாடுகின்றார் திருவள்ளுவர்.

" அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று "

என்னும் குறட்பாவில், வேள்வியில் உயிர்க்கொலை புரிந்து அந்தணர்கள் புலாலுண்பதைக் கண்டிக்கின்றார். திருவள்ளு வருக்குப் பிறகு புலாலுணவை வன்மையாகக் கண்டித்த பெருமை வள்ளலாருக்கே உரியதாகும். அவ்வகையில் சம ணர்—பௌத்தர் ஆகியோரையும் விஞ்சி விடுகின்றார் நம் வள்ளலார்.

" துண்ணெனக் கொடியோர் பிறவுயிர் கொல்லத்
தொடங்கிய போதெலாம் பயந்தேன்
கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்டகா லத்திலும் பதைத்தேன்
மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோ தெல்லாம்
எண்ணிஎன் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தைநின் திருவுளம் அறியும்."

Koviloor Digital Library

என்னும் பாடலுள், உயிர்க்கொலை புரிந்து ஊனுண்ணும் கொடிய வழக்கத்தைக் கண்டிக்கிறார். தாயுமானவர்,

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே"

என்று பாடினார். ஆம்; கொல்லாத விரதத்தை மேற்கொண்ட மக்களே நல்லோர் என்கிறார். மற்றவர் 'கொடியர்' என்று சொல்லவும் மனம் கூசி, அவரெலாம் "யாரோ அறியேன்!" என்று பேசுகின்றார். வள்ளலார் உயிர்க்குல மனைத்தையும் தம் அன்புக் கரங்களால் தழுவி, ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை பேசிய பெரியார். ஆயினும், புலால் உணவின்பால் கொண்ட வெறுப்புக் காரணமாகப் 'பிரிவினை' பேசுகின்றார். புலாலுண்ணாதவரெல்லாம் 'உறவினத்தார்' என்றும், உண்ணுவோரெல்லாம் 'புறவினத்தார்' என்றும் பிரிவினை செய்கின்றார்.

"உயிர்க்கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம்
உறவினத்தார் அல்லர்அவர் புறஇனத்தார் அவர்க்குப்
பயிர்ப்புறும்ஓர் பசிதவிர்த்தல் மாத்திரமே புரிக
பரிந்துமற்றைப் பண்புரையேல் நண்புதவேல் இங்கே
நயப்புறுசன் மார்க்கம்அவர் அடையளவும் இதுதான்
நம்ஆணை என்றெனக்கு நவின்றஅருள் இறையே
மயர்ப்பறுமெய்த் தவர்போற்றப் பொதுவில்நடம் புரியும்
மாநடத்தென் அரசேஎன் மாலையணிந் தருளே."

என்று பாடுகின்றார். புலாலுண்பவரைப் புறவினத்தாராகக் கூறிடினும், அவர்பால் கொண்ட இரக்கத்தால், "அவர்க்கும் பசி தவிர்த்தல் மாத்திரமே புரிக" என்று பரம்பொருள் தமக்கு ஆணையிட்டதாக அறிவிக்கின்றார். புறவினத்தாரும் புலாலுண்ணும் வழக்கத்தை விட்டு, நயப்புறு சன்மார்க்கம் அடைந்திடில், அவர்களையும் உறவினத்தாராகவே கொள்ள விழைகின்றார்.

அருளாளருக்கே அறிவுரை!

திருவள்ளுவர் புலாலுண்ணும் வழக்கத்தை மனித சமுதாயத்திலிருந்தே ஒழித்துவிட விரும்பினார். ஆயினும், ஞானியர்களுக்கே புலாலுண்ணாமையை அழுத்தமாகப் போதித்தார். "அருளாட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை" என்பது வள்ளுவர் வாக்கு.

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறி தூன்உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

Koviloor Digital Library

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்னும் குறட்பாக்களுள், மெய்யுணர்வு பெற விரும்பியவர்களுக்கே புலாலுண்ணாமையின் அவசியத்தைப் போதித்தது புலனாகும்.

நம் வள்ளலாரும் தம்முடைய சமரச சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்தவர்களுக்கே புலாலுண்ணாமையைப் பெரிதும் வற்புறுத்தினார். அடிகள், 'உறவினத்தார்' என்றும், 'புறவினத்தார்' என்றும் பிரிவினை செய்தது, சன்மார்க்க சங்கத்தவர்களையே; சாதாரண மக்களை யன்று. ஆயினும், புலாலுண்ணும் வழக்கத்தை விட்டுவிடுமாறு மக்கள் எல்லோரையுமே வேண்டிக் கொண்டார். இதனை,

"வன்புலால் உண்ணும் மனிதரைக் கண்டு
மயங்கிஉள் நடுங்கிஆற் றாமல்
என்பெலாம் கருக இளைத்தனன்......"

என்று பாடியதால் அறியலாம்.

உயிர்ப்பலிக்கு எதிர்ப்பு !

அருட்பிரகாச வள்ளலார், தெய்வங்கட்கு உயிர்ப்பலி கொடுப்பதையும் வெறுத்தார். தெய்வங்களின் பேரால் உயிர்களைக் கொல்லும் கொடிய வழக்கம், சங்ககாலந் தொட்டே தமிழர்களிடை இருந்து வருகிறது. உயிர்க்கொலையை வெறுத்து, ஊனுணவை மறுத்துப் பாடிய வள்ளுவர்கூடப் பலியிடும் வழக்கத்தைக் கண்டித்தாரல்லர்.

வள்ளலார் காலத்தில், வங்க மாநிலத் தலைநகரான கல்கத்தாவிலுள்ள காளி கோவிலில், நாள்தோறும் கணக்கற்ற உயிர்கள் பலியிடப்பட்டன. இன்றுங்கூட அங்கு அந்த வழக்கம் உண்டு. கருணை வள்ளலான இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூடக்காளி கோயிலில் பலியிடும் வழக்கத்தைக் கண்டித்ததாகத் தகவலில்லை. தெய்வங்களுக்கு உயிர்ப்பலி கொடுக்கும் கொடுமையை முதன் முதலாக ஒளிவு மறைவின்றிக் கண்டித்த பெருமை நம் வள்ளலாருக்கே உரியது. இத் துறையில் நம் அடிகளார் புத்த பெருமானின் வாரிசாக விளங்குகின்றார்.

அவர் வாழ்ந்த காலத்திலும் காடன், மாடன், வீரன், காளி, கூளி, காட்டேரி என்னும் சிறு தெய்வங்கள் ஊர்தோறும் கோயில் கொண்டிருந்தன. அந்தத் தெய்வங்கள் மக்களுக்கு

Koviloor Digital Library

நோய்களைத் தருமென்ற மூட நம்பிக்கையும் நிலவி வந்தது. நோய்கள் வராமலிருக்கவும், வந்த நோய்களைத் தீர்க்கவும் வேண்டிக்கொண்டு. அந்தச் சிறு தெய்வங்களுக்கு ஆடு—கோழிகளைப் பலியிட்டு வந்தனர் மக்கள். இரக்கமே வடிவமான அடிகளார் அந்தக் கொடுமைகளைக் கண்டு குமுறினார்.

"நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போகவுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்."

என்று அடிகள் பாடியுள்ள பாடல், உயிர்ப்பலியின்பால் அவருக்கு இருந்த வெறுப்பை விளக்குவதாகும். வள்ளலாருக்கும் வள்ளுவருக்கும் இடையிலுள்ள 2,000 ஆண்டுக் காலத்தில் உயிர்க்கொலை பஞ்சமாபாதகங்களுள் ஒன்ருக வைத்து மத வாதிகளால் கண்டிக்கப்பட்ட தென்ருலும், உயிர்ப்பலி மட்டும் வெறுக்கப்படவில்லை. தெய்வங்களைத் திருப்திப்படுத்த அந்தக் கொடிய பழக்கம் தேவையென்று போதிக்கும் மதவாதிகளும் மக்கள் மத்தியில் நடமாடினர். அந்தச் சூழ்நிலையில் அடிகளார் தன்னந்தனியாக நின்று, உயிர்ப்பலியை எதிர்த்தாரென்ருல், அவருடைய புரட்சி உள்ளத்தை என்ன சொல்லிப் புகழ்வது !

"உறவினத்தார்" யார் ?

தமிழகத்தில் ஊர்தோறும் உள்ள மாரியம்மன் கோவில்களெல்லாம் பார் புகழும் பத்தினித் தெய்வமாம் கண்ணகியின் கோயில்களே யாகும். (இது பற்றிய விளக்கத்தைக் "கண்ணகி வழிபாடு" என்னும் எனது நூலில் காண்க.) தமிழினமே பெருமை கொள்ளத் தக்க மாபெரும் பத்தினித் தெய்வத்தை மக்களுக்கு நோய் தரும் சிறு தெய்வமாகக் கற்பித்த கொடுமையை என்னென்பது !

புலாலுணவை வெறுப்போரில் மிகப் பெரும்பாலோர் அதனை ஓர் உணவுப் பிரச்சினையாக மட்டுமே கருதுகின்றனர். இன்னுஞ் சிலர், புலாலுணவை விட்டுவிட்டதனாலேயே உயர்

Koviloor Digital Library

சாதி மனப்பான்மை கொள்ளுகின்றனர். அடிகளாருடைய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக் கொள்கையின் பொருளை நன்குணர்ந்து, அதன் விளைவாகப் புலாலுணவை விட்டவர்கள் மிகச் சிலராகவே இருக்கின்றனர். புலாலுணவை விட்டதனு லேயே ஒருவர் சுத்த சன்மார்க்கியாகிவிட முடியாது. ஆறறிவு படைத்த மனிதர்களைப் பல வகையிலும் துன்புறுத்தும் கொடியவர்கள் பலரும் புலாலுண்ணுதவர்களாக இருக்கக் காண்கின்ருேம். அவர்களெல்லாம் வள்ளலாரின் கருத்துப்படி உறவினத்தா ராகிவிட மாட்டார்கள்! இதோ, உறவினத்தார் யார் என்பதனை வள்ளலார் கூறுகின்ருர்:

" எத்துணையும் பேதமுருது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்ருர்
யாவர்அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடமெனநான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்
சிந்தைமிக விழைந்த தாலோ!"

இந்தப் பாடல், வள்ளலார் வழிபட விரும்பிய பூரண ஞானிக்குரிய இலக்கணத்தைக் கூறுகின்றது. இந்திய தேசிய ஒருமைப் பாடானுலும் சரி; வள்ளலார் விரும்பிய ஆன்மநேய ஒருமைப்பாடானலும் சரி, எள்ளளவும் பேதமின்றி உள்ளத்தால் அதனை விரும்பவேண்டும். அனைத்துயிரையும் தம்முயிர் போலக் கருதவேண்டும். ஆம்; ஒருமைப்பாட்டுணர்வு உள்ளத்தில் பிறந்து, உதட்டிலே ஒலிக்கவேண்டும். இந்தச் சன்மார்க்க நெறியெலாம் நிரம்பிய நெஞ்சுடையர் எவரோ, அவரே வள்ளலார் விரும்பிய உறவினத்தார்! மாருக, புலாலுணவை விட்டவர் அல்லது மரபுநெறி காரணமாகப் புலாலுணவை மறந்தவர் என்பதற்காகவே ஒருவரை வள்ளலார் சொன்ன உறவினத்தாராகக் கருதுவது அறியாமையாகும்.

உணவுப் பிரச்சினை யன்று; ஒருமைப் பிரச்சினை!

அடிகளார் புலால் உணவினை வெறுத்துச் சைவ உணவினை வலியுறுத்தினர் என்ருல், அது வெறும் உணவுப் பிரச்சினை யன்று; உயிர்க்குலத்தின் ஒருமைப்பாட்டுப் பிரச்சினை;

Koviloor Digital Library

ஆன்மநேய ஒருமைப்பாடுடைய புது உலகம் காணும் புனிதப் பிரச்சினை. இதனை மறத்தல் கூடாது.

> " மருவாணைப் பெண்ணுக்கி ஒருகணத்திற்
> கண்விழித்து வயங்கும் அப்பெண்
> உருவாணை உருவாக்கி இறந்தவரை
> எழுப்புகின்ற உறுவ னேனும்
> கருவாணை யுறஇரங்காது உயிர்உடம்பைக்
> கடித்துண்ணும் கருத்த னேல்எங்
> குருவாணை எமதுசிவக் கொழுந்தாணை
> ஞானிஎனக் கூறேன்றே,"

என்று பாடுகின்றார் இராமலிங்கர். "ஒருவர், ஆணைப் பெண் ணுக்கி, செத்தாரை எழுப்பிச் சித்துக்கள் புரிபவராக இருக் கலாம். அவரும் பிறிதொரு ஜீவனைக் கொன்று அதன் உயி ரையும் உடம்பையும் உண்ணும் எண்ணமுடையவராயின், அவரை 'ஞானி'யெனக் கூறேன்றது." என்கிறார் அடிகள். அவருக்குள்ள வேதனையில் "என் குருவாணை," "எனது சிவக் கொழுந்தாணை" என்றெல்லாம் ஆணையிடுகின்றார். அடிகளார் துவக்கிய சன்மார்க்க சங்கம் அவர் காலத்திலேயே வளர்ந்து வலுப்பெற வில்லை. காரணம், புலாலுண்பவர்களைச் சங்கத் தில் சேர்க்கக் கூடாதென்பதில் அடிகள் காட்டிய உறுதி என்றே சொல்லலாம்.

இராமலிங்கர், புலாலுணவை மறுத்துச் சைவ உணவினை வற்புறுத்தியதற்கான காரணங்களை, 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' என்னும் தமது அறிக்கையுள் விரிவாகக் கூறுகின்றார். உயிர் கள்பால் இரக்கம் காட்டும் உணர்வு தோன்றினாலன்றி, மனித குலத்தவரிடையே ஒற்றுமை ஏற்படுவதோ, இந்தியரிடையே தேசிய ஒருமைப்பாடு தோன்றுவதோ சாத்தியமில்லை யென்று கருதினார் அடிகள்.

ஆம்; மனிதனை மனிதன் சுரண்டுவதும், ஒரு நாட்டினரை இன்னொரு நாட்டினர் அடிமைப்படுத்துவதும்,ஒரு சாதியினரை அடிமைப்படுத்திப் பிறிதொரு சாதியினர் ஆதிக்கம் செலுத்து வதும், ஒரு மதத்தினரை மற்றொரு மதத்தினர் பகைப்பதும் உயிர்களனைத்தும் பரம்பொருளின் வடிவங்கள் என்ற உண் மையை உணராமலிருப்பதன் விளைவுகளே என்று அடிகள் நம் பினார். அதனால் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை அடிப்படையாக வைத்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டினை வளர்க்க முயன்றார்.

Koviloor Digital Library

மண்கட்டிக் கதை !

'ஜீவகாருண்யம்' என்றால், "உயிருள்ள ஜீவர்களிடத்துக் கருணை காட்டுவது" என்றே எல்லோரும் பொருள் கொள்வர். வள்ளலாரைச் சுற்றியிருந்த சீடர்களும் அப்படித்தான் கருதினர். அவர்களுக்கு ஒரு நாள் வள்ளலார் உபதேசித்ததாவது :

"மக்களிடத்தும் மாக்களிடத்தும் கருணை காட்டுவதோடு ஜீவகாருண்ணியம் முடிவுபெற்றுவிடாது; அது இன்னும் பரந்து செல்வது. உதாரணமாக ஒரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

"அன்பர்களே! இரு முதியவர்கள் ஒரு வீதி வழியே சென்றுகொண் டிருந்தனர்; அப்பொழுது அவருள் ஒருவரின் கால்பட்டு வீதியிற் கிடந்த ஒரு மண் கட்டி உடைந்து போயது. அதைக்கண்ட மற்றவர் உடனே மூர்ச்சையானார். மூர்ச்சையடைந்த அவருக்கு உபசாரங்கள் செய்து மூர்ச்சையைத் தெளிவித்து—முன்னையவர், 'தாங்கள் மூர்ச்சையுற்றதற்குக் காரணம் என்னை?' என வினவ, அதற்கு அம் முதியவர், 'உம்முடைய காலினால் அவ்வழகிய மண் கட்டி உடைந்து உருக்குலைந்து போனதே காரணம்' எனக் கூறினார்."

தீயோரைத் திருத்தல் !

வள்ளற்பெருமான் ஜீவகாருண்ய ஒழுக்கத்தினைக் கடைப்பிடிப்போர் தீயோரிடமும் தயையுடையவர்களாக ஒழுக வேண்டும் என்று போதித்தார். தீயோரை நல்வழிப்படுத்தும் மார்க்கத்தைக் கூறுமிடத்து,

"என்னிடத்தில் ஒருவன் வசப்படாத முரட்டுத்தனமாய் எப்படி யிருந்தாலும், (1) அவனுக்கு நல்ல வார்த்தை சொல்லுவேன், (2) மிரட்டிச் சொல்லுவேன், (3) தெண்டன் விழுந்து சொல்லுவேன், (4) பொருளைக் கொடுத்து வசப்படுத்துவேன், (5) அல்லது ஆண்டவரை நினைத்துப் பிரார்த்தனை செய்வேன். இப்படி எந்த விதத்திலேயாவது நல்ல வழிக்கு வரச் செய்து விடுவேன். நீங்கள் எல்லவரும் இப்படியே செய்தல் வேண்டும்."

என்று தம் சீடர்களுக்கு உபதேசித்தார். ஆம்; துன்மார்க்கரையும் வசப்படுத்த சன்மார்க்கரால் முடியும் என்பது அடிகளாரின் நம்பிக்கை.

Koviloor Digital Library

'கடை விரித்தேன், கொள்வாரில்லை!'

இதுகாறும் நாம் அடிகளாரின் ஆன்மிக—அரசியல்—பொருளாதார—சமய—சமுதாய—மொழிக்கொள்கைகளை அவருடைய வரலாற்றோடும் வாயுரையோடும் பொருத்திப் பார்த்து ஆராய்ந்தோம்.

இனி, சித்திவளாகத்தில் அமர்ந்து, தம்மை அணுகும் அடியவர்களுக்குப் போதித்துக்கொண் டிருக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புத்தர் பெருமானாகிய அடிகளாரை மீண்டும் நேரில் அணுகுவோம்.

அத்துவித நிலை

ஆண்டவன் தம்முடனும், தாம் ஆண்டவனுடம் பேசுகின்ற பாவனையில் அடிகளார் எழுதியுள்ள பாடல்கள், அவர் தெய்வ தரிசனம் பெற்றவ ரென்பதை விளக்கும். பாரதியார், "தெய்வம் நீயென் றுணர்." என்றார். அதன் பொருள், மனிதன் தெய்வத் தன்மை பெற முடியும் என்பதாம். அதனை, 'அத்துவித நிலை' என்பர் சமய சாத்திரிகள். வள்ளற் பெருமான், அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன் தம்மிற் கலந்து, அவனே தானாகவும் தானே அவனாகவும் மாறும் தருணம் வந்துவிட்டதாகக் கூறுகின்றார்.

" ஐயன்அருள் வருகின்ற தருணம்இது கண்டீர்
ஐயம்இலை ஐயம்இலை ஐயன்அடி ஆணை
மெய்யன்எனை ஆட்கொண்ட வித்தகன்சிற் சபையில்
விளங்குகின்ற சித்தன்எலாம் வல்லஒரு விமலன்
துய்யன்அருட் பெருஞ்சோதி துரியநட நாதன்
சுகஅமுதன் என்னுடைய துரைஅமர்ந்திங் கிருக்க
வையமிசைத் திருக்கோயில் அலங்கரிமின் விரைந்தே
மணியாலும் பொன்னாலும் மலராலும் வியந்தே."

" தனித்தலைமைப் பெரும்பதிஎன் தந்தைவரு கின்ற
தருணம்இது சத்தியம்காண் சகதலத்தீர் கேண்மின்"

Koviloor Digital Library

"சத்தியவான் வார்த்தைஇது தானுரைத்தேன் கண்டாய்
சந்தேகம் இலைஇதனில் சந்தோடம் உறுவாய்
இத்தினமே அருட்சோதி எய்துகின்ற தினமாம்
இனிவரும்அத் தினங்களெலாம் இன்பம்உறு தினங்கள்."

"என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனுர்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்ருர்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது
பேர்உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்திதுதான் சத்தியம்சத் தியமே"

என்றெல்லாம், வெற்றிப் பெருமிதங்கொண்டு, பேரின்ப வெறி பிடித்து, ஆனந்த பரவசமாகிப் பாடினர். அத்துவிதத் தத்துவத்தின் உண்மை அறிந்த அறிஞர்களே நம் அடிகளாரின் வாக்கிலுள்ள உண்மையை உணர முடியும்.

ஆண்டவர் வருவார் !

வடலூர்ச் சித்தர், தாம் ஆண்டவனுடன் அத்துவிதமானதோடு அமைதி பெறவில்லை; தாம்பெற்ற இன்பம் ஒவ்வொரு ஆன்மாவும் பெறவேண்டுமென்று விரும்பினர்; அதனல் தமக்குக் காட்சியளித்துத் தம்மிற் கலந்த அருட்ஜோதிக் கடவுள், அனைத்துயிர்களுக்கும் காட்சியளிக்க வல்லது என்றும் கூறினர். அடிகளாரைப் போன்று ஒவ்வொருவரும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை நெறி நின்று, ஆண்டவனை வழிபட்டால், அவர்களுக்கு அருட்ஜோதி காட்சியளிக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த உண்மையையே அடிகளார் உபதேசித்தார். இதனை உணராத மக்களுள் சிலர், சமரச சுத்த சன்மார்க்க நெறியைச் சாராதாரும் ஆண்டவனை நேரிற் காணும் தருணம் வந்துவிட்டதென்று அவர் கூறுவதாக எண்ணி அதனை நம்ப மறுத்தனர். அதனல்,

"ஆய்உரைத்த அருட்சோதி வருகின்ற
தருணம்இதே அறிமின் என்றே
வாய்உரைத்த வார்த்தைஎன்றன் வார்த்தைகள்என்
கின்ருர்இம் மனிதர் அந்தோ
தாய்உரைத்த திருப்பொதுவில் நடம்புரிந்தென்
உளங்கலந்த தலைவா இங்கே

Koviloor Digital Library

"உரைத்த திருவார்த்தை எனஅறியார்
இவர்அறிவின் நிகழ்ச்சி என்னே!"

என்று பாடினார் இராமலிங்கர். ஆண்டவன் வருந்தருணத்தில் அதுவரை செத்தவர்களை யெல்லாம் எழுப்பி, சமரச சுத்த சன் மார்க்க சங்கத்தைச் சாரும்படி செய்வார் என்றும் அடிகள் கூறினர். இதுபற்றி, 30—3—1871 ல் 'சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை' என்னும் தலைப்பிட்டு, அடிகள் வெளி யிட்டுள்ள பிரசுரத்தில் காணப்படுவதாவது :

"கர்ம கால முதலிய பேதங்களால் யார்க்காயினும் தேக ஆனி நேரிட்டால் தகனஞ் செய்யாமல் சமாதியில் வைக்க வேண்டும். இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து நம்முடன் இருக்கப் பார்ப்போம் என்கிற முழு நம்பிக்கை கையக் கொண்டு எவ்வளவுந் துயரப்படாமலும் அழுதரல் செய்யாமலும் சிற்றம்பலக் கடவுள் சிந்தையுடன் இருக்க வேண்டும்.

"புருடன் இறந்தால் மனைவி தாலி வாங்குதல் வேண் டாம். மனைவி இறந்தால் புருடன் வேறு கலியாணப் பிரயத் தனஞ் செய்யவேண்டாம். பிள்ளைகள் இறந்தால் சஞ்ச லிக்க வேண்டாம். கர்ம காரியங்கள் ஒன்றும் செய்ய வேண்டாம். தெரிவிக்கத் தக்கவர்களுக்குத் தெரிவித்து ஒரு தினத்தில் நேரிட்டவர்களுக்கு நேரிட்ட மட்டில் அன்ன விரயஞ் செய்ய வேண்டும். இவ்வாறு உண்மை யாக நம்பிச் செய்யுங்கள்.

"......எனது தந்தையா ராகிய எல்லாம் வல்ல திருச் சிற்றம்பலக் கடவுள் பார்வதிபுரம் சமரச வேத சன்மார்க்க சங்கத் தருமச்சாலைக்கு எழுந்தருளிக் காட்சி கொடுக்கும் தருணம் மிகவும் அடுத்த சமீபமாக இருக்கின்றது. அந்தத் தருணத்தில் சாலைக்கு உரியவர்களாகி யிருந்து இறந்தவர் களை யெல்லாம் எழுப்பிக் கொடுத்தருளுவார். இது சத்தியம். இது சத்தியம.

"இந்தக் கடிதம் வெளிப்பட்டறிந்து கொள்ளாமுன் இறந்து தகனமானவர்களையும் எழுப்பி யருளுவார். இது வெளிப்பட்டறிந்தபின் தகனஞ் செய்தல் கூடாது. அது சன்மார்க்கத்திற்குத் தக்கதல்ல.

"நம்பிக்கையுடன் இருங்கள், பெரிய களிப்பை அடை வீர்கள். இது சத்தியம். இது சத்தியம்."

—பா. பி. ப. பு. 5; பக். 105-6.

Koviloor Digital Library

அடிகளாரின் அறிக்கை

இந்த அறிக்கை, சமரச சுத்த சன்மார்க்க சங்க அங்கத்தினர்களாகி சத்திய தருமச் சாலையைச் சார்ந்திருந்தவர்களுக்காக மட்டுமே வெளியிடப்பட்ட தாகும். இதனால், "அருட்பெருஞ்சோதிக் கடவுள் வருவார், காட்சியளிப்பார், செத்தாரை யெழுப்பித் தருவார்; ஆகவே, இறந்தவர்கள் உடலை எரிக்காமல் புதைத்திடுக" என்று அடிகள் கூறியது, சன்மார்க்க சங்கத்தவர்க்கே யன்றி, மற்றவர்க்குப் பொருந்தா தென்பது புலனாகின்றது. இதனை நினைவில் கொண்டால், வள்ளலார் உபதேசத்திலுள்ள வாய்மையை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

அருட்பெருஞ்சோதி ஆண்டவரின் வருகை குறித்து அடிகளார் வெளியிட்டுள்ள மற்றொரு பிரசுரத்தின் சில பகுதிகள் வருமாறு :

"நண்பர்களே! அறிவு வந்த கால முதல் அறிந்து அறியாத அற்புத குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக் கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச் செயல்களையும், கண்டு அறியாத அற்புதக் காட்சிகளையும், இது தருணந் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேன் என்றுணருகின்ற ஓர் சத்திய உணர்ச்சியாற் பெருங்களிப்புடையேனாக இருக்கின்றேன்.

"நீவிர்களும் அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டும் என்று எனக்குள்ளே நின்று நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமைப் பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

"இனி இச் சீவர்கள் விரைந்து விரைந்து இறந்து இறந்து வீண் போகாமல், உண்மையறிவு, உண்மை யன்பு, உண்மை இரக்கம் முதலிய சுப குணங்களைப் பெற்று நற்செய்கையுடையராய், எல்லாச் சமயங்களுக்கும் உண்மைப் பொது நெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்று, பெருஞ் சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும்பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள் தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தால் இயற்றுவித்து 'இக்காலந் தொடங்கி

Koviloor Digital Library

அளவு குறிக்கப்படாத நெடுங்காலம் அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க யாமே அமர்ந்து விளையாடுகின்றோம்' என்னும் திருக் குறிப்பை வெளிப்படுத்தி அருட்பெருஞ் சோதியராய் வீற்றிருக்கின்றார்.

"ஆதலின் அடியிற் குறித்த தருணந்தொடங்கி வந்து வந்து தரிசிக்கப் பெறுவீர்களாகிற் கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர் பெற்றெழுதல் மூப்பினர் இளமையைப் பெற்று நிற்றல் முதலிய பலவகை அற்புதங்களைக் கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்."

இந்தப் பிரசுரத்தின் கடைசிப் பத்தியின் தொடக்கத்தில் "அடியிற் குறித்த தருணந் தொடங்கி" எனக் குறிப்பிட்டிருப்பது பற்றி, ஆ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தாம் வெளியிட்டுள்ள திருவருட்பாத் திருமுகப் பகுதியில்,

"வேறொருவரால் எழுதப்பட்டுச் சுவாமி கையெழுத்திட்டிருக்கும் இதன் மூலத்தில் இந்தத் தருணத்தின் விவரம் எதுவும் குறிக்கப்பட்டிருக்கவில்லை."

என்று தகவல் தந்துள்ளார்.

முன்னோர் சொன்ன முறை

ஆண்டவன் சுத்த சன்மார்க்கிகளுக்குக் காட்சியளிப்பார். அவர்களிலே செத்தவர்களை எழுப்பித் தருவார் என்று அடிகள் கூறியதில் ஒன்றும் புதுமையில்லை. தாயுமானவரும்,

" காகமுறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா காரசிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம்
பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகஉருவாய்க் கிடக்குதையோ
இன்புற்றிட நாம்இனி எடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச்
சேர வாருஞ் செகத்தீரே!"

என்னும் பாடலில், சிவபோகப் பேரின்ப வெள்ளம் ஏக உருவாய்த் திரண்டிருப்பதாகக் கூறி, 'புசிப்பதற்குச் சேர வாரீர்' என்று மனித குலத்திற்கு அழைப்பு விடுக்கின்றார். திருவாசகம் பாடிய மணிவாசகப் பெருமானும்,

Koviloor Digital Library

" காலமுண் டாகவே காதல்செய்(து) உய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டான்எங்கள் பாண்டிப் பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே"

என்னும் பாடலில், "தென்னாடுடைய சிவன், அருட் செல்வத்தைத் தன் அடியார்க்கு வழங்குகின்றான். அதனைப் பெறுவதற்கு வந்து முந்துங்கள்," என்கின்றார். தாயுமானவரும் மாணிக்கவாசகரும் கூறியதையே வள்ளலாரும் கூறினார்.

அடிகள், 'இறைவர் வருவார்' எனப் பொதுப்படக் கூறியதன்றி, இன்ன தேதியில் வருவார் என்று கூறினாரல்லர்.

புரியாத்தனம்!

மக்களுள் சிலர், வள்ளலார் கூறியதன் பொருளைச் சரிவர உணர்ந்துகொள்ள மாட்டாதவர்களாய், இறந்துவிட்ட தத்தம் உறவினர்களின் பிரேதங்களை வடலூர்ப் பெரு வெளியில் கொண்டு கிடத்தி, 'ஆண்டவன் வருவார்—உயிர் தருவார்' என்று காத்துக் கிடந்தார்கள் என, செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. அக்கால மக்களுக்கிருந்த அறியாமையை நினைக்குங்கால், அப்படியும் நடந்திருக்கக்கூடும் என்று நம்பவேண்டியிருக்கிறது. அஃது எப்படியாயினும், "ஆண்டவர் மேட்டுக் குப்பம் சித்திவளாகத்திற்கு வருவார், காட்சி தருவார், செத்தாரையெல்லாம் எழுப்புவார்," என்று நம்பிய மக்கள், சித்தி வளாக வெளியில் திரண்டதென்னவோ உண்மை. வள்ளலாரைச் சங்கடத்தில் வைக்க வேண்டும், அவர்பால் மக்களுக்கு வெறுப்பு ஏற்படுத்த வேண்டும்—என்று எண்ணிய குறும்பர்களின் தூண்டுதலும் மக்கள் திரண்டதற்குக் காரணமாக இருக்கலாம்.

அடிகள் எச்சரிக்கை!

மக்களின் அறியாமை யறிந்து வருந்திய பெருமான், தம் கையொப்பத்துடன் 8-9-1873-ல் கீழ்வரும் பிரசுரத்தை வெளியிட்டார்.

திருச்சிற்றம்பலம்

உலக அறிவிப்புப் பத்திரிகை

ஞான சித்திபுர மென்றும் உத்தர ஞானசிதம்பர மென்றும் பிரமாணிக்கப்படுகின்ற வடலூர் சத்திய ஞான

Koviloor Digital Library

சனபக்கு முக்கிய சம்பந்தமுடையதாகி அடுத்த கருங்குழி யெல்லை மேட்டுக் குப்பத்தில் வழிபடப்படுகின்ற சித்தி வளாகத்தில் வந்திருக்கின்றவர்களும் வருகின்றவர்களும் வருபவர்களுமாகிய ஜனங்களுக்கு அறிவிப்பது.

மேல்குறித்த விடத்தில் இந்த மாதத்திற்கடுத்த புரட்டாசி மாதம் ஐந்தாந் தேதியில் அற்புத விளக்கம் நேரிடுவதாக ஓர் வதந்தி வழங்கப்படுகின்றது. அது கேள்விப்பட்டு நம்புதலோடு நீங்கள் நீர்களும் பொருள் வகையாலும் தேகவகையாலும் உழைப்பெடுத்துக்கொண்டு பின்பு நிட்டுரப்பட்டுக் கொள்ளுதல் வேண்டாம். அந்தக் கேள்வி உண்மையல்ல. இவ்விடத்தில் அற்புதம் விளங்குவது மெய்யோ பொய்யோ, இந்தக் காலமோ எந்தக் காலமோ. ஆகலில், இந்த அறிவிப்பினால் ஜாக்கிரதையோடு உங்களுக்கு அடுத்த காரியங்களெவையோ அவைகளைச் செய்வீர்களாக!

சிதம்பரம்
இராமலிங்க பிள்ளை

இது, அடிகளார் மறைவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு அவர் பெயரால் சித்திவளாகத்திலிருந்து வெளியான விளம்பரமாகும்.

இராமலிங்கர், பேராசைக்காரர்! இதனை, "என் ஆசை ஒரு கடலோ, எழுகடலிற் பெரிதே," என்றும், "என்தரத்திற் கேலாத எண்ணங்கள் எண்ணுகின்றேன்," என்றும் அடிகளார் பாடியுள்ள வரிகளால் அறியலாம். தாம் கோரியவற்றையெல்லாம் தெய்வம் கொடுக்கும் என்று அவர் உறுதியாக நம்பினர். அந்த நம்பிக்கையின் விளைவாக, மக்கள் கண் காண ஆண்டவர் வரவேண்டும் என்ற தமது விருப்பத்தை, 'வருவார்' என்று உறுதியுடன் கூறினர். இதனை,

" வருமுன் வந்ததாக் கொள்ளுதல் எனக்கு
வழக்கம் வள்ளல்நீ மகிழ்ந்தருட் ஜோதி
தருமுன் தந்தனை என்றிருக் கின்றேன்
தந்தை நீதரல் சத்தியம் என்றே
குருமுன் பொய்யுரை கூறிலேன் இனிஇக்
குவல யத்திடைக் கவலையைத் தரியேன்

Koviloor Digital Library

திருமுன் விண்ணப்பம் செய்தனன் கருணை
செய்க வாழ்கநின் திருவருட் புகழே''

என்னும் பாடலில் அவரே உறுதிப்படுத்துகின்றார்.

இறைவனிடம் இறவாப் பெருவரம் பெறவேண்டுமென்பதில் அடிகளார் காட்டிய பிடிவாதத்திற்குக் கீழ் வரும் பாடல் சிறந்த சான்றாகும்.

'' வான்வேண்டு சிற்றம் பலத்தே
வயங்கி வளர்அமுதத்
தேன்வேண்டி னேன்இத் தருணத்
தருள்செய்க செய்திலையேல்
ஊன்வேண்டும் என்உயிர் நீத்துநின்
மேற்பழி யோவிளைப்பேன்
நான்வேண்டு மோபழி தான்வேண்டு
மோசொல்க நாயகனே.''

இந்தப் பாடலின் பொருள், மணிவாசகப் பெருமான் 'கோயில் மூத்த திருப்பதிகத்'துள் பாடியுள்ள,

'' அருளா தொழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
தெருளார் கூட்டங் காட்டாயேல்
செத்தே போனாற் சிரியாரோ!''

என்னும் பாடலோடு பொருந்துவதாகும்.

இராமலிங்கரின் பிடிவாதமான பக்தி, அவருக்கு இறவாப் பெருவாழ்வினைத் தந்தது. ஆனால், சமரச சுத்த சன்மார்க்கரல்லாத சாதாரண மக்கள் மரணமிலாப் பெருவாழ்வு பெறுவது இயலாது ? இந்த உண்மையை அடிகளாரும் அறிவார். ஆயினும், மாக்களாகக் கிடந்தவர்களை யெல்லாம் மக்களாக மாற்றுவான் வேண்டி, அவர்களுக்கும் மரணமிலாப் பெருவாழ்வு கிடைக்குமென்று கூறினார் போலும்!

Koviloor Digital Library

சீடர்களின் சச்சரவு!

'ஒழுக்கம்' என்பது, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பிற ருக்கு வழங்கப்படும் 'பண்டமா'க இருந்து வருவதன்றி, மக்க ளுள் ஒவ்வொருவரும் விரும்பிக் கடைப்பிடிக்கப்படும் வாழ்க்கை நெறியாக இருக்கவில்லை. சிலர் மட்டுமே இதற்கு விலக்காவர்.

அடிகளது சமய—சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகள், அவரைச் சுற்றியிருந்தவர்களாலேயே சரிவர அனுட்டிக்கப்பட வில்லை. அவர் துவக்கிய சத்திய தருமச்சாலை, சத்திய ஞான சபை ஆகியவற்றை அவரே நேரடியாக நிர்வகிக்கவில்லை. சீடர்களைக் கொண்டே நடத்திவந்தார். அவ்விடங்களில் ஒழுக்கமும் ஒழுங்கும் அடிகளாருக்கு மன நிறைவு அளிக்கும் வகையில் நிலவவில்லை.

அதனால் மனம் வருந்திய வள்ளலார், சத்திய தருமச் சாலை யிலிருந்த திரு அப்பாசாமி செட்டியார் என்பவர்க்குத் தாம் சித்திவளாகத்தி லிருந்தபடி 9—3—1872-ல் ஒரு கடிதம் எழுதி னார். அதன் வாசகம் வருமாறு :

> "இந்தச் சாலையால் எனக்கு மிகவும் சலிப்பு உண்டா கிறது. அந்தச் சலிப்பு இரண்டு பக்கத்திலும் உபத்திரவம் பண்ணும். ஆதலால், சாலையிலிருக்கிறவர்களெல்லாம் சன் மார்க்கத்திற்கு ஒத்து, வாயடங்கி மனமடங்கி இருக்க வேண்டும். என்மேற் பழியில்லை. சொல்லிவிட்டேன். பின்பு வந்ததைப் படவேண்டும்."
>
> —பா. பி. ப. பு. 5; பக். 107.

சபை பூட்டப்பட்டது!

அந்தரங்க எச்சரிக்கை பயன் தரவில்லை. அதனால் சத்திய தருமச்சாலையிலும் சித்திவளாகத்திலு மிருந்த அன்பர்களை வெளிப்படையாகவே எச்சரித்து, 25—11—1872ல் ஒரு பிரசுரம் வெளியிட்டார். அதில், கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளுமாறு திரும்பவும் வேண்டுகோள் விடுத்ததுடன், "நடக்கத் தவறு வோர் வெளியேற்றப்படுவார்கள்" என்றும் எச்சரித்திருந்தார். அதுவும் பயன் தரவில்லை. 'ஒழுங்கீனம்' என்பது, சமுதாயத் தைப் பிடித்துள்ள பொது வியாதி. அஃது அடிகளாருடைய அன்பர்களிடத்தும் எதிரொலித்தது. அடிகள் மனம் நொந்தவ ராய்ச் சத்திய ஞானசபையையே பூட்டிவிடச் செய்து, அர்ச்சக ரிடமிருந்து சாவியை வாங்கிக் கொண்டார். வைதிகர்களின் கடுமையான எதிர்ப்புக்கிடையேயும் தமது பெருமுயற்சியால்

Koviloor Digital Library

அமைத்த சமரசக் கோயிலான சத்திய ஞானசபையை மூடுங் கால், அடிகளாரின் பக்தியுள்ளம் என்ன பாடுபட்டதோ!

1873ஆம் ஆண்டு அக்டோபர் 5ஆம் நாளன்று, நம் அடிகளார் ஐம்பதாமாண்டினை முடித்துக்கொண்டு, ஐம்பத்தொன்றில் அடியெடுத்து வைத்தார். மரணமிலாப் பெருவாழ்வினை விரும்பி, அதனைத் தாம் அடைந்துவிட்டதாகவும் உலகுக்கு அறிவித்த பெரியார், அரை நூற்றுண்டுக்காலம் வாழ்ந்த பின்னர், மண்ணுலகர் கண்களிலிருந்தே மறைந்துவாழ விருப்பங் கொண்டார்.

தோல்வி மனப்பான்மையா?

அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்திருந்த உலகர் அனைவரையும் திருத்திப் புதுவுலகங் காண வந்த தெய்வத் தூதர், தாம் வந்த காரியம் முடியுமுன்பே மறையத் திருவுளங் கொண்டதற்குக் காரணமென்ன? தோல்வி மனப்பான்மையா? இல்லை. அமரருலகை அடைய விரும்பி அவனி வாழ்வை வெறுத்தாரா? அப்படியுமில்லை. இகத்தே பரத்தைப் பெற்று வாழ்வதுதானே அடிகளாரின் குறிக்கோள்? மற்று, உயிர்களுக்கெல்லாம் தொண்டு செய்ய விரும்பிய பெருமான், தன்னளவில் வீடுபேற்றின்பத்தைத் துய்க்க எண்ணி உலக வாழ்வை வெறுப்பாரா? ஒருபோதுமில்லை. ஆண்டவன் அருள் கிடைக்காமல் ஏமாந்து வாழ்வை வெறுத்தாரா? இல்லவே இல்லை.

"காற்றுலே புவியாலே ககனமத னுலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றுலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றுலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்அளிக்க வேண்டும்என்றேன் விரைந்தளித்தான் [எனக்கே
ஏற்றுலே இழிவெனநீர் நினையாதீர் உலகீர்
எந்தைஅருட் பெருஞ்ஜோதி இறைவனைச்சார் வீரே"

என்னும் பாடலில், ஆண்டவனை வேண்டி அழியாத உடல் பெற்ற செய்தியைக் கூறிய அடிகளார், அவ்வுடல் ஆண்டவன் அமர்ந்த கோயிலாக மாறிய அற்புதத்தையும் கூறுகின்றார்:

"என்சாமி எனதுதுரை என்உயிர்நா யகனுர்
இன்றுவந்து நான்இருக்கும் இடத்தில்அமர் கின்றுர்
பின்சாரும் இரண்டரைநா ழிகைக்குள்ளே எனது

Koviloor Digital Library

பேர்உடம்பில் கலந்துளத்தே பிரியாமல் இருப்பார்
தன்சாதி உடையபெருந் தவத்தாலே நான்தான்
சாற்றுகின்றேன் அறிந்ததுதான் சத்தியம்சத் தியமே."

ஆண்டவனுடன் தாம் இரண்டறக் கலந்து இகத்தே பரத்தைப் பெற்று இன்புறுவதாகப் பாடிய தெய்வத் திருவாளருக்கு ஏமாற்றம் ஏது?

எதிர்ப்புக் கண்டு அச்சமா?

பின், தமக்கு ஏற்பட்ட எதிர்ப்புக்கண்டு கலங்கி, உலகியலை வெறுத்தாரா? அப்படியும் சொல்வதற்கில்லை. நம் ஐயன் ஐம்பதாவது வயதைத் தாண்டும்போது, தமது முன்னேற்றத்திற்கு எதிரிகள் போட்ட தடைகளையுங்கூடத் தாண்டி, வெற்றி வீரராகத் திகழ்ந்தார். இதனை,

அற்புதம் அற்புத மே—அருள்
அற்புதம் அற்புத மே!

வஞ்சக ரஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
'தஞ்சம் எமக்கருள் சாமிநீ' என்றனர்,
சன்மார்க்க சங்கத் தவர்களே வென்றனர். (அற்)

புறங்கூறி னரெல்லாம் புல்லெனப் போயினர்
பொற்படிக் கீழ்ப்புற மீளவு மேயினர்
'மறங்கூறி னேமென்செய் வோமெ'ன்று கூயினர்
'வாழிய' வென்றுசொல் வாயின ராயினர். (அற்)

கண்கொண்ட பூதலம் எல்லாம் சன்மார்க்கம் கலந்துகொண்டே
பண்கொண்ட பாடலில் பாடிப் படித்தும் பரவுகின்றார்
விண்கொண்ட சிற்சபை ஒன்றே நிறைந்து விளங்குகின்ற
தெண்கொண்ட மற்றைமத மார்க்கம் யாவும் இறந்தனவே.

என்னும் பாடல்களால் அறிகின்றோம். அடிகள் மறைய விரும்பிய காலத்தில், அவர் மனத்தில் எதிரிகளைப் பற்றிய அச்சம் சிறிது கூட இல்லை என்பதை மேலே தந்துள்ள பாடல்களால் அறியலாம்.

Koviloor Digital Library

இதோ, தாம் காண விரும்பிய சாதி—மத பேதமற்ற புதிய யுகம்பிறந்து, அந்தப் புது யுகத்தின் முதல் நாளில் காலைக் கதிரவன் தோன்றக் கண்டு, ஆண்டவனுக்குப் பள்ளி யெழுச்சி பாடுகின்றார் :

"ஒருமையின் உலகெலாம் ஓங்குக எனவே
ஊதின சின்னங்கள் ஊதின சங்கம்
பெருமைகொள் சமரச சுத்தசன் மார்க்கப்
பெரும்புகழ் பேசினர் பெரியவர் சூழ்ந்தார்
அருமையும் எளிமையும் ஆகிஅன் றாகி
அம்பலத் தேசித்தி ஆடல்செய் பதியே
இருமையும் அளித்தஎன் அருட்பெருஞ் சோதி
என்அர சேபள்ளி எழுந்தருள் வாயே!"

"மதம்பிடித் தவர்எல்லாம் வாய்பிடிப் புண்டு
வந்துநிற் கின்றனர் வாய்திறப் பிப்பான்
கதம்பிடித் தவர்எல்லாம் கடும்பிணி யாலே
கலங்கினர் சூழ்ந்தனர் உலம்புறு கின்றார்
பதம்பிடித் தவர்எல்லாம் அம்பலப் பாட்டே
பாடினர் ஆடினர் பரவிநிற் கின்றார்
இதம்பிடித் தெனையாண்ட அருட்பெருஞ் சோதி
என்ஐய னேபள்ளி எழுந்தருள் வாயே!"

வள்ளலார் மண்ணுலகோர் பார்வையிலிருந்து மறைய விரும்பியதற்குக் காரணம், தோல்வி மனப் பான்மையன்று என்பது அவருடைய பாடல்களாலேயே உறுதிப்படுகின்றது.

நொந்து கூறினார்!

அடிகள் மறைய விரும்பியதற்கான காரணத்தை அவரே கூறியதாகத் தொழுவூர் வேலாயுத முதலியார் அறிவித் துள்ளார். அது வருமாறு :

"இவர், இந்து சாத்திரங்களிலுள்ள நல்லொழுக்கக் கருத்துக்களைப் பிரசங்கிப்பதிலும், அகிலமாம் சகோதர ஐக்கிய ஒற்றுமை, இரக்கம், தயவு முதலியவைகளின் கருத்தை, ஜனங்களின் மனத்தில் தைக்கும் படிக்குச் செய் வதிலும் ஊக்கமாயிருந்தார். என்றாலும், அவர் கொடுத்த உன்னத, நல்லொழுக்கங்களை மதித்து, அபிமானித்தவர்

Koviloor Digital Library

கள் வெகு சிலரேயாவர். இதைப் பற்றிக் கடைசி காலத்தில் விசனமுற்று அடிக்கடி இவர் சொன்னதாவது :

"அகில சகோதர ஒற்றுமையைப் பாராட்டும் இச்சங்கத்தில் அங்கத்தினராக வர நீங்கள் அருகரல்லர். இச்சங்கத்தின் உண்மை யங்கத்தினர், இந்தியாவிற்கு வடக்கே வெகு தூரத்தில் வசிக்கிறார்கள்.

"நீங்கள் நான் சொல்வதைக் கேட்பதில்லை. எனது கருத்தின்படி நடக்கவுமில்லை. நான் சொல்வதைக்கவனிக்க மாட்டோம் என்று திடப்படுத்திக் கொண்டீர்கள் போலும். என்றாலும், காலம் நெருங்கிவிட்டது. ருஷியாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இன்னும் இதர நாடுகளிலிருந்தும் அறிவாளிகள் இந்தியாவிற்கு வந்து, இதே அகில சகோதர ஒற்றுமையின் கொள்கைகளைப் பிரசங்கிப்பார்கள்.

"நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளை, அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள். வடக்கே வெகு தூரத்தில் வசிக்கும் அம்பல சகோதரர்கள், இந்தியாவில் அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக் கூடாத நன்மைகளை விளைவிப்பதை, சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள்."

மறைந்துவிட முடிவு!

தொழுவூர் முதலியார், அடிகளாரின் பிரதமசீடர் என்பதை அறிவோம். அதனால் அடிகளாரின் மறைவு பற்றி அவர் தரும் செய்தியை நாம் நம்ப வேண்டியிருக்கிறது. முதலியார் தரும் தகவலிலிருந்து, என்றேனும் ஒரு நாள் தம்முடைய குறிக்கோள்கள் நிறைவேறுமென்ற நம்பிக்கையுடன் அடிகள் இருந்தார் என்பதையும், அந்த வெற்றித் திருநாள் விரைவிலேயே வரக்கூடு மென்ற உறுதியும் அவருக்கிருந்த தென்பதையும், தோல்வி உணர்ச்சி அவரிடம் துளிகூட இல்லை யென்பதையும் தெள்ளத் தெளிய அறிகிறோம்.

"பன்மார்க்கம் எல்லாம் பசையற் றொழிந்தனவே
சன்மார்க்கம் ஒன்றே தழைத்ததுவே—சொன்மார்க்கத்
தெல்லா வுலகும் இசைந்தனவே எம்பெருமான்
கொல்லா நெறிஅருளைக் கொண்டு"

என்று அடிகளார் பாடியுள்ள பாடல், அவரது உள்ளம் வெற்றிப் பெருமிதத்தோடு உறவு கொண்டிருந்ததனை உணர்த்தும்.

Koviloor Digital Library

ஆனால், தம்முடைய சமய-சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை உலகுக்கு வழங்குவதற்கான தலைமையை ஏற்கும் தகுதி தமிழகத்திற்கு இல்லை என்று அடிகள் கருதினார். ஆம்; ஐம்பதாண்டுகள் வாழ்ந்து, அறிவு தெரிந்த நாள் தொட்டு உலக ஒருமைப்பாடு காண உழைத்து, அதன் வழியே தாம் பெற்ற அனுபவத்தினால், தமிழகத்தின் — தமிழினத்தின் குறைபாட்டினை உணர்ந்தார். அதனால், உலகினர் பார்வையிலிருந்து மறைந்துவிடத் திட்டமிட்டார்.

காந்தியடிகளுக்கும் இதே கதி!

தம் வாழ்நாளின் இறுதியில் காந்தியடிகளும் இதே விதமான மனநிலையை அடைந்தார்.

"இந்தியா இப்பொழுது உருவாகி வருவதைப் பார்த்தால் எனக்கு அதில் இடங்கிடையாதென்று தோன்றுகிறது. 125 ஆண்டுகள் உயிரோடு இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை விட்டுவிட்டேன். இன்னும் ஓர் ஆண்டோ, இரண்டு, ஆண்டோ இருக்கலாம்."

—'அரிஜன்', 15—6—47.

காந்தியடிகள் மனச்சோர்வுற்றதற்குக் காரணம், அவரைச் சுற்றியிருந்தவர்கள் அவரை நடத்திய முறைதான். ஆம்; சகாக்களிடமே நம்பிக்கை இழந்த நிலையில்தான் காந்தியடிகளை மரணம் அணுகியது.

வள்ளலாரும் பொது மக்களால் ஏமாற்றப்படவில்லை. தம்மைச் சுற்றியிருந்தவர்கள், தம்முடைய குறிக்கோள்களை உணர்ந்து நடக்காத நிலைகண்டு, அவர் மனம் வருந்தினார். காரணம் எதுவாயினும் சரி; அடிகள், மண்ணுலகோர் பார்வையிலிருந்து மறைவதென்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

உடலை வருத்தல்!

தாம் மறைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பிருந்தே தம் உடலை அதற்குப் பக்குவப் படுத்தலானார். இதுபற்றிய நூற்சான்று வருமாறு :

"சில நாள் ஒரு வேளையும், பின்னர் ஒரு வேளையிலும் நாளுக்கு நாள் முக்கால்—அரை—கால் ஆகவும் ஆகாரம் கொண்டு, அதனையும் நிறுத்தித் தூதுளங் கீரையைத் தின்று, அதனையும் நிறுத்திச் சுத்த ஜலம் அருந்தி, அதனை

Koviloor Digital Library

யும் நிறுத்தித் தேன் அருந்தித் தமது சரீரத்தினை வன்மை யற்றதாகச் செய்து வைத்திருந்தார்.''

— நியாய வச்சிர குடாரம், பக். 172.

அடிகள், தமது பிரிவைச் சமாளிப்பதற்குத் தம் சீடர்களை யும் பக்குவப்படுத்த முயன்று அடிக்கடி உபதேசங்கள் புரிந் தார். அது பற்றிய செய்தி வருமாறு :

"இவர், ஐம்பத்தொரு வயதை அடைந்தபோது, தாம், உலகை விட்டுப் போவதாகச் சொல்லி, சீடர்களுடைய மனத்தை, ஒருவகை ஆறுதலுக்குக் கொண்டுவர ஆரம் பித்தார். சமாதியி லிருக்கப்போவதாகத் தமது விருப்பைக் காட்டினர். இவர், 1873ம் ஆண்டில் ஆறு மாத காலமாக மன்பதை உலகுக்குள்ள சகோதர ஒற்றுமையைப் பற்றி வெகு விமரிசையாகப் போதித்தார்.

"பின்னர், அவ்வாண்டுக் கடைசியில், மூன்று மாத மாய்ப் பிரசங்கஞ் செய்வதை நிறுத்திவிட்டு மௌனமாய் இருந்தார்.

"1874-ஆம் ஆண்டில், ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கி, இனி நடக்கப்போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார்."

[சென்னை சமரச சன்மார்க்க சங்கத்தார் வெளியிட்டுள்ள 'திருவருட்பா ஐந்து திருமுறைகள்' : பக்கம். 4.]

இறுதி உபதேசம்!

பெருமான், தாம் கோயில் கொண்டிருந்த சித்திவளாகம் என்னும் தெய்வத் திருமாளிகையில் சில நாள் கதவை முடிக் கொண்டு வெளிவரா திருத்தலும், பின்னர் வெளிவருதலும்— வெளிவந்த நாட்களில் உபதேசம் நிகழ்த்துவதுமாகப் பல மாதங்களைக் கழித்தார்.

ஒருநாள் அடிகள் சித்திவளாகத்திற்குள் ளிருந்த விளக் கைத் திருமாளிகைப் புறத்தில் வைத்து,

"இதைத் தடைப்படாது ஆராதியுங்கள். இந்தக் கத வைச் சாத்திவிடப் போகிறேன். இனி கொஞ்ச காலம் எல் லோரும்—ஆண்டவர் இப்போது தீப முனையில் விளங்கு கிறபடியால்—உங்களுடைய காலத்தை வீணிற் கழிக்கா மல், 'நினைந்து நினைந்து' என்னும் தொடக்கமுடைய பாடலிற் கண்டபடி, தெய்வ பாவனையை இந்தத் தீபத்திற்

Koviloor Digital Library

செய்யுங்கள். நானிப்போது இந்த உடம்பிலிருக்கிறேன். இனி எல்லா உடம்பிலும் புகுந்துகொள்வேன்."

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அடிகள் சுட்டிய பாடல்

இந்த உபதேசத்தில் அடிகளார் குறிப்பிட்டுள்ள 'நினைந்து நினைந்து' என்னும் தொடக்கமுடைய பாடல் வருமாறு:

"நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந் தூற்றெழுங்கண்
ணீரதனல் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதும்நாம்
வம்மின்உல கியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில்
புகுந்தருணம் இதுவே."

இந்த "ஒத்திகைச் சடங்குகள்" முடிந்ததும், ஒருநாள் தம்மைச் சூழ்ந்திருந்தவர்களை நோக்கிக் கீழ்வருமாறு போதித்தார்:

"ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சகோதரர்களே!

"நாம் அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரின் ஆணைப் படி, கடையை விரித்தோம், கொள்வார் இல்லை; கட்டி விட்டோம். ஆதலால், இனி இரண்டரைக் கடிகை நேரம் உங்களுடைய ஊனக் கண்களுக்குத் தோன்ற மாட்டோம். நீங்கள் இந்தத் தீபத்தினைக் கடவுள் எனக்கொண்டு ஜீவ காருண்ய நெறியில் வழிபட்டு உய்யுங்கள். பிறகு அருட் பெருஞ் ஜோதி ஆண்டவர் வருவார்; அப்போது பல

Koviloor Digital Library

அற்புதச் சித்துக்கள் நிகழ்த்துவார்; திருவருட் செங் கோலாட்சி செலுத்துவார்; அகவினத்தார்களுக்குச் சாகா வரமும், ஏனையோர்க்குப் பரிபாக நிலையையும் அளிப்பார்."

தீர்க்க தரிசன வாக்கு

அடிகள் தாம் மறையு முன்னர்த் தம்மைச் சுற்றியிருந்த அடியார்களுக்கு வழங்கிய உபதேச மொழிகளில் முக்கியமான வற்றைத் தொகுத்து மக்கள் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளார் தொழுவூர் வேலாயுத முதலியார். அது வருமாறு:

(1) நான் கொடுத்த போதனைகளை, இந்துக்கள் செவி யுற்றுக் கேளாதபோதிலும், வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத் திருக்கும் மகாத்மாக்கள் அந்நிய நாட்டாருக்கு வெளிப் படுத்துவார்கள். அந்நிய நாட்டார் அவைகளைச் சந்தோஷத் துடன் ஏற்றுக்கொள்வார்கள்.

(2) தற்போது உலகில் மேலிட்டிருக்கும் கலிபுருட னின் விபத்துக் கேதுவான செல்வாக்கு இனிப் பத்து வருடத்திற்குள் (கலி 5,000-த்துடன்) அடங்கிப் போகும்.

(3) மாமிசம் உண்ணும் வழக்கம் நாளாவட்டத்தில் விட்டுப் போகும்.

(4) சாதி, வமிச முதலியவைகளால் ஏற்படும் வேற் றுமையானது அடைவினில் நீங்கிப்போய், அகிலமாம் சகோதரத்துவத்தின் மூலக் கருத்தின் சாரத்தை ஒத்துக் கொண்டு, இந்தியாவில் 'சகோதர அறம்' நிலைநாட்டப் பெறும்.

(5) உண்மையில், 'கடவுள்' எனப்படுவது 'அகில மாம் அன்பாம்,' அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலை நிறுத்துகின்றது.

(6) ஒவ்வொருவருக்குள்ளும் அடங்கியிருக்கும் தெய் வீக சக்தியை, மானிடர்கள் தெரிந்துகொண்டதும், இயற் கைச் சக்திகளை மாற்றக்கூடிய அற்புத வல்லமைகளைப் பெறுவார்கள் என்பதாம்.

ஒருமைப்பாடுடைய புது உலகங் காணப் பாடிய புனிதரின் திருவாய், கடைசி உபதேசத்தை வழங்கி முடித்தது. பிறகு அடிகள், தம் எதிரில் கண்கலங்கி நின்ற சீடர்களுக்கு ஆறுதல்

Koviloor Digital Library

கூறி, ஆசிமொழிகளும் புகன்றார். மேலும் அடிகள், "நான் உள்ளே பத்துப் பதினைந்து தினம் இருக்கப் போகிறேன். பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள். ஒருகால் பார்க்க நேர்ந்து பார்த்தால் யாருக்கும் தோன்றாது. வெறு வீடாகத்தா னிருக்கும்படி ஆண்டவர் செய்விப்பார். என்னைக் காட்டிக் கொடார்" என்று கூறினார்.

'ஆண்டவன் காப்பான்!'

பின்னர், தாம் திருக்கதவை மூடியிருக்குங்கால் அரசாங்கத் தினர் திறக்கும்படி ஆக்ஞாபிக்கின் ஆண்டவர் அருள் செய்வார் என்று கூறிவிட்டு, தாம் இருந்த சித்திவளாகத்திலுள்ள ஓர் அறையில் நுழைந்தார். அறையின் கதவு காப்பிடப்பட்டது. அடிகள் ஆவியோடியைந்த யாக்கையுடன் மறைந்த அந்தப் புனித நேரம், 1874-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, நள்ளிரவு 12-மணியாகும்.

தமிழினம் பண்டு செய்த தவப் பயனாய்த் தோன்றிய மகான் தம் காலத்தில் வாழ்ந்த தமிழர்களின் ஆதரவின்மை யால், ஆன்மநேய ஒருமைப்பாடு காணும் புனிதப் பணி முற்றுப்பெறு முன்னரே யாக்கையோடு மறைந்துவிட்டார்.

'திரும்பவும் வருவேன்'

அடிகள் மறையுங்கால், "திரும்பவும் வருவேன்" என்று சொன்னதாகவும், அதுவரையில், இந்தியாவில் மாத்திரமல்லா மல், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உலக முன் னேற்றங் கருதிப் பாடுபடப் போவதாகத் தெரிவித்ததாகவும், தொழுவூர் வேலாயுத முதலியார் கூறுகின்றார். "அவர் மறை யுங்கால், மறுபடியும் வருவதாகச் சொன்னாரே தவிர, வருங் காலம், சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரி விக்கவில்லை" என்கிறார் முதலியார்.

இராமலிங்கர் கடைசியாகப் பாடியதாக நம்பப்படும் பாடல் வருமாறு :

"பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சைஎலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சம்எலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும்பேர் ஆனந்த நித்திரைசெய் கின்றேனே."

Koviloor Digital Library

மறைவுக்குப் பிறகு...

"எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநினது அருட்புகழை இயம்பியிடல் வேண்டும்."

என்று பாடிய அருட்பிரகாச வள்ளலார், அந்தப் பணியை நிறைவேற்றும் பொருட்டுப் பூதவுடலுடன் புவியோர் பார்வையிலிருந்து மறைந்தார். திரும்பவும் பாரதத்தில்—அதன் அங்க நாடான தமிழகத்தில், தாம் காட்சியளிக்கப் போவதாகக் கூறிய பெருமான், "அதுவரையில், ஐரோப்பா—அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உலக முன்னேற்றங் கருதி வேலை செய்யப் போகிறேன்" என்று கூறியதாக, அவரது தலை மாணக்கர் அறிவிக்கிருர். அதன்படி, நம் அருட்பிரகாசர், சித்தர்களிலொருவராகி, இன்றளவும் நம்மிடையே வாழ்கிருர்; என்ருே ஒரு நாள் பக்தர்கள் மத்தியில் தோன்றுவார் என்ற நம்பிக்கை இன்றளவும் நிலவி வருகிறது.

சித்திவளாகத்தின் நிலை

அடிகள் மறைந்த பின்னர், அவருடைய சீடர் குழாம் சேர்ந்திருந்து, அவர் விட்டுப்போன பணியைத் தொடர்ந்து நடத்தவில்லை. காந்தியடிகள் மறைந்த பின்னர், வார்தா ஆசிரமத்தின் கட்டுக் கோப்புக் குலைந்து, ஆக்கப் பணியில் ஈடுபட்டிருந்த சீடர்கள் திக்குக் கொருவராகச் செல்லக் கண்டோம். எத்தனையோ சக்தி சாதனங்களைப் பெற்றிருந்த காந்தியடிகளின் ஆசிரமத்திற்கே இந்தக் கதியென்ருல், ஒரு நூற்றுண்டிற்கு முன்னர்ப் போதிய அளவு சக்தி சாதனங்க ளற்றிருந்த சித்தி வளாக ஆசிரமம் சீர்குலைந்ததில் வியப்பில்லையன்ருே!

அடிகளார் அரும்பாடுபட்டு அமைத்த "உத்தரஞான சிதம்பரம்" எனப் பெயர் பெற்ற சத்தியஞான சபையாகிய சர்வசமய சமரசக் கோயில்,- அடிகளார் மறையவிருந்த தருணத்தில் அவராலேயே மூடப்பட்டதென்பதை முன்பே அறிந்தோம். அடிகள்,

"சத்தியஞான சபை என்னுட் கண்டனன்
சன்மார்க்க சித்தியை யான்பெற்றுக் கொண்டனன்"

என்று பாடினு ராதலால், அவரைப் பொறுத்தவரையில்,

Koviloor Digital Library

அவரது உடம்பே ஞான சபை; அதற்குப் புறத்தே மற்றொரு ஞான சபை அவருக்குத் தேவைப்படவில்லை. அதனால்தான், ஞானசபைக் கோயில் அமைத்தது முதற்கொண்டே அவர் அங்குச் சென்று வழிபாடு நிகழ்த்தாமல், சித்திவளாகத்திலேயே தங்கியிருந்தார். மக்களுக்கு மகிழ்ச்சியூட்டத் தைப்பூச விழாவின்போது மட்டும் வடலூர் சத்திய ஞான சபைக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இப்போது, படமாடும் சத்திய ஞான சபையைப் பூட்டிவிட்டதோடு, நடமாடும் சத்திய ஞான சபையாக விளங்கிய தமது பொன்னுடலையும் உலகோர் காணாமல் ஒளித்துவிட்டார்.

சங்கம் மறைந்தது!

அடிகள் மறைந்தபின், அவரால் துவக்கப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கமும் செயலற்றுவிட்டது. அநேகமாக மறைந்துவிட்டதென்றே சொல்லலாம். காந்தியடிகளும், தம்மால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் மகாசபையைத் தாம் வாழ்ந்தபோதே கலைத்துவிட விரும்பினார் என்பது உலகறிந்ததாகும். ஆனால், அது ஆத்மீக சபையாக அல்லாமல், உலகியல் துறையில் பாடுபடும் அரசியல் சமுதாய சபையாக இயங்கியதால், காந்தியடிகளுக்குப் பிறகும் அதிகாரம் என்னும் கொம்பைப் பற்றிக் கொண்டு உயிர் வாழ்ந்து வருகின்றது.

இராமலிங்கப் பெருமானார், ‘‘நடராசப் பதியே சன்மார்க்க சங்கத்தின் தலைவர்’’ என்றார். ஆம், அருட்பிரகாசப் பெருமான் அச்சங்கத்தை இயக்கிக் கொண்டிருந்தவரை, தில்லைப் பெருமானைத் தலைவராகப் பெறும் தகுதி அதற்கு இருந்தது. அடிகள் மறைந்ததும் சங்கத்தின தெய்வத்தன்மை குறைந்து போனதால், சங்கமும் மறைந்துபோனது இயற்கையே. அதனை, அடிகளாரின் தோல்வியாகக் கருதுவதற்கில்லை. மாறாக, தெய்வமாகிவிட்ட அவரது திருவிளையாடல் என்றே சொல்லலாம்.

கருணை வடிவான வள்ளலார், பட்டினி கிடப்போர் பசிதீர்க்க வடலூரில் சத்திய தருமச்சாலை அமைத்தாரல்லரோ? அதுமட்டும் அடிகள் மறைந்ததும் மறையாமல், இன்றளவும் வாழ்ந்து வருகின்றது. சாலை அடுப்பில் அடிகள் மூட்டிய நெருப்பு அணையாமல் இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது. வறுமையும் பட்டினியும் அடியோடு மறைந்து, எல்லாரும் எலலாப் பெருஞ் செல்வமும் எய்தும் நாள் வரும்வரை, சத்திய தருமச்சாலை அடுப்பில் அடிகள் மூட்டிய தீ அணையாது; அணை

Koviloor Digital Library

யாது; அணையவும் கூடாது. கடந்த தொண்ணூறு ஆண்டு களாக அந்த அடுப்பை அணையவிடாமல் தொண்டுபுரிந்து வருவார் உலகினரின் பாராட்டுக்குரியோராவர்.

கலெக்டர் விசாரணை

“மனிதப் பிறவி எடுத்துவிட்ட எவரும் உடலோடு மறை வது சாத்தியமா? ‘பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி’ என்பதுதானே பெரியோர் வாக்கு” என்ற எண்ணம் யாருக்கும் தோன்றுவது இயற்கை. அது காரணமாக, “அடிகள் உடலோடு மறைந்தார் என்பது உண்மையாக இருக்க முடியுமா?” என்று ஐயுறுவோரும் இருக்கலாம்.

அடிகளாரின் மறைவுபற்றி அரசாங்கத்திற்கும் ஐயம் ஏற் பட்டது. மற்று, ஐயங்கொண்டவர்கள் கிளப்பிவிட்ட வதந்தி களுக்கு முடிவு காண்பதும் அரசினரின் கடமையானது. அதனால், அந்நாளில் தென்னார்க்காடு மாவட்டத்தின் கலெக்ட ராக இருந்த ஜே. எச் கார்டின்ஸ் என்பவர், மேட்டுக்குப்பம் சென்று விசாரணை நடத்தினார். அதுபற்றிச் சன்மார்க்க சங்கத் தார் வெளியிட்டுள்ள “திருவருட்பா முதல் ஐந்து திருமுறை கள்” என்ற நூலில் காணப்படுவதாவது :

> “வள்ளலார் திருக்காப்பிட்டுக் கொண்டதன்பின் சில நாட்கள் கழித்து அரசாங்க உத்தரவின் கீழ் கலெக்டரும், டாக்டரும், தாசில்தாருமாக மேட்டுக்குப்பத்திற்கு வந்த னர். வந்தவர்களுள், கலெக்டரும் அவருடன் வந்த டாக்ட ரும் பேசாதிருந்தனர். ஆனால், தாசில்தார் வேங்கடராமன் அவர்கள் தமது அதிகார முறையில் ஆங்குள்ள அன்பர் களைப் பல வகையான இழிமொழிகளாற் கூறி, “கதவைத் திறவுங்கள்; இல்லையானால், உங்கட்கு அபராதம் நேரிடும்” என்று அதட்டி மிரட்டினார். அத்துரைமகனு ரிருவரும் சித்திவளாகத்தை இரண்டு மூன்று முறை சுற்றிப் பார்த்து விட்டுப் ‘பெரியோர்களைப் பற்றி நாம் ஒன்றும் குறை கூறுதல் கூடாது’ என்னும் உயரிய நோக்கோடு, அன்பர் களை அழைத்து, “நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?” என்று கேட்டனர். அதற்கு அவ்வன்பர்களும் “ஐபா அவர் கள் கூறியபடி அன்னதானம் செய்தலும் ஆண்டவரை வணங்குதலும் செய்கிறோம்” என்று பதில் கூறினர். அதனைக் கேட்ட துரைமகனுரிருவரும் மகிழ் வெய்தி, அன்றைய தினம் ஆங்கு நடக்கவேண்டிய அன்ன

Koviloor Digital Library

தானச் செலவுக்காக ரூபாய்கள் இருபதைக் கொடுத்துவிட்டுப் போயினர்.''

கலெக்டர் எழுதிய குறிப்பு

தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர் ஜே. எச் கார்டின்ஸ் ஐ. சி. எஸ். அவர்கள் எழுதி, அந்நாளைய சென்னை மாநில அரசின் சார்பில் 1878-ல் வெளியிடப்பட்ட 'தென்னார்க்காடு மாவட்ட மானுவல்' என்ற புத்தகத்தில், 316, 317-ம் பக்கங்களில், இராமலிங்கர் புகழோடு பொருந்திய பார்வதிபுரம் (வடலூருக்கு மற்றொரு பெயர்) என்னும் ஊரைப்பற்றி விவரம் தரப்பட்டுள்ளது. அது, நம் அடிகளாரைப் பற்றிக் கலெக்டர் வரைந்த கருத்தோவியமாகவே காணப்படுகிறது. அதனை இங்கு அப்படியே தருகிறோம் :

பார்வதிபுரம் : *1,189* மக்களைக் கொண்ட ஒரு சிற்றூர். விருத்தாசலம் சாலையில், கடலூருக்ருக்குத் தென்மேற்கில் 23 ஆவது மைலில் உள்ளது. இந்த இடம் இராமலிங்கப் பரதேசி என்பவர் வாழ்ந்த பகுதியாகும். அவர், யாவரும் வியக்கத்தக்க வகையிற் தற்காலச் சித்தர்களின பிரதிநிதியாக விளங்கினார். அவரது பக்தர்களால் அநேகமாக தெய்வமாகவே கருதப்பட்டார். இராமலிங்கர், சிதம்பரம் தாலூகாலில் *1823*-ம் ஆண்டில் எளிய வேளாள குடும்பத்தில் பிறந்தார். சிறுவயதிலேயே கவிதை புனையும் திறமை பெற்றிருந்தார். பக்திமயமான தம்முடைய பாடல்களாலேயே அவர் பிரபலமானார். சில பாடல்கள், பழங்காலச் சைவ சமயாசாரியர் இயற்றிய பாடல்களைப் போன்றவை. பல பாடல்கள், வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருத்தணிகை, சென்னைக்கு அருகேயுள்ள திருவொற்றியூர் ஆகிய தலங்களின் கோயில்களிலுள்ள தெய்வங்களின் புகழ் பேசுபவையாய் அமைந்திருந்தன. மற்றவை, ஆன்மீக வாழ்வின் உயர்வைச் சிறப்பித்துப் பேசுபவையாயிருந்தன. பின் சொன்ன பாடல்களே, அவர் ஒரு ஆத்மார்த்த வழிகாட்டியாகவும், போதகராகவும் கொண்டாடப்படுவதற்குக் காரணமாயிருந்தன. தென்னாட்டின் புகழ்பெற்ற தலங்களுக்கு யாத்திரை செய்த பின்பு, கடைசியாக அவர் பார்வதிபுரத்திற்குப் பக்கத்திலுள்ள கருங்குழி என்ற கிராமத்தில் குடியேறினார். அப்பொழுது அவரது புகழ் உச்சத்தில் இருந்தது. அன்பர்களும் சீடர்களும் அவர் அருகிலேயே இருக்கவேண்டும் என்றெண்ணி, தங்கள் குடியிருப்பை வடலூருக்கு மாற்றிக் கொண்டார்களெனக்

Koviloor Digital Library

கூறப்படுகிறது. அவர்களில் பலர், நடுத்தர அதிகாரி களாகவும் இருந்தனர்.

1872-ல் வடலூரில், வட்டவடிவமான கூரையுடன் கூடிய எண்கோண வடிவமுள்ள சபையை, அவர் பொது மக்களிடமிருந்து வசூலித்த பணத்தைக் கொண்டு கட்டி முடித்தார். அவர் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்ததற் குக் காரணம், அங்கிருந்து பார்த்தால் சிதம்பரம் நடராசர் கோயிலின் நான்கு கோபுரங்களும் தெரியும் என்பது தான் என்று கூறப்படுகிறது. அவர் கட்டியது சாதாரணமான கோவில் அன்று. அங்கு நடந்த பூஜை அசாதாரண மானது. இராமலிங்கப் பரதேசி, தம் சீடர்களுக்கு, அவர் கள் இறந்த பிறகுகூட உயிர் பெற்று எழ முடியும் என்று உபதேசித்தார். எனவே, இறந்தவர்களின் உடலை எரிப் பதற்குப் பதிலாக புதைப்பது நல்லது என்று வற்புறுத் தினர். இதனை நம்பி, அநேக பிராமணர்கள்கூட இறந்த தங்கள் உறவினர்களின் பிரேதங்களைப் புதைத்ததாகத் தெரிகிறது. பக்கத்திலுள்ள பல சிற்றூர்களில் இறந்து போனவர்களின் பிரேதங்கள்கூட வடலூருக்குக் கொண்டு வரப்பட்டு, புதைக்கப்பட்டன.

1874-ல் மேட்டுக் குப்பத்தில் (கருங்குழியைச் சேர்ந்த ஒரு குக்கிராமம்) அவர் ஓர் அறைக்குள் நுழைந்துகொண்டு வெளியே தாளிடச் செய்தார் (அந்த அறை இன்றும் அப்படியே இருக்கிறது). சமாதி அல்லது தியானத்திற்காக அவர் அந்த அறையைத்தான் உபயோகிப்பது வழக்கம். அந்த அறையைக் கொஞ்ச காலத்திற்குத் திறக்கக்கூடாது என்று அவர் தம் சீடர்களுக்குக் கட்டளையிட்டார். அன்றி லிருந்து அவர் காணாமல் போய்விட்டார். அறை இன்னும் பூட்டப்பட்டே இருக்கிறது. அவர்பால் பக்தி கொண்ட வர்கள், அவர் ஆண்டவனோடு ஐக்கியமாகி விட்டார் என இன்னமும் நம்புகின்றனர். காலம் வந்ததும் அவர் திரும்பவும் தோன்றுவார் என்றும் அவர்கள் நம்பு கிறார்கள்.

ஒரு மதத்தலைவர் பற்றிக் கருத்துவேற்றுமை எழு வது இயற்கை. என்றாலும், அவர் தம் பாடல்களைப் பொறுத்தவரை, அவை உயர்தரமானவை. இது, தகுதி யுடைய பெரியோர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. அவரது வரலாறு, இன்றும் மத எழுச்சி திசை திரும்பக் கூடும் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ் கின்றது.

Koviloor Digital Library

அடிகளார் உடலோடு மறைந்ததைக் கலெக்டர் மறுக்க வில்லை. இயற்கை மரணம் எய்தியிருக்கக் கூடுமென்று அனுமானமாகக்கூட அவர் கூருதது குறிப்பிடத்தக்கதாகும். மற்று, அடிகளார் புகுந்து மறைந்த அறையைத் திறக்கவும் கலெக்டர் முயலவில்லை. இதனை, "அறை இன்னும் பூட்டப் பட்டே இருக்கிறது" என்று கலெக்டர் கூறுவதால் அறி கிருேம்.

Koviloor Digital Library

மீண்டும் அருட்பா—மருட்பாப் போர் !

அடிகளார் மறைவும், அவராலேயே சத்திய ஞான சபை மூடப்பெற்றதும், அவரது மறைவால் சமரச சுத்த சன்மார்க்க சங்கம் செயலற்றுப் போனதும் வைதிகச் சைவர்களின் வயிற்றில் பால்வார்த்தாற்போலாயின. தங்கள் காழ்ப்புக் காரணமாக, அருளாளர் ஒருவரை உயிரோடு இழந்து விட்டதால் ஆத்திக உலகிற்கு ஏற்பட்ட நஷ்டத்தை அவர்கள் உணரத் தவறிவிட்டனர். ஆனால், அவர்களுடைய 'மகிழ்ச்சி' நெடுங்காலம் நிலைத்திருக்கவில்லை. அடிகளாரின் மறைவால் சிதறுண்டு—செயலற்றுப்போன சன்மார்க்கிகள், ஐந்தாண்டுகளுக்குப் பிறகு திரும்பவும் ஒன்று சேர்ந்து செயல்படத் தொடங்கினர்.

வள்ளலார் மறைந்த சில ஆண்டுகளுக்குப் பிறகு சத்திய ஞான சபை மீண்டும் திறக்கப்பெற்று, அடிகள் வகுத்த நியதிப்படி அங்கு வழிபாடு தொடங்கியது.

ஏற்கெனவே அச்சிடாமல் வைக்கப்பெற்றிருந்த ஐந்தாவது ஆறுவது திருமுறைகள் நூல் வடிவம் பெற்றன. அத்துடன், முன்னிலும் வேகமாக அடிகளாரின் அருட் பாடல்கள் தமிழகத்துக் கோயில்களிலும் பஜனைகளிலும் தனி நபர்களின் வீடுகளிலும் பொது விடங்களிலும் மிகுந்த பக்தியோடு ஓதப்பெற்றன.

வடலூர்ச் சத்திய ஞானசபையும், மேட்டுக்குப்பம் சித்தி வளாகமும் தெய்வப்பற்றுடைய மக்களின் யாத்திரைத் தலங்களாயின. இந்துக்களே யன்றி, வேறு மதங்களைச் சார்ந்தவர்களும் அடிகளாரின் சீர்திருத்தக் கருத்துக்கள்பற்றிச் சிந்திக்கலாயினர். குறிப்பாக, உண்மைச் சைவர்கள் அருட்பாப் பக்தர்களாகி,

> "அருட்பெருஞ் சோதி அருட்பெருஞ் சோதி
> தனிப்பெருங் கருணை அருட்பெருஞ் சோதி"

என்று முழங்கலாயினர். 'எம்மதமும் சம்மதம்' என்ற அடிகளாரின் கோஷம் சைவக் கோட்டைக்குள்ளேயும் எதிரொலித்தது.

வள்ளலாரின் சன்மார்க்க இயக்கம் மறுமலர்ச்சி பெற்றது கண்டு, வைதிகச் சைவர்கள் மருண்டனர். அதனால், 1891-ல்

Koviloor Digital Library

திரும்பவும் "அருட்பா—மருட்பா"ப் போராட்டம் புத்துயிர் பெற்றது. வள்ளலார் காலத்தில் மருட்பாக் கூட்டத்தினருக்கு யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் தலைமை தாங்கினு ரென்ருல், இப்போது திரண்ட மருட்பாக் கூட்டத்தினருக்கு யாழ்ப் பாணம் நா. கதிரைவேற் பிள்ளை தலைமை தாங்கினுர். அவர், யாழ்ப்பாணம் மேலைப்புலோலி என்ற ஊரில் சைவ வேளாளர் குடியில் பிறந்தவர். தமிழ்—சம்ஸ்கிருதம் ஆகிய இருமொழி களிலும் திறமான புலமை பெற்றவர். சைவாகம சாத்திரங் களிலும் ஆழ்ந்த ஞானமுடையவர். அன்னுர், சென்னை வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து வந்தார். அவரது குருநாதரான வைதிக சைவ சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர், வள்ளலாரைக் குருவாகக் கருதி வழிபட்டவர். ஆனுல, சீடரோ, பகைவராக விளங்கினுர்.

வைதிகர் வம்பு

அடிகளார் மறைந்த பிறகு திருவருட்பா ஆறுந்திருமுறை வெளியிடப்பட்டு விட்டதால், அதில் காணப்படும் புரட்சிகர மான கருத்துக்கள் வைதிகர்களுக்கு ஆத்திரத்தை மூட்டின. வள்ளலாரின் அருட்பாக்கள் மக்களிடையே பரவினுல், சைவ சமயமே அழிந்து விடுமென்று அஞ்சினர் வைதிகச் சைவர்கள். வழக்கம்போல் ஒன்றிரண்டு சைவ மடங்கள் அவர்களுக்கு உள்ளூரத் துணைபுரிந்தன. ஆனுல், சைவாகமப் பண்டிதர்கள் சிலரைத் தவிர, பொது மக்கள் அவர்களுக்கு ஆதரவு தர வில்லை.

வள்ளலாரின் அருட்பாவை ஆதரித்துப் பிரசாரம் செய்யும் பணியில் வேதாந்த கேசரி கோ. வடிவேலு செட்டியார், மறை மலையடிகள், அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலி யார், நாஞ்சில் சதாவதானி ஷெய்குதம்பிப் பாவலர் ஆகியோர் முன்னிலையில் நின்றனர். பொது மக்களும் ஆதரவு தந்தனர். முற்போக்கு மனமுடைய இளைஞர்கள் ஆவேசங் கொண்டவர் களாய் அருட்பாக் கட்சியை ஆதரித்தனர்.

அரசியல் கட்சிகள்—கிளர்ச்சிகள் தோன்ருக் காலமாத லால், அருட்பா—மருட்பாக் கிளர்ச்சியே அரசியல் கிளர்ச்சி யாகப் பரிணமித்தது.

குருட்டு வைதிகம்!

வைதிகச சைவர்கள், கால மாறுதலை அறியாமல் "பழைமை" பேசினர். அடிகளார் "எம்மதமும் சம்மதம்" என்று

Koviloor Digital Library

ஒலித்தது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. இஸ்லாம்—கிறித்தவம் ஆகிய புறச் சமயங்களின் தாக்குதலால்—குறிப்பாக, கிறித்தவப் பாதிரிகளின் "அறிவு வாத"த்தால், தாழ்த்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடந்த இந்துக்களுக்குப் பாதிரிகள் செய்து வந்த சேவையால், ஏழை மக்கள் சைவ சமயத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். படித்தவர்களிலேயும் பலர், 'பழைமை'யில் நம்பிக்கை இழந்து நாத்திகர்களாக மாறிக் கொண்டிருந்தனர். இந்த இழிநிலையிலிருந்து தங்கள் சைவத்தைக் காக்க வைதிகர்கள் விரலைக்கூட அசைக்கவில்லை. வள்ளலாரின் சீர்திருத்தப் பிரசாரம், மத மாறுதலையும் நாத்திக வளர்ச்சியையும் தடுக்கும் மறைமுகப் பணியாக இருந்தது. சாதிவெறிச் சைவர்கள் பார்வையில் இது படவில்லை. குறுகிய புத்தியால் அவர்கள் கண்கள் குருடாகிப் போயிருந்தன. அதனால்,

> "இராமலிங்க பிள்ளையவர்களின் பாடல்களும் அவரது நெறியல்லா நெறிகளும் வைதிக சைவ சித்தாந்தத்திற்கு மாறாகும்."

> "இராமலிங்கம் பாடிய பாக்கள் மருளினால் (அறியாமையின் மயக்கத்தால்) எழுந்தவையே. அதனால், அருட்பாக்கள் ஆகா; மருட்பாக்களே யாம்."

என்று வழக்காடினர்.

1903ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் நாளன்று மருட்பாக் கட்சியார் சார்பில், சிந்தாதிரிப்பேட்டை (எண் 9, மங்கபதி நாய்க்கன் தெரு) வேதாகமோக்த சைவ சித்தாந்த சபா மண்டபத்தில் ஒரு பேரவை கூட்டப்பட்டது. அதற்குப் "போலியருட்பாக் கண்டன மகா வித்வஜன சபை" எனப் பெயரிடப் பட்டது.

அந்தப் பேரவையில் சுத்தாத்துவித சைவ சித்தாந்த பானு திருமயிலை தணிகாசல முதலியார் தலைமை வகித்தார். நா. கதிரைவேற் பிள்ளை,

> "இராமலிங்க பிள்ளை பாடல் திருவருட்பா ஆகாது. அவரைத் திருவருட்பிரகாச வள்ளலார் என்னல் அதிபாதகமாகிய சிவதூஷணை. திருஞான சம்பந்தப் பெருமான் முதலாக சேக்கிழார் பெருமான் ஈறாகவுள்ள திருவாளர்களால் திருவாய்மலர்ந்தருளப்பட்ட தேவாரம் முதலாகப் பெரிய புராணம் இறுதியாகவுள்ள பன்னிரு திருமுறைகளே திருவருட்பாவாகும்."

Koviloor Digital Library

என்று பேசினர். இப்படி, இருதரப்பிலும் தனித் தனியே பேரவைகள் கூட்டிக் கருத்துப்போர் நிகழ்த்தினர். அதில் கலந்துகொண்டு பேசியவர்கள் அத்தனை பேரும் பெரும் புலவர் களாவர்.

இராமலிங்கர் காலத்தில், வேதாந்திகளுக்கும், சித்தாந்தி களுக்கு மிடையேயுங்கூடக் கருத்து வேற்றுமை யிருந்தது. பிறப்பால் சைவ சித்தாந்தியான வள்ளலார், "வேதாந்த சித் தாந்தப் பொது சிறத்தல் வேண்டும்" எனப்பாடி, அந்தத் தத் துவங்களிடையே சமரசங் காண விரும்பினர். இது, வைதி கச் சைவர்களுக்குப் பிடிக்கவில்லை. வள்ளலார், (1) யோகாந் தம், (2) கலாந்தம், (3) போதாந்தம், (4)நாதாந்தம், (5) வேதாந் தம், (6) சித்தாந்தம் ஆகிய ஆறந்தங்களைக் கூறி, அதற்கு 'ஷடாந்தம்' எனப் பெயர் தந்தார். முதல் நான்கு அந்தங்களும் கடைசியிலுள்ள வேதாந்த—சித்தாந்தங்களில் அடங்கி விட்ட தாகக் கூறி, அந்த இரண்டந்தங்களும் சமரச சுத்த சன்மார்க் கத்துள் ஐக்கியமாகி விட்டன என்றார்.

> "ஷடாந்த சமரச சுத்த சிவ சன்மார்க்கம் என்பதில் ஷடாந்தம் என்பது யாது? வேதாந்தம், சித்தாந்தம், போதாந்தம், நாதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆக ஆறு. மேற்படி அந்தங்களின் அநுபவம் காலம் இடம் முதலிய வேறுபாடுகளால் ஏறிக் குறையும். ஆதலால், ஷடாந்தமும் வியாபகமில்லாமல் வேதாந்த சித்தாந்தத்தில் நான்கந்தமும் வியாப்பியமா யிருக்கின்றன. மேற்படி அந்தம் நான்கின் ஐக்கிய விவரம்: வேதாந்தத்தில் போதாந்த யோகாந்தமும், சித்தாந்தத்தில் நாதாந்த கலாந் தமும் அடங்கியிருக்கின்றன. இந்த ஐக்கியம்பற்றி வேதாந்த சித்தாந்தமே இப்போது அநுபவத்தில் சுத்த சித்தாந்தமாய் வழங்குகின்றன.
>
> "இவற்றிற்கு அதீதம் ஆகிய சுத்த வேதாந்த சித் தாந்த அந்தாந்தமாகிய சமரச சுத்த சன்மார்க்கமே நித் திய மார்க்கம்." -பா.பி. ப. பு. 4; பக். 45.

இஃது, அடிகளாரின் ஆறந்த சமரச உபதேசமாகும்.

வள்ளலாரின் இந்தச் சமரச உணர்வுகளுக்குக் 'குழப்பம்' எனப் பெயர் தந்து, அவருக்கும் குழப்பவாதி எனப் பட்டம் வழங்கினர் வைதிகச் சைவர்கள்.

Koviloor Digital Library

சைவ சித்தாந்திகள், அத்துவித நெறியைப் பொதுப்படையாக அங்கீகரிப்பர். ஆயினும், அதனைச் சுத்தாத்துவிதம் கேவலாத்துவிதம் என இரண்டாகப் பிரித்து, சுத்தாத்துவிதத்தை மட்டுமே தங்களுக்கு உடன்பாடாகக் கொள்வர். வள்ளலாரோ, இரண்டையுமே உடன்பாடாகக் கொண்டார். இஃது, அவர் கொண்டிருந்த சமரசக் கொள்கையின் விளைவு. சைவ வைதிகர்கள் இதனை வெறுத்தனர்.

வேதாந்தம்—சித்தாந்தம் ஆகிய தத்துவங்களிடையேயும், சுத்தாத்துவிதம்—கேவலாத்துவிதம் ஆகிய வாதங்களிடையேயும் சமரசம் காட்டி, நம் அடிகளார் பாடியுள்ள பாடல்கள் வருமாறு :

" வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின்
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனுதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்றும்
மவுனவியோ மத்தினிடை வயங்குந் தேவே."

" தோன்றுதுவி தாத்துவித மாய்வி சிட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்ற சுத்தாத் துவிதமாய்ச் சுத்தந் தோய்ந்த
சமரசாத் துவிதமுமாய்த் தன்னை யன்றி
ஊன்றுநிலை வேறொன்று மிலதாய் என்றும்
உள்ளதாய் நிரதிசய உணர்வாய் எல்லாம்
ஈன்றருளும் தாயாகித் தந்தை யாகி
எழிற்குருவாய் தெய்வதமாய் இலங்குந் தேவே."

இந்தப் பாடல்களில், இறைவன் சகல தத்துவங்களின் சமஷ்டியாக இருப்பதனை உணர்த்துகின்றார் இராமலிங்கர். சைவாகமப் பண்டிதர்கள், வாதமிடுஞ் சமய வெறியையே சைவமெனக் கருதி, அதற்கு மாறுபட்ட சமரசத்தை வெறுத்தனர். அது காரணமாகச் சமரச போதகரான வள்ளலாரையும் விரோதித்தனர்.

அகச் சமயத் தத்துவங்களிடையே சமரசங்காண விரும்பிய வள்ளலார், தத்துவப் போலிகளைக் கண்டிக்கவும் தயங்

Koviloor Digital Library

கிறு ரல்லர். 'அகம் பிரம்மாஸ்மி' என்பது மாயாவாத வேதாந் திகளின் கொள்கை. இதன் பொருள் 'நானே பிரம்மம்' என் பதாம். இதனைக் கொள்கை ரீதியாக வள்ளலார் மறுக்கவில்லை யென்றாலும், அநுபூதியின்றி வாய் வேதாந்தம் பேசுவோரைக் கண்டித்தார். இதற்குச் சான்றாக அருட்பாவிலுள்ள ஒரு பாடல் வருமாறு:

"நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரமம் வேறில்லை
நன்மை தீமைகளும் இல்லை
நவில்கின்ற வாகியாந் தரம்இரண் டினும்ஒன்ற
நடுகின்ற தென்று வீணாள்
போம்பிரம நீதிகேட் போர்பிரமை யாகவே
போதிப்பர் சாதிப்பர் தாம்
புன்மைநெறி கைவிடார் தம்பிரமம் வினைஒன்று
போந்திடில் போக விடுவார்
சாம்பிரம மாம்இவர்கள் தாம்பிரமம் எனும்அறிவு
தாம்புபாம் பெனும்அறிவு காண்
சத்துவ அகண்டபரி பூரண காரஉப
சாந்தசிவ சிற்பிரம நீ
தாம்பிரிவில் சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே."

இந்தப் பாடல், மாயாவாதத்தையே கொள்கை ரீதியாகக் கண்டிப்பதாகக் கூறுவாருமுளர். இப்படித்தான் பொருள்கூறி, "எம்மதமும் சம்மதம்" என்று கூறுபவர், மாயாவாதிகளை மட் டும் கண்டிக்கலாமோ?" எனக் கேட்டனர். கேட்டவர், மாயா வாதிகளல்லர். அவர்களை வெறுத்த வைதிகச் சைவர்கள்.

அவர்கள் கொண்ட பொருள் சரியானதென்றால், இந்தப் பாடல், அடிகள் தம் பிள்ளைப் பருவத்தில் பாடிய தாதலால், இதனை 'எம்மதமும் சம்மதம்' என்னும் சமரசக் கொள்கைக்குப் புறம்பானதாகவே கொள்ளவேண்டும்.

Koviloor Digital Library

அருட்பாக் கட்சிக்கு வெற்றி !

இரண்டாவது முறையாக நடைபெற்ற "அருட்பா—மருட்பா"ப் போராட்டம் மிகவும் கடுமையானதாக இருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த பெரும் புலவர்கள், சைவாகமப் பண்டிதர்கள், சைவ மடாதிபதிகள் ஆகிய அனைவருமே ஏதேனும் ஒரு வகையில் இந்தப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களாக இருந்தனர். சைவந் தழைக்கப் பாடுபடத் தோன்றிய அமைப்புக்கள் பலவும் கட்சி பிரிந்து போராடின. இருதரப்பிலும் கண்டனப் பிரசுரங்களும் நூல்களும் வெளியிடப்பட்டன. எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடிய இளைஞர் கூட்டம் அருட்பாக் கட்சிக்கே அதிக அளவில் திரண்டிருந்தது. அதனால், மருட்பாக் கட்சியினர் பலவிதத் தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி ஏற்பட்டது. ஒன்றிரு கூட்டங்களில் கதிரைவேலர் மீது கற்கள் எறியப்பட்டன. அவரைப் போலக் 'கொடும்பாவி' செய்து, அதைப் பாடையில் வைத்து ஊர்வலம் எடுத்துச் சென்று, பிறகு கொளுத்தப்பட்டது. ஆத்திரப்பட்ட சிலர் கதிர்வேலரைக் கொல்லவும் முயன்றதாகத் 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்,' 'மறைமலையடிகள் வரலாறு' ஆகிய நூல்களில் குறிப்புக் காணப்படுகிறது. அருட்பாக் கூட்டத்திற்குத் தலைவராகத் திகழ்ந்த மறைமலையடிகளார், வள்ளலார் போதித்த அன்பு நெறிக்கு மாறுபட்ட செயல்களைச் செய்யாதபடி தம் கூட்டத்தினரைத் தடுக்க முயன்று, சில சந்தர்ப்பங்களில் வெற்றியும் கண்டார்.

மறைமலையடிகள் பணி

மறைமலையடிகள் தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மருட்பாக் கூட்டத்தினரின் வைதிக வாதங்களை முறியடித்து, அருட்பாவின் புகழ் பரப்பினர். இதுபற்றி, மறைமலையடிகளின் அருமைத் திருமகனார் மறை. திருநாவுக்கரசு எழுதி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ள, "மறைமலையடிகள் வரலாறு" என்ற நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றும், தமிழ்—சமஸ்கிருதம்—ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் தேர்ந்த புலமையும் பெற்றிருந்த மறைமலை அடிகளார்

Koviloor Digital Library

அருட்பாக் கட்சிக்குத் தலைமை தாங்கியது மருட்பாக் கட்சியினருக்கு அச்சத்தைத் தந்தது. அதனால், அவர்கள் தங்களுடைய எதிர்ப்புக்கு இவரையே இலக்காகக் கொண்டனர்.

திருவருட்பா, 'எம்மதமும் சம்மதம்' எனக்கொள்ளும் சர்வ சமயப் பொது மறையாகும். அதனால், அருட்பாக் கட்சியில் சேர்ந்து வள்ளலாரின் புகழ் பாடினார். எண்ணற்ற மேடைகளில் ஏறி, கதிர் வேலரின் வைதிக வாதங்களை மறுத்துப் பேசினார். அதனால், கதிர்வேலருக்கு எதிர்வேலர்' என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இஸ்லாமியர் ஒருவர் அருட்பாவின் பெருமை பேசியது, வள்ளலாரின் சர்வ சமய சமரசக் கொள்கைக்குக் கிடைத்த மகத்தான வெற்றியாகும். அருட்பாக் கட்சியை ஆதரித்த சாதாரணப் பொது மக்களிலேயும் பல மதத்தாரும் கலந்திருந்தனர்.

பூவை. கலியாணசுந்தரனார்

அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியார், அருட்பாக் கட்சியில் மறைமலையடிகளுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றிருந்தார். அருட்பிரகாச வள்ளலாரிடம் எல்லையற்ற ஈடுபாடு கொண்டிருந்த அப்பெரியார், வள்ளலார் புகழ் பாடுவதை வாழ்க்கை நெறியாகக் கொண்டிருந்தார்.

அப் பெரியாரைப் பற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார், "திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்" என்ற தமது நூலில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

> "அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியார் சைவப் பெரும்புலவர்; சித்தாந்த சரபம்; பெயருக்கேற்ற வடிவமுங் கோலமும் உடையவர்; மணிவிழாவுக்குப் பின்னர் யதீந்திர ரானவர். அவர் நெஞ்சம் பளிங்கு. மாசுகள் அதைக் கறைப்படுத்துவதில்லை. அப் பெரியார் ஒரு சிவஞானிபோல் உலகில் வாழ்ந்தார்.
>
> "அஷ்டாவதானம் முதலியாரிடம் படித்தவர் தொகை அதிகம். எவர்க்கும் எளிமையாவது முதலியார் இயல்பு. அவர் காலத்தில் அவரது சாற்றுக்கவி பெறாத நன்னூல்களைக் காண்டல் அரிது. தாயுமானார்க்குப் பூவை. முதலியார் வரைந்த விரிவுரை அவருடைய சித்தாந்தப் புலமைக்குச் சான்று கூறும்.

Koviloor Digital Library

"கதிரைவேற் பிள்ளை காலத்தில் அஷ்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாருடன் நெருங்கிப் பழகினே னில்லை; பின்னரே நெருங்கிப் பழகினேன்."

இத்தனை பெருமைக்குரிய பூவை. கலியாணசுந்தர முதலியார், அருட்பாக் கட்சியை ஆதரிக்கக் காரணம், வள்ளலாரின் சமய—சமூக சீர்திருத்தக் கொள்கைகளில் அவருக்கிருந்த ஆர்வமேயாகும். குறிப்பாக, சாதி உயர்வு தாழ்வுகளை அவர் அடியோடு வெறுத்தார்.

'மருட்பா'க் கட்சி தோன்றியதேன்?

மருட்பாக் கட்சியினரின் பிரசுரங்களைப் படித்தால், அக் கட்சியில் முன்னணியிலிருந்த ஒரு சில அறிஞர்களின் உயர் சாதி மனப்பான்மையை அறிந்து கொள்ளலாம். அருட்பிரகாச வள்ளலார்பால் அவர்கள் காழ்ப்புக் கொள்ளக் காரணம், அவர்களுடைய இரத்தத்தோடு கலந்திருந்த உயர்சாதி மனப்பான்மையே யாகும். இந்து மதத்தின் தலைமை அந்தணருக்கே உரியதென்றால், சைவ சமயத்தின் தலைமை வேளாளருக்கே உரியதென்பது அவர்கள் கொள்கையாகக் காணப்படுகிறது. சமய குரவர்களோ, சந்தான குரவர்களோ சைவ வேளாளர்களிலிருந்துதான் தோன்றமுடியும்—என்ற முடிவிலிருந்து முளைத்ததுதான் மருட்பாக் கிளர்ச்சி. இது, அன்றிருந்த சாதி வெறிப் போக்கு! ஏன்? இன்றும் சைவ மடங்க ளெல்லாம் குறிப்பிட்ட ஒரு சாதியினரின் கூடாரங்களாகவே இருந்துவருகின்றன. வேறு சாதியினர், அவர்கள் எவ்வளவுதான் சைவாகம சாத்திரங்களைப் பயின்ற ஞானியர்களாகவே இருப்பினும், சைவமடங்களின் ஆதீனகர்த்தர்களாக வரமுடியாது. இந்தப் போக்கைப் பூவை. கலியாணசுந்தர முதலியார் வெறுத்தார். நமது தமிழ்ப் பெரியாரும் புகழ்ந்துரைக்கும் அளவுக்குச் சித்தாந்தப் புலமையும் சீலமும் சிவஞானிக்குரிய வாழ்வும் பெற்றிருந்த பூவை முதலியார், சைவ மடமொன்றில் தாம் பெற்ற அனுபவத்தைக் கூறுகிறார், கேட்போம் :

"யான் தென்னாட்டு மடங்களில் நன்கு பழகினவன்; எத்தனையோ சொற்பொழிவுகள் மடங்களில் நிகழ்த்தினவன்; எனக்குக் காவி அளிக்க ஒரு பெரிய சைவ மடாதிபதியைக் கேட்டேன். அவர் மறுத்தார். 'கயிலாயக் கதவு தென்னாட்டுச் சைவ வேளாளர்க்கு மட்டுந்தான் திறக்குமோ, மற்றவர்க்குத் திறவாதோ?' என்று கடாவித்

Koviloor Digital Library

திரும்பினேன். சாதி மடங்கள் சைவத்திற்குக் கேடு சூழ்ந்து வருகின்றன. சாதிக் கோட்டையை உடைத்தாலன்றிச் சைவம் வளராது.''

['திரு. வி. க. வின் வாழ்க்கைக் குறிப்புக்கள்'; பக். 659-60.]

இதனால், 'அருட்பா—மருட்பா'ப் போராட்டம் சாதி உயர்வு—தாழ்வினை ஒழிக்க விரும்பியவர்களுக்கும், அதனை நிலை நிறுத்த முயன்றவர்களுக்குமிடையே நடந்த போராட்டமாகவும் இருந்தது என்பதனைப் புரிந்துகொள்ளலாம். சாதி ஏற்றத் தாழ்வினை அடியோடு ஒழிக்கும் கருத்துடனும் மறைமலையடிகளார் அருட்பாக் கட்சியை ஆதரித்தார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

மறைமலையடிகள், ''சாதி வேறுபாடும் போலிச் சைவரும்'' என்ற தமது நூலில் சைவ வேளாளரிடையே காணப்படும் உயர்சாதி மனப்பான்மையை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

பூவை. முதலியாருக்கு மடாதிபதி காவியாடை அளிக்க மறுத்தது, அவர் கருதியது போன்று கயிலாய உரிமைப் பிரச்சினையன்று; மடாதிபதி பீடத்தினைக் குறிப்பிட்ட ஒரு சாதியாரன்றிப் பிற சாதியார் அணுகக் கூடாதென்ற பிரச்சினையேயாகும். சைவ மடங்களிடமுள்ள சொத்துக்களைச் சமுதாயத்திற்குப் பொதுவாக்கிவிட்டால், சாதி வேற்றுமை தொலையும்; உண்மைச் சைவம் செழித்தோங்கி வளரும்.

நீதிமன்றம் ஏறினர்!

''அருட்பா—மருட்பா''க் கூட்டத்தினர் பரஸ்பரம் மான நஷ்ட வழக்குகள் தொடுத்து ஒருவரையொருவர் நீதிமன்றத்தில் நிறுத்தினர். அவ்வகையில் இராமலிங்கரின் தமையனார் மகன் சபாபதி என்பார் நா. கதிரைவேலர்மீது சென்னை ஜார்ஜ் டவுன் போலீஸ் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார். அவ்வழக்கில் கதிரைவேலருக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

'மருட்பா'க் கட்சியைச் சார்ந்த கந்தசாமிக் கவிராயரென்பார், சுவாமி வேதாசலம் அவர்கள்மீது தூத்துக்குடிக் கோர்ட்டில் மானநஷ்ட வழக்குத் தொடுத்தார். பின்னர், இருவருக்கும் சமாதானம் ஏற்பட்டதால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

இந்த இரண்டு வழக்குகளிலும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் 'மருட்பா'க் கட்சியின் சார்பில் சாட்சியங் கூற அழைக்கப்பட்டார். முதல் வழக்கில் சாட்சியங் கொடுத்தார். ''வழக்கில் கதிரைவேலர் வெற்றி பெறக் காரணம், ஐயர் தந்த

Koviloor Digital Library

சாட்சியமே" என்கிறார் திரு. வி. க. இரண்டாவது வழக்கில் வாதி—பிரதிவாதிகளிடையே சமரசம் ஏற்படுத்தி வைக்க முயன்று, அதில் வெற்றி பெற்றார் ஐயர்.

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், திருவாவடு துறை ஆதீனத்தைச் சார்ந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சீடராவார். அப்பெரியார், ஆரம்பத்தில் இராமலிங்கரின் அருட்பாவில் அவ்வளவாக ஈடுபாடு கொண்டிருக்கவில்லை. ஆனால், பிற்காலத்தில் வள்ளலாரிடமும் அவர் இயற்றிய அருட்பாவிடத்தும் பற்றுக் கொண்டவரானார்.

சென்னை ஜார்ஜ் டவுன் கோர்ட்டில் திரு. சபாபதி அவர்கள் தொடுத்த வழக்கில் நா. கதிரைவேலருக்கு ஆதரவாகச் சாட்சியங் கொடுத்தவர்களிற் திரு. வி. கலியாணசுந்தரனாரும் ஒருவராவர். தாம் இன்டர்மீடியட் தேர்வுக்கு எழுதவேண்டிய நாளில் கோர்ட்டிற்கு வந்து சாட்சியங் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டதால் தமது உயர்தரக் கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்க நேரிட்டது என்கிறார் திரு. வி. க.

மருட்பாக் கிளர்ச்சியின் கர்த்தாவான கதிரைவேலர், 26—3—1907ல் நீலகிரியிலுள்ள குன்னூரில் காலமானார். அவரது மறைவோடு மருட்பாக் கிளர்ச்சியும் மறைந்தது.

திரு. வி. க. வுமா?

திரு. வி. கலியாணசுந்தரனார், தம் இளமைப் பருவம் முதற் கொண்டு தமிழரிடையே—குறிப்பாக, சைவரிடையே நிலவி வரும் சாதி வேறுபாடுகளை வெறுத்து வந்தவர். சைவ சமயக் கூட்டமொன்றில், யாழ்ப்பாணப் பண்டிதர் ஒருவர், "சைவத்திற்குச் சாதி உண்டு" என்று பேசியபோது அதனை மறுத்து,

> "சைவத்துக்கு இழிபிறவிச் சாதி உண்டு என்று உறுதிப்பட்டால் யான் சைவத்தை விட்டு நீங்குவேன்"
>
> —'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்'; பக். 659.

என்று சூளுரைத்துப் பேசினார் திரு. வி. க. அப்படிப்பட்டவரும் 'மருட்பா'க் கூட்டத்துடன் சேர்ந்து 'அருட்பா'வின் சிறப்பினை மறுத்துப் பிரசாரம் செய்தார். இதனை அவரே 'வாழ்க்கைக் குறிப்புக்கள்' என்னும் தமது நூலில் ஒளிவு மறைவின்றிப் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

Koviloor Digital Library

திரு. வி. க., கதிரைவேலரின் மாணுக்கர். அருட்பா—மருட்பாப்போர் நடந்த காலத்தில், அவர் பள்ளி மாணவர். அதனுல், தம் ஆசிரியரிடம் வைத்திருந்த பக்தியாலும், அவருடைய நாவன்மையில் தமது இளம் பருவம் காரணமாக ஏற்பட்ட மயக்கத்தாலும் அவர் 'மருட்பா'க் கட்சியில் சேர்ந்திருந்தார். கதிரைவேலர் மறைவுக்குப் பின்னர் அருட்பாவின் பெருமையுணர்ந்து சன்மார்க்க ராஞர். வாழ்நாள் முழுவதும் வள்ளலார் புகழ் பரப்பப் பாடுபட்டார்.

ஆறுமுக நாவலர் காலத்திலும் சரி, நா. கதிரைவேலர் காலத்திலும் சரி; அருட்பாவுக்கு எதிராகத் திரண்டிருந்த அணியில் சேர்ந்திருந்த புலவர்களில் யாழ்ப்பாணத்தவர்களாகிய இவ்விரு நாவலர்களைத் தவிர, மற்றவர்களுடைய பெயர்களைக் காலம் விழுங்கிவிட்டது. காலத்தையும் வென்று புகழுடன் விளங்கிஞர் திரு. வி. க. ''இராமலிங்கர் திருவுள்ளம்''—''சமரச தீபம்'' என்னும் இரு நூற்கள் வள்ளலார் சந்நிதிக்குத் திரு. வி. க. தந்த காணிக்கையாகும்.

இப்படியாக, வள்ளலாருக்கு அடுத்த தலைமுறையில் தோன்றிய அருட்பா எதிர்ப்பியக்கம் திரும்பவும் உயிர்பெற இயலாதபடி அடியோடு மறைந்துவிட்டது. இராமலிங்கர் பாடல்கள் தெய்வத்தின் அருளால் பாடப்பட்டவை யென்ற உண்மை உறுதி பெற்றது. இன்ஞெரு வகையில் சொன்ஞல், உயர்சாதி மனப்பான்மை ஒடுக்கப்பட்டு, சமரசக்கொடி வானளாவ உயர்த்தப்பெற்றது. வள்ளலார் மறைவுக்குப்பின் 1896-ல் புத்துயிர் பெற்ற அருட்பா—மருட்பாப் போர், 1907-வரை நடைபெற்றது.

பிரமஞான சங்கம்

இராமலிங்கர் மறைவுக்குப் பிறகு, அவரது தெய்வீகக் குரல் எட்டுத் திக்குகளிலும் ஒலிக்கத் தொடங்கியது. பிரமஞான சங்கத்தின் அமைப்புத் தலைவியாராகிய பிளாவட்ஸ்கி அம்மையார், வள்ளலாரைப் புகழ்ந்து எழுதிஞர். இங்கே பிரமஞான சங்கத்தைப் பற்றிச் சிறிது விளக்குவது அவசியமாகும்.

வள்ளலார் வாழ்ந்த 19-ம் நூற்ருண்டில் 1875-ஆம் ஆண்டில்—நியூயார்க் நகரில் பிரமஞான சங்கம் நிறுவப் பெற்றது. ஆங்கிலத்தில், ''தியாசாபிகல் சொசைடி'' என்பதாகும். ருஷ்ய நாட்டுப் பிளாவட்ஸ்கி அம்மையாரும், அமெரிக்க நாட்டுக் கர்னல் எச். எஸ். ஆல்காட் என்பவரும் அச்சங்கத்தைத் துவக்கிய பெருமைக்கு உரியவராவர். இவ்விரு பெரியார்களும்

Koviloor Digital Library

1879-ல் இந்தியாவுக்கு வந்து பிரமஞான நெறியைப் பிரசாரம் செய்தனர். பின், 1883-ல் சென்னை அடையாற்றில் சர்வதேச இயக்கமாகிய பிரமஞான சங்கத்தின் தலைமை நிலையத்தை அமைத்தனர்.

எல்லாச் சமயங்களிலும் உள்ள உண்மைகளெல்லாம் சேர்ந்ததே பிரமஞானம் என்னும் தியாசாபியாகும். விவரம் வருமாறு :

(1) சாதி—சமய வேறுபாடின்றி எல்லா மக்களையும் ஒரே சமுதாயமாகச் செய்வது;

(2) எல்லாச் சமயங்களையும் தத்துவங்களையும் விஞ்ஞானங்களையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒற்றுமையைக் காண்பது;

(3) மனிதனிடம் வெளித் தோன்ருமல் மறைந்து நிற்கும் சக்திகளையும் இயற்கையிடம் பொருள் விளங்காமல் காணப் படும் விதிகளையும் ஆராய்வது.

பிரமஞான சங்கத்தின் இம் மூன்று கொள்கைகள் இராமலிங்க சுவாமிகள் அமைத்த சுத்த சன்மார்க்க சங்கத்தின் கொள்கைகளே யாகும். மனித ஆன்மாக்களை ஒன்றுபோல நினைத்து, அவற்றிடையே சமத்துவ அடிப்படையில் ஒருமைப் பாடு காண முயல்கின்றது பிரமஞான சங்கம். அதற்கும் ஒரு படி மேலே சென்று, எல்லா உயிர்களிடத்தும் கருணை செலுத்தி, அவற்றிடையே ஆன்மநேய ஒருமைப்பாடு காண முயல்கின்றது ஷடாந்த சுத்த சமரச சன்மார்க்க சங்கம்.

இராமலிங்கம் மகாத்மாவே !

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனுர், தமது "திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்" என்னும் நூலில்,

> "தியாசாபிகல் சங்கத்தைத் தொடக்கத்தில் எவரோ பிரமஞான சங்கம் என்று அழைத்துவிட்டனர். அதைச் சன்மார்க்க சங்கம் என்று திருத்தவேண்டும். தியாசபியும் சமரச சன்மார்க்கமும் ஒன்றே."

என்று கூறுகின்ருர். இது, கொள்கையளவில் உண்மையாகும். ஆனுல், பிரமஞான சங்கத்தின் கர்த்தாக்கள் என்ன நினைத் தாலும் சரி; இன்று அச்சங்கம் ஏழை மக்களின் வறுமையைப் போக்கப் பாடுபடும் அமைப்பாகச் செயல்படவில்லை. சாதி வேறுபாடு—மத வேறுபாடுகளை அது விரும்பவில்லை என்ரு

Koviloor Digital Library

லும், அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு முன்வரவில்லை. சமுதாயத்திலுள்ள மேட்டுக் குடிமக்கள் கூடிக் குலவும் பூங்கா வாகவே அது இருந்து வருகின்றது.

வள்ளலார் மறைந்த ஓராண்டுக்குப் பிறகே நியூயார்க்கில் பிரமஞான சங்கம் தோன்றியது. சமரச சுத்த சன்மார்க்க சங்கத்துடன் தமது பிரமஞான சங்கத்துக்குள்ள கொள்கை ஒற்றுமை காரணமாக, வள்ளலாரின் திருவுள்ளத்தைத் தெரிந்து கொள்ள முயன்றார் பிளாவட்ஸ்கி அம்மையார். ஓரளவு தெரிந்து கொண்டதன் பின்னர், ''அந்தரங்க தியாசாபியின் குறிப்புக்கள்'' என்ற நூலில் அடிகளாரைப்பற்றிக் கீழ் வருமாறு குறிப்பிட்டார்.

> ''இராமலிங்கம் ஐயத்திற்கிடமின்றி ஒரு மகாத்மாவே. உலக சகோதரத்துவத்திற்காகவே அரிய பணிபுரிந்து மனித சமுதாயத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்த அடங்காக் காதலுடன் அம் மகான் வாழ்ந்திருக்கிறார்.''

அம்மையார், ''மனித சமுதாயத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்தப் பாடுபட்டார்'' என்று நம் அடிகளைப் பற்றிக் கூறுவது கலப்பற்ற உண்மையாகும்.

Koviloor Digital Library

புகழ் மாலைகள்

முருகதாசர்

அடிகளார் காலத்தில் வாழ்ந்து, அவரோடு நெருங்கிப் பழகியவர், 'புலவர் புராணம்' இயற்றிய தண்டபாணி சுவாமிகள். இப்பெரியார், திருநெல்வேலியில் சைவ வேளாளர் குடியில் பிறந்தவர். ஒன்பது வயதிலேயே முருகப்பெருமான்மீது பக்தி கொண்டு அருட்பாடல்களைப் பாடத் தொடங்கியவர். புலவர் புராணமே யன்றி, 'அருணகிரி நாதர் புராண'த்தையும், அந்தப் பெரியாரையே பின்பற்றி எண்ணற்ற திருப்புகழ்ச் சந்தப் பாடல்களையும் இயற்றியவர். தம்முடைய பக்தி வைராக்கியம் காரணமாகக் கந்தப் பெருமானை இவர் தரிசித்தார் என்றும் சொல்வதுண்டு. சுவாமிகள், அருட்பிரகாச வள்ளலார் மறைந்த பின்னர், அவர் திரும்பவும் வருவார் என்று தம்மிடம் தெய்வம் கூறியதாகப் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள 'அனுபவப் பதிக'த்துள் சில வரிகள் வருமாறு:

" பெண்ணுருவம் ஒருபாதி
பெற்றிருக்கும் பீடுடையான்
கண்ணுரிமை தானுமில்லார்
கடைத்தலையில் திரிவேன்பால்
எண்ணும்வட லூர்ப்புலவன்
இருட்டறைவிட்(டு) எழுந்தொருக்கால்
மண்ணுலகம் ஈடேற
வருவான்என்று உரைத்தானே."

" மானம்கொண்(டு) அறையூடு
மறைந்திருக்கும் வடலூரான்
வானம்கண்டு இன்பம்எய்த
வருவான்என்று உரைத்தானே"

" தண்டலைசூழ் வடலூரான்
தனிஅறைவிட்(டு) இனியோர்கால்
வண்தமிழ்ச்சீர்க் கனியோங்க
வருவான்என்று உரைத்தானே."

Koviloor Digital Library

" அம்புவிஎல் லாமறிய
அறையுள்போம் வடலூரான்
வம்புரைப்பார் பலர்நாண
வருவான்என்று உரைத்தானே."

" சீராரும் வடலூரான்
சிற்றறைவிட்(டு) இனிஇங்கு
வாரான்என் பவர்கண்முன்
வருவான்என்று உரைத்தானே."

" திசையறிய வடலூரில்
செழுந்தமிழ்ப்பா வலன்தீயோர்
வசைமுழுதும் கெடமீண்டும்
வருவான்என்று உரைத்தானே."

" நற்கிருபை வலியாடி
நரர்வசைகொள் வடலூரான்
மற்கிளர்தோள் வேந்தர்தொழ
வருவான்என்று உரைத்தானே.

மற்றும், ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் பாடியுள்ள விஞப் பதிகத்துள், "வடலூரார் அறையை விட்டு எழுந்து வர இன்னமும் ஏன் அருள் புரியவில்லை?" என்று ஆண்டவனைக் கேட்பார் போலச் செந்தமிழ்ச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடியுள்ள பாடல்களில் சில வரிகள் வருமாறு:

" அரக்க ரில்தலை ய்ாயசிற் சிலர்க்கும்
அளவி லாவர மருளிய சிவனே
கரக்கு நெஞ்சுடைக் காதகர் வாழ்வு
கண்ட ருப்பெருங் களியடைந் தனையோ
பரக்கு நீர்த்தடஞ் சூழ்தரு வில்லிப்
பாக்கத்து என்னோடு பகர்ந்தமை நிசமேல்
இரக்கமே வடிவாம் வடலூரான்
இன்னம் ஏனெழுந் திடப்புரிந் திலையே!"

" மிளகை நேர்ஒரு சிறியவண்டு எழுந்து
விளக்கில் வீழினும் விழிப்புனல் சிந்தி
இளகு நெஞ்சகம் பெறும்வட லூரான்
இன்னம் ஏன்எழுந் திடப்புரிந் திலையே!"

Koviloor Digital Library

சோமசுந்தர நாயகர்

மருட்பாக் கட்சியின் தலைவராக விளங்கிய நா. கதிரைவேற் பிள்ளையவர்களின் ஆசிரியரான வைதிக சைவ சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், தாம் இயற்றிய 'வேத பாஹ்ய சமாஜ கண்டனம்' என்ற நூலின் துவக்கத்தில் "இராமலிங்கர் துதி' பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு :

"சீர்பூத்த மறைமுனிவர் அகம்பூத்த
நலம்பூத்த திறத்தி னுல்இப்
பார்பூத்த மயல்பூத்த எனதுளத்தில்
பூத்தநசை பாறப் பூத்த
ஏர்பூத்த அருள்நயன இணைபூத்த
இருந்தவனிங்(கு) இறைமை பூத்த
பேர்பூத்த போதசிதம் பரஇராம
லிங்கனடி பேணி வாழ்வாம்"

சிதம்பர சுவாமிகள்

மதுரை திருஞான சம்பந்தர் மடம் மிகப் பழமையானதாகும். அதன் ஆதீனகர்த்தர்கள் தம் இயற்பெயரை விட்டுத் திருஞான சம்பந்தர் என்ற பெயராலேயே விளங்குவது மரபு. அத்தகைய பெருமைமிக்க மடத்தில், வள்ளலார் காலத்தில் சிதம்பர சுவாமிகள் என்னும் இயற் பெயருடைய ஞானி முதன்மை பெற்று விளங்கினுர். அவர், அருட்பாக் கட்சிக்கு ஆதரவாக இருந்தார் என்று அறிகிறோம். அப்பெரியார் நம் அடிகளார்பற்றிப் பாடியுள்ள நேரிசை வெண்பா வருமாறு :

" தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம்விளங்க ஓங்குவிக்கும்—கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட் பாமுறையைத்
துங்கமுற மாணு தொழு."

ஸ்ரீ நாராயண குரு

ஸ்ரீ நாராயணகுரு என்பார், கேரளநாட்டில் தோன்றியசமூக சீர்திருத்தவாதியாவார். அப்பெரியார், எல்லாத் துறைகளிலும் தாழ்த்தப்பட்டு, உயர்சாதியினரின் கொடுமைகளுக்கு ஆளாகியிருந்த ஈழவர்களுக்கு உரிமைதேடப் பாடுபட்டு, அதில் வெற்றியுங்கண்டவர். வள்ளலாரை அடுத்துத்தோன்றிய ஞானியுமாவார். அப்பெரியார், ஐம்பதாண்டுகட்கு முன்பு தமிழகம்

Koviloor Digital Library

போந்து, தமிழ் பயின்று, வள்ளலாரின் அருட்பாக்களை ஓதி யுணர்ந்தார். அவர், "திருஅருட்பாவானது, இராமலிங்க அடிகளார் தெய்வமாய் நின்ற நிலையில் பாடப் பெற்றது (பா. பி. பு. 8; பாயிரம்)" என்று புகன்றதாகப் பாம்பன் குமரகுரு சுவாமிகளின் சீடரான திருவொற்றியூர்ப் பாலசுந்தர சுவாமிகள் கூறுகின்றார்.

மகாவித்துவானும் புகழ்ந்தார்

இன்னும் வள்ளலார் காலத்தில் 'தற்காலக் கம்பர்' என்ற சிறப்புப் பெயருக்குரியவராக விளங்கிய மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழகத்தில் எங்கும் எதிலும் தமிழே முழங்கவேண்டு மென்று முழங்கிய மாயூரம் வேதநாயகம் பிள்ளை ஆகிய பெரும்புலவர்களெல்லாம் வள்ளலாரை நேரில் கண்டு அவருடைய தெய்வப் புலமையை வியந்து போற்றி யுள்ளனர். வள்ளலார் வாழ்ந்த காலத்திலும் ஒருசிலரைத் தவிர —தமிழகம் முழுவதும் அவருக்கு ஆதரவாகத்தான் இருந்தது. இதில் சிறிதளவும் ஐயமில்லை. ஆயினும் தாம் வலியுறுத்திய ஒழுக்க நெறிகளைத் தமிழகத்தார்—குறிப்பாக, தம்மைச் சூழ்ந் திருந்த சமரச சன்மார்க்க சங்கத்தார் பின்பற்றவில்லை என்ப தாக அடிகளாருக்கு மனக்குறை இருந்தது. அதனாற்றான், "கடை விரித்தேன் கொள்வாரில்லை; கட்டிக் கொள்கின்றேன்" என்று அடிகள் கூறியிருக்க வேண்டும்.

வள்ளலார், தம் பருவுடலை மக்கள் பார்வையிலிருந்து மறைத்த பின்னர்ப் பகைவர்களையும் பக்தர்கள் ஆக்கிக் கொண்டார்—குறிப்பாக. 1897-லிருந்து 1907-வரையுள்ள பத்தாண்டுக் காலத்தில் நடைபெற்ற மருட்பாக் கிளர்ச்சி மறைந்த பின்னர், வைதிகச் சைவர்களும் திருஅருட்பா ஓதலா யினர். ஓத மனமில்லாதவர்கள் எதிர்ப்புக் காட்டாமல் ஒதுங்கி நின்றனர்.

கிருபானந்த வாரியார்

சத்தியஞான சபைக் கட்டிடத்தைச் சிறந்த முறையில் புதுப்பித்துக் கட்ட நினைத்தனர் வள்ளலார் பக்தர்கள். அவர் களில் தலையானவர், திருமுருக கிருபானந்தவாரியா ராவர். மூவேந்தர் காலத்திற்குப் பிறகு, அம் மாமன்னர்களால் செய்யப் பட்டு வந்த ஆலயத்திருப்பணிகளை, அவர்களுடைய வாரிசாக நின்று, வாரியார் சுவாமிகள் செய்துவருகின்றார். அந்த வகை யில், சத்தியஞான சபைத் திருப்பணியிலும் ஒன்பதாண்டுக் காலம் ஈடுபட்டு, 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் 24-ஆம் நாளன்று

Koviloor Digital Library

கும்பாபிஷேகம் நடத்தி வைத்தார். அதற்காகப் பொதுமக்களி டமிருந்து ரூ. 3,62,351—11—2 வசூலித்தார். இதில் சிறப்பென்ன வென்றால், சைவ மடங்களும் சத்திய ஞானசபைத் திருப்பணிக் காகப் பொருளை வாரி வழங்கியதாகும்.

தருமபுரம் ஆதீனத்தின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய மகாசன்னிதானம் பத் தாயிரம் ரூபாயும்,

திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பரமாசாரிய மகாசன்னிதானம் ஆறுயிர ரூபாயும்.

திருப்பனந்தாள் காசி மடத்தின் சார்பில் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் நாலாயிர ரூபாயும்,

வழங்கினர் என்றால், அருட்பாவின் வெற்றிக்கு வேறென்ன சான்று வேண்டும்!

அதுமட்டுமா? கொள்கையிலும் தமிழ் நாட்டுச் சைவ மடங் கள் வள்ளலாரின் சமரச நெறியைப் பின்பற்ற முன்வந்து விட்டன. அடிகள் ஸ்ரீராமர்மீது பாடினர் என்பதற்காக, அவர் காலத்து வைதிகச் சைவர்கள் அவரை வசை பாடினார்கள். இதோ, சான்று:

“அக்காலத்தி லிருந்த திருவாவடுதுறை யாதீன மகா சன்னிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமி கள் அவர்கள் உணர்ந்து சுத்தாத்துவித சைவ சித்தாந்த நெறிக்கும், திருவருண்முறைக்கும் விரோதமாக, பசுக் களாகிய செத்துப் பிறக்குந் தெய்வங்கள்மீது பாட்டுக்கள் பாடிய இராமலிங்க பிள்ளை யோர்நாளுந் திருவருட்பிரகாச வள்ளலார் ஆகார்...வைணவருந் தம்மை மதிக்கவேண்டு மென்று ஸ்ரீராம நாமத் திருப்பதிகம், திருஎவ்வுளூர் வீர ராகவப் பெருமாள் பதிகம், இலக்குமி தோத்திரம், சரசுவதி தோத்திரம் முதலியவற்றைப் பாடிய அவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்பதும், அவர் பாட்டுக்கள் திரு வருட்பா வென்பதும் சிறிது மொவ்வாதெனக் கண்டித்து அனுதாபப்பட்டனர்.”

—போலியருட்பா மறுப்பு; பக். 7, 8.

இப்படி, அடிகளாரின் சைவ—வைணவ சமரசக் கொள் கையை வெறுத்த அதே திருவாவடுதுறை ஆதீனம், இன்று திருப்பாவை—திருவெம்பாவைக் கூட்டு மாநாட்டினை நடத்தி வரக் காண்கிறோம்.

Koviloor Digital Library

மற்றொரு சைவ மடமாகிய தருமபுரம் ஆதீனமும் சைவ—வைணவ சமரசத்தைக் குறிக்கும் திருப்பாவை—திருவெம்பாவை மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றது. ஆம்; காஞ்சி காமகோடி பீடாதிபதியான சங்கராச்சாரிய சுவாமிகள், சைவ—வைணவ சமரசங்காண விரும்பி, திருப்பாவை—திருவெம்பாவை மாநாடு நடத்தச் சொன்னார்கள். அதனால் நடத்துகின்றன சைவ மடங்கள்! காரணம் எதுவாயினும், காரியம் வள்ளலார் உபதேசித்தது தானே!

Koviloor Digital Library

மறைந்தது உண்மையா?

இராமலிங்க சுவாமிகள் பூதவுடம்புடன் மறைந்ததாக அவர் முதன் மாணுக்கர் தொழுவூர் முதலியார் அவர்களே கூறியுள்ளார். அதனை முன்பே பார்த்தோம்; இன்னுமொருமுறை பார்ப்போம் :

"அவர் தமது சீடர்களுக்கு அன்பு நிறைந்த ஆசிகளைக் கூறி, தாம் இருந்த அக்குடிசைக்குள் விரித்திருந்த படுக்கையில் சாய்ந்து கொண்டார். அவருடைய உத்தரவின்படி அதன் கதவு பூட்டப் பட்டது. பின்னர், ஒரு வருடத்திற்குப் பிறகு, அரசாங்கத்தார் கதவைத் திறந்து பரிசோதித்ததில் அவ்வறை வெறும் அறையாயிருந்தது.

"அவர், மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னுரே தவிர, வருங்காலம், சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் தெரிவிக்க வில்லை.

"அதுவரையில், தாம் இந்தியாவில் மாத்திரமல்லாமல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் உலக முன்னேற்றத்தைக் குறித்து வேலை செய்யப் போவதாய்த் தெரிவித்தார்.

"இது ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கும் தெரிந்ததேயாகும்."

இதன்படி, அடிகள் பருவுடலோடு மறைந்தார், அவர் இப்போதும் உலகில் வாழ்கிறுர்; மறுபடியும் வருவார்—என்ற செய்திகளைத் தொழுவூர் முதலியாரே நம்பிக் கூறுகின்றுர்.

பிறந்தவர் இறப்பது உறுதி!

"பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி" என்பது உலக நியதி. இந்த நியதிக்கிணங்க, எத்தனை எத்தனையோ ஞானியர்கள் பூதவுடல் நீத்த செய்தியை வரலாற்றில் படிக்கிறேம். இதனை நினைப்பூட்டவே,

Koviloor Digital Library

'நோவாலே மடிந்திட்டான் புத்தன் கண்டீர்!
அந்தணனும் சங்கரா சார்யன் மாண்டான்;
அதற்கடுத்த இராமா நுஜனும் போனன்!
சிலுவையிலே அடியுண்டு யேசு செத்தான்;
தீயதொரு கணையாலே கண்ணன் மாண்டான்;
பலர்புகழும் இராமனுமே யாற்றில் வீழ்ந்தான்!''

என்று பாடினர் பாரதியார். இந்த உலக நியதிக்கு மாருக, "வள்ளலார் பருவுடலோடு மறைந்துவிட்டார்,'' என்ருல், அதனை எளிதில் நம்புவது இயலுமாறில்லை. ஆனல், அதனைத் துணிந்து மறுப்பதற்கு மில்லை. மறுக்கலாம், நாத்திகர்கள். அவர்கள் தெய்வத்தையே நம்ப மறுப்பவர்களாதலால், தெய்வத்தின் அருளால் ஜீவன் முக்தர்கள் நிகழ்த்தும் அற்புதங்களையும் நம்ப மறுத்தல் இயற்கை. ஆனல், தெய்வத்தை நம்பும் ஆத்திகர்கள் நிலை வேறு.

'அறிவு வாதம்!'

இராமலிங்கர், சித்தராவார். அவரது முடிவைப் பற்றிய உண்மையை உணர, வெறும் அறிவுமட்டுமே போதாது.

> 'பகுத்தறிவு எல்லாவற்றையும் தீர்த்துவிட முடியாது. சில விஷயங்கள் பகுத்தறிவுக்கு எட்டாதவை என்று தெரிந்து பக்தி செலுத்த வேண்டும். பக்திக்கு வேண்டிய நம்பிக்கை பகுத்தறிவைப் புறக்கணிக்கவில்லை. அதற்கு அப்பால் செல்கிறது. ஐம்புலன்களுக்கும் உள்ள ஆருவது புலன் ஒன்ருகும் இந்த நம்பிக்கை. பகுத்தறிவுக்கு எட்டாத விஷயங்களில் இந்த ஆருவது புலனே பயன்படும்.''
>
> —ரகுபதி ராகவ.

என்று காந்தியடிகள் கூறியது, நாம் இங்கு ஆராய எடுத்துக் கொண்ட விஷயத்திற்கு மிகமிகப் பொருத்தமானதாகும். ஆகவே, இவ்விஷயத்தில் பகுத்தறிவின் எல்லைக்கு அப்பால்வர விரும்பாதவர்களுடன் வாதித்துப் பயனில்லை. அவர்களை விட்டு விடுவோம்.

சைவர் நம்பிக்கை!

இந்து மதமோ அல்லது சைவ சமயமோ, "பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி,'' என்ற உலக நியதியை மறுக்கவில்லை; ஏற்கின்றது. ஆனல் அந்த நியதிக்கு விலக்காக, மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற உண்மைச் சிவஞானியர் சிலருடைய

Koviloor Digital Library

வரலாற்றையும் நமக்குத் தருகின்றது. எந்த விதிக்கும் விலக்கு உண்டு. அது போல, "பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி" என்ற இயற்கை விதிக்கும் விலக்கு உண்டு என்கின்றது சைவ சமயம். அந்த விதிவிலக்கு, வள்ளலார் தோன்றுவதற்கு முன்பே வரலாற்று நிகழ்ச்சியாகிவிட்டது.

அட்டமா சித்திகளுள், 'அணிமா' என்பதும் ஒன்று. அது கைவரப் பெற்ற சித்தர்கள், கூடுவிட்டுக் கூடுபாய்தல் கூடும் 'திரு மந்திரம்' என்ற சாத்திரத்தைத் தந்த திருமூலர், அட்டமா சித்திகளறிந்த சித்தர் என்று சொல்லப்படுகிறார். அவர், 'அணிமா'வின் துணைகொண்டு, கூடுவிட்டுக் கூடுபாய்ந்தார் என்று சொல்லப்படுகிறது.

அருட்பிரகாச வள்ளலார் அட்டமா சித்திகளும் கைவரப் பெற்ற சித்தர் என்பதனை முன்பே அறிந்தோம். ஆகவே, சித்தர் களினத்தைச் சேர்ந்தவராக அவரைக் கருதி, அவருடைய மறை வைப்பற்றி ஆராய வேண்டும். சித்தரினத்தின் ஆற்றல் பற்றி அருளாளரான தாயுமானவர் பாடியுள்ள பாடல் வருமாறு :

"திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி ஆடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு வென்னவே
திகழ்துருவ மளவளாவ
உக்ரமிகு சக்ரதரன் என்னநிற் பீர்கையில்
உழுந்தமிழும் ஆசனமா
வோரேழு கடலையும் பருகவல்லீர் இந்திரன்
உலகும்அயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா வெடுத்துவிளை யாடுவீர்
ககனவட் டத்தையெல்லாம்
கடுகிடை இருத்தியே அட்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலும்மேலும்
மிக்கசித் திகளெலாம்வல்லநீர் அடிமைமுன்
விளங்கவரு சித்தியிலிரோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே!"

'சித்தர் கணம்' என்ற தலைப்பில் தாயுமான சுவாமிகள் பாடியுள்ள பத்துப் பாடல்களையும் பொருளுணர்ந்து படித்தால், இராமலிங்கச் சித்தரின் மறைவை மறுக்க மனம் துணியாது.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர்

சைவ சமய குரவர் நால்வருள் முதல்வராகக் கருதப்படும் திருஞானசம்பந்தப் பெருமான், பூதவுடலோடு ஆண்டவனுடைய சோதியில் கலந்தார் என்கிறது பெரிய புராணம். தாம் கலந்ததன்றித் தம்முடைய திருமணங் காணவந்த அனைவரையும் சோதியில் கலக்கும்படி செய்தார் என்று புராணம் கூறுகின்றது. இதனைச் சொல்லப்புகும் சேக்கிழார் பெருமான்,

"ஆறுவகைச் சமயத்தில் அருந்தவரும் அடியவரும்
கூறுமறை முனிவர்களும் கும்பிடவந் தணைந்தாரும்
வேறுதிரு வருளினால் வீடுபெற வந்தாரும்
ஈறில்பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்

"காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலஞ் செய்தருளி
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்"

என்று பாடுகின்றார். இது பற்றித் 'தமிழ்க் கலைக் களஞ்சியம்' தரும் தகவல் வருமாறு:

"ஞானசம்பந்தருக்கு நல்லூர்ப் பெருமணம் என்னும் தலத்தில திருமணம் நடைபெற்றபோது, 'நல்லூர்ப் பெருமணம்' என்னும் பதிகம் பாடி, 'எமைப் போக்கருளீர்' என இறைவனை வேண்ட, அப்போது திருக்கோயில் இருந்த இடத்தில் சோதி ஒன்று தோன்றிற்று. சம்பந்தர், 'காதலாகி' என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடித் திருமணத்திற்கு வந்தோர் யாவரையும் அச்சோதியிற் செல்லப் பணித்துத் தாமும் மனைவியுமாகத் தமது பதினாறுவது வயதில் வைகாசி மூலத்தில் சோதியுட் புக்கனர்."

வள்ளற் பெருமான், ஞானசம்பந்தரையே தம் குருவாகக் கொண்டவர் என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

மாணிக்கவாசகர்

திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானும் பருவுடலோடு இறையருளில் கலந்து மறைந்துவிட்டார் என்பது சைவர்கள் நம்பிக்கை. அந்த அற்புத நிகழ்ச்சிபற்றிய விளக்கம் வருமாறு :

Koviloor Digital Library

"வாதவூரர் தவக்கோலம் பூண்டு, பல தலங்களையும் கண்டு வணங்கித் தில்லையை அடைந்து, ஒரு பன்னசாலையில் அமர்ந்தார்.

"சிவபெருமானே அந்தணர் கோலத்தோடு அவரிடம் சென்று, அவர் பாடிய திருவாசகம், திருக்கோவையார் என்னும் நூல்களை அவர் சொல்லத் தமது கையால் எழுதி, 'மாணிக்கவாசகர் சொல்ல, அழகிய சிற்றம்பலமுடையார் எழுதியது' என்று கைச்சாத்திட்டு, அந்நூல்களை அம்பலவாணர் திருமுன் வைத்து மறைந்தார். அந்நூல்களைக் கண்டுவியந்த அந்தணர்கள் வாதவூரரை அந்நூற்களுக்குப் பொருள் கூறவேண்டுமென வேண்ட, வாதவூரரும் பொன்னம்பலத்தே வந்து, 'இத் தமிழ் மாலைகளுக்குப் பொருள் இவரே' எனக் கூத்தப்பிரானைக் காட்டித் தமது 32 ஆவது வயதில் ஆனி மாத மக நாளில் மன்றினுட் கடிதினேகி மறைந்தனர்."

—கலைக்களஞ்சியம் தொகுதி 8; பக்கம் 217

பூதவுடலுடன் மறைந்த மாணிக்கவாசகரின் திருவாசகமே இராமலிங்கரை அருட்பிரகாச வள்ளலாராக மாற்றியதென் பதை இங்கு மனத்தில் கொள்ளவேண்டும்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர், தம் 81 ஆம் வயதில் திருப்புகலூர் என்னுந் தலத்தை அடைந்து, அவ்வூர்க் கோயிலிலுள்ள சிவலிங்கத்துள் பூதவுடலுடன் ஐக்கியமாகிவிட்டார் என்று சொல்லப்படுகின்றது. இதனைப் பெரிய புராணத்துள்,

" மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
'புண்ணியா! உன்னடிக்கே போதுகின்றேன்' எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டஅர(சு) அமர்ந்திருந்தார்,"

என்று சேக்கிழார் பாடியதால் அறிகின்றோம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பருவுடலுடன் கயிலாசம் சென்றதாகக் கதை உண்டு. அந்தக் கதைபற்றிய விளக்கம் வருமாறு :

"சுந்தரமூர்த்தி சுவாமிகள், மலைநாடு சேர்ந்து சேரமானைக் கண்டுகளித்துத் திருவஞ்சைக்களத்தில், 'வெறுத்தேன் மனை வாழ்க்கையை' என வரும் பதிகத்தைப் பாடி,

Koviloor Digital Library

இறைவன் அனுப்பின வெள்ளையானைமீது ஏறித் தமது 81ஆம் வயதில் ஆடி சுவாதியிற் கைலையை அடைந்தார்.''

-கலைக் களஞ்சியம் தொகுதி 5: பக். 60.

நந்தன் பெற்ற முத்தி !

சைவ சமய குரவர்களேயன்றிச் சைவ அடியார்களுள் சிலரும் பூதவுடலுடன் மறைந்தனர் என்று புராணங்கள் கூறும். அவர்களுள், நந்தனார் வரலாறு நாடறிந்த ஒன்றாகும். நந்தனார் முத்தியடைந்தது பற்றிய செய்தி வருமாறு:

''இவர் ஒருநாள் துணிந்து தில்லை அடைந்தார்... திருக்கோயிலை அடைந்து வழிபட வேண்டுமென்னும் ஆர்வமும், இப் புலைப் பிறவி அதற்கு இடையூறாக உள்ளதே என்ற கவலையும் மிக அங்கேயே துயின்றார். இவரது கனவில் தில்லையம்பலவாணர் எழுந்தருளி, 'நாளைக் காலையில் நீ இப்பிறவியிழிவு நீங்கும்படி தீயில் மூழ்கி அந்தணனாகி எம்மிடம் வருக' என அருள் செய்தார். தில்லை மூவாயிரவரான அந்தணர்கள் கனவிலும் அவ்வாறே அருளினார்.

''மறுநாள், அந்தணர்கள் இவரையடைந்து இறைவன் அருளியதைக் கூறித் தீ மூட்டிக் கொடுத்தனர். தீயில் மூழ்கிய நந்தனார், தூய அந்தணராகித் தில்லை மூவாயிரவரும் வணங்கத் திருக்கோயிலினுட் சென்று சிவபிரான் திருவடி யடைந்தார்.

—கலைக் களஞ்சியம் தொ. 6: பக். 5.

இந்தச் செய்தியைத் தரும் சேக்கிழார் பாடல் வருமாறு:

'' தில்லைவாழ் அந்தணரும் உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோய் உட்புகுந்தார்; உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்.''

இவ்வாறு ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், நந்தனார் ஆகிய சிவஞானியர்கள் பூதவுடலுடன் மறைந்தனர் என்ற புராணச் செய்திகளைச் சைவப் பெருமக்களே யன்றி, வைதிகச் சனாதனிகளும் நம்புகின்றனர். நம்ப மறுப்பவர்கள் சைவர்களாகவோ, சனாதனிகளாகவோ கருதப்படமாட்டார்கள்.

Koviloor Digital Library

'டாக்டர்' பட்டம் பெற்ற ஆராய்ச்சியாளர்களுள் சிலர், இந்தச் செய்திகளை வரலாற்று நிகழ்ச்சிகளாகவும் தக்க சான்றுகள் காட்டி வற்புறுத்துகின்றனர்.

மறைந்து வாழும் சித்தர்கள்

மனிதர் 'மரணமிலாப் பெருவாழ்வு' வாழ முடியும் என்ற நம்பிக்கை இந்து மதத்தினரிடையே நீண்ட நெடுங்காலமாக நிலைபெற்ற நம்பிக்கையாக இருந்து வருகின்றது. இதனை விஞ்ஞான சாத்திரப்படி நிரூபிக்க முடியாமலிருக்கலாம். ஆனால், மெய்ஞ்ஞான சாத்திரத்தில் இப்படியும் ஒரு நிலை இருக்கிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை. 'சித்தர்கள்' என்போர், மரணத்தை வென்று, எங்கோ மலைகளிலும் குகைகளிலும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று அறிஞருலகிலேயும் பலர் நம்புகின்றனர்.

விஞ்ஞானத்திற்கும் மெய்ஞ்ஞானத்திற்கும் அடிப்படையில் வேற்றுமையுண்டு. விஞ்ஞானி ஐம்புலன்களையும் பயன்படுத்தி, கருவிகளின் துணையால் அவற்றின் ஆற்றலைப் பெருக்கிக் கொண்டு, பிரபஞ்ச உண்மைகளை அறிய முயல்கின்றார். மெய்ஞ்ஞானியின் நிலை இதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். மெய்ஞ்ஞானி தம் ஐம்புலன்களையும் ஒடுக்கி, பிரபஞ்ச உண்மைகளையே யன்றி, அந்தப் பிரபஞ்சத்தைப் படைத்த சக்தியையும் அறிய முயல்கின்றார். ஆம்; விஞ்ஞானி, அறிவால் எதையும் பார்க்கிறார். மெய்ஞ்ஞானி, அருளால் எதையும் பார்க்கிறார். சுருங்கச் சொன்னால், விஞ்ஞானியால் பார்க்க முடியாததை யெல்லாம் மெய்ஞ்ஞானி பார்க்கிறார். ஆம்; அறிவின் எல்லையைக் கடந்து செல்ல அவரால் முடிகிறது. ஆகவே மெய்ஞ்ஞானியின் ஆற்றலை ஆராய்ந்து அதுபற்றி முடிவு கூறும் திறமை விஞ்ஞானிக்கு இருப்பதாக நம்புவதற்கில்லை. அதனால், இதில் விஞ்ஞானத்தை இழுக்க வேண்டா.

திரு. வி. க. கூறுகிறார்!

"முதலில் மனிதன் மரணமிலாப் பெருவாழ்வு வாழ முடியுமா?" என்பதனை ஆராய்வோம்:

"சாகா நிலையென்னும் ஒருநிலையுண்டு என்பது எனது ஆராய்ச்சியில் விளங்கிய உண்மைகளுள் ஒன்று. அது குறித்து எனக்கு எவ்வித ஐயமாதல், திரிபாதல்,மயக்கமாதல் இல்லை.அந்நிலையில் எனக்கு உறுதியுண்டு. நமதுநாட்டு

Koviloor Digital Library

ஆன்றோர் ஒரு முகமாக அறிவுறுத்திய அப்பெருநிலை இப்பொழுது மேல் நாட்டறிஞர் பலராலும் உறுதி செய்யப்பட்டு வருகின்றது. சர். ஆலிவர் லாட்ஜ் முதலிய பேரறிஞர் ஆராய்ந்து கண்ட உண்மைகள் பல எனது ஐயந்திரிபு மயக்கங்களைப் போக்கின. சாகா நிலைபற்றி இதுபோழ்து எனக்கு எவ்வித ஐயப்பாடுமில்லை.

"சாகா நிலையென்னும் பெருநிலை ஒன்று உண்டு. அது குறித்து எவரும் ஐயுறாது உறுதி கொண்டு அந்நிலையெய்த உழைக்க விரைந்து எழுங்கள்! எழுங்கள்!!"

என்கிறார், திரு. வி. கலியாணசுந்தரனார்.

—'இராமலிங்கர் திருவுள்ளம்'. பக். 102.

தாயுமானவர் கருத்து

இராமலிங்க சுவாமிகளுக்கு முன்னோடியாக விளங்கிய தாயுமான சுவாமிகள், "சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம்" பெற்றுவிட்டால்,

"வேறொருவர் காணாமல் உலகத் துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்
சந்ததமும் இளமையோடு இருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுதலாம்"

என்று பாடி, "மனிதன் மரணத்தை வென்று மறைந்து வாழ முடியும்," என்னும் கருத்தினை உறுதிப்படுத்தியுள்ளார். இராமலிங்கர், சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கும் திறன் பெற்றவர் என்பதில் யாருக்கும் ஐயமிருக்க முடியாது.

பாம்பன் சுவாமிகள் பாடல்

'பாம்பன் சுவாமிகள்' என்று அழைக்கப் பெற்ற குமரகுருதாச சுவாமிகள், வள்ளலார் காலத்தில் வாழ்ந்தவராவார். அம்முனிவர் கீழ்வரும் பாடலில், சிவ ஞானியர்களின் வாழ்க்கை முடிவினை மூன்று வகையாகப் பிரித்துரைக்கின்றார்.

"எடுத்ததூ லத்தினை விடுத்தரிய பரகதியை
எய்துநெறி உண்டென்பதற்கு
ஏனாதி, மெய்ப்பொருளர், பெருமிழலை யார்கரி;
எடுத்ததூ லத்தொடு அருள்தான்

Koviloor Digital Library

அடுத்தமுதம் உற்றதற்கு ஆரூரர், சோதியில்
அடைந்ததற்கு அமணசிங்கம்,
அமலலிங் கத்துழி அடைந்ததற்கு ஆள் அரையர்,
ஆக்கைவேறு ஆயதற்கு
நடித்ததிரு நந்தனர் சாட்சி,முத் தாவரமும்
ஞாலமிசை வீழாமலே
ஞானவெளி உற்றதற்கு ஏசில்சுகர், வாதவூர்
நாயனர் கரியாம்;உப
நிடதத்தின்முடி வானஎம் பெருமஇவை களில்உனை
நினைக்கும்எற்கு ஏதுவருமோ?
நித்தசக ராலய சிதானந்த சோதியே
நிட்களா னந்தகுகனே.''

குமரகுருதாச சுவாமிகள், ஆன்மாவானது வினைகளிலிருந்து விடுபட்டுப் பருவுடலை நீத்துத் தெய்வத் திருவருளில் கலக்கும் நெறி ஒன்று உண்டென்பதற்கு அத்தகு நிலையினை அடைந்த ஏனாதி நாதர், மெய்ப் பொருள் நாயனர், பெருமிழலைக் குறும்ப நாயனர் ஆகிய அடியார்களைச் சான்று காட்டுகின்றார்.

பூத உடம்பொடு இறையருளில் கலக்கும் நெறி உண்டென்பதற்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகளைச் சான்று காட்டுகின்றார்.

பூத உடலொடு சோதியில் கலக்கும் நெறி உண்டென்பதற்குத் திருஞான சம்பந்தப் பெருமானைச் சான்று காட்டுகின்றார்.

உடம்பொடு சிவலிங்கத்துடன் ஐக்கியமானதற்குத் திருநாவுக்கரசரைச் சொல்லுகின்றார்.

உடம்பினை மாற்றிக்கொண்டு சிவத்தொடு சேர்ந்ததற்கு நந்தனரைக் கூறுகின்றார்.

பருவுடல் கொண்டே பரம்பொருளுடன் ஐக்கியப் பட்டதற்கு வாதவூரரைச் சான்று காட்டுகின்றார்.

இப்படி, பல்வேறு நெறிகளைச் சொல்லி, அவற்றுள் தமக்கு எது வருமோ என்று ஏங்கி, மரணமிலாப் பெரு வாழ்வே வர வேண்டும் என்ற விருப்பத்தைச் சொல்லாமல் சொல்லுகின்றார் குமரகுருதாசர்.

இதனாலும் மரணமிலாப் பெருவாழ்வு உண்டென்பதனைச் சைவ உலகமும் ஒப்புக்கொண்டிருப்பது உறுதிப்படுகின்றது.

Koviloor Digital Library

மறுப்பது பிள்ளைமதி

ஆத்திகரிலேயுஞ் சிலர் "ஞானசம்பந்தர் போன்றோர் ஊனுடலுடன் மறைந்தார்கள் என்பது கற்பனை. அது சாத்திய மில்லை" என்று கூறி, அது போன்றே இராமலிங்க அடிகளார் மறைந்த செய்தியையும் நம்ப மறுகின்றனர். பாரபட்ச மற்ற இந்த 'அறிவு வாதம்' என் மனத்துக்கு ஆறுதல் அளிக்கின்றது. ஆயினும், இப்படிக் கூறுபவர்கள், என் போன்ற சாமான்ய அறிவினர்களே. சித்தர்கள் நிகழ்த்தும் அற்புதங்கள் பற்றித் தீர்ப்பளிக்கச் சாமான்ய அறிவினர்களுக்கு உரிமை யில்லை என்பதே என் பணிவான கருத்து. வள்ளலார் போன்ற சித்தர்களின் அருள் வழிப்பட்ட ஆற்றலை ஆராய்ந்து முடிவு காண்பதற்கு நமக்குள்ள சாமான்ய அறிவு போதாது; போதவே போதாது. வள்ளலார் 'மறைந்தார்' என்பதனை எளிதில் ஏற்கத் தயங்குவது இயற்கை. ஆனால், அப்படி ஒரு கலையே இல்லையென்றோ, அருளாளருள் எவரும் ஊனுடலுடன் மறைந்திருக்கவே முடியாதென்றோ துணிந்து முடிவு கட்டிவிடுவது, பிள்ளைமதியாகும்.

முரண்பட்ட வாதம்!

வைதிகச் சைவருள் சிலர், "ஞானசம்பந்தர் போன்றோர்க்கு ஊனுடம்பே ஞான ஒளியுடம் பாயிற்று என்பது உண்மையே. தத்துவ நூலும் இதனை ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், இராமலிங்க அடிகளார் அந்நிலையை எய்தியிருக்க முடியாது" என்கின்றனர். இந்த வாதம் சைவத்துக்கோ, தெய்வத்துக்கோ பெருமை தேடுவதாகாது. ஊனுடம்பே ஞான ஒளியுடம்பாகும் தத்துவம் இருப்பது உண்மையானால், அத்தகைய அற்புதத்தை முன்னம் ஞானசம்பந்தர் போன்றோர் நிகழ்த்தினார்கள் என்றால், பிற்காலத்தவரான இராமலிங்கருக்கு மட்டும் அது ஏன் சாத்திய மாகாது?

சிவஞானியர்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வினைத் தரும் கருணையையே கடவுள் துறந்துவிட்டாரா? இல்லையென்றால், ஊனுடம்பைத் தமது தவ வலியால் ஞான ஒளியுடம்பாக மாற்றும் சித்தர்களைத் தோற்றுவிக்கும் திறனையே சைவ சமயம் இழந்து விட்டதா?

விஞ்ஞானத் துறையில் மனிதனுடைய ஆற்றல், உலகமே அதிசயிக்கத் தக்க வகையில் வளர்ந்து வரக் காண்கிறோம். ருஷ்ய நங்கையும் நம்பியும் புற வெளிக்குச் சென்று திரும்பிய

Koviloor Digital Library

தொன்றே இதற்குச் சிறந்த சான்று. விஞ்ஞானத்தின் நிலை இது வானால், மெய்ஞ்ஞானத் துறையில் மட்டும் சிவஞானிய ருடைய ஆற்றல் ஞான சம்பந்தர் காலத்தோடு அழிந்து போய் விட்டது என்று சொல்லாமல் சொல்லுவது, சைவத்தையும் தெய்வத்தையும் பெருமைப்படுத்துவ தாகாது.

கலெக்டரின் சோதனை

வள்ளலார் மறைந்த ஓராண்டுக்குள், அப்போது தென்னார்க் காடு மாவட்டக் கலெக்டராக இருந்த ஆங்கிலேயே அதிகாரி, சித்தி வளாகம் சென்று, அடிகள் மறைவு பற்றிப் புலன் விசாரணை நடத்திபிருக்கிறார். அவருடன் சென்ற ஆங்கிலேய டாக்டரும் அடிகள் கடைசியாக யோக நித்திரையிலாழ்ந்த அறையின் சூழ்நிலையைச் சோதித்திருக்கிறார். மருத்துவ சாத்தி ரப்படியும் ஆராய்ந்து உண்மை அறியவே, கலெக்டருடன் ஆங்கில டாக்டர் ஒருவரையும் அனுப்பியது அரசாங்கம். அவ் விருவரும் அடிகளின் மறைவை ஐயந்திரிபற அங்கீகரித்த தாகத் தெரியவில்லை; அங்கீகரித்திருக்கவும் மாட்டார்கள். ஏனென்றால் அவர்களும் இந்த விஷயத்தில் அறிவின் எல்லைக்கு அப்பால் செல்ல முடியாதவர்கள் தாமே! ஆனால், கலெக்டரும், டாக்டரும் அடிகளாரின் மறைவுபற்றிய செய்தியை மறுத்த தாகவும் குறிப்பு எதுவும் கிடைக்கவில்லை. அவ்விரு ஆங்கிலே யர்கள் அதிகார பூர்வமாக அரசினருக்குத் தந்த அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை. அதனைப் பெறக் கடந்த சில மாதங் களில் நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளனைத்தும் வீணா யின. வள்ளலார் மறைவு பற்றி விசாரணை நடத்திய கலெக்டர் துரைமகனார் தயாரித்து வெளியிட்ட "தென்னார்க்காடு மாவட்ட கெஜட்"டில், 'பார்வதிபுரம்' என்ற தலைப்பின்கீழ், இராமலிங்க அடிகளார் பற்றிச் சிறிய குறிப்பொன்று காணப் படுகின்றது. அதில், வள்ளலார் போற்றப்பட்டிருக்கிறார். அதனால், வள்ளலார்பால் அவ் வெள்ளைக் கலெக்டருக்கிருந்த நன்மதிப்புப் புலனாகின்றது.

ஆங்கிலேயர் பாராட்டுகிறார்

தெ. ஆ. கெஜட்டில் கலெக்டர் தந்துள்ள குறிப்பை முன்பே பார்த்தோம். அதில் வள்ளலாரின் மறைவுபற்றிய பகுதியை மீண்டுமொருமுறை பார்ப்போம்.

> "1874ல் மேட்டுக் குப்பத்தில்...அவர் ஒரு அறைக்குள் நுழைந்துகொண்டு வெளியே தாளிடச் செய்தார்.

Koylloor Digital Library

"அந்த அறையைக் கொஞ்ச காலத்திற்குத் திறக்கக் கூடா தென்று அவர் தமது சீடர்களுக்குக் கட்டளை யிட்டார். அன்றிலிருந்து அவர் காணுமற் போய்விட்டார். அறை இன்னும் பூட்டப்பட்டே இருக்கிறது. அவர்பால் பக்திகொண்டவர்கள் அவர் ஆண்டவனேடு ஐக்கிய மாகி விட்டதாக இன்னமும் நம்புகின்றனர். காலம் வந்ததும் அவர் திரும்பவும் தோன்றுவார் என்றும் அவர்கள் நம்பு கிறுர்கள்.

"ஒரு மதத் தலைவர்பற்றிக் கருத்து வேற்றுமை எழுவது இயற்கை. என்றுலும், அவரது பாடல்களைப் பொறுத்தவரை, அவை உயர்தரமானவை. இது தகுதி யுடைய பெரியோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது."

ஆங்கிலேயரான கலெக்டரின் குறிப்பு வள்ளலாரின் மறைவு பற்றிய உண்மையை எதிர்மறையில் ஒப்புக்கொள்வ தாக இருக்கிறது.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE:

கலைக் களஞ்சியங்களிலே

"அபிதான சிந்தாமணி" என்னும் பெயரில் சுமார் முப்பது ஆண்டுகட்கு முன்பு வெளியான தமிழ்க் கலைக்களஞ்சியத்தில் வள்ளலார் மறைந்த செய்தியினை உறுதிப்படுத்தி எழுதப்பட் டுள்ள வாசகம் வருமாறு :

"இவர் வடலூரை அடுத்த மேட்டுக்குப்பம் என்னும் சிற்றூரில் சித்திவளாகத் திருமாளிகையில் சிவத்தியானத் துடன் எழுந்தருளி யிருக்கையில், சிவஞானயோக முதிர்ச்சி யால் தோன்றிய சோதிவடிவான அருட்பெருஞ் சோதியைத் தரிசித்துப் பின்...செயற்கையுடல் இயற்கையுடலாகத் திரிவுபடுஞ் சின்மாத்திர சகஜ சமாதியில் அசைவற விருந்து சற்குருவைச் சிந்தித்துத் தாம் அமர்ந்திருந்த அறையை மூடிப் பூட்டிக்கொள்ளத் தமது அன்பர்க்குக் குறிப்புணர்த்தித் தாமும் தமது இந்திரியக் கதவை மூடி மவுன நிட்டை கூடி நித்தியானந்த முற்றனர்."

தமிழக அரசினரின் ஆதரவோடு தமிழ் வளர்ச்சிக் கழகத் தார் வெளியிட்டுள்ள 'தமிழ்க் கலைக் களஞ்சியம்'—தொகுப்பு 6, பக்கம் 33-ல் அருட்பிரகாச வள்ளலாரின் மறைவுச் செய்தியை உறுதிப் படுத்தும் வகையில் காணப்படும் வாசகம் வருமாறு:

"அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்து பின்னர், இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூர் இறையே!

Koviloor Digital Library

என்று மாணிக்கவாசகர் பற்றி வள்ளலார் பாடுகின்றார். இது வள்ளலார்க்கும் பொருந்துவதே என்பது நினைத்து இன்புறற்பாலது,"

ஆத்திக வட்டாரத்துள் முற்போக்காளர்களுள் முதல்வராகத் திகழ்ந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார்.

"இராமலிங்க சுவாமிகள் திருஞான சம்பந்தப் பெருமானைக் குருவாகக் கொண்டு, திருவாசகத்தைப் பொருணூலாகக் கொண்டு, முருகப்பெருமானைக் கடவுளாகக் கொண்டு, கடவுள் அருளுருவங்கண்டு, காமவெகுளி மயக்கங்களைப் போக்கி, யாண்டுங் கடவுள் நீக்கமற நிறைந் திருத்தலை உணர்ந்து, எவ்வுயிர்க்குந் தீங்கு செய்யாமை என்னும் அருளறத்தை வளர்த்து, அவ்வருணெறியே சமரச சன்மார்க்க மென்று தெளிந்து, அம்மார்க்கத்தை உலகிற்கு அறிவுறுத்தி, இறுதியில் சாகா நிலையெனும் பெருவாழ்வு பெற்றார்."

—['இராமலிங்கர் திருவுள்ளம், பக். 141.']

என்று கூறி, வடலூர் முனிவர் உடலோடு மறைந்ததனை உறுதிப் படுத்துகின்றார்.

வள்ளலாரே கூறுகின்றார்!

இந்தப் புறச் சான்றுக ளெல்லாம் ஒருபுற மிருக்க, அருட்பாவிலுள்ள அகச் சான்றும் வள்ளலார் பூதவுடலோடு மறைந்ததனை நம்புமாறு நம்மை வற்புறுத்துகின்றது. திருவருட்பாவிலுள்ள ஒரு பாடல், வள்ளற்பெருமான் எதனாலும் அழியாத அருளுடலைப் பெற்றவரென்று நமக்கு அறிவிக்கின்றது. அப்பாடல் வருமாறு:

" காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் [எனக்கே."

இந்தப் பாடல், அருட்பிரகாச வள்ளற்பெருமானே பாடியதாதலால், அவருடைய வாய்மையிலே நம்பிக்கையுடைய மக்கள் இந்தப் பாடலின் பொருளையும் நம்பவேண்டி யிருக்கிறது.

Koviloor Digital Library

'மரணமிலாப் பெருவாழ்வு' என்பதனைப் 'பேரானந்த நித்திரை' என்றும் கூறுகின்றனர் பெரியோர். வள்ளலாரும், தாம் சித்திவளாக அறையுட் புகுந்து மறைவதற்கு முன்னர்,

"பிச்சுலகர் மெச்சப் பிதற்றிநின்ற பேதையனேன்
இச்சைஎலாம் எய்த இசைந்தருளிச் செய்தனையே
அச்சம்எலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கின்றேன்
நிச்சலும் பேரானந்த நித்திரைசெய் கின்றேனே."

என்னும் பாடலைப் பாடி, பின்னர் அறைக்குள் புகுந்து திருக்காப்பிட்டுக் கொண்டார். இதனாலும் அடிகளார் மறைந்த செய்தியை நாம் நம்பவேண்டி யிருக்கிறது. இராமலிங்கர் உள்ளத்தாற் பொய்யார்தொழுகிய உத்தமரென்பதனை அவரோடு கருத்துவேற்றுமை கொண்ட வைதிகச் சைவர்களும் மறுத்தார்களில்லை. வாழ்நாள் முழுதும் வெள்ளாடைத் துறவியாகவே காலங்கழித்த அவர், வாய்மைக்கு மாறானவற்றைச் சொல்லி, மக்களிடம் புகழ்தேட விரும்பினாரென்று யாரும் சொல்லமுடியாது. அவரது வாழ்க்கை வேறுவிதமாக முடிந்திருப்பினும், அவருடைய பெருமைக்கு மாசு ஏற்பட்டிருக்க முடியாது. உண்மை இதுவாக, அடிகளார், தாம் மரணமிலாப் பெருவாழ்வு பெற்றதாகப் பொய் கூறவேண்டிய அவசியமென்ன?

வள்ளலாரைப் போன்ற அருளாளர்கள் விஷயத்தில் 'தற்கொலை'க்கு இடமே இல்லை. அப்பெரியாரின் பெயரோடு அதனைப் பொருத்திப் பேசுவதே பாவமாகும்.

மறைந்திராவிடில்...

ஏசு பெருமான், வெறியர்கள் சிலரால் சிலுவையில் அறைந்து கொலலப்பட்டார். காந்தியடிகள், மதவெறியன் ஒருவனுடைய கைத்துப்பாக்கியி லிருந்து புறப்பட்ட தோட்டாக்களுக்கு இரையானார். கொல்லப்பட்ட காரணத்தால் அவர்களுடைய புகழ் களங்கப்பட்டதா?—இல்லை. இலட்சியத்திற்காக உயிர்த்தியாகம் புரிந்த காரணத்தால் அப் பெரியார் இருவரும் மக்கள் வணங்கி வழிபடும் தெய்வங்க ளாகிவிட்டனர்.

இராமகிருஷ்ண பரமஹம்சர், தம் வாழ்க்கையின் முடிவில் இயற்கை மரணமெய்தினார். அதனால், அவரது பெருமை குறைந்துவிட்டதா?—இல்லை. உலக நாடுகள் அனைத்திலுமே பரமஹம்சரின் புகழ் ஒளிவீசி நிற்கின்றது.

Koviloor Digital Library

நம் வள்ளலார், ஏசு—காந்தியடிகள் போலக் கொல்லப்பட்டிருப்பினும் சரி; அல்லது இராமகிருஷ்ண பரமஹம்சர் போல இயற்கை மரணமே எய்தியிருப்பினும் சரி; அவரது பெருமை மறைந்திருக்காது. அவர் இயற்றியுள்ள அருட்பாக்களின் வாயிலாக அவர் அழியாப் புகழை அடைந்திருப்பார் என்பது உறுதி. ஆனால், வள்ளலார் தம் ஊனுடலை ஞான ஒளியுடலாக மாற்றிக்கொண்டு மறைந்துவிட்டார் என்பதுதான் ஆத்திக உலகின் அழுத்தமான நம்பிக்கை. இதனை ஐயுறலாம். ஆனால், அடியோடு மறுத்துரைக்கப் போதிய ஆதாரமில்லை. ஐயப்பாட்டிற்குக் காரணம், அறிவின் எல்லையைக் கடந்து செல்ல இயலாமையே யாகும்.

நம்புகின்றேன்!

தம்முடைய ஊனுடலை ஞான ஒளியுடலாக மாற்றிக் கொண்டதாக வள்ளலாரே கூறியிருப்பதனால், அவரது மறைவு பற்றிய செய்தியை ஐயுறுவதற்கு என் அறிவு அஞ்சுகின்றது. வடலூர் முனிவர், உள்ளத்தாலும் பொய்யாது ஒழுகிய உத்தமர். அவருடைய உள்ளத்தில் உண்மை ஒளி வீசியதால், வாக்கிலேயும் அந்த ஒளியைக் காண்கின்றோம். என்னைப் பொறுத்த வரையில், 'மனிதன் மரணமிலாப் பெரு வாழ்வு வாழ முடியும்; அந்தப் பெரு வாழ்வினை இறைவனருளால் யான் பெற்றேன்'—என்று வள்ளலார் கூறியதை, அவர்பால் கொண்ட பக்தி காரணமாகவும், அவருடைய வாய்மையில் கொண்ட நம்பிக்கை காரணமாகவும் நம்புகின்றேன்.

வள்ளலார் போன்ற ஞானியரின் வாக்கையே நாம் நம்ப மறுப்போமானால், அப்புறம் நமது வாழ்க்கை பாலைவனமாகி விடும்.

அடிகளார் உள்ளம்!

இராமலிங்க அடிகள் தமது ஊனுடலை ஞான ஒளியுடலாக்கி மறைந்து வாழ இறைவனிடம் வரம் வேண்டினாராயினும், பிற சிவஞானியர் போன்று "ஊனுடலை உதறியெறிந்து இறையருளில் கலக்க நேரினுஞ் சம்மதமே" என்றுங் கூறினர். இதனை,

"தருவகைஇத் தருணம்நல்ல தருணம்இதில் எனக்கே
 தனித்தஅருட் பெருஞ்சோதி தந்தருள்க இதுதான்
ஒருவகைஈ திலைஎனில்வே றொருவகைஎன் னுடைய
 உடல்உயிரை ஒழித்திடுக உவப்பினொடே இந்த
இருவகையும் சம்மதமே திருவடிசாட் சியதாய்
 இயம்பினன்என் இதயம்உன்றன் இதயம்அறிந் ததுவே

Koviloor Digital Library

அருவகையோ உருவகையும் ஆகிஎன்னுள் அமர்ந்தாய்
அம்மேஎன் அப்பாஎன் அய்யாஎன் அரசே!''

என்னும் அருட்பாவால் அறிகின்றோம். இதனால், மரணமிலாப் பெருவாழ்வு பெற்றுவிட்டதாகப் புனைந்துரைக்கும் மனநிலையில் அடிகள் இல்லை யென்பது புலனாகும். ஆம்; மரணத்தின் முடிவில் முத்தி பெறும் நிலையே தமக்குச் சித்தித்திருப்பினும் அடிகள் அதனை உலகறிய வெளிப்படுத்தி யிருப்பார் என்பதில் ஐயமில்லை.

ஞானசம்பந்தர் காலம் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டது. அந்த ஞானியைக் குருவாகக் கருதி வழிபட்ட சைவ மன்னர் ஆட்சியிலே அவரது வாழ்க்கை முடிந்திருக்கிறது. அவரது மறைவு பற்றிய செய்தியைக் கற்பனைகள் மிகுந்த புராணத்தின் வாயிலாகத்தான் அறிகிறோம். தமது ஊனுடலை ஞான ஒளியுடலாக மாற்றிக் கொள்ளும் அருளைத் தாம் பெற்று விட்டதாக அவர் பாடி வைக்கவில்லை.

இராமலிங்கர் நிலை வேறு. அவர், இற்றைக்குத் தொண்ணூறு ஆண்டுகட்கு முன்பு, மதத்தாலும் அன்னியரான ஆங்கிலேயர் ஆட்சியில் வாழ்ந்து மறைந்தவர். அவர், பல ஆயிரக் கணக்கான மக்கள் அறியும் வண்ணம் தம் சீடர்களிடம் விடைபெற்றுக் கொண்டு, சித்திவளாகத் திருவறைக்குட் சென்று மறைந்தார் என்கிறார் வேலாயுத முதலியார். அடிகள் காலத்தில் வாழ்ந்த மற்றொரு சிவஞானியான ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகளும் அடிகள் மறைந்த அற்புதத்தை நம்பிப் பாக்கள் பல எழுதிவைத்துப் போயிருக்கிறார். ஆகவே, புராண நாயகரான ஞானசம்பந்தர் சோதியுட் கலந்ததாக நம்புவோர், வரலாற்று நாயகரான இராமலிங்கர் அருட் சோதியில் கலந்ததனை நம்ப மறுப்பதற்கில்லை.

கற்பூரக் கதை

அடிகளாரின் மறைவு பற்றி மற்றொரு கர்ண பரம்பரச் செய்தியும் உலவிவருகின்றது. அஃதாவது, அடிகள், கற்பூரத்தை அதிக அளவில் வாங்கிச் சித்திவளாக அறையில் குவித்துவைத்து, இறுதிநாளில் அதன் மீதமர்ந்து சமாதி நிலை கூடி, அந்தக் கற்பூரத்தால் அவர் தமது உடலைக் கரைத்து விட்டார் என்று சொல்லப்படுகின்றது. இதற்கு நூற்சான்றில்லை. இராமலிங்கருக்கு முன்பிருந்த சிவஞானியருள் எவரும் இந்த முறையைக் கையாண்டு முத்தி பெற்றதாகச் செய்தியில்லை. இதனை உறுதிப்படுத்துவதற்கு அடிகளாரின் திருவட்

Koviloor Digital Library

பாவிலும் சான்றில்லை. இறைவனுடைய திருமேனியில் கற்பூர மணம் வீசுவதாக அடிகள் திருவருட்பாவில் சில இடங்களில் கூறுகின்றார். மற்றபடி, கற்பூரத்தால் உடலைக் கரைக்கும் கலையொன்றிருப்பதாகவோ, அது தமக்குக் கைவரப்பெற்றதாகவே அடிகள் எங்குமே கூறவில்லை. அடிகளாரின் இறுதி நாள் பற்றித் தொழுவூர் வேலாயுத முதலியார் எழுதியுள்ளதிலோ, தென்னார்க்காடு மாவட்ட கெஜட்டில் அடிகளார் பற்றியுள்ள குறிப்பிலோ, இந்தக் 'கற்பூரக் கதை' காணப்படவில்லை. ஆகவே, இந்தக் 'கதை' சிறிதேனும் நம்பத்தக்க தன்று.

பொதுவாக, மரணமிலாப் பெருவாழ்வினை ஐயுறுபவர்களும், அதனை மறுக்காமல் ஆராய்வார்களாக! மரணத்தை வெல்லவும் மனிதனால் முடியும் என்ற நம்பிக்கையை அழிக்காமலிருப்பது நலம். அதனை அழித்து மயானத்தில் புரளுவதால் ஆனந்தமேது?

வள்ளலாரின் பெருமை, அவர் ஊனுடலை ஞான ஒளியுடலாக மாற்றிக் கொண்டதிலேயும் இருக்கின்றது என்பதில் ஐயமில்லை. ஆனால், அதற்காக மட்டுமே நாம் அவரை வழிபடுகிறோமில்லை. ஒழுக்க சீலராக, உத்தமத் தவசியாக, பிறர் பட்டினி தீர்க்கும் வள்ளலாக, உயிர்கள்பால் இரக்கம் கொண்ட கருணையாளராக, கவிதை மழை பொழியும் கார்மேகமாக வாழ்ந்தாரே, அவற்றிற்காகவும் சேர்த்துத்தான் நாம் வள்ளலாரை வழிபடுகின்றோம். அதனால், அவரது மறைவை நம்பாதவர்களும் அவரை மனித குலத்தின் மாணிக்கமாக மதித்து வழிபட வேண்டும். அப்படியே வழிபட்டும் வருகிறார்கள். இந்த நம்பிக்கை என்றென்றும் நிலைத்திருப்பதாக!

'கோட்சேக்கள்' பிறக்காத நாடு!

"காந்தியடிகளை அந்தணக் கோட்ஸே ஒருவன் கொன்றான். வள்ளலாரின் முடிவும் அது போன்றதே" என்று ஒரு வதந்தி இருந்து வருகின்றது.

தமிழர் சமுதாயத்தில் முன்னணியிலுள்ள ஒன்றிரண்டு சாதியினர், சமயத் துறையில் வள்ளலாரின் தலைமையை ஏற்று, பழைமையிலே புதுமை காணத் தவறியிருக்கலாம்; தவறினார்கள் என்பதும் உண்மை. அவர்களிலே பெரியவர்கள் சிலர், வள்ளலாரின் புரட்சிகாமான கருத்துக்களைத் தங்கள் வைதிக உணர்வு காரணமாக எதிர்த்திருக்கலாம்; எதிர்த்தார்கள் என்பதும் வரலாறு. ஆனால், வள்ளலாரின் உயிரைக் குடிக்குமளா

Koviloor Digital Library

விற்கு அவர்களுள் யாரும் 'கோட்ஸே'யாக மாறியிருக்க மாட்டார்கள் என்று உறுதியாக நம்பலாம்.

தமிழருடைய பண்பாட்டில் அழுத்தமான நம்பிக்கையுடையவர்கள் என் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள்; எதிர்க்க மாட்டார்கள். தமிழகத்தின் வரலாற்றில் ஞானியர்களின் உயிரைக் குடிக்கும் 'கோட்ஸே'க்கள் முன் எக் காலத்திலும் பிறக்கவில்லை; இனி, எதிர்காலத்திலும் பிறக்கப்போவ தில்லை. இது தமிழனுக்குள்ள தனிப் பெருமை.

தீண்ட முடியாத திருமேனி

இஃது ஒருபுறமிருக்க, கொலையுணர்வுடன் எவனும் வள்ளலாரின் உடலைத் தீண்டியிருக்க முடியாது. அவர் 'பிரணவ தேகம்' பெற்றவர்.

"காற்றாலே புவியாலே ககனமத னாலே
கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக்கருவி யாலே
கோளாலே பிறஇயற்றும் கொடுஞ்செயல்க ளாலே
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான்
[எனக்கே."

என்னும் பாடலிலே, கொலைக் கருவியாலும் அழிக்க முடியாத உடம்பை இறையருளால் தாம் பெற்றுவிட்டதாகக் கூறுகின்றார். இந்தப் பாடல் வள்ளலார் விஷயத்தில் 'கோட்சேத் தனம்' நடந்திருக்க முடியாது என்பதற்குச் சிறந்த அகச்சான்றாகும். வள்ளலாரின் வாய்மையில் நம்பிக்கையுடையவர்கள் இந்தப் பாடல் ஒன்றைக் கொண்டேனும், அவர் விஷயத்தில் 'கோட்ஸேத்தனம்' நடக்கவில்லை என்பதை நம்புவார்களாக.

Koviloor Digital Library

வள்ளலார் வருவாரா?

அடிகளாரின் அடியவரான உபயகலாநிதி தொழுவூர் வேலாயுத முதலியார்,

> "இராமலிங்கர், மறையுங்கால், மறுபடியும் தாம் வருவதாகச் சொன்னார். வருங்காலம், சந்தர்ப்பம் என்பவைகளைக் குறித்து ஒன்றும் சொல்லவில்லை,"

என்று கூறியுள்ளார். வள்ளலார் காலத்தில் வாழ்ந்த ஸ்ரீமத் தண்டபாணி சுவாமிகள் போன்ற பெரியோர்களும் அவர் திரும்பவும் வருவார் என்றே நம்பினர்.

வள்ளலார் ஊனுடலுடன் மறைந்ததை நம்பாதவர்கள் அவர் திரும்பி வருவார் என்பதனையும் நம்ப மாட்டார்கள். பொதுவாக, நாம் எளிதில் புரிந்து கொள்ளுமாறு வள்ளலார் திரும்பவும் நம்மிடையே வருவாரென்பதை நம்புவது யாருக்கும் கடினம்தான். ஆனால், வள்ளலார், தம்பெற்றோர் தமக்களித்த ஊனுடலை ஞான ஒளியுடலாக்கிக்கொண்டு மறைந்த பின்னர், அவரது வாரிசாக வட பாரதத்தில் ஒருவர் செயல்பட்டார் என்பது மட்டும் உண்மை.

வடக்கே சென்றிருப்பார்

வள்ளலார் பரம்பொருளால் படைக்கப்பட்ட பிரபஞ்சம் முழுவதையுமே தமது தாயகமாகக் கொண்டவர். ஆகவே, அவர் இத்தமிழகத்தே கடை விரித்து விற்க முயன்ற சரக்கு, இங்கு விலைபோகவில்லை என்றால், இப் பிரபஞ்சத்தின் பிறிதொரு திக்கிலே கடைவிரிக்கச் சென்றிருப்பார் என்று நம்பலாம். ஆம்; பாரதத்தின் தென் கோடியில் கடை விரித்து, "ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை"ச் சரக்கினை விற்க முயன்றார். சரக்கு விலை போகாததால், இங்குக் கடையைக் கட்டிக்கொண்டு, வடக்கேசென்று தமது 'வாணிக'த்தைத் தொடர்ந்தார் என்று நம்பலாம்.

> "நான் கொடுத்த போதனைகளை, இந்துக்கள் செவியுற்றுக் கேளாத போதிலும், வேதாகமங்களில் அமிழ்ந்து கிடக்கும் அந்தரங்கக் கருத்துக்களைப் பத்திரமாய் வைத்திருக்கும் மகாத்மாக்கள் அன்னிய நாட்டாருக்கு வெளிப்

Koviloor Digital Library

படுத்துவார்கள். அன்னிய நாட்டார் அவற்றைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வார்கள்.

"வடக்கே வெகு தூரத்தில் வசிக்கும் அம்பல சகோதரர்கள், இந்தியாவில் அநேக அற்புதங்களை நிகழ்த்தி, நமது தேசத்திற்கு அளவிடக்கூடாத நன்மைகளை விளைவிப்பதைச் சீக்கிரம் நீங்கள் காண்பீர்கள்.

"நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளை அப்போது நீங்கள் தெரிந்து கொண்டு மதித்து நடப்பீர்கள்."

என்று வள்ளற் பெருமான் கூறியதாகத் தொழுவூரார் நமக்குத் தகவல் தந்துள்ளார்.

வள்ளலார் புகன்றபடி, அவரது மறைவுக்குப் பின் வட பாரதத்தில் ஒரு மகாத்மா நமக்கு அறிமுகமானார். அவர், **மோகனதாஸ் கரம்சந்திர காந்தியாவார்.**

'வடக்கே வெகு துரத்தில்' என்று அடிகளார் கூறியதனால், 'இமயத்துக்கு வடக்கே' என்று பொருள் கொள்ளத் தேவையில்லை. 'வேங்கடத்துக்கு வடக்கே' என்றே கொள்ளலாம். வள்ளலார் காலத்தில் இரயில், மோட்டார், விமானம் போன்ற துரிதப் போக்கு வரத்துக்கான வாகனங்களோ, தந்தி—தபால் போன்ற செய்திப் போக்குவரத்துச் சாதனங்களோ மலிந்திருக்கவில்லை யாதலால், வேங்கடத்துக்கு வடக்கேயுள்ள பாரதம் அவருக்கு வெகு தூரமாகப் பட்டிருக்கலாம்,

மறைந்ததிலும் ஒற்றுமை

வள்ளலார் மறைந்த காலத்தில், காந்தியடிகள் ஐந்து வயதுப் பிள்ளையாக நடமாடிக்கொண்டிருந்தார்.

வள்ளலார், 1823-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஐந்தாம் நாளில் தோன்றினார். காந்தியடிகள், 1869ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2ஆம் நாளில் வடக்கே 'போர்பந்தர்' என்னும் ஊரில் பிறந்தார்.

இந்தப் பெரியார்கள் இருவரின் மறைவிலேயும் வியக்கத் தக்க ஒற்றுமையைக் காண்கிறோம். வள்ளலார், 1876-ஆம் **ஆண்டு ஜனவரித் திங்கள் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை** யன்று மறைந்தார்.

Koviloor Digital Library

காந்தியடிகள் 1948ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30ஆம் நாள் வெள்ளிக்கிழமை யன்று மறைந்தார்.

இராமலிங்கர், நாட்டிலே நல்லாட்சி அமைய வேண்டுமென் பதிலும் அக்கறை கொண்டிருந்தா ராயினும், ஆத்மார்த்தத் துறையிலேயே அவர் அதிக கவனம் செலுத்தினர். காந்தியடி கள் ஆத்மார்த்திகத்திலும் தொடர்பு கொண்டிருந்தா ராயினும், அரசியல் துறையிலேயே அதிக ஆர்வம் காட்டினர்.

கொள்கை உடன்பாடு

இந்த முரண்பாடற்ற வேற்றுமைக்குக் காரணம், இரு பெரியார்களும் வாழ்ந்த காலத்தில் நாட்டின் சூழ்நிலையிலிருந்த வேறுபாடுதான். வள்ளலார், "கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக" எனக் கூறி, "அருள் நயந்த நன்மார்க்கர் ஆள்க" எனப் பாடினர். அதனையே, "ராம ராஜ்யம்" என்றார் காந்தியடிகள். இது தவிர, இன்னும் எத்தனையோ துறைகளில் வள்ளலாரே காந்தியாக வாழ்ந்தாரோ என்று ஐயுறுமளவுக்கு அவர்களி டையே கருத்தொற்றுமை இருக்கக் காண்கிறோம். இராமலிங்கர்,

> சாதி வேற்றுமைகள் அடியோடு தொலைய வேண்டும்;
>
> மதங்கள் அனைத்துமே தொலைந்து மதங்களற்ற மனித சமுதாயம் அமைய வேண்டும்;
>
> உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதி அவற்றின் பால் அன்பு செலுத்த வேண்டும்;
>
> பட்டினி தொலைந்து பாரிலுள்ள அனைவோரும் பசியாற உண்ண வேண்டும்;

என்னும் சீரிய கொள்கைகளை யெல்லாம் செந்தமிழ் நாட்டு மக்களிடையே பரப்பப் பாடினர்; பாடுபட்டார்.

இந்தக் கொள்கைகள் அனைத்தும் காந்தியடிகளாலும் வலி யுறுத்தப்பட்டன. ஒரு விஷயத்தில் மட்டும் வள்ளலாரிட மிருந்து காந்தியடிகள் சிறிது வேறுபட்டார். அதாவது, மதங் களற்ற மனித சமுதாயம் காண விரும்பினர் வள்ளலார். காந்தி யடிகள் மதங்களை அழிக்காமல் அவற்றிடையே ஒருமைப்பாடு காண முனைந்தார். இதனை முரண்பாடுடைய பெரிய வேற்றுமை யாகக் கொள்ளத் தேவையில்லை.

மதங்க ளிடையே உறவு ஏற்பட்டு பரஸ்பரம் நல்லெண் ணம் நிலவி, அவற்றிடையே ஒருமைப்பாடு நிலவுவது சாத்திய

Koviloor Digital Library

மானுல், அதனை, அருட்பிரகாசருடைய திருவுள்ளத்திற்கு இசைந்ததாகவே கொள்ளலாம்.

அப்படியே, இன்று அடைந்துள்ள இழிநிலையிலிருந்து மதங்களை மீட்கமுடியாதென்றால், அவற்றை அடியோடு மறைத்தொழிப்பது காந்தியத்திற்கும் பொருந்துமெனக் கொள்ளலாம்.

வள்ளலார் புரட்சிகரமான புதிய கொள்கைகளை மக்களிடையே பரப்பினர். அதற்குமேல் செயலில் ஈடுபட்டுத் தம் கொள்கைகளுக்கு வெற்றி தேட அவருக்கு வாய்ப்பில்லை. அதற்கான முக்கியக் காரணம், தம்முடைய ஆன்மாவுக்கு மரணமிலாப் பெருவாழ்வு தேடும் முயற்சியிலும் அவர் ஈடுபட்டதுதான்.

காந்தி கண்ட வெற்றி

காந்தியடிகள் அரசியலிலேயே முழுமூச்சுடன் ஈடுபட்டாராதலால், சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்த அவரால் முடிந்தது. இன்று பாரதத்தில்,

சமயச் சார்பற்ற அரசு முறை அமுல் நடக்கின்றது;

தீண்டாமைக் கொடுமை சட்டரீதியாக ஒழிக்கப்பட்டிருக்கின்றது;

சொத்துரிமையிலும், பிற சமூக உரிமைகளிலும் 'ஆணுக்குப் பெண் சமம்' என்ற அறம் நிலைநாட்டப் பெற்றிருக்கிறது;

உடைமையாளர் உண்டு மகிழவும், வறுமையாளர் உணவின்றித் தவிக்கவுமான இழிநிலை அகலச் 'சோஷலிஸச் சமுதாயம்' அமைக்கப்படுமென்று உறுதி கூறப்பட்டுள்ளது;

தமிழகத்தில், தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் மூடநம்பிக்கை சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது;

மதுவுண்ணும் கொடிய வழக்கத்தை ஒழிப்பதற்காகச் சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன;

உலகப் பெரும் போரினைத் தவிர்க்கவும், உலக நாடுகளோடு பாரபட்சமின்றி நட்புக் கொள்ளவும், உள்நாட்டில் மக்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி காணவும் பயன்படக் கூடிய வகையில் 'கூட்டுச் சேராக் கொள்கை' கடைப்பிடிக்கப்படுகின்றது;

Koviloor Digital Library

உலக ஒருமைப்பாட்டிற்குக் கேடின்றி, பாரதத்தில் 'சகோதர அறம் (தேசிய ஒருமைப்பாடு)' நிலவச்செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்தச் சீரிய செயல்முறைகள்—கொள்கைகள் அனைத்தும் காந்தியடிகள் நமக்குத் தந்த போதனைகளின் விளைவு என்பதோடு, நம் அருட்பிரகாச வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைச் சித்தாந்தத்திற்கு ஏற்றவை என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஜோதியே காந்தி

சுருங்கச் சொன்னால், தமிழகத்தில் 'ஜோதி' வடிவாக விளங்கிய இராமலிங்கர், வடக்கில் 'காந்தி' வடிவிலே காட்சியளித்தார் என்று சொல்லலாம்.

தெற்கில் இராமலிங்க வள்ளலார் உபதேசித்தபோது ஏற்காத கொள்கைகளை, வடக்கில் தோன்றிய மோகனதாஸ் கரம்சந்திர காந்தி சொன்னபோது, வாழ்த்தி, வழிபட்டு வரவேற்றனர் தமிழ் மக்கள். இதனை முன்கூட்டி அறிந்தே,

> "நான் இப்போது உங்களுக்கு வீணில் சொல்லும் சிறந்த உண்மைகளையே, வடக்கில் மகாத்மாக்கள் தோன்றி உங்களுக்குச் சொல்வார்கள். அப்போது நீங்கள் தெரிந்துகொண்டு மதித்து நடப்பீர்கள்,"

என்று தமிழ் மக்களைப் பார்த்துக் கூறிச்சென்றார் இராமலிங்கர்.

இராமலிங்கர், மதங்கள் அனைத்தையும் வெறுத்தாராயினும், அம்மதங்கள் வலியுறுத்திய அறங்களை வெறுத்தாரல்லர். ஆம்; அறங்களை ஆதரித்தார்; பொருளற்ற அனுஷ்டானங்களை வெறுத்தார். இன்னொரு வகையில் சொன்னால், தத்துவங்களை விரும்பினர்; போலிச் சடங்குகளை வெறுத்தார்.

> "ஒரு தேசத்தைச் சார்ந்தவராக இருந்தால்தான் சர்வதேசத் தலைவராகவும் இருக்கமுடியும். அதுபோல் ஒரு மதத்தைச் சார்ந்தவராக இருந்தால்தான் சர்வமத சமயங்களையும் அறிந்து சமரசவாதியாக இருக்கமுடியும்"
>
> -'அரிஜன்' 29-2-48.

இது, காந்தியடிகளின் கருத்து. இதன்படியே தாம் உண்மை இந்துவாகவும், அதே நேரத்தில் உலக மதங்கள் அனைத்துக்குமே உற்ற நண்பராகவும் வாழ்நாள் முழுவதும்

Koviloor Digital Library

இருந்துவந்தார் காந்தியடிகள். இந்த விளக்கத்தை நினைவிற் கொண்டால், சமயத்துறையில் காந்தியடிகளுக்கும் வள்ளலாருக்கும் இருந்த கருத்து ஒற்றுமையைப் புரிந்துகொள்ளலாம்.

காந்தியடிகளின் தொண்டு

சமயத் துறையில் காந்தியடிகளுக்கும் வள்ளலாருக்கு மிருந்த கருத்தொற்றுமையை இன்னும் சிறிது விரிவாக அறிவது அவசியமாகும்.

> காந்தியடிகள், அன்னிய மதங்களின் படையெடுப்பால் அழிந்துகொண்டிருந்த இந்து மதத்திற்குப் புத்துயிர் கொடுத்தார். அரசியலுக்கும் அறத்திற்கும் வேறுபாடு அதிகரித்துக் கொண்டே இருந்த நேரத்தில், அதனை அகற்றி, இரண்டுக்குமிடையே பழைய காலத்தில் இருந்ததினும் சிறந்ததான ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார்.
>
> சநாதனிகளின் கொடுமையை வெறுத்து, இந்து மதத்திலிருந்து நாள்தோறும் வெளியேறி, பிறமதங்களைத் தழுவிக்கொண் டிருந்த தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட சாதிகளின் மக்களுடைய வாழ்க்கை நலன்களுக்கும் உரிமைகளுக்கும் பரிந்து பேசி, எஞ்சி யிருந்தவர்களை யெல்லாம் இந்து மதத்திலேயே நிறுத்தி வைக்கப் பாடுபட்டார். அதே நேரத்தில், மத வேற்றுமைகளை, அவை காரணமாக வளர்ந்த விரோதங்களை அகற்றி, சர்வ மதங்களிடையேயும் ஒருமைப்பாட்டை வளர்க்க முயன்றார்.

இவ்வளவிருந்தும், இந்து மத வெறித்தனத்துக்கு விரோதமாக இருந்தார் என்ற ஒரே காரணத்துக்காக, அந்தப் பெரியாரைச் சுட்டுக் கொன்றான் கோட்ஸே. ஆம்; காந்தி அடிகளாரை இந்து மதத்தின் விரோதியாகவும் துரோகியாகவும் கருதினான் அந்தக் கொடியவன்.

தூய சைவர் !

> வள்ளலாருக்கு ஒரு கோட்ஸே பிறக்கவில்லை. அவர் தமிழராகப் பிறந்து, தமிழகத்திலேயே வாழ்ந்தாராதலால்! ஆனால், அவரையும் வைதிக மதத்தின் விரோதியாக—துரோகியாகக் கருதிய சைவாகமப் புலவர்கள் அவர் காலத்திலும் அவருக்குப் பிற்காலத்திலும் வாழ்ந்தனர். இதனை முன்பே அறிந்தோம்.
>
> இராமலிங்கர், பிற மதங்களை வெறுக்கும் 'சைவ' மதத்தை விரும்பவில்லை. ஆனால், தத்துவ ரீதியான

Koviloor Digital Library

சைவத்தை விரும்பி, அது போதிக்கும் நெறிகளைக் கடைப் பிடித்து வாழ்ந்தார்; பல தெய்வங்களை மறுத்து, ஒரே தெய்வக் கோட்பாட்டினை வலியுறுத்தினார்; ஆனால், அந் தத் தெய்வத்தைச் 'சிவம்' என்ற பெயராலேயே வழிபட் டார்.

'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை, மரண மிலாப் பெருவாழ்வு தரும் மகா மந்திரமாக நம்பினார் வள்ள லார். அதனைத் தினமும் தாமே ஓதி தம்முடைய அன்பர் களையும் அடியார்களையும் ஓதுமாறு தூண்டினார்.

சைவர்களுக்கு முத்தி தரும் தலமாகக் கருதப்படு கிறது 'சிதம்பரம்'. அந்தத் தலத்தையே தாம் வழிபடும் சிவம் தமக்குக் காட்சி தந்த புண்ணியப் பதியெனக் கூறி னார். பிற்காலத்தில், வடலூருக்கு 'உத்தரஞான சிதம் பரம்' எனப் பெயர் தந்த போதும், பழைய சிதம்பரத் தினைப் 'பூர்வஞான சிதம்பரம்' என்னும் பெயராலேயே அழைத்தார்.

அவர் சைவ சமய குரவர்களுள் முதல்வரான திரு ஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டார். பன்னிரு திருமுறைகளுள் எட்டாவதாகவுள்ள திருவாசகத்தைப் பக்தி நூலாகக் கருதி, பத்தாவது திருமுறையாகவும் சைவ சமய சாத்திரங்களுள் ஒன்றாகவு முள்ள 'திருமந் திர'த்தையே தமக்குப் புது வாழ்வு தரும் புதையலாகவும் மதித்தார்.

இப்படிச் சைவத்தைத் துறக்காமல்—சைவ நெறியிலிருந்து பிறழாமல் வாழ்ந்த நிலையில்தான், பல சமய தத்துவங்க ளிடையே சமரசம் காண விழைந்தார் வள்ளலார். மத (ஸ்தா பன) வேற்றுமைகளை ஒழிக்க முயன்றார். அந்த யாத்திரை யிலே, மதமற்ற சமுதாயம் காண்பதைத் தமது இறுதி இலட் சியமாகக் கருதினார். அவரைப் புரிந்து கொள்ளாத வைதிகச் சைவர்கள், சைவத்தின் விரோதியாகவே அவரைக் கருதினர்; அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு அளவிறந்த தொல்லைகள் தந்தனர்; பிற்காலத்திலும் அவரைப் பழித்துப் பிரசாரம் செய்தனர். அவ்வகையில் அவர்கள் மொத்தம் 18 நூல்களை வெளியிட்டனரென்றால், அவர்களுடைய சைவநெறி மறந்த வெறிப்போக்கை என்னென்பது !

பொதுவாக, காந்தியடிகளும் சரி, அவருக்கு வழிகாட்டி யாக வாழ்ந்த வள்ளலாரும் சரி; தங்கள் சொந்த மதத்தவர் களாலேயே துன்புறுத்தப்பெற்றனர். நல்ல வேளையாக அத்தகையவர்கள் சிலராகத்தான் இருந்தனர் என்பதொன்றே நமக்குள்ள ஆறுதல்.

Koviloor Digital Library

வள்ளலாரைப் பின்பற்றுவோம்!

மதவாதிகளிலே சிலர் அல்லது பலர் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பதற்காக, ஒழுக்கத்தைப் போதிக்கும் உபதேச நெறிகளை வெறுப்பதோ, தத்துவ சாத்திரங்களைப் பழிப்பதோ அறிவுடைமை யாகாது.

> "எந்த ஸ்தாபனமும் எந்த முறையும் நாளாவட்டத்தில் சில சுயநலக்காரர்களின் கையில் சிக்கி அவர்களுடைய சுயநலத்துக்குக் கருவிகளாகிவிடும். அப்படியே மத ஸ்தாபனங்களும் மதங்களும் கூடக் கெட்டிருப்பது உண்மை. ஆனால், பிந்தி நடைபெறும் சீர்கேட்டை, மதங்களை உண்டாக்கிய மகான்களை அவமதிப்பதற்குக் காரணமாக வைத்துக்கொள்வது ஆராய்ச்சி முறையாகாது. சாக்கடையைப் பார்த்து மேகத்தில் அழுக்கிருந்தது என எண்ணலாமா? மேகத்தையும் மழையையும் எவ்வளவு கௌரவமாக நோக்க வேண்டுமோ, அவ்விதமே ஆதி ரிஷிகளையும் அவர்கள் இயற்றிய தர்ம நூல்களையும் கௌரவித்துப் படிக்க வேண்டும்."

இது, 'கண்ணன் காட்டிய வழி' என்ற தமது நூலின் முன்னுரையில் அறிஞர் ராஜாஜி சீர்திருத்தக்காரருக்குத் தரும் அறிவுரையாகும். வள்ளலாரும் காந்தியடிகளும், 'சீர்திருத்தக்காரர்கள்' என்ற வகையில், மதத்தின் பெயரால் மக்களை ஏமாற்றுபவர்களை எதிர்த்தனராயினும், ஒழுக்கத்தையும் மகான்கள் போதித்த தத்துவங்களையும் போற்றினார்கள்.

இருவரும் ஒருவரே!

நான், காந்தியடிகளை, அரசியல் துறையில் மட்டுமல்லாமல் ஆத்மார்த்தத் துறையிலும் பின்பற்ற முயன்று வருபவன். அந்த முயற்சியில் நான் பெற்ற அனுபவத்தைக் கொண்டு, அவரை வள்ளலாரோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததில், தென் பாரதத்தில் தோன்றி மறைந்த வள்ளற் பெருமானுகவே வட பாரதத்தில் பிறந்த கரம் சந்திர காந்தி காட்சியளித்தார் என்று நம்புகிறேன். ஆம்; 'மறுபடியும் வருகிறேன்' என்று சொல்லிவிட்டு மறைந்த வள்ளற் பெருமானின் பிரதிநிதியாகவே வடக்கில் பிறந்து பாரதம் முழுவதற்கும் தலைவராக விளங்கிய காந்

Koviloor Digital Library

தியடிகளை நாம் கருத வேண்டும். இது, அந்தப் பெரியார்களிடம் நான் கொண்டுள்ள பக்தி காரணமாகப் பிறந்த நம்பிக்கையாக இருக்கலாம்; ஆயினும், இந்த நம்பிக்கை என்னளவில் நல்ல பலனைத் தந்திருப்பதால், என்னைப் போலவே எல்லோரும் நம்ப வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

வள்ளலாருடைய உபதேசங்களைக் காந்தியடிகளின் உபதேசங்களோடும் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடும் ஒப்பிட்டுப் பார்த்துப் பொருள் காணவேண்டும். அப்போது நான் சொல்வதிலுள்ள உண்மை புரியும்.

தமிழகத்தில் வாரிசு !

தமிழகத்திலேயும் வள்ளலாரின் வாரிசாகத்தோன்றி வாழ்ந்த மற்ருெரு ஞானியாரை இங்கு நான் குறிப்பிட வேண்டும். அவர், மகாகவி சுப்பிரமணிய பாரதியா ராவார். இராமகிருஷ்ணருக்குப் பிறகு, ஒரு விவேகானந்தர் அவருடைய குரலிலே பேசக் கேட்டோம். அப்படியே, இராமலிங்க அடிகளாருக்குப் பிறகு, அவருடைய கொள்கைகளை அவரது குரலிலேயே எதிரொலித்த பெருமை கவிஞர் பாரதியாருக்கு உண்டு. ஆனுல், விவேகானந்தரைப் போன்று மகாகவி பாரதியார் சமயத் துறைக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை. அவர், பாரதமெங்கும் விடுதலைப் போர் வீறுகொண் டெழுந்த காலத்தில் வாழ்ந்தார். அதனுல், 'விடுதலைப் புரட்சி' என்ற புயலிலே சிக்கிக் கொண்டார். இல்லையேல், வள்ளலாரின் கொள்கைகளைப் பரப்புவது ஒன்றையே தமது குறிக்கோளாகக் கொண்டு பணிபுரிந்திருப்பார். இதில் எனக்கு ஐயமில்லை.

பாரதி பேசுகிறுர் !

'பாரதி—கட்டுரைகள்' என்னும் நூலில் 'தமிழ்நாட்டின் விழிப்பு' என்ற தலைப்பின் கீழ் இராமலிங்க வள்ளலார்பற்றிச் சுப்பிரமணிய பாரதியார் வெளியிட்டுள்ள கருத்து வருமாறு :

"எம்மதமும் சம்மதம்" என்றுர் ராமலிங்க ஸ்வாமி.

"உலகத்தில் உள்ள மதபேதங்களை எல்லாம் வேருடன் களைந்து ஸர்வ ஸமய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானுல், அதற்குத் தமிழ் நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்க்ள் இல்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்ய வல்ல மகான்கள் இப்பொழுது தமிழ்நாட்டில் தோன்றி

Koviloor Digital Library

யிருக்கிறார்கள். அதுபற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்புத் தமிழகத்திலே தொடங்கும் என்கிறோம்.

"தமிழ்நாடு—இன்று புதிதாக அன்று, நெடுங்கால மாகத் தலைமையொளி வீசிவருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். "பூமண்டல முழுவதிலும் பெரிய விழிப்பொன்று வரப்போகிறது. அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தா னத்துக்குள் தமிழ்நாடு முதலாவதுகண் விழித்தது."

"ராமலிங்க சுவாமிகள் போன்ற மகான்களும் தமிழ்நாட்டின் புதிய விழிப்புக்கு ஆதிகர்த்தர்களாக விளங்கினர்."

பாரதியின் தீர்க்க தரிசனம் !

பூமண்டலம் அனைத்துக்குமே புதிய விழிப்புத் தருவதற் கான முதல்வராக இராமலிங்கர் தோன்றினார் என்று பாரதி யார் கூறுவது சிந்திக்கத்தக்கதாகும். இதனை,

"அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்
திருந்த உலகர் அனைவரையுஞ்
சகத்தே திருத்திச் சன்மார்க்க
சங்கத் தடைவித் திடஅவரும்
இகத்தே பரத்தைப் பெற்று
மகிழ்ந்திடுதற் கென்றே எனைஇந்த
யுகத்தே இறைவன் வருவிக்க
உற்றேன் அருளைப் பெற்றேனே."

என்னும் திருவருட்பாப் பாடலின் பொருளும் உறுதிப்படுத்து கின்றது. "ஜெகமனைத்தையும் திருத்துவதற்காக, யுகமனைத் துக்கும் முதல் மகனாக என்னை இறைவன் அனுப்பி வைத் தான்" என்று வள்ளலார் கூறியதைப் பாரதியார் உறுதிப் படுத்துகின்றார். இவ்வளவு தெளிவாக இராமலிங்கரின் அவ தாரச் சிறப்பைப் புரிந்து கொண்டவர்கள் பாரதிக்கு முன்னும் பின்னும் வேறெவரும் இல்லை என்று சொல்லலாம்.

சீடர்களிலே...

இராமலிங்கர் காலத்தில், அவரைச் சுற்றி எண்ணற்ற சீடர்கள் சூழ்ந்திருந்தனர். ஆனால், அவர்களுள் எவரும் வள்ள லாரின் சீர்திருத்தக் கொள்கைகளுக்கு வாரிசாக வரவில்லை.

Koviloor Digital Library

தலைமாணுக்கரான தொழுவூர் வேலாயுத முதலியார், வள்ளலாரிடம் எல்லையற்ற பக்திவைத்திருந்தார். ஆனால், அவர் துவக்கி வைத்த சமய சமூக சீர்திருத்தப் புரட்சியைத் தொடர்ந்து நடத்த முதலியாராலும் முடியவில்லை. அடிகளார் மறைந்த பின் சத்திய ஞான சபை பல ஆண்டுகள் மூடிக் கிடந்ததும், சமரச சன்மார்க்க சங்கம் பல ஆண்டுகள் செயலற்றுக் கிடந்ததும், வள்ளலாருடைய சீடர்களுள் அவருக்கு வாரிசாக வரும் திறனுடையார் இருக்கவில்லை என்பதைப் புலப்படுத்தும். வள்ளலாருடன் பழகி, அவருடைய சீடர்களாக இருந்தவர்களுள், தமிழில் பெரும் புலமை பெற்றோர் பலரிருந்தும், அவரது வாழ்க்கை வரலாற்றை விமரிசன ரீதியில் எழுதுவதற்குக்கூட ஒருவரும் முன்வராதது வியப்பைத் தருகின்றது. வள்ளலார் மறைந்து தொண்ணூறு ஆண்டுகளாகின்றன. இந்த நீண்ட இடைக்காலத்தில், அந்தத் தெய்வப் புலவரின் புகழ் மணக்கும் வாழ்க்கை வரலாற்றினை முழு அளவில் எழுதி வழங்கப் பின் தலைமுறையினரிலும் ஒருவர் தோன்றாதது தமிழகத்தின் துரதிருஷ்டமாகும்.

வரலாறு மறைந்தது

அடிகளார் துவக்கிவைத்துப்போன ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இயக்கம், அநேகமாக அவரோடு மறைந்துவிட்டதென்றே சொல்லலாம். வள்ளலாருக்குப் பிறகு தமிழகமெங்கும் சமரச சுத்த சன்மார்க்க சங்கங்கள் ஏராளமாகத் தோன்றின. அவற்றுள் இறந்தவை போக, இருப்பவை ஆயிரத்துக்கு மேற்பட்டவை என அறிகிறேன். ஆனால், அவையனைத்தும் பஜனைக் கூடங்களாக—பக்தி நெறி பரப்பும் நிலையங்களாகவன்றி, அடிகளாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, சமய—சமூகச் சீர்திருத்த அமைப்புகளாகச் செயற்படவில்லை.

அருட்பாப் பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் நாட்டில் நடமாடுகின்றனர். அவர்களுள் எவரும் சாதி—சமய பேதமற்ற புதிய சமுதாயங் காணும் புரட்சிக்கெனத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவில்லை என்பது மிகவும் கசப்பான உண்மையாகும். பொதுமக்களிலே தெய்வப் பற்றுடையவர்கள், வள்ளலாருடைய அருட்பாக்களைப் பாடுகின்றனர். புகழ் பெற்ற இசைப் பாடகர் பலர், அருட்பாக்களைப் பாடிப் பக்தி நெறியைப் பரப்புகின்றனர். கடந்த தலைமுறையிலே இசை மேதை எஸ். ஜி. கிட்டப்பா அவர்கள், 'கோடையிலே,

Koviloor Digital Library

எனத் துவங்கும் பாடலைப்பாடி, அதற்கு அழியாப் புகழ் தேடித் தந்தார். அவர், அந்த ஒரு பாடலைப் பாடுவதற் கென்றே பிறந்தவர் என்றும் சொல்லலாம். ஆனால், மிகப் பெரும்பாலான பாடகர்கள், தாங்கள் பாடுவது தெய்வத் திருவருட்பா நூலி லுள்ள பாடல்தான் என்ற உணர்வின்றியே பாடுகின்றனர். காரணம் அருட்பாவுடன் பிணைந்துள்ள இராமலிங்கரின் வாழ்க்கை வரலாறு மறைக்கப்பட்டிருப்பதுதான்.

இசை மேதை மாரியப்ப சுவாமிகள், வள்ளலார்பால் பக்தி கொண்டு, அவருடைய அருட்பாடல்களைப் பாடி, பக்திநெறி பரப்பப் பாடுபட்டு வருகின்றார்.

பொதுவாக, அருட்பாவிலுள்ள பக்திப் பாடல்கள் மக்க ளிடையே பரவிய அளவில், சமய—சமூகச் சீர்திருத்தப் பாடல் கள் பரவவில்லை என்று சொல்லலாம். அவை, திருவருட்பாப் புத்தகத்திலேயே புதைந்து கிடக்கின்றன. அதனால், சாதி—மதப் பற்றுகளை அறவே விட்டொழித்த சுத்த சன்மார்க்கிகள் தோன்றவில்லை. வள்ளலார் போதித்த 'சுத்த சன்மார்க்கம்' சன்மார்க்க சங்கத்தாரால் பொருளுணர்ந்து போற்றப்பட வில்லை. 'அருட்பெருஞ் சோதி தனிப் பெருங் கருணை' என்னும் மகாமந்திரம், ஊன் கலந்து—உயிர் கலந்து கோஷிக்கப்பட வில்லை. சன்மார்க்க சங்கத்தார் நிலை இதுவானால், வள்ளலாரின் வாரிசு தோன்றுவதெங்ஙனம்?

நல்ல வேளையாக, வள்ளலாரின் பெயர் மறைந்து போகா மல், அவர் பாடிய அருட் பாடல்களை மக்கள் மறந்துவிடாமல், சன்மார்க்க சங்கங்கள் தொண்டு புரிகின்றன. அதற்காக அவற்றைப் பாராட்டலாம்.

வள்ளலார், தாயுமானவர்—அருணகிரியார் ஆகிய ஞானி யர்களிடமிருந்து பிரித்துப் பார்த்துப் பெருமைப்படுத்தத் தக்க சீர்திருத்தவாதி யாவார். அஃது அவரது பிறப்போடு பிணைந்துள்ள தனிச்சிறப்பு. அதனை உணர்ந்து, சன்மார்க்க சங்கங்களும், அருட்பாப் பக்தர்களும் இனியேனும் சீர்திருத் தப் பாதையில் நடைபோட வேண்டும். அதற்கான காலம் வந்துவிட்டது.

வள்ளலார் மறைந்த பின்பு அவரது அடிச்சுவட்டைத் தொடர்ந்து சமய—சமூகச் சீர்திருத்தப்பணி நடைபெற்றிருப் பின், தமிழகத்தில் தோன்றிய வகுப்பு வாத—நாத்திகக் கிளர்ச் சிகளைத் தவிர்த்திருக்கலாம்.

Koviloor Digital Library

சுயமரியாதைச் சங்கம்

முன்னொரு காலத்தில் தோன்றி, சில ஆண்டுகள் வாழ்ந்து மறைந்த 'சுயமரியாதை'ச் சங்கத்தைச் சார்ந்தவர்கள், வள்ளலாரின் சமய—சமூகச் சீர்திருத்தக் கருத்துகளுக்கு ஓரளவு விளம்பரம் தேடினர். ஆனால், வள்ளலாரின் தெய்வ நம்பிக்கைக்கோ, ஜீவகாருண்ய ஒழுக்கத்திற்கோ, தத்துவ ஞானத்துக்கோ அன்னார் பிரதிநிதிகளாக இல்லை; இருக்கவும் அவர்கள் விரும்பவில்லை. சுருங்கச் சொன்னால், மக்களிடையே வகுப்புவாத—நாத்திக உணர்வுகளை வளர்க்க அவர்கள் வள்ளலாரின் சீர்திருத்தப் பாடல்களைக் கருவிகளாகப் பயன் படுத்தினர். ஆனால், அதிலும் அவர்கள் வெற்றி பெறவில்லை. சுருங்கச் சொன்னால், வள்ளலாரின் சமய சமூகச் சீர்திருத்தக் கொள்கைக்குப் புத்துயிர் தரத் தமிழகத்தில் இனித்தான் வாரிசு தோன்ற வேண்டும்.

பாரதத்தில் தோன்றியுள்ள தேசிய ஒருமைப்பாடு காணும் பேரியக்கம், வள்ளலாரின் "ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை"க்கு ஒளி காட்டுவதாக இருக்கிறது. அந்த ஒளியிலே, வள்ளலாரை உலகுக்கு அறிமுகப் படுத்தத் தமிழர் முயல வேண்டும். காந்தியடிகளையும், பாரதியாரையும் போற்றும் தமிழகம், வள்ளலாரைப் புறக்கணிக்க முடியாது—புறக்கணிக்கவும் கூடாது.

சீர்திருத்தப் பாதையில்...

தேசிய ஒருமைப்பாட்டுக்குத் தடையாக இருப்பவை, சாதி—மத வேறுபாடுகளேயாகும். அந்த வேறுபாடுகளை அழித்து, ஆன்மநேய அடிப்படையில் சமுதாய ஒருமைப்பாடு கண்டலான்றி, அரசியல் வழிப்பட்ட தேசிய ஒருமைப்பாடு சாத்தியமில்லை. 'எல்லோரும் ஓர் குலம்', 'எல்லோரும் இந்திய மக்கள்' என்று பாடினார் பாரதி. ஆம்; பாரத மக்களிடை, 'எல்லோரும் ஓர் குலம்—எல்லோரும் ஓர் இனம்' என்ற ஒற்றுமையுணர்வு தோன்றாத வரையில், 'எல்லோரும் இந்தியர்' என்ற தேசிய ஒருமைப்பாட்டுணர்வும் தோன்றாதென்பதைச் சொல்லாமல் சொல்லுகின்றார் பாரதியார். இந்த உணர்வை, அவர் வள்ளலாரிடமிருந்தே பெற்றிருக்க வேண்டும்.

ஒருமைப்பாடு காண்போம்

இன்றைய பாரத—தமிழக மக்களிடையே பிரிவினையுணர்வு, அரசியல் வடிவத்தில் பிறந்திருக்கிறதென்றால்,

Koviloor Digital Library

அதற்கு அடிப்படைக் காரணம், சமுதாய ஒருமைப்பாட்டு ணர்வு தொலைந்து, சாதி—சமயப் பிரிவுணர்ச்சி வளர்ந்திருப்பதுதான். அதுவே மூல நோய். அந்த மூல நோயினைத் தீர்க்கும் ஒரே மருந்து, "உலக சமுதாய ஒருமைப்பாட்டுணர்வு" தான். அதன் மற்றொரு பெயரே, 'ஆன்மநேய ஒருமைப்பாடு.'

'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்பது, உலக சமாதான இயக்கத்தின் கொள்கையாக வேண்டும். அதுவே போர் வெறியிலிருந்து உலகத்தைக் காக்கும் புனித வாசகமாகும்.

இராமலிங்க அடிகளார், தமிழகத்தில்—தமிழினத்தில் பிறந்திருந்தாலும், தமிழிலே பாடியிருந்தாலும், உலகினத்துக்கும் அவர் பொதுவானவர். அவர், உலகினத்தையும் ஒன்றுபடுத்த வந்த சர்வதேச—சர்வமத சமரசவாதி; மரணமிலாப் பெருவாழ்வினைப் போதிக்க வந்த சித்தர்.

அந்த மகான் நம்மோடு இன்னமும் வாழ்கின்றார் என்னும் நினைப்பு, நமக்கு அளவற்ற ஆற்றலைத் தருவதாகும். அதனால், இராமலிங்கர் நம்முடைய உயிரிலே, உணர்விலே கலந்து வாழ்கின்றார் என்று நினைப்போமாக! அடிகள் மறையுங்கால், "இனி நான் எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வேன்" என்று கூறினாரே, அதன்படி அவர் நம்மில் ஒவ்வொருவர் உடலையும் கோயிலாகக் கொண்டு வாழ்கிறார் என்று நம்புவது, நாம் இகத்தே பரத்தைப் பெற்று வாழ்வதற்கான வழியாகும்.

'மரணமிலாப் பெருவாழ்வு' ஒன்று உண்டென்று நம்பி, அதற்காக முயல்வோமானால், மரணத்தை ஒத்திப் போடும் ஆற்றலையேனும் பெறுவதோடு, மீண்டும் பிறவாத பேரின்பத்தையும் அடைவோம். அதனால், மரணமிலாப் பெருவாழ்வினை நம்பி, அதனைப் போதித்த பெருமானைப் போற்றுவோமாக.

பின்பற்றுவோம்

சாதிகளை ஒழிக்கும் புனிதப் பணியில் ஈடுபடுவோமானால், சாதி உயர்வு—தாழ்வுக் கொடுமையையேனும் ஒழித்து, "எல்லோரும் ஓர் நிறை—எல்லோரும் ஓர் நிலை" என்ற சமத்துவத்தை நிலைநாட்ட இயலும். அதனால், சாதிகளை ஒழிக்கச் சமரச சன்மார்க்க நெறி போதித்த பெருமானை, நெஞ்சில் வைத்து அஞ்சலி செய்வோமாக!

"போதித்த மதங்க ளெல்லாம் பொய் பொய்யோ, அவற்றில் புகுதாதீர்" என்ற கோஷத்தால் மதப் பூசல்களும் போராட்டங்களுமேனும் தொலையு மாதலால், மதவேற்றுமை

Koviloor Digital Library

ஒழியப் பாவியற்றிய மகாகவி இராமலிங்கரை வாழ்த்துவோமாக!

ஈ—எறும்பு ஆகிய உயிர்கள் அனைத்திடமும் இரக்கம் காட்டும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தினை வாழ்க்கை நெறியாக வற்புறுத்தினால், ஆறறிவு படைத்த மக்களிடமேனும் அன்பு செலுத்தும் பண்பு வளரும். அதனால் ஜீவகாருண்ய ஒழுக்கம் போதித்த உத்தமருக்கு நம் உள்ளத்தைக் கோயிலாக்குவோமாக!

தமிழகமே! பாரதமே! உலகப் பெருநிலமே! ஆன்மநேய ஒருமைப்பாடு காணத் திரண்டெழுக! மனித குலமே! உன்னை வாழ்விக்க வந்த வள்ளற் பெருமானை வாழ்த்து! வாழ்த்து!! வாழ்த்து!!! நீ வாழ அதுவே வழி.

'இராமலிங்கம்' என்னும் பெயர் ஒவ்வொரு மனிதரும் இடையறாது ஓதவேண்டிய மந்திரமாக வேண்டும். இதுவே என் பிரார்த்தனை!

Koviloor Digital Library

இந்நூல் எழுதுங்கால்

துணைபுரிந்த நூல்களும் இதழ்களும்

அபிதான சிந்தாமணி ... சிங்காரவேலு முதலியார்
'அரிஜன்' (வார இதழ்) ... காந்தியடிகள் பத்திரிகை
அனுசக்தி யோகம் ... காந்தியடிகள்
ஆறுமுக நாவலர் சரித்திரம் ... கைலாசப் பிள்ளை
ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு
இந்தியப் பிரசங்கங்கள் ... சுவாமி விவேகானந்தர்
இராமலிங்க பிள்ளை பாடல்
ஆபாச தர்ப்பணம்
,, ,, கண்டனம்
நியாய வச்சிர குடாரம் ... ம. தி. பானுகவி
இராமலிங்கர் திருவுள்ளம் ... திரு. வி. க.
உபதேச மொழிகள் ... இராமகிருஷ்ண பரமஹம்சர்
எரிமலை ... வீர சாவர்க்கர்
ஔவையார் பாடல்கள்
கம்ப ராமாயணம்
தமிழ்க் கலைக் களஞ்சியம்
காந்தி நூல்கள் (தொகுப்பு)
குதர்க்காரணிய நாச மகா பரசு
,, ,, கண்டனம்
குமுதம் (வார இதழ்)
சத்திய சோதனை ... காந்தியடிகள்
சத்தியார்த்தப் பிரகாஷ் ... தயானந்த சரசுவதி
சமரச தீபம் ... திரு. வி. க.
சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் ... மறைமலையடிகள்
சித்தர் பாடல்கள்
சிலப்பதிகாரம்
ஞான ரதம் ... பாரதியார்
தண்டபாணி சுவாமிகள் பாடல்கள்
தற்கால இந்தியா ... சுவாமி விவேகானந்தர்
தாயுமானவர் பாடல்கள்

Koviloor Digital Library

இ031
R65(வள்)

திருக்குறள்
திருமந்திரம்
திருமுருகாற்றுப்படை
திருவருட்பா (பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு—12 புத்தகங்கள்)
,, (சன்மார்க்க சங்கம் பதிப்பு—2 நூல்கள்)
திருவாசகம்
திருவிளையாடற் புராணம் ... பரஞ்சோதி முனிவர்
திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் ... திரு. வி. க.
தேவாரம் ... திருஞானசம்பந்தர்
,, ... திருநாவுக்கரசர்
,, ... சுந்தரமூர்த்தி சுவாமிகள்
நால்வர் நான்மணி மாலை ... சிவப்பிரகாசர்
பட்டினத்தார் பாடல்கள்
பாரதியார் கட்டுரைகள்
பாரதியார் கவிதைகள்
பாரதி புதையல்
புறநானூறு
பெரிய புராணம் ... சேக்கிழார்
,, உரை ... சிவக்கவிமணி
போலியருட்பா மறுப்பு ... ஆறுமுக நாவலர்
மணிமேகலை ... சாத்தனார்
மருட்பா மறுப்பு
மறைமலையடிகள் வரலாறு ... மறை. திருநாவுக்கரசு
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ... திரு. வி. க.
'யங் இந்தியா' ... காந்தியடிகள் பத்திரிகை
யஜுர் வேதம்
ரகுபதி ராகவ ... காந்தியடிகள்
வியாசர் விருந்து ... ராஜாஜி
வேமனர் பாடல்கள்
அந்தரங்க தியாசாபியின் குறிப்புகள் ... மாடம் பிளவட்ஸ்கி
தென்னார்க்காடு மாவட்ட
மானுவல்—1878 ... ஜே. எச். கார்டின்ஸ்
மற்றும், திரு. வரதநஞ்சைய பிள்ளை, தவத்திரு சிதம்பர சுவாமிகள், பாம்பன் குமரகுருதாசர் போன்ற பெருமக்களின் கருத்தோவியங்கள்.

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
PHONE

Koviloor Digital Library

Koviloor Digital Library